# 1

**1.** சபையாரே, கூடிப்பாடி கர்த்தரை நாம் போற்றுவோம்,
பூரிப்பாய் மகிழ் கொண்டாடி, களி கூரக் கடவோம்,
இயேசுகிறிஸ்து சாவை வென்று எழுந்தார்!

**2.** சிலுவையில் ஜீவன் விட்டு, பின்பு கல்லறையிலே
தாழ்மையாக வைக்கப்பட்டு மூன்றாம் நாள் எழுந்தாரே!
லோக மீட்பர் வெற்றி வேந்தர் ஆனாரே!

**3.** மீட்பரே, நீர் மாட்சியாக ஜீவனோடெழுந்ததால்
நாங்கள் நீதிமான்களாக பிதா முன்னே நிற்பதால்
என்றென்றைக்கும் உமக்கே மா ஸ்தோத்திரம்!

**4.** சாவின் ஜெயம் ஜெயமல்ல; தேகம் மண்ணாய்ப்
போயினும்
எல்லாம் கீழ்ப்படுத்தவல்ல கர்த்தர் அதை மீளவும்
ஜீவிப்பித்து மறு ரூபமாக்குவார்!

**5.** மாட்சிமையின் அந் நாள்வரை நாங்கள் தங்கும் பூமியில்
உம்மை நித்தமும் நினைத்து ஆராதிப்போம் கர்த்தரே!
நீரே வாழ்க! நீரே வாழ்க! இயேசுவே!

# 2

1. இயேசு நாதா! பக்தியாக வந்து, பெற்ற நன்மைக்காக
உம்மையே ஆனந்தமாகப் பாடிப் போற்றுவோம்.

2. வல்ல நாமம் துதிப்போமே திவ்ய சக்தி பெறுவோமே
பாவம் முற்றும் ஜெயிப்போமே தேவ ஆவியால்.

3. அருள் வாக்குத் தவறாதே உம்தன் அன்பும் குறையாதே
உம்மை விட்டுப் பிரியாதே பற்றிக் கொள்ளுவோம்.

4. நேச நாதா! உம்மைச் சாரும் தேவ பக்தியோடு காரும்
பின்பு பேரானந்தம் தாரும் மோட்ச லோகத்தில்.

5. அங்கே துக்கமுமில்லாமல், பாவம், பாடும் அணுகாமல்,
இன்ப வாழ்வும் ஒழியாமல் வாசம் பண்ணுவோம்.

6. ஆதலால் மா பக்தியாக வந்து பெற்ற நன்மைக்காக
இயேசுநாதா! என்றுமாக உம்மைப் போற்றுவோம்.

1. களிப்புடன் கூடுவோம், கர்த்தரை நாம் போற்றுவோம்;
அவர் தயை என்றைக்கும் தாசரோடு தங்கிடும்.

2. ஆதி முதல் தேவனே நன்மையாவுஞ் செய்தாரே;
அவர் தயை என்றைக்கும் மாந்தர் மேலே சொரியும்.

3. இஸ்ரவேலைப் போஷித்தார், நித்தம் வழி காட்டினார்;
அவர் தயை என்றைக்கும் மன்னா போல சொரியும்.

4. வானம், பூமி புதிதாய் சிருஷ்டிப்பாரே ஞானமாய்
அவர் தயை என்றைக்கும் அதால் காணும் யாருக்கும்.

# 4

1. மீட்கப்பட்ட கூட்டமே! உங்கள் மீட்பர் பேரிலே பாடி,
வாழ்த்தல் செய்யுங்கள் மீட்பின் அன்பைச் சொல்லுங்கள்

2. தேவனாம் பிதா தயை இயேசுவால் உண்டானதைப்
பார்த்து, போற்றிப் பாடுங்கள், மீட்பரை உயர்த்துங்கள்.

3. நீடு காலம் உங்களை, கேடு செய்த ஆசையை
தள்ளுதற்கு மைந்தனார் மீட்பையே உண்டாக்கினார்.

4. ஆதலால் மகிழ்வோடே போற்றிப்பாட, மாந்தரே!
தூதரோடும் கூடுங்கள், மீட்பரை உயர்த்துங்கள்.

fppt.com

# 5

1. மீட்கப்பட்ட சபையாரே இயேசுவைப் போற்றுவோம்
அவர் நாமத்தை ஊராரே நாம் போற்றிப் பாடுவோம்.

2. சர்வஜாதி ஜனத்தாரே இயேசுவைப் போற்றுவோம்
நம்மை மீட்க மரித்தாரே நாம் போற்றிப் பாடுவோம்.

3. நம் ஜீவனுள்ள நாளெல்லாம் இயேசுவைப் போற்றுவோம்
அப்போ சதா காலங்களாய் நாம் போற்றிப்பாடுவோம்.

4. மரணசாபம் நீக்கினார் இயேசுவைப் போற்றுவோம்
மரித்து உயிர்த்தெழுந்தார் நாம் போற்றிப் பாடுவோம்.

5. தூதர்கள் போற்றும் அரசை புகழ்ந்து துதிப்போம்
திருச்சபையின் சிரசை நாம் போற்றிப் பாடுவோம்.

**6**

**1.** இயேசுவே உம் நாமத்தினால் இன்பமுண்டு யாவருக்கும்
நன்றியுள்ள இதயத்துடன் கூடினோம் இந்நன்னாளிலே.

<u>பல்லவி</u>

எங்கள் தேவனே எங்கள் ராஜனே என்றும் உம்மையே சேவிப்போம்
நன்றியுள்ள சாட்சியாக உமக்கென்றும் ஜீவிப்போம்.

**2.** நிலையில்லா இவ்வுலகில் நெறி தவறி அலைந்தோம்
நின்னொளி பிரகாசித்திட நீங்கா ஜீவன் கண்டடைந்தோம்.
– எங்கள்

**3.** பொன்னை நாடி மண்ணையடைந்தோம்
புகழ்தேடி ஏமாற்றம் கொண்டோம் விண்ணை நோக்கி
ஜெயமே பெற்றோம் இயேசுவின் தரிசனத்தால்.
– எங்கள்

fppt.com

1. உம் மேஜை சுற்றி தேவனே சந்திப்போம் திவ்ய ஐக்கியமாய்
கீழ்ப்படிவோம் உம் வார்த்தைக்கு புசிப்போம் அன்பின் விருந்தை.

2. உம் நல்ல நாமம் நேசிப்போர் உள்ள கனிவோடே உம்மை தொழுது ஏற்றிப் போற்றுவார் ஆனந்த துதியுடனே.

3. சிலுவையில் எங்களுக்காய் மாண்ட இரட்சகரை காண்கிறோம்.
ஆராதிப்போம் உள்ளங்களில் போற்றுவோம் எங்கள் மீட்பரை.

4. எங்கள் இதயம் தன்னிலே இதையே எண்ணிப் பார்க்கையில்
உம் மகா அன்பின் ஆழமே விளங்குதே எம் நாயகா!

# 8

## <u>பல்லவி</u>

ஆ! வாரும் நாம் எல்லாரும் கூடி, மகிழ் கொண்டாடுவோம்;
சற்றும்
மாசிலா நம் ஏசு நாதரை வாழ்த்திப் பாடுவோம். ஆ!

## சரணங்கள்

1. தாரகம் அற்ற ஏழைகள் தழைக்க நாயனார்—இந்தத்
தாரணியிலே மனுடவ தாரம் ஆயினார்; —ஆ! வா

2. மா பதவியை இழந்து வறியர் ஆன நாம், —அங்கே
மாட்சி யுற வேண்டியே அவர் தாழ்ச்சி ஆயினார்; —ஆ! வா

3. ஞாலமதில் அவர்க்கிணை நண்பர் யாருளர்,—பாரும்
நம் உயிரை மீட்கவே அவர் தம் உயிர் விட்டார்; —ஆ! வா

4. மா கொடிதான சாவதின் வலிமை நீக்கியே,—இந்த
மண்டலத்தினின்றுயிர்த் தவர் விண்டலஞ் சென்றார்;
—ஆ! வா

5. பாவிகட் காய்ப் பரனிடம் பரிந்து வேண்டியே,—அவர்
பட்சம் வைத் துறும்தொழும்பரை ரட்சை செய்கிறார்.
—ஆ! வா

fppt.com

## 9

பல்லவி

தந்தானை துதிப்போமே; திருச் சபையாரே, கவி—பாடிப்பாடி

அனுபல்லவி

விந்தையாய் நமக்கனந்தனந்தமான,
விள்ளற்கரியதோர் நன்மை மிகமிகத் —தந்

சரணங்கள்

1. ஒய்யாரத்துச் சீயோனே— நீயும் மெய்யாகக் களிகூர்ந்து நேர்ந்து,
ஐயனேசுக்குனின் கையைக் கூப்பித் துதி
செய்குவையே, மகிழ்கொள்ளு வையே,—நாமும் – தந்

2. கண்ணாரக் களித்தாயே,— நன்மைக்
காட்சியைக் கண்டு ருசித்துப் புசித்து;
எண்ணுக்கடங்காத எத்தனையோ நன்மை
இன்னுமுன்மேற் சோனாமாரி போற் பெய்துமே – தந்

3. சுத்தாங்கத்து நற்சபையேஉனை முற்றாய்க் கொள்ளவே
அலைந்து திரிந்து சத்துக் குலைந்துனைச்
சத்தியாக்கத் தம்மின் ரத்தத்தைச்சிந்தி எடுத்தே உயிர் வரம் – தந்

4. தூரம் திரிந்த சீயோனேஉனைத் தூக்கியெடுத்துக் கரத்தினிலேந்தி,
ஆரங்கள் பூட்டி அலங்கரித்து நினை அத்தன் மணவாட்டியாக்கினது
என்னே! – தந்

5. சிங்காரக் கன்னிமாரே,—உம் அலங்காரக் கும்மி அடித்துப் படித்து,
மங்காத உன் மணவாளன் யேசுதனை வாழ்த்தி வாழ்த்தி ஏத்திப்
பணிந்திடும் – தந்

பல்லவி

இராஜாதிராஜன் யேசு, இயேசு மகா ராஜன்!– அவர்
ராஜ்யம் புவியெங்கும் மகாமாட்சியாய் விளங்க,
அவர் திருநாமமே விளங்க,– அவர் திரு நாமமே விளங்க,
அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயாவே!
அல்பா, ஒமேகா அவர்க்கே அல்லேலூயாவே!

1. உன்னதத்தின் தூதர்களே ஒன்றாகக் கூடுங்கள்,
மன்னன் யேசு நாதருக்கே வான்முடி சூட்டுங்கள்!

2. நாலாதேசத் திலுள்ளோரே, நடந்து வாருங்கள்
மேலோனேசு நாதருக்கே மெய் முடி சூட்டுங்கள்!

3. நல்மனதோடு சொல்கிறேன், நாட்டார்களே, நீங்கள்
புன்னகையோடு நிற்பானேன் ? பூமுடி சூட்டுங்கள்!

4. இந்தியா தேசத் தார்களே, ஏகமாய்க் கூடுங்கள்.
சிந்தனையை வைத்துக் கொண்டு செம்முடி சூட்டுங்கள்!

5. சின்ன நாடுகளை விட்டுச் சீக்கிரம் ஏகுங்கள்,
பொன்னகராம் சாலேமுக்குப் போய் முடி சூட்டுங்கள்!

6. குற்றமில்லாப் பாலகரே, கூடிக் குலாவுங்கள்,
வெற்றி வேந்த ரேசுவுக்கே வெண்முடி சூட்டுங்கள்!

7. யேசு என்ற நாமத்தையே எல்லோரும் பாடுங்கள்
ராஜாதிராஜன் தலைக்குநன்முடி சூட்டுங்கள்!

8. சகல கூட்டத்தார்களே,சாஷ்டாங்கம் செய்யுங்கள்,
மகத்வ ராசரிவரே, மாமுடி சூட்டுங்கள்!



1. ஸ்தோத்திரம் இயேசு நாதா உமக்கென்றும்
ஸ்தோத்திரம் இயேசுநாதா, ஸ்தோத்திரம் செய்கின்றோம்
நின்னடியார் திருநாமத்தினாதரவில்.

2. இன்றைத்தின மதிலும் ஒருமித்து கூட உம்
நாமத்தினால் தந்த நின் கிருபைக்காக
உமக்கென்றும் ஸ்தோத்திரம், ஸ்தோத்திரமே!

3. நின் உதிரமதினால், திறந்த நின் ஜீவ புது வழியாம்,
நின்னடியார்க்குப் பிதாவின் சன்னதி சேரவுமே சந்ததம்.

4. இத்தனை மகத்துவமுள்ள பதவி இப்புழுக்களாம் எங்களுக்கு
இத்தனை மா தயவு, நின் கிருபை எத்தனை ஆச்சரியம்!

5. நீரல்லால் எங்களுக்குப் பரலோகில் யாருண்டு ஜீவநாதா
நீரேயன்றி இகத்தில் வேறே ஒரு தேற்றமில்லை பரனே.

6. வான தூதர் சேனைகள் மனோகர கீதங்களால் எப்போதும்
ஒய்வின்றிப் பாடித்துதிக்க மா பெரும் மன்னவனே உமக்கு.

பல்லவி

பலமளித் தெம்மைப் புது வழி களில் நடத்திடும்
தாரகம் நீரல்லவோ (3)
தாரணியிலெமக்குத் தயை புரிந்திடும் இயேசு
நாயகன் நீரல்லவோ.

சரணங்கள்

1. இருவர் ஒருமித்து என் நாமத்தில் கூடும் வேளை
சமூகம் அளிப்பேன் என்றீரே (3)
உம் அருள் வாக்குப் போல அளித்தீரே உம் சமூகம்
உம்மைத் துதித்து மகிழ்வோம். –பல

2. அதிசய மானவர் என்பதுமறு பெயர்
அதிசயம் விளங்கச் செய்யுமே (3)
இது சமயமுமது இதயம் விரும்புவதை
இறையே வழங்கச் செய்வீரே. – பல

3. பாவிகளும தண்டை பாவ உணர்வடைந்து
தாகமுடன் அடைந்திட (3)
நாவினறிக்கையினால் நவீன இதயம் பெற்று
நசரேயனைப் பின் சென்றிட. – பல

4. கலங்காதே சிறு மந்தையே என்ற நல்லுரை
பலமாயுரைக்க வேண்டுமே (3)
நலமெனக் காண்பதை நமது மத்தியில் செய்து
அலகை அடக்க வேண்டுமே. – பல

5. வழி நடத்திட எம்மை வல்லமையுள்ளவரே
ஒளியாக முன் நடவுமே–(3)
விழிப்புடனேயிருந்து திரும்பி நீர் வரும் போது
களித்திட எம்மைக் காருமே. – பல

**1.** உம் அன்பின் வார்த்தைக்கேற்கவே
மகா தாழ்மையோடு,
கர்த்தாவே இதைச் செய்கிறேன் உம்மை நினைத்து நான்.

**2.** எனக்காய் உம்மையே பிட்டீர் தெய்வீக மன்னாவாய்,
பாத்திரத்தையும் எடுத்து உம்மை நினைக்கிறேன்.

**3.** கெத்சேமனே! மறப்பேனோ! உம் துக்கம் துயரம்,
இரத்தத்தின் பெருந்துளியாய் விழுந்த வேர்வையை.

**4.** கல்வாரியில் இளைப்பாறி, குருசைப் பார்க்கையில்,
ஒப்பற்ற பலியாய் மாண்ட உம்மை நினைக்கிறேன்.

**5.** உம் வேதனைகள் அநந்தம்; அன்பின் பிரவாகம் நீர்,
என் மூச்சு ஒடுங்கும் வரை உம்மையே நினைப்பேன்.

**6.** கர்த்தாவே, நீர் வரும்போது உம் மகிமை கண்டு,
ஆட்டுக் குட்டியானவரே, உம்மில் நான் மகிழ்வேன்.



# 14

1. துதி கலந்த கீதத்தால் என் நேசரை நான் போற்றுவேன்.
"கர்த்தர் எல்லாம் நன்றாய்ச் செய்தார்".
மெய் நன்றியுடன் சொல்லுவேன்.

2. அவர் கரத்தின் கிரியைகள் அவர் வல்லமை ஞானமும்
விளக்கிக் காட்டிப் போற்றுது:
"கர்த்தர்எல்லாம்நன்றாய்ச்செய்தார்".

3. அவர் மகத்துவம் ஆச்சரியம்: ஒப்பற்ற அவர் அன்பென்னை
பாதாளம் மீட்டுக் காத்தது, "கர்த்தர் எல்லாம் நன்றாய்ச் செய்தார்".

4. கிருபைக்கு அருகிலன் ஆனாலும் எனக்காய் வந்தார்,
துரோகி என்னை மீட்டாரே
"கர்த்தர் எல்லாம் நன்றாய்ச் செய்தார்".

5. அக்கினி யாஸ்திரம் பலமாய் பொல்லாங்கன் என்னில்
எய்தாலும் மறவேன் அவர் வாக்கை நான்
"கர்த்தர் எல்லாம் நன்றாய்ச் செய்தார்".

6. இன்பக் கானானில் சேர்ந்தபின் வானில் கீதம்
தொனிக்கையில் களிப்பாய் நானும் பாடுவேன்;
"கர்த்தர் எல்லாம் நன்றாய்ச் செய்தார்".



1. ஆ ! என்னில் நூறு வாயும் நாவும் இருந்தால் கர்த்தர் எனக்கு அன்பாகச் செய்த நன்மையாவும் அவைகளால் பிரசங்கித்து, துதிகளோடே சொல்லுவேன், ஓயாத் தொனியாய்ப் பாடுவேன்.

2. என் சத்தம் வானமளவாக போய் எட்ட வேண்டும்
என்கிறேன்;
கர்த்தாவைப் போற்ற வாஞ்சையாக என் இரத்தம் பொங்க
ஆசிப்பேன்,
ஒவ்வொரு மூச்சும் நாடியும் துதியும் பாட்டுமாகவே.

3. பிதாவே, தேகம் ஆவியாவும் உம்மால் அல்லோ உண்டாயிற்று;
சரீர ஈவாம் ஊனுந்தாவும்,
நீர் என்னை மோட்ச வாழ்வுக்கு தெரிந்து கொண்ட அன்புமே மா
உபகாரம், கர்த்தரே.

4. இயேசு நாதா நீர் அன்பாலே கொடும் பிசாசினுடைய
கைக்கென்னை திரு இரத்தத்தாலே விலக்கி நீங்கலாக்கின
இரட்சிப்புக்காக, என்றைக்கும் என் ஆவி உம்மைப் போற்றவும்.

5. மெய்யாகத் தேற்றும் தேவ ஆவி ஆ ! உமக்குப் புகழ்நச்சியே;
உம்மாலே இந்த கெட்ட பாவி இரட்சிப்புக்குள்ளானேனே;
இங்கென்னில் நன்மை ஏதுண்டோ அது உமது பயிர் அல்லோ ?

6. நான் மண்ணில் பாடும் ஏழையான துதியை ஏற்றுக்
கொள்ளுமேன்
நான் விண்ணில் மறு ரூபமாயின் பிற்பாடு நன்றாய்ப்போற்றுவேன்
அப்போ நான் வானோர்களுடன் புதிய பாட்டைப் பாடுவேன்.

1. இம்மட்டும் ஜீவன் தந்த கர்த்தாவை அத்தியந்த பக்தி விநயமாக பாடித் துதிப்போமாக.

2. திக்கற்றவரைக் காரும் நோயாளிகளைப் பாரும். துக்கித்தவரைத் தேற்றும், சாவோரைக் கரையேற்றும்.

3. பரத்துக்கு நேராக நடக்கும்படியாக அடியாரை எந்நாளும் தேவாவியாலே ஆளும்.

4. அடியார் அத்தியந்த பணிவாய்க் கேட்டு வந்த நன்மைகளை அன்பாக அருளிச் செய்வீராக.

5. தினமும் நவமான அன்பாய் நீர் செய்ததான, அநுக்ரகத்துக்காக துதி உண்டாவதாக.

1. எந்நேரமேயும் பாடுவேன் விசாரம் நீங்கிற்றே
இம்மானுவேலைப் போற்றுவேன் சந்தோஷமாயிற்றே.

பல்லவி

சங்கீதம், கீதம், கீதம் பாடுவேன்.
கீதம், கீதம், சங்கீதம் பாடுவேன்.

2. என் பாவ பலி இயேசுவை கல்வாரியிற் கண்டேன்
அத்தாலுண்டான துக்கத்தை விட்டாறித் தேறினேன். – சங்

3. பொல்லாத சோதனை உண்டே என்றாலும் வெல்லுவேன்
என் வல்ல கர்த்தர் இயேசுவை நான் நித்தம் பாடுவேன் – சங்

4. பேரன்பின் சுவிசேஷத்தை எல்லோர்க்கும் தெரிவி
இப்பூமியெங்கும் வேதத்தைப் பிரஸ்தாபித் தறிவி. – சங்

1. சருவ லோகாதிபா, நமஸ்காரம்!
சருவ சிருஷ்டிகனே,நமஸ்காரம்!
தரை, கடல், உயிர், வான், சகலமும் படைத்த
தயாபர பிதாவே, நமஸ்காரம்.

2. திரு அவதாரா நமஸ்காரம்! ஜெகத்து ரட்சகனே,
நமஸ்காரம்! தரணியின் மனுடர் உயிர்
அடைந்தோங்கத் தருவினில் மாண்டோய்,
நமஸ்காரம்.

3. பரிசுத்த ஆவி, நமஸ்காரம்! பரம சற்குருவே, நமஸ்காரம்
அரூபியாய் அடியார் அகத் தினில் வசிக்கும்
அரியசித்தே சதா நமஸ்காரம்.

4. முத்தொழிலோனே, நமஸ்காரம்! மூன்றிலொன்றோனே,
நமஸ்காரம்!கர்த்தாதி கர்த்தா, கருணா
சமுத்திரா, நித்ய திரியேகா, நமஸ்காரம்.

1. போற்றும்! போற்றும்!புண்ணிய நாதரைப் போற்றும்!
வானோர் கூடிப்பாடவும் இன்பமாய்,
பாரிலேயும் நாம சங் கீர்த்தனம் செய்ய,
மாந்தர் யாரும், வாரும் ஆனந்தமாய்;
நேசமேய்ப்பன் கரத்தில் ஏந்துமாறு
இயேசுநாதர் எந்தனைத் தாங்குவார்;
போற்றும்! போற்றும்! தேவ குமாரனைப் போற்றும்!
பாதுகாத்து நித்தமும் போஷிப்பார்.

2. போற்றும்! போற்றும்! புண்ணிய நாதரைப் போற்றும்!
பாவம் போக்கப் பாரினில் ஜென்மித்தார்.
பாடுபட்டுப் பிராணத் தியாக முமாகி
வானலோக வாசலைத் திறந்தார்.
மா கர்த்தாவே! ஸ்தோத்திரம் என்றும் என்றும்;
வாழ்க! வாழ்க ஜெகத்து இரட்சகா! அருள்நாதா! மாசணுகா
பரஞ்சோதி! வல்ல தேவா! கருணை நாயகா;

3. போற்றும்! போற்றும்! புண்ணிய நாதரைப் போற்றும்!
விண்ணும் மண்ணும் இசைந்து பாடவும்,
போற்றும்! போற்றும்! ஏக மகத்துவமாக
ஆட்சி செய்வார் நித்திய காலமும்,
ஏக இராஜா! மாட்சிமை யோடு வந்து
இயேசு தேவா! பூமியில் ஆளுமேன்
லோகமெங்கும் நீதியின் கிரீடத்தைச் சூடி
ஜோதியாக பாலனம் பண்ணுமேன்.

1. சத்தாய் நிஷ்களமாய் ஒரு சாமிய மும்மிலதாய்,
சித்தாய் ஆனந்தமாய்த் திகழ்கின்ற திரித்துவமே,
எத்தால் நானடியேன் கடைத்தேறுவன் என்பவ தீர்ந்து;
அத்தா, உன்னையல்லால் எனக்கார் துணை, யாருறவே ?

2. எம்மா விக்குருகி உயிரீந்து புரந்ததற்கோர்
கைம்மா றுண்டுகொலோ ? கடைகாறுங் கையடையாய்,
சும்மாரக்ஷணைசெய், சொல் சுதந்தரம் யாதுமிலேன்,
அம்மான், உன்னையல்லால் எனக்கார் துணை, யாருறவே ?

3. திரைசேர் வெம்பவமாம் கடல்மூழ்கிய தீயரெமைக்,
கரைசேர்த் துய்க்க வென்றே புணையாயினை,
கண்ணிலியான், பரசேன் பற்றுகிலேன்;
என்னைப்பற்றியே பற்று விடாய்,
அரசே, உன்னையல்லால் எனக்கார் துணை, யாருறவே ?

4. தாயே தந்தைதமர் குரு சம்பத்து நட்பெவையும்
நீயே எம்பெருமான், கதிவேறிலை நிண்ணயங்காண்: 'ஏயே'என்றிகழும்
உலகோ டெனக் கென்னுரிமை ?
ஆயே, உன்னையல்லால் எனக்கார்துணை, யாருறவே ?

5. பித்தே றிச்சுழலும் ஜெகப் பேய்பிடித் துப்பவத்தே
செத்தேன், உன்னருளால் பிழைத்தேன்மறு
ஜென்ம மதாய் ; எத்தோ ஷங்களையும்
பொறுத்தென்றும் இரங்குகவென்று
அத்தா, உன்னையல்லால் எனக்கார் துணை, யாருறவே ?

6. துப்பார் சிந்தையிலேன் மறைந்தீட்டிய தொல்வினையும்
தப்பா தேவெளியா நடுநா ளெனைத் தாங்கிக்கொள்ள
இப்பா ருய்யவென்றே மனுக்கோலமெடுத்த
எங்கள் அப்பா, உன்னையல்லால்எனக்கார்துணை, யாருறவே ?

1. என் தேவனே உம் மகத்துவக் கிரியைகள்
என் உள்ளத்தை ஜொலிக்கச் செய்யுதே
மேல் வானமும் திரள் நட்சத்திரமும்
மேலோனின் மா வல்லமை காட்டுதே.

பல்லவி

என் ஆத்துமாவே தேவனைப் போற்றிடு,
நீர் வல்லவர் மா வல்லவர் என் ஆத்துமாவே
தேவனைப் போற்றிடு நீர் வல்லவர் மா வல்லவர்.

2. காடுகளும் கண் கொள்ளா சிகரமும்
கவருதே, களிப்புண்டாக்குதே பட்சிகளும் பாய்ந்தோடும்
நீரோட்டமும் பாடுதே பரவசமாக்குதே .– என்

3. குமாரனை ஒரே பேறானவரை குருசினில் குருதி சிந்தவே
அனுப்பிய மா அன்பின் சொரூபியே அறைந்தீரே என் பாவம்
போக்கிட. – என்

4. பேர் எக்காள சத்தம் தொனித்திடவும் எம்பெருமான் என்னை
அழைத்திட, ஏகுவேனே எந்நாளும் பாடுவேனே
நீர் வல்லவர் மா வல்லவர்.– என்

## 22

1. மீட்பர் சிங்காசனம் மேலேயுள்ளார்,
ஆட்கொண்டவர் கிரீடம் தரித்துள்ளார்
செவி கொடுக்க உயிரோடுள்ளார்,
புவிக்கு மேலாக உயர்ந்துள்ளார்.

பல்லவி

எல்லாவற்றிற்கும் மேலாகவே
வல்ல இயேசு உயரவே!
பாதத்தில் வீழ்ந்து பணிகிறோமே
நாதனை தேவனே உயர்த்தினார்.

சரணங்கள்

2. கோரப் புயல்கள் அடிக்கும் போது கூப்பிடவே அவர் இரட்சிக்கிறார்,
விரைவில் அவர் பிடிக்கும் போது தரை போல் அலைமேல் நடக்கிறோம்.
– எல்லா

3. தாக்கும் அரண்களாயிருந்தாலும், போக்கைத் தடுக்கும்
பிளப்பானாலும், ஏக்கமின்றி ஏக வீழ்கின்றன,
விசுவாசம் அதை ஜெயிக்கின்றன. – எல்லா

4. எரிகோவைப் போல கோட்டையானாலும்,
எதிரி பலமாய் எதிர்த்திட்டாலும்,
எரிகோவின் மதில் விழ முன்னேறுவோம்
விசுவாசத்தில் ஜெயமே பெறுவோம். – எல்லா

5. துருவம் வரை அவர் இராஜ்ஜியம் காலம் மாறினாலும் மேலானவர்;
ஜெயித்தோர் அவர் கூட இருப்பார் மேலான ஆட்சியில் பங்கடைவார்.
– எல்லா

1. தெய்வன்புதான் மா இனிமை
அதற்கென்றே என் உள்ளத்தை கொடுத்திருக்கிறேன்:
என் மீட்பர் அன்பின் அளவை அறிவதே என் மகிமை,
எப்போது அறிவேன் ?

2. பாதாளம் சாவைப் பார்க்கிலும் அவரின் நேசம் பலமும்
ஆழமுமானதே; பூலோகத்தார் எல்லாருக்கும்
மாட்சிமையுள்ள வானோர்க்கும் எட்டாததாயிற்றே.

3. தெய்வன்பின் ஆழம் கர்த்தாவே, அளந்து பார்த்தவர் நீரே,
அன்பின் பிரவாகத்தை என் ஏழை நெஞ்சில் ஊற்றிடும்
இதே என் உள்ளம் வாஞ்சிக்கும் தீராத வாஞ்சை.

4. உம் திருமுகம் பார்ப்பதும்,உம்மண்டை நித்தம் சேர்வதும்,
என் முழு வாஞ்சையாம்; உம் திவ்விய சத்தம்கேட்பதும்
எனக்கு இன்பம், களிப்பு என் மோட்ச பாக்கியமாம்.

1. அன்பே விடாமல் சேர்த்துக் கொண்டீர்
சோர்ந்த என் நெஞ்சம் உம்மில் ஆறும்;
தந்தேன் என் ஜீவன் நீரே தந்தீர்,
பிரவாக அன்பில் பாய்ந்தென்றும் ஜீவாறாய்ப் பெருகும்.

2. ஜோதி! என் ஆயுள் முற்றும் நீரே;
வைத்தேன் உம்மில் என் மங்கும் தீபம்;
நீர் மூட்டுவீர் உம் ஜோதியாலே;
பேர் ஒளிக் கதிரால் உள்ளம் மேன்மேலும் ஜுவாலிக்கும்.

3. பேரின்பம் நோவில் என்னைத் தேடும்
என் உள்ளம் உந்தன் வீடே என்றும்;
கார் மேகத்திலும் வான ஜோதி!
‘விடியுங்காலை களிப்போம்!’ உம் வாக்கு மெய் மெய்யே.

4. குருசே! என் வீரம் திடம் நீயே. உந்தன் பாதம் விட்டென்றும்
நீங்கேன். வீண் மாயை யாவும் குப்பை நீத்தேன்
விண் மேனியாய் நித்தியஜீவன் வளர்ந்து செழிக்கும்.

பல்லவி

அன்பே! அன்பே! அன்பே!
ஆருயிர் உறவே, ஆனந்தம் ஆனந்தமே

சரணங்கள்

1. ஒருநாள் உம் தயை கண்டேனையா
அந்நாள் என்னை வெறுத்தேனையா
உம் தயை பெரிதையா – என்மேல்
உம் தயை பெரிதையா. – அன்பே

2. பரலோகத்தின் அருமைப் பொருளே
நரலோகரி லன்பேனையா ஆழம் அறிவேனோ–அன்பின்
ஆழம் அறிவேனோ. – அன்பே

3. அலைந்தேன் பல நாள் உமையு மறியா
மறந்தே திரிந்த துரோகியை அணைத்தீர் அன்பாலே –
எனையும் அணைத்தீர் அன்பாலே. – அன்பே

4. பூலோகத்தின் பொருளின் மகிமை அழியும் புல்லின்
பூவைப்போல் வாடாதே ஐயா–அன்பு
வாடாதே ஐயா. – அன்பே

# 26

பல்லவி

அன்பரின் நேசம் பெரிதே
அதை நினைத்தே மகிழ்வோம்.

சரணங்கள்

1. உலகத் தோற்றம் முன்னமே
உன்னத அன்பால் தெரிந்தாரே
இந்த அன்பு ஆச்சரியமே
இந்த இகத்தில் வேறு இல்லை.
– அன்

2. அன்பின் அகலம் நீளமும்
ஆழம் உயரம் அறிவாரோ
கைவிடாமல் காக்கும் அன்பு
தூக்கி எடுத்து தேற்றும் அன்பு.
– அன்

3. பாவச் சேற்றில் எடுத்தென்னை
சாப மெல்லாம் தொலைத்தாரே
தூய ரத்தம் சிந்தி மீட்டு
தூய்மையானேன் தேவ அன்பு.
– அன்

மாசற்ற தூய நல் அன்பே, அன்பே,
மாறிடா மங்கிடா அன்பே, அன்பே,
காலத்தில் அடங்கா ஞாலத்தில் சிறந்த
உள்ளம் உடைக்கும் அன்பே!

1. எருசலேம் தெருக்களில் ஓலம் ஏன்?
கொல்கதா மலையில் கூட்டம் ஏன்?
என்னைத் திருத்திட என் அன்பு சாகுதே
ஒ! நல்ல தேவ அன்பே!– மாசற்ற

2. சிலுவையின் அடியில் இரத்தக்கறை
என் உள்ளக் கறையை கழுவவோ!
ஏனையா இத்தனை என் மீது அக்கறை
ஒ நல்ல தேவ அன்பே!– மாசற்ற

3. நேசத்திற்கெதிராய் ஒன்றும் செய்யேன்
அன்பிற்கு அடிமை ஆகுகின்றேன்
என் யாவும் அன்பிற்கே என்
எல்லாம் அன்பிற்கே
உள்ளம் மகிழ்கின்றேனே. மாசற்ற

# 28

பல்லவி

தெய்வ அன்புதான், தெய்வ அன்புதான்,
அதனின் அகலம் உயரம் ஆழம் அளவில்லாததே!

சரணங்கள்

**1.** பாவக் குழியில் விழுந்துபோன என்னைத் தூக்கினார்.
பாட்டை நல்கி பாதங்கள்கன்மலையில் நிறுத்தினார்.
– தெய்வ

**2.** கல்வாரி சிலுவையில் தம் ஜீவனை விட்டார்
கெட்டுப் போன பாவி என்னை முற்றுமே மீட்டார்.– தெய்வ

**3.** இந்த அன்புக் கீடு நல்க நான் தகாதவன்
எந்தனைத் தம் சொந்தமாக தத்தம் செய்கிறேன்.– தெய்வ

**4.** சுகமும் செல்வம் தேகம் ஜீவன் யாவுமே என்றும்
சுகந்த பலியாய் படைக்கிறேன் என் இயேசு பாதத்தில்.
– தெய்வ

**5.** மீட்கப்பட்ட கூட்டமே நல் மீட்பர் பேரிலே
பாடி வாழ்த்தல் செய்யுங்கள் இவ்வன்பைப் போற்றுங்கள்.
– தெய்வ

29

பல்லவி

அன்பர் அன்பை யாரால்கூறலாம் ஆ! ஆச்சரியம்
அன்பாகவே இருக்கும் என்நேசர்.

அனுபல்லவி

அன்பின் உயரம் நீளம் அகலம்
ஆழம் அளக்க யாரால் கூடும்
அன்பரின் பேரன்பை இங்கு
அழகாய் கூற யாரால் கூடும்.

1. எல்லா ஜலமும் மையானாலுமே அன்பை எழுதிட
எல்லா மரமும் பேனாவானாலும் ஆகாயத்தை தாளாக்கி
அதிலெல்லாம் எழுதினாலும்
அன்பின் அம்சம் எழுதித் தீர்க்க அன்பர்கள் எங்குதானுண்டு

–அன்பர்

2. மாந்தர் மேலே பாய்ந்த அன்பைத்தான் ஆழ்ந்து தூதரும்
பார்ப்பதிலே பணிந்து குனிகிறார். பாவி மேலே பாய்ந்த அன்பு
சாவின்கூரை ஒடித்து வென்றது. என்ன அன்பு என்ன நேசம்
மன்னரேசுவின் மகத்துவ நேசம் –அன்பர்

3. ஏழை என்னில் பாய்ந்த அன்புதான்–ஆ! ஏராளம்
ஏழை என்னால் பகரக்கூடுமோ அல்லும் பகலும் மகிழ்ந்து
பாடி இங்கும் எங்கும் அன்பைக் கூறுவேன்
அன்பின் இன்பம் ருசித்துப் புசித்து அன்பை மட்டும்
எங்கும் கூறுவேன் –அன்பர்

4. எந்தன்நேசர் என்னை மீட்கவே ஏழை ரூபமாய்
இந்த லோகில் வந்தபின்னுமே பாவம் நீக்க சாபமாகி
சிலுவையிலே மாண்டதினால் ஜீவன் தந்து சிங்காரித்து

சிறந்த விண்ணொான் ஆக்கின என் –அன்பர்

5. அன்பின் ஆத்ம அபிஷேக மளித்து இன்ப நதியினால்
எந்தன் உள்ளம் நிரம்பி வழியும் அன்பின் பெருக்கில் நீந்திக்
களிக்க இன்ப உறவால் நேசித்த என்
இன்பமான அன்பினுக்காய் என்ன பதில் ஏழை
செய்குவேன் –அன்பர்

## 30

1. வானப் பிதா தந்த வேதத்திலே
நான் மகிழ்வேன் அன்பு சொல்லுகிறார்,
விவ்விலி ஆச்சர்யம் யாவினுள்ளே
ஆச்சர்யம் இயேசென்னை நேசிக்கிறார்.

பல்லவி

ஆனந்தம் இயேசு நேசிக்கிறார் நேசிக்கிறார், நேசிக்கிறார்,
ஆனந்தம் இயேசு நேசிக்கிறார் நேசிக்கிறார், என்னையும்.

2. நான் மறந்தோடினும், நேசித்தென்னை
சென்ற இடம் வந்து தேடுகிறார், மீண்டவர் கையினுள்
ஓடத்தன்னை தந்த அந்நேசத்தால் நேசிக்கிறார்.

3. மாராசர் வானுயர் தோற்றத்திலே
கீதம் இதோ என்றும் பாடிக் கொள்வேன்;
என் துதி நித்திய காலத்திலே ஆச்சர்யம்
இயேசென்னை நேசிக்கிறார்.

4. நேசிக்கிறார் நானும் நேசிக்கிறேன்:
மீட்க வந்தாத்துமம் நேசிக்கிறார்
சாவு மரத்தில் அந்நேசங் கண்டேன்;
நிச்சயம் இயேசென்னை நேசிக்கிறார்.

பல்லவி

ஓ ! இயேசு உமதன்பு எத்தனை பெரியது
ஆகாயம் பூமி மலைஆழிகளுக் கெல்லாம் பெரியது

சரணங்கள்

1. அளவில்லா ஆனந்தத்தால்அகம் நிறைந்தது
ஆண்டவர் காரியங்கள் அதிகம் சிறந்தது
அன்றாடம் காலை மாலைகளிலும் துதிக்க உயர்ந்தது
துதிக்க உயர்ந்தது...ஓ இயேசு

2. சங்கட சமயங்களில் மங்கியே வாடுகிறேன்
துங்கனே இரங்குமென ஏங்கியே நாடுகிறேன்
பங்கமில்லாமல் பதிலளிப்பேன் என்றதால் பாடுகிறேன்,
என்றதால் பாடுகிறேன்– ஓ இயேசு

3. இருளாம் பள்ளத்தாக்கில் மருகியே நடந்தாலும்
அருமெந்தன் மேய்ப்பராய் அருகிலிருப்பதாலும்
கருணையா யென்னைக் கரம் பிடித்தே
கர்த்தரே காப்பதாலும், கர்த்தரேகாப்பதாலும் – ஓ இயேசு

4. குறைவுள்ளவனானாலும் கூடவே இருக்கிறீர்
நிறைவாம் புல்தரைகளில் மெதுவாய் நடத்துகிறீர்
இறைவனாம் இயேசு எல்லா வற்றாலும் திருப்தியாக்குகிறீர்,
திருப்தியாக்குகிறீர் – ஓ இயேசு

5. தேவனுடைய வீட்டில்சித்தப்படி துதிப்பேன்
ஏக இதயத்துடனே என்றுமதை மதிப்பேன்
ஆராதிக்க அருகராம் இயேசு அல்லேலூயா ஆமென்,
அல்லேலூயா ஆமென் – ஓ இயேசு

## 32

பல்லவி

நம் தேவன் அன்புள்ளவர் நம் தேவன் பரிசுத்தர்
நம் தேவன் நீதிபரர் நமக்காக ஜீவன் தந்த இயேசு அவரே

சரணங்கள்

1. நன்மை ஏது ஒன்றும் நம்மில் இல்லையே
என்ற போதும் நம்மை நேசித்தாரே
ஆ! அந்த அன்பில் நீந்துவோம் அன்பரின் பாதம் பணிவோம்– நம்

2. அத்திமரம் துளிர் விடாமற் போனாலும்
திராட்சைச் செடி கனி தராதே போனாலும்
ஆ! அவர் காயம் நோக்குவோம் அதுவே என்றும் போதுமே! – நம்

3. நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர் அங்கே
நீசன் போல தொங்கும் காட்சியைக் கண்டோமே
ஆ! நீதி நிறை வேறிற்றே நம் பாவ பாரம் நீங்கிற்றே – நம்

4. கர்த்தர் இயேசு போல இப்புவி மீதிலே
பரிசுத்த தேவன் வேறாரு மில்லையே
ஆ! அதைக் கண்டு கொண்டோமே ஆகையால் மகிழ்கின்றோமே – நம்

5. மேகமீதில் இயேசு இறங்கி வருவார்
தேவ தூதர் போல மகிமை அடைவோம்
ஆ! அந்த நாள் நெருங்குதே நினைத்தால் நெஞ்சம் பொங்குதே – நம்

6. அல்லேலூயா கீதம் நாம் என்றும் பாடுவோம்
ஆண்டவரோ டென்றும் ஆளுகை செய்குவோம்
ஆ! எங்கள் தேவா வாருமே அழைத்து வானில் செல்லுமே. – நம்

**1.** என் உள்ளமே. கர்த்தாவை ஆவலாய்த் துதித்து
என் ஆவியே, தெய்வன்பை எப்போதும் போற்றிடு:
உன் பாவத்தை மன்னித்து, உன் கேட்டை நீக்கினார்;
உன் ஜீவனை இரட்சித்து, நற்சீர் அளிக்கிறார்.

**2.** மகா இரக்கமான சகாயர் கர்த்தர் தான்,
நொருங்குண்டோருக்கான அருளின் ஊற்றேயாம்;
கோபத்தை என்றென்றைக்கும் என் தேவன் கொள்ளாரே,
மனம் நருங்குண்டோர்க்கும் கிருபை செய்வாரே.

**3.** தந்தை தன் மைந்தருக்கு இரங்கும் வண்ணமாய்
கர்த்தர் தம் தாசருக்கு இரங்குவார் மெய்யாய்;
நாம் இன்ன உருவென்று நன்றாக அறிவார்.
நாம் தூளும் மண்ணும் என்று அறிந்திருக்கிறார்.

1. அப்பா! பிதா! உம் பிரசன்னம் வந்தோம் மீட்பர் நாமத்தில்;
உம் பிள்ளைகளாகக் கூடி, உம் சமூகம் அண்டினோம்
அவர் இரத்தம் என்னை மீட்டு, பாவம் சாபம் நீக்கிற்றே!
‘அப்பா, பிதா’ உந்தன் நாமம் என்ன இன்பம் எனக்கு.

2. கெட்டோனாகத் தூரம் போனேன், மதிகேடாய் அலைந்தேன்;
உம் கிருபை ஆழி பொங்கி என் மட்டுக்கும் வந்தது;
தேவே! மன்னித்து நேசித்தீர்; பெற்ற பாசத்தால் என்னை
இன்பம் பொங்க சேர்த்துக் கொண்டீர், உம்மோடென்றும் வாழவே.

3. இரட்சிப்பின் உடை உடுத்தி மேஜை சூழ செய்தீரே;
உம் கிருபை திரட்சியில் நானும் மூழ்கிப் போனேனே,
“தொலைந்த என் பிள்ளை கண்டேன்.
மரித்தவன் உயிர்த்தான், ஒன்று கூடி மகிழ்வோமே;
ஆர்ப்பரிப்போம்” என்கிறீர்.

4. அப்பா! பிதா! உம்மை வாழ்த்தி போற்றிப்பாடி பணிவோம்!
வானோர் என்னில் அதிசயிக்க, தோன்றுதே உம் அன்புதான்;
சீக்கிரமாய் சிங்காசனம் சூழ நின்று பாடுவேன்;
“மகிமை கனமும் தேவரீர்க்கே ஆட்டுக் குட்டியானோர்க்கே”.

# 35

1. உம்மைத் துதிக்கிறோம், யாவுக்கும் வல்ல பிதாவே;
உம்மைப் பணிகிறோம், நாதா, இராஜாதி இராஜாவே;
உமது மா—மகிமைக்காக, கர்த்தர்,
ஸ்தோத்திரம் சொல்லுகிறோமே.

2. நித்திய பிதாவின் மகிமையில், இயேசுவே, நீரே
பரிசுத்தாவியோடே கமாய் ஆளுகிறீரே;
ஏகமாய் நீர்—அர்ச்சிக்கப்படுகிறீர்,
உன்னத கர்த்தரே ஆமேன்.

**1.** பூலோகத்தாரே, யாவரும் கர்த்தாவில் களிகூருங்கள்;
ஆனந்தத்தோடே ஸ்தோத்திரம் செலுத்திப் பாட வாருங்கள்.

**2.** யெகோவா தாம் மெய்த்தேவனே;நாம் அல்ல,
அவர் சிருஷ்டித்தார்; நாம் ஜனம், அவர் இராஜனே
நாம் மந்தை, அவர் மேய்ப்பனார்.

**3.** கெம்பீரித்தவர் ஆலய பிரகாரத்துள்ளே வாருங்கள்;
மகிழ்ந்து அவர் திவ்விய நல் நாமத்தைக் கொண்டாடுங்கள்.

**4.** கர்த்தர் தயாளர், இரக்கம் அவர்க்கு என்றும் உள்ளதே;
அவர் அநாதி சத்தியம் மாறாமல் என்றும் நிற்குமே.

1. தூய, தூய, தூயரே! த்ரியேக தேவா,
உமக்கே எந்நாளும் சங்கீதம் ஏறுமே;
தூய, தூய, தூயரே! சர்வ வல்ல கர்த்தா!
காருண்யரே, ஆனந்த கடலே!

2. தூய, தூய, தூயரே! அன்பர் சூழ நின்று
தேவ ஆசனமுன்னர் தம் கிரீடம் வைப்பரே:
கேரூபீம் சேராபீம் தாழ்ந்து போற்றப்பெற்று,
இன்றென்றும் வீற்றாள்வீர், அநாதியே!

3. தூய, தூய, தூயரே! ஜோதிப் பிரகாசா,
பாவக்கண்ணால் உம் தன் மாண்பைக்காண யார் வல்லோர்?
நீரே பரிசுத்தர், மனோவாக்குக் கெட்டா
மாட்சிமை, தூய்மை, அன்பும் நிறைந்தோர்.

4. தூய, தூய, தூயரே! த்ரியேக தேவா,
வானம், பூமி, ஆழி உம்மைத் துதிசெய்யுமே;
தூய, தூய, தூயரே! சர்வ வல்ல கர்த்தா!
காருண்யரே, தூய த்ரியேகரே!

1. பிதாவே, உம் சமூகத்தில், வந்து பணிகிறோம்;
உம் கிருபையைப் பெற்றோராய், உம்மைத் துதிக்கிறோம்.

2. இயேசுவின் திவ்ய முகத்தில் பிரகாசிக்கும் உந்தன்
மகிமையின் வெளிச்சத்தில் உம்மைப் பணிகிறோம்.

3. அவர் கரத்தின் கிரியைகள் நாங்கள் உம் முன் வந்தோம்,
உம்மை மகிமையுள்ளோராய், கண்டு பணிகிறோம்.

4. உம் நேசராய் அவர் உந்தன் சமூகம் நிரப்பி
உம் ஒளி எம்மில் வீசியே உம் மக்கள் ஆக்கினார்.

5. கர்த்தாவே, இயேசு கிறிஸ்துவே; உம் நாமத்தை நாங்கள்
உம் பிதா சமூகத்திலே, போற்றித் துதிக்கிறோம்.

6. தேவாட்டுக் குட்டியானோரே, உம்மைப் பணிகிறோம்;
நீரே உம் இரத்தத்தால் எம்மைக் கொண்டீரே உமக்காய்.

## 39

பல்லவி

தொழுகிறோம் எங்கள் பிதாவே பணிகிறோம் ஆவி
உண்மையுடனே

அனுபல்லவி

பரிசுத்த அலங்காரத்துடனே
தரிசிப்பதினால் சரணம்,சரணம்

சரணங்கள்

1. துதிக்கிறோம் உம் தூய நாமம் பணிகிறோம் உம் பரம பாதம்,
ஜெபிக்கிறோம் உம் ஜெய நாமம்,தேவ தேவனே சரணம், சரணம்
– தொழு

2. தூய நாமம், நேய நாமம் தேவ, தேவ, மேய நாமம்
தீயராம் எங்களையுமே புத்ரராக்கி தீர்த்த நாமம் – தொழு

3. நன் நலங்கட்கோர் முதலே நற்சேயை நீர் தந்ததாலே,
நற்பிதாவே நாடி வந்தோம் பொற் பாதமே தாள் பணிகிறோம்
– தொழு

4. உலகத்திலே அன்புகூர்ந்து, உம் குமாரனை ஈந்த பிதாவே!
உண்மையோடே ஸ்தோத்திரமே, உள்ளத்தோடே உயர் பிதாவே
– தொழு

5. அன்பின் உருவாம் அன்பின் பிதாவே!
அன்பின் ஈவை அளித்த பிதாவே! அருள் மாரியின் ஆழிக்கடலே!
அன்பினாலே பணிகிறோமே.– தொழு

1. சீர்மிகு வான்புவி தேவா, ஸ்தோத்ரம்,
சிருஷ்டிப்பு யாவையும் படைத்தாய், ஸ்தோத்ரம்,
ஏர்குணனே, ஸ்தோத்ரம், அடியார்க்கு
இரங்கிடுவாய், ஸ்தோத்ரம், மா நேசா.

2. நேர்மிகு அருள் திரு அன்பா, ஸ்தோத்ரம்,
நித்தமு முமதடியார்களின் ஸ்தோத்ரம்,
ஆர் மணனே, ஸ்தோத்ரம், உமது
அன்பினுக்கே ஸ்தோத்ரம், மா நேசா.

3. ஜீவன் சுகம், பெலன் யாவுக்கும் ஸ்தோத்ரம்,
தினம், தினம் அருள் நன்மைக் காகவும் ஸ்தோத்ரம்
ஆவலுடன் ஸ்தோத்ரம் உமது அன்பினுக்கே ஸ்தோத்ரம், மா நேசா.

4. ஆத்தும நன்மைகட்காகவும்ஸ்தோத்ரம்,
அதிசய நடத்துதற்காகவும் ஸ்தோத்ரம்,
சாற்றுகிறோம் ஸ்தோத்ரம், உமது
தகுமன்புக்கே ஸ்தோத்ரம், மா நேசா.

5. மாறாப் பூரண நேசா, ஸ்தோத்ரம் மகிழொடு ஜெபமொழி
மாலையின் ஸ்தோத்ரம், தாராய் துணை, ஸ்தோத்ரம்,
இந்தத் தருணமே கொடு ஸ்தோத்திரம், மா நேசா.

1. எல்லோருக்கும் மா உன்னத கர்த்தாதி கர்த்தரே
மெய்யான தேவ மனிதன் நீர் வாழ்க இயேசுவே!– (3)

2. விண்ணில் பிரதானியான நீர் பாவிகட்காகவே
மண்ணில் இறங்கி மரித்தீர்; நீர் வாழ்க இயேசுவே!– (3)

3. பிசாசு, பாவம், உலகம், இச்சத்துருக்களை
அழிந்து போக மிதியும் நீர் வாழ்க இயேசுவே!– (3)

4. நீர் வென்றபடி நாங்களும் வென்றேறிப் போகவே
பரத்தில் செங்கோல் செலுத்தும்! நீர் வாழ்க இயேசுவே! – (3)

5. சகல ஜாதி ஜனமும் பூலோகில் யாவரும்
கிரீடம் சூடி போற்றுவார் நீர் வாழ்க, இயேசுவே!– (3)

6. விண்ணோர்களோடும் மண்ணுளோர்
என்றைக்கும் வாழ்கவே பரம வாசல் திறந்தோர்
நீர் வாழ்க இயேசுவே!– (3)

# 42

**1.** பக்தரே! அண்ணாந்து பாரும்! இயேசு வெற்றி வேந்தராய்
வானில் தோன்ற, மாந்தர் யாரும் சேவிப்பாரே தாழ்மையாய்.

பல்லவி

வாழ்க! வாழ்க! என்றும் வாழ்க!
வாழ்க! இராஜ ராஜரே!
வாழ்க! வாழ்க! என்றும் வாழ்க!
வாழ்க! இராஜ ராஜரே!

**2.** தேவதூதர் முடிசூட்ட, இராஜரீகஞ் செய்கிறார்;
தாசர் ஜெய கீதம்பாட கிரீடதாரியாகிறார்.– வாழ்க

**3.** தீயரும் சக்கந்தமாக முடிசூட்டி வாழ்த்தினார்,
தூய தூதர் கூட்டமாக சேவித் தாரவாரிப்பார்.– வாழ்க

**4.** பாரும் இராஜ அபிஷேகம் ஆரவாரம் கேளுமேன்
இயேசுவின் சர்வாதிகாரம் பூமிளங்கும் கூறுமேன்.– வாழ்க

**1.** இயேசுவே, நீரே பாத்திரர், முடிவில்லா துதிக்கு;
உம் அன்பு, கிருபை, நன்மை என் நினைவுக் கெட்டாதே.

**2.** துதி பொங்கும் உள்ளத்தோடு, உந்தன் நாமம் போற்றியே,
இரக்கத்தால் நிறைந்து, உம்மை எங்கும் புகழ்வோம்.

**3.** துதிப்போம் நம் மீட்பரையே, நம் சத்தத்தை உயர்த்தி
அன்று அங்கு காணும் வரை அவர் புகழ் பாடுவோம்.

# 44

**1.** என் பாவம் நீக்கி விட்டனர், ஒப்பில்லா வல்ல மீட்பர்
மாகிரயம் தந்து மீட்டனர், ஒப்பில்லா வல்ல மீட்பர்!

பல்லவி

ஒப்பில்லா வல்ல மீட்பர் மா நேசர் என் நேசர்!
ஒப்பில்லா வல்ல மீட்பர்! என் இயேசுவைப் பார்!

**2.** மாசற்ற இரத்தம் சிந்தினார் ஒப்பில்லா வல்ல மீட்பர்,
தம்மண்டை சேர்த்து அணைத்தார் ஒப்பில்லா வல்ல மீட்பர். –ஒப்

**3.** என் நெஞ்சை சுத்தமாக்கினார் ஒப்பில்லா வல்ல மீட்பர்,
அங்கரசாட்சி செய்கிறார் ஒப்பில்லா வல்ல மீட்பர்.– ஒப்

**4.** என் துணையாக நிற்கிறார் ஒப்பில்லா வல்ல மீட்பர்,
எத்தீங்குமின்றிக் காக்கிறார்ஒப்பில்லா வல்ல மீட்பர். –ஒப்

**5.** சுத்தாங்க சுபாவம் நல்கினார் ஒப்பில்லா வல்ல மீட்பர்
பிசாசை வெல்ல செய்கிறார் ஒப்பில்லா வல்ல மீட்பர். – ஒப்

**6.** உலக நேசம் நீக்கினார் ஒப்பில்லா வல்ல மீட்பர்.
என் நெஞ்சை வசமாக்கினார் ஒப்பில்லா வல்ல மீட்பர்.–ஒப்

1. வந்தார் தேவ மைந்தனே துக்கம் நிறைந்துள்ளோராய்
கெட்டோரை சீர்ப்படுத்தவே அல்லேலூயா நல்ல நேசர்.

2. நின்றார் என் நிலையிலே நிந்தை நியாயத்தீர்ப்பிலே
முடித்தார் மீட்பை இரத்தத்தால் அல்லேலூயா நல்ல மீட்பர்.

3. மாசற்ற தேவ மறி நீசராம் நமக்காக
பூரண பாவ நிவர்த்தி உண்டு பண்ண வந்த நேசர்.

4. உயர்த்தப்பட்டார் மரிக்கவென்று, சத்தமிட்டார் முடிந்ததென்று
மகிமைப்பட்டார் உயர நன்று, அல்லேலூயா நல்ல நேசர்.

5. மீட்கப்பட்டோரை சேர்க்கவே மகிமையின் இராஜா வரும் போது
புதுப்பாட்டு பாடுவோம் அல்லேலூயா நல்ல நேசர்.

1. ஒப்பில்லாத நேசத்தால் என்னை நேசித்தே வந்தார்
ஆவியின் பேரொளியால் இதைத் தெளிவாக்கினார்.
சமாதானம் நிறைவாய் வெள்ளம்போலத் தந்தனர்.
பிரியாச் சம்பந்தமாய் என்னைச் சேர்த்துக் கொண்டனர்.

2. திவ்ய சுகவாரியில் இன்பமாக மூழ்குவேன்,
நீலாகாயம், புவியில் நவக்காட்சி காண்கிறேன்.
நித்தம் களிகூறுவேன் இயேசுவில், ஆனந்தமாய்
அவர் அன்பில் நிலைப்பேன் பிரியாச் சம்பந்தமாய்.

3. கிலேசம், துன்பம், திகிலால் இனிமேல் நான் கலங்கேன்,
இழுப்புண்டு இயேசுவால், திவ்ய மார்பில் சாய்கிறேன்.
தம்மோடென்றும் சுகமாய்த் தங்க அருள் புரிவார்,
பிரியாச் சம்பந்தமாய் என்னைச் சேர்த்து அணைத்தார்.

4. பிரியாத வண்ணமாய் அவர் சொந்த மாயினேன்,
இளைப்பாறி இன்பமாய்ப் பரவசம் அடைந்தேன்.
வானம் பூமி நீங்கினும் மீட்பர் என்னைக் கைவிடார்,
ஸ்திரமாய் எக்காலமும் என்னைப் பாதுகாக்கிறார்.

1. என் இரட்சகர் எல்லாருக்கும் மகா தயாபரர்,
எக்கீர்த்தி கனம் துதிக்கும் எப்போதும் பாத்திரர்.

2. என் பெற்றோர், வீட்டார் நேசராய்இருந்தும்,
இயேசு தாம் யாரையும் பார்க்கிலும்
உண்மையாய் விளங்கும் நேசராம்.

3. நான் வாடா கிரீடம் தரிக்க முட் கிரீடம் சூடினார்,
தேவன்பு நன்றாய் விளங்க எக்கஸ்தியும் பட்டார்.

4. பிதாவின் சாயல் தரித்தும் மகா அன்புடனே,
நிஷ்டூர வெட்க சாவுக்கும் அவர் உட்பட்டாரே.

5. எப்போதும் இதை நினைத்து இவ்வேழை அடியேன்,
மீட்பரே உம்மை வாஞ்சித்து பின்பற்றி நடப்பேன்.

1. என்றும் நித்திய மகிமை, சிலுவையில் மாண்டோர்க்கே;
எங்கள் ஆத்துமாவை மீட்டார், மரணக் கூர் ஒடித்தார்,
மகிமையானோர்; தம் மக்களை மீட்டாரே.

2. அவர் கரை காணா அன்பு, முடிவுமே இல்லையே!
வாக்குக்கெட்டா அந்த அன்பின் ஆழம் நீளம் அறியோம்;
துதி அவர்க்கே; மீட்பரையே வாழ்த்துவோம்.

3. இரட்சகர் சிலுவை வெட்கம் யாவும் கேட்டுணர்ந்த நாம்;
"நித்திய மகிமை கனமும் அவர்க்கென்று" பாடுவோம்
அல்லேலூயா; அவர் நாமம் போற்றுவோம்.

1. மேலோகத்தில் என் பங்கு நீர், கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
மேலான நன்மை தேவரீர், கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
நீர் பாரில் இரத்தஞ்சிந்தினீர்! பேரன்பைக் காட்டி, மரித்தீர்;
சீர்கெட்ட என்னை இரட்சித்தீர்; கிறிஸ்துவே! கிறிஸ்துவே!

2. பூலோக மேன்மை வாஞ்சியேன், கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
மேலோக இன்பம் நாடுவேன், கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
இப்பாரின் வாழ்வு நில்லாதே; தப்பாமல் வாடிப்போகுமே,
ஒப்பற்ற செல்வம் நீர் நீரே, கிறிஸ்துவே! கிறிஸ்துவே!

3. நீர் ஏழையேனைக் கைவிடீர், கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
சீராகக் காத்து ஆளுவீர், கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
பொன், வெள்ளி, ஆஸ்தி போயினும், துன்புற்று, பாடுபடினும்
என் விசுவாசம் நிலைக்கும், கிறிஸ்துவே! கிறிஸ்துவே!

4. தீயோன் விரோதஞ் செய்யினும்; கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
ஓயாமலே போராடினும், கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
அம்மூர்க்கங் கண்டு அஞ்சிடேன்; உம்மாலே வெற்றி சிறப்பேன்,
கெம்பீர கீதம் பாடுவேன் கிறிஸ்துவே! கிறிஸ்துவே!

5. வெஞ் சாவையும் மேற்கொள்ளுவேன், கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
உம் நேச மார்பில் சுகிப்பேன், கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
பேரன்பரே கை தாங்குவீர், நீர் விண்ணில் சேர்த்து
வாழ்விப்பீர்; தீராப் பேரின்பம் ஈகுவீர்,
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!

1. இயேசு நாதர் எங்குமாக ஜெயங்கொள்ளுவார்,
தேசா தேசம் வேந்தராக ஜெயங்கொள்ளுவார்.

பல்லவி

ஜெயங்கொள்ளுவார் ஜெயம் ஜெயம் அல்லேலூயா
ஜெயங்கொள்ளுவார்.

2. நீதியின் இராஜா ஆளவேண்டும்
வேதவாக்கை நம்பிப் பாடும்.– ஜெயங்

3. பேயும் பொய்யும் ஓடிப்போகும்
தூய ஞான ஒளி வீசும். – ஜெயங்

4. பாவம் சாபம் யாவும் நீங்கும்
சாவும் நோவும் முற்றுந்தீரும். – ஜெயங்

5. லோகத்தார் எல்லாரும் வாழ
ஏக இராஜராஜராக. – ஜெயங்

6. அன்பு பொங்கியே கொண்டாடி
இன்பமாகப் பாடிப் போற்றும். – ஜெயங்

## 51

1. போற்றுவேன் என் மீட்பர்அன்பை பிராணன் தந்து இரட்சித்தார்
பாடுபட்டு இரத்தம் சிந்தி பாவம் சாபம் நீக்கினார்.

பல்லவி

போற்றும் போற்றும் அல்லேலூயா! பூரண மீட்புண்டாக்கினார்,
தூய வல்ல இரத்தஞ் சிந்தி தீய பாவம் நீக்கினார்.

2. நீசப் பாவியாம் என் பேரில் நேசம் வைத்துக் காட்டினார்,
மீட்கும் பொருளாகத் தம்மை முற்றுந் தந் தீடேற்றினார். – போற்

3. போற்றுவேன் சம்பூரண மீட்பை பிராண நாதர் காக்கிறார்,
வாணாள் எல்லாம் பாவப் போரில் வெற்றிகாணச் செய்கிறார்.
– போற்

4. போற்றுவேன் ஆனந்தமாக,பாடி நன்றி சொல்லுவேன்
என்னை மீட்ட இயேசுவோடே என்றும் தங்கி சேவிப்பேன்.
– போற்

1. எண்ணில்லா நாவுகள் ஒன்றாய் ஆட்டுக் குட்டியானோரை,
போற்றிப்பாடும் கூட்டம் பாரீர், ஏக மனதாகவே!

2.“ஆட்டுக்குட்டியானோருக்கே, துதி” என்ற சத்தமே
வானம் பூமி மற்றும் எங்கும் பூரிப்பாய் முழங்குதே.

3. இந்த தூபவர்க்கப் புகை பிதா சமூகம் போகும்;
இயேசு முன்பு முழங்கால்கள் எல்லாம் ஒன்றாய் முடங்கும்.

4. பிதா மடி விட்டு வந்து பாடுபட்டார் எனக்காய்;
அவர் மகிமையைக் காட்டி மைந்தனாகத் திகழ்ந்தார்.

5. திரள் கூட்டம் சூழ நின்று, “இருக்கிறேன்” என்றோராம்
ஆட்டுக்குட்டியானோருக்கு துதி பாடி போற்றுரார்.

6. புது சிருஷ்டிகளாய் நாங்கள் இயேசுவில் இளைப்பாறி
பூரண இரட்சிப்பைப் பெற்று பூரிப்போடு வாழ்கிறோம்.

1. தேவ ஆட்டுக்குட்டி ! உம்மை வாழ்த்திப் பணிகிறோமே;
பிதாவின் மகிமை அன்பும் உம்மில் பிரகாசிக்குதே;
உம் சர்வ வல்லமை ஞானம் சிருஷ்டிகளில் காணுதே;
வானம் பூமி ஒன்றாய் உம்மை அறிக்கையும் செய்யுதே.

2. தேவ ஆட்டுக்குட்டி ! உந்தன் பிதா மடி இன்பமே;
அதில் அவர் மகிழ்ச்சியாய் நித்தம் தங்கியிருந்தீர்;
என்ன அன்பு, என்ன கிருபை எனக்காக நீர் கொண்டீர்;
சர்வத்தையும் விட்டவராய், பூவில் வந்து மரித்தீர்,

3. தேவ ஆட்டுக்குட்டி ! உந்தன் கைப்பொருள் பூமியிலே,
மாட்டுக் கொட்டில் பிறந்தீரே, பரதேசியானீ ரே;
கெத்சமனே தோட்டத்திலே கஸ்திகளடைந்தீரே;
என்மேல் பாய்ந்த உந்தன் கிருபை, அதிசயம் அல்லவோ !

4. கள்ளர்களின் நடுவினில், ஈனக்குருசைப் பார்க்குங்கால்
எந்தன் நியாயத்தீர்ப்பின் சாபம், எல்லாம் அதில் சுமந்தீர்;
ஆண்டவா ! நீர் ஒப்பற்றவர்; குருதி சிந்தி நேசித்தீர்
வாழ்க, வாழ்க, என்றும் வாழ்க ! ஆட்டுக்குட்டியானோரே !

1. ஆத்துமாவே பூரிப்பாய்   இரட்சகரைப் போற்றிடு,
உனக்காக கசப்பின் பானம் பருகினாரே!

2. அவர் அன்பின் நேசம் பார்! வானம் விட்டு வந்தவர்
உனக்காக மரித்தார், போற்றிடு நீ பூரிப்பாய்.

3. ஆழிகடல் அலைகள், மாசற்றோர் மேல் பாய்ந்தது,
உனக்காக அல்லவோ! போற்றிடு நீ பூரிப்பாய்.

4. வானில் தூதரோடு நாம், நித்தியமாய் பூரிப்போம்;
அதுவரை உள்ளமே! போற்றிடு நீ பூரிப்பாய்.

1. அதோ ! மாட்டுத்தொழுபார் மேய்ப்பர் போற்றும் பாலன் யார் ?

பல்லவி
இவர் தாம் மாவல்ல கர்த்தர்
இவர் மகிமையின் இராஜா
திருப்பாதம் பணிவோம்
இராஜ கிரீடம் சூட்டுவோம்.

2. கஷ்டமாய் வனத்தில் யார் உபவாசம் செய்கிறார் ? – இவர்

3. அன்பின் வார்த்தை சொல்வதார் ஜனம் துதி செய்வோர் யார் ? –இவர்

4. துக்க பாரம் நோய் உள்ளார் குணமாக்குகிறதார் ?– இவர்

5. லாசரின் கல்லறை பார் ! அங்கு கண்ணீர் விட்டோர் யார் ?– இவர்

6. திரள் ஜனக் கூட்டத்தார் போற்றி வாழ்த்தும் இவர் யார் ? – இவர்

7. இரத்த வேர்வை சிந்தி யார் ஜெபத்தில் போராடினார் ? – இவர்

8. சிலுவையின் காட்சி பார் அரும் ஜீவன் விட்டதார் ? –இவர்

9. சாவை வென் றெழுந்ததார் ? அதால் நம்மை மீட்டோர் யார் ?– இவர்

10. இராஜகோலம் அணிந்து யார் ? லோகம் யாவும் ஆள்கின்றார் ?– இவர்

1. பேரன்பர் இயேசு நிற்கிறார்; நாம் அண்டிக் கொள்ளுவோமே.
கடாட்சமாகப் பார்க்கிறார்; நல் நாமம் போற்றுவோமே.

பல்லவி

விண்ணில் மேன்மை பெற்றதே;
மண்ணோர் இன்பமாகவே
பாடிப்போற்றும் நாமமே.
இயேசு என்னும் நாமம்.

2. உன் பாவம் யாவும் மன்னித்தேன்; அஞ்சாதே என்கிறாரே
சந்தேகங் கொண்டு சோர்வதேன் ? மெய்ப்பாக்கியம் ஈகிறாரே. – விண்

3. நல் மீட்பர் யாவர் பேரிலும் கடாட்சம் வைக்கிறாரே.
தம்மண்டை சிறியோரையும் தள்ளாமல் சேர்க்கிறாரே.– விண்

4. மா மேன்மை இயேசு நாதர்க்கே நம்மால் உண்டாவதாக.
இரட்சண்ய கிரியைக்காகவே நாம் வாழ்த்தல் செய்வோமாக. – விண்

5. இரட்சண்ய வல்ல நாமத்தால் விசாரம் நீங்கிப்போகும்.
அவ்வின்ப நாமம் கேட்பதால் சந்தோஷமும் உண்டாகும். – விண்

6. ஆனந்தமாகப் பாடுவோம் பேராவலோடு வாரும்!
ஏகோபித்தாரவாரிப்போம்! மெய்பக்தர் தாசர் யாரும்.– விண்

fppt.com

1. மகிமையின் கிறிஸ்து இயேசு, இரட்சகராய்ப் பிறந்தீர்;
வானோர் கூட்டம் போற்றும் உம்மை, துதிக்கிறோம்.
உம் கிருபை அன்பைப் பாடி போற்றுகிறோம்.

2. மரணத்தின் கட்டை அறுத்தீர் அதில் வெற்றியடைந்தீர்;
தேவன் என்றும் எங்கள் தேவன்; துதிக்கிறோம்;
நாங்கள் உம்முடையோர் நித்தம்; போற்றுகிறோம்.

3. மீட்பின் கிரயம் கொடுத்து, எங்களை விடுவித்தீர்;
வானம் பூமிக்கும் நீர் தேவன் துதிக்கிறோம்;
உம் இரத்தத்தால் மன்னிப்பீந்தீர் போற்றுகிறோம்.

4. உயிர்த்த கர்த்தர் வரும்போது இன்பமாகப் பாடுவோம்;
அந்த நாளை எதிர்பார்த்து துதிக்கிறோம்;
எங்கள் வாஞ்சை நீர் அறிவீர், போற்றுகிறோம்.

fppt.com

1. பரிசுத்த இரட்சகரே, சிங்காசனம் வீற்றோரே,
பரலோகக் கூட்டத்தோடு சேர்ந்து உம்மைத்துதிப்போம்.
“நீரே பாத்திரர்”
மீட்டீர் உந்தன் இரத்தத்தால்.

2. இவ்வுலகம் இகழ்ந்தாலும், குருசில் மாண்டீர் இங்கேயே;
வெற்றியோடு எழுந்தீரே சர்வலோக தேவனாய்
“நீரே பாத்திரர்”
நாங்கள் வாழ மரித்தீர்.

3. இவ்வுலகில் தள்ளப்பட்டீர், ஆனால் என்னைச் சேர்த்தீரே,
உம்மைப் போல அன்பின் தேவன், நானறியேன் ஆண்டவா;
“நீரே பாத்திரர்”,
விடுதலை ஈந்தீரே.

4. மீட்ட உந்தன் சபையோடு, நீர் வரும்நாள் காணுதே!
துக்கம் துயர் நீங்கிப் போகும் கீதம் பூரிப்பும் உண்டாம்;
“நீரே பாத்திரர்”
கர்த்தாவே வாரும், ஆமென்.

fppt.com

பல்லவி

இரத்தஞ்சிந்தி நம்மையவர் முக்தி சேர்க்கப் பிறந்தார்.

***அனுபல்லவி***

நித்தம் அவரோடு வாழ சத்திய வழி திறந்தார்,
கர்த்தரே தம் பக்தர் பாவம் மறந்தார்.

***சரணங்கள்***

1. மோசத்துக்குள்ளான என்னை இயேசுகிறிஸ்து பார்த்தார்;
நாசத்திருந்தோடி வந்த நீசனையே சேர்த்தார்;
நேசமீட்பர் பாசமாகக் காத்தார்.

2. கெஞ்சி வந்த பாவிகட்காய்த் தஞ்சமாக நின்றார்;
மிஞ்சி மோசஞ் செய்யு மந்தக் கஞ்சற் பேயைக் கொன்றார்;
கொஞ்சமுமே அஞ்சிடாமல் வென்றார்.

3. பொன்னுலகத்தின்பங்களை என்னுள்ளத்தில் தந்தார்;
தம்முடன் நற் பங்கு பெற மன்னர் என்மேல் உகந்தார்:
சின்னப்பட இன்னிலத்தில் வந்தார்.

4. துன்பம் வரும் வேளையினில் இன்பமே கொண்டாடுவோம்
தம்பிரானும் என்மேல் வைத்த அன்பின் நேசம் பாடுவோம்;
அம்பரத்தில் நண்பருடன் கூடுவோம்.

fppt.com

## 60

**1.** இயேசுவை நம்பிப் பற்றிக் கொண்டேன்.
மாட்சிமையான மீட்பைப் பெற்றேன்
தேவகுமாரன் இரட்சை செய்தார்;
பாவியாம் என்னை ஏற்றுக் கொண்டார்.

பல்லவி

இயேசுவைப் பாடிப் போற்றுகிறேன்.
நேசரைப் பார்த்துப் பூரிக்கிறேன்.
மீட்பரை நம்பி நேசிக்கிறேன்.
நீடுழி காலம் ஸ்தோத்தரிப்பேன்.

**2.** அன்பு பாராட்டி, காப்பவராய்
எந்தனைத் தாங்கி, பூரணமாய்
இன்பமும் நித்தம் ஊட்டுகிறார்.
இன்னும் நீங்காமல் பாதுகாப்பார்.
– இயேசுவைப்

**3.** மெய்ச் சமாதானம் ரம்மியமுந்
துய்ய தேவாவி வல்லமையும்,
புண்ணியநாதர் தந்து விட்டார்.
விண்ணிலுஞ் சேர்த்து வாழச்
செய்வார்.
– இயேசுவைப்

fppt.com

1. எத்தனை இன்பமாய் இயேசுவே உம்மை,
ஸ்தோத்திரம் பாடியே பணிகிறோம்;
ஆசீர்வாதம் பெற்றானந் திக்கும் நாங்கள்
பாத்திரர் நீரென்று போற்றுகிறோம்.

பல்லவி

பாத்திரர் நீரே! பாத்திரர் நீரே! இயேசுவே நீரே தான் பாத்திரரே!
ஆசீர்வாதம் பெற்றானந்திக்கும் நாங்கள் பாத்திரர் நீரென்று
போற்றுகிறோம்.

2. தேவனேயாகிலும் மானிடனாகி, தூதர்க்கும் தாழ்ந்தோராய்
மரித்தீரே!
வாக்குத்தத்தத்தின்படி ஸ்திரீயின் வித்தாகி
சர்ப்பத்தின் தலையையும் நசுக்கினீரே; – பாத்

3. உம் சிருஷ்டியே, உம்மை ஆணியறைய,
எத்தனையாயும்மைத் தாழ்த்தினீரே!
மாந்தர் பகைத்திட, தேவன் கைவிட,
இருள், சாபம், நஷ்டமும் சகித்தீரே! – பாத்

4. மரணத்தை வென்று அலைகளைத்தள்ளி,
மகிமையாக வெற்றி சிறந்தீர்! கர்த்தாவே உம் புகழைப்
பாடுவோமே, மரணம், பாதாளமும்
ஜெயித்து விட்டீர்! – பாத்

5. மாந்தர்க்கு மீட்பை உண்டாக்கவேண்டியே
மேலோக நாட்டை விட்டிறங்கினீரே!
உமது மா அன்புக்கு முன் பணிகிறோம்,
சாஷ்டாங்கம் செய்து, துதிக்கிறோம். – பாத்

fppt.com

1. போற்றுவோம் நம் கர்த்தரை! சமாதானம், இன்பமும்
எல்லாம் அவர் நமக்கே ஈந்தாரே சிலுவையில்.

2. சாபம், காயம், கசப்பும், வடுக்களும் சுமந்தார்,
வேதனையால் துடித்தார். நமக்காக அல்லவோ ?

3. ஒப்பற்ற பலியாகி பாதாளத்தை ஜெயித்தார்;
நம்மை விடுவிக்கவே வெற்றி வேந்தராயினார்.

4. மீட்கப்பட்டோம் முற்றுமாய் நியாயத் தீர்ப்பில் தப்பினோம்;
உம்மில் களி கூறுவோம். உந்தன் நாமம் போற்றுவோம்.

5. நமக்காக உன்னத கிரியை செய்த பிதாவை,
போற்றி வாழ்த்தி துதிப்போம் அன்பின் மீட்பர் நாமத்தில்

fppt.com

1. தெய்வாட்டுக்குட்டிக்கு பன்முடி சூட்டிடும்;
இன்னிசையாய்ப் பேரோசை யாய் விண்கீதம் முழங்கும்;
உள்ளமே போற்றிடு உனக்காய் மாண்டோராம்;
சதா காலமும் அவரே ஒப்பற்ற வேந்தராம்.

2. அன்பார்ந்த கர்த்தர்க்கு பன்முடி சூட்டிடும்;
கைகால் விலாவின் காயங்கள் விண்ணிலும் விளங்கும்
பார்ப்பாரோ தூதரும் ஏறிட்டக் காயங்கள்,
பணிவரே சாஷ்டாங்கமாய் மூடுவர் தம் கண்கள்.

3. சமாதானக் கர்த்தர்! பன்முடி சூட்டிடும்!
போர் ஓய்ந்து ஜெய ஸ்தோத்ரமே பூமியை நிரப்பும்;
ஆள்வர் என்றென்றைக்கும்; ஆளும் எவ்விடமும்;
விண்லோக பாக்கிய சிறப்பு விளங்கி வளரும்.

4. ஆண்டாண்டும் ஆள்வோர்க்கு பன்முடி சூட்டிடும்:
சராசரங்கள் சிருஷ்டித்தோர் உன்னத தேவனும்
பாவிக்காய் ஆருயிர் ஈந்த என் மீட்பரே
சதா நித்திய காலமாய் உமக்குத் துதியே.

fppt.com

**1.** அன்புள்ள இயேசு நேசர் எனக்கெல்லாம் அவரே
பதினாயிரம் பேர்களில் சிறந்தவர், அவர் பள்ளத்தாக்கின் லீலி,
எனதெல்லாம் அவரே; என் ஆத்துமத்தின் பிராண நாயகர்
துக்கத்தில் என் ஆறுதல் துன்பத்தில் எனதின்பம்
என் கவலைகளெல்லாம் தாங்குவார்.

பல்லவி

அவர் பள்ளத்தாக்கின் லீலி,
அவர் காலை விடி வெள்ளி,
பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்.

**2.** என் சஞ்சலங்கள் நீங்க என் பாவம் மா அன்பாய்
சுமந்து அவர் ஜீவனை விட்டார்; நான் யாவையும் வெறுத்தேன்
என் நேசமீட்பர்க்காய் அவர் ஒருபோதும் கைவிட மாட்டார்
லோகம் என்னை வெறுத்து சாத்தான் சோதித்தாலும்
மீட்பர் எனக்கு ஜெயம் தருவார்.

**3.** கர்த்தாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிவேனானால்
எல்லாத் துன்பத்தையும் ஜெயிப்பேன்;
எனக்குப் பயமென்ன ? அவர் என் பங்கானால்
என் ஆத்துமத்தின் மன்னா இவரே;
ஜீவ நதிகள் பாயும் இராஜ்யத்தைச் சேர்கையில்
அவர் திரு முகத்தை நான் காண்பேன்.

fppt.com

# 65

1. காணாமற்போன என்னை நல் மேய்ப்பர் தேடினார்,
தம் தோளின் பேரில் போட்டுக் கொண்டன்பாய் இரட்சித்தார்.
மேலோக தூதர் கூடினார் ஆனந்தம் பொங்கிப் பாடினார்.
பல்லவி

நேசர் தேடி வந்தார், இரத்தஞ் சிந்தி மீட்டார்,
என்னைச் சொந்தமாகக் கொண்டனர்,
பேரன்போடு சேர்த்துக் கொண்டனர்.

2. என் பாவக் காயங்கட்டி வீண்பயம் நீக்கினார்
‘என் சொந்தமாக உன்னைக் கொண்டேனே, பார்’ என்றார்
அவ்வின்ப சத்தம் கேட்கவே,என் உள்ளம் பூரிப்பாயிற்றே. – நேசர்

3. பேரன்பராகத் தோன்றி ஐங்காயம் காட்டினார்
முட்கிரீடஞ் சூடினோராய் என்னோடு பேசினார்,
இப்பாவியினிமித்தமே படாத பாடுபட்டாரே.– நேசர்

4. இப்போது இன்பமாக என் மீட்பர் பாதத்தில்,
ஒப்பற்ற திவ்ய அன்பைத் தியானஞ் செய்கையில்
ஆனந்தம் பொங்கிப் பூரிப்பேன்;
மென்மேலும் பாடிப்போற்றுவேன். – நேசர்

5. ஆட்கொண்டநாதர் பின்பு பிரசன்னமாகுவார்
தம் ஞான மணவாட்டி சேர்த்தென்றும் வாழ்விப்பார்
எம்மாசும் தீங்கும் நீங்கிப்போம், பேரின்பம் பெற்று வாழுவோம்.– நேசர்

fppt.com

பல்லவி

துதிப்பேன் துதிப்பேன் இயேசு தேவனை—அல்லேலூயாபாடி
துதிப்பேன் துதிப்பேன் இயேசு தேவனை.

அனுபல்லவி

துதிப்பேன் லோகத்தின் பாவத்தை நீக்கிட
தூயவனாய் வந்த தேவ குமாரனை. – துதி

சரணங்கள்

1. கருணை நிறைந்த கண்ணுள்ளோரவர்.
தம் ஜனத்தின் கூக்குரல் கருணை கூர்ந்து கேட்கும்
காதுள்ளோர். லோகப் பாவச் சுமைதனை
சிரசுகொண்டு சுமந்தழிக்க வென்றே
குருசெடுத்துக் கொல்கதாவில் சென்றோரை  துதி

2. பொற் குத்துவிளக்கு ஏழு மத்தியிலே,
எங்கள் இயேசு நாயகர் பொற் கச்சை மார்பினில்
கட்டி நிற்கிறார் நிலை அங்கி தரித்தோராய்
கற்பிக்கும் காரியம் கவனமாய்க் கேட்டு
சொற்படி செய்வோரை தப்பாமல் மீட்போரை– துதி

3. வழியும் சத்தியமும் ஜீவனுமவரே
அவரருகில் வருவீர் வழியில் ஆறுதல் செய்பவரவரே
லோக பாவத்தை சுமந்தார் பழைய சுபாவங்கள் ஒழித்து
முற்றுமாய் அழித்து பக்தரை மோட்சத்தில் சேர்ப்போரை   துதி

fppt.com

பல்லவி

இயேசு ராஜனின் திருவடிக்கு சரணம் சரணம் சரணம்
ஆத்ம நாதரின் மலரடிக்கு சரணம் சரணம் சரணம்

***<u>சரணங்கள்</u>***

**1.** பார் போற்றும் தூய தூய தேவனே மெய் ராஜாவே எங்கள்
நாதனே பயம் நீக்கும் துணையாவுமானீரே
சரணம் சரணம் சரணம்.– இயேசு

**2.** இளைப்பாறுதல் தரும் தேவனே இன்னல் துன்பம் நீக்கும்
அருள் நாதனே ஏழை என்னை ஆற்றி தேற்றிகாப்பீரே
சரணம் சரணம் சரணம்.– இயேசு

**3.** பலவீனம் யாவும் போக்கும்வல்லோரேபெலனீந்து வலக்கரம்
பிடிப்பீரே ஆவி ஆத்மா சரீரத்தைபடைக்கிறேன்
சரணம் சரணம் சரணம்.– இயேசு

# 68

## ***பல்லவி***

இயேசுவையே துதிசெய் நீமனமே
இயேசுவையே துதிசெய். – கிறிஸ்தேசுவையே

### சரணங்கள்

1. மாசணுகாத பராபரவஸ்து,
நேசகுமாரன் மெய்யான கிறிஸ்து. – இயேசு

2. அந்தரவான் தரையுந் தரு தந்தன்,
சுந்தர மிகுந்த சவுந்தர நந்தன். – இயேசு

3. எண்ணின காரியம் யாவு முகிக்க
மண்ணிலும் விண்ணிலும் வாழ்ந்து சுகிக்க. – இயேசு

## *பல்லவி*

துதி தங்கிய பரமண்டல சுவிசேடக நாமம்,
சுப மங்கள மிகு சம்பிரம சுக சோபன க்ஷேமம்!

சரணங்கள்

1. அதி சுந்தர நிறை கொண்டுயர் அருள் மோக்கிஷ தீபன்,
கதி உம்பர்கள் தொழும் இங்கித கருணைப் பிர தாபன்.– துதி

2. விண்ணாடரும் மண்ணாடரும் மேவுந் திருப் பாதம்,
பண்ணோதுவர் கண்ணாம் வளர் பர மண்டல நாதன்.– துதி

3. திருவான் உல கரசாய் வளர் தேவ சொரூபானார்
ஒரு மாதுடை வினை மாறிட நரர் ரூபமதானார். – துதி

4. அபிராம் முனி யிடமேவிய பதிலாள் உபகாரன்,
எபிரேயர்கள் குலம் தாவீதென் அரசற் கோர் குமாரன். – துதி

5. மந்தை ஆயர் பணிந்து பாதம் மகிடிநந்து வாடிநத்திய அத்தனார்,
நிந்தையாய் ஒரு கந்தை மூடவும் வந்த மாபரி சுத்தனார்.– துதி

6. சாதா ரண வேதா கம சாஸ்த்ர சுவிசேஷன்,
கோதே புரி ஆதா முடை கோத்ர திரு வேஷன். – துதி

***பல்லவி***

ஆசையாகினேன்,கோவே! –உமக்
கனந்த ஸ்தோத்திரம், தேவே!

**அனுபல்லவி**

இயேசுகிறிஸ்து மாசத்துவத்து
இரட்சகா! ஒரே தட்சகா!

***சரணங்கள்***

1. வேதா! ஞானப்பர்த்தா!– என் நாதா! நீரே கர்த்தா
மா தாரகம் நீ என்ற பரமானந்தா! சச்சிதானந்தா.–ஆசை

2. கானான் நாட்டுக்கரசே!– உயர் வான் நாட்டார்
தொழும் சிரசே; நானாட்டமுடன் தேடி, தேடி நாடி பதம் பாடி. – ஆசை

3. வீணாய்க் காலம் கழித்தேன்,– சற்றும்
தோணாமல் நின்று விழித்தேன், காணாதாட்டைத் தேடிச்
சுமந்த கருத்தே! எனைத் திருத்தே. ஆசை

4. வந்தனம், வந்தனம் யோவா! நீ சந்ததம் சந்ததம் கா வா!
விந்தையாய் உமைப் பணிந்தேன்; சத்ய வேதா! ஏசு நாதா. –ஆசை

**_பல்லவி_**

சீர் ஏசு நாதனுக்கு ஜெயமங்களம்;
ஆதி திரி யேக நாதனுக்குச் சுப மங்களம்.

அனுபல்லவி

பாரேறு, நீதனுக்கு, பரம பொற் பாதனுக்கு
நேரேறு போதனுக்கு, நித்திய சங்கீதனுக்கு, – சீர்

சரணங்கள்

1. ஆதி சரு வேசனுக்கு, ஈசனுக்கு மங்களம்;
அகிலப் பிரகாசனுக்கு, நேசனுக்கு மங்களம்;
நீதி பரன் பாலனுக்கு, நித்திய குணாளனுக்கு,
ஓதும் அனுகூலனுக்கு, உயர் மனுவேலனுக்கு, –சீர்

2. மானாபி மானனுக்கு, வானனுக்கு மங்களம்;
வளர் கலைக் கியானனுக்கு, ஞானனுக்கு மங்களம்;
கானான் நற் தேயனுக்குக், கன்னிமரி சேயனுக்கு,
கோனார் சகாயனுக்குக், கூறு பெத்த லேயனுக்கு, – சீர்

3. பத்து லட்ச ணத்தனுக்குச், சுத்தனுக்கு மங்களம்,
பரம பதத்தனுக்கு, நித்தனுக்கு மங்களம்;
சத்திய விஸ்தாரனுக்குச், சருவாதி காரனுக்கு,
பக்தர் உப காரனுக்குப், பரம குமாரனுக்கு. – சீர்

**பல்லவி**

சுந்தரப் பரம தேவ மைந்தன் ஏசு கிறிஸ்துவுக்குத்
தோத்திரம், புகழ்ச்சி நித்திய கீர்த்தனம் என்றும்!

**அனுபல்லவி**

அந்தரம் புவியும் தந்து. சொந்த ஜீவனையும் ஈந்து
ஆற்றினார்; நமை ஒன்றாய்க் கூட்டினார்; அருள் முடி
சூட்டினார்; கிருபையால் தேற்றினாரே, துதி – சுந்

**சரணங்கள்**

1. பாதகப் பிசாசால் வந்த தீதெனும் பாவத்தால் நொந்த
பாவிகளான நமை உசாவி மீட்டாரே; தேவ பிதாவுக் குகந்த ஜாதி யாகக்
கூட்ட வந்த மேசியாவைப் பற்றும் விசுவாச வீட்டாரே,
கோதணுகா நீதிபரன் பாதமதின் ஆதரவில்கூடுங்கள்; பாவத்துயர்
போடுங்கள்; ஜெயத்தைக்கொண்டாடுங்கள்,
துதி சொல்லிப் பாடுங்கள், பாடுங்கள் என்றும் – சுந்

2. விண்ணிலுள்ள ஜோதிகளும், எண்ணடங்காச் சேனைகளும்
விந்தையாய் கிறிஸ்துவைப் பணிந்து போற்றவே,
மண்ணிலுள்ள ஜாதிகளும் நண்ணும் பல பொருள்களும்
வல்லபரன் எனத் துதி சொல்லி ஏத்தவே,
அண்ணலாம் பிதாவுக் கொரே புண்ணியகுமாரனைக்
கொண்டாடிட, அவர் பாதம் தேடிட,– வெகு திரள் கூடிடத் துதி
புகழ் பாடிடப்பாடிட, என்றும் – சுந்

3. சத்தியத் தரசர்களும் வித்தகப் பெரியார்களும்
சங்கத்தோர் களுங்கிருபை தங்கி வாழவே,
எத்திசை மனிதர்களும் பக்தர் விசுவாசிகளும்
ஏக மிகுஞ் சமாதான மாகவாழவே, உத்தம போதகர்களும் சத்ய
திருச் சபைகளும்.உயர்ந்து வாழ, தீயோன் பயந்து தாழ, மிக
நயந்து கிறிஸ்துவுக்கு ஜெயந்தான்,
நயந்தான் என்றும் – சுந்

பல்லவி

பரிசுத்த பரனே ஸ்துதியுமக்கு பரலோகம் விட்டவரே, ஸ்துதியுமக்கு.

சரணங்கள்

1. நரர் சிறை விடுக்க, சுரர் புகழ் வெறுத்த
திருமறை முடிவே, ஸ்துதியுமக்கு. – பரி

2. திருச்சித்தம் செய்ய நரரூபாய் வந்தவா,
கருணையின் கடலே, ஸ்துதியுமக்கு. – பரி

3. தலை தானும் வைக்க நிலையின்றித் திரிந்தீர்
நிலையே நிதியே, ஸ்துதியுமக்கு. – பரி

4. கெத்சேமனேயிலதி துயர் கொண்டீர்
அதிசய அன்பே, ஸ்துதியுமக்கு. – பரி

5. அன்னாசின் மனையில், கன்னத்திலறைய
சின்னப்பட்டவரே, ஸ்துதியுமக்கு. – பரி

6. முகத்தினில் துப்பி, முதுகினிலடித்தார்,
அகத்தைப் படைத்தவா, ஸ்துதியுமக்கு. பரி

பல்லவி

வாழ்க, வாழ்க சீர் இயேசு மகாராஜா வாழ்க.

சரணங்கள்

1. வாழ்க வாழ்க நீர். சர்வ வல்லவா வாழ்க
ஆ ! வானிலும், இப்பாரிலும் நின் நாமமே சிரேஷ்டம்.– வாழ்க

2. ஆயிரங்களிலும்,பதினாயிரங்களிலும்
அதீத சுந்தரனாம், இயேசு தேவன் வாழ்க வாழ்க நீர்.– வாழ்க

3. குருசின் வரையே நீர். நின்னைத் தாடிநத்தினை நாதா !
பிதா நினது நாமம் மிக்கஉயர்த்தினார் மேலே. – வாழ்க

4. இயேசு நாமத்தில் வானோர் பூதலத்தோரும்
சகலரும் வணங்கிடும் நின் சந்நிதானத்தில். – வாழ்க

fppt.com

பல்லவி

மகா இராஜா இயேசு வாழ்க,
மகிமை கனம் உண்டாக.

அனுபல்லவி

மகிமை கனம் துதி பெருக
மாட்சிமை ஆட்சி வருக.

சரணங்கள்

1. இந்நில மீதினில் மனிதனாய்ப் பிறக்கவே
கன்னியின் கர்ப்பத்தைத் தெரிந்தீரே.
பாவத்தை ஒழிக்கப் பாரினில் வரவே
பாவியின் சாயல் தரித்தீரே –மகா

2. சிலுவையில் கஸ்திகளைச் சகித்தீர்
மரணத்தையும் ருசி பார்த்தீர்; ஜீவனைக் கொடுத்தெங்கள்
ஜீவனைக் காத்தீர் தேவனைத் திருப்தியாக்கினீர். – மகா

3. பாவத்தின் சம்பளம்மரணத்திலிருந்து
தேவனே எங்களை விடுவிக்க மூவரோடெம்மை ஒப்புரவாக்க,
தீவினை யாவையும் தீர்த்தீரே. – மகா

fppt.com

***பல்லவி***

இயேசு ராஜா, –எனை– ஆளும் நேசா!

***சரணங்கள்***

1. மாசிலா மணி ஆன முச்சுடர் மேசியா அரசே, – மனு
வேலே, மாமறை நூலே, தேவ செங் கோலே இங்கெனின் மேலே
அன்பு செய் – இயேசு

2. தாவீ தரசன் மைந்தா, –நின் சரணம், சரணம், எந்தா!–
சதானந்தா வானந்தா
உவந்தாள்; மிக வந்தனம். வந்தனம்! – இயேசு

3. சுத்த திரித்துவ வஸ்துவே,– சுவிசேட மகத்துவ கிறிஸ்துவே.
பரிசுத்தனே, கரி சித்தெனை இரட்சித் தடிமைகொள்;
நித்தியம் தோத்திரம்! – இயேசு

4. மங்களம் ஈசாவே, வளம் மிகும் சங்கையின் ராஜாவே, நரர்
வாழ்வே, மன் னாவே, மெய்த் தேவே, உமக் கோ
சன்னாவே! இயேசு

fppt.com

மெய்த் தேவனும் ஜீவனும் வழியும் சத்யமும் –
இருளணுகா மகா மாசுடர் ஒளியும் மகிமையும்
ஆயிரங்களிலும் சிறந்தவரான இயேசு என்......ஆத்தும நேசர்!

## ***பல்லவி***

பாடிடுவேன் உமையேதயாபரனே! (2)
பரிசுத்த தேவனின்சுதனே! (2)

## ***சரணங்கள்***

**1.** பாவ வினை தீர்க்க பாவி எனை மீட்க
ஜீவன் தனை ஈந்த தேவனின் சுதனே
ஆனந்தமாய் உம்மை, நான் போற்றித் துதிப்பேன் – பாடி

**2.** முள்ளின் முடிசூடி கொல்கதா மலைநாடி
கள்வன் எனக்காக குருசினில் மரித்தீர்
ஆ !என்ன நேசம்!! நேசரின் நேசம்!!! – பாடி

**3.** உயிர்த் தெழுந்த உம்மை பாடுகின்றேன் அடிமை
நான் இனி என்றென்றும் உம் சொந்த உடமை,
ஆனந்தமாய் உம்மை, நான் போற்றித் துதிப்பேன். – பாடி

**4.** அன்பின் திருஉருவே அகத்தினில் வசிப்பவரே
எம்பரா உம்மைக் காண ஏங்குகின்றேனே
நீர் வரும் நாளினில் நான் உம்மில் மகிழ்வேன். – பாடி

ppt.com

## பல்லவி

மனுவேலா வந்தனம்– மண்ணில் ஏகனாய்
மனு ஜாதிக்காக வந்தவாஉன் னதாதிபா–மனு

## சரணங்கள்

1. ஞானம் தனம் வெகுமானமும் சுவீகரித்திட
வானம் பூமியாவிலும் யோக்கியர் நீரொரராள் –மனு

2. சங்கடம் யாவும் ஏற்றுநீர் என் கடன்களை
வன்குருசேறி மீட்டினீர் சங்கையின்றியே –மனு

3. நிந்தைக்காளாய் நிற்கதியாய் சகாயமின்றியே
வந்தனைக் குரியநீர் நின்றதை நினைத்து நன்றியாய்–மனு

4. தாழ்ச்சியில் என்னை நினைத்ததால்
சிலுவை வரையும்நீர் தாழ்ந்திகம் வந்தீர் நான் அதை
நினைத்து நன்றியாய் –மனு

5. நின்னுடை பாதம் தன்னில் நான் வீழ்ந்து வந்தனம்
செய்திடுமல்லா தென்ன நான் தந்திடும்பரா – மனு

## *பல்லவி*

கர்த்தர் இயேசுவைத் துதிப்பது
எத்தனை எத்தனை நல்லது

## *சரணங்கள்*

1. உன்னதமானவரின்—நாமத்தை எந்நாளும் துதிப்பது, மிகநல்லது
அல்லேலூயா—அல்லேலூயா அல்லேலூயா—அல்லேலூயா

2. விலையில்லா இரத்தம்— சிலுவையில் சிந்தி
நிலையற்ற எங்களைக் கழுவினீரே – அல்லே

3. பெரிதான இரட்சிப்பை எங்களுக்கீந்து தெரிந்தெடுத்தீர்,
எம்மை உம் ஜனமாய் – அல்லே

4. என் கன்மலையும்—என் கேடகமும்
என் கோட்டையும்,என் கர்த்தரே – அல்லே

5. உயர்ந்த துருகமும்—இரட் சண்யக் கொம்பும்
உயிர்ப்பிக்கிறவரும், என் தேவனே – அல்லே

6. எல்லாரிலும் மிக—அழகு வாய்ந்தவர்
பதினாயிரம் பேரில், சிறந்தவரே – அல்லே

7. இரவும் பகலும்—ஆயிரம் நாவால்
துதி செய்திடுவதே, மிக நல்லது – அல்லே

## *பல்லவி*

பணிந்து பாடிப் போற்றுவோம் கனிந்த ஆவி உண்மை
யோடு, எம் தேவனை—ஆஆஆ

## *சரணங்கள்*

1. மோசேயை விடப் பெரியவர்—பிர மாணங்களை நிறை வேற்றினவர்;
வேஷங்கள் யாவையும் வெறுப்பவர். பாசமாய்த் தொழுதிடுவோம்.
– பணி

2. ஆரோனை விடப் பெரியவர்—சதா மாறாத ஆசாரியர்,
வாரே னென்று கூறினவர் நேரே நாம் தொழுதிடுவோம் – பணி

3. ஆலயத்தைவிடப் பெரியவர் இங்கு ஆலயமாகவே இருந்தவர்
ஆலயம் நீங்களே என்றவர் அலங்காரமாய்த் தொழுதிடுவோம்.
– பணி

4. யோனாவை விடப்பெரியவர் கெட்டுப் போனோர்களுக்குரியவர்,
தாமாக ஜீவன் தந்தவர் கோணாமல் தொழுதிடுவோம். – பணி

5. சாலமோனை விடப் பெரியவர் —தேவ ஞான மென்ற பெயர்க்குரியவர்,
காலமெல்லாம் கூட இருப்பவர் தாராளமாய்த் தொழுதிடுவோம். – பணி

6. அதிபதிகளை விடப் பெரியவர்— சர்வ அதிகாரங்களுக்குரியவர்
கர்த்தாதி கர்த்தாவுமானவர் கருத்தோடே தொழுதிடுவோம். –பணி

7. எல்லாரிலும் மேலானவர்—நமக் கெல்லாமுமாகவே உள்ளவர்,
அல்லேலூயாவுக் கருகர் வல்லமையாய்த் தொழுதிடுவோம். –பணி

(மத்தேயு: 5:17.8:3.12:6,41,42,28:18,1:23)

speakarun@gmail.com

## ***சரணங்கள்***

இயேசு எங்கள் தேவா எங்கள் இயேசு தேவா
எங்கள் உள்ளம் கொள்ளை கொண்ட இனிய தேவா !

## ***சரணங்கள்***

**1.** உள்ளத்தை மாற்றி, உண்மையை ஊட்டி,
உலகத்தை வெறுத்திட உயிர் கொடுத்தீர்;
உலகத்தை ஜெயித்து, உம் ஜீவன் தந்து
உயர் வானம் ஏறி வரம் கொடுத்தீர்! – இயேசு

**2.** பாவத்தை ஏற்று, மரிக்கவும் வந்தீர்,
பரலோகம் தன்னையும் கொண்டு வந்தீர்...
பாவத்தை நீக்கி பரிசுத்தமாக்கி,
பரலோக பாக்கியம் எமக்களித்தீர் ! இயேசு

**3.** மாற்றினீர் என்னை, தேற்றினீர் உண்மை,
மா பாவியாம் என்னை மீட்டுக் கொண்டீர்,
மா பாவிகட்காய் மரித்ததென் அன்பே !
மரணத்தை ஜெயித்தும் எழுந்தீரே! – இயேசு

**4.** பரிசுத்த ஆவி, பரம தேவனே பரிசுத்தர் பாதம் பணிகிறோமே !
பரன் மகிமைக்கே, குமாரனை ஏற்றே
பாத்திரமாய் எம்மை ஆக்கிடுமே. – இயேசு

**5.** பரம பிதாவே! பணிகிறோம் பாதம் பாதகராம் நாங்கள் பிள்ளைகளோ !
பரம குமாரன் ஆவியினாலேபரம பிதாவே பணிகிறோமே. – இயேசு

## ***பல்லவி***

நிகரே இல்லாத சர்வேசா திகழும் ஒளி பிரகாசா

## ***அனுபல்லவி***

துதி பாடிட இயேசு நாதா பதினாயிரம் நாவுகள், போதா

## ***சரணங்கள்***

**1.** துங்கன் இயேசு மெய் பரிசுத்தரே எங்கள் தேவனை தரிசிக்கவே
துதிகளுடன் கவிகளுடன்தூய தூயனைநெருங்கிடுவோம் – நிகரே

**2.** பொன் பொருள்களும் அழிந்திடுமே மண்ணும் மாயையும்
மறைந்திடுமே இதினும் விலைபெரும் பொருளே
இயேசு ஆண்டவர் திருவருளே – நிகரே

**3.** தேவ மைந்தனாய், அவதரித்தார் பாவ சோதனை மடங்கடித்தார்
மனிதனுக்காய் உயிர்கொடுத்தார் மாளும் மாந்தரை மீட்டெடுத்தார்
– நிகரே

**4.** ஜீவன் தந்தவர் மரித்தெழுந்தார் ஜீவ தேவனே உயிர்த்தெழுந்தார்
மறுபடியும் வருவேனென்றார் மா சந்தோஷ நாள் நெருங்கிடுதே
– நிகரே

1. இயேசுவைப் போல் அழகுள்ளோர் யாரையும் இப்பூவினில்
இதுவரைக் கண்டதில்லை காண்பதுமில்லை

*__பல்லவி__*

பூரண அழகுள்ளவரே பூவில் எந்தன் வாழ்க்கையதில்
நீரே போதும் வேறே வேண்டாம் எந்தன் அன்பர் இயேசுவே
மண்ணுக்காக மாணிக்கத்தை விட்டிடமாட்டேன். – வெறும்

2. சம்பூரண அழகுள்ளோர் என்னை மீட்டுக்கொண்டீரே
சம்பூரணமாக என்னை உந்தனுக்கீந்தேன்.– பூரண

3. எருசலேம் குமாரிகள் எந்தனை வளைந்தோராய்
உம்மில் உள்ள எந்தன் அன்பை நீக்க முயன்றால். – பூரண

4. லோக சுக மேன்மையெல்லாம் எந்தனைக் கவர்ச்சித்தால்
பாவச் சோதனைகளெல்லாம் என்னைச் சோதித்தால் – பூரண

5. தினந்தோறும் உம்மேலுள்ள அன்பு என்னில் பொங்குதே
நேசரே நீர் வேகம் வந்து என்னைச் சேருமே – பூரண

நேசரவர் என் நேசரவர் நேசரிலெல்லாம் விசேஷித்தவர்
சோகமடைந்தேன் நேசமதால் – நேசரவர்

1. வெண்மையும் சிவப்புமானவரே கண்ணைக் கவர்ந்திடுபவர் அவரே
பதினாயிரங்களில் சிறந்தவரே அதிசயமானவர் அவர் பெயரே
இவரென் ஆத்தும நேசரே வருவார் எனக்காய் வேகமே – நேசரவர்

2. அவர் தலை முழுதும் பொன்மயமாமே
அவர் தலை மயிர் சுருள் சுருளாமே காகத்தின் நிறம் அவர் முடியாமே
லோகத்தின் ஒளிவிளக்கவராமே இவரென் ஆத்தும நேசரே
வருவார் எனக்காய் வேகமே – நேசரவர்

3. அவர் கண்கள் கண்ணீர் நிறைந்தவைகள்
கவரும் புறாக் கண்கள் போன்றவைகள்
பாலிலே கழுவப்பட்டவைகள் நேர்த்தியாய் பதிக்கப் பட்டவைகள்
இவரென் ஆத்தும நேசரே வருவார் எனக்காய் வேகமே – நேசரவர்

4. அவரின் கன்னங்கள் பாத்திகளாம் மலர்களின் வாசனை வீசிடுமாம்
தங்க வளையல் போல் அவர் கரமாம் தந்தத்தைப் போல்
அங்கம் உடையவராம் இவரென் ஆத்தும நேசரே
வருவார் எனக்காய் வேகமே – நேசரவர்

5. ரூபமதில் அவர்க்கிணையவரே லீபனோன் மகிமை உடையவரே
கேதுரு போல் அவர் உயர்ந்தவரே ஏதமிலா சிறப்பானவரே
இவரென் ஆத்தும நேசரேவருவார் எனக்காய் வேகமே – நேசரவர்

1. இயேசுவே உந்தன் பரிசுத்த இரத்தம்
சொரிந்தென்னை இரட்சித்ததால்
இன்றும் என்றும் உம் பாதத்தில்
வீழ்ந்து வணங்கிடுவேன் – அல்லேலூயா

***பல்லவி***

வல்லவர் நீரே நல்லவர் நீரே உன்னதமானவரே
எல்லாம் நீரே ஆனதாலென் அல்லல் மறந்திடுவேன் –அல்லேலூயா

2. தொல்லை நிறைந்த இம்மாநில வாழ்வில்
நேரிடும் இன்னல்களில் நீரேயன்றி யாருமே இல்லை
சார்ந்திட இப்பாரில் – அல்லேலூயா –வல்லவர்

3. வானமும் பூமியும் மாறினும் நீரே மாறாத சிநேகிதரே
மாராவையும் மதுரமாக்கும் அற்புத நேசரே நீர்–அல்லேலூயா –வல்லவர்

4. மரணத்தை வென்று பரலோகம் சென்று
ஜீவிப்பவர் நீரே திரும்ப வந்தென்னைத்
தம்முடன் சேர்க்கும் மாசற்ற காருண்யரே –அல்லேலூயா– வல்லவர்

5. ஆதியும் நீரே அந்தமும் நீரே அனைத்தும் எனக்கு நீரே
மண்ணுலகில் வந்து ஆயிரமாண்டுகள்
ஆளுகை செய்பவர் நீர் –அல்லேலூயா – வல்லவர்

**1.** யாரிலும் மேலான அன்பர், மா நேசரே!
தாயைவிட மகா நண்பர், மா நேசரே!
மற்ற நேசர் விட்டுப் போவார், நேசித்தாலும் கோபங் கொள்வார்,
இயேசுவோ என்றென்றும் விடார், மா நேசரே!

**2.** என்னைத் தேடி சுத்தஞ் செய்தார், மா நேசரே!
பற்றிக்கொண்ட என்னை விடார், மா நேசரே!
இன்றும் என்றும் அவர் காப்பார்,
பற்றினோரை மீட்டுக்கொள்வார்,
துன்பங்களில் தேற்றல் செய்வார், மா நேசரே!

**3.** நெஞ்சே இதை தியானம் பண்ணு மா நேசரே
அன்பையே விடாமல் பேணு மா நேசரே!
எந்த துன்பம் வந்தும் நில்லு, நேரே மோட்ச பாதை செல்லு,
இயேசுவாலே யாவும் வெல்லு, மா நேசரே!

**4.** என்றென்றைக்குங் கீர்த்தி சொல்வோம், மா நேசரே!
சோர்வுற்றாலும் வீரங் கொள்வோம், மா நேசரே!
கொண்ட நோக்கஞ் சித்தி செய்வார்,
நம்மை அவர் சேர்த்துக் கொள்வார்,
மோட்ச நன்மை யாவும் ஈவார், மா நேசரே!

1. இயேசு என்னும் நாமத்தை வானம், பூமி வாழ்த்துமே.
திவ்ய அன்பின் ஆழத்தை அது தோன்றச் செய்ததே.

2. இயேசு என்னும் நாமத்தால் என்தன் தாகந் தீர்ந்ததே,
பேரானந்த வெள்ளத்தால் பூரிப்புமுண்டாயிற்றே.

3. இயேசு என்னும் நாமமே அருள் செல்வம் இன்பமும்,
மோட்ச வீடும் ஈயுமே ஆத்துமாவைப் போஷிக்கும்.

4. இயேசு எந்தன் பாவத்தை நீக்கிச் சுத்தமாக்கினார்.
ஒப்பில்லா தம் ஜீவனை என்னில் தந்து காக்கிறார்.

5. இயேசு என்னும் நாமத்தில் சர்வ நன்மை காண்கிறேன்
மாறாவல்ல மீட்பரில் அன்பு கூர்ந்தானந்திப்பேன்.

1. நல் மீட்பர் இயேசு நாமமே என் காதுக்கின்பமாம்;
புண்பட்ட நெஞ்சை ஆற்றவே ஊற்றுண்ட தைலமாம்.

2. அந்நாமம் நைந்த ஆவியைநன்றாகத் தேற்றுமே
துக்கத்தால் தொய்ந்த உள்ளத்தை திடப்படுத்துமே.

3. பசித்த ஆத்துமாவுக்கு மன்னாவைப் போலாகும்;
இளைத்துப்போன ஆவிக்கு ஆரோக்கியம் தந்திடும்.

4. என் இரட்சகர், என் கேடகம், என் கோட்டையும் நீரே;
நிறைந்த அருள் பொக்கிஷம், அனைத்தும் நீர்தாமே.

5. மா நேசர், மேய்ப்பர், பர்த்தாவும் என் ஜீவனும் நீரே;
என் தீர்க்கரும், என் இராஜாவும் ஆசாரியருமே.

6. என் பிராண நாதா, ஆண்டவா, நான் உம்மைப் போற்றுவேன்;
என் வாழ் நாளெல்லாம், இரட்சகா, பேரன்பைச் சாற்றுவேன்.

7. என் ஜீவன் போகும் நேரமும் உம் நாமம் போற்றுவேன்;
எப்போதும் அதைப் பாடவும் விண் கரை யேறுவேன்.

## 89

***பல்லவி***

இன்பமிதே பேரின்பமிதே இயேசு நாமம் இன்பமிதே
இன்பமிதே நல் இன்பமிதே இயேசு நாமமே

1. பாவம் போக்க வந்த நாமம் இயேசு நாமமே
சாபம் நீக்க வந்த நாமம் இயேசுவின் நாமமே– இன்ப

2. சாவு பயங்கள் நீக்கும் நாமம் இயேசு நாமமே
சாபம், பாவம் நீக்கும் நாமம் இயேசுவின் நாமமே – இன்ப

3. ஜீவ பாதை காட்டும் நாமம் இயேசு நாமமே
ஜீவன் பெலன் தந்த நாமம் இயேசுவின் நாமமே – இன்ப

4. நேற்றும் இன்றும் மாறா நாமம் இயேசு நாமமே
தேனிலும் இனிய நாமம் இயேசுவின் நாமமே – இன்ப

5. தேவ ராஜ்யம் சேர்க்கும் நாமம் இயேசு நாமமே
தேவ நீதி நிறைந்த நாமம் இயேசுவின் நாமமே – இன்ப

இயேசுவின் நாமம் இனிதான நாமம்
இணையில்லா நாமம், இன்ப நாமம்

1. பாவத்தைப் போக்கும், பயமதை நீக்கும்
பரம சந்தோஷம், பக்தருக்களிக்கும் – இயேசு

2. பரிமளதைலமாம் இயேசுவின் நாமம்
பாரெங்கும் வாசைன வீசிடும் நாமம் – இயேசு

3. வானிலும் பூவிலும் மேலான நாமம்
வானாதி வானவர் இயேசுவின் நாமம் – இயேசு

4. நேற்றும் இன்றும் என்றும் மாறிடா நாமம்
நம்பினோரை என்றும் கைவிடா நாமம் – இயேசு

5. முழங்கால் யாவும் முடங்கிடும் நாமம்
மூன்றில் ஒன்றாக ஜொலிப்பவர் நாமம் – இயேசு

6. சாத்தானின் சேனையை ஜெயித்திட்ட நாமம்
சாபப் பிசாசைத்துரத்திடும் நாமம் – இயேசு

7. உலகத்தின் பாவத்தை சுமந்தவர் இயேசு
பாவமாம் பாரத்தைப்போக்குவார் இயேசு – இயேசு

## ***பல்லவி***

விசுவாசியின் காதில் பட, இயேசுவென்ற நாமம்
விருப்பாயவர் செவியில் தொனி இனிப்பாகுது பாசம்

## ***சரணங்கள்***

1. பசித்த ஆத்துமாவைப் பசியாற்று மன்னாவதுவே;
முசிப்பாறுதல் இளைத்தோர்க் கெல்லாம் முற்றும் அந்தப் பெயரே
– விசு

2. துயரையது நீக்கிக் காய மாற்றிக் குணப்படுத்தும்;
பயங்கள் யாவும் இயேசு வென்றால் பறந்தோடியே போகும் – விசு

3. காயப்பட்ட இருதயத்தைக் கழுவிச் சுத்தப்படுத்தும்,
மாயைகொண்ட நெஞ்சையது மயக்கமின்றி விடுக்கும். – விசு

4. எல்லை இல்லாக் கிருபைத்திரள் ஏற்று நிறைந்திருக்கும்
எல்லா நாளும் மாறாச் செல்வம் இயேசு என்ற பெயரே – விசு

5. என்னாண்டவா, என் ஜீவனே, என் மார்க்கமே, முடிவே,
என்னால் வருந்துதியை நீரே ஏற்றுக்கொள்ளும், தேவே – விசு

<u>***பல்லவி***</u>

தேன் இனிமையிலும் ஏசுவின் நாமம் திவ்விய
மதுர மாமே;—அதைத் தேடியே நாடி ஓடியே
வருவாய், தினமும் நீ மனமே.

<u>***சரணங்கள்***</u>

**1.** காசினிதனிலே நேசமதாகக் கஷ்டத்தை உத்தரித்தே
பாவக் கசடதை அறுத்துச் சாபத்தைத் தொலைத்தார்;
கண்டுணர் நீ, மனமே, — தேன்

**2.** பாவியை மீட்கத் தாவியே உயிரைத்
தாமே ஈந்தவராம்;— பின்னும்
நேமியாம் கருணை நிலைவர முண்டு; நிதம் துதி,
என் மனமே, — தேன்

**3.** காலையில் பனிபோல் மாயமாய் உலகம்
ஊபாயமாய் நீங்கி விடும்; — என்றும்
கர்த்தரின் பாதம் நிச்சயம் நம்பு கருத்தாய் நீ,மனமே. — தேன்

**4.** துன்பத்தில் இன்பம் தொல்லையில் நல்ல துணை
வராம் நேசரிடம்; — நீயும் அன்பதாய்ச் சேர்ந்தால்
அணைத்துனைக் காப்பார்; ஆசைகொள் நீ, மனமே, — தேன்

**5.** பூலோகத்தாரும் மேலோகத் தாரும் புகழ்ந்து போற்றும்
நாமம், — அதைப்பிடித்துக்கொண் டால்தான்
பேரின்ப வாழ்வை பெறுவய் நீ, மனமே — தேன்

## *பல்லவி*

இயேசு என்ற திருநாமத்திற்கு எப்போதுமே மிக ஸ்தோத்திரம்

## *சரணங்கள்*

1. வானிலும் பூவிலும் மேலான நாமம்
வல்லமையுள்ள நாமமது தூயர் சொல்லித் துதித்திடும்
நாமமது – இயேசு

2. வேதாளம் பாதாளம் யாவையும் ஜெயித்த
வீரமுள்ள திருநாமமது, நாமும் வென்றிடுவோ மிந்த
நாமத்திலே – இயேசு

3. பாவத்திலே மாளும் பாவியை மீட்க
பாரினில் வந்த மெய் நாமமது, பரலோகத்தில் சேர்க்கும்
நாமமது – இயேசு

4. உத்தம பக்தர்கள் போற்றித்துதித்திடும்
உன்னத தேவனின் நாமமது, உலகெங்கும் ஜொலித்திடும்
நாமமது – இயேசு

5. சஞ்சலம் வருத்தம் சோதனைநேரத்தில்
தாங்கி நடத்திடும் நாமமது, தடைமுற்றும் அகற்றிடும்
நாமமது – இயேசு

இயேசுவின் நாமம் அதிசயமாமே
என்றென்றும் கர்த்தரை ஸ்தோத்தரிப்பேன்

***<u>அனுபல்லவி</u>***

என்னை விசாரிக்கும் அன்புள்ள இயேசுவே
எப்போதும் என்னுள்ளம் ஜீவிக்கின்றார்

1. காடு மலையும் மேடானாலும் கர்த்தரே வழிகாட்டி
நடத்தினார் இம்மானுவேல் அவர் என்னோடிருந்துமே
இம்மட்டும் காத்ததால் ஸ்தோத்தரிப்பேன்– இயேசு

2. போக்கும் வரத்தும் ஆபத்திலும் காக்கும் தம் பலமான கரங்களே
நம்பிடுவேனே நான் அண்டிடுவேன் நித்தம்
நன்றி மறவாமல் ஸ்தோத்தரிப்பேன்.– இயேசு

3. நிந்தை சுமந்த நேரங்களில் தந்தை தம் பெலமீந்து
தேற்றினாரே என்னென்ன துன்பங்கள்
இன்னும் வந்தாலுமே மென்மேலும் இயேசுவை
ஸ்தோத்தரிப்பேன்– இயேசு

4. சோதனையான வியாதிகளில் வேதனை மரண
படுக்கையிலும்சித்தம் நிறைவேற முற்றும் குணமாக்கி
ஜீவன் அளித்ததால் ஸ்தோத்தரிப்பேன்.– இயேசு

5. பாக்கியமான இரட்சிப்புமேபெற்றேன் இக்கனமான
அழைப்புமே ஆனந்த தைலத்தின் வல்ல அபிஷேகம்
அன்போடு ஈந்ததால் ஸ்தோத்தரிப்பேன்.– இயேசு

6. என்று வருவார் என் இயேசுவே ஏங்கி என் மனமே தவித்திடுதே
கற்புள்ள கன்னிகை கூட்டமுடன் சேர்ந்து
கர்த்தரைக் கண்டு நான் ஸ்தோத்தரிப்பேன்.– இயேசு

1. பக்தரே, வாரும் ஆசை ஆவலோடும்;
நீர் பாரும், நீர் பாரும் இப்பாலனை:
வானோரின் ராஜன் கிறிஸ்து பிறந்தாரே!

***<u>பல்லவி</u>***

சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
சாஷ்டாங்கம் செய்ய வாரும், இயேசுவை

2. தேவாதி தேவா, ஜோதியில் ஜோதி,
மானிட தன்மை நீர் வெறுத்திலீர்.
தெய்வ குமாரன், ஒப்பில்லாத மைந்தன்! – சாஷ்

3. மேலோகத்தாரே, மா கெம்பீரத்தோடு
ஜென்ம நற்செய்தி பாடி போற்றுவோம்;
'விண்ணில் சந்தோஷம் மண்ணில் சமாதானம்!' – சாஷ்

4. இயேசுவே, வாழ்க! நீரே ஜென்மித்தீரே,
புகழும் ஸ்துதியும் உண்டாகவும்
அன்பின் சொரூபி அருள் அவதாரம். – சாஷ்

1. இராஜன் தாவீதூரிலுள்ள மாட்டுக் கொட்டில் ஒன்றிலே
கன்னி மாதா பாலன் தன்னை முன்னணையில் வைத்தாரே;
மாதா மரியம்மாள் தான்; பாலன் இயேசு கிறிஸ்துதான்.

2. வானம் விட்டு பூமிவந்தார் மகா தேவ தேவனே;
அவர் வீடோ மாட்டுக்கொட்டில் தொட்டிலோ முன்னணையே;
ஏழையோடு ஏழையாய் வாழ்ந்தார் பூவில் தாழ்மையாய்.

3. பாலர்க்கேற்ற பாதை காட்ட பாலனாக வளர்ந்தார்;
பலவீன மாந்தன் போல துன்பம், துக்கஞ் சகித்தார்;
இன்ப துன்ப நாளிலும் துணை செய்வார் நமக்கும்.

4. நம்மை மீட்ட நேசர் தம்மை கண்ணால் கண்டு களிப்போம்;
அவர் தாமே மோட்சலோக நாதர் என்று அறிவோம்;
பாலரை அன்பாகவே தம்மிடத்தில் சேர்ப்பாரே.

5. மாட்டுத் தொழுவத்திலல்ல, தேவ ஆசனத்திலும்,
ஏழைக் கோலமாக அல்ல, இராஜக் கிரீடம் சூடியும்
மீட்பர் வீற்றிருக்கின்றார், பாலர் சூழ்ந்து போற்றுவார்.

## பல்லவி

தோத்திரம் செய்வேனே, இரட்சகனைத்
தோத்திரம் செய்வேனே.

## அனுபல்லவி

பாத்திரமாக்க இம்மாத்ரம் கருணைவைத்த
பார்த்திபனை, யூதக் கோத்திரனை, என்றும் –தோத்

## சரணங்கள்

1. அன்னை மரி சுதனை,–புல் மீது அமிழ்துக் கழுதவனை,
முன்னணை மீதுற்ற சின்னக் குமாரனை,
முன்னுரை நூற்படி,இந்நிலத் துற்றோனை. – தோத்

2. கந்தை பொதிந்தவனை, –வானோர்களும்
வந்தடி பணிபவனை, மந்தையர்க் கானந்த
மாட்சியளித்தோனை,வான பரன் என்னும்
ஞான குணவானை.–தோத்

3. செம்பொன் னுருவானைத், –தேசிகர்கள்
தேடும் குருவானை. அம்பர மேவிய
உம்பர் கணத்தோடு அன்பு பெற நின்று
பைம் பொன் மலர் தூவி. – தோத்

பிறந்தார் பிறந்தார் வானவர் புவிமானிடர் புகழ்
பாடிடப் பிறந்தார்.

***<u>சரணங்கள்</u>***

**1.** மாட்டுத் தொழுவம் தெரிந்தெடுத்தார்
மாதேவ தேவனே மேன்மை வெறுத்தார்
தாழ்மை தரித்தார் மாதியாகியாய் வளர்ந்தார். – பிறந்தார்

**2.** பாவ உலக மானிடர் மேல் பாசம் அடைந்தவரே
மனக்காரிருளை எம்மில் நீக்கிடும் மெய்
மாஜோதியாய்த் திகழ்ந்தார். – பிறந்தார்

**3.** பொறுமை தாழ்மை அன்புருக்கம்
பெருந்தன்மை உள்ளவரே மரணம் வரையும் தன்னை
தாழ்த்தினதால் மேலான நாமம் பெற்றார். – பிறந்தார்

**4.** கந்தை துணியோ கர்த்தருக்கு
கடும் ஏழ்மைக் கோலமதோ விலையேறப் பெற்ற
உடை அலங்கரிப்பும் வீண் ஆசையும் நமக்கேன். – பிறந்தார்

## ***பல்லவி***

அல்லேலூயா துதி உமக்கே!
இயேசுவின் நாமத்திற்கே –அல்லேலூயா

## ***சரணங்கள்***

**1.** பாவி என்னை இயேசு மீட்டெடுத்தார்
பரகதி வாழ்வினை பகிர்ந்தளித்தார்
பாரினில் பரிசுத்தர்கூட்டத்துடன்
பாடிட அருள் புரிந்தார்– அல்லேலூயா

**2.** மரணத்தில் எனக்கினி பயமுமில்லை
மரணத்தை இயேசு ஜெயித்தெழுந்தார்
மா கொடிதான சாபம் நீக்கினார்
மகிமையில் ஆர்ப்பரிப்பேன் – அல்லேலூயா

**3.** நித்தமும் நேசரின் இன்முகத்தைத்
தரிசித்தே வாழ்வினை ஓட்டிடுவேன்
நேசரின் வருகையை எதிர் நோக்கியே
ஆவலாய் விழித்திருப்பேன் – அல்லேலூயா

தாகம் தீர்க்கும் ஜீவ நதி தரணியிலுண்டோ என தேடினேன்

1. அருவியின் நீரைப் பருகிவிட்டேன்
ஆற்றினில் ஊற்றையும் அருந்திவிட்டேன்
துரவுகள் கடலும் தாகம் தீர்க்கவில்லை
தூரத்து கானலாய் ஆகியதே. – தாகம்

2. கானகம் சோலையும் தேடிய பின் வானகம் நோக்கியே
அபயமிட்டேன் கண்களைத் திறந்தீர், நைந்தது
உமிழ் என கன்மலை ஒன்றில் நீர் சுரக்க
கண்டேன். – தாகம்

3. பருகியே வாழ்த்தினேன் தாகமில்லை
அருகினில் சென்றேன் கன்மலையுமில்லை
காயங்கள் தன்னில் செந்நீர்சுரக்க
கன்மலையாக என் இயேசு நின்றார். – தாகம்

4. ஐயனின் திருவடி வீழ்ந்தவன் நான்
ஆன்மாவின் தாகமும் தீர்ந்த தென்றேன்
புன்னகை பூத்து புனிதனும் மறைய புது பெலன் அடைந்தேன்
என் உள்ளத்திலே.– தாகம்

1. என் இயேசுவே உம்மையே நான் நேசிக்கிறேன்
வேறெந்த வீண் வாழ்வையும் நாடாதிருப்பேன்
உம்மாலே மா நன்மையை நான் கண்டடைந்தேன்
என் நாதா மென்மேலும் உம்மை நேசிக்கிறேன்

2. இப்பாவியின் பேரில் முந்தி நேசம் வைத்தீர்
நீர் ப்ராணத் தியாகஞ் செய்து மீட்டுக்கொண்டீர்
முட் கிரீடம் தீங்காயமுந் தியானிக்கிறேன்
என் நாதா மென்மேலும் உம்மை நேசிக்கிறேன்.

3. பேரன்பின் சொரூபி உம்மைப் போற்றுகிறேன்
எப்போதும் உம்மண்டை தங்க வாஞ்சிக்கிறேன்
என் ஜீவன் போனாலுங்கூட நீங்க மாட்டேன்
என் நாதா மென்மேலும் உம்மை நேசிக்கிறேன்.

4. பேரின்பம் மேலோகத்தில் ஆனந்தங் கொள்வேன்
நீடுழி உம்முகம் கண்டு ஸ்தோத்தரிப்பேன்
எப்பாவ மில்லாமலும் நான் வாழ்த்தல் செய்வேன்
என் நாதா மென்மேலும் உம்மை நேசிக்கிறேன்.

1. என் அருள்நாதா! இயேசுவே! சிலுவைக் காட்சி பார்க்கையில்
பூலோக மேன்மை நஷ்டமே, என்றறிவேன் என் மனசில்.

2. ஆ !அந்த மரத்தில் அல்லால் வேறொன்றிலும் நான் மகிழேன்
சிற்றின்பம் யாவும் அதினால் தகாததென்று தள்ளுவேன்.

3. கை, தலை, காலிலிருந்தும் பேரன்பும் துன்பும் கலந்தே
பாய்ந்தோடப்பார்! இக்காட்சியும் முள்முடியும் ஒப்பற்றதே!

4. சராசரங்கள் அனைத்தும் அவ்வன்புக்கு எம்மாத்திரம்!
என் ஜீவன் செல்வம் சுகமும் மாநேசருக்குப் பாத்தியம்.

5. மா கஸ்தியால் சம்பாதித்து பேரருள் தந்த ஏசுவே!
உமக்கு என்றும் தாசரால் மா ஸ்தோத்திரம் உண்டாகவே.

1. மாசற்ற தேவாட்டுக்குட்டி ! பிதாவின் பரிசுத்தமும்,
அவரின் அன்பு, கிருபையும், விளங்குதே உம் பேரிலே.

2. எந்தன் தேவன் அன்புள்ளோரே, என்பதை நானும் அறிய
உம் சிங்காசனம் விட்டு நீர் இப்பூவில் வந்தீர் எனக்காய்.

3. தேவாட்டுக் குட்டியானோரே ! உம் வார்த்தை
செய்கை யாவிலும் அவர் மகிமை மேன்மையாய்
விளங்குதே என்றென்றுமாய்.

4. எந்தன் பயங்கர பாவ சுமையை நீரே சுமந்தீர்,
ஈனச் சிலுவை மீதிலே அதை அறைந்தீர் தேவனே !

5. உந்தன் கிருபையின் ஆழம், நீளம், உயரம், அறியேன்
என் கட்டுகளை அறுத்து, உம் பக்கம் என்னைச் சேர்த்தது.

6. குருசில் கண்டேன் உம் அன்பை, ஆனால் உம் முகம்
காண்கையில், பிதாவின் அன்பின் பூரணம்
கண்டு நான் நித்தியம் பூரிப்பேன்.

1. மா வாதைப்பட்ட இயேசுவே, அன்பின் சொரூபம் நீர்;
நிறைந்த உம்தன் அன்பிலே நான் மூழ்க அருள்வீர்.

2. தேவன்பின் ஆழம் அறிய விரும்பும் அடியேன்.
நீர் பட்ட கஸ்தி ஒழிய வேறொன்றும் அறியேன்.

3. என் மீட்பர் ஜீவன் விட்டதால் பூமி அசைந்ததே;
கன்மலை அதைத் கண்டதால் பிளந்து விட்டதே.

4. அவ்வண்ணமாய் என் நெஞ்சத்தைப் பிளந்து தேவரீர்,
உமது சாவின் பலத்தை உணர்த்தக் கடவீர்.

5. துராசை நீங்கத் தக்கதாய் தேவன்பை ஊற்றிடும்;
கற்போன்ற நெஞ்சை மெழுகாய் உருகச் செய்திடும்.

1. கண்டீர்களோ சிலுவையில் மரிக்கும் இயேசுவை ?
கண்டீர்களோ காயங்களில் சொரியும் இரத்தத்தை ?

2. ‘‘மன்னியும்,’’ என்ற வேண்டலை கேட்டீர்களே, ஐயோ !
‘‘ஏன் கைவிட்டீர்,’’என்றார், அதை மறக்கக் கூடுமோ ?

3. கண்மூடி, தலை சாயவே, ‘‘முடிந்தது,’’என்றார்;
இவ்வாறு லோக மீட்பையே அன்பாய் உண்டாக்கினார்.

4. அவ்வேண்டல், பலன், காயத்தால் ஈடேற்றம் வந்ததே;
நான் இதை நோக்கிப் பார்க்கையில்என் தோஷம் தீர்ந்ததே.

5. சீர்கெட்டு மாண்டு போகையில்,பார்த்தேன் என் மீட்பரை;
கண்டேன், கண்டேன் சிலுவையில் மரிக்கும் இயேசுவை !

**1.** கல்வாரி சிலுவையில் தொங்கி ஜீவனை விட்டீர்,
நம்பி சேர்வார் உள்ளத்தில் நன் மாறுதல் செய்ய நீர்
மாசற்ற ஜீவ நதி, பாவம் போக்கத் திறந்தீர்;
எனக்காக மரித்தீர் கல்வாரி சிலுவையில்.

பல்லவி

அக்கல்வாரி! அக்கல்வாரி! எனக்கேசு மரித்தார்
கல்வாரி சிலுவையில்.

**2.** இந்த அன்பின் பாசந்தான் மீட்பருக்கு எந்தனை
முழு தத்தஞ் செய்யத்தான் ஆவி ஆத்மா, தேகத்தை
சர்வாங்க பலியாக கர்த்தாவே படைக்கிறேன்
எனக்காக மரித்தீர் கல்வாரி சிலுவையில். – அக்

**3.** நான் உமக்கே சொந்தமாய் என்னை ஏற்றுக்கொண்டவா
நேச மீட்பர் தயவாய் என்னை ஆண்டு கொள்ளுமேன்
பாவத்தை வெல்ல நெஞ்சை ஆவியால் நிரப்புமேன்
எனக்காக மரித்தீர் கல்வாரி சிலுவையில். – அக்

**4.** பூலோகம் அதிர்ந்தது, அந்தகாரம் மூடிற்று;
பாவச்சுமை தாங்கி நீர் ஜீவன் தந்த பொழுது
ஸ்தோத்திரம்! என் தேவனே எந்தன் ஆத்ம நேசரே,
எந்தன் பாவம் நீக்கினீர் கல்வாரி சிலுவையில். – அக்

1. பார் இதோ! மாசற்றோர் மாண்டார், குருசில் என் ஈடாய்;
தேவாட்டுக்குட்டி பலியாய், தம்மைத் தாமே ஈந்தார்.

2. என் சாபம் யாவும் சுமந்தார், எட்டியின் கசப்பும்
நிறைந்த பாத்ரம் குடித்தார் நிஷ்டூர நேரத்தில்.

3. கசப்பின் பாத்ரமாயினும் எனக்காய் பருகி,
அதில் நீர் கொண்ட மகிழ்ச்சி எவரும் அறியார்.

4. உந்தன் சந்தோஷம் எனதாம், நான் உம் பிள்ளை யன்றோ ?
உம் துக்கம் அடியேனுக்கு ஜீவனும் வாழ்வுமாம்.

5. யுகா யுகங்களில் எந்தன் மகிமை இதுவே;
ஏழை மேல் பாய்ந்த உம் அன்பு, என் நித்ய கீதமே.

**1.** பூலோக மீட்பர் இயேசுவை சிலுவைமீது நோக்குங்கள்,
எவ்வளவாக மாந்தரை, நேசித்தாரென்று பாருங்கள்.

**2.** முடிந்ததென்று இயேசுவே உரைத்து ஜீவனை விட்டார்;
"தேவகுமாரன் இவரே," என்று கண்டோர் விளம்பினர்.

**3.** விண் ஜோதிகள் இருண்டன; திரையிரண்டாய் கிழிந்தது,
கற்பாறைகள் பிளந்தன; இப்பூமியும் அதிர்ந்தது.

**4.** எங்கள் நிமித்தம் வேதனை அன்பாய் சகித்து மாண்டாரே;
அவர் நிமித்தம் எங்களை நீர் ரட்சித்தாளும், தேவனே.

1. கொல்கதா மலையில் கொலையாட்கள் மத்தியில்
தோய்ந்துயிர் தந்து ஓய்ந்தெழுந்தனர் இயேசு நாயகர்

பல்லவி

ஆமென் ஆமென் ஆமென் அல்லேலூயா பாடுவோம்
ஆம் இயேசு சாவின் கூரொடித்து உயிர்த்தெழுந்தனர்.

2. கொலைஞர் யூதரும் பகைஞர் ரோமரும்
பதித்த முத்திரை சிதைத்தெழுந்தனர் இயேசு நாயகர். – ஆமென்

3. வேதாள சேனைகள் பாதாளத்தில் நடுங்க
ஏதேன் வாக்கு தேவன் எழுந்தனர் இயேசு நாயகர். – ஆமென்

4. விண்ணே நீ பாடிடு மண்ணே நீ செவிகொடு
நித்ய மரணம் சத்தியன் ஜெயித்து உயிர்த்தெழுந்தனர்.– ஆமென்

1. மரித்தாரே என் ஆண்டவர் சிலுவையில்தானே
மரித்தாரே என் இரட்சகர் ஆ, எனக்காகவே.

2. மரத்தில் தொங்கி ஜீவனை விட்டார் என் இயேசுவே,
உனக்குத்தான் இப்பலியை கொடுத்தார் பாவியே!

3. நான் எண்ணி எண்ணி வருகில் என் நேசம் ஊக்கமாய்,
கொழுந்து விட்டு நெஞ்சத்தில் எரியும் பக்தியாய்.

4. என் மீட்பர் இயேசு கிறிஸ்து தாம் இவ்வருள் செய்தாரே,
நான் என்ன பதில் செய்யலாம் ? தகுதி இல்லையே.

5. என் தேகம், செல்வம், சுகமும், என் ஜீவன் யாவுமே,
சுகந்த பலியாகவும் படைப்பேன் இயேசுவே.

# 111

1. பிளவுண்ட மலையே புகலிடம் தாருமே;
பக்கம் பட்ட காயமும் பாய்ந்த செந்நீர் வெள்ளமும்
பாவ தோஷங்கள் யாவும் போக்கும்படி அருளும்.

2. கண்ணீர் நித்தம் சொரிந்தும், கஷ்ட தவம் புரிந்தும்,
பாவம் நீங்க மாட்டாதே, நீரே மீட்பர், இயேசுவே;
ஏதுமின்றி ஏழையேன் உம்மில் தஞ்சம் புகுந்தேன்.

3. நிழல் போன்ற வாழ்வினில், கண்ணை மூடும் சாவினில்,
மறுமைக்குப் போகையில், நடுத்தீர்ப்புத் தினத்தில்,
பிளவுண்ட மலையே, புகலிடம் தாருமே.

1. பாதகனாய்   நானலைந்தேன், பாவி யென்றுணராதிருந்தேன்,
தத்தளிக்கும் ஏழை வந்தேன், சத்தியரே மீட்பை தந்தீர்.

2. கெத்சேமனே தோட்டத்திலே, கஸ்திப்பட்டயெம் அண்ணலே,
சொந்த ஜனம் நாங்களாக, வந்து பட்டீர் பாடு மிக.

3. சிரசுக்கு முள்ளால் முடி, அரசின் கோல் நாணல் தடி,
நீர் குடிக்கக் கேட்டால் ஓடி, ஓர் பாதகன் தந்தான் காடி.

4. உந்தன் பாடு கஸ்தியல்லாம் வந்ததெந்தன் பாக்யமெல்லாம்
இம்மை செல்வம் அற்பப்புல்லாம். உம்மைப்பெற விட்டேனெல்லாம்.

5. மன்னா உந்தன் விண்ணை விட்டு. மண்ணில் வந்து பாடுபட்டு,
மரித்தடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த்தெழுந்தீர் என்னையிட்டு.

## பல்லவி

மேசியா வாதைப்பட்டு மரித்தீரே குருசிலே

## சரணங்கள்

1. அரசே உம் மகிமைவிட்டு, சிரசில் முள் முடியைச் சூண்டு,
அன்பின திசயத்தால், துன்பம் சகித்தவராய். – மேசியா

2. மாசற்றோரே சா மரத்தில், பிசாசின் வல்லமை முறிக்க,
கள்ளனைப்போல தொங்கி,வெள்ளமாய் இரத்தம் சிந்தி
– மேசியா

3. ஒரு பக்கச் சிலுவையிலே, கலகக் கள்ளன் தொங்கிக்கெஞ்சி
செய்த விண்ணப்பத்திற்கு, கிருபையாய் மன்னிப்பீந்து
– மேசியா

4. தாகத்துக்குக் காடியீந்தார் ஆகத் தகா நிந்தை செய்தார்,
நிர் வஸ்திரமாகத் தொங்கி பூமி நடு நடுங்கி. – மேசியா

## 114

இராகம் : நான் பாவிதான் ஆனாலும் நீர்

1. சிலுவையே என் மகிமையே நான் அதை நோக்கி பார்க்கிறேன்
–அங்கே என்ன அதிசயம் – என் மீட்பரைக் கண்டேன் – கண்டேன்.

2. சிலுவையில் உலகத்தின் பாவமெல்லாம் தம் மீதினில்
சுமந்ததால் தாழ்வடைந்த – என் மீட்பரைக் கண்டேன் – கண்டேன்.

3. சிலுவையில் சகலத்தின் கர்த்தத்துவத்தின் யாவையும்
உரிந்து வெற்றி சிறந்த – என் நேசரைக் கண்டேன் – கண்டேன்

4. சிலுவை மரணம் வரை தன்னைத் தாழ்த்திய நேசரை
சர்வத்திற்கும் மேலாகவே உயர்ந்ததைக் கண்டேன் – கண்டேன்

5. சிலுவையில் தகர்த்திட்ட சாபப் பிரமாணத்தை நீக்கி
நித்திய ஜீவன் அளித்த என் நேசரைக் கண்டேன். – கண்டேன்

6. சிலுவையால் என் நேசரே இவ்வுலகில் யாவற்றிலும்
தந்த விடுதலையினால் பாடிப் போற்றுகிறேன் – ஆமென்.

**1.** தூர மலையில் நின்ற ஈனச் சிலுவை
துக்க கேவல சின்னமன்றோ இழந்தோரை மீட்க, நம்
அன்பர் மாண்டதால் சிலுவையை நான் நேசிக்கிறேன்.

***<u>பல்லவி</u>***

அச்சிலுவையை நான் பாராட்டுவேன்,
ஜெய சின்னமடையும் வரை,– நான் சிலுவையைப்
பற்றிக்கொண்டு அதைக் கிரீடத்துக்காய் மாற்றுவேன்.

**2.** கல்வாரி கொண்டு செல்ல தேவாட்டுக்குட்டி
தம் மகிமையைத் துறந்ததாலே நிந்தை நிர்ப்பந்தமாய்
நினைத்த சிலுவை விந்தையாய் என்னைக் கவருதே. – அச்

**3.** என் பாவம் மன்னித்து என்னைத் தூய்மையாக்க
அன்பர் மாண்ட சிலுவையன்றோ, சிலுவையில் காணும்
இரத்தக் கறைகளே என் கண்ணுக் கழகாய்த் தோன்றுதே.
– அச்

**4.** சிலுவைக்காய் நிந்தை களிப்பாய்ப் பொறுப்பேன்
விசுவாசத் தோடென்றும் நிற்பேன் மறுமைக்காய் என்னை
அழைக்கும் நாளிலேமகிமையில் நான் பங்கடைவேன். – அச்

***பல்லவி***

பாவி! இயேசுனைத்தானே தேடி துயர் மேவினார்; இதைத் தியானியே.

***சரணங்கள்***

1. பரம சீயோன் மலைக்கரசர், நற்பாலன்,
பரிசுத்த தூதர் பணிசெய்யும் பொற்பாதன்,
மானிடனாக அவதரித்த தெய்வீகன்,
வல்ல பேயை ஜெயித்த மாமனுவேலன். – பாவி

2. எருசலை நகரை விட்டெழுந்தகழ் தாண்டி,
இருண்ட கெத்சேமனே புகுத்திடு நேரம்,
வேர்வைகள் இரத்தப் பிரவாகம் போலாக,
வென்றிடும் வீரர் பலம் குன்றினரானார். – பாவி

3. சோபித்தடியில் விழ தூதரி லொருவன்
ஜோதிப் பிதா மகனை தேற்றிடலாச்சே
பாவச் சுமை சிரசில் பாரமதாக
பட்சமுள்ளவர் முகம் வாடிடலாச்சே. – பாவி

4. தீய பாவிகள் பாவ நித்திரை செய்ய,
தேவ கோபாக்கினை அவர் மீதில் பெய்ய,
தோஷம் சுமந்த இயேசு தேவாட்டுக்குட்டி
துன்பக் கடலில் அமிழ்ந் தாற்றுதல் செய்ய – பாவி

5. இந்தப் பாத்திரம் என்னை விட்டகலாதோ ?
இல்லையானால் உமது இஷ்டமாகுதென்றே
சிந்தை துயரடையசெப்பினார்; அன்றோ
கர்த்தர் எனக்குப் பிணைப் பட்டதால், அந்தோ – பாவி

6. கெத்சேமனேயில் இயேசு பட்டதை நினையே
கேவலமான உந்தன் பாவத்தை மறவே, ஆத்தும நேசர் பாதம்
ஆவலாய்ப்பணியே,அன்பின் கரத்தாலுனை அணைப்பார் நிச்சயமே.–பாவி

1. முற்றிலும் அழகானவர், எல்லாரிலும் மா சிறந்தோர்.
தேவாதி தேவனானவர், நேசக் கல்வாரி நாயகர்.– கல்

பல்லவி

கல்வாரி நாயகா ! என் உள்ளம் ஆட்கொண்டீர்,
என்னை மீட்க மரித்தீர் கல்வாரி நாயகா !

2. காயப்பட்டு நொறுங்குண்டு, பாவம் துக்கம் சுமந்தோராய்.
நீசச் சிலுவையில் மாண்டார் துக்கக் கல்வாரி நாயகர். – கல்

3. ஜீவன், சமாதானம் ஈய சிறையுற்றோரின் மீட்புக்காய்
இரத்தமாம் ஊற்றைத் திறந்தார் இரக்கக் கல்வாரி நாயகர். – கல்

4. நமக்காய்ப் பெற்ற வரங்கள் சுத்தாங்கம் யாவும் நல்கிட
அன்பதாம் வெள்ளம் ஊற்றினீர் தயாளக் கல்வாரி நாயகா. – கல்

5. உம்மை மகிமை மையமாய், கண்டு களிப்பேன் என்பதே
இவ்வுலகில் என் ஆறுதல் ஒப்பற்ற கல்வாரி நாயகா – கல்

6. கண்ணாடிக் கடல் ஓரமாய், சேர்ந்து நின் அன்பில் மூழ்கியே
உம்மைப்போல் என்றும் இருப்பேன் மகிமைக் கல்வாரி நாயகா. – கல்

## *பல்லவி*

என்னத்தியாகம் என் கல்வாரி நாயகா
என்னையும் உம்மைப்போல் மாற்றிடவோ !

## *சரணங்கள்*

1. விண் தூதர் போற்றிடும் உம் –பிதாவையும்
விட்டிறங்கி வந்தீரே, மாட்டுக் கொட்டிலை
வாஞ்சித்தீரையா மானிடர் மேல் அன்பினால் ! – என்ன

2. ஜெனித்த நாள் முதலாய் கல்வாரியில்
ஜீவனை ஈயும் வரை, பாடுகள் யாவையும்
பட்டீரையாபாவியை மீட்பதற்காய். – என்ன

3. தலையை சாய்த்திடவோ உமக்கு ஓர்
ஸ்தலம் எங்குமில்லையே ! உம் அடிச்சுவட்டில்
நான் செல்லவோ முன் பாதை காட்டினீரே– என்ன

4. தாய், தந்தை, வீடும், நாடும் –தனக்குள்ள
இஷ்டத்தையும் வெறுத்து, அப்போஸ்தலர், சீஷரும்
குருசை அநுதினம் சுமந்தாரல்லோ ! – என்ன

5. பாடுகளெல்லாம் உம்மை –மகிமையில்
பூரணமாய் சேர்த்ததே; உம்மோடு நானும் பாடு சகிக்க
என்ன தடையுமுண்டோ ? – என்ன

6. பொய் இன்பம் எனக் கினியேன்–என்னருமை
இயேசுதான் என் பங்கல்லோ ! நேசரின் பின்னே போகத் துணிந்தேன்
நேச வலிமையினால். – என்ன

## பல்லவி

கருணையுள்ள தேவ சுதன் கனத்த சிலுவை பாரத்தாலே
எருசலையின் மதில் கடந்து, ஏகினார் கொல்கதா மலையில்.

## சரணங்கள்

1. கெத்செமனே தோட்டத்திலே கதறி அழும்
பேரோசையின்னும் எத்திசையும் தொனிக்கிறது.
எங்கள் மனம் திகைக்கிறது. – கருணை

2. சீயோன் நகர் மாதர் தங்கள் சிரம் கவிழ்ந்து புலம்புந்தொனி
தூயன் செவிக் கேறிடவே, தேற்றுமொழி பகர்ந்தனரே. – கருணை

3. சென்னிதனில் உதிரம் வடிய செருமுள்முடி அணிந்தவராய்
சின்ன முற்று ரக்ஷை செய்ய, சிந்தை கொண்ட விந்தையென.
– கருணை

4. நடுச்சிலுவை மீதிலேறி, நவின்ற ஏழு நன் மொழிகள்,
கடுமலகை தோல்வியுற்று, கதறியழச் செய்கின்றன. – கருணை

5. மீட்பர் பட்ட காயந்தனில் பொங்கி வரும் திவ்ய இரத்தம்
பாய்ந்து ஓடும் காட்சி காண பதைக்கிறதே எங்கள் உள்ளம். – கருணை

<u>***பல்லவி***</u>

பாரீர் கெத்செமெனே, பூங்காவிலென் நேசரையே,
வியாகுலத்தோடு வேண்டுதல் செய்திடும்
சத்தம் தொனித்திடுதே

<u>***சரணங்கள்***</u>

**1.** தேகமெல்லாம் வருந்தி சோகமடைந்தவராய்
தேவாதி தேவன் ஏக சுதன் படும் பாடுகள் எனக்காயே. – பாரீர்

**2.** அப்பா இப்பாத்திரமே நீக்கும் நின் சித்தமானால்
எப்படியுமும் சித்தம் செய்ய என்னைத் தத்தம் செய்தேன்
என்றாரே. – பாரீர்

**3.** இரத்தத்தின் வேர்வையாலே மெத்த வேதனையுற்றே
இம்மானுவேலன் உள்ள முருகியே வேண்டுதல் செய்தனரே.
– பாரீர்

**4.** மும்முறை தரைமீதே, தாங்கொண்ணா வேதனையால்
முன்னவன் தாமே வீழ்ந்து ஜெபித்தாரே பாதகர் மீட்புரவே.
– பாரீர்

**5.** அன்பின் அருள் மொழியால் ஆறுதல் அளிப்பவர்
துன்ப வேளையில் தேற்றுவாரின்றியே நொந்து அலறுகின்றார்
–பாரீர்

**6.** என்னையும் தம்மைப்போல மாற்றும் இம்மா நேசத்தை
எண்ணி எண்ணியே உள்ளம் கனிந்து நான் என்றும்
புகழ்ந்திடுவேன். – பாரீர்

1. இரத்தம் காயம் குத்தும் நிறைந்த நிந்தைக்கே
முட் கிரீடத்தாலே சுற்றும் குத்துண்ட சிரசே,
முன் திவ்ய மேன்மை கொண்டநீர் லச்சை
காண்பதேன் ? ஐயோ ! வதைந்து நொந்த உம் முன் பணிகிறேன்.

2. நீர் பட்ட வாதை யாவும் என் பாவப் பாரமே;
இத்தீங்கும் நோவும் சாவும் என் குற்றம், கர்த்தரே.
இதோ ! என்றைக்கும் சாக நான் பாத்திரன் ஆனேன்,
ஆனாலும் நீர் அன்பாக என்னைக் கண்ணோக்கினீர்.

3. நான் உம்மைத் தாழ்மையாக வணங்கி நித்தமே
நீர் பட்ட கஸ்திக்காக துதிப்பேன், இயேசுவே.
சிலுவையின் மரணம் பாடெல்லாவற்றையும்
அடியேனின் இதயம் உற்றுப் பார்த்திளகுதே.

4. என் மூச்சொடுங்கும் அந்த கடை வினாடியும்
இப்பாவிக்காய் மரித்த உம்மையே காணுவேன்;
அப்போ, நீர் என்னை அன்பாய் உம் திவ்ய மார்பிலே
சேர்த்து அணைத்துக் காத்து கொள்வீர் என் கர்த்தரே !

***<u>பல்லவி</u>***

கல்வாரியே! கல்வாரியே! கல் மனம் உருக்கிடும் கல்வாரியே!

***<u>சரணங்கள்</u>***

1. முள் முடி சூடியே, கூராணி மீதினில்
கள்ளனைப் போல என் நாயகன் தொங்கிடும் – கல்

2. நாதன் எனக்காக ஆதரவற்றோராய்,
பாதகர் மத்தியில், பாதகன் போல் தொங்கும் – கல்

3. சர்வம் படைத்தாளும் சொர்லோக நாயகன்
நிர்ப்பந்தக் கோலமாய், நிற்பதை காண்பேனோ! – கல்

4. பாவியை மீட்கவே நாயகன் இயேசுதம்
ஜீவனின் இரத்தத்தைச் சிந்தின உன்னத – கல்

5. எண்ணும் நன்மை ஏதும் என்னிலே இல்லையே
பின்னை ஏன் நேசித்தீர், என்னை என் பொன்நாதா!– கல்

6. பாவி துரோகி சண்டாளன் நானாயினும்
பாதகம் போக்கிப் பரிவுடன் இரட்சித்த – கல்

7. இவ்வித அன்பை யான்எங்குமே காணேனே!
எவ்விதம் இதற்கீடு ஏழையான் செய்குவேன்!– கல்

***<u>பல்லவி</u>***

சிலுவை சுமந்து குன்றின் மீது போகுவதாரோ ?
வலு வேதனையுடன் ஓர் அகதியைப்போல சாகுவதாரோ ?

**1.** சர்வேஸ்வரன், ஏக சுதனோ ! சுரர் போற்றிடும் மாபரனோ
பரலோகம் விட்டு நம்மைத் தேடிவந்த சிநேகிதனோ ! – சிலுவை

**2.** நீர் வாக்கால் படைத்த இவ்வுலகில்,
நின்கை சமைத்தோரருகில் நீர் வந்த வேளை வெகுமதியாய்
அவர் தந்தது குருசோ ! – சிலுவை

**3.** என் பாவம் அகற்றும் படியாய் சிலுவை சுமந்தவரே
பின்னாலே நானும் சிலுவை எடுத்து
வருகிறேன்அருள்தா. – சிலுவை

**4.** என் ஜீவிய காலம் முழுதும் நின் நேசத்தின் இனிமை
பாடித் துதிக்க நாதா தந்தருள்வாய், சதா கிருபை. – சிலுவை

***பல்லவி***

அந்தோ கல்வாரியில்அருமை இரட்சகரே
சிறுமைஅடைந்தே தொங்குறார்.

***சரணங்கள்***

1. மகிமை மாட்சிமை மறந்திழந் தோராய்,
கொடுமைக் குருசை தெரிந் தெடுத்தாரே;
மாய லோகத்தோ டழியாது யான், தூய கல்வாரியின்
அன்பை அண்டிடவே. – அந்தோ

2. அழகுமில்லை சௌந்தர்ய மில்லை
அந்தக் கேடுற்றார் எந்தனை மீட்க, பல நிந்தைகள் சுமந்தாலுமே
பதினாயிரம் பேரிலும் சிறந்தவரே. – அந்தோ

3. முள்ளின் முடியும், செவ்வங்கி அணிந்தும்,
கால் கரங்கள் ஆணிகள் பாய்ந்தும்,
குருதி வடிந்தவர் தொங்குறார் வருந்தி மடிவோரையும் மீட்டிடவே,
– அந்தோ

4. அதிசயம் இது இயேசுவின் தியாகம்;
அதிலும் இன்பம், அன்பரின் தியானம்! அதை எண்ணியே நிதம்
வாழுவேன், அவர் பாதையை நான் தொடர்ந்தேகிடவே. – அந்தோ

5. சிலுவைக் காட்சியைக் கண்டுமுன்னேறி
சேவை செய்வேன், ஜீவனும் வைத்தே,
என்னைச் சேர்த்திட வருவே னென்றர் என்றும்
உண்மையுடன் நம்பி வாழ்ந்திடுவேன். – அந்தோ

**பல்லவி**

எங்கே சுமந்து போகிறீர் சிலுவையை நீர்
எங்கே சுமந்து போகிறீர் ?

**சரணங்கள்**

1. எங்கே சுமந்து போகிறீர் ? இந்தக் கானலில் உமது
அங்கம் முழுதும் நோக, ஐயா, என் ஏசுநாதா, – எங்

2. வண்டக்கள்ளர் நடுவில் மரத்தில் தொங்குவதற்கோ ?
சண்டாளர்களைத் தூக்கும் தலையோட்டு மேட்டுக்கோ – எங்

3. தோளில் பாரம் அழுத்த, தூக்கப் பெலம் இல்லாமல்,
தாளுந் தத்தளிக்கவே, தாப சோபம் உற, நீர்;– எங்

4. வாதையினால் உடலும் வாடித்தவிப்புண்டாக..
பேதம் இல்லாச் சீமோனும் பின்னாகத் தாங்கிவர,– எங்

5. தாயார் அழுதுவர சார்ந்தவர் பின் தொடர,
மாயம் இல்லாத ஞான மாதர் புலம்பி வர, – எங்

6. வல்ல பேயைக் கொல்லவும், மரணந்தனை வெல்லவும்,
எல்லை இல்லாப் பாவங்கள் எல்லாம் நாசமாகவும்,– எங்

7. மாசணுகாத சத்திய வாசகனே, உமது
தாசர்களைக் காக்கவும் தாங்காச் சுமையை எடுத்து – எங்

***பல்லவி***

குருசினில் தொங்கியே குருதியும் வடிய,
கொல்கதா மலைதனிலே– நம்
குருவேசு நாதர் கொடுந் துயர், பாவி, கொள்ளாய் கண் கொண்டு.

***சரணங்கள்***

1. சிரசினில் முள்முடி உறுத்திட அறைந்தே
சிலுவையில் சேர்த்தையோ! –தீயர்
திருக்கரங் கால்களில் ஆணி களடித்தார், சேனைத்திரள் சூழ – குரு

2. பாதகர் நடுவில் பாவியினேசன் பாதகன்போல் தொங்க,– யூத
பாதகர் பரிகாசங்கள் பண்ணிப் படுத்தியகொடுமைதனை–குரு

3. சந்திரசூரிய சகல வான் சேனைகள் சகியாமல் நாணுதையோ! –தேவ
சுந்தர மைந்த னுயிர் விடுங் காட்சியால் துடிக்கா நெஞ்சுண்டோ ?–குரு

4. ஈட்டியால் சேவகன் எட்டியே குத்தஇறைவன் விலாவதிலே– அவர்
தீட்டிய தீட்சைக் குருதியும் ஜலமும் திறந்தூற்றோடுது, பார். – குரு

5. எருசலேம் மாதே, மறுகி நீயழுது ஏங்கிப் புலம்பலையோ ?– நின்
எருசலையதிபன் இள மணவாளன் எடுத்த கோல மிதோ ?– குரு

1. நெஞ்சமே கெத்செமனேக்கு நீ நடந்து வந்திடாயோ ?
சஞ்சலத்தால் நெஞ்சுருகித் தயங்குகின்றார் ஆண்டவனார்.

2. ஆத்துமத்தில் வாதை மிஞ்சி, அங்கலாய்த்து வாடுகின்றார்.
தேற்றுவார் இங்காருமின்றித் தியங்குகின்றார் ஆண்டவனார்.

3. தேவ கோபத் தீச்சூளையில் சிந்தை நொந்து வெந்துருகி
ஆவலாய்த் தரையில் வீழ்ந்து அழுது ஜெபம் செய்கின்றாரே.

4. அப்பா பிதாவே, இப்பாத்ரம் அகலச் செய்யும் சித்தமானால்
எப்படியும் நின் சித்தம்போல் எனக்காகட்டும் என்கின்றாரே.

5. இரத்த வேர்வையாலே தேகம் மெத்த நனைந்திருக்குதே,
குற்றம் ஒன்றும் செய்திடாத கொற்றவர்க்கிவ் வாதை ஏனோ ?

6. வானத்திலிருந்தோர் தூதன் வந்தவரைப்
பலப்படுத்தத்தான் சஞ்சலத்தோடு முழந்தாள் நின்று வேண்டுகின்றார்.

7. தாங்கொணா நித்திரை கொண்டு தன் சீஷர்கள் உறங்கிவிழ
அங்கவர் தனித்திருந்து அங்கலாய்த்து வாடுகின்றார்.

***பல்லவி***

ஏங்குதே என்னகந் தான், துயர் தாங்குதில்லை முகந்தான்.

***அனுபல்லவி***

பூங்காவிலே தனிந்தேங்கி நீர் மன்றாட
ஓங்கியே உதிரங்கள் நீங்கியே துயர் கண்டு. – ஏங்குதே

***சரணங்கள்***

1. மேசியாவென்றுரைத்து, யூத ராஜனென்றே நகைத்து,
தூஷணித்தே, அடித்து, நினைக்குட்டி மாசுகளை சுமத்தி,
ஆசாரமின்றியே ஆசாரியனிடம் நீசர்கள் செய் கொடும்
தோஷமது கண்டு. – ஏங்குதே

2. யூதாஸ் காட்டிக்கொடுக்க, சீமோன் பேதுரு மறுதலிக்க,
சூதா யெரோதே மெய்க்க, வெகு தீதாயுடை தரிக்க,
நாதனே, இவ்விதம் நீதமொன்றில்லாமல் சோதனையாய்ச் செய்யும்
வேதனையைக் கண்டு – ஏங்குதே

3. நீண்ட குரு செடுத்து, எருசலேம் தாண்டி மலையடுத்து,
ஈண்டல் பின்னே தொடுத்து, அவரின்மேல் வேண்டும் வசை கொடுத்து,
ஆண்டவர் கை காலில் பூண்டிடும் ஆணியால்
மாண்டதினால் நரர் மீண்ட தென்றாலுமே – ஏங்குதே

***பல்லவி***

ஏறுகின்றார் தள்ளாடி தவழ்ந்து களைப்போடே
என் ஏசு குருசை சுமந்தே என் நேசர் கொல்கதா
மலையின் மேல் நடந்தே ஏறுகின்றார்.

***சரணங்கள்***

**1.** கன்னத்தில் அவன் ஓங்கி அடிக்க சின்னப் பிள்ளை போல் ஏங்கி
நின்றார் அந்தப் பிலாத்தும் கையைக்கழுவி ஆண்டவரை
அனுப்புகின்றான் – ஏறு

**2.** மிஞ்சும் பெலத்தால் ஈட்டி எடுத்தே நெஞ்சைப் பிளந்தான் ஆ!
கொடுமை இரத்தமும் நீரும் ஓடி வருதே இரட்சகரை நோக்கியே பார்–ஏறு

**3.** இந்தப்பாடுகள் உந்தன் வாழ்வுக்காய்
சொந்தப்படுத்தி ஏற்றுக் கொண்டார் நேசிக்கின்றாயோ ஏசுநாதரை
நேசித்து வா குருசெடுத்தே –ஏறு

**4.** சேவல் கூவிடும் இரண்டு வேளையும்
சொந்தக் குருவை மறுதலித்தான் ஓடி ஒளியும் பேதுருவையும்
தேடி அன்பாய் நோக்குகின்றார். – ஏறு

**5.** பின்னே நடந்த அன்பின் சீஷன் போல்
பின்பற்றி வா சிலுவை வரை காடியைப் போல கசந்திருக்கும்
கஷ்டங்களை அவர் அறிவார்... – ஏறு

**6.** செட்டைகளின் கீடிழ் சேர்த் தணைத்திடும்
சொந்தத் தாயின் அன்பதுவே எருசலேமே! எருசலேமே!
என்றழுதார் கண் கலங்க... – ஏறு

***பல்லவி***

மீட்பர் இயேசு குருசில் தொங்கினாரே
மூன்றாணி மீதில் காயம் அடைந்தே

***சரணங்கள்***

1. லோகபாவம் தீர்க்க பலியான தேவ ஆட்டுக் குட்டியானவர்
சொந்தமான இரத்தம் சிந்தி மீட்டு
இந்தளவாய் அன்புகூர்ந்தவர்– எம்மில் – மீட்பர்

2. இயேசுவே கல்வாரி சிலுவையில் ஏறி ஜீவன் தந்திராவிடில்
ஏழையான் என் பாவ பாரங்களை எங்கு சென்று தீர்த்துக்
கொள்ளுவேன்–பூவில் – மீட்பர்

3. தேவனே என்னை ஏன் கை விட்டீரே
என்று இயேசு கதறினாரே பாவத்தால் பிதாவின்
முகத்தையும் பார்க்கவும் முடியவில்லையோஅவ ர் – மீட்பர்

4. அன்னை, தந்தை யாவரிலும் மேலாய்
அன்பு கூர்ந்தார் அண்ணல் இயேசுவே
ஆச்சரிய தேவ அன்பைப்பாட ஆயிரம் நாவுகள் போதுமோபதி – மீட்பர்

5. பாவப் பாரம் லோகக் கவலைகள் தாவி உன்னைச் சூழ்ந்த
போதிலும் தேடி, நாடி, ஓடி வந்தால்
உன்னைத் தேற்றி, ஆற்றித் தாங்குவார் அவர்–இப்போ – மீட்பர்

6. கோரமாம் சிலுவைக் காட்சி கண்டால்
கல் மனமும் உருகிடுமே மாய லோக ஆசை வஞ்சிக்குமே
மாறிடாத இயேசு போதுமே என்றும் – மீட்பர்

***பல்லவி***

கல்வாரியில் தொங்குகின்றார் உன் பாவம் நீக்க தம்மை தந்தார்
உந்தன் சிலுவை ஏற்றனரே.

1. வேர்வையும் ரத்தமாக ஆத்தும வியாகுலம்
அடைந்தாரே இயேசு உனக்காக
தந்தையே உம் சித்தம் என்று இயேசு கதறினாரே. – கல்வாரி

2. சிரசினில் முள்முடி சிவப்பங்கி தரித்தோராய்
நிந்தையும் உனக்காய் ஏற்றாரே வாரினால் அடிபட்டார்
கோரமான காட்சியானார். – கல்வாரி

3. மாசற்ற தேவனே மகிமை யாவும் துறந்தோராய்
நீச குருசில் இயேசு தொங்குகிறார்
பாவத்தைப் போக்கியே நீதிக்குப் பிழைக்கச் செய்தார். – கல்வாரி

4. கைகளில் கால்களில் ரத்தமும் வடியுதே
உந்தன் நோய்கள் யாவும் ஏற்றாரே சுகமே அடைவாய் தழும்
பாலே குணமடைவாய். – கல்வாரி

5. எத்தனை துன்பங்கள் உன்னையும் மீட்கவே
தியாகப் பாதை இயேசு காட்டினார்
நித்தமும் அவரின் பின்னே சென்று வாழ்ந்திடுவாய். – கல்வாரி

## *பல்லவி*

யாரிலும் மகான் இயேசு என் நேசரே
நல்லவர் வல்லவர் என்றுமே!

## *சரணங்கள்*

1. அவருக்கு சமமாய் ஓராளு மில்லை,
அவரைப்போல வல்லவர் யாருமில்லை,
அவரண்டை சேர்ந்தோர்கள் யாவரும்—யாவரும்
ஒரு நாளும் அலையாமல் இன்பமாய்—இன்பமாய்
திருநாமம் வாழ்த்தி புகழுவர் —யாரிலும்

2. நின்றார் அவர் நம் நிலையில்,அன்று
வென்றார் பிசாசை சிலுவையிலே!
ஈந்தாரே நித்திய ஜீவனை —ஜீவனை.
தந்தார் இதயத்தில் ஆனந்தம்—ஆனந்தம்
அல்லேலூயா கீதம்பாடுவோம்— யாரிலும்

3. தன்னுயிர் தந்தவராலேயன்றி,
இரட்சிப்பில்லை வேறொரு வராலும்!
வானத்தின் கீழெங்கும், எங்குமே—எங்குமே
வேறொரு நாமமும் இல்லையே — இல்லையே!
ஒப்பற்ற நேசரைப் போற்று வோம் — யாரிலும்

4. உலகை முழுவதும் அடக்கி ஆள வருவார் என் நேசர்
இராஜாதி இராஜா! பசி தாகம் இல்லாத நாட்டில் நாம்—
நாட்டில் நாம் பரனோடு சேர்ந்தென்றும்
வாழுவோம்—வாழுவோம்! புதுப்பாட்டை நாம் சேர்ந்து பாடுவோம்!!
— யாரிலும்

**1.** விலையேறப் பெற்ற இரத்தமே, சிலுவையில் கண்டேன்;
அதினால் என் மீட்புண்டாயிற்றே, என்றெண்ணி நம்பினேன்.

***<u>பல்லவி</u>***

இரத்தம்! திவ்ய இரத்தமே! இயேசு சிந்தினாரே;
சிலுவையில் பாடு பட்டோராய் மாண்டாரே எனக்காய்.

**2.** லட்சாதி லட்சம் நன்மையே தேவன்பினாலுண்டாம்;
எல்லாத்திலும் சிறந்ததே என் இயேசு இரத்தமாம். – இரத்தம்

**3.** திரளான பாவஞ் செய்த நான் பிசாசின் அடிமை;
திரு இரத்தத்தால் என் இயேசு தாம் மீட்டுக்கொண்டார் என்னை
– இரத்தம்

**4.** பெருவெள்ளம் போன்ற இரத்தமேஎன் பாவம் நீக்கிற்று,
கருத்தாய்க் கண்டேனே நித்தமே துதி உண்டாகவே. – இரத்தம்

**5.** பரலோகத்தில் இப்பாட்டையே என்றைக்கும் பாடுவோம்;
சந்நிதானத்தில் கெம்பீரமாய் இயேசுவைப் போற்றுவோம். – இரத்தம்

1. இம்மானுவேலின் இரத்தத்தால் நிறைந்த ஊற்றுண்டே
எப்பாவத் தீங்கும் அதினால் நிவர்த்தி யாகுமே.

2. மா பாவியான கள்ளனும் அவ்வூற்றில் மூழ்கினான்
மன்னிப்பும் மோக்ஷானந்தமும் அடைந்து பூரித்தான்.

3. அவ்வாறே நானும் இயேசுவால் விமோசனம் பெற்றேன்
என் பாவம் நீங்கிப் போனதால் ஓயாமல் பாடுவேன்.

4. காயத்தில் ஓடும் இரத்தத்தை விஸ்வாசத்தால் கண்டேன்
ஒப்பற்ற மீட்பர் நேசத்தை எங்கும் பிரஸ்தாபிப்பேன்.

5. பின் விண்ணில் வல்ல நாதரை நான் கண்டு பூரிப்பேன்
அங்கென்னை மீட்ட நேசத்தை கொண்டாடிப் போற்றுவேன்.

**1.** கல்வாரியின் கருணையிதே காயங்களில் காணுதே
கர்த்தர் இயேசு பார் உனக்காய் கஷ்டங்கள் சகித்தாரே.

***<u>பல்லவி</u>***

விலையேறப் பெற்ற திரு இரத்தமே—அவர்
விலாவினின்று பாயுதே விலையேறப் பெற்றோனாய்
உன்னை—மாற்ற விலையாக ஈந்தனரே.

**2.** பொன் வெள்ளியோ, மண்ணின் வாழ்வோ
இவ்வன்புக் கிணையாகுமோ அன்னையினும் அன்பு வைத்தே
தன் ஜீவனை ஈந்தாரே— விலை

**3.** சிந்தையிலே பாரங்களும் நிந்தைகள் ஏற்றவராய்
தொங்குகிறார் பாதகன் போல் மங்கா வாழ்வளிக்கவே.— விலை

**4.** எந்தனுக்காய் கல்வாரியில் இந்தப் பாடுகள் பட்டீர்
தந்தையே உம் அன்பிதையே சிந்தித்தே சேவை செய்வேன்.— விலை

**5.** மனுஷனை நீர் நினைக்கவும் அவனை விசாரிக்கவும்
மண்ணிலவன் எம்மாத்திரம் மன்னவா உம் தயவே.— விலை

1. பாவப் பாரம் நீங்க மனதுண்டா ?
இயேசு இரத்தத்தில் பெலனுண்டு,
தீமையை வென்று நீ ஜெயிப்பாயா ? இரத்தத்தில் சக்தியுண்டு.

***<u>பல்லவி</u>***

வல்லமை அற்புத வல்லமை இயேசுவின் இரத்தத்தில்;
வல்லமை அற்புத வல்லமை, வல்ல இயேசுவின் திரு இரத்தத்தில்.

2. துர் இச்சை அகந்தை வெல்லுவாயா ?
இயேசு இரத்தத்தில் பெலனுண்டு,
கல்வாரி ஊற்றில் நீ முழுக வா இரத்தத்தில் சக்தியுண்டு. – வல்லமை

3. தூய வெண்மையாக விருப்பமா
இயேசு இரத்தத்தில் பெலனுண்டு
கறை யாவும் தீரும் ஜீவஊற்றில், இரத்தத்தில் சக்தியுண்டு. – வல்லமை

4. இயேசு உன் இராஜனை சேவிப்பாயா
இயேசு இரத்தத்தில் பெலனுண்டு
தினம் துதிப் பாடி ஜீவிப்பாயா ? இரத்தத்தில் சக்தியுண்டு. – வல்லமை

fppt.com

## *பல்லவி*

யூத ராஜ சிங்கம் உயிர்த் தெழுந்தார்.
உயிர்த்தெழுந்தார், நரகை ஜெயித்தெழுந்தார்.

## *சரணங்கள்*

1. வேதாளக் கணங்கள் ஓடிடவே,
ஓடிடவே உருகி வாடிடவே –யூத

2. வானத்தின் சேனைகள் துதித்திடவே,
துதித்திடவே பரனைத் துதித்திடவே, – யூத

3. மரணத்தின் சங்கிலிகள் தெறிபட்டன
தெறிபட்டன நொடியில் முறிபட்டன. – யூத

4. எழுந்தார் என்றதொனி எங்குங் கேட்குதே,
எங்குங் கேட்குதே, பயத்தை என்றும் நீக்குதே – யூத

5. மாதர் தூதரைக் கண்டக மகிழ்ந்தார்,
அகமகிழ்ந்தார், பரனை அவர் புகழ்ந்தார், – யூத

6. மரித்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை,
மரிப்பதில்லை, இனி மரிப்பதில்லை. – யூத

7. கிறிஸ்தோரே நாமவர் பாதம் பணிவோம்,
பாதம் பணிவோம், பாதத்தைச் சிரமணிவோம். யூத

## பல்லவி

ஆமென் அல்லேலூயா! மகத்துவத் தம்பராபரா;
ஆமென் அல்லேலூயா! ஜெயம்! ஜெயம்! அனந்த ஸ்தோத்திரா.

## அனுபல்லவி

ஆம் அனாதி தந்தார், வந்தார், இறந்
துயிர்த்தெழுந்தாரே, உன்னதமே! – ஆமென்

## சரணங்கள்

1. வெற்றி கொண்டார்ப்பரித்து –கொடும்வே
தாளத்தைச் சங்கரித்து,– முறித்து;
பத்ராசனக் கிறிஸ்து–மரித்து, பாடுபட்டுத்தரித்து, முடித்தார். – ஆமென்

2. சாவின் கூர் ஒடிந்து,– மடிந்து, தடுப்புச் சுவர் இடிந்து,– விழுந்து.
ஜீவனே விடிந்து,– தேவாலயத் திரை ரண்டாய்க் கிழிந்து ஒழிந்தது
– ஆமென்

3. வேதம் நிறைவேற்றி,– மெய் தோற்றி,
மீட்டுக் கரையேற்றி,– பொய் மாற்றி,
பாவிகளைத் தேற்றி,– கொண்டாற்றி,
பத்ராசனத் தேற்றி வாழ் வித்தார். – ஆமென்

**பல்லவி**

கீதம், கீதம், ஜெய ஜெய கீதம் கைகொட்டிப் பாடிடுவோம்.

**அனுபல்லவி**

இயேசு ராஜன் உயிர்த்தெழுந் தார்—அல்லேலூயா
ஜெயம் என்று ஆர்ப்பரிப்போம். —ஆ ஆ கீதம்

**சரணங்கள்**

1. பார் அதோ கல்லறை மூடின பெருங்கல்
புரண்டு ருண்டோடுது பார்— அங்கு
போட்ட முத்திரை காவல் நிற்குமோ
தேவ புத்திரர் சந்நிதிமுன். —ஆ ஆ கீதம்

2. வேண்டாம் வேண்டாம் அழுதிட வேண்டாம்
ஓடி உரைத்திடுங்கள்—தாம் கூறின மா மறை விட்டனர் கல்லறை
போங்கள் கலிலேயாவுக்கு. —ஆ ஆ கீதம்

3. அன்னா காய்பா ஆரியர் சங்கம் அதிரடி கொள்ளுகின்றார்— இன்ன
பூத கணங்கள் இடி ஒலி கண்டு பயந்து நடுங்குகின்றார். —ஆ ஆ கீதம்

4. வாசல் நிலைகளே, உயர்த்தி நடவுங்கள்
வருகின்றார் ஜெய வீரன்— உங்கள் மேள வாத்தியம் கைமணி பூரிகை
எடுத்து முழங்கிடுங்கள். —ஆ ஆ கீதம்

**பல்லவி**

உயிர்த்தெழுந்தாரே அல்லேலூயா ஜெயித்தெழுந்தாரே
உயிருடன் எழுந்த–மீட்பர் இயேசு எம் சொந்தமானாரே.

**சரணங்கள்**

1. கல்லறை திறந்திடவே கடும் சேவகர் பயந்திடவே.
வல்லவர் இயேசு உயிர்த் தெழுந்தாரே!
வல்ல பிதாவின் செயலிதுவே. – உயிர்த்

2. மரித்தவர் மத்தியிலே ஜீவதேவனைத் தேடுவாரோ ?
நீதியின் அதிபதி உயிர்த் தெழுந்தாரே! நித்திய நம்பிக்கை
பெருகிடுதே. – உயிர்த்

3. எம்மா ஊர் சீஷர்களின் எல்லா மன இருள் நீக்கினாரே
எம் மனக் கலக்கங்கள் நீக்கினதாலே எல்லையில்லா பரமானந்தமே.
– உயிர்த்

4. தரிசனம் அளித்தனரே தம் அன்பர்க்கு அந்நாளிலே;
தரிசிப்போம் திரு முகம் இத்தினமதிலும் தயவாய் நம்மண்டை
நிற்கிறாரே. – உயிர்த்

5. மரணமே உன் கூர் எங்கே ? பாதாளமே உன் ஜெயம் எங்கே ?
சாவையும் நோயையும் பேயையும் ஜெயித்தார்.
சபையோரே துதி சாற்றிடுவோம். – உயிர்த்

6. பரிசுத்த மாகுதலை பயத்தோடென்றும் காத்துக்
கொள்வோம்எக்காளம் தொனிக்கையில் மறு ரூபமாக,
எழும்புவோமே மகிமையிலே. – உயிர்த்

## 141

1. பாவிக்காய் மரித்த இயேசு மேகத்தில் இறங்குவார்;
கோடிதூதர் அவரோடு வந்து ஆரவாரிப்பார்; அல்லேலூயா!
கர்த்தர் பூமி ஆளுவார்.

2. வெண்மையான ஆசனத்தில் வீற்று வெளிப்படுவார்;
துன்புறுத்தி சிலுவையில்கொன்றோர் அவரைக்
காண்பார்; திகிலோடே அவர் சத்தத்தைக் கேட்பார்.

3. அவர் தேகம் பட்ட காயம் அன்றுங் காணப்படுமே;
பக்தர்கள் மகிழ்ச்சியாயும் நோக்குவார்கள் அப்போதே;
அவர் காயம் தரும் நித்ய இரட்சிப்பை.

4. உம்மை நித்ய இராஜனாக யாரும் போற்றச் செய்திடும்;
இராஜரீகத்தை அன்பாக ஏற்று ஆளும் என்றைக்கும்;
ஆ, கர்த்தாவே, சீக்கிரம் வந்தருளும்.

1. வாரும்! இயேசுநாதா! வாரும்! பக்தர் காத்து நிற்கிறார்.
காடுபோன்ற லோகில், பாரும் மோட்ச யாத்திரை செய்கிறார்,
உம்மைக்காண ஆவல்கொண்டு செல்கின்றார்.

2. சர்வ சிருஷ்டி ஏகமாக காத்துத் தவிக்கின்றதே.
மீட்பு தோன்ற, ஆவலாக எதிர் நோக்குகின்றதே.
நீர் வந்தாலோ பூமி செழித்தோங்குமே.

3. லோகமெங்குந் துன்பப்பட்ட யூதர் வந்து கூடுவார்
காயமாகிக் குத்தப்பட்ட திருமேனி நோக்குவார்.
குணமாறி உம்தன் தொண்டராகுவார்.

4. வாரும்! இயேசுநாதா !வாரும்! வானம் பூமி ஆளுவீர்.
உம்மை நம்பினோர் எல்லாரும் வாழ்வு காணச் செய்குவீர்.
பேரானந்தம் தந்து பூரிப்பாக்குவீர்.

## பல்லவி

நமது மணவாளருக் கெதிர் கொண்டு
போவோம், வாரும் நமது மணவாளருக்குள்
மகிழ்ந்து சுகித்திருக்க.

## சரணங்கள்

1. செங்கோல் கையில் பிடித்து சிம்மாசனத்தில் ஆளும்
சங்கை அதிபதியை கண்டு சந்தித்திடவும் – நமது

2. வெள்ளை அங்கி தரித்து வெள்ளோலை கைப்பிடித்து
செல்வ நடை நடந்து சீக்கிரம் போவோம் வாரும்.– நமது

3. மனையாட்டி கைப்பிடிக்க மயங்கித் தியங்குகிறாள்
நினையாத நேரத்தில் மணவாளன் வந்திடுவார். – நமது

4. ஆட்டுக் குட்டியின் கலியாண விருந்தை உண்ண
அணையாத தீவட்டியும் குறையா எண்ணெய்யுங் கொண்டு.
– நமது

5. தங்கக் கிரீடம் வைத்து தமது பத்திராசனத்தில்
இங்கிதமாக வாழும் இம்மானுவேலருக்கே. நமது

***பல்லவி***

அணி அணியாய் தூதருடன் பொன் மணிபோல்
துலங்குவாரே

***சரணங்கள்***

**1.** தூதர் நாதம் எங்கும் முழங்க தூயரெல்லாம் ஒன்று சூழ
துங்கவன் இயேசுவின் இன்ப முகத்தை
கண்டு நாமும் மகிழுவோம் – அணி

**2.** மண்ணின் சாயல் மாறி நாமும் அண்ணல் இயேசுவின்
சாயலடைவோம் விண்ணில் நமக்காய் பணித்த
மனையில் மன்னனோடே வாழுவோம் –அணி

**3.** முத்து வாசல் ஏறிச் செல்வோம் முத்தம் செய்வோம்
பொன்னின் பாதம் அத்தன் நம்மை அறிந்த அன்பால்
அறிந்து களிப்போம். அவரிலே – அணி

**4.** அந்த நாளை எப்போ காண்போம் சுந்தரனை என்று சேர்வோம்
அந்தமுமில்லா அன்பினளவை கண்டு மகிழ்வோம்
நிறைவுடன் – அணி

**5.** நித்தியமே எந்தன் உரிமை நிறுத்தினாரே சுத்த உருவாய்
நீசன் நானே என் செய்வேனோ
நீடுழியாய் சேவிப்பேன் – அணி

**145**

***பல்லவி***

எக்காள சத்தம் வானில் தொனித்திடவே
எம் இயேசு மாராஜனே வந்திடுவார்.

**1.** அந்த நாள் மிக சமீபமே சுத்தர்கள் யாவரும் சேர்ந்திடவே
தேவ எக்காளம் வானில் முழங்க
தேவாதி தேவனைச் சந்திப்போமே. – எக்காள

**2.** வானமும் பூமியும் மாறிடினும் வல்லவர் வாக்கு தாம் மாறிடாதே
தேவ தூதர் பாடல் தொனிக்க
தேவன் அவரையே தரிசிப்போமே. – எக்காள

**3.** கண்ணிமை நேரத்தில் மாறிடுமே விண்ணிலே யாவரும்
சேர்ந்திடுவோம் கண்ணீர் கவலை அங்கு இல்லை
கர்த்தர் தாமே வெளிச்சமாவார். – எக்காள

**4.** கர்த்தரின் வேளையை நாம் அறியோம்
கர்த்தரின் சித்தமே செய்திடுவோம்
பலன்கள் யாவையும் அவரே அளிப்பார்பரமனோடென்றும்
வாழ்ந்திடுவோம். – எக்காள

1. விழித்துக் கொள்ளுங்களேன்– மோட்ச
வழியைச் சேருங்களேன்– வருவார், வருவார், வருவார், வருவார்
இயேசு தாமே வருவார்.

2. நினையாத நேரத்திலே–சீஷர் அனைவோருங் கூடிடவே,
வருவார், வருவார், வருவார், வருவார்
சீக்கிரமாய் வருவார்.

3. அக்கிரமக்காரருக்கு–அப்போ துக்கிரக் கோபாக்கினையே
வருவார், வருவார், வருவார், வருவார்
நியாயந் தீர்க்க வருவார்.

4. வெள்ளங்கி போடுங்களேன்– முழு உள்ளம் ஒப்பிடுங்களேன்,
வருவார், வருவார், வருவார், வருவார்
ஏற்றுக்கொள்ள வருவார்.

5. சுத்தத்தைப் பெற்றிடவே– திரு இரத்தத்தைப் பாருங்களேன்,
வருவார், வருவார், வருவார், வருவார்
மகிமையாய் வருவார்.

6. இரட்சிப்பின் நிச்சயத்தைப்– பெற்றால்
சிட்சைக்குப் பயமில்லை, வருவார், வருவார், வருவார், வருவார்
மேகத்துடன் வருவார்.

***பல்லவி***

என் இயேசுஇராஜன் வருவார்
எண்ணில் அடங்கா தூதரோடு
என்னை மீட்ட இயேசு ராஜன்
என்னை ஆளவே வருவார்.

**1.** அவர் வருகை எதிர் நோக்கும் பக்தர்க்கு
அவர் வருகை மிகப்பெரும் மகிழ்ச்சி
அவர் வருகை எதிர்பாரா மாந்தர்க்கு
அவர் வருகை மிகப்பெரும் அதிர்ச்சி – என் இயேசு

**2.** வானில் பேரொலி கேட்கும் விண்ணில் பேரொளி மின்னும்
மேற்கும் கிழக்கும் நடுங்க மேகங்கள் மீதே வருவார்.
– என் இயேசு

**3.** உலகில் நடப்பவை எல்லாம் அவர் வருகையின்
உண்மையைக் கூறும் அவர் வருகையோ மிகவும் சமீபம்
அவர் வரவை சந்திக்க நீ ஆயத்தமா ? – என்

1. மேகங்கள் நடுவே வழி பிறக்கும்
பூதங்கள் கடந்து கடந்து போகும்
தூதர்கள் கூட்டங்கள் சூழ்ந்து நிற்கும்
பறந்திடுவேன் நான் பறந்திடுவேன்

**_பல்லவி_**

வானத்தில் வானத்தில் நடுவானத்தில்
இயேசுவின் கைகளில் நானிருப்பேன்
பரமன் இயேசுவின் புன்னகை முகம்
என் கண்களில் உள்ளத்தில் நிறைந்து நிற்கும்

2. நாற்றிசையினின்றும் கூடிடுவார்
நாதனின் இரத்தத்தால் கழுவப்பட்டோர்
ஸ்தோத்திர கீதமே தொனித்து நிற்கும்
பறந்திடுவேன் நான் பறந்திடுவேன் – வானத்தில்

3. கண்ணீரும் துன்பமும் கடந்து போகும்
கண்ணிமைப் பொழுதில் நடந்துவிடும்
கர்த்தரின் வருகை நாளின் போது
பறந்திடுவேன் நான், பறந்திடுவேன் – வானத்தில்

4. திருடன் வருகை போலிருக்கும்
தீவிரம் அவர் நாள் வெகு சமீபம்
காலையோ, மாலையோ நள்ளிரவிலோ
பறந்திடுவேன் நான் பறந்திடுவேன். – வானத்தில்

## 149

### ***அனுபல்லவி***

குதூகலம் நிறைந்த நன்னாள் நடுவானில் மின்னிடுமே
இதுவரை இருந்த துன்பமில்லை இனி என்றுமே ஆனந்தம்

### ***சரணங்கள்***

**1.** தளகர்த்தனாம் இயேசு நின்று யுத்தம் செய்திடுவார் நன்று
அவர் ஆவியினால் புதுபெலனடைந்து
ஜெய கீதங்கள் பாடிடுவோம். – குதூகலம்

**2.** புவிமீதினில் சரீரமீட்பு என்று காண்போம் என ஏங்கும்
மன மகிழ்ந்திடவே–அவர் வந்திடுவார்
மணவாட்டியாய் சேர்த்திடவே – குதூகலம்

**3.** ஜெப விழிப்புடன் வாஞ்சையாக அவர் வருகையை எதிர்நோக்கி
நவ எருசலேமாய் தூயாலங் கிர்தமாய்
நாம் ஆயத்தமாகிடுவோம் – குதூகலம்

**4.** ஜீவ ஒளிவீசும் கற்களாக சீயோன் நகர்தனிலே சேர்க்க
அருள் கூர்ந்திருந்தார் நாமம் வரைந்திருந்தார்
அவர் மகிமையில் ஆர்ப்பரிப் போம் – குதூகலம்

**5.** தேவ தூதர்கள் கானமுடன் ஆரவார தொனி கேட்கும்
அவர் கிருபையினால் மறுரூபமாக
நம்மை இனிதுடன் சேர்த்திடுவார். – குதூகலம்

1. எக்காள சத்தம் வானில் முழங்கவே
பறந்திடுவேன் நானும் –ஆ–ஆ

2. கர்த்தரோ டொன்றாய்க் கீதங்கள் பாடி
கர்த்தரைப் போற்றிடுவேன் –ஆ–ஆ

3. தினமும் கீதங்கள் பாடி மகிழ்வேன்
மனமார வாழ்த்திடுவேன் –ஆ–ஆ

4. இயேசு மணாளன் வேகம்தான் வந்து
ஏற்றுக் கொள்வாரென்னை –ஆ–ஆ

5. லோகத்தில் நிந்தை பரிகாசம் வந்திடும்
சோர்ந்திடாதே மனமே –ஆ–ஆ

6. கல்வாரிக் குருசில் காணும் மா அன்பு
யாரால் வர்ணிக்கலாகும் –ஆ–ஆ

7. மணவாளன் இயேசுடன் சபை நிற்கும் காட்சி
வர்ணிக்கவும் இயலா. –ஆ–ஆ

பல்லவி

மேக மீதில் இயேசுராஜன் வேகம் வாராரே!

அனுபல்லவி

ஆயத்தமுள்ளோரை ஆகாயம் சேர்க்க
அவரே வருவாரே!

1. ஆண்டவர் தாமே ஆர்ப்பரிப்போடே
அவனியில் வாராரே மீண்டவரோ மேலோகமே செல்ல
மேதினியை விடுவார். – மேகமீதில்

2. கிறிஸ்துவுக்குள்ளே மரித்தோரெல்லாம்
உயிரோடெழுந்திடுவார் மரிக்காதிருக்கும்
பரிசுத்தரெல்லாம் மறைந்தே போவாரே –மேகமீதில்

3. பாடுபட்டோர்க்கும் பலனளிப்பாரே
பாடுபட்டவர் தாமேகூடும் நமக்கோ குறைவில்லாப்
பலனையே கூவியே கொடுத்திடுவார்! – மேகமீதில்

4. அவருரைத்த அடையாளங்களெல்லாம்
தவறாமல் நடக்கின்றதே அவர் வரும் வேளையை
எவருமே அறியார் ஆண்டவரே அறிவார்! – மேகமீதில்

5. ஆயிர வருஷ ஆளுகை செய்வார் ஆண்டவர் இயேசு தாமே
நீதி சமாதானம் நிறைந்தேயிருக்கும்
கர்த்தரின் ஆளுகையில்! – மேகமீதில்

6. அல்லேலூயா கீதமே பாடி அக மகிழ்ந்தாடிடுவோம்
வல்லவர் வரும் வேளையுமிதோ சீக்கிரம் நெருங்கிற்றே!
– மேகமீதில்

## 152

***பல்லவி***

சாலேமின் இராஜா, சங்கையின் இராஜா,
கர்த்தா வாருமேன், –இந்தத் தாரணி மீதினில் ஆளுகை
செய்திட சடுதி வாருமேன்.

***சரணங்கள்***

1. சீக்கிரம் வருவே னென்றுரைத்துப் போன
செல்வக் குமாரனே,– இந்தச் சீயோனின் மாதுகள் தேடித்திரிகின்ற
செய்தி கேளீரோ ? –சாலேமின்

2. எட்டி எட்டி உம்மை அண்ணார்ந்து பார்த்துக்
கண்பூத்துப் போகுதே–நீர் சுட்டிக் காட்டிப்போன
வாக்குத் தத்தம் நிறைவேறலாகுதே. –சாலேமின்

3. நங்கை எருசலேம் பட்டணம் உம்மை
நாடித் தேடுதே–இந்த நானிலத்திலுள்ள யூதச்
சாதியும்மைத் தேடி வாடுதே. – சாலேமின்

4. சாட்சியாக சுபவிசேஷம் தரணி மேவுதே–உந்தன்
சாட்சிகளுடைய இரத்தங்களெல்லாம்
தாவிக்கூவுதே. – சாலேமின்

1. தேவ சேனை வானமீது கோடி கோடியாகத் தோன்றும்
பல கோடித் திரள் கூடி, குகைதேடி வேகம் ஒடும்
விண்மீன்கள் இடமாறி பாரெங்கும் வந்து கொட்டும்
நானோ ஆடி மிகப்பாடி என் நேசருடன் சேர்வேன்.

***<u>பல்லவி</u>***

அல்லேலூயா அல்லேலூயா–4

2. ஐந்து கண்டம் தனில் ஆளும்ஆட்சியாவும் அற்றுப் போகும்
இருள் சூழும் இடிமுழங்கும் கூச்சல் கேட்டு கண்ணீர் சிந்தும்,
தூயர் கூட்டம் சுத்த உள்ளம் சாட்சிப் பாடல் எங்கும் கேட்கும்
நானோ, ஆடி மிகப் பாடி என் நேசருடன் சேர்வேன். –அல்

3. கடல் குமுறும் கரை உடையும் கப்பல் கவிழும் பெரும் நாசம்
போக்குவரத்து யாவும் நிற்கும் இனி உலகம் என்பதில்லை
வாக்குமாறா வேதம் கூறும் வார்த்தை யாவும் நிறைவேறும்
நானோ ஆடி மிகப் பாடி என் நேசருடன் சேர்வேன். –அல்

எக்காள சத்தம் வானில் தொனிக்க
காண்போம் இயேசுவை எங்கள் முன்னே
பொறுமையுடன் காத்திருந்தோர் நாம்
பூவிலிருப்போர் தேவனற்றோர்.

*__பல்லவி__*

ஆத்ம மணாளன்! ஆத்ம மணாளன்
வாரும் நல் இயேசு வாழ்த்துகிறோம்
அல்லேலூயா என்ன சந்தோஷம்
பறந்தே போவோம் பாட்டுடன் நாம்.

2. பக்தரை சேர்க்க கள்வன் போல் வாரார்
சுத்தர் மட்டுமே மாறிடுவார் வானில் தூதர்கள் ஒன்றாகக் கூடி
பாட்டுடன் எக்காளம் தொனிக்க – ஆத்ம

3. விடிவெள்ளி நட்சத்திரம் போல் அழகுள்ளோர் இன்பம் அவர்
மேன்மையுள்ளவர் வானில் உயர்ந்தோர்
எனக்காகவே பாடு பட்டோர். – ஆத்ம

4. இமைப் பொழுதில் சுத்தர் எழுந்து மறைந்து போவார் இயேசுவுடன்
ஆ, இன்பக் கூட்டம் மேகத்தில் கூடி சந்திப்போம் சீக்கிரம்
இயேசுவையே. – ஆத்ம

5. விண்ணில் சுத்தர் கிரீடங்கள் பெற விண் தூதர் காத்திருக்கும் நாளில்
மண வாட்டியாம் சபை வெண்ணுடை தரித்து மேன்மை பெறும் நாள்
இதோ, இதோ. – ஆத்ம

6. அல்லேலூயா! ஆனந்தங்கொள்வோம் அல்லேலூயா! நாம்
ஆர்ப்பரிப்போம் அல்லேலூயா! நாம் பாக்யம்பெற்றோம்
அல்லேலூயா! ஆமென், ஆமென். – ஆத்ம

மகிபனாம் இயேசு எம்மை சந்திக்க
மகிதலம் அதிவேகம் வருகிறார் ஆனந்தம்.

1. கிறிஸ்துவுக்குள்ளே மரித்த பல கணக்கில்லா பக்தர் தூதருடன்
எக்காளம் தொனிக்கையில் இயேசுவுடனே வந்திடுவார். – மகிபனாம்

2. கிறிஸ்து வரவின் அடையாளங்கள் உலகினில் எங்கும் தோன்றிடுதே
நினையாத நேரமதில் வந்திடுவாரே விழித்திருப்போம் – மகிபனாம்

3. மண்ணுலகின்பம் அனுபவித்தே மடிந்திடுதே பல கோடி ஜனம்
பரிதபித்தே புறப்படுவீர் பரன் வருகை தனை சாற்றிடவே. – மகிபனாம்

4. இராக்காலம் வேகம் கடந்திடுதே கிருபையின் வாசல் அடைபடுதே
தருணமிதே சாற்றிடவே திரு சுவிசேஷம் மானிடர்க்கே. – மகிபனாம்

5. பூரணராகி பறந்திடவே பொற்பரனோடு வாழ்ந்திடவே
அவர் பாதை தொடர்ந்திடுவோம் அன்பரின் வருகை நெருங்கிடுதே
– மகிபனாம்

6. ஆதி விஸ்வாசம் நம்பிக்கையும் ஆண்டவர் பட்சம் கொண்ட
அன்பும் கடைசி வரை காத்துக் கொள்வோம்
கருணையின் தேவன் வருகிறாரே. – மகிபனாம்

**1.** அந்த நாள் நெருங்கிடுதே ஆயத்த மாகியே பறந்திடுவோம்
இந்த வனாந்திர யாத்திரை முடித்து இயேசுவுடன் நிதம்
வாழ்ந்திடுவோம்.

***<u>பல்லவி</u>***

தேவன் வருகின்றார், வேகமாய் வருகின்றார்
கர்த்தரின் வேளையை நாம் அறியோம்
பக்தர்கள் யாவரும் விழித்திருப்போம்.

**2.** திருடனைப்போல் அவர் வருகை சீக்கிரமாய் மிக நெருங்கிடுதே
ஆயத்தமில்லா அவனியில் உள்ளோர் அழுது புலம்பி கதறுவாரே.
– தேவன்

**3.** இருள் சூழும் வேளை நெருங்கிடுதே
இனி வரும் காலமோ நமக்கு இல்லை
பூரணமாகக் கடந்திடுவோம் நாம் பரனோடு நித்தியம் வாழ்ந்திடுவோம்.
– தேவன்

**4.** நினையா வேளையில் வந்திடுவார் நித்திரை மயக்கம்
களைந்திடுவோம் நீதியின் ராஜனை முகமுகமாய் நாம்
நித்தியமாக தரிசிப்போமே. – தேவன்

தூயாதி தூயவரே உமது புகழை நான் பாடுவேன்
பாரில் எனக்கு வேறென்ன வேண்டும்
உயிருள்ளவரை நின் புகழ் பாட வேண்டும்.

***<u>சரணங்கள்</u>***

1. சீடரின் கால்களைக் கழுவினவா செந்நீரால் என்னுள்ளம்
கழுவினீரே. – பாரில்

2. மக்களின் நோய்களை நீக்கினவர்
பாவி என் பாவ நோய் நீக்கினீரே. – பாரில்

3. துயரங்கள் பாரினில் அடைந்தவரே
துன்பங்கள் தாங்கிட பெலன் தந்தீரே. – பாரில்

4. தம் ஜீவன் எனக்காகத் தந்தவரே
என்னுள்ளம் பலியாக ஏற்றிடுமே – பாரில்

5. பரலோகில் இடம் உண்டு என்றவரே
பரிவாக எனக்கிடம் தந்தவரே. – பாரில்

## *பல்லவி*

மனமே! விழித்துத் துதி செய்! உன் தேவனை நீ
மனமே! விழித்துத் துதி செய்!

## *சரணங்கள்*

1. உன் பேரில் அன்பு வைத்து உன் பாவம் அகல் வித்து
தம் ஆவியைக் கொடுத்து உன்னை இரட்சித்தவரை. – மனமே

2. ஜீவியத்திலே காப்பாற்றி பாவக் காயத்தை ஆற்றி
துர்க்குணங்களை மாற்றி துக்கங்களிலே தேற்றி. – மனமே

3. வேண்டி பூலோகம் வந்து மாண்டு இரத்தம் சொரிந்து
மீண்டும் இரட்சண்யம் தந்த ஆண்டவனைத் துதி செய் நீ. – மனமே

4. நித்திய பிதாவைத் துதி மத்தியஸ்தரையும் துதி
சத்தியாவியையும் துதி திரியேக தேவனை நீ. – மனமே

## *பல்லவி*

இராஜாதி இராஜாவைப் போற்றிடுவோம்
இராஜாதி இராஜனை தேவாதி தேவனைப், பாடிப் பணிந்திடுவோம்.
—சரணங்கள்

1. நன்மைகள் ஏராளமாய்— தந்து நரர்க்காய் ஜீவனை ஈந்ததினால்
நன்றியோடே எங்களுள்ளம் நாடித் துதித்திடுதே.

2. மாய உலகை விட்டு—மனம் திரும்பக் கிருபை ஈந்தனரே!
மன்னித்தாரே, மாட்சிமையாய் மன்னனைப் போற்றிடுவோம். — இரா

3. மாபெரும் மன்னவனாம்— எங்கள் மண் மீது மனுவாய் வந்தனரே!
விண் தேவனாம், பொன் தேவனாம்! போற்றிப் பணிந்திடுவோம்.— இரா

4. கிருபையால் இரட்சிப்பையே எங்கள்
கிறிஸ்து மரித்து ஈந்தனரே! உயிர்த்தாரே, ஜெயித்தாரே,
உயர்த்திப் பாடிடுவோம் — இரா

5. மகத்துவ இராஜனே—எங்கள் மகிமைப் பிதாவின் சொரூபனே
மன்னவனே! தன்னவனே! மகிழ்ந்து பாடிடுவோம். — இரா

6. சேனைகளின் கர்த்தரே— ஜெயம் கொண்ட மகிமையின் இராஜா நீரே!
சாத்தான் மேல் ஜெயம் தந்தவரே சர்வ வல்ல தேவனே. — இரா

7. அற்புத தேவ அன்பே—தேவ  பொற்பரன் பாராட்டும் தூய அன்பே
உன்னத மா தேவ அன்பே! என் உள்ளம் பொங்கும் அன்பே! — இரா



1. நமது இயேசு கிறிஸ்துவின் நாமம்
நானிலமெங்கும் ஓங்கிடவே புனிதமான பரிசுத்த வாழ்வை
மனிதராம் எமக்களித்தார்.

***<u>பல்லவி</u>***

தேவ கிருபை எங்கும் பெருக தேவனை ஸ்தோத்தரிப்போம்
பாவ இருள் அகல தேவ ஒளி அடைந்தோம்.

2. அவரை நோக்கிக் கூப்பிடும் வேளை அறிவிப்பாரே அற்புதங்கள்
எனக்கெட்டாத அறிந்திடலாகா எத்தனையோ பதிலளித்தார். – தேவ

3. பதறிப்போன பாவிகளாக சிதறி எங்குமே அலைந்தோம்
அவரை நாம் தெரிந்தறியோமே அவர் நம்மைத் தெரிந்தெடுத்தார் – தேவ

4. பலத்த ஜாதி ஆயிரமாக படர்ந்து ஓங்கி நாம் வளர
எளிமையும் சிறுமையுமான எமக்கவர் அருள் புரிவார். – தேவ

5. எமது கால்கள் மான்களைப்போல நடந்து ஓடிப் பாய்ந்திடவே
உயர் ஸ்தலத்தில் ஏற்றுகின்றாரே உன்னதமான ஊழியத்தில். – தேவ

6. பரமனேசு வந்திடும் போது பறந்து நாமும் சென்றிடுவோம்
பரமனோடு நீடூழி வாழும் பரம பாக்கியம் பெறுவோம். – தேவ



## பல்லவி

உம்பாதம் பணிந்தேன் எந்நாளும் துதியே
உம்மையன்றி யாரைப் பாடுவேன்—ஏசைய்யா
உந்தன் அன்பு உள்ளம் பொங்குதே.

## சரணங்கள்

1. பரிசுத்தமே பரவசமே பரனேசருளே வரம் பொருளே
தேடினதால் கண்டடைந்தேன்
பாடிட பாடல்கள் ஈந்தளித்தீர். – உம்பாதம்

2. புது எண்ணெயால் புது பெலத்தால்
புதிய கிருபை புது கவியால் நிரப்பி நிதம் நடத்துகின்றீர்
நூதன சாலேமில் சேர்த்திடுவீர். – உம்பாதம்

3. நெருக்கத்திலே உம்மை அழைத்தேன்
நெருங்கி உதவி எனக்களித்தீர் திசை கெட்டெங்கும் அலைந்திடாமல்
தீவிரம் வந்தென்னை தாங்குகின்றீர்.– உம்பாதம்

4. என் முன் செல்லும் உம் சமுகம் எனக்கு அளிக்கும் இளைப்பாறுதல்
உமது கோலும் உம் தடியும் உண்மையாய்
என்னையும் தேற்றிடுதே. – உம்பாதம்

5. என் இதய தெய்வமே நீர் எனது இறைவா! ஆருயிரே
நேசிக்கிறேன் இயேசுவே உம்நேச முகம் என்று கண்டிடுவேன்.
– உம்பாதம்

6. சீருடனே பேருடனே சிறந்து ஜொலிக்கும்
கொடு முடியில் சீக்கிரமாய்ச் சேர்த்திடுவீர்
சீயோனை வாஞ்சித்து நாடுகிறேன்.– உம்பாதம்

**_பல்லவி_**

தேவ தேவனை ஏகமாய் நாம் பாடிப் போற்றிடுவோம்
இயேசுவின் நாமத்தினால் பாவ ரோக சாபம் நீங்கவே
விடுதலையும் அடைந்தோம் என்றென்றுமாய்.

**_சரணங்கள்_**

1. உலகம் தரக்கூடா சமாதானமும் சந்தோஷமும் தந்தார்
இயேசு ராஜன் மண்ணுலகில் ஜீவித்தாலும் விண்ணுலகின்பத்தை
அனுபவிக்க இந்த நற்பாக்கியம் ஈந்தாரே.– தேவ

2. துன்பமோ துக்கமோ தொல்லைகளோ தொடர்ந்து வந்தாலும்

திகிலடையோம் சீயோனின் அரண்களைப் போல்
அசையாது நாம் வாழ்ந்திடுவோம் சேனையதிபன் நம்மோடிருக்க.
– தேவ

3. எரிகோவைப் போல் பல எதிர்ப்புகளும் எழும்பி வந்து நம்மைத்
தடுத்தாலும் முன் வைத்த காலைப் பின் வைப்பீரோ
வாலிபரே இப்போர் முனையில் வல்லமையோடவரைத் துதிப்போம்.
– தேவ

4. சீயோனுக்காய் இதோ சீக்கிரத்தில் ஸ்ரீ யேசு ராஜனும்
தோன்றிடுவார் அல்லேலூயா! ஆர்ப்பரிப்போம்!
ஆனந்த நாள் வேகம் நெருங்கிடுதே ஆயத்தமாய் அவரைச்
சந்திப்போம். – தேவ

**1.** தேவ அன்பின் பெருக்கைப்பார், மேல் வீட்டை ஏசு விட்டார்!
உலகத்திற்கு வர பாதகமுள்ள லோகத்தாரைப்
பாவத்தினின்று மீட்க.

***பல்லவி***

அற்புதமான நேசம்தான் அற்புதமான நேசம்தான்
அவர் அன்பு எனக்கு, தேவகுமாரன் எனக்காய்
உதிரம் சிந்தினார்,தேவகுமாரன் எனக்காய் உதிரம் சிந்தினார்.

**2.** நிந்தை எனக்காய் சகித்தார், பாவங்களெல்லாம் சுமந்தார்
மன்னிக்கும் வண்ணமாக; மன்னிக்கும் வண்ணமாக
தேவ கோபம், பாவம், பயம் யாவற்றினின்றும் மீட்க. – அற்புத

**3.** பிசாசின் தலை நசுங்கிட, சாவின் கூர் ஒடிந்திட
என் நேசர் மரித்தார், என் நேசர் மரித்தார்,
பரிசுத்தமாய் வசிக்க இரட்சிப்பைத் திறந்தார். – அற்புத

1. வானமும் பூமியும் சமஸ்த அண்டமும் படைத்த நீர்,
வேதத்தின் ஒளியைப் பரப்பி, இருளை அகற்றி செங்கோலை
செலுத்துவீர்.

2. மீட்பை உண்டாக்கவும், மாந்தரைக் காக்கவும் பிறந்த நீர்
பாவத்தை அழித்து, சாத்தானை மிதித்து, யாரையும் இரட்சித்து
நடத்துவீர்.

3. பாவியின் நெஞ்சத்தை திருப்பி ஜீவனை
கொடுக்கும் நீர். சபையை முழுவதும், திருத்தித்
தேற்றவும், ஏகமாய் சேர்க்கவும் அருளுவீர்.

4. கருணை, சத்தியம், தயவு, இரக்கம் நிறைந்த நீர்
பாவிக்கு இரட்சிப்பை பேதைக்கு ஞானத்தை
எல்லோருக்கும் ஒளியை கடாட்சிப்பீர்.

5. ஞானம் நிறைந்தவர், அன்பு மிகுந்தவர், திரியேகரே,
இராஜ்ஜியம் வல்லமை, நித்திய மகிமை
உமக்கே உரிமை ஆண்டவரே.

**1.** ஏகோபித்துச் சேருங்களேன் கர்த்தாவில் ஆனந்திக்கவும்
விசாரம் விட்டோயுங்களேன். கெம்பீரித் தாராதிக்கவும்.

***<u>பல்லவி</u>***

செய்வோம்! செய்வோம்! திரியேகரைத் துதி செய்வோம்;
செய்வோம்! செய்வோம்! திரியேகரைத் துதி செய்வோம்!

**2.** பராபரன் மெய் வஸ்துவாம் தயாபரர் ஆண்டவரே
வந்தார் வையகத்திலேயாம், இரட்சிக்க வல்லவரே. – செவோம்

**3.** பிசாசின் உபாயங்களால் பயங்கர மோசமுண்டாம்,
ஆனாலும் தேவாவியினால் ஒத்தாசையும் ஜெயமுமாம். – செய்வோம்!

**4.** தரித்திரமே யாயினும் சந்தோஷம் விடாதிருப்போம்.
மா கல்வி இல்லாவிடினும் ஓயாமலே ஸ்தோத்தரிப்போம். – செய்வோம்!

**5.** ஏகோபித்துப் பாடுங்களேன் மகோற்ச வானந்தத்தினால்,
திரியேகரைப் போற்றுங்களேன் கெம்பீர சங்கீதத்தினால். – செய்வோம்!

**1.** மெய் தேவனைத் துதி; பெரு நன்மை செய்தார்
குமாரனைத் தந்துன்னையே நேசித்தார்.உன் பாவத்துக்காய்
இயேசுவே மரித்தார், நீ மோட்சத்தில் சேர ஆருயிர் தந்தார்.

***<u>பல்லவி</u>***

போற்றுவோம்! போற்றுவோம்! ஜீவநாயகரை
நம்புவோம்! நம்புவோம்! லோக இரட்சகரை,
மீட்பரின் மூலம் பிதாவின் சந்நிதி வந்து துதிப்போம், மா
நன்மை செய்தார்!

**2.** சம்பூரண மீட்பைச் சம்பாதித்தனர். நல்லாசை உள்ளோர்க்கு
ஈவேன் என்றனர்; எப்பாவியானாலும் விஸ்வாசம் வைத்தால்
அந்நேரமே மன்னிப்புண்டாம் இயேசுவால். – போற்று

**3.** பேரன்பின் சொரூபி மெய் தாசருக்கே ஒப்பற்ற சந்தோஷத்தை
அளித்தீரே ஆனாலும் பேரின்பத்திற் சேரும் போதோ
உண்டாகும் மகிழ்ச்சிக்கு வரம்புண்டோ ? போற்று

பல்லவி

தேவாதி தேவனைத் துதித்திடுவோம்
மூவரவரடியைப் பணிந்திடுவோம்.

***__அனுபல்லவி__***

ஜீவதயாளனைப் போற்றிடுவோம்
பாவப் பரிகாரியைப் பாடிடுவோம்.

***__சரணங்கள்__***

1. உன்னதர் போற்றிடும் உயர் உம்பரன் உதித்தார் உருவாய்
மரியிடமாய், இந்நிலம் இறங்கி இருளகற்றி
இனிதாய் இகபர சுகம் நல்கினார் – தேவாதி

2. சாபம் நிறைந்த நம் பாவம் தீர்க்க தேவாட்டுக் குட்டியாய்ப் பாடுபட
ஆவலாய், ஆ! நல்ல ஆயனுமாய்
ஆவியைத் தாவியே கொடுக்கவல்ல. – தேவாதி

3. ஆத்துமத்தைக் கழுவி மீட்டாரே! காத்துக்கொள்ளும்
வரத்தை ஈந்தாரே சாத்தானை ஜெயிக்க
பெலன் தந்தாரே, நேர்த்தியான பங்கை ஈந்தாரே. – தேவாதி

4. வானத்திருந்தவர் மீண்டும் வாரார், ஞானமா யுலகத்தை நியாயந்
தீர்க்க; ஆனதால் ஆயத்தம் விழித்திருப்போம்
ஞானக் கன்னியரைப் போலிருப்போம். –தேவாதி

5. நானவர் சாயலை அணிந்திடவே வானவரென் சாயலை அணிந்தார்;
நானவர் அடியான் தணிந்திடவே நாதன் இயேசு நரனை அணிந்தார்.
– தேவாதி

6. அல்லேலூயா பாடி அகமகிழ்வோம் அறைகூவி, அவரை அறிவிப்போம்
வல்ல பிதாவையே வாழ்த்துவோம் நல்ல ஆவியையுமே
நாடுவோம். – தேவாதி

பல்லவி

தேவனை உயர்த்தி துதியுங்கள்—அவர் நாமத்தைப் போற்றியே!

***அனுபல்லவி***

தேவனின் செயல் அதிசயமென்று, அதிசய மென்று சொல்லி – தேவனை

***சரணங்கள்***

1. கொடியவரின் சீறல் கடுமையாய் வரினும்
திட ப் பெலனும் ஏழைக் கடைக்கலமுமானார்,
பாடும் பலவந்தர் ஆரவாரமென்றும்— ஆரவார மென்றுமே. —தேவனை

2. இவரே நம் தேவன், இவர் நம்மை இரட்சித்தார்
இவரின் இரட்சிப்பினால் களிகூர்ந்திடுவோம்! இவர் பகைவரை
வென்று கீழ்ப்படுத்திவென்று கீழ்ப்படுத்தினார். —தேவனை

3. கர்த்தரையே நம்பி சத்தியம் கைக்கொண்ட உத்தம ஜாதியே,
உட்பிரவேசியுங்கள் பக்தருக்கென்று பலத்த நகரம்—
பலத்த நகரம் உண்டு. —தேவனை

4. அந்நியர் ஆள்வதில்லை இந்நிலம் தன்னில்தாமே
மன்னாதி மன்னனேசு மகிபனாயிருப்பார்! பன்னரும் தேவ
சமாதானம் தங்கும்— சமாதானம் தங்கிடுமே. – தேவனை

5. புனிதராய் மரித்தோர் பூரித் தெழும்புவார் பனிபோல் கிருபையை
பக்தரின்மேல் பொழிவார் இனி உலகத்தில் இன்னல்
பெருகிடும்— இன்னல் பெருகிடுமே. —தேவனை

6. மறைவிடமும் உண்டு மன்னனின் ஜனத்திற்கு குறை விசாரிக்கும்
கோபத்தின் நாளிலே அறைக்குள் மறைந்து ஆனந்திக்கும் சபை—
ஆனந்திக்கும் சபையே. —தேவனை

7. சிறந்த விருந்தொன்று சீயோன் மலையின் மீது அருந்த யாவர்க்கும்
ஆயத்தமாக்குவார் நிந்தையை நீக்கி கண்ணீரைத் துடைத்து
கண்ணீரைத் துடைத்திடுவார்.—தேவனை

## பல்லவி

எந்நாளுமே துதிப்பாய் – என்னாத்துமாவே, நீ
எந்நாளுமே துதிப்பாய்!

## அனுபல்லவி

இந்நாள் வரையிலே உன்னதனார் செய்த
எண்ணில்லா நன்மைகள் யாவு மறவாது, –எந்நா

## சரணங்கள்

1. பாவங்கள் எத்தனையோ,– நினையா திருந்தாருன்
பாவங்கள் எத்தனையோ ? பாழான நோயை அகற்றிக் குணமாக்கிப்
பாரினில் வைத்த மகா தயவை எண்ணி, – எந்நா

2. எத்தனையோ கிருபை,– உன்னுயிர்க்குச் செய்தாரே,
எத்தனையோ கிருபை! நித்தமுனைமுடி சூட்டினது மன்றி
செத்திடாதபடி ஜீவனை மீட்டதால். – எந்நா

3. நன்மையாலுன் வாயைநிறைத் தாரே, பூர்த்தியாய்
நன்மையாலுன் வாயை; உன் வயது கழுகைப்போல்
பலங்கொண்டு, இன்னும் இளமைபோ லாகவே செய்ததால். – எந்நா

4. பூமிக்கும் வானத்துக்கும்– உள்ள தூரம் போலவே, பூமிக்கும்
வானத்துக்கும், தேவ பயமுள்ளவர் மேல் அவர் அருள்
சாலவும் தங்குமே, சத்திய மேயிது. – எந்நா

5. மன்னிப்பு மாட்சிமையாம்– மாதேவனருளும்
மன்னிப்பு மாட்சிமையாம்; எண்ணுவாயோ கிழக்கும்
மேற்கும் தூரமே ? மண்ணில் உன் பாவம் அகன்றதத்தூரமே.– எந்நா

**பல்லவி**

ஆத்துமமே என் முழு உள்ளமே,–உன்
ஆண்டவரைத் தொழுதேத்து;– இந்நாள் வரை
அன்பு வைத் தாதரித்த–உன் ஆண்டவரைத் தொழுதேத்து

**சரணங்கள்**

**1.** போற்றிடும் வானோர், பூதலத்துள்ளோர்
சாற்றுதற் கரிய தன்மையுள்ள – ஆத்

**2.** தலை முறை தலை முறை தாங்கும் விநோத
உலக முன்தோன்றி ஒழியாத – ஆத்

**3.** தினம் தினம் உலகில் நீ செய் பலவான
வினை பொறுத் தருளும், மேலான – ஆத்

**4.** வாதை, நோய் துன்பம் மாற்றி அனந்த
ஓதரும் தயை செய் துயிர் தந்த – ஆத்

**5.** உற்றுனக் கிரங்கி உரிமை பாராட்டும்,
முற்றும் கிருபையினால் முடி சூட்டும் – ஆத்

**6.** துதி மிகுந்தேற ஸ்தோத்தரி தினமே இதயமே,
உள்ளமே, என் மனமே. – ஆத்

**1.** அல்லேலூயா கர்த்தரையே ஏகமாய்த் துதியுங்கள்
அவர் நடத்தும் செயல் களெல்லாம் பார்த்தோரே துதியுங்கள்
வல்லமையாய் கிரியை செய்யும் வல்லோரைத் துதியுங்கள்
எல்லோரையும் ஏற்றுக் கொள்ளும் ஏசுவைத்துதியுங்கள்.

***பல்லவி***

இராஜாதி இராஜனாம் இயேசுராஜன்
பூமியில் ஆட்சி செய்வார் அல்லேலூயா அல்லேலூயா
தேவனைத் துதியுங்கள்.

**2.** தம்புரோடும் வீணையோடும் கர்த்தரைத் துதியுங்கள்
இரத்தத்தினால் பாவங்களைப் போக்கினார் துதியுங்கள்
எக்காளமும் கைத்தாளமும் முழங்கிடத் துதியுங்கள்
எக்காலமும் மாறாதவர் இயேசுவைத் துதியுங்கள். – இரா

**3.** சூரியனே சந்திரனே தேவனைத் துதியுங்கள்
ஒளியதனை எங்கள் உள்ளம் அளித்தோரைத் துதியுங்கள்
அக்கினியே கல்மழையே படைத்தோரைத் துதியுங்கள்
அக்கினியாய் கல்மனதை உடைப்போரைத் துதியுங்கள். – இரா

**4.** பிள்ளைகளே வாலிபரே தேவனைத் துதியுங்கள்
வாழ்வதனை அவர் பணிக்கே கொடுத்து நீர் துதியுங்கள்
பெரியவரே பிரபுக்களே தேவனைத் துதியுங்கள்
செல்வங்களை இயேசுவுக்காய் செலுத்தியே துதியுங்கள். – இரா

**5.** ஆழ்கடலே சமுத்திரமே தேவனைத் துதியுங்கள்
அலை அலையாய் ஊழியர்கள் எழும்பினார் துதியுங்கள்
தூதர்களே முன்னோடிகளே தேவனைத் துதியுங்கள்
பரலோகத்தை பரிசுத்தர்கள் நிரப்புவார் துதியுங்கள். – இரா

# 172

## *பல்லவி*

நன்றியால் பாடிடுவோம் (2)
நல்லவர் இயேசு நல்கிய எல்லா நன்மைகளை நினைத்தே.

1. செங்கடல்தனை நடுவாய்ப் பிரித்த எங்கள் தேவனின் கரமே
தாங்கியதே இந்நாள் வரையும் தயவாய் மா தயவாய். –நன்றி

2. உயிர்ப்பித்தே உயர்த்தினார் உன்னதம்வரை
உடன் சுதந்தரராய் இருக்க கிருபையின் மகா
தானமது வரும் காலங்களில் விளங்க – நன்றி

3. ஜீவனை தியாகமாய் வைத்த பலர் கடும் சேவையில் மரித்தார்
சேர்ந்து வந்து சேவை புரிந்து சோர்ந்திடாது நிற்போம். – நன்றி

4. மித்ருக்களான பலர் நன்றியிழந்தே
சத்துருக்களாயினாரே சத்தியத்தைச் சார்ந்து தேவ
சித்தம் செய்திடுவோம். – நன்றி

5. சீயோனைப் பணிந்துமே கிறிஸ்தேசு ராஜனாய்
சீக்கிரம் வருவார் சிந்தை வைப்போம் சந்திக்கவே
சுந்தரன் முகமே. – நன்றி

அடைக்கலமே உமதடிமை நானே ஆர்ப்பரிப்பேனே அக மகிழ்ந்தே
கர்த்தர் நீர் செய்தநன்மைகளையே நித்தம் நினைத்து துதிப்பேனே

1. அளவற்ற அன்பினால் அணைத்தவரே
எண்ணற்ற நன்மையால் நிறைத்தவரே
மாசில்லாத நேசரே மகிமைப் பிரதாபா
பாசத்தால் உம்பாதம் பற்றிடுவேனே ஆ...—அடைக்

2. என்னை என்றும் போதித்து நடத்துபவரே
கண்ணை வைத்து ஆலோசனை சொல்லுபவரே
நடக்கும் வழிதனைக் காட்டுபவரே
நம்பி வந்தோனை கிருபை சூழ்ந்து கொள்ளுதே ஆ...—அடைக்

3. கரம் பற்றி நடத்தும் கர்த்தர் நீரல்லோ கூப்பிட்ட என்னை
குணமாக்கினீரல்லோ குழியில் விழாதபடி காத்துக் கொண்டீரே
அழுகையைக் களிப்பாக மாற்றி விட்டீரே ஆ...—அடைக்

4. பாவங்களை மன்னித்தென்னை பற்றிக் கொண்டீரே
சாபங்களை நீக்கி சுத்த உள்ளம் தந்தீரே
இரட்சண்யத்தின் சந்தோஷத்தை நீரே தந்தீரே
உற்சாக ஆவி என்னைத் தாங்கச் செய்தீரே ஆ...—அடைக்

தூய தேவனைத் துதித்திடுவோம் நேயமாய் நம்மை நடத்தினாரே
ஓயாப் புகழுடன் கீதம் பாடி தினம்
போற்றியே பணிந்திடுவோம் – அல்லேலூயா

1. கடந்திட்ட நாட்களில் அவர் கரங்கள் கனிவுடன் நம்மை
அரவணைத்தே நம் கால்களைக் கன்மலையின் மேல்
நிறுத்தியே நிதம் நம்மை வழிநடத்தும் – தூய

2. யோர்தானைப்போல் வந்த துன்பங்களை
இயேசுவின் பலங் கொண்டு கடந்து வந்தோம்
அவர் கரத்தைப் பிடித்துக் கொண்டே
பரிசுத்த பாதையில் நடந்திடுவோம். – தூய

3. நலமுடன் நம்மை இது வரையும் கர்த்தரின் அருள் என்றும்
நிறுத்தியதே கண்மணிபோல் கடைசி வரை
காத்திடும் கர்த்தரைப் போற்றிடுவோம். – தூய

இயேசுவே உம் பாதம் பணிகிறேன் (3 முறை)

***<u>சரணங்கள்</u>***

1. ஒப்பற்ற அன்பினாலே எம்பரா என்னையும் நீர்
உம்மகனாக்கவே தீமைகள் நீக்கவே விண் மகிமை வெறுத்தீர்
அல்லேலூயா ஆமென், ஆ அல்லேலூயா! – இயேசு

2. அன்பெனும் ஆழி தன்னில் மூழ்கி நான் இன்று மண்ணில்
துன்பம் குறைந்தோனாய் இன்பம் நிறைந்தோனாய்
வாழ்கின்றேன் ஆனந்தமாய்
அல்லேலூயா ஆமென், ஆ அல்லேலூயா! – இயேசு

3. நான் இனி என்றும் நாதா உந்தனின் சொந்தமானேன்
என்னை இவ்வன்பின் உறவை விட்டொன்றுமே என்றும் பிரித்திடாதே
அல்லேலூயா ஆமென், ஆ அல்லேலூயா! – இயேசு

4. வானங்கள் வெந்துருகும் தாரகங்கள் மறையும்
அன்று நான் இயேசுவின் அன்பின் கரங்களில் ஆனந்தமாய் இருப்பேன்
அல்லேலூயா ஆமென், ஆ அல்லேலூயா! – இயேசு

**1.** எந்தன் உள்ளம் புது கவியாலே பொங்க
இயேசுவைப் பாடிடுவேன் அவர் நாமம் ஊற்றுண்ட
பரிமள தைலம் அவரையே நேசிக்கிறேன்.

***<u>பல்லவி</u>***

அல்லேலூயா துதி அல்லேலூயா—எந்தன்
அண்ணலாம் இயேசுவைப் பாடிடுவேன்
இத்தனை கிருபைகள் நித்தமும் அருளிய கர்த்தரைக் கொண்டாடுவேன்.

**2.** சென்ற காலம் முழுவதும் காத்தாரே ஓர்
சேதமும் அணுகாமல் சொந்தமாக ஆசீர்
பொழிந்தெனக்கின்று சுகபெலன் அளித்தாரே. —அல்லேலூயா

**3.** சில வேளை இமைப்பொழுதே தம் முகத்தை
சிருஷ்டிகர் மறைத்தாரே கடுங்கோபம் நீங்கித்
திரும்பவும் என்மேல் கிருபையும் பொழிந்தாரே. — அல்லேலூயா

**4.** பஞ்ச காலம் பெருகிட நேர்ந்தாலும்—தாம்
தஞ்சமே ஆனாரே அங்கும் இங்கும் நோய்கள்
பரவி வந்தாலும் அடைக்கலம் அளித்தாரே. —அல்லேலூயா

**5.** களிப்போடு விரைந்தெம்மைச் சேர்த்திட—என்
கர்த்தரே வருவாரே ஆவலோடு நாமும்
வானத்தை நோக்கி அனுதினம் காத்திருப்போம். — அல்லேலூயா

1. ஆனந்தமாய் நாமே ஆர்ப்பரிப்போமே
அருமையாய் இயேசு நமக்களித்த அளவில்லா கிருபை
பெரிதல்லவோ அனுதின ஜீவியத்தில்!

***<u>பல்லவி</u>***

ஆத்துமமே என் முழு உள்ளமே உன் அற்புத தேவனையே
ஸ்தோத்தரி பொங்கிடுதே என் உள்ளத்திலே பேரன்பின் பெரு
வெள்ளமே!!

2. கருணையாய் இதுவரை கைவிடாமலே
கண் மணிபோல் எமைக் காத்தாரே
கவலைகள் நீக்கி கண்ணீர் துடைத்தார்
கருத்துடன் பாடிடுவோம்!! – ஆத்துமமே

3. படகிலே படுத்து உறங்கினாலும் கடும்புயல் அடித்து
கவிழ்த்தினாலும் கடலையும் காற்றையும்
அமர்த்தி யெம்மை காப்பாரே அல்லேலூயா!! – ஆத்துமமே

4. யோர்தானைக் கடப்போம் அவர் பெலத்தால்
எரிகோவைத் தகர்ப்போம் அவர் துதியால்
இயேசுவின் நாமத்தில் ஜெயம் எடுத்தே
என்றென்றுமாய் வாழுவோம்!! – ஆத்துமமே

5. பரிசுத்த வான்களின் பாடுகளெல்லாம்
அதி சீக்கிரமாய் முடிகிறதே விழிப்புடன் கூடி
தரித்திருப்போம் விரைந்தவர் வந்திடுவார்!! – ஆத்துமமே

## *பல்லவி*

காலையும், மாலை, எவ்வேளையும் கர்த்தரைக்
கருத்துடன் பாடிடுவேன்,

## *அனுபல்லவி*

பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என தூதர்
பாடிடும் தொனி கேட்குதே!!

## சரணங்கள்

1. கர்த்தர் என் வெளிச்சம் ஜீவனின் பெலனும்
கிருபையாய் இரட்சிப்புமானார் அஞ்சிடாமல் கலங்காமல்
பயமின்றி திகிலின்றி அனுதினம் வாழ்ந்திடுவேன். – காலை

2. எனக் கெதிராய் ஓர் பாளய மிறங்கி என்மேல் ஓர் யுத்தம் வந்தாலும்,
பயப்படேன் எதிராளி நிமித்தமாய் செவ்வையான
பாதையில் நடத்திடுவார்.– காலை

3. ஒன்றை நான் கேட்டேன் அதையே நாடுவேன்
என்றும் தம் மகிமையைக் காணஜீவனுள்ள நாளெல்லாம் தம்
ஆலயத்தில் தங்குவதை வாஞ்சித்து நாடிடுவேன். – காலை

4. தகப்பனும் தாயும் கைவிட்டாலும் என்
கர்த்தர் என்னைச் சேர்த்துக் கொள்வார் எந்தன் உள்ளம் ஸ்திரமாகத்
திடமாகக் கர்த்தருக்கே என்றென்றும் காத்திருக்கும். – காலை

5. எனக்காக யாவும் செய்து முடிப்பார்
என் கர்த்தர் வாக்கு மாறிடார்; தமக்கென்றும் பயந்திடும்
பக்தர் யாவர் விருப்பமும் தவறாமல் நிறைவேற்றுவார்.–காலை

## பல்லவி

போற்றுவோமே– போற்றுவோமே நம் தேவரீரை,
இவ்வேளையிலே – நன்றியுடனே

## சரணங்கள்

1. துங்கன் இயேசுவே, தூயா உமக்கே துதிகள் சாற்றிடுவேன்;
மங்கா புகழும் மகிழ்ந்து போற்றி எங்கும் துதித்திடுவேன்,
கங்குல் அற, எங்குமே ஒளி மங்கிடாமலே தங்கிட வேணும் – போற்று

2. ஆழ்ந்த சேற்றினில் அமிழ்ந்த என்னையே
அணைத்து எடுத்தோனே! ஆழி தன்னி லெம் பாவம் எறிந்த
அன்னை உத்தமனே! அன்றும், இன்றும் என்றும் துதிப்பேன்
மன்னவனையே, மண்ணதினிலே. – போற்று

3. பாவம் போக்கியே கோபம் மாற்றியே
ரோகம் தொலைத்தோனே துரோகி என்னையே சுத்திகரித்த
தூய வேந்தனே! தூயா நேயா, காயம் மாற்றியே
கருணாநிதியே பரிகாரியே – போற்று

4. பாரில் என்னையே பிரித்தெடுத்தோனே!
தாவி வந்தோனே! அக மதினிலே ஆவி ஈந்திட
அருள் நிறைந்தவனே; தரிசனம் தந்த தேவனே
பரிசுத்தமாய் பாரில் ஜீவிக்க – போற்று

5. பூரணராகவே பூவில் வாழ்ந்திட கிருபை அளித்தோனே
புகழை விரும்பேன் மகிழ்வேன் தினமே,
மகிமை செலுத்திடுவேன்; கோனே !தேனே! கோதில்லாதோனே!
கானம் பாடியே துதித்திடுவேன். – போற்று

1. போற்றித் துதிப்போம் எம் தேவ தேவனை
புதிய கிருபையுடனே. நேற்றும் இன்றும் என்றும் மாறா
இயேசுவை நாம் என்றும் பாடித் துதிப்போம்.

***<u>பல்லவி</u>***

இயேசு என்னும் நாமமே—என் ஆத்துமாவின் கீதமே
என் நேசரேசுவை—நான் என்றும் ஏற்றி மகிழ்ந்திடுவேன்.

2. கோர பயங்கரமான புயலில், கொடிய அலையின் மத்தியில்,
காக்கும் கரம் கொண்டு மார்பில் சேர்த்தணைத்த
அன்பை என்றும் பாடுவேன். – இயேசு

3. யோர்தான் நதி போன்ற சோதனையிலும்
சோர்ந் தமிழ்ந்து மாளாதே,
ஆர்ப்பின் ஜெய தொனியோடே பாதுகாத்த
அன்பை என்றும் பாடுவேன். – இயேசு

4. தாய் தன் பாலகனையே மறப்பினும்,
நான் மறவேன் என்று சொன்னதால்
தாழ்த்தி என்னையவர் கையில் ஈந்து,
ஜீவ பாதை என்றும் ஓடுவேன். – இயேசு

5. பூமி யகிலமும் சாட்சியாகவே போங்களென்ற கட்டளையதால்
ஆவி, ஆத்துமாவும், தேகம் யாவுமின்று
ஈந்து தொண்டு செய்குவேன். – இயேசு

1. உன்னத தேவனுக்கே மகிமை உலகில் சமாதானமாமே
காரிருள் நீக்கிட குவலய மீதிலே பேரொளியாய் ஜெனித்தார்.

***<u>பல்லவி</u>***

அல்லேலூயா, அல்லேலூயா! அல்லேலூயா, துதியவர்க்கே!
அல்லேலூயா, துதியவர்க்கே!

2. மானிடர் மேலிவர்க் கன்பிதுவோ மனுக் கோலமாய் மனு வேலனார்
மாட்சிமை யாவையும் துறந்தே இவ்வுலகில்
மாஒளியாய் ஜெனித்தார். – அல்லேலூயா

3. தாரகையென அவர் தோன்றிடவே நேர் பாதையில் நடந்திடவே
தற்பரன் கிருபையும் சத்தியம் ஈந்திட
தண்ணொளியாய் ஜெனித்தார். – அல்லேலூயா

4. வாழ்த்துவோம் பாலகன் இயேசுபரன்
வல்ல தேவனின் ஏகசுதன் வாஞ்சித்தாரே எம்மில் வாசம்
செய்திடவே மெய்யொளியாய் ஜெனித்தார். – அல்லேலூயா

***<u>பல்லவி</u>***

அல்லேலூயா! அல்லேலூயா! அல்பகலாய் நாம்
ஆர்ப்பரிப்போம்.

***<u>சரணங்கள்</u>***

1. ஆதரையில் அவர் பாதைதனில் ஆதரவாய்க் கண்ணோக்கியதால்,
அனுதினமும் பாடிடுவோம் அன்பரின் கிருபையதை
நினைத்தே. –அல்லே

2. அகிலம் தரா சமாதான மருள் அருணோதயம் நம்மை சந்தித்ததால்,
ஆவலுடன் ஸ்தோத்தரிப்போம் ஆருயிர் இயேசுவின் அடி
பணிந்தே. –அல்லே

3. தேவனின் புத்திரராகிடவே தேவன்பை உள்ளத்தில் ஊற்றியதால்
துதித்திடுவோம் தூயவராய் துங்கவன் இயேசுவை நிதம்
நினைத்தே. –அல்லே

4. சோதனை பாடுகள் நிந்தைகளில் சோர்ந்திடா தெமக்கு
பெலமளித்தே. தாங்கினாரே தம் கரத்தால்
தற்பரன் இயேசுவை நிதம் நினைத்தே. –அல்லே

5. வருகையின் நம்பிக்கையால் மகிழ்ந்தே
வாழ்ந்திட எமக்கு கிருபை ஈந்தார், எந்த வேளை வந்திடினும்,
சந்திக்க ஆயத்தமாகிடுவோம். –அல்லே

## 183

**1.** துதித்துப் பாடிட பாத்திரமே துங்கவன் இயேசுவின் நாமமதே,
துதிகளின் மத்தியில் வாசம் செய்யும் தூயனை நேயமாய்
ஸ்தோத்தரிப்போமே.

***<u>பல்லவி</u>***

ஆ ! அற்புதமே அவர் நடத்துதலே, ஆனந்தமே பரமானந்தமே
நன்றியால் உள்ளமே மிகப் பொங்கிடுதே
நாம் அல்லேலூயா துதி சாற்றிடுவோம்.

**2.** கடந்த நாட்களில் கண்மணி போல் கருத்துடன் நம்மைக் காத்தாரே
கர்த்தரையே நம்பி ஜீவித்திட கிருபையும் ஈந்ததால்
ஸ்தோத்தரிப்போமே. –ஆ

**3.** அக்கினி ஊடாய் நடந்தாலும், ஆழியின் தண்ணீரைக்
கடந்தாலும் சோதனையோ மிகப் பெருகினாலும்,
ஜெயம் நமக்கீந்ததால் ஸ்தோத்தரிப்போமே. –ஆ

**4.** இந்த வனாந்திர யாத்திரையில், இன்பராம் இயேசு நம் மோடிருப்பார்
போகையிலும், நம் வருகையிலும் புகலிடமானதால்
ஸ்தோத்தரிப்போமே. –ஆ

**5.** வாஞ்சைகள் தீர்த்திட வந்திடுவார், வாரும் என்றே நாம்
அழைத்திடுவோம்;
வானத்திலே ஒன்று சேர்ந்திடும் நாள் விரைந்து நெருங்கிட,
ஸ்தோத்தரிப்போமே. –ஆ

# 184

***பல்லவி***

கோடா கோடி ஸ்தோத்ரம் ஏறெடுப்போம்
இராஜாதி ராஜன் தேவாதி தேவன்
இயேசு கிறிஸ்துவுக்கே மகிமை

1. பரிசுத்தவான்கள் சபை நடுவே தரிசிக்கும் தேவ சமூகத்திலே
அல்லேலூயா அல்லேலூயா ஆவியில் பாடி மகிழுவோம்
ஆண்டவர் இயேசுவைக் கொண்டாடுவோம். – கோடா

2. கிருபாசனத்தண்டை நெருங்குவோம்
திருரத்தத்தின் கீழே வந்து நிற்போம்
அல்லேலூயா அல்லேலூயா கண்டேன் சகாயம் இரக்கமே
கர்த்தர் கிருபை என்றும் உள்ளதே – கோடா

3. குருவி பறவை வானம்பாடியே கவலையின்றிப் பறந்து பாடுதே
அல்லேலூயா அல்லேலூயா அற்புதமான சிருஷ்டிகரே
அந்த விசுவாசம் கற்றறிந்தோம். – கோடா

4. கவலைப்படாதீர்கள் என்றுரைத்தீர்
காட்டுப் புஷ்பத்தை உடுத்துவித்தீர்
அல்லேலூயா அல்லேலூயா ஆடை ஆகாரம் தேவை எல்லாம்
அன்றன்று தந்தெம்மை ஆதரித்தீர். – கோடா

5. கணக்கில்லா நன்மைகள் கர்த்தர் செய்தீர் கருத்துடன் பாடி நன்றி
கூறுவோம் அல்லேலூயா அல்லேலூயா தேவ குமாரன் வந்திடும் நாள்
தூயர் முகம் கண்டு கெம்பீரிப்போம் – கோடா

1. போற்றிடுவேன் பராபரனைச் சாற்றிடுவேன் சர்வ வல்லவரை
ஸ்தோத்திர பாத்திரன் இயேசுவையே நேத்திரமாய் என்றும் பாடுவேன்.

***பல்லவி***

ஆ ஆர்ப்பரித்தே அக மகிழ்வேன் ஆண்டவர் அன்பதை
எங்கும் கூறுவேன்
கண்மணி போல் கருத்துடனே கைவிடாமல் என்னைக் காத்தனரே. –ஆ

***சரணங்கள்***

2. எத்தனையோ பல நன்மைகள் இத்தனை ஆண்டுகளாய் அளித்தார்
கர்த்தரே நல்லவர் என்பதையே கருத்துடனே ருசித்திடுவேன்.–ஆ

3. பயப்படாதே என்றுரைத்தனரே பரிசுத்த ஆவியானவரே
வெள்ளம்போல் சத்துரு வந்திடினும்
விரைந்தவரே கொடியேற்றினார்.–ஆ

4. பொருத்தனைகள், துதி பலிகள் பணிவுடன் செலுத்தி
ஜெபித்திடுவேன்
ஆபத்துக் காலத்தில் கூப்பிடுவேன் ஆண்டவரே செவி கொடுப்பார். – ஆ

5. நித்தமும் போதித்து நடத்தி நித்திய ஆலோசனை அளிப்பார்
முடிவிலே மகிமையில் சேர்த்திடுவார்
மகிழ்ந்திடுவேன் நித்தியமாய். –ஆ

speakarun@gmail.com

1. ஆட்டுக் குட்டியின் திரு இரத்தத்தினால்
மீட்டுக் கொள்ளப்பட்டவர் யாவருமே,
பாட்டுடன் சேர்ந்து, தேவ சந்நிதியில்,
அல்லேலூயா ஸ்தோத்ரம்! – நாம் பாடிடுவோம்

2. இரத்தத்தினால் தைரியமாய் நமக்கு
பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்க; இரட்சகர் வழியைத் திறந்ததினால்
அல்லேலூயா ஸ்தோத்ரம்! – நாம் பாடிடுவோம்.

3. சாத்தான் மேல் ஜெயமும் திரு இரத்தத்தால்
பாவத்திலிருந்து விடுதலையும், சுத்தாங்கமும் நமக்கு உள்ளதினால்
அல்லேலூயா ஸ்தோத்ரம்; – நாம் பாடிடுவோம்.

4. கேருபின், சேராபீன்கள் போற்றுவோரை பரிசுத்தரை நாமும்
போற்றிடுவோம், சர்வ சிருஷ்டி கர்த்தாவாம்
திரியேகர்க்கு அல்லேலூயா ஸ்தோத்ரம்!– நாம் பாடிடுவோம்.

5. ஆவியின் பிதாவுக்கு மகத்துவம், ஆட்டுக் குட்டியானவர்க்கு
மகத்துவம் ஆட்கொண்ட தேவாவிக்கு மகத்துவம்,
அல்லேலூயா ஸ்தோத்ரம்! – நாம் பாடிடுவோம்.

speakarun@gmail.com

## *பல்லவி*

இதோ மனுஷரின் மத்தியில் தேவாதி தேவனே
வாசஞ் செய்கிறாரே

## *சரணங்கள்*

**1.** தேவன் தாபரிக்கும் ஸ்தலமே தம் ஜனத்தாரின் மத்தியிலாம்
தேவன் தாம் அவர்கள் தேவனாயிருந்தே கண்ணீர் யாவையும்
துடைக்கிறாரே. – இதோ

**2.** தேவ ஆலயமும் அவரே தூய ஒளிவிளக்கும் அவரே
ஜீவனாலே தம் ஜனங்களின் தாகம் தீர்க்கும்
சுத்த ஜீவநதியும் அவரே. – இதோ

**3.** மகிமை நிறை பூரணமே மகா பரிசுத்த ஸ்தல மதுவே
என்றும் துதியுடனே அதன் வாசல் உள்ளே
எங்கள் பாதங்கள் நிற்கிறதே. – இதோ

**1.** சபையின் அஸ்திபாரம் நல் மீட்பர் கிறிஸ்துவே
சபையின் ஜன்மாதாரம் அவரின் வார்த்தையே,
தம் மணவாட்டியாக வந்ததைத் தேடினார்
தமக்குச் சொந்தமாக மரித்ததைக் கொண்டார்.

**2.** எத்தேசத்தார் சேர்ந்தாலும் சபை ஒன்றே ஒன்றாம்
ஒரே விசுவாசத்தாலும் ஒரே இரட்சிப்புண்டாம்,
ஒரே தெய்வீக நாமம் சபையை இணைக்கும்
ஓர் திவ்ய ஞானாகாரம் பக்தரை போஷிக்கும்,

**3.** புறத்தியார் விரோதம் பயத்தை உறுத்தும்
உள்ளானவரின் துரோகம் கிலேசப்படுத்தும்.
பக்தர் ஓயாத சத்தம் ''எம்மட்டும்'' என்பதாம்
இராவில் நிலைத்த துக்கம் காலையில் களிப்பாம்.

**4.** மேலான வான காட்சி கண்டாசீர் வாதத்தை
பெற்று, போர் ஓய்ந்து வெற்றி சிறந்து மாட்சிமை
அடையும் பரியந்தம் இன்னா உழைப்பிலும்
நீங்காத சமாதானம் மெய்ச் சபை வாஞ்சிக்கும்.

என் ஆத்துமா அனுதினம் உம்மைத் தேடும்
என் இயேசுவே அகமகிழ்ந் தும்மைப் பாடும்
துதி செய்தலே ஏற்றதுவே தேன் போல் இனிமை என் நாவினிலே.

***<u>அனுபல்லவி</u>***

கர்த்தாவை மகிமைப் படுத்திடுவேன்
கனியான ஸ்தோத்திர பலிகளால் நாள்தோறும் தேவ நீதியை சொல்லி
நேர்மை மனதோடு வாழ்ந்திடுவேன்.

***<u>சரணங்கள்</u>***

1. எந்தன் துதி தொனியும் முழங்க எரிகோ மதிலும் வீழ்ந்திடுமே
நாலா திசை கேட்க ஸ்தோத்தரிப்பேன்
நல்லவர் எனதாண்டவர் – என் ஆத்துமா

2. என் ஸ்தோத்திரம் கருத்தோடு செய்வேன்
என்னையும் நினைத்தார் என் தாழ்விலே
தன்னைத்தான் தாழ்த்தினால், உயர்த்துவார்
சொன்னவர் என தேசுவே. – என் ஆத்துமா

3. இம்மானுவேல் இதுவே அவர் நாமம்
எம்மோடிருப்பார் எக்காலமும் நித்திய ஜீவனும் சந்தோஷமும்
நல்கிடும் கிறிஸ்தேசுவே – என் ஆத்துமா

4. பூவில் ஜனம் துணிவான பாவம் பல செய்வதினால் தீர்ப்பைப்
பெறும் நியாயாதிபதி ஏசு வருகிறார்
நீதியை நிலை நாட்டுவார் – என் ஆத்துமா

5. அல்லேலூயா பரலோகக் கூட்டம் அல்லும் பகலும் ஓயாமலே
கர்த்தாவின் நாமத்தில் ஆர்ப்பரிப்போம் கிருபை பொழிகின்றதே
– என் ஆத்துமா

## *பல்லவி*

கர்த்தரை நான் எக்காலத்திலுமே கருத்துடனே துதிப்பேன் – அவர்
கண்ணின் மணி போல் காத்ததினாலே கருத்துடனே துதிப்பேன்.

1. ஆண்டவர் பூவில் ஆன்மா மகிழும்
ஆதலால் கலக்கமில்லை–அவர் ஆபத்துக் காலத்தில்
விடுவித்துக் காத்து ஆயுளை நீட்டுகிறார்
என்னோடு கூட கர்த்தர் மகிமையை எல்லாரும்
உயர்த்திடுங்கள்–அவர் எல்லா பயத்துக்கும் நீங்கலாக்கினார்
என் விண்ணப்பம் கேட்டார். – கர்த்தரை

2. இவ்வேழை கூப்பிட்டான் கர்த்தர் அதற்கு
இரக்கமாய் செவிகொடுத்தார் –அவன்
இடுக்கண்களுக்கெல்லாம் நீங்கலாக்கியே
இரட்சிப்பை அருளிச் செய்தார் சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து
பட்டினியாயிருக்கும் –ஆனால் சிறப்பாய் கர்த்தரைத் தேடு பவர்க்கோ
ஒரு நன்மையும் குறையாது. – கர்த்தரை

***பல்லவி***

என் ஆண்டவா எந்நேரமும் உந்தனை துதித்துப் பாடிடுவேன்
என் உள்ளம் பொங்கிப் பாடிடுவேன் உந்தன் துதி என்றும் பாடிடுவேன்.

1. கல்வாரி சிலுவை காட்சிதனை கண்டு என் கல்மனம் உருகி நின்றேன்
பாவம் அற்ற உம் திருமேனியை பாவியாம் எனக்காய் ஈந்தீரே! – என்

2. இரட்சகா என் உள்ளம் ஆட் கொண்டீரே
இரத்தம் சிந்தி என்னை  கழுவிட்டீரே
என் உள்ளில் நீரே நித்தம் வாழ எந்தனை உமக்குத் தத்தம் செய்தேன்.
– என்

3. உத்தம சாட்சியாய் ஜீவிப்பேன் நான்
உந்தன் அன்பை என்றும் கூறிடுவேன் அற்ப பெலவீனம் தாங்கிடுவீர்
ஞானம் பெலன் தந்து காத்திடுவீர். – என்

***பல்லவி***

ஸ்தோத்திரம் துதி பாத்திரா உம்மை
இன்றும் என்றும் துதித்திடுவேன்!

***அனுபல்லவி***

காத்தீரே என்னைக் கருத்தாக வழுவாமல் என்னை உமக்காக,
எடுத்தீர் எனையும் உமக்காக கொடுத்தீர் உம்மையே எனக்காக

***சரணங்கள்***

1. வல்ல வான ஞான வினோதா துதியே துதியே துதித்திடுவேன்;
எல்லாக் குறையும் தீர்த்தீரே தொல்லை யாவும் தொலைத்தீரே.
அல்லல் யாவும் அறுத்தீரே அலையும் எனையும் மீட்டீரே. – ஸ்தோ

2. நம்பினோரைக் காக்கும் தேவா துதியே துதியே துதித்திடுவேன்;
அம்புவியாவும் படைத்தீரே அம்பரா உந்தன் வாக்காலே
எம்பரா எல்லாம் ஈந்தீரே நம்பினோர்க் குந்தன் தயவாலே, – ஸ்தோ

3. கண்ணின் மணி போல் காத்தீரே எம்மைத்
துதியே துதியே துதித்திடுவேன் அண்ணலே உந்தன் அருளாலே
அடியாரைக் கண் பார்த்தீரே! மன்னா எமக்கும் நீர் தானே
எந்நாளும் எங்கள் துணை நீரே. – ஸ்தோ

4. அல்லேலூயா தோத்திரமே துதியே துதியே துதித்திடுவேன்
அகில சிருஷ்டிகளும் துதிக்க அடிமை துதியாதிருப்பேனோ ?
அல்லும் பகலும் நித்தியமாய் அன்பே உம்மையே
துதித்திடுவேன். – ஸ்தோ

சந்தோஷம் பொங்குதே (2) சந்தோஷம் என்னில்
பொங்குதே அல்லேலூயா இயேசு என்னை இரட்சித்தார்
முற்றும் என்னை மாற்றினார் சந்தோஷம் பொங்கிப் பொங்குதே.

1. வழி தப்பி நான் திரிந்தேன்—பாவப் பழியதை சுமந்தலைந்தேன்
அவர் அன்பு குரலே அழைத்தது எனையே
அந்த இன்ப நாளில் எந்தன் பாவம் நீங்கிற்றே. – சந்தோ

2. சத்துரு சோதித்திட—தேவ உத்திரவுடன் வருவான்
ஆனால் இயேசு கைவிடார் தானாய் வந்து இரட்சிப்பார்
இந்த நல்ல இயேசு எந்தன் சொந்தமானாரே. – சந்தோ

3. பாவத்தில் ஜீவிப்பவர் பாதாளத்தில் அழிந்திடுவார்
நானோ பரலோகத்தில் நாளும் பாடல் பாடிடுவேன்
என்னில் வாழும் இயேசுவோடுஎன்றும் வாழுவேன். – சந்தோ

## பல்லவி

மகிழ்வோம் இயேசுவில் மகிழ்வோம்—பரன்
மகிமையுற்றுமே மகிழ்வோம்.

## அனுபல்லவி

மகிழ்வோம், மகிழ்வோம் மகிழ்வோம்
மகிமையில் மகிழ

## சரணங்கள்

1. வானில் யாவரும் மகிழ இயேசு வாரும் என்றுமே பகர,
மாறுவோர்க்கொரு சிகரம்— மன தாரத் தற்பரனருள.
மகிமை கனமும் மகிமையில் மிகவும் மகிழ. – மகிழ்

2. சுத்த ஜீவியமுடைய—தேவ புத்திரர் துலங்கிடவே,
சர்வ சிருஷ்டிகளுடைய—மா கர்மங்களகன்றகல
மகிழும் தினமும் மகிபரின் தினமும் வரவே. – மகிழ்

3. அடிமையானவர் கூடி—பரன் அளித்த பொன்முடி சூடி
ஆயிரமாண்டுகளாகக்—கடன் மாறியே அரசாள.
மயிலும் குயிலும் ஆடும் புலியுடன் வாழ. – மகிழ்

4. வானம் பூமியுமகல—நவ வானம் பூவுமே நிகல,
சாபம் பாவமும் சகல—கடும் ரோக மோடியே விலக,
சுகமும் ஜெயமும் சகலரும் சுகித்து மகிழ. – மகிழ்

5. பொன்னால் வீதிகளுடைய— அரும் சொல்லால் உரைப்பதற்கரிய,
மின்னும் வச்சிரவொளியே—நரர் கண்டு களித்திடு மருளே
கண்ணீர் கவலையும் நண்ணா நகரினில் மகிழ. – மகிழ்

6. பளிங்குபோல் ஜீவ நதியே இரு கரையும் ஜீவனின் மரமே.
பசியும் தாகமுமில்லையே – அங்கு புசிக்க ஜீவனின் கனியே;
புசிப்போம் ருசிப்போம் இயேசுவில் நித்தியம் மகிழ. – மகிழ்

## 195

***பல்லவி***

என்ன என் ஆனந்தம்! என்ன என் ஆனந்தம்! சொல்லக்கூடாதே!
மன்னன் கிறிஸ்து என் பாவத்தை எல்லாம் மன்னித்து விட்டாரே

***சரணங்கள்***

1. கூடுவோம், யாவரும் பாடுவோம், நன்றாய்
மகிழ் கொண்டாடுவோம்; நாடியே நம்மைத் தேடியே வந்த
நாதனைப் போற்றிடுவோம். – என்ன

2. பாவங்கள், சாபங்கள், கோபங்கள் எல்லாம் பரிகரித்தாரே;
தேவாதி தேவன் என் உள்ளத்தில் வந்து
தேற்றியே விட்டாரே. – என்ன

3. அட்சயன் பட்சமாய் இரட்சிப்பை எங்களுக் கருளினதாலே
நிச்சயம் இயேசுவைப் பற்றியே சாட்சி
பகர வேண்டியதே.– என்ன

4. வெண்ணங்கி பொன்முடி வாத்தியம் மேல்வீட்டில்
ஜெயக் கொடியுடனே, மண்ணுலகில் வந்து
விண்ணுலகம் சென்ற மன்னனைத் தோத்தரிப்போம். – என்ன

1. பார் போற்றும் வேந்தன் இப்பாழ் உள்ளம் வந்தார்
பூரிப்பால் உள்ளம் யாவும் மூடினார் பரிசுத்தவான்களோடு
இணைத்தார் இந்த வாழ்க்கை என்றும் இன்ப வாழ்க்கையே!

***<u>பல்லவி</u>***

அல்லேலூயா கீதம் நான் என்றும் பாடுவேன் ஆர்ப்பரித்து உள்ளம்
மகிழ்ந்து பூரிப்பேன் ஜீவனுள்ள மட்டும் என்றும் கூறுவேன்
அல்லேலூயா! அல்லேலூயா!!

2. பாவமேகம் யாவும் கலைந்து சென்றதே
பரிசுத்த ஜுவாலை கவர்ந்து கொண்டதே
உடல் பொருள் ஆவி ஆன்மா யாவுமே இயேசுவின் சிலுவை
அடிவாரமே! – அல்லே

3. தாழ்மை உள்ளம் கொண்டு பின்செல்வேன் நானே
கந்தல் அல்லவோ என் நற்செயல் எல்லாம்
உள்ளத்தில் கிறிஸ்து வந்து தங்கவே
வல்ல தேவன் காட்டும் சுத்தக்கிருபையே!– அல்லே

4. நாள்தோறும் நாதன் வழியை ஆசிப்பேன் விட்டு வந்த பாவக்
கிடங்கிற்குச் செல்லேன்; என் முன்னே அநேக சுத்தர் செல்கின்றார்
இப்பாதையே என்தன் ஜீவ பாதையே! – அல்லே

1. மகிழ்வோம் மகிழ்வோம் தினம் அகமகிழ்வோம்
இயேசு ராஜன் நம் சொந்தமாயினார்
இந்தப் பார்தலத்தின் சொந்தக்காரர் அவர் எந்தன் உள்ளத்தின்
சொந்தமானார்.

***பல்லவி***

ஆ ! ஆனந்தமே பரமானந்தமே ! இது மாபெரும் பாக்கியமே !
இந்தப் பார்தலத்தின் சொந்தக்காரர் அவர்
எந்தன் உள்ளத்தின் சொந்தமானார். – ஆ

2. சின்னஞ் சிறு வயதில் என்னைக் குறித்து விட்டார்
தூரம் போயினும் கண்டு கொண்டார்
தமது ஜீவனை எனக்கும் அளித்து "ஜீவன் பெற்றுக்கொள்"
என்றுரைத்தார். – ஆ

3. எந்த சூழ்நிலையும் அவர் அன்பினின்று
என்னைப் பிரிக்காது காத்துக் கொள்வார்
என்னை நம்பி அவர் தந்த பொறுப்பதனை
அவர் வரும் வரை காத்துக் கொள்வேன். –ஆ

4. அவர் வரும் நாளினில் எனைக்கரம் அசைத்து
அன்பாய் கூப்பிட்டு சேர்த்துக் கொள்வார்
அவர் சமூகமதில் அங்கே அவருடனே
ஆடிப் பாடியே மகிழ்ந்திடுவேன். – ஆ

1. எந்தன் அன்புள்ள ஆண்டவர் இயேசுவே நான்
உந்தன் நாமத்தைப் போற்றிடுவேன்
உம்மைப்போல் ஒரு தேவனை பூமியில் அறிந்திடேன்,
உயிர்தந்த தெய்வமே நீர்.

*__பல்லவி__*

ஆ ஆனந்தம் ஆனந்தமே அல்லும் பகலிலும் பாடிடுவேன்
இயேசுவே எந்தன் ஆருயிரே.

2. பெற்ற தாயும் என் தந்தையுமானவரே மற்ற எல்லா மெனக்கு நீரே
வானம் பூமியும் யாவுமே மாறிடினும்
நீரோ வாக்கு மாறாதவரே.– ஆ

3. உயர் அடைக்கலத்தில் என்னை வைத்தவரே
உந்தன் நாமத்தைப் போற்றிடுவேன்
உம்மையல்லாதிப் பூமியில் யாரையும் நம்பிடேன்
உயிருள்ள தெய்வமே நீர்.– ஆ

4. பொன் வெள்ளியுமோ பெரும் பேர் புகழோ
பண ஆசையும் வீண் அல்லவோ! பரலோகத்தின் செல்வமே
என் அரும் இயேசுவே போதும் எனக்கு நீரே. – ஆ

5. எந்தன் சிருஷ்டிகரே உம்மை நினைத்திடவே
தந்த வாலிப நாட்களிலே இந்த மாய உலகத்தை
வெறுத்திட அளித்தீரே பரிசுத்த ஜீவியமே. – ஆ

1. சந்தோஷ கீதம் என்னில் பொங்குதே
சர்வ வல்ல இயேசு என்னை நேசித்தார்
பெற்றதாம் நன்மைகள் ஒவ்வொன்றாய் எண்ணியே
பேரன்பு பொங்க என்றும் பாடுவேன்.

***பல்லவி***

ஆர்ப்பரித்து நான் ஆனந்தங்கொள்வேன்
ஆண்டவர் சமூகம் என்னை தேற்றுதே
துன்பங்கள் யாவுமே துரிதமாய் நீங்குதே இன்ப இயேசு நாமத்தில்.

2. பேரின்ப கீதம் என்னில் பொங்குதே
போன நாட்கள் என்னை கர்த்தர் தாங்கினார்
சோதனை சூழ்ந்து என் நம்பிக்கை குன்றினும்
சோர்ந்தழியாமல் என்றும் காத்ததால். – ஆர்ப்ப

3. ஆனந்த கீதம் என்னில் பொங்குதே
ஆரவாரத்தோடு இயேசு தோன்றுவார்
ஆவலாய் விழித்தே ஆவியால் ஜெபித்தே
ஆயத்தமாய் நான் காத்து நிற்பதால். – ஆர்ப்ப

4. சீயோனின் கீதம் என்னில் பொங்குதே
சீக்கிரம் வந்தென்னை சேர்த்துக் கொள்ளுவார்
பொன்முடி வேந்தனாம் எந்தை என் இயேசுவே
பொன் மாளிகை நான் கிட்டிச் சேர்வதால். – ஆர்ப்ப

எந்தன் நாவில் புதுப்பாட்டு எந்தன் இயேசு தருகிறார்
ஆனந்தம் கொள்ளுவேன் அவரை நான் பாடுவேன்
உயிருள்ள நாள் வரையில்அல்லேலூயா (2)

***சரணங்கள்***

1. பாவ இருள் என்னை வந்து சூழ்ந்து கொள்கையில்
தேவனவர் தீபமாய் என்னைத் தேற்றினார். – ஆனந்

2. வாதை நோயும் வந்தபோது வேண்டல் கேட்டிட்டார்
பாதை காட்டி துன்ப மெல்லாம் நீக்கி மீட்டிட்டார். – ஆனந்

3. சேற்றில் வீழ்ந்த என்னையவர் தூக்கியெடுத்தார்
நாற்றமெல்லாம் ஜீவரத்தம் கொண்டு மாற்றினார். – ஆனந்

4. தந்தை தாயும் நண்பருற்றார் யாவுமாகினார்
நிந்தை தாங்கி எங்குமவர் மேன்மை சொல்லுவேன். – ஆனந்

5. இவ்வுலகப்பாடு என்னை என்ன செய்திடும்
அவ்வுலக வாழ்வைக் காண காத்திருக்கிறேன்.– ஆனந்

ஆஹா! என்ன இன்பம் பரலோக இன்பம்
இன்ப இயேசு அளித்தனரே அளவிற்கடங்கா புத்திக்கும் எட்டிடா
அன்பைக் கூற நாவும் போதுமோ ?

***சரணங்கள்***

1. நீச துரோகி என்னை—பாசமாய் ஏற்றீரே நீர்
பாவ உளையினின்றே—தூக்கி எடுத்தீரே நீர். —ஆஹா

2. நாசபுரி நோக்கியே—விரைந்து சென்ற என்னை
பாசம் வைத்தேன் உந்தனில்—என்று கூவி அழைத்தீரே. – ஆஹா

3. நெரிந்த நாணல் என்னை— முறித்திடும் தருணம்
பரிந்துபேசி அன்பால் நிலையாய் நிறுத்தினீரே. —ஆஹா

4. எச்சரிப்பின் சத்தத்தை தள்ளிவிட்ட போதிலும்
அன்பின் சவுக்கடியால்—சேர்த்தன்பாய் ஆதரித்தீர். – ஆஹா

5. காரிருள் சூழும் வேளை—கலங்கித் தவிக்கையில்
காத்துநீர் என்னைத் தேற்றி— கருத்தாய் ஆதரித்தீர். – ஆஹா

6. பிராணநாதா உந்தனைஎன்று நான் கண்டிடுவேன்
ஆருயிர் நேசா உம்மைக்காண ஆசை பொங்குதே. – ஆஹா

7. அழைப்பின் சத்தம் கேட்க—நாட்கள் அதிகமாமோ
நேசர் மார்பில் சாய்ந்திடவாஞ்சை பெருகிடுதே. – ஆஹா

8. ஆகாய மேகந்தனில் சேர்ந்திடும் நேரந்தனில்
ஆனந்தம் ஆனந்தமே என்றென்றும் ஆனந்தமே. —ஆஹா

***பல்லவி***

தேவன் தங்கும் வாசஸ்தலம் துதி ஸ்தோத்ரம் சமாதானம்
தேவ மகிமை நிறைந்ததுவே எனதுள்ளம்
தேவனின் ஆலயமே.

***சரணங்கள்***

1. சத்திய ஆவியானவரே தூய இதயத்தில் வாசம் செய்வார்
ஜெய ஜீவியம் நித்தம் ஓங்கிடுமே சிங்காசனம் பெற்று
வாழ்ந்திடுவோம். – தேவன்

2. சத்துருவை தம் பாதத்தின் கீழ் சீக்கிரம் தாழ்த்திடும் காலம் வரை
வலது பாரிசத்தில் வீற்றிருப்பார்.
வெற்றி அளித்தெம்மை சேர்த்திடுவார். – தேவன்

3. அன்பினிமித்தம் கெம்பீரித்தே ஆண்டவர் நம்முடன்
சந்தோஷித்தே நம் நடுவே தேவன் அமர்ந்திருப்பார்
நம் மனம் பூரித்துப் பாடிடுவோம். – தேவன்

4. அன்பின் குமாரன் இராஜ்ஜியத்தில்
அன்பராம் இயேசுவே ஆண்டிடுவார்
அவருடன் சீயோன் மலை மீதிலே
அற்புதமாய் நம்மை நிறுத்திடுவார். – தேவன்



1. அத்திமரம் துளிர் விடாமற் போனாலும்
திராட்சைச் செடி பழம் கொடாமற் போனாலும்
ஒலிவ மரம் பலன் அற்றுப் போனாலும்
நான் **கர்த்தருக்குள்** மகிழ்ச்சியாய் இருப்பேன்.

2. வயல்களிலே தானியம் இன்றி போனாலும்
மந்தையிலே ஆடுகள் இன்றி போனாலும்
தொழுவத்திலே மாடுகள் இன்றி போனாலும்
நான் **கர்த்தருக்குள்** மகிழ்ச்சியாய் இருப்பேன்.

3. நதிகளிலே தண்ணீர் வற்றி போனாலும்
நாவறண்டு நான் மயங்கி விழுந்தாலும்
உடல் அழிந்து உயிர் பிரிந்து போனாலும்
நான் **கர்த்தருக்குள்** மகிழ்ச்சியாய் இருப்பேன்.



1. துதிப்பேன் இயேசுவின் பாதம் துதிக்கப் பெறும் அற்புதரானதால்
வணங்குவேன், வணங்குவேன் வணங்குவேனவர் பாதம்
வீழ்ந்து நான் – துதி

2. பேயின் தலை மிதித்தவர் நோயின் பெலனழித்தவர்
போற்றுவேன், போற்றுவேன், போற்றுவேனேசு தேவ சுதனை – துதி

3. வானம் பூமியுமடங்க வல்ல அற்புத ரானதால் அற்புதர், அற்புதர்,
அற்புதர் அவர் நாமமே அதைத் – துதி

4. ஜே !ஜே ! ஜெயக்குமாரனும் ஜெயம் பெற்று விளங்கினார்
ஜொலிப்பாரே ஜொலிப்பாரே, ஜொலிப்பாரே அவர் தாசர்
என்றைக்கும் – துதி

5. தூதர் கூட்டங்கள் போற்றும் தூய சுந்தரராமிவர்
மகத்வமே, மகத்வமே, மகத்வமே அவர் ராஜ்ய மென்றைக்கும் – துதி

6. செல்வேன் இயேசுவின் பாதம் சொல்வேன் என் உள்ளத்தின் பாரம்
மகிழுவேன், மகிழுவேன் மகிழுவேன் அவர் வார்த்தையிலென்றும் – துதி

# 205

**1.** நான் பிரமித்து நின்று பேரன்பின் பிரவாகத்தை நோக்கிப் பார்த்தேன்;
என் உள்ளத்தில் மெய்ச் சமாதானம் சம்பூரணமாய் அடைந்தேன்.

***பல்லவி***

மா தூய உதிரத்தால் என் பாவம் நீங்கக் கண்டேன்;
இயேசையரின் இரட்சிப்பினால் நான் ஆறுதல் கண்டடைந்தேன்.

**2.** முன்னாளில் இவ்வாறுதல் காண ஓயாமல் பிரயாசப்பட்டேன்;
வீண் முயற்சி நீங்கினபோதோ என் மீட்பரால் அருள் பெற்றேன். – மா

**3.** தம் கரத்தை என் மீதில் வைத்து நீ சொஸ்தமாவாய் என்றனர்;
நான் அவரின் வஸ்திரம் தொட, ஆரோக்கியம் அருளினார்.– மா

**4.** எந்நேரமும் புண்ணிய நாதர் என் பக்கத்தில் விளங்குவார்;
தம் முகத்தின் அருள் பிரகாசம் என் பேரிலே வீசச் செய்வார். – மா

1. என் பாவந் தீர்ந்த நாளையே அன்போடு எண்ணி ஜீவிப்பேன்,
அந்நாளில் பெற்ற ஈவையே சந்தோஷமாய்க் கொண்டாடுவேன்.

***பல்லவி***

இன்ப நாள்! இன்ப நாள்! என் பாவந் தீர்ந்துபோன நாள்!
பேரன்பர் என்னை இரட்சித்தார் சீராக்கி இன்பம் நல்கினார்
இன்ப நாள்! இன்ப நாள்! என் பாவந் தீர்ந்துபோன நாள்!

2. இம்மானுவேல் இப்பாவியை தம் சொந்தமாக்கிக் கொண்டனர்
சந்தேகம் நீக்கி, மன்னிப்பை தந்தென்னை அன்பாய்ச்
சேர்த்தனர். – இன்ப

3. என் உள்ளமே உன் மீட்பரை என்றைக்குஞ் சார்ந்து வாழுவாய் .
ஆருயிர் தந்த நாதரை ஒர்க்காலும் விட்டு நீங்கிடாய். – இன்ப

4. ஆட்கொண்ட நாதா எந்தனை நாடோறுந் தத்தஞ் செய்குவேன்,
பின் மோட்ச வீட்டில் பேரன்பை இன்னோசையாலே பாடுவேன். – இன்ப

1. எனக்கின்பம் ஏதெனக் கேளு, நான் காரணம் சொல்வேன்
என் பாவம் நீங்கிற்றே; வம்பன் வந்தென்னை நோக்கி
எங்கே நீங்கிற்றென்றால் குருசில் நீங்கிற்றென்பேன்!

***பல்லவி***

அதைக் கல்வாரியின் இரத்தத்தாலே மூடியாச்சுதே
அவை வானம் பூமி தூரம் நீங்கிற்றே!
அன்பர் குருதிக் கடலுள்ளே ஆழ்ந்து போனேனே
ஆமென் சுத்தமானேன்!!

2. அன்றொரு நாளில் இயேசு என் உள்ளத்தில் வந்தார்.
என் பாவம் நீங்கிற்றே, கர்த்தர் ஆட்கொண்டதாலே,
பிசா சோடிப்போனான் அன்றே சுகமானேன்! –அதை

3. சாத்தான் என்னிடம் வந்து சந்தேக மூட்டினால்
ஆமாம், நீங்கிற்றென்பேன்; நீ துன்பத்துள் ஆக்கிட்டாய்
என் இயேசென்னை மீட்டார். நேசர் இன்பம் தந்தார். –அதை

4. எப்போதும் நேசருடன் என் நாளெல்லாம் வாழ்வேன்,
அப்போதென் பாக்கியமாம்; தப்பாது பாட்டுப் பாடி
ஜெபித்துப் போற்றுவேன் ஆஹா பேரின்பமே! –அதை

5. இயேசுக்காய் உழைப்பேன் இராப் பகல் களிப்பேன்,
என் பாவம் நீங்கிற்றே, என் உள்ளம் கீதத்தாலே
நிறைந்து வருதே! அறிவேன் சுத்தமானேன்! – அதை

1. நான் உம்மைப்பற்றி– இரட்சகா! வீண் வெட்கம் அடையேன்;
பேரன்பைக் குறித்தாண்டவா நான் சாட்சி கூறுவேன்.

***பல்லவி***

சிலு வையண்டையில் நம்பி வந்து நிற்கையில்–
பாவ பாரம் நீங்கி வாழ்வடைந்தேன்
எந்த நேரமும் என துள்ளத்திலும்
பேரானந்தம் பொங்கிப் பாடுவேன்.

2. ஆ! உம்தன் நல்ல நாமத்தை நான் நம்பிச் சார்வதால்,
நீர் கைவிடீர்! இவ்வேழையை காப்பீர் தேவாவியால் – சிலுவை

3. மா வல்ல வாக்கின் உண்மையை கண்டுணரச் செய்தீர்;
நான் ஒப்புவித்த பொருளை விடாமல் காக்கிறீர். – சிலுவை

4. நீர் மாட்சியோடு வருவீர் அப்போது களிப்பேன்;
ஓர் வாசஸ்தலங் கொடுப்பீர் மெய் பாக்கியம் அடைவேன். – சிலுவை

**1.** பாவப் பாரம் நீக்கப்பட்டு, சுயாதீனன் நான் சுயாதீனன்;
பாவம் யாவும் நீங்கிப்போக சுயாதீனன் நான் சுயாதீனன்.

***<u>பல்லவி</u>***

அல்லேலூயா இயேசு மாண்டார்
எனக்காகவே மாண்டார்... அல்லேலூயா அல்லேலூயா
சுயாதீனன் நான் சுயாதீனன்.

**2.** பாவ அறிக்கையைச் செய்தேன் சுயாதீனன் நான் சுயாதீனன்;
தேவ பெலன் என்னில் தங்க சுயாதீனன் நான் சுயாதீனன்.– அல்

**3.** பாவக்கட்டு இப்போ யில்லை சுயாதீனன் நான் சுயாதீனன்;
இப்போ பயம் ஒன்றுமில்லை சுயாதீனன் நான் சுயாதீனன்.– அல்

**4.** அவர் ஸ்துதி பாடுவேன் நான் சுயாதீனன் நான் சுயாதீனன்!
அவர் சேவை செய்குவேன் நான் சுயாதீனன் நான் சுயாதீனன்.
– அல்

1. ஓ! அற்புத, அற்புதமான ஓர் நாள்! நான் மறவாத நல் நாள்!
இருளில் நான் அலைந்து போன பின்
இரட்சகரைச் சந்தித்தேன் ஓ! என்ன, மா இரக்கமான கர்த்தர்
என் தேவையைச் சந்தித்தார்; பிசாசை நீக்கி இருளை அகற்றினார்,
இன்பமாய் இதைச் சொல்வேன்.

***பல்லவி***

மோட்ச மிறங்கி மகிமை யால் நிரப்பின!
சிலுவையண்டை இயேசு சுகமாக்கினார்!
இரவைப் பகலாக்கினார்; என் பாவத்தைக் கழுவினார்,
மோட்சமிறங்கி மகிமை யால் நிரப்பின!

2. நான் பிறந்தது தேவ ஆவியால் தெய்வீகக் குடும்பத்தில்,
கல்வாரி அன்பால் நீதிமானானேன் என்ன மேன்மை என் நிலை!
காரியம் விஸ்வாசத்தால் நடந்தன பாவியாய் வந்துபோது
கிருபையாய்க் கொடுத்தார் நான் அதை எடுத்தேன்
என்னை மீட்டார், தோத்திரம். – மோட்ச

3. நிலைக்கும் நம்பிக்கை என்னிலுண்டு
காலமும் கடந்தபின், மோட்சத்தில் என்றென்றுமே
ஜீவிப்பேன் வாசஸ்தலம் அங்குண்டு;
அந்த அற்புத நல்ல நாளில் இயேசுவை விஸ்வாசித்தேன்
நித்திய ஐசுவரியம் மேலான பாக்கியங்கள்
அவர் கையாலே பெற்றேன். – மோட்ச

1. நான் பாவச் சேற்றினிலே வாழ்ந்தேன்
நான் சாபத்திலே மாண்டேன் எண்ணிலடங்கா பாவங்கள் போக்கி
ஏசென்னை மீட்டாரே.

***<u>பல்லவி</u>***

என் நாவிலே புதுப் பாட்டுகள் என்றென்றும் கவி தங்கிடும்
மா சந்தோஷம் மறு பிறப்பீந்து மன இருள் நீக்கினார்.

2. என் ஆத்ம மீட்பை அருமையாய் இயேசாண்டவர் எண்ணினதால்
சொந்த தம் ஜீவனாம் இரத்தம் எனக்காய் சிந்தி இரட்சித்தாரே. – என்

3. கார்மேகம் போல் என் பாவங்கள் கர்த்தர் அகற்றினாரே
மூழ்கியே தள்ளும் சமுத்திர ஆழம் தூக்கி எறிந்தாரே. – என்

4. என் ஜென்ம கரும பாவங்கள் எல்லாம் தொலைத்தாரே
மன்னித்து என்றும் மறந்து விட்டாரே மா பரமானந்தம் – என்

5. இரத்தாம்பரம் போல் சிவப்பான இதய பாவங்களை
பஞ்சையும் போலவே வெண்மையுமாக்கி தஞ்சம் எனக்கீந்தார். – என்

6. மேற்கு திசைக்கும் கிழக்குக்கும் மா எண்ணிலா தூரம்
எந்தன் பாவங்கள் அத்தனை தூரம் இயேசு விலக்கினார் – என்

எனது பாவ பாரமெல்லாம் நீங்கிப் போனதே
ஏழை அடியேன் ஆண்டவர் தம் பிள்ளையானேனே

***<u>சரணங்கள்</u>***

1. சேற்றிலிருந்தென்னை தூக்கி என் கால்களை
பாறைமேல் நிறுத்தினாரே மாற்றினார் என் பயம்
நல்கினார் புத்தம் புதிய சங்கீதங்களை. – எனது

2. மன்னித்தார் மீறுதல் மூடினார் பாவங்கள்.
நீக்கினார் அக்கிரமங்கள் என்னருகில் பெரும்
துன்பத்தின் வேளையில் வந்திடுவார் துணையாய். – எனது

3. காற்றும், புயல்களும், வெள்ளமும் ஏறினால்
இல்லை பயம் இனியும் முற்றுமே மாறாதோரன்பினால்
என்னைத்தம் மார்பினில் சேர்த்திடுவார். – எனது

4. வேதனை ஏறுமே, லோகத்தின் மக்கட்கு
தொல்லை பெருகிடுமே சோதனை வந்தாலும்
தெய்வத்தின் மக்கள் நாம் பாடுவோம் கீதங்களை. – எனது

5. பாடுவோம் பாடுவோம் பக்தரே நித்தமும்
கர்த்தரைத் தேடிடுவோம் பாடுவோம் தோத்திரக்
கீதங்கள் நல் நாமம் போற்றிப் புகழ்ந்திடுவோம். – எனது

6. என் ஆயுள் நாளெல்லாம் அன்பெழும் கர்த்தரை
சேவித்து தீரட்டுமே பின்னே கடைசியில் என்
ஆத்ம நாதனின் வீட்டில் நான் சேரட்டுமே.– எனது

***பல்லவி***

அனாதையாய் அலைந்த என்னை அன்பாய் அழைத்தீரே
ஆதரவின்றி தவித்த என்னை அணைத்து மகிழ்ந்தீரே

***சரணங்கள்***

1. துன்பம் மா துன்பம் பாவ உலகில் நொந்து மனம் நொந்து நான் வருந்தினேன்
தந்து தந்தென்னை மீட்டுக் கொண்டீர்–இன்பம்
உம் சொந்த பிள்ளையாய் ஏற்றுக் கொண்டீர் – அனாதை

2. கல்லான என் உள்ளம் கரைந்தது கல்வாரியின் அன்பை கண்டதுமே
சிந்தும் இரத்தத்தால் புதுப்பித்தீர் என் சற்குருவே என் சரணமே
– அனாதை

3. தீபத்தில் எரியும் திரியைப் போல் தீயவன் என்னையும் மாற்றி விடும்
தாகத்தை தாகத்தை தீர்த்து விடும்–ஆத்ம
என் சற்குருவே எம் சரணமே – அனாதை

# 214

## *பல்லவி*

என் சங்கடங்கள் சகலமும் தீர்ந்து போயின
சங்கார தூதன் என்னை கடந்தேகினான்

## *சரணங்கள்*

1. தேவாட்டுக் குட்டியின் செங்குருதியிலே
மறைந்து நான் இரட்சிக்கப் பட்டிமைப் பொழுதில். – என்

2. பார்வோனுக்கு யான் இனி அடிமையல்ல
பரம சீயோனில் நான் அன்னியனல்ல. – என்

3. வனாந்திரத்தில் தெய்வம் அதிபதியே
தரும் அவர் புதுமன்னா அது போதுமே. – என்

4. மாராவை மதுரமாக்கித் தீர்க்குமவர்
பாறையைப் பிளந்து தாகம் போக்குமவர். – என்

5. மனோகரமான கானான் தேசமே
அதே எனக்கழியாதோர் சுதந்திரமே. – என்

6. ஆனந்தமே பரமானந்தமே கானான் ஜீவியம்
எனக் கானந்தமே. – என்

7. எந்தன் பலமும் எந்தன் சங்கீதமும்
என் ரட்சையும் இயேசு மாத்திரம் அல்லேலூயா. – என்



## *பல்லவி*

எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ,
எவன் பாவம் மூடப்பட்டதோ அவன் பாக்கியவான்.

1. எவன் அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணமாட்டாரோ
ஆவியில் கபடமில்லாதவன் பாக்கியவான். – எவனு

2. நான் அடக்கிவைத்த மட்டும் என் எலும்புகள்.
நித்தம் என் கதறுதலினால் உலர்ந்தது. – எவனு

3. இரவும் பகலும் என்மேல் உந்தன் கை,
பாரமாயிருந்ததாலென் சாரம் போயிற்று. – எவனு

4. என் அக்கிரமத்தை நான் மறைக்காமல்,
என் பாவத்தை உமக்கு அறிவித்தேன். – எவனு

5. கர்த்தருக்கென் மீறுதலை அறிக்கை செய்தேன்,
தேவரீர் என் பாவ தோஷத்தை மன்னித்தீர். – எவனு

6. இதற்காகச் சகாயங் கிடைக்குங் காலத்தில்,
பக்தியுள்ளவன் உமக்கு விண்ணப்பஞ் செய்வான். – எவனு

7. மிகுந்த ஜலப் பிரவாகம் வந்தாலும்,
அப்பொழுதும் அது அவனை யணுகாது. – எவனு

8. எனக்கு நீர் மறைவிடமா யிருக்கிறீர்.
என்னை விலக்கிக்காரும் இக்கட்டுக்கு நீர். – எவனு



1. இரட்சா பெருமானே, பாரும் புண்ய பாதம் அண்டினோம்
சுத்தமாக்கிச் சீரைத் தாரும் தேடிவந்து நிற்கிறோம்.
இயேசு நாதா, இயேசு நாதா, உம்தன் சொந்தமாயினோம்.

2. மேய்ப்பன் போல முந்திச் சென்றும் பாதுகாத்தும் வருவீர்;
ஜீவத்தண்ணீரண்டை என்றும் இளைப்பாறச் செய்குவீர்;
இயேசுநாதா, இயேசு நாதா, மேய்ச்சல் காட்டிப் போஷிப்பீர்.

3. நீதிபாதை தவறாமல் நேசமாய் நடத்துவீர்;
மோசம் பயமுமில்லாமல் தங்கச் செய்து தாங்குவீர்.
இயேசுநாதா இயேசுநாதா, ஒருபோதும் கைவிடீர்.

4. ஜீவகால பரியந்தம் மேய்த்தும் காத்தும் வருவீர்;
பின்பு மோட்ச பேரானந்தம் தந்து வாழச் செய்குவீர்.
இயேசு நாதா, இயேசுநாதா, ஊழிகாலம் வாழ்விப்பீர்.



1. வல்லதேவன் கூறுவித்துச் சொல்லும் வாக்கைக் கேளுமேன்!
'உந்தன்மேல் என் கண்ணை வைத்து என்றும் பாதை காட்டுவேன்'.

## பல்லவி

'உந்தன் மேல் என் கண்ணை வைத்து என்றும் பாதை காட்டுவேன்'.
இன்ப மோட்சம் சேருமட்டும் என்றும் பாதை காட்டுவேன்.

2. ' சாத்தான், மாம்சம் லோகத்தாலும் ஆத்மா சோர்ந்து போவதேன்?
எந்தன் ஆவி வாக்கினாலும் என்றும் பாதை காட்டுவேன்'. – உந்

3. 'துன்பம் துக்கம் நேரிட்டாலும் இன்பமாக மாற்றுவேன்;
என்ன சோதனை வந்தாலும் என்றும் பாதை காட்டுவேன்'. – உந்

4. 'சாவின் பள்ளத்தாக்கிலேயும் ஜீவ ஜோதி வீசுவேன்;
உன்னைச் சேர்த்து விண்ணிலேயும் என்றும் பாதை காட்டுவேன்'. – உந்



1. பாதை காட்டும் மாயெகோவா! பரதேசியான நான்
பலவீனன் அறிவீனன், இவ்வுலகம் காடுதான் வானாகாரம்
தந்து என்னை போஷியும்.

2. ஜீவ தண்ணீர் ஊறும் ஊற்றை நீர் திறந்து தாருமேன்
தீப மேக ஸ்தம்பங் காட்டும் வழியில் நடத்துமேன்;
வல்ல மீட்பர்! என்னைத் தாங்கும் இயேசுவே!

3. சாவின் அந்தகாரம் வந்து என்னை மூடும் நேரத்தில்
சாவின் மேலும் வெற்றி தந்து என்னைச் சேர்க்கும்
மோட்சத்தில் கீத வாழ்த்தல் உமக்கென்றும் பாடுவேன்.



1. என் முன்னே தேவன் போகிறார்;
நல் மேய்ப்பராகக் காக்கிறார்;
ஓர்க்காலும் என்னைக் கைவிடார்;
நேர்பாதை காட்டிப் போகிறார்.

***<u>பல்லவி</u>***

முன் செல்கின்றார்! முன் செல்கின்றார்!
என் முன்னே சென்று போகிறார்!
நல் மேய்ப்பர் சத்தம் அறிவேன்,
அன்போடு பின் சென்றேகுவேன்.

2. கார்மேகம் வந்து மூடினும்,
சீர் ஜோதி தோன்றி வீசினும்,
என் வாழ்வு தாழ்வில் நீங்கிடார்;
என்றைக்கும் முன்னே போகிறார்; – முன்

3. ஒப்பற்ற உம் காருண்யத்தால்
இப்பூமி பாடு தீருங்கால்,
நீர் சாவை வெல்லச் செய்குவீர்;
பேரின்பம் காட்டி முன் செல்வீர். – முன்



1. நீங்காதிரும், என் நேச கர்த்தரே, வெளிச்சம் மங்கி இருட்டாயிற்றே;
மற்றோர் ஒத்தாசை அற்றுப் போயினும் நீர். மெய்ச் சகாயரே, நீங்காதிரும்

2. நீர் மேலே குமிழ்போல் என் ஆயுசும்
இம்மையின் இன்ப வாழ்வும் நீங்கிடும்;
கண்கண்ட யாவும் மாறிப் போயினும்,
மாறாத கர்த்தரே, நீங்காதிரும்.

3. நீர்கூட நின்று தாங்கிவாருமேன்,
அப்போது தீமைக்கு நான் தப்புவேன்;
நீர் என் துணை, என் பாதை காட்டியும்:
என் இன்ப துன்பத்தில் நீங்காதிரும்.

4. நான் அஞ்சிடேன் நீர் கூட தங்கினால்,
என் கிலேசம் மாறும் உம் பிரசன்னத்தால்,
சாவே, எங்கே உன் கூரும் ஜெயமும்!
என்றாரவாரிப்பேன், நீங்காதிரும்.

5. நான் சாகும் அந்தகார நேரமே
நீர் ஒளியாய் விண் காட்சி காட்டுமே;
பேரின்ப ஜோதி வீசச் செய்திடும்.
வாணாள் சாங்காலிலும் நீங்காதிரும்.



# 221

**1.** காரிருளில், என் நேச தீபமே, நடத்துமேன்;
வேறொளியில்லை, வீடும் தூரமே; நடத்துமேன்.
நீர் தாங்கின், தூர காட்சி ஆசியேன்,
ஓர் அடி மட்டும் என்முன் காட்டுமேன்.

**2.** என் இஷ்டப்படி நடந்தேன், ஐயோ முன்னாளிலே
ஒத்தாசை தேடவில்லை; இப்போதோ நடத்துமேன்
உல்லாசம் நாடினேன், திகிலிலும்
வீம்புகொண்டேன், அன்பாக மன்னியும்.

**3.** இம்மட்டும் என்னை ஆசீர்வதித்தீர்; இனிமேலும்
காடாறு சேறு குன்றில் தேவரீர்; நடத்திடும்.
உதயநேரம் வர, களிப்பேன். மறைந்து போன நேசரைக்
காண்பேன்.

1. கைத்தாங்கி வாரும்! ஏழை அடியேனை
உம்மாலேயன்றி நிற்கவே மாட்டேன்.
கைத்தாங்கி வாரும்! என்தன் நேசநாதா;
எத்தீங்குக்கும் அப்போது அஞ்சிடேன்.

2. கைத்தாங்கி வாரும்! அருள் அவதாரி!
மார்போடு அணைத்தன்பு காட்டுவீர்
கைத்தாங்கி வாரும்! பாதை தவறாமல்.
காலூன்றி நிற்கத் திடன் செய்குவீர்.

3. கைத்தாங்கி வாரும்! அருள் ஜோதி வீசி
நான் போகும் பாதை முற்றும் மறையும்
என் பேரில் திருமுகத்தின் பிரகாசம்
ஏறெடுப்பீர் பேரொளி உதிக்கும்.

4. கைத்தாங்கி வாரும்! பூமி இருள் நீக்கி,
பேரின்ப ஜோதி வீச, அடியேன்
இன்னும் உம்மால் கைதாங்கப் பெற்று, நேசா!
விண் வீட்டில் ஏறி, வாழ்வை அடைவேன்.

# 223

## ***பல்லவி***

என்னை மறவா இயேசுநாதா உந்தன் தயவால் என்னை நடத்தும்.

## ***சரணங்கள்***

1. வல்ல ஜீவ வாக்குத்தத்தங்கள் வரைந்தெனக்காய்
ஈந்ததாலே ஸ்தோத்திரம் ஆபத்திலே அரும் துணையே
பாதைக்கு நல்ல தீபமிதே. – என்னை

2. பயப்படாதே வலக்கரத்தாலே பாதுகாப்பேன் என்றதாலே ஸ்தோத்திரம்
பாசம் என்மேல் நீர் வைத்ததினால் பறிக்க இயலா தெவருமென்னை.
– என்னை

3. தாய் தன் சேயை மறந்து விட்டாலும்
மறவேன் உன்னை என்றதாலே ஸ்தோத்திரம் வரைந்தீரே
உம் உள்ளங்கைகளில் வல்லவா எந்தன் புகலிடமே. – என்னை

4. திக்கற்றோராய் கைவிடேனே கலங்கிடீரே என்றதாலே ஸ்தோத்திரம்
நீர் அறியா யாதும் நேரிடா என் தலை முடியும் எண்ணினீரே. – என்னை

5. உன்னைத் தொடுவோன் என் கண்மணியைத்
தொடுவதாக உரைத்ததாலே ஸ்தோத்திரம்
அக்கினியின் மதிலாக அன்பரே என்னைக் காத்திடுமே. – என்னை

6. உனக்கெதிராய் எழும்பும் ஆயுதம் வாய்த்திடாதே என்றதாலே
ஸ்தோத்திரம்
பறந்திடுமே உம் நாமத்திலே பரனே எனக்காய் ஜெயக் கொடியே.
– என்னை

கர்த்தரை நம்பியே ஜீவிப்போம் கவலை கஷ்டங்கள் தீர்ந்திடும்
கைவிடாக் காத்திடும் பரமனின் கரங்களை நாம் பற்றிக் கொள்வோம்.

1. ஜீவ தேவன் பின் செல்லுவோம் ஜீவ வழிதனைக்கண்டடைவோம்
மனதின் காரிருள் நீங்கிடவே மாசமாதானம் தங்கும். – கர்த்தரை

2. நீதிமானின் சிரசினில் நித்திய ஆசீர்வந்திறங்குமே
கிருபை நன்மைகள் தொடருமே கேட்பது கிடைக்குமே. – கர்த்தரை

3. அன்புமிகும் அண்ணலிவர் அருமை இயேசுவை நெருங்குவோம்
தம்மண்டை வந்தோரைத் தள்ளிடாரே தாங்கி அரவணைப்பார்.
– கர்த்தரை

4. உள்ளமதின் பாரமதை ஊக்கமாய் கர்த்தரிடம் சொல்லுவோம்
இக்கட்டு நேரத்தில் கூப்பிடுவோம் இயேசு வந்தாதரிப்பார். – கர்த்தரை

5. இம்மைக்கேற்ற இன்பங்களை நம்மை விட்டே முற்றும் அகற்றுவோம்
மாறாத சந்தோஷம் தேடிடுவோம் மறுமை ராஜ்ஜியத்தில். – கர்த்தரை

# 225

1. அஞ்சாதிரு என் நெஞ்சமே உன் கர்த்தர் துன்ப நாளிலே
கண் பார்ப்போம் என்கிறார்; இக்கட்டில் திகையாதிரு,
தகுந்த துணை உனக்கு தப்பாமற் செய்குவார்.

2. தாவீதும், யோபும், யோசேப்பும் அநேக நீதிமான்களும்,
உன்னிலும் வெகுவாய் கஸ்தி அடைந்தும், பக்தியில்
வேரூன்றி ஏற்ற வேளையில் வாழ்ந்தார்கள் பூர்த்தியாய்.

3. கருத்தாய் தேவ தயவை எப்போதும் நம்பும் பிள்ளையை
சகாயர் மறவார்; மெய்பக்தி உன்னில் வேர் கொண்டால்
இரக்கமான கரத்தால் அணைத்துப் பாலிப்பார்.

4. என் நெஞ்சமே, மகிழ்ந்திரு; பேய், லோகம், துன்பம் உனக்கு
பொல்லாப்புச் செய்யாதே; இம்மானுவேல் உன் கன்மலை,
அவர் மேல் வைத்த நம்பிக்கை அபத்தம் ஆகாதே.

## 226

### ***பல்லவி***

என் நேசரே, நீர் என்னுடையோர், நான் உமதடியான்(ள்)
எப்பொழுதும், நீரே வழியும் சத்தியமும்,
ஜீவனுமா முமக்கே ஸ்தோத்திரம்!

### ***சரணங்கள்***

**1.** ஆபத்துக் காலத்தில் ஆறுதல், அண்டி வருவோர்க்கு அடைக்கலம்,
நீரே என்னை அழிவினின்று – கைதூக்கி இரட்சித்த கோமானே. – என்

**2.** சுற்றிலும் சத்துரு சூழ்ந்திடினும், வியாகுலம் என்னை நெருக்கிடினும்,
நான் எந்தன் நேசரை மறப்பேனோ ? எந்தனுக்காய் ஜீவன் விட்டவரே.
– என்

**3.** இரவும் பகலும் உறங்காமல், கண்மணி போலென்னைக் காத்தீரே!
எண்ணும் நன்மை ஏதும் என்னிலில்லை ஆயினும் நீர்
என்னைநேசித்தீரே! – என்

**4.** என் சத்தம் வானமளவாக போய் அங்கு எட்டவும் வேண்டுகிறேன்
ஒவ்வொரு மூச்சும் நாடியுமே துதியாய் மாறிட வாஞ்சிக்கிறேன். – என்

# 227

கர்த்தர் என் மேய்ப்பரே குறை எனக்கில்லையே
அனுதினம் நல்மேய்ச்சல் அன்புடன் அளித்திடுவார்.

1 மரணத்தின் இருள் தன்னில் நடந்திட நேர்ந்தாலும்
மீட்பரின் துணையுடனே மகிழ்வுடன் நடந்திடுவேன். – கர்த்தர்

2. பகைவரின் கண்களின் முன் பரமன் எனக்கோர் விருந்தை
பாங்குடன் அருளுகின்றார் பரவசம் கொள்ளுகிறேன். – கர்த்தர்

3. எண்ணெயால் என் தலையை இன்பமாய் அபிஷேகம்
செய்கிறார் என் தேவன் உள்ளமும் பொங்கிடுதே. – கர்த்தர்

4. ஜீவனின் நாட்களெல்லாம் நன்மையும் கிருபையுமே
தொடர்ந்திட வாழ்ந்திடுவேன் கர்த்தரின் வீட்டினிலே. – கர்த்தர்

***பல்லவி***

சிலுவை நிழலில் அனுதினம் அடியான்
சாய்ந்திளைப் பாறிடுவேன் – ஆ ஆ

அனுபல்லவி

சிலுவையின் அன்பின் மறைவில் கிருபையின் இனிய நிழலில்
ஆத்தும நேசரின் அருகில் அடைகிறேன் ஆறுதல் மனதில். – சிலுவை

***சரணங்கள்***

1. பாவ பார சுமையதால் சோர்ந்தே தளர்ந்த என் ஜீவியமே
சிலுவை யண்டை வந்ததினால் சிறந்த சந்தோஷங் கண்டதினால்,
இளைப்படையாது மேலோகம் ஏகுவேன் பறந்தே வேகம். – சிலுவை

2. இன்பம் சுரந்திடும் திருமொழி கேட்டு என்
இன்னல்கள் மறந்திடுவேன் திருமறை இன்னிசை நாதம்
தேனிலுமினிய வேதம். தருமெனக்கனந்த சந்தோஷம்
தீர்க்கும் என் இதயத்தின் தோஷம். – சிலுவை

3. எவ்விதக் கொடிய இடருக்கு மஞ்சேன் இயேசுவைச் சார்ந்து நிற்பேன்;
அவனியில் வியாகுலம் வந்தால், அவரையே நான் அண்டிக் கொண்டால்
அலைமிகு மோதிடு மந்நாள் ஆறுதலளிப்பாரே சொன்னால். – சிலுவை

***பல்லவி***

காப்பார் உன்னை என்றென்றும் வழுவாமலே
இம்மட்டும் காத்தார் இம்மானுவேலாய் இன்னமும் காத்திடுவார்.

***சரணங்கள்***

1. கோழி தன் குஞ்சுகளை கூவி அழைக்குமாப் போல்
என்னைத் தம் சிறகுகளால் அணைத்துக் காத்திடுவார்.– காப்

2. கண்ணீர் கவலையுடன் கஷ்டம் நஷ்டம் வந்தாலும்
கர்த்தரின் நாமத்தினால் மதிலைத் தாண்டிடுவேன்.– காப்

3. சோதனை சோர்வுகளில் சோர்ந்திடாமல் காக்கிறார்
நெரிந்த நாணல் முறியாத தேவன் நிமிர்த்தி உயர்த்திடுவார்.– காப்

4. இவ்வுலகப்பாடுகள், என்னை என்ன செய்திடும்
நல்ல போராட்டம் போராடி ஓட்டத்தை முடித்திடுவேன்.– காப்

5. ஆனந்த கீதங்களால் ஆர்ப்பரித்து மகிழ்வேன்
அல்லேலூயா பாடுவேன் அன்பரின் நாமத்தினால். – காப்

# 230

1. இயேசு எங்கள் மேய்ப்பர் கண்ணீர் துடைப்பார்
மார்பில் சேர்த்தணைத்து பயம் நீக்குவார்; துன்பம் நேரிட்டாலும்
இன்பம் ஆயினும், இயேசுவின் பின் செல்வோம் பாலர் யாவரும்.

2. நல்ல மேய்ப்பர் சத்தம் நன்றாய் அறிவோம்
காதுக்கின்பமாகக் கேட்டுக் களிப்போம்; கண்டித்தாலும் நேசர்
ஆற்றி தேற்றுவார், நாங்கள் பின்னே செல்ல வழி காட்டுவார்.

3. ஆட்டுக்காக மேய்ப்பர் இரத்தம் சிந்தினார் அதில் மூழ்கினோரை
சுத்தர் ஆக்குவார்; பாவ குணம் நீக்கி முற்றும் இரட்சிப்பார்,
திவ்ய தூய சாயல் ஆக மாற்றுவார்.

## ***பல்லவி***

தேவப் பிதா எந்தன் மேய்ப்பன் அல்லோ
சிறுமை தாழ்ச்சி அடைகிலனே,

## ***அனுபல்லவி***

ஆவலதாய் எனைப் பைம்புன் மேல் அவர் மேய்த் தமர் நீர்
அருளுகின்றார் – தேவ

## ***சரணங்கள்***

1. ஆத்துமந் தன்னைக் குளிரப் பண்ணி
அடியேன் கால்களை நீதி என்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார் . – தேவ

2. சா நிழல் பள்ளத் திறங்கிடினும், சற்றும் தீங்கு கண்டஞ்சேனே;
வான பரன் என்னோடிருப்பார் வளை தடியும் கோலுமே தேற்றும். – தேவ

3. பகைவர்க் கெதிரே ஒரு பந்தி பாங்காய் எனக்கென் றேற்படுத்திச்,
சுக தைலம் கொண்டென் தலையைச்
சுகமாய் அபிஷேகம் செய்குவார். – தேவ

4. ஆயுள் முழுவதும் என் பாத்ரம் அருளும் நலமுமாய் நிரம்பும்,
நேயன் வீட்டினில் சிறப்போடே நெடுநாள் குடியாய் நிலைத் திருப்பேன்.
– தேவ

***பல்லவி***

எல்லாம் இயேசுவே,– எனக்கெல்லா மேசுவே.

***அனுபல்லவி***

தொல்லைமிகு மிவ்வுலகில்– துணை இயேசுவே – எல்

***சரணங்கள்***

1. ஆயனும் சகாயனும் நேயனும் உபாயனும்,
நாயனும் எனக்கன்பான ஞான மணவாளனும். – எல்

2. தந்தைதாய் இனம்ஜனம் பந்துளோர் சிநேகிதர்,
சந்தோட சகலயோக சம்பூரண பாக்யமும். – எல்

3. கவலையில் ஆறுதலும், கங்குலி லென் ஜோதியும்
கஷ்டநோய்ப் படுக்கையிலே கைகண்ட ஔஷதமும் – எல்

4. போதகப் பிதாவுமென் போக்கினில் வரத்தினில்
ஆதரவு செய்திடுங்கூட்டாளியு மென் தோழனும். – எல்

5. அணியும் ஆபரணமும் ஆஸ்தியும் சம்பாத்யமும்
பிணையாளியும் மீட்பருமென் பிரிய மத்தியஸ்தனும். – எல்

6. ஆன ஜீவ அப்பமும் ஆவலு மென் காவலும்,
ஞானகீதமும் சதுரும் நாட்டமும் கொண்டாட்டமும். – எல்

1. உலகின் கவலை பெருகும்போது
உம் சமாதானமும் பெருகுதே எந்தனைக் கவலைகள்
வாட்டும் போது – உம் மாசற்ற இரத்தமும்தேற்றுதே

***பல்லவி***

இயேசுவே என் நேசரே துன்பத்தில் எந்தன் நல் இன்பமே

2. சாத்தான் என்னைத் தாக்கும் போது – உம்
கல்வாரி சிலுவை காக்குதே பாவங்கள் என் முன்னால்
நிற்கும்போது – உம் மாசற்ற இரத்தமும் பேசுதே. – இயேசுவே

3. உலகின் கவலைகளோ – இந்த உள்ளத்தின் சோர்வுகளோ
உம் அன்பை விட்டு என்னைப் பிரிக்காமல்
இன்னும் நெருக்கிடவோ. – இயேசுவே

4. என் எண்ணங்கள் அல்ல என் ஆண்டவா
உம் சித்தம் முழுதும் நான் செய்ய
இவ்வுலகில் நீர் தந்த என் வாழ்க்கையை
அர்ப்பணித்தேனே முற்றுமாய். – இயேசுவே

என் கர்த்தர் மேய்ப்பரா யிருக்கிறார்
தாழ்ச்சியடையேன்—தலை நிமிர்வேன்
தரணியெங்கிலும் அவர் புகழ்பாடுவேன்!

**1.** அவர் எந்தன் ஆத்துமாவை தினம் தேற்றி
திருமறை வேதம் என்னும் விளக்கேற்றி
நீதியென்னும் பாதையில் நித்தம் என்னை நடத்தும்
நேசருக்கு நன்றியோடு துதி பாடுவேன். – என்

**2.** மரணத்தின் இருளிலே இருந்தாலும்
பயங்கரப் பள்ளத்தாக்கில் நடந்தாலும்
கோல் தடி கொண்டு குறைவின்றி காக்கும்
கர்த்தருக்கு எந்நாளும் கவி பாடுவேன். – என்

**3.** என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும்
என்னைத் தொடரும் கர்த்தரின் வீட்டிலே நீடித்த நாட்களாய்
வாழச் செய்யும் வள்ளலுக்கு வாழ்த்துப் பாடுவேன். – என்

**1.** கர்த்தரின் கை குறுகவில்லை கர்த்தரின் வாக்கு மாறிடாதே
சுத்தர்களாய் வாழ்நந்திடவே சுதனருள் புரிந்தனரே

***பல்லவி***

விசுவாசியே நீ பதறாதே; விசுவாசியே நீ கலங்காதே!!
விசுவாசத்தால் நீதிமான் இன்றும் என்றும் பிழைப்பான்

**2.** பரிசுத்த ஆவியானவரே பரிசுத்த பாதையில் நடத்திடுவார்
கிருபையிலே வளர்ந்திடுவோம் வரங்களை நாடிடுவோம். – விசு

**3.** நெஞ்சமே நீ அஞ்சிடாதே தஞ்சம் இயேசு உன் அரணே
தம் ஜனத்தை சீக்கிரமாய் தம்முடன் சேர்த்துக் கொள்வார். – விசு

**4.** மேகம் போன்ற வாக்குத்தத்தம் சூழ நின்றே காத்திருக்க
விசுவாசத்தால் உரிமை கொள்வாய்
விரைந்து முன்னேறிடுவாய். – விசு

## *பல்லவி*

கர்த்தரே எம் துணையானீர் நித்தமும் எம் நிழலானீர்
கர்த்தரே எம் துணையானீர்

## *சரணங்கள்*

1. எத்தனை இடர் வந்து சேர்ந்தாலும்
கர்த்தரே அடைக்கல மாயினார் (2)
மனு மக்களில் இவர் போலுண்டோ
விண் உலகிலும் இவர் சிறந்தவர் – கர்த்தரே

2. பாவி என்றென்னைப் பலர் தள்ளினார்
ஆவி இல்லை என்றிகழ்ந்தும் விட்டார் (2)
ராஜா உம் அன்பு எனைக் கண்டது
உம்மைப்போல் ஐயா, எங்கும் கண்டதில்லை – கர்த்தரே

3. சுற்றத்தாரும் காலத்தில் குளிர்ந்திட்டார்
நம்பினோரும் எதிராக வந்திட்டார் (2)
கொள்கை கூறியே பலர் பிரிந்திட்டார்
ஐயா உம்மைப் போல் நான்
எங்கும் கண்டதில்லை – கர்த்தரே

4. ஆயிரம் நாவுகள் நீர் தந்தாலும் ராஜனே,
உம்மைப் பாடக் கூடுமோ ? (2)
ஜீவனை உமக்களிக்கின்றேனே உம்மைப்போல், ஐயா, எங்கும்
கண்டதில்லை – கர்த்தரே

## பல்லவி

காரிருள் சூழ்ந்திடும் நேரம் கர்த்தாவே என் பக்கம் நீரே!
யாருமின்றி அனாதையாய் அலைந்தேன் என்னை அணைத்தீரே!

## சரணங்கள்

1. கானகப் பாதை நான் செல்கையில் காவலனாய் வந்து காத்திடுவீர்
கரடானாலும் முரடானாலும் காருண்யத்தால் என்னைத் தேற்றிடுவீர்.

2. மாராவின் தண்ணீர் மதுரமாகும் பாராத நீர் என்சொந்தமானீர்
இயேசு நாதா! இயேசு நாதா! எளியேனை கரம் தன்னில் தாங்கிடுவீர்.

3. என் கால்கள் சறுக்கும் போதெல்லாம் கர்த்தாவே நின்கிருபை
தாங்கிடுதே எந்தன் கொம்பை எண்ணெயினால்
அபிஷேகம் பண்ணி உயர்த்திடுவீர்.

1. தொல்லைக் கஷ்டங்கள் சூழ்ந்திடும்
துன்பம் துக்கம் வரும் இன்பத்தில் துன்பம் நேரிடும்
இருளாய் தோன்றும் எங்கும், சோதனை வரும் வேளையில்,
சொல் கேட்கும் செவியிலே, ‘‘பட்டயத்தால் ஜெயம் வரும்’’
பரன் உன்னைக் காக்க வல்லோர்.

***பல்லவி***

காக்கும் வல்ல மீட்பர் உண்டெனக்கு, உண்டெனக்கு, உண்டெனக்கு,
காக்கும் வல்ல மீட்பர் உண்டெனக்கு, காத்திடுவார் என்றுமே.

2. ஐயமிருந்ததோர் காலத்தில் ஆவி குறைவால்தான்
மீட்பர்உதிர பலத்தால்; சத்துருவை வென்றேன்;
என் பயம் யாவும் நீங்கிற்று இயேசு கை தூக்கினார்;
முற்றாய் என்னுள்ளம் மாறிற்று இயேசென்னைக் காக்க வல்லோர்.
– காக்

3. என்ன வந்தாலும் நம்புவேன் என்நேச மீட்பரை
யார் கைவிட்டாலும் பின் செல்வேன் எனது இயேசுவை;
அகலம், ஆழம், உயரமாய், எவ்வளவன்பு கூர்ந்தார்;
என்ன துன்பங்கள் வந்தாலும்என்னைக் கைவிடமாட்டார். – காக்

1. உம்மாலேயன்றி இரட்சகா பேர் நன்மை காண்கிலேன்;
மெய்ச் சமாதானம் இன்பமும் வேறெங்கும் பெற்றிலேன்.

<u>***பல்லவி***</u>

வேறொன்றினாலும் இரட்சகா! மெய்ப்பாக்கியம் அடையேன்.
உம்மாலேதான் என் ஆண்டவா! சந்தோஷமாகிறேன்.

2. பேரன்பை உணராமலே மெய்ப்பாக்கியம் நாடினேன்;
நான் ஆவலோடே தேடியும் ஏமாறிப் போயினேன். –வேறொன்

3. பூலோகப் பொருள் இன்பத்தைப் பின்பற்றி நம்பினேன்;
சற்றேனும் அற்ப வாழ்வினால் நான் திருப்தியாகிலேன். – வேறொன்

4. இப்போதோ உந்தன் இரட்சிப்பைக் கண்டிளைப்பாறினேன்;
ஆனந்தம் பொங்கி, இன்பமாய் நான் போற்றிப் பாடுவேன். – வேறொன்

1. என் மீட்பர் இரத்தஞ் சிந்தினார், மாநீதியுஞ் சம்பாதித்தார்;
என் சொந்த நீதி வெறுத்தேன். இயேசுவின் நாமம் நம்புவேன்

***பல்லவி***

நான் நிற்கும் பாறை கிறிஸ்துதான், வேறஸ்திபாரம் மணல் தான்.
வேறஸ்திபாரம் மணல் தான்.

2. கார்மேகம் அவர் முகத்தை மறைக்கும் காலம் அவரை
எப்போதும் போல நம்புவேன் மாறாதவர் என்றறிவேன்.– நான்

3. மரண வெள்ளம் பொங்கினும் என் மாம்சஞ் சோர்ந்து போயினும்,
உம் வாக்குத்தத்தம் ஆணையும் என் நெஞ்சை ஆற்றித் தேற்றிடும்.
– நான்

4. நியாயத் தீர்ப்புக் காலத்தில் எக்காள சத்தங் கேட்கையில்
அஞ்சேன், என் மீட்பர் நீதியே அநீதன் என்னை மூடுமே.– நான்

1. எனக்காய் ஜீவன் விட்டவரே என்னோடிருக்க எழுந்தவரே
என்னை என்றும் வழி நடத்துவாரே என்னை சந்திக்க வந்திடுவாரே.

<u>*பல்லவி*</u>

இயேசு போதுமே இயேசு போதுமே எந்த நாளிலுமே
எந்நிலையிலுமே எந்தன் வாழ்வினிலே இயேசு போதுமே.

2. பிசாசின் சோதனை பெருகிட்டாலும்
சோர்ந்து போகாமல் முன் செல்லவே உலகமும் மாமிசமும்
மயக்கிட்டாலும் மயங்கிடாமல் முன்னேறவே. – இயேசு

3. புல்லுள்ள இடங்களில் மேய்த்திடுவார்
அமர்ந்த தண்ணீரண்டை நடத்திடுவார்
ஆத்துமாவைத் தினம் தேற்றிடுவார்
மரண பள்ளத்தாக்கில் காத்திடுவார். – இயேசு

4. மனிதர் என்னைக் கை விட்டாலும்
மாமிசம் அழுகி நாறிட்டாலும் ஐசுவரியம் யாவும்
அழிந்திட்டாலும் ஆகாதவன் என்று தள்ளி விட்டாலும். – இயேசு

## பல்லவி

இயேசுவின் ஜனம் நாம் பரிசுத்த ஜாதிநாம்
பயமினி நமக்கென்ன ? பரிசுத்தர் அவர் நம்மை நடத்திடுவார்.

## சரணங்கள்

1. பாவியின் பயமெல்லாம் நீக்கிடுவார் – ஆ, ஆ, ஆ,
பாவச் சங்கிலிகளைத் தகர்த்திடுவார்
பாவியைத் தம் அண்டை அணைத்திடுவார்.– இயேசு

2. துணை அவரே துயர் வந்திடினும் – ஆ,ஆ ஆ,
துடைப்பார் கண்ணீர் சுகமளிப்பார்
தூய சௌபாக்கியம் கொடுத்திடுவார்.– இயேசு

3. சுற்றிலும் சத்துரு சூழ்ந்திடுனும் – ஆ,ஆ,ஆ,
வியாகுலம் நம்மை விரட்டிடினும்
கண்மணிபோல் அவர் காத்திடுவார். – இயேசு

4. துன்பங்கள் பலவாய் நெருக்கிடினும் – ஆ,ஆ,ஆ,
தொல்லைகள் நம்மை அணுகிடினும்
நல்லவர் அவர் நம்மைத் தேற்றிடுவார். – இயேசு

5. குறைவுகள் யாவையும் தீர்த்திடுவார் – ஆ,ஆ,ஆ,
களங்கம் இல்லாதவர் நிறுத்திடுவார்
கடைசி மட்டும் கைவிடா திருப்பார். – இயேசு

## பல்லவி

சீயோனிலே என்திட அஸ்திபாரம் கிறிஸ்துவே –
அவர் நான் என்றும் நம்பும் கன்மலை.

## சரணங்கள்

1. கலங்கிடுவேனோ பதறிடுவேனோ
கர்த்தரில் விசுவாசம் இருக்கையிலே
அசையா என் நம்பிக்கை நங்கூரமே
இயேசுவில் மாத்திரமே. – சீயோனிலே

2. புயலடித்தாலும் அலை மோதினாலும்,
எவர் எனக்கெதிராய் எழும்பினாலும்,
எவர்க்கும் எட்டாத உயரத்திலே
எடுத்தவர் நிறுத்திடுவார். – சீயோனிலே

3. வியாதியினாலே காயம் வருந்தி
வாடியே மரண நிழல் சூழினும்
விசுவாசத்தின் கரத்தாலவர்.
வாக்கை நான் பற்றிடுவேன் – சீயோனிலே

4. மா பரிசுத்த விசுவாசத்தாலே மா பரிசுத்த ஸ்தலம் ஏகிடவே
திரை வழியாம் தம் சரீரத்தினால் திறந்தாரே தூய வழி – சீயோனிலே

5. நான் விசுவாசிப்போர் இன்னாரென்றறிவேன்.
என்னையே படைத்திட்டேன் அவர் கரத்தில்
முடிவு வரை நடத்திடுவார் முற்றுமாய் இரட்சிப்பாரே. – சீயோனிலே

அநாதி தேவன் உன் அடைக்கலமே
அவர் நித்திய புயங்கள் உன் ஆதாரமே.

***அனுபல்லவி***

இந்த தேவன் என்றென்றுமுள்ள சதா காலமும் நமது தேவன்
மரண பரியந்தம் நம்மை நடத்திடுவார்.

***சரணங்கள்***

1. காருண்யத்தாலே இழுத்துக் கொண்டார்
தூய தேவ அன்பே இவ்வனாந்தரத்தில் நயங்
காட்டி உன்னை இனிதாய் வருந்தி அழைத்தார். – இந்த

2. கானக பாதை காரிருளில் தூய தேவ ஒளியே
அழுகை நிறைந்த பள்ளத் தாக்குகளை
அரும் நீருற்றாய் மாற்றினாரே – இந்த

3. இப்புவி யாத்திரை கடந்திடுவாய்
தூய தேவ தயவால் கடும் கானகத்தில் கர்த்தர்
மார்பினிலே கிடைக்கும் இளைப்பாறுதலே – இந்த

4. கிருபை கூர்ந்து மனதுருகும் தூய தேவ அன்பே
உன் சமாதானத்தின் உடன்படிக்கைதனை
உண்மையாய்க் கர்த்தர் காத்துக் கொள்வார் – இந்த

5. வறண்ட வாழ்க்கை செழித்திடுதே
தூய தேவ அருளால் நித்திய மகிழ்ச்சி தலைமேல் இருக்கும்
சஞ்சலம் தவிப்பும் ஓடிப்போம்– இந்த

6. ஆனந்தம்பாடி திரும்பியே வா தூயதேவ பெலத்தால்
சீயோன் பர்வதம் உன்னைச் சேர்த்திடுவார்
சந்ததம் மகிழ்ச்சி அடைவாய் –இந்த

1. உன்னதமானவரின்—உயர் மறைவிலிருக்கிறவன்
சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்
இது பரம சிலாக்கியமே

***பல்லவி***

அவர் செட்டையின் கீழ் அடைக்கலம் புகவே,
தம் சிறகுகளால் மூடுவார்.

2. தேவன் என் அடைக்கலமே என் கோட்டையும் அரணுமவர்
அவர் சத்தியம் பரிசையும் கேடகமாம் என் நம்பிக்கையும் அவரே – அவர்

3. இரவின் பயங்கரத்திற்கும் பகலில் பறக்கும் அம்புக்கும்
இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும்
நான் பயப்படவே மாட்டேன் – அவர்

4. ஆயிரம் பதினாயிரம்—பேர்கள் உன்பக்கம் விழுந்தாலும்
அது ஒரு காலத்தும் உன்னை அணுகிடாதே உன் தேவன் உன் தாபரமே – அவர்

5. தேவன் உன் அடைக்கலமே ஒரு பொல்லாப்பும் உன்னைச் சேருமோ
ஒரு வாதையும் உன் கூடாரத்தையே அணுகாமலே காத்திடுவார். – அவர்

6. உன் வழிகளிலெல்லாம் உன்னை தூதர்கள் காத்திடுவார்
உன் பாதம் கல்லில் இடறாதபடி தங்கள் கரங்களில் ஏந்திடுவார். – அவர்

7. சிங்கத்தின்மேல் நடந்து வலுசர்ப்பத்தையும் மிதிப்பாய்
அவர் நாமத்தை நீ முற்றும் நம்பினதால் உன்னை விடுவித்துக் காத்திடுவார்.
– அவர்

8. ஆபத்திலும் அவரை நான் நோக்கிக் கூப்பிடும் வேளையிலும்
என்னைத் தப்புவித்தே முற்றும் இரட்சிப்பாரே என் ஆத்தும நேசரவர். – அவர்

இயேசுவின் சாட்சிகள் நாம் பரதேசிகள்
சிலுவை பாதையில் தோத்திரம் பாடி நாம் மோட்சபுரி நாடி
யாத்திரை செய்கிறோம்.

***சரணங்கள்***

1. தரிசித்து நடவாமல் விசுவாசத்தாலே நாம்
பரிசுத்த பாதையில் போகிறோம் மோட்ச யாத்திரிகர் நாம்
பாரினில் அந்நியராய் – இயேசு

2. உலகம் நமக்குப் பாத்திரம் அல்லதில்
கிலேசம் வேண்டினி கர்த்தர் சிரசில் முள் முடியாகில்
நமக்கு வேறென்ன ? – இயேசு

3. மேகங்கள் போன்ற சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொள்ளவே
இயேசுவை நோக்கி பாவப் பாரங்கள்
பின் தள்ளி ஓடுவோம். – இயேசு

4. நம்மை இரட்சிக்கவே சிலுவை சகித்தோர்
அருமை நேசரை நினைக்கும்போது சோர்வுகள் தீர்ந்து
யாத்திரை செய்யலாம். – இயேசு

5. நாம் அவர் புத்திரர் ஆகவே சிட்சிப்பார் ஆகிலும் நேசிப்பார்
நன்மையல்லாமல் தீமைகள் ஏதும்
நம் பிதா நல்கிடார். – இயேசு

***பல்லவி***

வாரா வினை வந்தாலும் சோராதே மனமே!
வல்ல கிறிஸ்துனக்கு நல்ல தாரகமே.

***சரணங்கள்***

1. சூரன் சதித்துன்மீது வலை வீசினாலும்,
சோராதே, ஏசுபரன் தஞ்சம் விடாதே, – வாரா

2. உலகம் எதிர்த்துனக்குமலைவு செய்தாலும்
உறுதிவிட்டயராதே, நெறி தவறாதே; – வாரா

3. பெற்ற பிதாப்போல் உன் குற்றம் எண்ணாரே;
பிள்ளை ஆகில் அவர் தள்ளி விடாரே. – வாரா

4. தன் உயிர் ஈந்திட்ட உன் இயேசு நாதர் தள்ளுவரோ ?
அன்பு கொள்ளவர் மீதே.–வாரா

5. மரணம் வருகின்ற தருணம் வந்தாலும்,
மருள விழாதே, நல் அருளை விடாதே – வாரா

6. வையகமே உனக்குய்ய ஓர் நிலையோ ?
வானவனை முற்றும் தான் அடைவாயே! – வாரா

## 248

### பல்லவி

என் மீட்பர் உயிரோடிருக் கையிலே எனக்கென்ன
குறைவுண்டு ? நீ சொல், மனமே

1. என்னுயிர் மீட்கவே தன்னு யிர் கொடுத்தோர்,
என்னோடிருக்கவே எழுந் திருந்தோர்;
விண்ணுல குயர்ந்தோர் உன்னதஞ் சிறந்தோர்,
மித்திரனே, சுகபத்திர மருளும் – என்

2. பாவமோ, மரணமோ, நரகமோ, பேயோ,
பயந்து நடுங்கிட ஜெயஞ் சிறந்தோர்,
சாபமே தீர்த்தோர் சற்குருநாதன்;
சஞ்சலமினியேன் ? நெஞ்சமே மகிழ்வாய் – என்

3. ஆசி செய் திடுவார், அருள்மிக அளிப்பார்,
அம்பரந் தனிலெனக்காய் ஜெபிப்பார்;
மோசமே மறைப்பார்; முன்னமே நடப்பார்;
மோட்சவழி சத்யம் வாசல் உயிரெனும் – என்

4. கவலைகள் தீர்ப்பார், கண்ணீர் துடைப்பார்,
கடைசிமட்டும் கைவிடா திருப்பார்;
பாவமன்னிப்பளிப்பார், பாக்கி யங் கொடுப்பார்,
பரம பதவியினுள் எந்தனை எடுப்பார். – என்

5. போனது போகட்டும், புவிவசை பேசட்டும்,
பொல்லான் அம்புக ளெய் திடட்டும், ஆனது ஆகட்டும்,
அருள்மழை பெய்திடும், அன்புமிகும் பேரின்ப மெனக்கருள். – என்

1. தேவன் வருகின்றார் வேகம் இறங்கி தேவ பர்வதம் தம் பாதம் நிறுத்தி
பூமிதனை நியாயம் தீர்த்திடுவார் பூலோக மக்களும் கண்டிடுவார்.

***பல்லவி***

இயேசு கிறிஸ்து வருகின்றார் இந்தக் கடைசி காலத்திலே
கர்த்தரைக் குத்தின கண்கள் யாவும் கண்டு புலம்பிடுமே.

2. ஏழாம் தலைமுறை ஏனோக் குரைத்த எல்லாம் நிறைவேறும் காலம்
நெருங்க இயேசு கிறிஸ்துவின் சத்தியத்தை
ஏற்க மறுத்தவர் நடுங்குவார். – இயேசு

3. தம்மை விரோதித்த அவ பக்தரை செம்மை வழிகளில்
செல்லாதவரை ஆண்டவர் ஆயிரம் பக்தரோடே
அந்நாளிலே நியாயந் தீர்த்திடுவார். – இயேசு

4. எதை விதைத்தாயோ அதை அறுப்பாய் எல்லா அநீதிக்கும் கூலி பெறுவாய்
கல்வாரி சிலுவை அண்டிடுவாய் கர்த்தரை நம்பியே
தப்பிடுவாய். – இயேசு

5. அந்திக் கிறிஸ்தன்று அழிந்து மாள
அன்பராய் இயேசுவே ஜெயம் சிறக்க வாயில் இருபுறம் கருக்குள்ள
வாளால் நெருப்பாக யுத்தம் செய்வார். – இயேசு

6. கையால் பெயர்க்காத கல் ஒன்று பாயும் கன்மலையாகி இப்பூமி நிரப்பும்
கிரீடங்கள் பாகைகள் கவிழ்ந்திடும் கிறிஸ்தேசு உரிமை
பெற்றிடுவார். – இயேசு

7. யுத்தம் துவங்குமுன் மத்திய வானம் சுத்தரை அழைக்க கர்த்தரே வாரும்
ஆவி மணவாட்டி வாரும் என்றே ஆண்டவர் இயேசுவை
அழைக்கின்றோம்.– இயேசு

***பல்லவி***

ஒரு நாளில் இயேசு ராஜன் வருவார்
விண்ணவர் துதிபாட ஒரு நாளில் இயேசு ராஜன் வருவார்
மண்ணவர் மகிழ்ந்தாட.

**சரணங்கள்**

1. வாலிபத்தில் உன் சிருஷ்டிகரை இதயத்தில் நீ நினைத்தால்
வாழ்ந்திடும் நாட்கள் ஒவ்வொன்றும் வல்லவரின் கரம் நடத்தும்
பூலோக வாழ்வு நிலை அல்ல பொன்னும், பொருளும் புகழ் அல்ல
மேலோக வாழ்வு நிலை கொள்ள – ஒரு நாளில்

2. ஆண்டவர்க்கு அஞ்சுவதே அறிவின் ஆரம்பம்
அன்பர் தம் வாக்கின் கீழ் அமைதல்
என்றும் மேன்மைதனை ஈயும் காலம் பறந்தோடிப் போகும்
ஞாலம் மறைந்தொழியும் ஓர் நாள் கருத்தாக வாழுவோம் நாமும்
– ஒரு நாளில்

***<u>பல்லவி</u>***

ஏழை என்னை கைவிடாமல் நேசர் என்றும் நடத்திடுவார்.

***<u>சரணங்கள்</u>***

1. அக்கரை நான் சேரும் வரை அவர் தாங்குவார் உலகில்
ஆபத்திலும் துக்கத்திலும் அவர் தான் எனக்கருகில். – ஏழை

2. மரணத்தின் பள்ளத்தாக்கிலும் கண்ணீரின் வேளையிலும்
கைவிடாமல் கர்த்தர் என்னை கரங்களில் தாங்கிடுவார். – ஏழை

3. புயல் காற்றும் அலைகளும் என் படகை அலைக்கழிக்கும்
நேரமெல்லாம் கூட உண்டு நேசர் என்றும் வல்லவராய். – ஏழை

4. விண்ணில் என்னை சேர்த்திடவே வருவேன் என்றுரைத்த நேசர்
வந்திடுவார் சேர்த்திடுவார் ஈந்திடுவார் பிரதிபலன்கள். – ஏழை

***பல்லவி***

நேசருடன் நான் நடப்பேன் பாசமாய்க் காத்திடுவார்
காரிருள் சூழ்ந்திடினும்– என்னைக் கரம் பற்றி நடத்திடுவார்.

***சரணங்கள்***

1. தாவீதின் தேவன் சிம்சோனின் தேவன்
எலிசாவைக் காத்த தேவன்– அந்த
சேனையின் தேவன் காத்திடுவார்
பாவ லோகத்தின் வாழ்க்கையிலே. – நேச

2. சீமோனின் தேவன்! யோனாவின் தேவன்!
தோமாவின் தேவன் அவர்–பெலவீனரைச் சுமந்திடும் நேசர் அவர்
இன்று என்னையும் தாங்கிடுவார். – நேச

3. செங்கடல் பிரிந்தது! யோர்தானும் குவிந்தது!
தேவனவர் கரத்தால்–அந்த வல்லமை வழுவாது காத்திடுமே
இன்ப வீடு நான் சேரும்வரை. – நேச

**_பல்லவி_**

தேவ சாயல் ஆக மாறி தேவனோடிருப்பேன்—நானும்

**_சரணங்கள்_**

1. அந்த நாளும் நெருங்கிடுதே அதிவிரைவில் நிறைவேறுதே
மண்ணின் சாயலை நான் களைந்தே—தம்
விண்ணவர் சாயல் அடைவேன். – தேவ

2. பூமியின் கூடாரம் என்றும் பெலவீனமே அழிந்திடுமே
கைவேலையல்லாத பொன்வீடு கண்டடைந்து வாழ்ந்திடுவேன். – தேவ

3. சோரும் உள்ளான மனிதன் சோதனையில் பெலமடைய
ஆற்றித் தேற்றிடும் தேற்றரவாளன் ஆண்டவர் என்னோடிருப்பார். – தேவ

4. ஆவியாம் அச்சாரமீந்தார் ஆயத்தமாய் சேர்ந்திடவே
ஜீவனே எனது கிறிஸ்தேசு சாவு எந்தன் ஆதாயமே. – தேவ

5. காத்திருந்து ஜெபிப்பதினால் கழுகுபோல பறந்தெழும்பி
ஜீவ யாத்திரை ஓடி முடித்து ஜீவக் கிரீடம் பெற்றிடுவேன் – தேவ

6. மூன்றில் ஒன்றாய் ஜொலிப்ப வரை முகமுகமாய் தரிசித்திட
வாஞ்சையாய்த் தவிக்கும் எனதுள்ளம் வாரும் என்று கூப்பிடுதே.– தேவ

# 254

**1.** மா தூர லோகத்தில் ஆனந்தமாய்;
மாசற்ற ஸ்தலத்தில் மின் ஜோதியாய் நின்றென்றும் பாடுவார்,
இயேசுவையே போற்றுவார்; கெம்பீரங் கொள்ளுவார்
வானோர்களே.

**2.** பேரின்ப வாழ்வையே நாடுங்களேன்;
ஆ ! அதில் சேரவே தாமதம் ஏன் ? நாம் களி கூருவோம்,
பாவம்; துக்கம் நீக்குவோம், கிறிஸ்துவண்டை தங்குவோம்
என்றென்றுமே.

**3.** அங்குள்ள யாவரும் சந்தோஷிப்பார், இயேசுவின் பாலரும்
சேர்ந்திருப்பார்; கீர்த்தி ப்ரதாபராய், கிரீடந்தரித்தோர்களாய்,
தூதர்கள் தோழராய் வாழ்ந்திருப்பார்.

1. எருசலேம் என் ஆலயம் ஆசித்த வீடதே
நான் அதைக் கண்டு பாக்கியம் அடையவேண்டுமே.

2. பொன் தளம் போட்ட வீதியில் எப்போதுலாவுவேன் ?
பளிங்காய்த் தோன்றும் ஸ்தலத்தில் எப்போது பணிவேன் ?

3. எந்நாளும் கூட்டம் கூட்டமாய் நிற்கும் அம்மோட்சத்தார்
கர்த்தாவைப் போற்றிக் களிப்பாய் ஓய்வின்றிப் பாடுவார்.

4. நானும் அங்குள்ள கூட்டத்தில் சேர்ந்தும்மைக் காணவே
வாஞ்சித்து, லோக துன்பத்தில் களிப்பேன், இயேசுவே.

5. எருசலேம் என் ஆலயம். நான் உன்னில் வாழுவேன்;
என் ஆவல், என் அடைக்கலம், எப்போது சேருவேன் ?

***பல்லவி***

இயேசுவே மணாளனே என் நம்பிக்கையின் தீபமே
என் ஆசை ஒன்று மாத்திரமே விண் வீட்டில் உம்மைக் காண்பதே.

***அனுபல்லவி***

காணுவேன் காணுவேன் நேசரை நான் காணுவேன்
அந்நிய கண்களாலேயல்ல சொந்தக் கண்ணால் காணுவேன்

***சரணங்கள்***

1. கண்ணீரின் பள்ளத்தாக்கிதே உம்மில் மறைந்தே வாழுவேன்
கண்மூடும் நொடி நேரத்தில் சேருவேன் நான் பியூலா தீரத்தில்.

– காணு

2. மேகம் எழும்பிச் செல்லுதே கானானின் ஓரம் காணுதே
ஆசா பாசமாம் கட்டையே அறுத்தெறிந்திடுவோமே.

– காணு

3. உயிர்த் தெழும்பும் காலையில் தூதர் சங்கீதம் கேட்கையில்
தங்கக் கிரீடக் கூட்டத்தில் என் பேரழைக்கும் நேரத்தில்.

– காணு

4. என் ஓட்டமும் பிரயாசமும் நான் காத்த என் விசுவாசமும்
வீணல்ல அது சத்தியம் நேசரைக் காண்பேன் நிச்சயம்.

– காணு

**1.** மேலோகத்தை நாடுகிறோம், அதின் ஜோதி பிரகாசத்தையும்;
பேரின்பத்தை வர்ணிக்கிறோம், பார்த்தால் என்னமாயிருக்கும்!

***பல்லவி***

பார்த்தால், பார்த்தால், பார்த்தால் என்னமாயிருக்கும்!
பேரின்பத்தை வர்ணிக்கிறோம்,பார்த்தால் என்னமாயிருக்கும்!

**2.** எப்பாவமும் இல்லாமற்போம், கண்ணீர் சஞ்சலம் சோதனையும்;
வெற்றி சிறந்து ஓய்ந்திருப்போம், சேர்ந்தால் என்னமாயிருக்கும்!
சேர்ந்தால்.....

**3.** அங்கே இயேசுவையே சேவிப்போம்! வெண் வஸ்திரந்தான்
தரிப்போம்; வானோர் சங்கஞ் சேர்ந்திடுவோம்,
சேர்ந்தால் என்னமாயிருக்கும்! சேர்ந்தால்......

1. மெய்யாம் வாசஸ்தலமுண்டே ஜீவநதியின் ஓரத்திலாம்
மோக்ஷ வாசிகளானவரே பரிசுத்த சம்பூரணராம்.

***பல்லவி***

அங்குதான்—அங்குதான் மெய்யாம் வாசஸ்தல முண்டே.

2. என் பிரிய சிநேகிதரும் அந்த ஸ்தலத்தில் சென்றிருப்பார்,
பரஞ்ஜோதி சமுகத்திலும் சுக வாழ்வையும் பெற்றிருப்பார்.
— அங்கு

3. என் அருமை இரட்சகரும் பரலோகத்தில் சூரியனாம்
அந்த வீட்டில் நான் சேர்ந்திடவும் நீங்கிப் போகும் விசாரமெல்லாம்.
— அங்கு

4. சேர்வேன் அதிசீக்கிரமே, மோட்ச லோகத்தில் ஆனந்திப்பேன்
ஜீவ நதியின் ஓரத்திலே என் மீட்பரை ஸ்தோத்தரிப்பேன். — அங்கு

1. எண்ணில்லாத கூட்டமாக ஆர்ப்பரிக்கும் இவர் யார் ?
எல்லா ஜாதிகள் ஒன்றாகக் கீதம் பாடும் இவர் யார் ?

***பல்லவி***

இவர்கள் தம் ஆடைகள் தேவாட்டுக் குட்டியின்
இரத்தத்தினில் தோய்த்து வெண்மை யானோர்கள்,
என்றென்றும் வாழ்ந் திடுவார் மோட்சத்தில்.

2. நித்திய சிங்காசனத்தை சூழ்ந்து மா கெம்பீரமாய்
ஆச்சரிய மீட்பின் அன்பை கூறுகின்றார் ஏகமாய். – இவர்கள்

3. பூலோகத்தின் துன்பமற்று இன்பலோகம் அடைந்தார்
வெற்றி கிரீடம் சூட்டப் பெற்று வேந்தராகக் கொள்கின்றார். – இவர்கள்

4. நம்முடைய தேவனாலே இரட்சிப்பென்று சொல்கின்றார்,
நாதர் இயேசு கிறிஸ்துவுக்கு நமஸ்காரம் செய்கின்றார். – இவர்கள்

1. மேலோக இன்ப நாட்டில் நித்ய வீடுண்டே
சாவில்லா அவ்வீட்டில் ஓயாத வாழ்வுண்டே; தூய அங்கி தரித்து
தூதர் சாஷ்டாங்கம் செய்வார் ஜோதி வீசும் அவ்வீட்டை
என்று பார்த்தானந்திப்பேன்!

ஆ! ஆனந்தமாம்! பேரின்பம் உண்டாம்!
நல் மீட்பரின் வீட்டில், பேரின்பம் உண்டாம்!

2. இலங்கும் அந்த வீட்டில் பாலர் பாடுவார்;
தேவ ஆசனத்தில் மீட்பர் வீற்றாளுவார்;
பாலர் கீதங்கள் பாடி ஓய்வின்றி ஆர்ப்பரிப்பார்;
ஜோதி வீசும் அவ்வீட்டை என்று பார்த்தானந்திப்பேன் ?—ஆ

3. சீக்கிரம் மோட்ச நகர் நானும் சேருவேன்
இயேசு எந்தன் மீட்பர் சாவில் நான் அஞ்சிடேன்
தூய நேசரைக் காண்பேன் தங்கச் சிம்மாசனத்தில்;
ஜோதி வீசும் அவ்வீட்டை என்றும் பார்த்தானந்திப்பேன்! —ஆ

**_பல்லவி_**

பரலோகமே என் சொந்தமே என்று காண்பேனோ ?
என் இன்ப இயேசுவை நான் என்று காண்பேனோ ?

**_சரணங்கள்_**

1. வருத்தம் பசி தாகம் மனதுயரம் அங்கே இல்லை
விண்கிரீடம் வாஞ்சிப்பேன் விண்ணவர் பாதம் சேர்வேன்.– பர

2. சிலுவையில் அறையுண்டேன் இனி நானல்ல இயேசுவே
அவரின் மகிமையே எனது இலட்சியமே. – பர

3. இயேசு என் நம்பிக்கையாம் இந்தப் பூமியும் சொந்தமல்ல
பரிசுத்த சிந்தையுடன் இயேசுவைப் பின்பற்றுவேன். – பர

4. ஓட்டத்தை ஜெயமுடன் நானும் ஓடிட அருள் செய்வார்
விசுவாச பாதையில் சோராது ஓடுவேன். – பர

5. பரம சுகம் காண்பேன் பரன் தேசம் அதில் சேர்வேன்
இராப்பகல் இல்லையே இரட்சகர் வெளிச்சமே. – பர

6. அழைப்பின் சத்தங்கேட்டு நானும் ஆயத்தமாகிடுவேன்
நாட்களும் நெருங்குதே வாஞ்சையும் பெருகுதே. – பர

# 262

**1.** மெய் பக்தர், தாசரே! கொண்டாடக் கூடுவோம்.
சந்தோஷ கீதம் பாடியே சந்தோஷ கீதம் பாடியே
கர்த்தரைப் போற்றுவோம்; கர்த்தரைப் போற்றுவோம்.

***<u>பல்லவி</u>***

மா உன்னத சீயோன் சோபித சுந்தர சீயோன்,
மா உன்னத திவ்விய சீயோன் நாம் நோக்கியே செல்லுகிறோம்.

**2.** இரட்சண்யக் கூட்டத்தார் பேரீவுக்காகவே
மென்மேலும் நன்றி சொல்லுவார்; மென்மேலும் நன்றி சொல்லுவார்;
பாடாமல் தீராதே; பாடாமல் தீராதே! – மா

**3.** பேரன்பின் வாரியில் நாம் மூழ்கி ஆழ்கிறோம்
பின், மோட்சானந்த வீட்டினில்; பின், மோட்சானந்த வீட்டினில்
ஒன்றாக பூரிப்போம்; ஒன்றாக பூரிப்போம். – மா

**4.** விசாரம் துக்கத்தை விட்டாரவாரிப்போம்.
இம்மானுவேலின் தேசத்தை, இம்மானுவேலின் தேசத்தை,
நாம் நாடிப் போகிறோம், நாம் நாடிப் போகிறோம். – மா

*பல்லவி*

வாழுவேன் அன்பர் நாடதில் ஆர்ப்பரிப்புடன்
வாஞ்சையுடன் காத்த எந்தன் ஆவல் தீர்த்திட்டார்
வாழுவேன் இன்ப நாடதில்.

***சரணங்கள்***

1. என்ன இம்மேன்மை என்பேர்க்காய்த்தானோ
என்னென்ன இன்பம் என் சொந்தமானதோ!
ஏற்றுவேன் என் உள்ளமதினால் – துதி
என்றும் என்னை மீட்ட அன்பைக் கூறுவேன் – நிதம் – வாழுவேன்

2. அன்பின் மகிமை அன்பை நான் காண
அன்பே உம் சாயல் என்னில் தரித்தீரே
ஆனந்தத்தால் சாற்றிடுவேன் நான் – துதி
அன்பே உள்ளமதில் பொங்கி சாடுதே–எனில்.– வாழுவேன்

3. கைவேலையல்லா கனமானவீடே கைவசமாக்கஅருளென்னிலீந்தீரே
நேசரே என் நன்றி கூறுவேன் – தினம்
காலா காலங்களாய்ப் பாடிடுவேன் நான்–புகழ். – வாழுவேன்

4. நின் கிருபை தேவா என்றென்றுமாக இவ்வேழை காண
இதயந் திறந்தீரே இன்பமாக போற்றிடுவேன்நான்–இனி
இன்னோர் அண்ணலெனக் கெங்குமில்லையே– வேறு – வாழுவேன்

5. உம் ரூபம் தானே, என் பிரியம் தேவே உம்மோடு சேர என் நெஞ்சு
பொங்குதே உன்னதா; உம் மேன்மை எத்தனை–மகா ஊற்றுவேன் நிதம்
என் உள்ளமதை நான்–நிதம். – வாழுவேன்

1. ஜோதி தோன்றும் ஒர் தேசமுண்டு விசுவாசக் கண்ணால் காண்கிறோம்
நம் பிதா அழைக்கும் பொழுது நாம் அங்கே வசிக்கச் செல்லுவோம்.

***பல்லவி***

இன்பமாய் சீக்கிரம் மோட்ச கரையில்
நாம் சந்திப்போம் இன்பமாய் சீக்கிரம் மோட்ச கரையில்
நாம் சந்திப்போம்.

2. அந்த வான் கரையில் நாம் நின்று விண்ணோர் கீதங்களைப் பாடுவோம்
துக்கம் யாவும் அற்று மகிழ்ந்து சுத்தரின் ஆறுதல் அடைவோம். – இன்ப

3. நம் பிதாவின் அன்பை நினைத்து அவரில் மகிழ்ந்து பூரிப்போம்
மீட்பின் நன்மைகளை உணர்ந்து அவரை வணங்கி துதிப்போம். – இன்ப

4. அந்த மோட்ச கரை அடைந்து வான் சேனையுடன் நாம் களிப்போம்
நம் தொல்லை யாத்திரை முடித்து விண் கிரீடத்தை நாம் தரிப்போம். – இன்ப

5. சாவற்றோர் பூரிக்கும் தேசத்தில் சந்திப்போம், பாடுவோம், ஆளுவோம்
துக்கம் நோவழிந்த ஸ்தலத்தில் க்ஷேமமாய் நாம் இளைப்பாறுவோம். – இன்ப

6. அங்கே நம் இரட்சகர் என்றென்றும் ஆளுகைசெய்து வீற்றிருப்பார்
துக்கம் நோய் சாவுகள் நீங்கிடும் தேவன் நம் கண்ணீரைத் துடைப்பார். – இன்ப

7. ஏழைக்கும் மாளிகை அங்குண்டு என்று நல் மீட்பர் அழைக்கிறார்
மாந்தர் யாவர்க்கும் இடமுண்டு எல்லோரும் வாருங்கள் என்கிறார். – இன்ப

1. இன்பக் கானானுக்குள் ஏழை செல்ல
இயேசுவின் மார்பினில் நான் ஆனந்திப்பேன்.

2. பரம சுகங்களின் இனிய ரசம்
பரனேசுவோடு யான் பானஞ் செய்வேன்.

3. பரம பிதா எந்தன் கண்ணினின்றும்
அழுகையின் கண்ணீரைத் துடைத்திடுவார்.

4. சத்துரு சேனைகள் அங்கேயில்லை
இயேசுவின் புத்திரர் மாத்திரமே.

5. தேவாட்டுக் குட்டியின் திரு மனைவி
சிறப்புடன் இலங்கிடும் தேசமது.

6. கேருபீன் சேராபீன்கள் பாடிடவே
மூப்பரும் சாஷ்டாங்கம் பணிகிறாரே.

7. சொல்லுக்கும் நினைவுக்கும் எட்டிடாதே
சொர்லோக நாட்டிற்கோர் இணையில்லையே.

8. பரிசுத்த ஆவியின் பளிங்குநதி
பளபளவென்றொழுகும் தேசமது.

9. ஜீவ விருட்ச மங்காற்றருகில்
மாதந்தோறும் புதுக்கனி தருமே.

10. நவரத்ன நிர்மித பட்டணத்தில்
இராப்பகல் சூரியன் இயேசு தாமே.

1. மேலோகத்திலுள்ள மா சேனையார் யார் ?
ஜெய கீதத்தைப் பாடி கெம்பீரிக்கிறார்.

***பல்லவி***

பாவ நாசகரான மா நேசருக்கே
சர்வ மகிமை பாடிக் கெம்பீரிக்கிறார்.

2. ஓர் காலத்தில் தீயரானாலுமே, பார்!
தூய தன்மையராகிச் சந்தோஷிக்கிறார். – பாவ

3. நல் மீட்பர் இவ்வாறு மா நன்மை செய்தார்,
தேவ துரோகியை இரட்சித்திவ் வாழ்வைத் தந்தார். – பாவ

4. மாநேசர் இவ்வருள் செய்யாதே போனால்
கெடுவோமே! அநாதராய்ப் பாவத்தினால். – பாவ

5. ஏகோபித்தாராதிப்போம் மாட்சிமையாய்
அருள் நாதரைப் போற்று வோம் மகிழ்ச்சியாய்.– பாவ

**1.** பரம சீயோன் நாட்டில் சென்று சேரும் வேளை கிட்டுதே
பாரினிலே பாடுகள் மறைந்து போகுதே; துன்பம் துயரங்கள்
இல்லாத நாட்டில் நாம் அன்பர் இயேசு நல்கும் இன்ப சீயோனில் நாம்
மகிமையின் மனோகர கிரீடங்கள் அணிந்தோராய்
மன்னன் கிறிஸ்து நாதருடன் நித்தம் வாழுவோம்.

**2.** நீதி சூரியனின் ஒளியால் அல்லல், இருள் நீங்கிடும்
பீதியும் அநீதியும் அகன்று போயிடும்
சந்தோஷ பாக்கியம் அந் நல்ல நாட்களாம் இராஜ்ஜியம் செய்பவர்
கர்த்தாவின் ஆட்களாம், ரோகம், துக்கம், யுத்தம், துஷ்ட ஜாதிகள்,
புரட்சிகள் போகுமெல்லாம், இயேசு ராஜன் ஆட்சி நாளிலே.

**3.** பரிசுத்த நற்பாதையில் நடந்து வந்த பக்தர்கள்.
பாரினிலே மீட்கப்பட்ட தேவ புத்ரர்கள்,
இன்பக் களிப்புடன் சீயோனில் சேருவோம்.
துன்பத் தவிப்புகள் ஓடி மறைந்து போம்;
நித்திய மகிழ்ச்சியும், சந்தோஷமும் நிறைந்து நாம்,
நித்தியத்திற்குள் மறைவோமே, அல்லேலூயா.

1. கீதம் பாடியே பாதையில் திடன் கொள்ளுவோம்,
கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம். நித்ய நாளுதயமாம்
ராவொழிந்து போம்; கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம்.

*பல்லவி*

இன்னும் கொஞ்ச நாள், இன்னும் கொஞ்சநாள்,
யோர்தான் அலை தாண்டுவோம், கண்டு சந்திப்போம்,
கொண்டல் ஓய்ந்திடும் அந்நாள்
கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம்.

2. கைக்கு நேரிடும் வேலை சீராய்ச் செய்குவோம்,
கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம்;
திவ்ய கிருபையால் தினம் பெலன் கொள்ளுவோம்
கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம். – இன்னும்

3. சோர்ந்த மாந்தர்க்காய்ப் பாதை செவ்வை
பண்ணுவோம். கொஞ்ச நாளில் வீடு
செல்லுவோம் ஓ! நம் நேச நெஞ்சின்
செல்வாக்கை வீசுவோம், கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம். – இன்னும்

4. துன்பம் கவலை நீங்கிக் களைப்பாறுவோம்
கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம்.
கண்ணீரொழியும் சீயோன் நாட்டில் வாழுவோம்,
கொஞ்ச நாளில் வீடு செல்லுவோம். – இன்னும்
(கொண்டல் = கொண்டல் காற்று)

**1.** திவ்ய காளச் சத்தம் கேட்க இயேசு தோன்றும் காலத்தில்
ஆவலாய அக்காட்சி கண்டானந்திப்பேன்;
மீட்கப்பட்ட தாசர் ஒன்று கூடி மோட்ச லோகத்தில்
நிற்கும்போது நானும் கூடவேநிற்பேன்.

***பல்லவி***

தாசர் விண்ணில் ஒன்றுகூடி,
தாசர் விண்ணில் ஒன்றுகூடி,
தாசர் விண்ணில் ஒன்றுகூடி,
நிற்கும்போது நானும் கூடவே நிற்பேன்.

**2.** நித்ரை செய்த பக்தர் உயிர்த்து வானமேறியேகுவார்,
மீட்பர் மாண்பைக்கண்டு ஆரவாரிப்பேன்,
விசுவாசிகள் எல்லாரும் விண்ணில் கூடி வாழுவார்
அந்த நாளில் நானும் கூட வாழுவேன். – தாசர்

**3.** இயேசுநாதரின் பேரன்பை எங்கும் கூறும்படிக்கே
சோர்வில்லாமல் வேலைசெய்து ஜீவிப்பேன்
பின்பு, தாசர் ஒன்றுகூடி தேவ சந்நிதியிலே
நிற்கும்போது நானும் கூடவே நிற்பேன். – தாசர்

1. பொன்னகர் இன்பத்தைப் பெற்றிடுவோம்
துன்பமும் துக்கமும் மாறியேபோம் நன்மை சொரூபியைத்
தரிசிப்போம் நீடுழி காலம் பேரின்பமுண்டாம்.

***பல்லவி***

பேரின்பமாம், பூரிப்புண்டாம்,
பேரின்பமாம், பூரிப்புண்டாம்,
மேலுலகில் அவர் சந்நிதியில்
மேலான வாழ்வு பேரின்ப முண்டாம்.

2. மாட்சிமையான காருண்ணியத்தால்
மோட்ச பேர் நன்மையை அடையுங்கால்
சாட்சாத் நல் மீட்பரை நோக்குவதால்
நீடூழி காலம் பேரின்பமுண்டாம். – பேரின்ப

3. அன்பராம் இஷ்டரைக் கண்டு கொள்வோம்
இன்ப மா வாரியில் மூழ்கிடுவோம்
என்றைக்கும் இயேசுவை ஸ்தோத்திரிப்போம்
நீடூழி காலம் பேரின்ப முண்டாம். – பேரின்ப

அதிசயமான ஒளிமய நாடாம் நேசரின் நாடாம்–நான்
வாஞ்சிக்கும் நாடாம்.

1. பாவம் இல்லாத நாடு ஒரு சாபமும் காணா நாடு (2)
நித்திய மகிழ்ச்சி ஓயாத கீதம் உன்னதத்தில் ஓசன்னாஅல்லேலூயா – அதி

2. சந்திர சூரியன் இல்லை ஆனால் இருள் ஏதும் காணவில்லை (2)
தேவ குமாரன் ஜோதியில் ஜோதி நித்திய வெளிச்சமாவார்– என்றும் பகல் – அதி

3. வித வித கொள்கை இல்லை பல பிரிவுள்ள பலகை இல்லை (2)
ஒரே ஒரு குடும்பம் ஒரே ஒரு தலைவர் எங்குமே அன்புமயம்–
அன்புள்ளோர் செல்லும் – அதி

4. பிரச்சனை ஏதும் இல்லை வீண் குழப்பங்கள் ஒன்று மில்லை (2)
மொழி நிறம் ஜாதி பற்று உடையோர் எவருமே அங்கு இல்லை
அன்பே மொழி – அதி

5. கண்ணீர் இல்லாத நாடு என்றும் மரணமே காணா நாடு (2)
கர்த்தாதி கர்த்தர் இயேசுவே ராஜா ஆட்சி புரிவார் என்றும்–
அல்லேலூயா – அதி

6. இயேசுவின் இரத்தத்தினால் பாவம் கழுவினால் செல்லலாமே (2)
இத்தனை பெரிய சிலாக்கியம் இழப்போர் இப்பூமியில் எவரும்
வேண்டாம்–இன்றே வாரீர் – அதி

fppt.com

சிங்கார மாளிகையில் ஜெய கீதங்கள் பாடிடுவோம்
சீயோன் மணவாளனுடன் – சிங்கார

***சரணங்கள்***

1. ஆனந்தம்பாடி அன்பரைச் சேர்ந்து
ஆறுதல் அடைந்திடுவோம்– அங்கே அலங்கார மகிமையின்
கிரீடங்கள் சூடி அன்பரில் மகிழ்ந்திடுவோம் – சிங்கார

2. துயரப்பட்டவர் துதித்துப் பாடுவார் துதியின் உடையுடனே– அங்கே
உயரமாம் சீயோன் உன்னதரோடு களித்துக் கவி பாடுவோம் – சிங்கார

3. முள் முடி நமக்காய் அணிந்த மெய் இயேசுவின்
திருமுகம் கண்டிடுவோம்– அங்கே முத்திரையிட்ட சுத்தர்கள்
வெள்ளங்கி தரித்தோராய்த் துதித்திடுவோம் – சிங்கார

4. அவருரைத்த அடையாளங்க ளெல்லாம்
தவறாமல் நடக்கின்றதே – அவர் வரும் வேளையறியா
திருப்பதால் எப்போதும் ஆயத்த மாயிருப்போம் – சிங்கார

5. குருசைச் சுமந்த பரிசுத்தர் முன்னால் குருத்தோலை பிடித்திடுவோம்
–அங்கே கற்புள்ள கன்னியாய் கர்த்தரைப் பின்பற்றினோர்
மீட்பின் கீதம் பாடுவோம் – சிங்கார

1. இயேசு நாதர் மாட்சியோடு மீண்டும் வந்து தோன்றுவார்
நேச மீட்பர் மாண்பைக் கண்டு பூரிப்போம் நானாதிசையினின்று
அடியாரைக் கூட்டி வாழ்விப்பார் சேனை சேனையாகக் கூடியே நிற்போம்.

***<u>பல்லவி</u>***

கூடுவோமே, கூடுவோமே கூடிப்பாடிப் போற்றுவோமே,
மீட்பர் சன்னிதானத்தில் கூடுவோமே, கூடுவோமே
பாடிப் போற்றுவோம் பேரின்ப வீட்டினில்.

2. வாழ்நாள் சென்ற பின்பு நித்ரை அடைந்தோர் கெம்பீரமாய்
ஆழி மண்ணினின்றுயிர்த்துக் கூடுவார்
மகிமையின் தேகம் பெற்று அம்பலத்தில் இன்பமாய்
தூய மீட்பரண்டைக் கூடி வாழுவார். – கூடுவோமே

3. பின்பு மின்னும் மோட்ச ஸ்தானம் கண்டு பேரானந்தமாய்
இன்ப ஜீவ ஆற்றின் ஓரம் ஜீவிப்போம் நண்பர் நேசர் உறவோரை
சந்தித்தேகக் கூட்டமாய் விண்ணில் நித்ய காலம்
வாழ்ந்து கொள்வோம். – கூடுவோமே

4. இன்ப வாழ்வின் நல்ல நாள் இதோ சமீபமாயிற்றே
மன்னர் மன்னவன் பிரசன்ன மாகுவார்
தீது தீமை யாவும் நீக்கி இந்த பூமி எங்குமே
நீதி சமாதானத்தோடே ஆளுவார். கூடுவோமே

1. மன்னன் முன்னே நிற்போம் நாம் பொன்முடி சூடி
மன்னும் நித்தியானந்தம் மகிமை ஜீவனும்.

***பல்லவி***

அல்லேலூயா கீதம் பாடுவோம் நாம்
அல்லேலூயா கீதம் பாடுவோம் நாம் பாடுவோம் நாம்
பாடுவோம் நாம் அல்லேலூயா கீதம்.

2. அன்பரேசு எம்பிரான் அருகில் சேரவே
துன்பமெல்லாம் இன்பமாய் தீரும் நிச்சயம். – அல்லேலூயா

3. சாவு மற்ற லோகத்தில் சத்துரு பயமேன்
மேவு கர்த்தர் நம்மவர் மித்திரராவாரே. – அல்லேலூயா

4. விண்ணில் சேரும் சுத்தரின் கண்ணின் நீரெல்லாம்
மண்ணில் வந்த புண்ணியவான் அன்று நீக்குவார். – அல்லேலூயா

5. விண்ணோர் வீணை மீட்டியே பாடும் கானமும்
மண்ணோர் பாடும் மகிமை இன்பக் கீதமும். – அல்லேலூயா

6. தெய்வ மக்கள் யாவரும் ஒன்றாய் வாழ்ந்திடும்
தேவ மைந்தன் தந்திடும் திவ்விய இராஜ்ஜியத்தில். – அல்லேலூயா

1. இன்ப இயேசு ராஜாவை நான் பார்த்தால் போதும்
மகிமையில் அவரோடு நான் வாழ்ந்தால் போதும்
நித்தியமாம் மோட்ச வீட்டில் சேர்ந்தால் போதும்
பரிசுத்தர் கூட்டத்தில் நான் மகிழ்ந்தால் போதும்.

2. இயேசுவின் இரத்தத்தாலே மீட்கப்பட்டு வசனமாம் வேலியாலே
காக்கப்பட்டு கறை திரையற்ற பரிசுத்தரோடு ஏழையான் பொன் வீதியில்
உலாவிடுவேன்.

3. தூதர்கள் வீணைகளை மீட்டும் போது நிறைவான ஜெய கோஷம்
முழங்கும் போது அல்லேலூயா கீதம் பாடிக் கொண்டு
அன்பராம் இயேசுவோடு அக மகிழ்வேன்.

4. முட்கிரீடம் சூட்டப்பட்ட தலையைப் பார்ப்பேன்
பொற்கிரீடம் சூட்டி நானும் புகழ்ந்திடுவேன் வாரினால் அடிபட்ட
முதுகைப் பார்ப்பேன் ஒவ்வொரு காயங்களாய்
முத்தம் செய்வேன்.

5. என்னுள்ளம் நன்றியால் நிறைந்திடுதே எந்தனின் பாக்ய வீட்டை
நினைக்கையிலே அல்லேலூயா ஆமென் அல்லேலூயா
வர்ணிக்க எந்தன் நாவு போதாதய்யா

6. ஆஹா எக்காளம் என்று முழங்கிடுமோ ஏழை என் ஆவல் என்று
தீர்ந்திடுமோ அப்பா என் கண்ணீர் என்று துடைக்கிறாரோ ?
ஆவலாய் ஏங்கிடுதே என்னுள்ளமும்.

***பல்லவி***

பிரதான தூதன் எக்காளம் முழங்க பரமன் இயேசு வருவார் **(2)**

***அனுபல்லவி***

சாயங்காலத்திலோ நடு ராவினிலோ
சேவல் கூவிடும் நேரத்திலோ அதிகாலையிலோ எந்த வேளையிலோ
பரமன் இயேசு வருவார்**(2)**

***சரணங்கள்***

**1.** இருவர் வயலில் இருப்பார் இரண்டு ஸ்திரீகள் ஏந்திரம் அரைப்பார்
ஒருவர் கைவிடப்படுவார் ஏற்றுக் கொள்ளப்படுவார் ஒருவர் – சாயங்

**2.** நோவா காலத்தின் சம்பவம் போல் நடந்திடும் அந்த நாட்களிலே
புசித்தும் குடித்தும் பெண் கொண்டும் பலர் அசந்து வெறித்திருப்பார்
– சாயங்

**3.** லவுகீக கவலைகளினாலும் இலச்சை மிகுந்த வெறியினாலும்
நம் இதயம் பாரம் அடையாமல் எச்சரிக்கையுடன் காத்திருப்போம்
– சாயங்

**4.** இரவும் பகலும் விழிப்பாய் இருதயம் நொறுங்கி ஜெபிப்போம்
கற்புள்ள கன்னிகையாக நாமும் கர்த்தர் வருகைக்குக் காத்திருப்போம்
– சாயங்

**5.** தவிக்கும் உலகம் அந்த நாளில் தலைகளை உயர்த்தி நடப்போம்
வருகை நெருங்க கர்த்தர் இயேசு வாசற்படியில் வந்து நிற்கிறார்
– சாயங்

1. அந்த இன்ப நாட்டின் நினைவில் வாழ்கிறேன்
அஸ்தமானத்தில் அங்கு சேர்வேன்
கிருபையால் இரட்சகர் பக்கம் நான் நிற்கையில்
என் கிரீடம் ஜொலிக்க காண்பேனோ ?

***<u>பல்லவி</u>***

மின்னும் நட்சத்திரம் என் கிரீடத்திலுண்டோ
அஸ்தமானத்தில் சேரும் போது ? பேரின்ப நாட்டினின் சுகிர்த
வாழ்விலே என் கிரீடம் ஜொலிக்க காண்பேனோ ?

2. கர்த்தரின் பெலத்தில் உழைத்து ஜெபிப்பேன்
ஆத்தும பாரத்தோடு வாழ்வேன் அந்த இன்ப நாளின் மின்னும்
நட்சத்திரம் என்னதாய் மாற நான் உழைப்பேன். – மின்னும்

3. நான் அவர் முகங் கண்டானந் தங் கொள்ளுவேன்
அவர் பாதம் வீழ்ந்து போற்றுவேன் பொன்னகர் இன்பம் என்
பங்காக விளங்கும் என் கிரீடம் ஜொலிக்க காணுங்கால். – மின்னும்

## 278

## ***பல்லவி***

ஆயிர வருட அரசாட்சியே பரிசுத்தவான்களின்
இராஜ்ஜியமே பரம பிதா வேத வாக்கிதே
பசுமை பொற்காலம் நெருங்கிடுதே.

## ***சரணங்கள்***

**1.** பசுவும் கரடியும் கூடிமேயுமே புலியும் வெள்ளாடும்
படுத்திருக்கும் ஒருமித்து நடக்கும் காளையும் சிங்கமும்
ஒரு சிறு பையனே நடத்திடுவான். – ஆயிர

**2.** இடுக்கண்கள் நீங்கும், இளைப்பார் இல்லை
இகத்தில் கர்த்தாவின் மகிமை தங்கும் குழந்தையின் கரங்கள்
பாம்பின் மண் புதரில் களங்கம் பயமின்றி விளையாடுமே. – ஆயிர

**3.** வறண்ட நிலங்களும் செழித்தோங்குமே
விருட்சங்கள் இனிய கனிதருமே. அமைதியும் நிலவும் சுகவாழ்வு
துளிர்க்கும் அற்பாயுசுள்ளோர்கள் அதில் இல்லையே. – ஆயிர

**4.** கிறிஸ்தேசு ராஜா புவி ஆளுவார் கிடைக்கும் நல் நீதி
எளியவர்க்கே பரிபூர்ணமடைந்த மெய் தூய பக்தர்கள்
பரனோடு நீடூழி அரசாளவே. – ஆயிர

**1.** நாயனே எந்தன் ஆத்துமா உம்மைக் கிட்டிச் சேரும்.
நாளுக்கு நாள், என் இரட்சகா, இன்னும் கிட்டிச்சேரும்.
தூய விலாவின் தீர்த்தத்தை பாய்ந்த மாசற்ற இரத்தத்தை;
காயமும் தோன்றும் பாதத்தை இன்னும் கிட்டிச்சேரும்;
இன்னும் கிட்டிச்சேரும்.

**2.** இன்னும் என் உள்ளம் ஜெபத்தால், உம்மைக் கிட்டிச் சேரும்.
மன்னாவை ஈயும் வேதத்தால், இன்னும் கிட்டிச் சேரும்
பாவத்தைத் தீர்த்த தூயரை, ஜீவனை விட்ட மீட்பரை.
சாவினை வென்ற நாதரை இன்னும் கிட்டிச் சேரும்;
இன்னும் கிட்டிச் சேரும்;

**3.** நம்பிக்கையோடென் ஆத்துமா இன்னும் உம்மை நாடும்.
உந்தனைக் காண நாயகா! மேலும் மேலும் நாடும்
இயேசுவின் மா பிரசன்னத்தை தாசரின் மோட்சானந்தத்தை
ஆசித்த ஜீவ கிரீடத்தை மேலும் மேலும் நாடும்;
மேலும் மேலும் நாடும்.

1. இயேசுவின் அன்பில் மூழ்கவும், நேசத்தின் ஆழம் பார்க்கவும்,
இன்னமும் தீரா வாஞ்சையே. என்னில் உண்டாகுகின்றதே.

***__பல்லவி__***

ஆட்கொண்டவர் நேசம், ஈடேற்றின நேசம்
இன்னும் மென்மேலும் வாஞ்சிப்பேன்;
உன்னத அன்பைப் போற்றுவேன்.

2. இயேசுவின் சொல்லும் சித்தமும், ஆசையுள்ளோனாய் செய்யவும்
தேவ ஒத்தாசை நம்புவேன், ஆவியின் பேரில் சாருவேன். – ஆட்

3. நாதரின் இன்ப சத்தமும் வேதத்தில் கேட்டு நித்தமும்
ஆத்தும நன்மை நாடுவேன்; நீதியின் பாதை செல்லுவேன். – ஆட்

4. இயேசுவின் இராஜரீகமும், ஆசித்த மா செங்கோன்மையும்
விண்ணிலே தோன்றும் வண்ணமாய்; மண்ணிலுண்டாகும்
மேன்மையாய். – ஆட்

**1.** சிலுவை சுமந்தோனாக, இயேசு, உம்மைப் பற்றினேன்
ஏழைப் பரதேசியாக மோட்ச வீடு நாடுவேன்.
உற்றார், மேன்மை, ஆஸ்தி கல்வி ஞானம், லோகம் அனைத்தும்
அற்ப குப்பை என்று எண்ணி வெறுப்பேனே முற்றிலும்.

***பல்லவி***

உம்மைப் பின் செல்வேன் என் நாதா எனக்காக நீர் மரித்தீர்
உம் கிருபை என்னைத் தாங்கின் உமதன்பால் நான் நிற்பேன்.

**2.** துஷ்டர் என்னைப் பகைத்தாலும் நீரே தஞ்சம் ஆகுவீர்;
கஸ்தி என்ன நேரிட்டாலும். இனி மேன்மை தருவீர்;
உமதன்பு என்னைத் தேற்ற, துக்கம் பயமில்லையே;
நாதா உம் பிரசன்னம் நீங்க, இன்பமெல்லாம் துன்பமே. – உம்மை

**3.** நெஞ்சமே, விண் மேன்மை நோக்கி பாவம் பயம் அகற்று;
எந்தக் கஷ்டத்தையும் தாங்கி மீட்பரை நீ பின்பற்று;
திவ்ய அன்பை சிந்தை செய்து நித்திய மீட்பை நினையேன்;
ஆவியின் சகாயம் நம்பு நெஞ்சமே, கலக்கம் ஏன் ? – உம்மை

1. என் இரட்சகா! நீர் என்னிலே மென்மேலும் விளங்கும்,
பொல்லாத சிந்தை அறவே நாள்தோறும் செய்திடும்.

2. என் பெலவீனந் தாங்குவீர் மாவல்ல கரத்தால்;
சாவிருள் யாவும் நீக்குவீர் மெய் ஒளி ஜீவனால்.

3. அசுத்த சிந்தை அகலும்உம் அருள் ஜோதியால்;
சுத்தாங்க குணம் பிறக்கும் நல்லாவி கிரியையால்.

4. என்னில் தெய்வீக மகிமை மென்மேலும் காண்பியும்;
மாசற்ற திவ்விய சாயலை உண்டாக்கியருளும்.

5. சந்தோஷிப்பித்துத் தாங்குவீர் ஒப்பற்ற பெலத்தால்;
என் நெஞ்சில் அனல் மூட்டுவீர் பேரன்பின் ஜுவாலையால்.

6. நான் சிறுக நீர் பெருக, சகாயம் புரியும்;
மெய் பக்தியில் நான் வளர, கடாட்சித்தருளும்,

# 283

1. திவ்விய அன்பின் சத்தத்தை இரட்சகா
கேட்டு உம்மை அண்டினேன் இன்னும் கிட்டிச் சேர என்
ஆண்டவா ஆவல் கொண்டிதோ வந்தேன்.

***<u>பல்லவி</u>***

இன்னும் கிட்ட கிட்ட சேரும் கர்த்தரே
நீர் மரித்த குருசண்டை இன்னும் கிட்ட கிட்ட
சேரும் இரட்சகா இரத்தம் சிந்தும் விலாவோடே.

2. என்னை முற்றுமே இந்த நேரத்தில்
சொந்தமாக்கிக் கொள்ளுமேன்; உம்மை வாஞ்சையோ
டெந்தன் உள்ளத்தில் நாடித்தேடச் செய்யுமே.– இன்னும்

3. திருப்பாதத்தில் தங்கும் போதெல்லாம்
பேரானந்தம் காண்கிறேன்; உம்மை நோக்கி வேண்டுதல்
செய்கையில் மெய்ச் சந்தோஷமாகிறேன். – இன்னும்

4. இன்னும் கண்டிராத பேரின்பத்தை
விண்ணில் பெற்று வாழுவேன்;
திவ்விய அன்பின் ஆழமும் நீளமும்,
அங்கே கண்டானந்திப்பேன். – இன்னும்

# 284

## *பல்லவி*

மான்கள் நீரோடை வாஞ்சித்து கதறும்போல் தேவனே
எந்தன் ஆத்துமா உம்மையே வாஞ்சித்து கதறுதே.

## *அனுபல்லவி*

தஞ்சமே நீர் அடைக்கலம் நீர்
கோட்டையும் நீர், என்றும் காப்பீர்.

## *சரணங்கள்*

1. தேவன் மேல் ஆத்துமாவே தாகமாயிருக்கிறதே
தேவனின் சன்னிதியில்– நின்றிட
ஆத்துமா வாஞ்சிக்குதே.– தஞ்சமே

2. ஆத்துமா கலங்குவதேன் நேசரை நினைத்திடுவாய்
அவரின் இரட்சிப்பினால்– தினமும்
துதித்துப் போற்றிடுவேன். – தஞ்சமே

3. யோர்தான் தேசத்திலும் எர்மோன் மலைகளிலும்
சிறு மலைகளிலிருந்தும்– உம்மை தினமும் நினைக்கின்றேன்.
– தஞ்சமே

4. தேவரீர் பகற்காலத்தில் கிருபையைத் தருகின்றீர்
இரவில் பாடும் பாட்டு– எந்தன்
வாயினிலிருக்கிறது.– தஞ்சமே

***பல்லவி***

விந்தைக் கிறிஸ்தேசு ராஜா
உந்தன் சிலுவை என் மேன்மை

***அனுபல்லவி***

சுந்தரம் மிகும் இந்தப் பூவில்
எந்த மேன்மைகள் எனக்கிருப்பினும்

***சரணங்கள்***

**1.** திரண்ட ஆஸ்தி உயர்ந்த கல்வி,
செல்வாக்குகள் மிகவிருப்பினும்,
குருசை நோக்கிப் பார்க்க எனக்கு
உரிய பெருமை யாவும் அற்பமே. – விந்தை

**2.** உம் குருசே ஆசிக்கெல்லாம் ஊற்றாம் வற்றா ஜீவநதியாம்
துங்க இரத்த ஊற்றில் மூழ்கித்
தூய்மையடைந்து மேன்மை யாகினேன். – விந்தை

**3.** சென்னி, விலா, கைகாலினின்று சிந்துவதோ துயரோடன்பு
மன்னா இதைப் போன்ற காட்சி
எந்நாளிலுமே எங்கும் காணேன். – விந்தை

**4.** இந்த விந்தை அன்புக்கீடாய் என்ன காணிக்கை ஈந்திடுவேன்
எந்த அரும் பொருள் ஈடாகும்
என்னை முற்றிலும் உமக்களிக்கிறேன். – விந்தை

speakarun@gmail.com

# 286

## பல்லவி

இயேசுவின் மார்பினில் சாருவேனே
சாருவேனே, சாருவேனே,
துன்பம் துக்கம் கண்ணீர் மறப்பேனே மறப்பேனே. மறப்பேனே.

## ***சரணங்கள்***

1. நீசச் சிலுவை மீதினிலே என் பாவம் போக்கத் தொங்கினீரே.
ஆருயிர் நாதனே, இத்தனை வாதைகள் என்னை நின் மந்தையில்
சேர்த்திடவோ, சேர்த்திடவோ – இயேசு

2. கல்வாரி நாதா நின் இரத்தத்தை சிந்தினீரே இப்பாவிக்காக;
கைகால்கள் ஆணிகள் கடாவப் பட்டதே,
முள் முடி சூடினர் நின் சிரசில், நின் சிரசில் –இயேசு

3. ஜீவனை விட்ட என் நேசரே ஒப்புவித்தேன் என்னை உமக்காய்,
கரத்தில் ஏந்தியே பொற் கிரீடம் சூடியே
விண்ணிலும் சேர்ப்பீரே பாவி என்னை, பாவி என்னை – இயேசு

4. காரிருள் மூடும் நேரத்தினில் கர்த்தா உம் பாதம் அண்டினேனே
எந்தனை மீட்டிட உந்தனை ஈந்தீரே! அன்பின் சொரூபி, என்
இயேசு நாதா, இயேசு நாதா – இயேசு

speakarun@gmail.com

1. ஜீவ நேசா ! அருள் நாதா ! உந்தன் பேரில் சாருவேன்.
திவ்ய அன்பின் ஆழம் நீளம் கண்டு களிப்பேன்;
அருள் முகம் உற்றுப் பார்க்கப் பரவச மாகுவேன்;
திருச்சாயலாக மறு ரூபமடைவேன்.

***<u>பல்லவி</u>***

ஜீவ நேசா அருள் நாதா ! உந்தன் பேரில் சாருவேன்
திவ்ய அன்பின் ஆழம் நீளம் கண்டு களிப்பேன்.

2. உமதன்பின் பிரவாகம் கடல் விடப் பெரிதே.
பொழிந்தீரே ! தயாநிதி ! என்தன் பேரிலே !
நேச இரட்சகா ! அனந்த அருள் செல்வம் நல்கினீர்,
எனக்காக, நிறைவாக, வாரி, இறைத்தீர். – ஜீவ

3. இயேசுவே ! அன்பின் சொரூபி ! உம்மை நோக்கிப் பார்க்கையில்,
இன்ப வெள்ளம் பேரானந்தம் எந்தன் உள்ளத்தில்,
பொங்கியே, ஏராளமாக, மனோரம்யம் அடைவேன்,
குறைதீர, குணமாற திருப்தியாகுவேன். – ஜீவ

4. திருமுகத்தின் ப்ரகாசம் என்னில் வீசச் செய்யவும்,
அதினால் பாவந்தகாரம் பறந்தோடவும்
தயை புரிந் தென்னைக் காரும் ஜோதி மா திவாகரா !
அன்பு அனல் மூட்டி வாரும் ‘ கருணாகரா. – ஜீவ

speakarun@gmail.com

1. உம்மண்டை தேவனே நான் சேரட்டும்;
சிலுவை சுமந்து நடப்பினும், என் ஆவல் என்றுமே
உம்மண்டை தேவனே, நான் சேர்வதே.

2. தாசன் யாக்கோபைப்போல் இராக் காலத்தில்
திக்கற்றுக் கல்லின்மேல் நான் துயில்கையில்
எந்தன் கனாவிலே உம்மண்டை, தேவனே;
நான் இருப்பேனே.

3. நீர் என்னை நடத்தும் பாதை எல்லாம்
விண் எட்டும் ஏணிபோல் விளங்குமாம் தூதர் அழைப்பாரே
உம்மண்டை தேவனே. நான் சேரவே.

4. விழித்து உம்மையே நான் துதிப்பேன்;
என் துயர்க் கல்லை உம் வீடாக்குவேன்;
என் துன்பத்தாலுமே உம்மண்டை தேவனே, நான் சேர்வேனே.

1. இயேசுவே, உந்தன் சிந்தனை மாபெரும் இன்பமே,
கண்ணார உம்மைக் காண்கையில்அதிலும் இன்பமாம்.

2. உம் நாம மதுர நாதம் ஒப்பற்றதல்லவோ ?
அதிலும் இன்ப நாதமே பூவினில் இல்லையே.

3. மாந்தர் இதயம் அதைப்போல் நாதம் எழுப்புமோ ?
மானிடர் ஞானம் அறிவும் அதை அமைக்குமோ ?

4. உடைந்து போன இதயம் நம்பிக்கை காண்பதும்,
தாழ்மையுள்ளோர் மகிழ்வதும் அந்நாமத்தில். அன்றோ ?

5. பெலவீனர்கள் யாவர்க்கும் கிருபை ஈகிறீர்
உம்மைத் தேடுவோர் யாவர்க்கும் நன்மையும் நல்கிறீர்.

6. அவரைக் கண்டடைவோர்க்கு இயேசுவின் அன்புதான்
எத்தனை இன்பமானதே ! பகரலாகுமோ ?

7. இயேசுவே, எந்தன் பெலனே, எம் கிரீட மாகுவீர்,
இப்போ எம் மகிமையானீர் நித்தியத்துக்குமாய்.

speakarun@gmail.com

## 290

பல்லவி

தேவனே, நான் உமதண்டையில் இன்னும் நெருங்கிச் சேர்வதே
என் ஆவல் பூமியில்.

***அனுபல்லவி***

மாவலிய கோரமாக வன் சிலுவை மீதினில் நான்
கோவே, தொங்க நேரிடினும் ஆவலாய் உம்
மண்டை சேர்வேன். – தேவனே

***சரணங்கள்***

**1.** யாக்கோபைப்போல், போகும் பாதையில்–பொழுது பட்டு
இராவில் இருள் வந்து மூடிட, தூக்கத்தால் நான் கல்லில்
சாய்ந்து தூங்கினாலும் என் கனாவில் நோக்கியும்மைக் கிட்டிச்
சேர்வேன், வாக்கடங்கா நல்ல நாதா! – தேவனே

**2.** பரத்துக்கேறும் படிகள் போலவே என் பாதை தோன்றப்
பண்ணும் ஐயா, எந்தன் தேவனே, கிருபையாக நீர் எனக்குத்
தருவதெல்லாம் உமதண்டை அருமையாய் என்னை
யழைக்கும் அன்பின் தூதராகச் செய்யும். – தேவனே

**3.** நித்திரையினின்று விழித்துக்– காலை எழுந்து
கர்த்தாவே, நான் உம்மைப் போற்றுவேன்; இத்தரையில் உந்தன் வீடாய்
என் துயர்க் கல் நாட்டுவேனே, எந்தன் துன்பத்தின் வழியாய்
இன்னும் உம்மைக் கிட்டிச் சேர்வேன் – தேவனே

**4.** ஆனந்தமாம் செட்டை விரித்துப்–பரவசமாய்
ஆகாயத்தில் ஏறிப் போயினும் வான மண்டலங் கடந்து
பறந்து மேலே சென்றிடினும், மகிழ்வுறு காலத்திலும் நான்
மருவியும்மைக் கிட்டிச் சேர்வேன் – தேவனே

speakarun@gmail.com

பல்லவி

பாதம் ஒன்றே வேண்டும்;– இந்தப்
பாரில் எனக்கு மற்றேதும் வேண்டாம்–உம்

1. நாதனே, துங்க மெய்– வேதனே, பொங்குநற்
காதலுடன் துய்ய–தூதர் தொழுஞ் செய, –பாதம்

2. சீறும் புயலினால்–வாரிதி பொங்கிடப்
பாரில் நடந்தாற்போல் நீர்மேல் நடந்த உம்–பாதம்

3. வீசும் கமழ் கொண்டவாசனைத் தைலத்தை
ஆசையுடன்–மரி–பூசிப் பணிந்த பொற் – பாதம்

4. போக்கிடமற்ற எம் ஆக்கினை யாவையும்,
நீக்கிடவே மரந்–தூக்கி நடந்த நற் –பாதம்

5. நானிலத்தோர் உயர்–வான் நிலத் தேற வல்
ஆணி துளைத்திடத்–தானே கொடுத்த உம் –பாதம்

6. பாதம் அடைந்தவர்க்– காதரவாய்ப் பிர
சாதம் அருள் யேசு–நாதனே, என்றும் உம் –பாதம்

ஒப்புவித்தேன் ஐயனே  உம் சித்தம் செய்ய தந்தேனே
முற்றிலுமாய் அர்ப்பணித்தேன் ஏற்றுக் கொள்ளும் இயேசுவே.

1. சுட்டெரிக்கும் அக்கினியால் சுத்திகரித்தென்னை மாற்றிடுமே
ஆவி ஆத்துமா சரீரமாய் ஆத்தும நேசரே மகிழ்ந்திட

2. எந்தனின் சிந்தை முன் அறிவீர் எந்தனின் பாதை நீர் அறிவீர்
உந்தன் பாதை நடந்திட நாதனே என்னையும் அர்ப்பணித்தேன்.

3. சோதனை எம்மை சூழ்ந்திடினும் சோர்ந்திடா உள்ளம்
தந்தாற்போல் ஜீவ கிரீடம் முன்னே வைத்தே ஜீவிய காலம்
நடத்திட.

speakarun@gmail.com

# 293

1. என் ஜீவன், சுகம் செல்வம் பிரதிஷ்டை செய்கிறேன்!
உற்சாக பலியாக நான் ஒப்புவிக்கிறேன்.

2. மா நேசரே! என் நாதா! நீர் ஏற்றுக்கொள்ளுமேன்;
நான் உம்தன் சொந்தமாக எந்நாளும் ஜீவிப்பேன்.

3. என் உள்ளத்தில் நீர் வந்து பிரசன்னமாகுவீர்;
ஏகாதிபதியாக அங்காட்சி செய்குவீர்.

4. நீர் ஆளும்! இயேசுநாதா! என் இராஜாவாயிரும்!
எக்காலும் அடியேனை ஆட்கொண்டு நடத்தும்.

1. கொந்தளிக்கும் லோக வாழ்வில் கேட்போம் மீட்பர் சத்தத்தை
நித்தம் நித்தம் மா அன்போடு "நேசா! பின் செல்வாய் என்னை".

2. பூர்வ சீஷன் அந்திரேயா கேட்டான் அந்த சத்தமே;
வீடு, வேலை, இனம் யாவும் விட்டான் அவர்க்காகவே.

3. மண் பொன் மாயலோக வாழ்வை விட்டு நீங்க அழைப்பார்;
பற்று பாசம் யாவும் தள்ளி "என்னை நேசிப்பாய் " என்பார்.

4. இன்பம் துன்பம், கஷ்டம் சோர்வு வேலை தொல்லை ஓய்விலும்
யாவின் மேலாய்த் தம்மை சார நம்மை அழைப்பார் இன்றும்.

5. மீட்பரே, உம் சத்தம் கேட்டு, கீழ்ப்படிய அருளும்;
முற்றும் உம்மில் அன்பு வைத்து என்றும் சேவிக்கச் செய்யும்.

1. என் ஆவி ஆத்மா, தேகம் சர்வாங்க பலியாய்,
நான் படைத்தொப்புவித்தேன் என் மீட்பர் சொந்தமாய்.

**பல்லவி**

ஆம்! பலிபீடம் பேரில் சமஸ்தம் படைத்தேன்;
மாசற்று சுத்தமாக நீர் என்றும் காருமேன்.

2. உம் அருள் வாக்கை நம்பி வந்தேனே! நோக்குவீர்!
ஆ! வல்ல நேசநாதா! நீர் முற்றும் இரட்சிப்பீர். – ஆம்

3. சரீர அங்கம் யாவும் போர் ஆயுதங்களாய்ப்
பிரதிஷ்டை செய்தேன் பாரும் கையாடும் நித்தமாய். – ஆம்

4. உம்மாலே அருள்நாதா! நான் இனி ஜீவிப்பேன்;
உம் ஜீவன் சாயல் என்னில் தென்படச் செய்யுமேன். –ஆம்

1. இயேசுவுக்கே ஒப்புவித்தேன் யாவையும் தாராளமாய்
என்றும் அவரோடே தங்கி நம்பி நேசிப்பேன் மெய்யாய்.

***<u>பல்லவி</u>***

ஒப்புவிக்கிறேன், ஒப்புவிக்கிறேன் நேச இரட்சகா! நான்
யாவையும் ஒப்புவிக்கிறேன்.

2. இயேசுவுக்கே ஒப்புவித்தேன் அவர் பாதம் பணிந்தேன்
லோக இன்பம் யாவும் விட்டேன் இப்போதேற்றுக் கொள்ளுமேன்.
– ஒப்பு

3. இயேசுவுக்கே ஒப்புவித்தேன் முற்றும் ஆட்கொண்டருளும்
நான் உம் சொந்தம், நீர் என் சொந்தம் சாட்சியாம் தேவாவியும்.– ஒப்பு

4. இயேசுவுக்கு ஒப்புவித்தேன் நாதா அடியேனையும்
அன்பு, பெலத்தால் நிரப்பி என்னை ஆசீர்வதியும். – ஒப்பு

5. இயேசுவுக்கே ஒப்புவித்தேன் திவ்விய ஜுவாலை வீசுதே
பூரண இரட்சை பேரானந்தம் சதா ஸ்தோத்திரம் அவருக்கே. – ஒப்பு

1. எந்தன் ஜீவன், இயேசுவே! சொந்தமாக ஆளுமே
எந்தன் காலம் நேரமும், நீர் கையாடியருளும்.

2. எந்தன் கை பேரன்பினால் ஏவப்பட, எந்தன் கால்
உம்தன், வேலை செய்யவும், விரைவாகச் செய்யுமேன்.

3. எந்தன் நாவு, இன்பமாய் உம்மைப் பாடவும், என் வாய்
மீட்பின் செய்தி கூறவும் ஏதுவாக்கியருளும்.

4. எந்தன் ஆஸ்தி, தேவரீர், முற்றும் அங்கீகரிப்பீர்,
புத்தி, கல்வி, யாவையும் சித்தம்போல் பிரயோகியும்.

5. எந்தன் சித்தம் இயேசுவே ஒப்புவித்து விட்டேனே
எந்தன் நெஞ்சில் தங்குவீர், என்னை நித்தம் ஆளுவீர்.

6. திருப் பாதம் பற்றினேன். எந்தன் நேசம் ஊற்றினேன்.
என்னையே சமூலமாய் தத்தம் செய்தேன் நித்தமாய்.

1. பலி பீடத்தில் என்னை பரனே படைக்கிறேனே இந்த வேளை
அடியேனைத் திருச் சித்தம் போல ஆண்டு நடத்திடுவீர்.

***பல்லவி***

கல்வாரியின் அன்பினையே கண்டு விரைந்தோடி வந்தேன்.
கழுவும் உம் திரு இரத்தத்தாலே கறை நீங்க இருதயத்தை.

2. நீரன்றி என்னால் இப்பாரில் ஏதும் நான் செய்திட இயலேன்
சேர்ப்பீரே வழுவாது என்னை காத்துமக்காய் நிறுத்தி. – கல்

3. ஆவியோடாத்மா சரீரம் அன்பரே உமக்கென்றும்
தந்தேன் ஆலய மாக்கியே இப்போ ஆசீர்வதித்தருளும். – கல்

4. சுய மென்னில் சாம்பலாய் மாற சுத்தாவியே அனல் மூட்டும்
ஜெயம் பெற்று மாமிசம் மாய தேவா அருள் செய்குவீர். – கல்

5. பொன்னையும் பொருளையும் விரும்பேன்
மண்ணின் வாழ்வையும் வெறுத்தேன்
மன்னவன் இயேசுவின் சாயல் இந்நிலத்தில் கண்டதால். – கல்

***பல்லவி***

தேவ சித்தம் நிறைவேற எனையும் ஒப்படைக்கிறேன்
தேவ சத்தம் என்னுள்ளில் பலமாக தொனிக்குதே

***சரணங்கள்***

1. முட்களுக்குள் மலர்கின்றதோர் மக்களைக் கவரும் லீலி புஷ்பம் போல்
என்னையுமே தம் சாயலாய் என்றென்றும் உருவாக்குவார். – தேவ

2. பொன்னைப் போல புடமிட்டாலும் பொன்னாக விளங்குவேன்
என்றென்றுமே திராணிக்குமேல் சோதித்திடார் தாங்கிட பெலனளிப்பார்.
– தேவ

3. அத்திமரம் துளிர்விடாமல் ஆஸ்திகள் அழிந்து நஷ்டம் வந்தாலும்
கர்த்தருக்குள் சந்தோஷமாய் நித்தமும் மகிழ்ந்திருப்பேன். – தேவ

4. சோதனையை சகிப்பவனே சாந்தமும் பொறுமையு முள்ளவனே,
ஜீவ கிரீடம் பெற்றிடுவான் ஜோதியாய்ப் பிரகாசிப்பான். – தேவ

5. கஷ்டமெல்லாம் தொலையும் ஓர் நாள் கண்ணீரும் கவலையும்
நீங்கும் அந்நாள் இரட்டிப்பான பங்கைப் பெற இரட்சகர் அழைத்திடுவார்.
– தேவ

1. மா நேசர் பேரில் சார்ந்து நான் சுகித்தாறுவேன்; தயாபரா ! வேறென்ன பேர் நன்மை நாடுவேன் ? மெய்ஞான ஒளிகண்டு பேரன்பைருசித்தேன்; ஆனந்தக் களிப்போடு எக்காலும் வாழுவேன்.

**_பல்லவி_**

மாநேசர் பேரில் சார்ந்து நான் சுகித்தாறுவேன், தயாபரா ! வேறென்ன பேர் நன்மை நாடுவேன் ?

2. என் பாவம், குற்றம் தோஷம் அனந்தம் ஆயினும்.
உம் அருள் செல்வம் அன்பும் ஏராளம் அதிலும்; மாசற்ற பலியாக
நீர் இரத்தஞ் சிந்தினீர்; உம்மோடிறந்த என்னை உயிர்த்தெழும்பச்
செய்தீர். – மா

3. என்னாலே இயேசுநாதா ! உம் சித்தம் வேலையும் நாள்தோறும்
நடந்தேற கடாட்சம் புரியும்; அசுத்தனே யானாலும் சற்றேனும் தளரேன்
உம்மாலே சர்வ பெலன் எப்போதும் பெறுவேன். – மா

4. விரோதம் நேரிட்டாலும் சமீபம் நிற்கிறீர். மெய் விசுவாசந் தந்து
என் சோர்வை நீக்குவீர்; மா திவ்ய மார்பில் சாய்ந்து நின் அருள் முகமும்
நான் கண்டு களிப்பேனே எந்தெந்த நேரமும். – மா

5. என் பாவ பாசக் கட்டும் நீர் முற்றும் அவிழ்த்தீர்; ஆ ! இயேசுவே ! நீர்
என்னை ஆட்கொண்டு காக்கிறீர்; பூலோக எந்த வாழ்வும்
இல்லாமல் போயினும், உம் அருள் செல்வம் இன்னும் குன்றாமல்
பெருகும். –மா

1. திவ்ய ஐக்கியத்தில் நிலைப்போமேயாகில் அருள் ஜோதியிலே நடப்போம், வல்ல ஆவியினால், தேவ சித்தஞ் செய்தால், பெரும் பாக்கியம் பெற்றே வாழுவோம்.

***பல்லவி***

கீழ்ப்படிவோம் தேவ சித்தஞ் செய்வோம் திருவாக்கை எப்போதும் நம்பிக் கீப்படிவோம்.

2. மேகந் தோன்றுமானால், அன்பின் சூரியனால் அது நில்லாமல் மறைந்தே போம், சோர்பு சந்தேகமும், அவநம்பிக்கையும் அணுகாமலே, முன் செல்லுவோம். – கீழ்ப்

3. எந்த வேளையிலும் இன்ப துன்பத்திலும் அருள் நாதர் சகாயஞ் செய்வார் வருஞ் சோதனையோ, மனோ சஞ்சலமோ, இவை நீக்கியே பாதுகாப்பார். – கீழ்ப்

4. நம்பிக் கீழ்ப்படிந்தே, திருப்பாதத்திலே நம்மை முற்றிலும் ஒப்புவிப்போம்; பெரு நன்மை ஈவார், ஆவியால் நிறைப்பார் துக்கப்படுத்தாதிருப்போமே. – கீழ்ப்

5. கர்த்தரோடின்பமாய், அந்நியோன்னியமாய் நீங்காமலே வாசஞ் செய்வோம் அவர் சொற்படியே, உண்மையோடுடனே, மனோற்சாகமாய்க் கீழ்ப்படிவோம் – கீழ்ப்

1. இராஜாதி இராஜாவுக் கென்றே தெரிந்து கொண்டதால்
பூமிக்குரிய  வைகளினின்றே, பிரிந்த பாத்திரம்.

***பல்லவி***

தெரிந்த பாத்திரம், வெறுமை சிறுமையே;
ஆயினும் அடங்கும் ஆஸ்தியோ ? நேயன் கிறிஸ்துவே!

2. தேவ நாம வாசனை வீச தெரிந்த பாத்திரம்,
சிலுவையின் நிந்தை சுமக்க, பிரிந்த பாத்திரம்.– தெரிந்த

3. அதமான உலகத்தின் மேல் இதமாய்ப் பாடுபட,
போரில் ஜெயம் கிட்டும் வரையில் நேரில் நின்றிட. – தெரிந்த

4. தெரிந்து கொண்ட பாத்திரம், சிறிய மண் பாண்டமே,
ஆயினும் அடங்கும் ஆஸ்தியோ நேயன் கிறிஸ்துவே.– தெரிந்த

1. எப்போதும், இயேசு நாதா, உம்மைப் பின்பற்றுவேன்
என்றே தீர்மானமாக நான் வாக்குக் கொடுத்தேன்;
நீர் என்னைத் தாங்கிக் காப்பீர், அப்போது அஞ்சிடேன்;
முன் சென்று பாதை காட்டும், நான் வழி தவறேன்.

2. பூலோக இன்பம், செல்வம் வீண் ஆசாபாசத்தால்;
என் ஆத்மா மயங்காமல் தெய்வீக பலத்தால்,
நீர் துணைநின்று தாங்கும், என் அருள் நாயகா;
தீங்கணுகாமல் காரும்,மா, வல்ல இரட்சகா.

3. ஆங்காரம் சுய சித்தம்தகாத சிந்தையால்
மா கலக்கம் உண்டாகி நான் தடுமாறினால், நீர் பேசும் அருள் நாதா,
கொந்தளிப்படங்கும்; உம் நேச சத்தம் கேட்டு என் ஆவி மகிழும்.

4. ‘‘பின்பற்றினால் விண் வீட்டில் பேரின்பம் பெறுவீர்,’’
என்றுந்தன் சீஷர் நோக்கி நீர் வாக்கு அளித்தீர்;
அவ்வருள் வாக்கை நம்பி இவ்வேழை அடியேன்
‘‘இதோ, பின்செல்வேன்,’’ என்று பிரதிக்னை பண்ணினேன்.

5. ஓயாமல் பெலன் தாரும்; உம்மடிச் சுவட்டில்
கால் வைத்து நடந்தேகி நான் யாத்திரை செய்கையில்
நீர் வழி காட்டி, என்னை கைதாங்கி வருவீர்;
அப்பாலே மோட்ச வீட்டில் பேர் வாழ்வை அருள்வீர்.

**1.** இயேசு நல்ல இயேசு என்னை இரட்சித்தீர்
பாவ சேற்றினின்று தூக்கி எடுத்தீர்
ஜீவனுள்ள மட்டும் உம்மைப் பின் செல்வேன்
பின்பு மோட்ச வீட்டில் என்றும் வாழ்வேன்.

***பல்லவி***

தந்தேன் எந்தன் நெஞ்சம் சொந்தமாய், உமக்கே
தந்தேன் எந்தன் ஜீவன் உந்தன் சேவைக்கே.

**2.** தாழ்மை மனதோடு உம்மைப் பின் செல்வேன்,
சோதனை நெருங்கில் உம்மைப் பற்றுவேன்
திடன் கொண்டுலகை உம்மால் ஜெயிப்பேன்.
பாடனுபவித்து முற்றும் நிலைப்பேன். – தந்தேன்

**3.** பாவ வழி சென்று, மாந்தர் சாகிறார், ஜீவ வழி தப்பி
மோசம் போகிறார், ஆத்மாதாயம் செய்ய உந்தன் ஆவியால்
என்னை ஆட்கொண்டேகும் வல்ல இரட்சகா! – தந்தேன்

## *பல்லவி*

நீயுனக்குச் சொந்தமல்லவே; மீட்கப்பட்ட பாவி,
நீயுனக்குச் சொந்தமல்லவே.

## *அனுபல்லவி*

நீயுனக்குச் சொந்தமல்லவே, நிமலன் கிறிஸ்து நாதர்க்கே
சொந்தம். – நீ

## *சரணங்கள்*

1. சிலுவை மரத்தில் தொங்கி மரித்தாரே; திருரத்தம், இரத்தம்
திரு விலாவில் வடியுது, பாரே; வலிய பரிசத்தால் கொண்டாரே;
வான மகிமையுனக்கீவாரே. – நீ

2. இந்த நன்றியை மறந்து போனாயோ ? இயேசுவைவிட்டு
எங்கேயாகிலும் மறைந்து திரிவாயோ ?
சந்ததமுனதிதயங் காயமும், இயேசு கிறிஸ்தினுடைய தல்லவோ ? – நீ

3. பழைய பாவத்தாசை வருகுதோ ? பிசாசின்மேலே
பட்சமுனக்குத் திரும்ப வருகுதோ ?
அற்ப நிமிஷத் தாசை காட்டியே அக்கினிக்கடல் தள்ளுவானே ? – நீ

4. பிழைக்கினும் அவர்க்கே பிழைப்பாயே; உலகைவிட்டு
மரிப்பினும் அவர்க்கே மரிப்பாயே, மரித்து உயிர்த்த இயேசு நாதரின்,
மலரடி எந்நாளும் நிலைப்பாய். – நீ

## பல்லவி

என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்
ஏற்றுக் கொள்ளும், இயேசுவே.

## அனுபல்லவி

அன்னை தந்தையாகி உந்தனையே ஈந்து
ஏழையை மீட்டீரே வேறெதைச் செய்குவேன் ? – என்னை

## சரணங்கள்

1. அந்தகாரத்தினின்றும், பாவப் பேய்
அடிமைத் தனத்தினின்றும், சொந்த இரத்தக் கிரயத்தால்
எனைமீட்ட எந்தையே உந்தனுக்கிதோ! படைக்கிறேன். – என்னை

2. ஆத்ம சரீரமதை உமக்கு ஆதீன மாக்கி வைத்தேன்;
பாத்ரமதாய் அதைப் பாவித்துக் கொள்ளக்
காத்திருக்கின்றேன்; கருணைசெய், தேவா. – என்னை

3. நீதியி னாயுதமாய் அவயவம் நேர்ந்து விட்டேன் உமக்கு;
ஜோதி பரிசுத்த ராலய மாகவே சொந்தமாய்த் தந்தேன்
எந்தன் சரீரத்தை – என்னை

1. ஜீவ ஒளியிற் போகிறேன், போகிறேன் நான் போகிறேன்
மீட்பர் நடந்த பாதையில்போகிறேன் நான் போகிறேன்

***<u>பல்லவி</u>***

ஓர் வெண்ணங்கி, ஓர் பொன்முடி ஓர் வாத்தியம், ஓர் மேல் வீடு.
ஓர் ஜெயக் கொடி, ஓயா இன்பம் எனக்குண்டு மோட்சத்தில்
இயேசு என் இரட்சகர் பாவம் மன்னித்தார்,
கல்வாரி மலையிலென் கடன் தீர்த்தார், அவரன்பில் நான் மூழ்கி
என்றும் பாடுவேன், வாழுவேன் ஜீவ ஊற்றில் களிப்பேன்.

2. பாவிகள் நடுவில் போகிறேன், போகிறேன் நான் போகிறேன்
மீட்பர் பின் சென்றால் ஜெயமுண்டு போகிறேன் நான் போகிறேன். – ஓர்

3. வீண் பக்திக்காரர் நகைத்தாலும், போகிறேன் நான் போகிறேன்
பூரண அன்பு பயம் நீக்கும் போகிறேன் நான் போகிறேன். – ஓர்

4. சிலுவைக் கொடியுடன் போகிறேன், போகிறேன் நான் போகிறேன்
மீட்பரின் நேசத்தைக் காட்ட நான் போகிறேன் நான் போகிறேன். – ஓர்

5. பரிசுத்த ஆவியால் நிறைந்து போகிறேன் நான் போகிறேன்
மோட்சம் போகுமட்டும் நிலைத்து போகிறேன் நான் போகிறேன். – ஓர்

1. என் மீட்பர் சென்ற பாதையில் போக ஆயத்தமா ?
கொல்கதா மலை வாதையின் பங்கைப் பெறுவாயா ?

***<u>பல்லவி</u>***

சிலுவையை நான் விடேன், சிலுவையை நான் விடேன் !

2. ஊரார், இனத்தார் மத்தியில் துன்பம் சகிப்பாயா ?
மூர்க்கர்; கோபிகள் நடுவில் திடனாய் நிற்பாயா ? – சிலு

3. தாகத்தாலும் பசியாலும் தோய்ந்தாலும் நிற்பாயா ?
அவமானங்கள் வந்தாலும் சிலுவையை சுமப்பாயா ?– சிலு

4. பாவாத்துமாக்கள் குணப்பட நீ தத்தம் செய்வாயா ?
கோழை நெஞ்சர் திடப்பட மெய் யுத்தம் செய்வாயா ? – சிலு

5. லோகத்தார் மாண்டு போகிறார்; மெய் வீரர் இல்லாமல்,
பார் ! மீட்பர் ஜீவனை விட்டார் தொங்கி சிலுவையில். – சிலு

6. வாழ் நாள் எல்லாம் நிலைநின்று சிலுவையைச் சுமப்பேன்;
தேவ அருளினால் வென்று, மா பாக்கியம் சேருவேன். – சிலு

1. இயேசுவைக் கண்ணோக்கி முன்னே செல்லுவோம்;
விசுவாசங் கொண்டு வெற்றி சிறப்போம்;
இரட்சிப்பின் சீராவை ஏற்றிக் காட்டுவோம்,
லோகம் பாவம் பேரில் ஜெயம் கொள்ளுவோம்!

***<u>பல்லவி</u>***

இயேசுவைக் கண்ணோக்கி, முன்னே செல்லுவோம்;
விசுவாசங்கொண்டு வெற்றி சிறப்போம்.

2. இயேசுவைக் கண்ணோக்கி சென்று போகையில்
கால்கள் இடறாமல் மோட்ச பாதையில்,
மோசமும் வராமல், நிலை பெறுவோம்;
கண்ணியில் சிக்காமல் நம்பி நடப்போம். – இயேசு

3. இயேசுவைக் கண்ணோக்கி, அன்பின் ஆழமும்.
கிருபா கடாட்சம் அருள் செல்வமும்,
கண்டு பிரமிப்போடு பேரானந்தமாய்;
பெறுவோம் மென்மேலும் மிக வாஞ்சையாய். – இயேசு

4. இயேசுவைக் கண்ணோக்கி வான இராஜனாய்,
அவர் பேரில் சார்ந்து முழு மனதாய் விசுவாசத்தாலே
பரம் ஏறுவோம், இயேசுவோடுகூட வாசம் பண்ணுவோம்.– இயேசு

1. சேனையதிபன் நம் கர்த்தர்க்கே செலுத்துவோம் கனமும் மகிமையுமே அற்புதமே தம் அன்பெமக்கு அதை அறிந்தே அகமகிழ்வோம்.

***<u>பல்லவி</u>***

ஜெய கிறிஸ்து முன் செல்கிறார் ஜெயமாக நடத்திடுவார்
ஜெய கீதங்கள் நாம் பாடியே ஜெயக்கொடியும் ஏற்றிடுவோம்
ஜெயம் அல்லேலூயா அவர் நாமத்திற்கே.

2. தாய் மறந்தாலும் நான் மறவேன் திக்கற்றோராய் விட்டு விடேன்
என்றுரைத்தெம்மை தேற்றுகிறார் என்றும் வாக்கு மாறிடாரே.– ஜெய

3. மேய்ப்பன் இல்லாத ஆடுகட்கு நானே நல்ல மேய்ப்பன் என்றார்
இன்ப சத்தம் பின் சென்றிடுவோம் இன்ப பாதை காட்டிடுவார். – ஜெய

4. சத்துருவின் கோட்டை தகர்ந்தொழிய சத்தியம் நித்தியம்
நிலைத்தோங்க சாத்தானின் சேனை நடுங்கிடவே
துதி சாற்றி ஆர்ப்பரிப்போம்.–ஜெய

5. கறை திரை முற்றும் நீங்கிடவே கர்த்தர் நம்மை கழுவிடுவார்
வருகையில் நம்மை சேர்க்கும் வரை வழுவாமல் காத்துக் கொள்வார்.
– ஜெய

1. இயேசுவின் யுத்த வீரரே போற்றுவோம் இயேசு நாதரை
லோக மெங்கும் சென்று நாம் நிந்தைகள் சுமந்து நாம்
கர்த்தருக்காய்ப் பாடுபடுவோம்.

***பல்லவி***

போகலாம், போகலாம் இயேசுவின் நல் சீடராக நாம்.

2. கல்வாரியில் இரத்தம் சிந்தினார் கள்ளர்களைப் போல
தொங்கினார் பாவ பாரம் நீக்கிட பாடு பட்டு
பாவிபோல்பாடுவோம் நாம் என்றும் அவரை. – போக

3. நித்திய ஒளி அவர் என்றுமே சத்திய வழி அவர் மாத்திரமே
நித்திய ஜீவன் தந்திட நித்திய காலம் வாழ்ந்திட
நித்திய இயேசு ஜீவிக்கின்றாரே – போக

4. வேதனைகள் முற்றும் நீக்குவார் ஜீவியத்தின் பாரம் மாற்றுவார்
வியாகுலங்கள் நீக்குவார் ஆளுகை செய்திடுவார்
அண்ணல் இயேசு மீண்டும் வருவார். – போக

சிலுவை எடுத்து என் ஆயுள் எல்லாம்—என்
அன்பின் இயேசுவின் பின் செல்வேனே —ஆ—ஆ

***<u>சரணங்கள்</u>***

1. சோதனை நேரத்திலும்— அன்பின் கரங்களால் தாங்குகிறார்
ஆபத்துக் காலத்தில் நல் துணையாய் —என் மீட்பர் இருக்கையில்
அஞ்சவே மாட்டேன் —ஆ—ஆ

2. உற்றாரும் உறவினரும் நண்பரும் கைவிட்டாலும்
இன்றும் என்றும் மாறாத என் நேசர்
மகிமையில் எனக்குண்டு அல்லேலூயா —ஆ—ஆ

3. திருப்பாத சேவை எல்லாம் இப்பூவில் என்னால் தீரவேண்டும்
சேருவேன் முடிவில் என் நேசர் அருகில் அருமையோடவர்
என்னை மார்போடணைப்பார். ஆ—ஆ

4. இயேசுராஜா வெளிப்படும் நாள் அதிவேகமாய் நெருங்கிடுதே
சீயோனில் அவரோடு என்றென்றுமாய் சேர்ந்தொன்றாய்
வாழுவோம்—அல்லேலூயா. ஆ—ஆ

1. நல்ல போராட்டம் போராடு எல்லையை நாடு
அல்லல் தொல்லை யாவும் தீர நில்லாமல் ஓடு.

***<u>பல்லவி</u>***

பாவம் பாரம் தள்ளி இலக்கை நோக்கி
நேராய் ஓடு தேவன் நியமித்த ஓட்டம்.

2. பின்னானவை மறந்தே முன்னோக்கியே ஓடு
கன்மலை கிறிஸ்துவின்மேல் கண்பதித்தோடு. – பாவம்

3. இச்சையடக்கி ஓடிடுவாய் இங்குயாவிலும்
உச்சிதமான அழியா கிரீடம் உனக்கு உண்டு. – பாவம்

4. எச்சமயத்திலும் சாத்தான் இடறல் செய்யினும்
நிச்சயத்துடனே ஓடி பெறுவாய் பரிசை. – பாவம்

5. காடுமேடு கண்டு அஞ்சி களைத்து நில்லாதே
கூடுதல் பெலனளிப்பார் குதித்தே ஓடு. – பாவம்

6. அசைந்து மாறும் இந்த லோகம் பந்தம் களைந்து
அசைவில்லாத நாட்டை நோக்கி ஆவலாய் ஓடு. – பாவம்

7. அக்கம் பக்கம் பார்த்திட்டாலோ அடைவாய் தோல்வியே
எக்காளம் தொனிக்கும் வரை எதிர்நோக்கி ஓடு – பாவம்

8. ஓட்டம் முடியும் நாள் சமீபம் உள்ளம் பூரிப்பாய்
பாட்டுப்பாடி ஆனந்திப்பாய் பரனின் வீட்டிலே – பாவம்

9. நல்ல போராட்டம் போராடி ஓட்டம் முடித்து
வல்ல விசுவாசம் காத்தால் நீதியின் கிரீடம் – பாவம்

1. இரட்சிப்பையுயர்த்திக் கூறுவோம், லோகம் நடுங்க
நரகாக்கினையைச் சொல்வோம், பாவம் அடங்க
பூர்வ கால தேவதாசர், விஸ்தரித்தாற்போல்
மோட்சலோகம் போகு முன்னமே.

*பல்லவி*

செல்வோம், செல்வோம், ஆர்ப்பரிப்புடனே;
செய்வோம், செய்வோம்; போர் பலத்துடனே;
நானா ஜாதி பாஷைக்காரர் இரட்சிப்படைய
மோட்சலோகம் போகு முன்னமே.

2. சேனையாரின் யுத்த சப்தம் பூமியெங்கும் கேள்!
மீட்படைந்த பேதைகளின் சாட்சிகளுங்கேள்;
முழு லோகத்தையும் வெல்ல, இன்னும் கொஞ்சநாள்
மோட்சலோகம் போகு முன்னமே. – செல்

3. தீதாய்ச் சத்துருக்களென்ன சொன்ன போதிலும்;
சுத்த ஆவியின் பலத்தைப் பெற்றுயாவிலும்,
உண்மையாகப்போர் புரிந்தால், வெல்வோம், சாவிலும்,
மோட்சலோகம் போகு முன்னமே. – செல்

1. யுத்தம் செய்வோம், வாரும் கிறிஸ்து வீரரே!
இயேசு சேனை கர்த்தர் பின்னே செல்வோமே!
வெற்றி வேந்தராக முன்னே போகிறார், ஜெயக்கொடி ஏற்றி
போர் நடத்துவார்.

<u>**பல்லவி**</u>

யுத்தம் செய்வோம், வாரும், கிறிஸ்து வீரரே!
இயேசுசேனை கர்த்தர் பின்னே செல்லுவோம்!

2. கிறிஸ்து வீரர்கள், நீர் வெல்ல முயலும்,
பின்னிடாமல் நின்று ஆரவாரியும்!
சாத்தான் கூட்டம் அந்த தொனிக்கதிரும்
நரகஸ்திபாரம் அஞ்சி அசையும்! – யுத்தம்

3. கிறிஸ்து சபை வல்ல சேனை போன்றதாம்
சுத்தர் சென்ற பாதை செல்கின்றோமே நாம்;
கிறிஸ்து தாசர் யாரும் ஓர் சரீரமே
விசுவாசம், அன்பு, நம்பிக்கை ஒன்றே. –யுத்தம்

4. கிரீடம் இராஜ மேன்மை யாவும் சிதையும்
கிறிஸ்து சபைதானே என்றும் நிலைக்கும்;
"நரகத்தின் வாசல் ஜெயம் கொள்ளாதே"
என்ற திவ்விய வாக்கு வீணாய்ப் போகாதே.–யுத்தம்

5. பக்தரே ஒன்றாகக் கூட்டங் கூடுமேன்!
எங்களோடு சேர்ந்து ஆர்ப்பரியுமேன்!
விண்ணோர் மண்ணோர் கூட்டம் இயேசுராயர்க்கே
கீர்த்தி, புகழ், மேன்மை என்றும் பாடுமே. – யுத்தம்

1. வீர தீரமாய், நேருஞ் சீருமாய்
நின்று, ஏகமாய் போர் செய்வோம்;
பயமின்றியும் பின் வாங்காமலும்,
கீதம் பாடியும், முன் செல்லுவோம்.

***பல்லவி***

சோம்பும் சோர்வும் நீக்கி—வீரராக யாரும் வாரும்! யுத்தம்
பண்ணுவோம்; செல்லும்! வெல்லும்! ஆரவாரமாக,
இயேசுநாதர் நம்பிப் போகிறோம்!

2. கொடி ஏற்றுவோம், எக்காளம் ஊதுவோம்,
வாளும் வீசுவோம், போர்க் கோலமாய்,
கர்த்தர் தாங்குவார், கூடப்போகிறார்;
வெற்றி சிறப்பார் கெம்பீரமாய். – சோம்பும்

3. சேனைக் கர்த்தரே! இயேசு நாதரே!
சூதவரீ ரையே கொண்டாடுவோம்; உம்மால் வல்லமை,
உம்மால் மகிமை; உம்மால் வெற்றியும் கண்டடைவோம். –சோம்பும்

1. நல் மீட்பர் பட்சம் நில்லும் இரட்சண்ய வீரரே.
இராஜாவின் கொடி ஏற்றிப் போராட்டம் பண்ணுமே
சேனாதிபதி இயேசு மாற்றாரை மேற்கொள்வார்,
பின் வெற்றிக் கிரீடம் சூடிச் செங்கோலும் ஓச்சுவார்.

2. நல் மீட்பர் பட்சம் நில்லும்! எக்காளம் ஊதுங்கால்!
போர்க்கோலத்தோடு சென்று,மெய் விசுவாசத்தால்
அஞ்சாமல் ஆண்மையோடே, போராடி வாருமேன்
பிசாசின் திரள் சேனை, நீர் வீழ்த்தி வெல்லுமேன்.

3. நல் மீட்பர் பட்சம் நில்லும்! எவ்வீர சூரமும்
நம்பாமல் திவ்விய சக்தி, பெற்றே பிரயோகியும்,
சர்வாயுதத்தை ஈயும் கர்த்தாவைச் சாருவீர்,
எம் மோசமும் பாராமல், முன் தண்டில் செல்லுவீர்.

4. நல் மீட்பர் பட்சம் நில்லும்! போராட்டம் ஓயுமே
வெம்போரின் கோஷம் வெற்றிப் பாட்டாக மாறுமே!
மேற் கொள்ளும் வீரர், ஜீவ பொற் கிரீடம் சூடுவார்
விண் லோகநாதரோடே வீற்றரசாளுவார்.

1. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்!
இராப்பகலை ஒழுங்காய்க் கடக்கிறேன்;
என்றும் நடக்கிறேன், பின் திரும்பேனே
இயேசு இரட்சகர் பின்னே.

***<u>பல்லவி</u>***

நடக்கிறேனே, இரட்சகருடனே (அல்லேலூயா)
கடக்கிறேனே, கரம் பிடித்தே! விழிப்பாயிருந்து
ஜெயங் காண்பேனே ஒளியில் நடக்கிறேனே!

2. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்!
வான் காரிருள் மூடினும் பயப்படேன்
சீயோன் கீதம் பாடி செல்வேனே ஆ! என் இயேசுவின் பின்னே!
– நடக்

3. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்!
வான் ஆசீர்வாதங்கள் அடைகிறேன்
வீண் பாரங்களை விடுகிறேனே என் இயேசுவின் பின்னே! – நடக்

4. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்!
மேய்ப்பன் அவர் சத்தம் அறிகிறேன் நோய்வாய்ப்பட்டாலும்
நடப்பேனே தூயன் இயேசுவின் பின்னே! – நடக்

5. நான் இயேசுவின் ஒளியில் நடக்கிறேன்!
முன்னோடின அவரை நோக்குகிறேன்
வன் சிலுவை எடுத்துச் செல்வேனே, என் இயேசுவின் பின்னே!
– நடக்



**1.** இஸ்ரவேலின் தேவன் வெற்றி சிறந்தார்
இன்பக்கானான் இஸ்ரவேலர் சொந்த மாயிற்று
தூய விசுவாசத்தால் வெற்றி ஓங்கிற்றே
அன்று போய் என்றுமாய் சுதந்தரித்தனர்.

***பல்லவி***

போ! சுதந்தரி! புனிதன் இயேசு நாமத்தில்
வெற்றி என்றும் நமதே! இன்று போ! சுதந்தரி!

**2.** இயேசு ராஜா என்றுமாய் வெற்றி சிறந்தார்
சத்துருவாம் சாத்தானை முற்றும் ஜெயித்தார்
இந்தியா இன்று நம் மெதிரில் ஏகமாக முன் செல்வோம்
இயேசு நாமத்தில் – போ

**3.** இயேசு ராஜா பராக்ரமம் என்றும் செய்கிறார்
பாரதமும் பார்தளமும் சொந்த மாகுதே
யுத்தம் நமதல்ல கர்த்தருடையது அவரே என்றுமிங்கு
அரசாளுவார் – போ

**4.** பரிசுத்தத்தில் நம்மைக் காத்துக் கொள்ளுவோம்
பரிசுத்த தேவன் நம்முன் செல்கிறார்
பாரில் நீர் ஆழ்கடலை நிரப்புமாப் போல
பரம ராஜ்யம் பாங்குடனே எழும்பச் செய்குவார் – போ



# 320

## <u>*பல்லவி*</u>

இரட்சகா! உம்மை நான் பின் செல்லுவேனே
எத்தனை பாடுகள் பட்டீர் எனக்காய்

## <u>*சரணங்கள்*</u>

1. சாத்தான் தன் தந்திர வலை வீசினாலும்,
உம் பெலத்தாலே நான் தப்பிச் செல்வேனே. – இரட்

2. உலகம் தன் சிற்றின்ப ஆசை காட்டிடினும்,
எல்லாம் அற்பக் குப்பை என்றுதைப்பேனே.– இரட்

3. பெற்றோர் உற்றார் வந்து உரிமை செய்தாலும்,
நீரே போதும் என்று சொல்லி நிற்பேனே. – இரட்

4. எனக்காக வேதனைப்பட்டஎன் நாதா,
உமக்கென்றுழைத்து மரிக்க அருளேன். – இரட்

5. உமக்காக என்னைக் கல்லெறிந்து கொன்றாலும்,
ஸ்தேவான் போல் மரிக்கக் கிருபை கூர்ஜயே. – இரட்

6. பாவிகளை உன்தன் பதஞ் சேர்க்கவே நான்,
ஆசையாய் யுத்தத்தில் சாக அருளேன். – இரட்



பரிசுத்தர் கூட்டம் நடுவில் ஜொலித்திடும் சுத்த ஜோதியே
அரூபியே இவ்வேளையில் அடியார் நெஞ்சம் வாரீரோ (2)

1. மீன் கேட்டால் பாம்பை அருள்வாருண்டோ ?
கல் தின்னக் கொடுக்கும் பெற்றோருண்டோ ?
பொல்லாதோர் கூட செய்திடார் நற்பிதா நலம் அருள்வார்.– பரி

2. சுத்தம் விரும்பும் சுத்த ஜோதியே விரும்பா அசுத்தம் யாவும்
போக்குமே பாவி நீச பாவி நானைய்யா
தேவா இரக்கம் செய்ய மாட்டீரோ. – பரி

3. பாரும் தந்தையே எந்தன் உள்ளத்தை
யாரும் காணா உள்ளலங் கோலத்தை
மனம் நொந்து மருளுகின்றேன் பரிசுத்தம் கெஞ்சுகின்றேன். – பரி

4. துணை வேண்டும் தகப்பனே உலகிலே
என்னை எதிர்க்கும் சக்திகள் பல உண்டே
என் ஜீவன் எல்லை எங்கிலும் பரிசுத்தம் என எழுதும். – பரி



# 322

1. இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்
பின்னோக்கேன் நான், பின்னோக்கேன் நான்.

2. உலகம் என் பின்னே, சிலுவை என் முன்னே
பின்னோக்கேன் நான், பின்னோக்கேன் நான்.

3. கஷ்டம் என் பாக்கியம், நஷ்டம் என் லாபம்,
பின்னோக்கேன் நான், பின்னோக்கேன் நான்.

4. முன் வைத்தகாலை, பின் வைக்க மாட்டேன்
பின்னோக்கேன் நான், பின்னோக்கேன் நான்.

5. இயேசுவை நம்பி, மோசம் போவதில்லை
பின்னோக்கேன் நான், பின்னோக்கேன் நான்.



# 323

**1.** பாவி கேள்! உன் ஆண்டவர், அறையுண்ட இரட்சகர்
கேட்கிறார், “என் மகனே, அன்புண்டோ என் பேரிலே”.

**2.** “நீக்கினேன் உன் பாவத்தை; கட்டினேன் உன் காயத்தை,
தேடிப் பார்த்து இரட்சித்தேன், ஒளி வீசப் பண்ணினேன்.”

**3.** “தாயின் மிக்க பாசமும் ஆபத்தாலே குன்றினும்
குன்ற மாட்டாதென்றுமே ஒப்பில்லா என் நேசமே.”

**4.** “எனதன்பின் பெருக்கும், ஆழம், நீளம், உயரமும்
சொல்லி முடியாது, பார்; என்னைப் போன்ற நேசனார் ?”

**5.** “திவ்ய ரூபம் தரிப்பாய், என்னோடரசாளுவாய்;
ஆதலால் சொல், மகனே, அன்புண்டோ என் பேரிலே ?”

**6.** இயேசுவே, என் பக்தியும் அன்பும் சொற்பமாயினும்,
உம்மையே நான் பற்றினேன் அன்பின் ஜுவாலை ஏற்றுமேன்.



# 324

1. கரை ஏறி உமதண்டை நிற்கும்போது இரட்சகா!
உதவாமல் பெலனற்று வெட்கப்பட்டு போவேனோ?

**_பல்லவி_**

ஆத்துமா ஒன்றும் இரட்சிக்காமல் வெட்கத்தோடே ஆண்டவா!
வெறுங்கையனாக உம்மைக் கண்டு கொள்ளல் ஆகுமா?

2. ஆத்துமாக்கள் பேரில் வாஞ்சை வைத்திராமல் சோம்பலாய்
காலங் கழிப்போர் அந்நாளில் துக்கிப்பார் நிர்ப்பந்தராய்.
– ஆத்மா

3. தேவரீர் கைதாங்க சற்றும் சாவுக்கஞ்சி கலங்கேன்;
ஆயினும் நான் பலன் காண உழைக்காமற் போயினேன்!
– ஆத்மா

4. வாணாள் எல்லாம் வீணாளாக சென்று போயிற்றே! ஐயோ
மோசம் போனேன், விட்ட நன்மை அழுதாலும் வருமோ?
– ஆத்மா

5. பக்தரே! உற்சாகத்தோடு எழும்பிப் பிரகாசிப்பீர்!
ஆத்துமாக்கள் இயேசுவண்டை வந்து சேர உழைப்பீர்.
– ஆத்மா



# 325

**1.** என்னண்டை வந்திடாயோ பின்பற்றி வந்திடாயோ
உன்னை நீ வெறுத்து சிலுவையை எடுத்து
பின்பற்றி வந்திடாயோ **? (2)**

**2.** உலகம் ஆதாயம் செய்தும் ஜீவனோ நஷ்டப்பட்டால்
மரணம் வரும் வேளை மறுமைக்குள் செல்கையில்
என்ன லாபம் உனக்கு **? (2)**

**3.** கல்வாரி காட்சி கண்டும் கல்மனம் உருகலையோ
தீங்காயங்கள் தனில் அடைக்கலம் அளித்திட
அழைப்போரைப் பார்த்திடாயோ **? (2)**



**1.** பூவின் நற்கந்தம் வீசும் சோலை யாயினும்,
நல்ல தண்ணீர் ஓடும் பள்ளத் தாக்கிலேயும்,
இயேசுநாதர் பின்சென்றேகி மோட்சம் நாடுவேன்,
விண்ணில் சூடும் கிரீடம் நோக்கி ஓடுவேன்.

***பல்லவி***

பின் செல்வேனே! மீட்பர் பின் செல்வேனே!
எங்கேயும் எப்போதும் பின்னே செல்லுவேன்;
பின் செல்வேனே மீட்பர் பின் செல்வேனே
இயேசு காட்டும் பாதை யெல்லாம் செல்லுவேன்.

**2.** கார்மேகம் மேலே மூடும் பள்ளமென்கிலும்
காற்றகோரமாக மோதும் ஸ்தானத்திலும்,
இயேசு பாதை காட்டச் சற்றும் அஞ்சவே மாட்டேன்,
இரட்சகர் கைதாங்கத் தைரியம் கொள்ளுவேன். – பின்

**3.** நாள்தோறும் இயேசுநாதர் கிட்டிச் சேருவேன்,
மேடானாலும் காடானாலும் பின்னே செல்லுவேன்,
மீட்பர் என்னை மோசமின்றி சுகமே காப்பார்,
விண்ணில் தாசரோடு சேர்த்து வாழ்விப்பார். – பின்

1. இயேசுவின் பிறகே சிலுவை சுமக்க
எழுந்திடுவீர் தாசர்களே !இத்தரை மீதினில் உங்கள் கடமைகளை
நிறைவேற்ற முன் வருவீர்; செய்ய வேண்டியதை செய்யா திருப்பதே
பாவ மென்று உணர்ந்திடுவீர் – மெய்யாகவே இயேசுவின் வருகை
இதோ மேக மீதினில் காண்போம்.

2. உனக்காய் இப்பாடுகளைச் சகித்தேன்
எனக்காக நீ என்ன செய்தாய் ?
என் மகனே, உன் ஜீவன் சுகம், செல்வம்.
இன்பம் யாவும் உனக் களித்தேன்,
பாவம் பெருகிடுதே, லோகம் உயர்ந்திடுதே
பார்த்திருப்பதென்ன, மகனே ? வேகமே உன் பொறுப்பை
உணர்ந்து வீரிட்டெழுந்திடுவாய் நீ.

3. மாயா உலகம் உன்னைக் கெடுக்க மனதைப் பறிகொடுத் தாயோ ?
சாயும் நிழல் அதின் வேஷம் எல்லாம் சரிந்து மறைந்து போகுமே;
தூய்மையடைய இடுக்க வழியில் தொடர்ந்து நடந்து வருவாய் –
மாயை, மாயை, எல்லாம் மாயை உன் மனதுக்கு சஞ்சலமே.

4. என் பிறகே நீ வர விருப்பம் கொண்டால்
எடுத்திடு தோளில் சிலுவையை; இரு எஜமான்களைப் பிரியப்படுத்த
இயன்றிடுதல் கூடுதலோ ? உலக நேசம், உலக வேஷம்,
உன் தேவனின் சத்துருக்கள் நாதன் பிறகே நிந்தை சுமப்போம்
அவருக்காகவே நாம் ஜீவிப்போம்.

எனக்காக யாவற்றையும் செய்பவரே எனக்கினி பயமில்லை
உலகினிலே எனக்காக யாவற்றையும் செய்ததினால் – நான்
இரட்சிப்பின் பாத்திரம் ஏந்தி தொழுதிடுவேன்.

***சரணங்கள்***

1. பஞ்சத்தில் எலியாவுக்கு அப்பங்கொடுத்தார்
பஞ்சமின்றி எலியாவை ஆசீர்வதித்தார் பஞ்சம் தீரும் வரை அந்த
விதவை வீட்டில் – அந்தப் பானையில் எண்ணெயும்
மாவும் குறையவில்லை – எனக்

2. ஆகாயத்துப் பறவையை கவனித்துப்பார் விதைப்பதில்லை அவை
அறுப்பதில்லை அவைகளைப் பிழைப்பூட்டும் பரமபிதா – நம்மை
அனுதினம் அற்புதமாய் நடத்திடுவார் – எனக்

3. என்னத்தை உடுப்போமென்று கவலை வேண்டாம்
ஏறெடுத்துப் பார்த்திடுவோம் காட்டுப் புஷ்பத்தை
காட்டுப் புஷ்பத்திற்கு தேவன் உடுத்துவித்தால் – அவர்
நம்மையும் உடுத்துவிப்ப துண்மையல்லவா – எனக்

4. நாளைய தினத்திற்காக கவலை வேண்டாம்
நாதன் இயேசு இருக்கிறார் அஞ்சவே வேண்டாம்
நாளைய தினத்திற்காக கவலைப்படும் – அந்த
நாளுக்கு நாளுக்கு அதின் பாடுகள் போதும் – எனக்

5. ஆசீர்வதித்திடும் இயேசு வனாந்தரத்தில் ஐயாயிரம் பேரையும்
போஷித்தாரே தேவை அனைத்தையும் அவர் கொடுத்திடுவார் அவர்
தம்மையே தந்தாரே இயேசு எனக்காகவே – எனக்

ஓ, ஓ, ஓ நான் செய்ததை மறந்தாயோ
சீயோனே என்னைத் தள்ளினாயோ, – ஓ, ஓ, ஓ

1. எகிப்தின் அடிமையில் இருந்த சீயோனே என் பலத்த கரத்தினால்
இரட்சித்தேனே என் கரத்தில் ஆணியை அடித்தீர்களே – ஓ, ஓ, ஓ

2. சத்துருவாலே பயந்து அலறினாயே நானோ செங்கடலைப் பிளந்
துன்னை அழைத்தேன் நீயோ என் சரீரத்தைப் பிளந்தாயே – ஓ, ஓ, ஓ

3. கானகத்தில் கண்ணீர் வடித்த சீயோனே ஆள உன் கையில்
செங்கோல் கொடுத்தேனே நீயோ தடியால் என்னை அடித்தாயே
– ஓ, ஓ, ஓ

4. அந்நிய தேசத்தில் அலைந்த சீயோனே உன்னை என் புயத்தில்
சுமந்தேனே நீயோ என் தோளில் சிலுவை வைத்தாயே – ஓ, ஓ, ஓ

5. தண்ணீர் இல்லாமல் தாகத்தால் அலைந்தாயே நானோ கன்மலை
நீரைக் கொடுத்தேனே நீயோ கசப்புக் காடியைக் கொடுத்தாயே
– ஓ, ஓ, ஓ

6. பரதேசியைப்போல் பாழாய்க் கிடந்தாயே நானோ ஜாதிகளின் மேல்
உயர்த்தினேனே நீயோ சிலுவையில் என்னை வதைத்தாயே – ஓ, ஓ, ஓ

உம்மைப்போல் யாருண்டு என்தன் இயேசு நாதா இந்தப் பார்தலத்தில்
உம்மைப்போல் யாருண்டு பாவப்பிடியினில் சிக்கி நான் உழன்றேன்
தேவா தம் அன்பினால் மன்னித்தீர்.

1. உலகம், மாமிசம், பிசாசுக்கடியில் அடிமையாகவே, பாவி நான்
ஜீவித்தேன் நிம்மதி இழந்தேன் தூய்மையை மறந்தேன்
மனம்போல் நடந்தேன் ஏமாற்றம் அடைந்தேன் என்னையா தேடினீர் ஐயா,
இயேசு நாதா உம்மை மறந்த ஓர் துரோகி நான் என்னையா தேடினீர் ஐயா,
இயேசு நாதா, அடிமை உமக்கே இனிநான். – உம்மைப்

2. இன்றைக்கு நான் செய்யும் இந்த தீர்மானத்தை என்றைக்கும் காத்திட
ஆவியால் நிரப்பும் நொறுக்கும், உருக்கும், உடையும், வனையும்
உமக்கே உகந்த தூய சரீரமாய் ஐம்பொறிகளையும் உமக்குள்
அடக்கும் இயேசுவே ஆவியால் நிரப்பும் வெற்றி வாழ்க்கையுள்ள
மகனாய் திகழ அக்கினி என் உள்ளம் இறக்கும் – உம்மைப்

3. வீட்டிலும் ஊரிலும் செல்லு மிடமெங்கும் சோதனை வந்திடில் கர்த்தா
நீர் காத்திடும் மேசியா வருகை வரையில் பலரை சிலுவைக்கருகில்
அழைக்க ஏவிடும் முழங்காலில் நிற்க, வேதத்தை அறிய
தினந்தோறும் தேவா உணர்த்தும் உமக்கும் எனக்கும் இடையில்
எதுவும் என்றுமே வராமல் காத்திடும் – உம்மைப்

***பல்லவி***

இயேசுவைப் பின்பற்றும் மனிதர்கள் யார் ?
இந்தப் பூவுலகில் – எந்தன் இயேசுவைப் பின்பற்றும் மனிதர்கள் யார் ?
இந்தப் பூவுலகில்.

***சரணங்கள்***

**1.** சுய வெறுப்பின் கோட்டிற்கு வா – நீ வா
நயமாக அழைக்கிறார் வா – நீ வா
உலக மாமிச ஆசை வீண் எனத் தள்ளி விட்டு வா –வா – நீ வா
இயேசுவை பின்பற்ற வா, – எந்தன்

**2.** எல்லாவற்றையும் விட்டுவா– நீ வா
எல்லாவற்றையும் விட்டுவா–நீ வா
பிசாசின் வலையில் சிக்கி பாழாய் போய் விடாதே வா–வா–நீ வா
இயேசுவை பின்பற்ற வா, – எந்தன்

**3.** ஆசைகள் அனைத்தையும் அழித்திட வா–நீ வா
உன்னை சிலுவையில் பதித்திட வா–நீ வா
இச்சையின் வலையில் நீ சிக்கி விடாதே வா – வா நீ வா
இயேசுவைப் பின்பற்ற வா – எந்தன்

**4.** பின்பற்ற வருகிறேன் நான் – நானே
உம்மை பின்பற்ற வருகிறேன் நான்–நானே
இயேசுவே இரங்கிடும் ஏற்றிடும் என்னையும் வந்தேன் தந்தேன்
இயேசுவைப் பின்பற்றுவேன்!! – எந்தன்

## பல்லவி

யாருக்காய் வாழ்கின்றாய் நீ ? இந்த வையகந்தனிலே
நீ வாழ்ந்திடும் நாட்களெல்லாம் யாருக்காய் வாழ்கின்றாய் நீ ?

## சரணங்கள்

**1.** மாமிச இச்சையில் சிக்கலுண்டு இந்த புவியினிலே, இந்த புவியினிலே, சிற்றின்பப்பிரியராய் வாழ் வாருண்டு இந்த புவியினிலே, இந்த புவியினிலே இவர் நாளெல்லாம் தீழ்ப்பான நோக்கங் கொண்டோர் இவர் வாழ்வெல்லாம் பாவமும் சாபமுமே – நீ

**2.** பணம், பணம் என்றிடும் பலருமுண்டு இந்த புவியினிலே, இந்தப் புவியினிலே, மனமெல்லாம் செல்வத்தைச் சேர்த்திடவே இந்த புவியினிலே, இந்த புவியினிலே, இவர் மூச்செல்லாம் ஆஸ்திக் காய் அலறி நிற்கும் ஆனால் வாழ்வெல்லாம் வறட்சியும், தாழ்ச்சியுமே – நீ

**3.** கொள்கைக்காய் வாழ்பவர் பலருமுண்டு இந்த புவியினிலே, இந்த புவியினிலே, வீண்பெருமைக்கு விலையாகிப் போவாருண்டு இந்த புவியினிலே, இந்த புவியினிலே இவர் நாளெல்லாம் விரிவில்லா மனதுடையோர் இவர் வாழ்நாளெல்லாம் சாதனை இழந்து நிற்பார் – நீ

**4.** உடைபட்ட அப்பமாய் திகழ்வாருண்டு இந்த புவியினிலே, இந்த புவியினிலே, கரைந்திடும் உப்பாக நிற்பாருண்டு இந்த புவியினிலே, இந்த புவியினிலே இவர் நாளெல்லாம் இயேசுக்காய் மறைந்து நிற்பார் வெறும் கூப்பிடும் சப்தமாய் பணிபுரிவார் – நீ

## 333

***பல்லவி***

உறக்கம் தெளிவோம் உற்சாகம் கொள்வோம்
உலகத்தின் இறுதிவரை கல்வாரி தொனிதான்
மழைமாரி பொழியும் நாள் வரை உழைத்திடுவோம்.

***சரணங்கள்***

**1.** அசுத்தம் களைவோம் அன்பை வகிப்போம்
ஆவியில் அனலும் கொள்வோம் அவர் படை ஜெயிக்க
நம்மிடைக்கருத்து வேற்றுமையின்றி வாழ்வோம் – உறக்கம்

**2.** அச்சம் தவிர்ப்போம் தைரியம் கொள்வோம்
சரித்திரம் சாட்சி கூறும் இரத்தச் சாட்சிகள் நம்மிடை தோன்றி
நாதனுக்காய் மடிவோம் – உறக்கம்

**3.** கிறிஸ்துவுக்காய் இழந்தவர் எவரும் தரித்திரர் ஆனதில்லை
இராஜ்ஜிய மேன்மைக்காய் கஷ்டம் அடைந்தோர்
நஷ்டப்பட்டதில்லை – உறக்கம்

**4.** உயிர் பெறுவீர் ஒன்று கூடுவீர் உலர்ந்த எலும்புகளே –
நீங்கள் அறியா ஒருவர் உங்கள் நடுவில் வந்து விட்டார்
– உறக்கம்

## பல்லவி

இயேசுவின் நிந்தையைச் சுமப்போம் வாசலுக்குப் புறம்பே போவோம்

## சரணங்கள்

1. சன்பல்லாத் தொபியா சக்கந்தங்களையும் துன்புறுத்தும் தீயர் கேள்விகளையும் அன்பருடனே இன்பமாய் ஏற்போம்
புறப்பட்டுப் போகக் கடவோம். – இயேசு

2. ஸ்தேவான் மேல் விழுந்த கற்களை நினைத்து சீஷர்கள் அடைந்த சிறைகளைச் சிந்தித்து மோசங்களென்றாலும் நேசமாய் ஏற்போம்
புறப்பட்டுப் போகக் கடவோம். – இயேசு

3. கள்ளச் சகோதரர் கைவிடு வார்கள் சொல்லாதவைகளைச் சுமத்திடுவார்கள் நல்ல கிறிஸ்தேசுவை மறுதலிப்பார்கள்
புறப்பட்டுப் போகக் கடவோம். – இயேசு

4. கோலால் கொடுமையாய் அடிக்கப்பட்டாலும் வாளால் துண்டாக வகுக்கப்பட்டாலும் நாளெல்லாம் நரரால் நசுக்கப் பட்டாலும்
புறப்பட்டுப் போகக் கடவோம். – இயேசு

5. அக்கினிக்கு நம்மை இரையாக்கினாலும் விக்கினங்கள் வெகுவாய் சூழ்ந்தாலும் அடிக்கப்பட்ட ஆட்டுக் குட்டியைப் பார்த்தே
புறப்பட்டுப் போகக் கடவோம். – இயேசு

6. அமர்ந்திருந்து அவர் கர்த்த ரென்றறியுங்கள் நடத்திடும் யுத்தம் நாதனுடையதே ஸ்தோத்திர பலியை நேர்த்தியாய்ச் செலுத்தி
அல்லேலூயா பாடக் கடவோம். – இயேசு

நான் ஆயத்தமானேன் ஆண்டவரை சந்திக்க
நித்திய மகிழ்ச்சி அடைவேன்
மத்திய ஆகாய மீதிலே மன்னன் இயேசுவை காணுவேன்.

***சரணங்கள்***

1. மணவாளன் தட்டும்போது ஆயத்தமே
மங்கிடாதே என் விளக்குகளே
ஜீவ சுடர் ஒளியாய் ஜொலிப்பேன் தேவ பிதா தங்கும் மாளிகையில்
– நான்

2. சுபதின வெண் வஸ்திரம் ஆயத்தமே சீருடனே நான் தரித்திடுவேன்
ஆட்டுக்குட்டியானவர் விருந்தில் அன்பரோடே நானும் வீற்றிருப்பேன்
– நான்

3. சுவிசேஷ பாதரட்சை ஆயத்தமே சேவையிலே நான் அணிந்திடுவேன்
இயேசுவின் நாள் வேகம் நெருங்கிடுதே இந்த நற்செய்தியைச்
சாற்றிடுவேன் – நான்

4. பாடுபட்டு மரிக்கவும் ஆயத்தமே பாரினிலே என் இயேசுவுக்காய்
பற்பல துன்பங்கள் சகித்திடுவேன் பேரின்ப இராஜ்ஜியம்
சேர்ந்திடுவேன்
– நான்

5. எக்காளங்கள் தொனித்திட ஆயத்தமே எம் அரும் இயேசு வருகிறாரே
ஆமென் என் இயேசுவே வாரும் என்றேன்ஆவலுடன்
எதிர்பார்த்திருப்பேன் – நான்

***<u>பல்லவி</u>***

தொண்டு செய்வேன் என்றும்
தொண்டு செய்வேன் எங்கும்
தொண்டு செய்வேன் என் ஆண்டவர்க்கே.

1. அவர் அழைப்புக்களிப்பேன் பதில் தொண்டு செய்வேன்
என் ஆண்டவர்க்கே– தொண்டு

2. மலைகளிலும் பள்ளத்தாக்கிலும் தொண்டு செய்வேன்
என் ஆண்டவர்க்கே– தொண்டு

3. காடானாலும் மேடானாலும் தொண்டு செய்வேன்
என் ஆண்டவர்க்கே– தொண்டு

4. துன்பமாயினும் இன்ப மாயினும் தொண்டு செய்வேன்
என் ஆண்டவர்க்கே– தொண்டு

5. மழையாயினும் வெயிலாயினும் தொண்டு செய்வேன்
என் ஆண்டவர்க்கே– தொண்டு

6. கந்தையானாலும் நிந்தையானாலும் தொண்டு செய்வேன்
என் ஆண்டவர்க்கே– தொண்டு

**1.** ஜெய இராஜ கொடி ஏற்றிக் காட்டியே
யுத்தஞ் செய்யச் சொல்லுவோம்.
வெற்றி மாலை சூடி ஜெயம் பெறவே பூரிப்போடு பாடுவோம்.

## பல்லவி

செல்லுவோம் வெல்லுவோம் நல் மீட்பர் நாமம் மூலமாய்
வெற்றி சிறப்பார் ஆளுவார் பூமி எங்கும் ஜோதியாய்.

**2.** எதிர்ச்சேனை சீறிப் பாய்ந்துவரினும்
இராஜ கொடி காட்டுவோம்; திரள் கூட்டமே போராட்டஞ்
செய்யினும் வெற்றி வேந்தராகுவோம். –செல்

**3.** எந்தத் தேச ஜாதி பாஷைக்காரரும் சுவிசேஷங் கேட்பதால்
இயேசுநாதர் மாண்பாய் ஆளும் காலமும்
மா சமீபமானதால். – செல்

**4.** அந்த நல்ல காலம் வந்தவுடனே
இராஜரீகம் பண்ணுவார்; அவபக்தி யாவும் ஒழிந்திடவே
நீதிமுறை நாட்டுவார். – செல்

## பல்லவி

அன்பு நிறைந்த பொன் இயேசுவே
நின் பாத சேவை என் ஆசையே!

## சரணங்கள்

1. உன்னதத்தை விட்டிறங்கி என்னிடம் வந்த நாதா – நான்
உம் அடிமை, உம் மகிமை, ஒன்று மாத்திரம் என்னாசையாம்.
–அன்பு

2. ஜீவனற்ற பாவி யென்னில் ஜீவன் பகர்ந்த இயேசுவே!
உம்மைவிட மண்ணில் வேறே நேசிப்பதில்லை நான் யாரையும்.
–அன்பு

3. குற்றுயிராய் கிடந்த என்னை, முற்றும் நீர் இரட்சித்தீர் – அதால்
என்னிலுள்ள நன்றி உள்ளம் தாங்குவ தெங்கனம்,நேசரே!
–அன்பு

4. இன்றுலகில் கண்ணீருடன் உம் வசனம் விதைக்கிறேன்;
அன்று நேரில் உம் அருகில், வந்து பலன்களைக் காண்பேன் நான்.
–அன்பு

5. என் உள்ளத்தில் வாசம் செய்யும் மகிமையின் நம்பிக்கையே
நீர் வளர்ந்தும் நான் குறைந்தும் உம் மகிமைக்குள் மறைவேன்
நான்.
–அன்பு

# 339

1. உலகோர் உன்னைப் பகைத்தாலும் உண்மையாய் அன்பு கூறுவாயா ?
உற்றார் உன்னை வெறுத்தாலும் உந்தன் சிலுவை சுமப்பாயா ?

***பல்லவி***

உனக்காக நான் மரித்தேனே
எனக்காக நீ என்ன செய்தாய் ?

2. உலக மேன்மை அற்பமென்றும் உலக ஆஸ்தி குப்பையென்றும்
உள்ளத்தினின்று கூறுவாயா ? ஊழியம் செய்ய வருவாயா ? – உனக்

3. மேய்ப்பனில்லாத ஆடுகள் போல் மேய்கிறார் ‘‘பாவ’’ புல் வெளியில்
மேய்ப்பன் இயேசுவை அறிந்த நீயும் மேன்மையை நாடி ஓடுகின்றாயோ ?
– உனக்

4. ‘‘இயேசு’’ என்றால் ‘‘என்ன விலை ?’’ என்றே கேட்டிடும் எத்தனை பேர் ?
பிள்ளைகள் அப்பம் கேட்கின்றனர் ஜீவ அப்பம் கொடுப்பாயா ? – உனக்

5. பந்துசகோதரர் அழிகிறாரே யாரையாவது அனுப்பிடுமே
‘‘யாரை நான் அனுப்பிடுவேன்’’ ‘‘யார் தான் போவார் எனக்காக ?’’ – உனக்

**1.** மந்தையில் சேரா ஆடுகளே எங்கிலும் கோடி கோடிஉண்டே
சிந்தையில் ஆன்ம பாரம் கொண்டே தேடுவோம் வாரீர் திருச்சபையே
மந்தையில் சேரா ஆடுகளே.

***பல்லவி***

அழைக்கிறார் இயேசு அவரிடம் பேசு – நடத்திடுவார்

**2.** காடுகளில் பல நாடுகளில் என் ஜனம் சிதறுண்டு சாகுவதா ?
பாடுபட்டேன் அதற்காகவுமே தேடுவார் யார் என் ஆடுகளை ?
– மந்தையில்

**3.** சொல்லப்பட்டிராத இடங்கள் உண்டு என்னை அங்கு சொல்ல
இங்கு ஆட்கள் உண்டு அழைப்பு பெற்றோர் யாரும் புறப்படுவீர் இது
ஆண்டவர் கட்டளை கீழ்ப்படிவீர் – மந்தையில்

**4.** எனக்காய் பேசிட நாவு வேண்டும் என்னைப் போல் அலைந்திட
கால்கள் வேண்டும் என்னில் அன்புகூற ஆட்கள் வேண்டும்
இதை உன்னிடம் கேட்கிறேன் தர வேண்டும் – மந்தையில்

**5.** கண்கள் இருந்தால் காண வேண்டும் செவிகள் இருந்தால் கேட்க
வேண்டும் இதயம் இருந்தால் உணர வேண்டும்
மன உருக்கமும், இரக்கமும் பெறவேண்டும் – மந்தையில்

## 341

**1.** விதைப்பும் அறுப்புமே பூமியின் மீதினில்
மாறி மாறி வருமே பகலும் இரவுமாய்
வருடங்கள் மாயமாய் நழுவியே சென்றிடுமே.

<u>**பல்லவி**</u>

சிந்திப்பீர், சிந்திப்பீர் காலங்களை சிந்திப்பீர்
இயேசு கிறிஸ்துவின் வேலை ஒன்றே, இன்று பிரதானம்.

**2.** ஒன்று இரண்டென எத்தனை வருடங்கள்
கனவென கழிந்ததுபார் எஞ்சிய நாட்களை வஞ்சிக்காது
தேவப் போரினில் ஈடுபட. – சிந்திப்பீர்

**3.** நாடுகள் நடுவினில் வாய்ப்புக்கள் உனக்காக
எத்தனை நாட்கள் உண்டு சாதக மானதோர் வாசல்
இங்கு கண்டு வந்து பயன்படுத்து.– சிந்திப்பீர்

**4.** ஆழக் கடல்களில் படகைச் செலுத்திட
கடல்போன்ற தேவையல்லோ பாவக் கடலினில் மூழ்கிடும்
யாவர்க்கும் படகு உன் சாட்சியல்லோ. – சிந்திப்பீர்



**1.** காலம் கடந்திடும் முன்னர் கருத்துக் கொள்வார் வாருமே
ஞாலத்தில் இயேசுவின் நாமம் எடுத்துச் சொல்லச் சேருமே
சுத்தக் கரத்தை உயர்த்தி பரிசுத்தர் யாரும் சேருமே
பாவத்தில் சாகும் ஜனத்தை தடுத்து நிறுத்தக் கூடுமே – இன்றே

***பல்லவி***

காலம் கடந்திடும் முன்னர் கருத்துக் கொள்வார் வாருமே
ஞாலத்தில் இயேசுவின் நாமம் எடுத்துச் சொல்லச் சேருமே.

**2.** தன் கடன் செய்யா மனிதர் கவலையில் வாடி நிற்பார்
தீபத்தில் எண்ணெய் பெறாதோர் துக்கத்தில் மூழ்கிடுவார்
ஆத்தும ஆதாயம் செய்யார் சிரசினில் அடித்துக் கொள்வார்
மாய்மாலம் புரிந்தோருக்கு செம்மையாய்ப் பதில் கொடுப்பார்
– இன்றே காலம்

**3.** சீஷர்கள் யாவரும் ஒன்றாய் ஜோதியாய் திகழ்ந்திடுவார்
இரத்தச் சாட்சிகளின் கூட்டம் வெற்றி முழக்கம் செய்யும்
ஜெபித்தோர், சிரத்தை எடுத்தோர் ஆனந்தப் பாடல் செய்குவார்
இராஜாதி இராஜன் இயேசுவே நீதியாய் அரசாளுவார் – இன்றே காலம்

**4.** நீ வாழும் இப்பூமி நாசம் ஆகும் காலம் வருதே உலகின் கடைசி சந்ததி
நீயாக இருக்கலாமே எழும்பு எழும்பு தெபோராள்பாராக்கே விழித்து விடு
தேவைக்கு ஏற்ற பலனை இன்றைக்கே பெற்றெழும்பு – இன்றே காலம்

1. வல்லவர் இயேசுவின் மகிமை – பாடி
சொல்லப் போனாலோ புதுமை கல்வாரி இரட்சிப்பின் அருமை
எல்லோருக்கும் எங்கும் வருமே.

***<u>பல்லவி</u>***

ஆ! இரட்சிப்பின் கிணறுகளாமே!
அவைகளின் ஆழம் அதிகமே!
இவைகளென்றும் வற்றாதாமே, கவையின்றி மொண்டு கொள்வோமே

2. தண்ணீரில்லாவிடில் தொல்லையே – இதை
எண்ணிப் பார்ப்பாரோ இல்லையே,
விண்ணிலுள்ளவர் சொல்லையே உன்னிப்பாய் ஏற்போம் உள்ளேயே.
–ஆ!

3. ஜீவ தண்ணீர் குடித்தோரே – எங்கும்
சாட்சிகளாய் இருப்பீரே; தாகமுள்ளோர்கள் பலரே
தண்ணீரண்டை விடுவீரே.–ஆ!

4. ஜீவ தண்ணீருள்ள நதிகள் – நம்மில்
பாவம் போனால் ஓடும் நதிகள், தேவனைத் துதிக்கும் துதிகள்
மூவனாம் தேவ விதிகள். –ஆ!

5. தூர்க்கப்பட்ட கிணறுகளே – மண்ணை
நீக்க வழி பாருங்களேன் வல்லவரை நோக்குங்களேன்,
அல்லேலூயா பாடுங்களே!–ஆ!

1. முயல்வோம்! முயல்வோம்! தேவ ஊழியரே;
செல்லுவோம் இயேசுநாதர் நற்பாதையிலே
மிக்க ஞானத்தினால் வழி நடத்துவார்;
நல்ல ஆவியின் பெலனை அருள்வார்.

***<u>பல்லவி</u>***

முயல்வோம்.. முயல்வோம், முயல்வோம்... முயல்வோம்.
நம்புவோம் நாடுவோம் நல் மீட்பர் வருமளவும்.

2. முயல்வோம்! முயல்வோம்! சுவிசேஷகரே!
காட்டுவோம் தெளிவாய் ஜீவ மார்க்கத்தையே
பாவ நாச விசேஷத்தைப் பகரவும் பிராயச்சித்த நற்செய்தி
விஸ்தரிக்கவும். – முயல்வோம்

3. முயல்வோம்! முயல்வோம்; விசுவாசிகளே!
கூறுவோம் கிறிஸ்துவின் இராஜரீகத்தையே
அந்தகாரத்தின் கிரியைகள் நொறுக்குவார்,
பரலோக பேரின்பத்தை நாட்டுவிப்பார். – முயல்வோம்

4. முயல்வோம்! முயல்வோம்! தேவ தாசர்களாய்
சேருவோம் மோட்சலோகம் மகத்துவமாய்;
அந்த லோகத்தின் ஜோதியில் ஆனந்திப்போம்;
சுக வாழ்வும் சந்தோஷமும் கண்டடைவோம். – முயல்வோம்

1. சத்ய வேதமான விதை காலை மாலை
விதைப்போம் எப்போதும் ஓய்வில்லாமலே
அறுப்பின் நற்காலம் எதிர் நோக்குவோமே;
சேருவோம் எல்லோரும் அரிக்கட்டோடே.

***பல்லவி***

அரிக்கட்டோடே, அரிக்கட்டோடே
சேருவோம் எல்லோரும், அரிக்கட்டோடே!

2. மழையடித்தாலும், வெயிலெரிந்தாலும்,
குளிர்ச்சியானாலும், வேலை செய்வோமே;
நல்ல பலன் காண்போம், துன்பம் மாறிப்போகும்,
சேருவோம் எல்லோரும் அரிக்கட்டோடே. – அரி

3. கவலை, விசாரம் கஷ்ட நஷ்டத்தோடும்
விதைத்தாலும் வேலைவிட மாட்டோமே;
இளைப்பாறக் கர்த்தர் நம்மை வாழ்த்திச் சேர்ப்பார்
சேருவோம் எல்லோரும் அரிக்கட்டோடே. – அரி

1. கர்த்தரின் வேலை செய்யும் விடியற்காலத்தில்,
வைகறை சுகமான நல்ல நேரத்தில்!
சூரியன் வானில் ஏறி கிரணம் வீசவும்,
இராத்திரி மா சமீபம் வேலை ஓய்ந்திடும்.

2. கர்த்தரின்வேலை செய்யும் மத்யான வேளையும்,
வெயிலும் எரித்தாலும் ஒழியாதிரும்,
ஊழியம் செய்து வாரும் இடைவிடாமலும்,
இராத்திரி மா சமீபம் வேலை ஓய்ந்திடும்.

3. கர்த்தரின் வேலை செய்யும் பொழுது போகுமே
சிவந்த வானம் பாரும் ஒளி நீங்குமே!
சாயந்தர காலமாகி இருள் உண்டாகவும்,
இராத்திரி மா சமீபம் வேலை ஓய்ந்திடும்.

## ***பல்லவி***

இதோ அடியேனிருக்கிறேன் – என்னை அனுப்பும்
இயேசுவே, இப்போதே போகிறேன்

## ***அனுபல்லவி***

இதோ போகிறேன் நாதனே ! இப்புவியில் நீர் எனக்கு
எந்த இடம் காண்பித்தாலும், உந்தன் சித்தம் – செய்திடுவேன்.

## ***சரணங்கள்***

1. மலைகள், பள்ளங்கள் தாண்டியோ – மா கஷ்டமான
வனங்கள், கடல்கள் கடந்தோ தொலை தூரமாகச் சென்றோ,
சுவிசேஷம் கூறும்படி சொல்லும்போது நீர் ! இயேசுவே, துரிதமாய்ச்
சென்றிடுவேன் – இதோ

2. வறியர், அறிவீனருக்கும் மாதுஷ்டருக்கும்,
வணங்காக் கழுத்துள்ளோருக்கும், அறிவி என்நாமம் என்று
அடியேனை ஏவும்போதும் சரியென் றிணங்கி, எல்லா
ஜனத்தையும் தேடிப் போவேன் – இதோ

3. வயல் நிலங்கள் இப்போதே – அறுப்புக்கேற்க
வளமாய் விளைந்திருக்குதே நயமான வேலையாட்கள்
ஞாலமதில் தேடுகின்றீர் பயமின்றி என்னை உந்தன்
பாதத்தில் ஒப்புவித்தேன் – இதோ

4. உலக முடிவு மட்டுமே  சகல நாளும் உங்களோடிருப்பேன் என்றீரே,
மலைமேலே, நீர் கொடுத்த மா பெரிய கட்டளையைத்
தலைமேலே கொண்டிப்போது, தரணியில் ஏகிடுவேன் – இதோ

***பல்லவி***

இயேசுவுக்காய் தொண்டு செய்திடவே,
ஏகமாய் எழுந்திடு திருச்சபையே! நாசமிந் நானிலத்தில் வருதே.

***சரணங்கள்***

1. தமக்கு முன் வைத்த மகிமை எண்ணி
தளராமல் பாடுகள் சகித்தவரை நோக்கியே நாம் ஓடிடுவோம்
தாங்கியே, காப்பாரே கடைசி வரை – இயேசு

2. பாவத்தில் மா ஜனம் அழிவதாலே
லோகத்தின் இரட்சிப்பைக் கருதியே நாம் நள்ளிரவோ, நடுப்பகலோ,
நறுங்குண்ட ஆவியில் ஜெபித்திடவே, – இயேசு

3. பேதுரு பவுலும் ஸ்தேவானுமன்று
பெரும் இரத்த சாட்சியாய் மரித்ததுபோல், புறப்படுவோம் இயேசுவுக்காய்
போர்முனையில் ஜீவன் வைத்திடவே. – இயேசு

4. ஒருவரும் கிரியை செய்ய இயலா
இருண்ட இராக்காலம் எதிர்ப்படுமுன், ஏகோபித்து ஜெபித்திடுவோம்
இயேசுவின் சத்தியம் சாற்றிடவே. – இயேசு

5. மேகத்தில் இயேசு நாதர் தோன்றிடும் நாள்
வேகத்தில் நிறைவேறும் காலமிதில், பரிசுத்தத்தைக் காத்துக் கொண்டே
பரமனுக்காய் கடும் சேவை செய்வோம். – இயேசு

fppt.com

***பல்லவி***

அழைத்தீரே ஏசுவே அன்போடே என்னை அழைத்தீரே
ஆண்டவர் சேவையிலே மரிப்பேனே ஆயத்தமானேன் தேவே.

***சரணங்கள்***

1. என் ஜனம் பாவத்தில் மாள்கிறதே என் உயிர்தந்தேன் மன்னுயிர்க்கே
என் துயர தொனியோ இதை யார் இன்று கேட்பாரோ என் காரியமாக
யாரை அழைப்பேன் என்றீரே வந்தேனிதோ – அழைத்தீரே

2. என்னதான் தீங்கு நான் இழைத்தேன்
என்னை விட்டோடும் என் ஜனமே எத்தனை நன்மைகளோ
உனக்காக நான் செய்தேனல்லோ என்றே உரைத்தென்னை
ஏங்கி அழைத்தீர் எப்படி நான் மறப்பேன் ? – அழைத்தீரே

3. ஆதி விஸ்வாசம் தங்கிடவே ஆண்டவர் அன்பு பொங்கிடவே
ஆதி அப்போஸ்தலரே உபதேசம் அளித்தனரே
நல் பூரண தியாகப் பாதை நடந்தே நன்றியுடன் உழைப்பேன்
– அழைத்தீரே

4. எந்தன் வேண்டுதல் கேட்டிடுமே ஏழை ஜனத்தை மீட்டிடுமே
எந்தன் பிதா சித்தமே என் போஜனமும் அதுவே
என் பிராணனைக்கூட நேசித்திடாமல் என்னையும் ஒப்படைத்தேன்
– அழைத்தீரே

5. ஆடம்பரங்கள் மேட்டிமைகள் ஆசாபாசங்கள் பெருகிடுதே
ஆயிரம் ஆயிரமே நரக வழி போகின்றாரே
ஆ ! நீரேயல்லாமல் யாருண்டு மீட்க ஆண்டவரே இறங்கும் – அழைத்தீரே

6. பாக்கியமான சேவையிதே பாதம் பணிந்தே செய்திடுவேன்
ஆயுள் முடியும் வரை கிறிஸ்தேசு வருகைவரை அன்பின் மனத்தாழ்மை
உண்மையும் காத்து ஆண்டவரை அடைவேன் – அழைத்தீரே

**350**

***<u>பல்லவி</u>***

தாசரே, இத்தரணியை அன்பாய்
இயேசுவுக்குச் சொந்த மாக்குவோம்.

***<u>அனுபல்லவி</u>***

நேசமாய் இயேசுவைக் கூறுவோம், அவரைக்
காண்பிப்போம், மாவிருள் நீக்குவோம், வெளிச்சம் வீசுவோம்.

***<u>சரணங்கள்</u>***

**1.** வருத்தப்பட்டுப் பாரஞ் சுமந்தோரை வருந்தியன்பாய் அழைத்திடுவோம்,
உரித்தாய் இயேசு பாவப் பாரத்தை,
நமது துக்கத்தை, நமது துன்பத்தைச் சுமந்து தீர்த்தாரே. – தாசரே

**2.** பசியுற்றோர்க்கும் பிணியாளிகட்கும் பட்சமாக உதவி செய்வோம்;
உசித நன்மைகள் நிறைந்து, தமை மறந்து, இயேசு கனிந்து திரிந்தனரே.
– தாசரே

**3.** நெருக்கப்பட்டு ஒடுக்கப் பட்டோரை; நீசரை நாம் உயர்த்திடுவோம்;
பொறுக்கவொண்ணா கஷ்டத்துக்குள், நிஷ்டூரத்துக்குள்,
படுகுழிக்குள் விழுந்தனரே – தாசரே

**4.** இந்து தேச மாது சிரோ மணிகளை விந்தை யொளிக்குள்
வரவழைப்போம்; சுந்தர குணங்களடைந்து, அறிவிலுயர்ந்து,
நிர்ப்பந்தங்கள் தீர்ந்து, சிறந்திலங்கிட, – தாசரே

**5.** மார்க்கம் தப்பி நடப்போரைச் சத்ய வழிக்குள் வந்திடச் சேர்த்திடுவோம்
ஊக்கமாக ஜெபித்திடுவோம், நாமுயன்றிடுவோம்;நாம் உழைத்திடுவோம்,
நாம் ஜெயித்திடுவோம், – தாசரே

1. இயேசு கிறிஸ்துவின் நல் சீடராகுவோம்
விசுவாசத்தில் முன் நடப்போம் இனி எல்லோருமே
அவர் பணிக்கெனவே ஒன்றாய் எந்நாளும் உழைத் திடுவோம்.

***<u>பல்லவி</u>***

நம் இயேசு ராஜாவே இதோ வேகம் வாராரே!
ஆதிவேகமாய் செயல்படுவோம்.

2. மனிதர் யாரிடமும் பாசம் காட்டுவோம்
இயேசு மந்தைக்குள் அழைத்திடுவோம்
அதி உற்சாகமாய், அதி சீக்கிரமாய்
இராஜ பாதையை செம்மையாக்குவோம். – நம்

3. சாத்தானின் சதிகளை தகர்த்திடுவோம்
இனி இயேசுவுக்கய் வாழ்ந் திடுவோம்
இந்த பார் முழுதும் இயேசு நாமத்தையே
எல்லா ஊரிலும் எடுத்துரைப் போம். – நம்

4. ஆவி, ஆத்மா, தேகம் அவர் பணிக்கே
இனி நான் அல்ல, அவரே எல்லாம்
என முடிவு செய்தோம், அதில் நிலைத்திருப்போம்
அவர் நாளினில் மகிழ்ந்திடுவோம் – நம்

ஜீவியமே ஒரே ஜீவியமே அண்டசராசரம் அனைத்திலுமே
மேவி வசிக்கும் மனிதர் அனைத்தும் பூமியில் வாழ்வது ஒரே தரமே

**1.** பிறப்பதும் இறப்பதும் தெய்வச் செயல் இடையில் இருப்பது
வாழ்க்கையாகும் இயேசுவில் சார்வதால் பரிசுத்தம் காணும்
பரிசுத்தர் ஆட்சியில் சாட்சி கூறும் இதை விடில் முடிவது
வீழ்ச்சியாகும் – ஜீவியமே

**2.** நித்தம் நம்மை விட்டுச் செல்வார் பாரீர் அவர் யாரும் செல்லும்
அவ்விடமும் பாரீர் அலறலும், புலம்பலும் உடல்தனைக் கீறலும்
நரகத்தின் தினசரி காட்சி கேளீர் இரக்கத்தின் வழி காணார்
கதியும் காண்பீர் – ஜீவியமே

**3.** திறப்பின் முகம் நிற்க ஆட்கள் தேவை தியாகத்தின் பாதைக்குச்
செல்வோர் தேவை ‘என் ஜனம் அழியுதே’ என ஏங்கும் ஆண்டவர்
துக்கத்தைத் தணிக்கும் சீஷர் தேவை முன் வருவோர் யார்க்கும்
இதுவே வேளை – ஜீவியமே

**4.** எண்ணிப்பார் கழித்திட்டக் காலமதை கதையைப்போல் மனிதரின்
நாட்கள் செல்லும் உலகத்துச் சேவை சாகையில் ஓயும்
உன்னுடன் மரித்தப்பின் வருவதெது ? கிறிஸ்துவின் சேவை நிலைத்து
நிற்கும் – ஜீவியமே

**5.** அர்ப்பணம் தந்தையே கை அளித்தேன் கல்வி, செல்வம், சுகம்
பொருள் அனைத்தும் செல்லுவேன், சொல்லுவேன்
இயேசுவே வழி என வாழ்க்கையில் உம்மையேக்
கொண்டு வாழ்வேன் என்றுமே அங்கே நான்
உம்மில் வாழ்வேன். – ஜீவியமே

1. இருள் சூழும் காலம் இனி வருதே அருள் உள்ள நாட்கள்பயன்படுத்தும்
திறவுண்ட வாசல் அடைபடுமுன் நொறுங்குண்ட மனதாய்
முன் செல்வோர் யார் ?

***<u>பல்லவி</u>***

திறவுண்ட வாசல் அடைபடுமுன் நொறுங்குண்ட மனதாய்
முன் செல்வோர் யார் ?
நாட்கள் கொடியதாய் மாறிடுதே காலத்தை ஆதாயம்
செய்திடுவோம்.

2. தரிசு நிலங்கள் அநேகம் உண்டு தரிசனம் பெற்றோர் நீர் முன் வருவீர்,
பரிசாக இயேசுவை அவர்களுக்கும் அளித்திட அன்பினால் எழுந்து
செல்வீர். – திறவுண்ட

3. எத்தனை நாடுகள் இந்நாட்களில் கர்த்தரின் பணிக்குத்தான்
கதவடைத்தார் திறந்த வாசல் இன்று உனக்கெதிரில் பயன்படுத்தும்
மக்கள் ஞானவான்கள். – திறவுண்ட

4. விசுவாசிகள் என்னும் கூட்டம் உண்டு அன்பு ஒன்றே அவர் நடுவில்
உண்டு ஒருமனம், ஒற்றுமை, அங்கு உண்டு என்று சொல்லும் நாட்கள்
இன்று வேண்டும்; – திறவுண்ட

5. இனிவரும் நாட்களில் நமது கடன் வெகு அதிகம் விசுவாசிகளே
நம்மிடை உள்ள ஐக்கியமே வெற்றியும், தோல்வியும் ஆக்கிடுமே.
– திறவுண்ட

6. இயேசுவே எங்கள் உள்ளங்களை அன்பென்னும் ஆவியால்
நிறைத்திடுமே இந்தியாவின் எல்லாத் தெருக்களிலும் இயேசுவின் நாமம்
விரைந்திடுமே – திறவுண்ட

**1.** இரத்த சாட்சி கூட்டம் சத்திய பாதையில் நித்தம் நம்மை தத்தம் செய்து வீர சேவையில் மாண்டழியும் மக்கள் மேல் மனதுருகி கண்டறிந்த சாட்சி கூறுவோம்

***<u>பல்லவி</u>***

போர் வீரரே பூமி மாளுதே பாய்ந்து செல்லுவீர் நம் இயேசுவின் பின்னே தேவ ராஜ்யம் ஓங்கவே பாவ மக்கள் மீளவே தியாகப் பரிசுத்தராய் சேவை செய்குவோம்.

**2.** ஜாதி மதப்பேதம் முற்றும் நீங்கிட ஜோதியாய்ப் பிறந்து லோகப் பாவம் போக்கிட கல்வாரியில் மரித்தே உயிர்த்தெழுந்த கர்த்தரின் நற்செய்தி சாற்றுவோம் – போர்

**3.** நாடு நகரமோ, காடு மலையோ, நாடித் தேடி ஓடியே நல் ஊழியம் செய்வோம் மாண்டழியும் மக்கள் மேல் மனதுருகி கண்டறிந்த சாட்சி கூறுவோம்– போர்

**4.** தாகமோ பசியோ நோக்கிடாமலே லோக இன்ப துன்பமோ நெருக்கிடாமலே முன் வைத்த காலையும் பின் வைத்திடாமலே இன்னமும் முன்னேறி சேவிப்போம். – போர்

**5.** சுத்த ஜீவியம் நற்சாட்சி பெறுவோம் சத்திய வழி நடக்கும் பக்தி நாடுவோம் வாக்கு வரம் வல்லமை அடைந்திடுவோம் வல்ல விசுவாச சேவையில் – போர்

**6.** பிரதி பலன் ஏந்தி இயேசு வருவார் பாடுபட்ட பக்தரோடு நாமும் சேருவோம் ஆதிப் பிதாக்களுடன் ரத்த சாட்சிகள்ஆர்ப்பரித்து கூடி வாழுவோம் – போர்

விளைந்த பலனை அறுப்பாரில்லை விளைவின் நற்பலன் வாடிடுதே
அறுவடை மிகுதி ஆளோ இல்லை அந்தோ மனிதர் அழிகின்றாரே.

1. அவர் போல் பேசிட நாவு இல்லை அவர் போல் அலைந்திட கால்கள் இல்லை
எண்ணிலடங்கா மாந்தர் சத்தம் உந்தன் செவியினில் தொனிக்கவில்லையோ.
– விளைந்த

2. ஆத்தும இரட்சண்யம் அடையாதவர் ஆயிரமாயிரம் அழிகிறாரே
திறப்பின் வாசலில் நிற்பவர் யார் தினமும் அவர் குரல் கேட்கவில்லையோ.
– விளைந்த

3. ஆத்தும தரிசனம் கண்டிடுவாய் ஆண்டவர் வாக்கினை ஏற்றிடுவாய்
விரைந்து சென்று சேவை செய்வாய் விளைவின் பலனை அறுத்திடுவாய்.
– விளைந்த

4. ஒருமனம் ஒற்றுமை ஏகசிந்தை சபைதனில் விளக்கிட செயல்படுவாய்
நிமிர்ந்து நிற்கும் தூண்களைப்போல் நிலைவரமாய் என்றும் தாங்கி நிற்பாய்
– விளைந்த

5. ஆவியின் வரங்கள் ஒன்பதனை ஆவலுடன் நீயும் பெற்றிடுவாய்
சபையின் நன்மைக்காய் உபயோகிப்பாய் சந்ததம் சபையினில்
நிலைத்திருப்பாய். – விளைந்த

6. தேவனின் சேவையில் பொறுப்பெடுப்பாய் உந்தனின் பங்கினை ஏற்றிடுவாய்
கர்த்தர் நாட்டினதோட்டத்திலே கடைசிவரை நீயும் கனி கொடுப்பாய்.
– விளைந்த

# 356

1. மெய் வழி நீரே, இயேசுவே, நீர் பாவ நாசராம்;
பிதாவிடத்திற் சேர்வதே உமதிரக்கமாம்.

2. சத்தியம் நீரே, ஆகையால் உம் வாக்கு ஞானமே;
என் நெஞ்சில் அதின் ஜோதியால் வெளிச்சந் தோன்றுமே.

3. நீரே என் ஜீவன், உம்மிலே பிழைத்தசைகிறேன்;
உமக்குப் பிரியமாகவே நடந்து கொள்ளுவேன்.

4. நீரே வழியும், சத்யமும் ஜீவனும் ஆனவர்!
உம்மையே நம்பும் யாவரும் பிழைத்து வாழுவர்.

357

1. என் மேய்ப்பர்; இயேசு கிறிஸ்துதான்,
நான் தாழ்ச்சியடையேனே! ஆட்கொண்டோர் சொந்த மான நான்
குறையடைகிலேனே.

2. ஜீவாற்றில் ஓடும் தண்ணீரால் என் ஆத்ம தாகம் தீர்ப்பார்;
மெய் மன்னாவாம் தம் வார்த்தையால் நல் மேய்ச்சல் எனக்கீவார்.

3. நான் பாதை விட்டு ஓடுங்கால் அன்பாகத் தேடிப் பார்ப்பார்;
தோள் மீதில் ஏற்றிக் காப்பதால் மகா சந்தோஷங் கொள்வார்.

4. சா நிழல் பள்ளத்தாக்கிலே நான் போக நேரிட்டாலும்,
உம் அன்பின் கோலைப் பற்றவே, அதே என் வழி காட்டும்.

5. இவ்வேழைக்கும் ஓர் பந்தியை பகைஞர்க்கெதிர் வைத்தீர்;
உம்மாவியால் என் சிரசை தைலாபிஷேகஞ் செய்வீர்;

6. என் ஆயுள் எல்லாம் என் பாத்ரம் நிரம்பி வழிந்தோடும்;
ஜீவாற்றின் நீரால் என்னுள்ளம் நிறைந்து பொங்கிப் பாயும்.

7. என் ஜீவ காலம் முற்றிலும் கடாட்சம் பெற்று வாழ்வேன்;
கர்த்தாவின் வீட்டில் என்றைக்கும் நான் தங்கி பூரிப்பாவேன்.

# 358

1. சகோதரர்களொருமித்து  சஞ்சரிப்பது மெத்தனை
மகா நலமு மின்பமும் வாழ்த்தல் செயலாயிருக்குமே.

2. ஆரோன் சிரசில் வார்த்த நல் அபிஷேகத்தின் தைலந்தான்,
ஊறி தாடி யங்கியில் ஒழுகுமனந்தம் போலவே.

3. எர்மோன் மலையின் பேரிலும், இசைந்த சீனாய் பேரிலும்
சேர்மானமாய்ப் பெய்கின்ற சீதளப் பனிகள் போலவே.

4. தேசமார்க்க மிரண்டிற்குஞ் சேர்ந்த திசைந்தாகிய
ஆசீர்வாதம் ஜீவனும் அங்குமென்று முள்ளதே.

1. சொற்பக்காலம் பிரிந்தாலும், பார்; பின்பு ஏக சபையாக
கூடுவோம் ஆனந்தமாக அது மட்டும் கர்த்தர் தாங்குவார்.

***<u>பல்லவி</u>***

கூடுவோம்... கூடுவோம்... இயேசுவோடு வாழுவோம்,
கூடுவோம்... கூடுவோம்... அது மட்டும் கர்த்தர் தாங்குவார்.

2. அது மட்டும் கர்த்தர் தாங்குவார் மிக்க ஞானத்தால் நடத்தி,
மோசமின்றியும் காப்பாற்றி, அது மட்டும் கர்த்தர் தாங்குவார்.
– கூடுவோம்

3. அது மட்டும் கர்த்தர் தாங்குவார். சிறகாலே மூடி வைத்து,
மன்னா தந்து போஷிப்பித்து அது மட்டும் கர்த்தர் தாங்குவார்.
– கூடுவோம்

4. அது மட்டும் கர்த்தர் தாங்குவார். நாச மோசம் நேரிட்டாலோ,
கையில் ஏந்தி, அன்பினாலே அது மட்டும் கர்த்தர் தாங்குவார்.
– கூடுவோம்

5. அது மட்டும் கர்த்தர் தாங்குவார், ஜெயக் கொடி பறந்திடும்;
சாவும் தோற்றுப் பயந்தோடும்; அது மட்டும் கர்த்தர் தாங்குவார்.
– கூடுவோம்

## 360

## *பல்லவி*

திருப்பாதம் நம்பி வந்தேன் கிருபை நிறை இயேசுவே
தம தன்பைக் கண்டடைந்தேன் தேவ சமூகத்திலே.

## *சரணங்கள்*

1. இளைப்பாறுதல் தரும் தேவா களைத்தோரைத் தேற்றிடுமே
சிலுவை நிழல் எந்தன் தஞ்சம் சுகமாய் அங்கு தங்கிடுவேன் – திரு

2. என்னை நோக்கிக் கூப்பிடு என்றீர் இன்னல் துன்ப நேரத்திலும்
கருத்தாய் விசாரித்து என்றும் கனிவோடெம்மை நோக்கிடுமே. – திரு

3. மனம் மாற மாந்தன் நீர் அல்ல மன வேண்டுதல் கேட்டிடும்
எனதுள்ளம் ஊற்றி ஜெபித்தே இயேசுவே உம்மை அண்டிடுவேன். – திரு

4. என்னைக் கைவிடாதிரும் நாதா என்ன நிந்தை நேரிடினும்
உமக்காக யாவும் சகிப்பேன் உமது பெலன் ஈந்திடுமே. – திரு

5. உம்மை ஊக்கமாய் நோக்கிப் பார்த்தே உண்மையாய் வெட்கம்
அடையேன் உமது முகப் பிரகாசம் தினமும் என்னில் வீசிடுதே – திரு

6. விசுவாசத்தால் பிழைத்தோங்க வீரபாதை காட்டினீரே
வளர்ந்து கனிதரும் வாழ்வை விரும்பி வரம் வேண்டுகிறேன். – திரு

7. பலர் தள்ளின மூலைக்கல்லே பரம சீயோன் மீதிலே
பிரகாசிக்கும் அதை நோக்கி பதறாமலே காத்திருப்பேன். – திரு

ஜீவனுள்ள தேவனே வாரும் ஜீவ பாதையிலே நடத்தும்
ஜீவ தண்ணீர் ஊறும் ஊற்றிலே ஜீவன் பெற என்னை நடத்தும்

***<u>பல்லவி</u>***

தேவனே நீர் பெரியவர் தேவனே நீர் பரிசுத்தர்
தேவனே நீர் நல்லவர் தேவனே நீர் வல்லவர்.

1. பாவிகள் துரோகிகள் ஐயா பாவ ஆதாம் மக்களே தூயா
பாதகர் எம் பாவம் போக்கவே பாதகன் போல் தொங்கினீரல்லோ.
– தேவனே

2. ஐந்து கண்ட மக்களுக்காக ஐந்து காயமேற்ற நேசரே
நொந்துருகி வந்த மக்கள் மேல் நேச ஆவி வீசச் செய்குவீர்.
– தேவனே

3. வாக்குத்தத்தம் செய்த கர்த்தரே வாக்கு மாறா உண்மை நாதரே
வாக்கை நம்பி வந்து நிற்கிறோம் ஆவியின் நிறைவைத் தாருமே.
– தேவனே

4. நியாயத் தீர்ப்பின் நாள் நெருங்குதே நேசர் வர காலமாகுதே
மாயலோகை நம்பி மாண்டிடும் மானிடரை மீட்க மாட்டீரோ.
– தேவனே

1. இயேசுவே! கல்வாரியில் என்னை வைத்துக் கொள்ளும்
பாவம் போக்கும் இரத்தமாம் திவ்விய ஊற்றைக் காட்டும்

***பல்லவி***

மீட்பரே! மீட்பரே! எந்தன் மேன்மை நீரே!
விண்ணில் வாழுமளவும் நன்மை செய்குவீரே!

2. பாவியேன் கல்வாரியில் இரட்சிப்பைப் பெற்றேனே,
ஞான ஜோதி தோன்றவும் கண்டு பூரித்தேனே. – மீட்பரே

3. இரட்சகா! கல்வாரியின் காட்சி கண்டோனாக
பக்தியோடு ஜீவிக்க என்னை ஆள்வீராக. – மீட்பரே

4. இன்னமும் கல்வாரியில் ஆவலாய் நிற்பேனே
பின்பு மோட்ச லோகத்தில் என்றும் வாழுவேனே. மீட்பரே

**பல்லவி**

ஆனந்தமாய் இன்ப சீயோன் ஏகிடுவேன்
தூய பிதாவின் முகம் தரிசிப்பேன்.

**அனுபல்லவி**

நாளுக்கு நாள் அற்புதமாய் என்னைத் தாங்கிடும்
நாதன் இயேசு என்னோடிருப்பார் – ஆன

**சரணங்கள்**

1. சேற்றினின்றென்னைத் தூக்கியெடுத்து மாற்றி உள்ளம்
புதிதாக்கினாரே கல்லான என் உள்ளம் உருக்கின கல்வாரியை
கண்டு நன்றியுடன் பாடிடுவேன் . – ஆன

2. வாலிப நாளில் இயேசுவைக் கண்டேன் வாஞ்சையுடன் என்னைத்
தேடி வந்தார் எதற்குமே உதவா என்னையும் கண்டெடுத்தார்
இயேசுவின் அன்பை நான் என் சொல்லுவேன்– ஆன

3. கர்த்தரின் சித்தம் செய்திடநித்தம் தத்தம் செய்தே என்னை
அர்ப்பணித்தேன் இயேசு அல்லால் ஆசை இப் பூவில் வேறே இல்லை
என்றும் எனக்கவர் ஆதரவே – ஆன

4. உம்மை பின்சென்று ஊழியம் செய்து உம்பாதம்
சேர்ந்திட வாஞ்சிக்கிறேன் தாரும் தேவா ஏழைக்கும்
மாறாத உம் கிருபை கண் பாரும் என்றும் நான் உம் அடிமை – ஆன

5. தேற்றிடுதே உம் வாக்குகள் என்னை ஆற்றிடுதே உந்தன் சமூகமே
பெலத்தின் மேல் பெலனடைந்து நான் சேருவேன் பேரின்ப சீயோனில்
வாழ்ந் திடுவேன் – ஆன

***சரணங்கள்***

**1.** மோட்ச யாத்திரை செல்கிறோம் மேலோகவாசிகள்
இம்மாய லோகந் தாண்டியே எம்வீடு தோன்றுதே
கடந்து செல்கிறோம் கரையின் ஓரமே காத்திருந்த ராஜ்ஜியம்
கண்டடைவோம்

***பல்லவி***

ஆனந்தமே ஆ ஆனந்தமே ஆண்டவருடன் நாம் என்றும் ஆளுவோம்
ஆதிமுற் பிதாக்களோடு தூதருமாய் ஆர்ப்பரிப்புடன் கூடி வாழுவோம்.

**2.** சத்திய சுவிசேஷம் எடுத்துரைத்துமே – தம்
நித்ய ராஜ்யம் மக்களை ஆயத்தமாக்கவே தேசமெங்குமே அலைந்து
செல்கிறோம் நேசர் இயேசு வாக்குரைகள் நம்பியே – ஆனந்தமே

**3.** அள்ளித் தூவிடும்விதை சுமந்து செல்கிறோம் – நம்
அண்ணல் இயேசுவின் சமூகம் முன்னே செல்லுதே
கண்ணீர் யாவுமே கடைசி நாளிலே கர்த்தரே துடைத்து எம்மைத்
தேற்றுவார் – ஆனந்தமே

**4.** மேகஸ்தம்பம் அக்கினி வெளிச்சம் காட்டியே – நல்
ஏகமாய் வனாந்திர வழி நடத்துவார் இலக்கை நோக்கியே தவறிடாமலே
இப்புவி கடந்து அக்கரை சேர்வோம் – ஆனந்தமே

**6.** கர்த்தர் எம் அடைக்கலம்கவலையில்லையே இக்கட்டு துன்ப நேரமோ
கலக்கமில்லையே கஷ்டம் நீக்குவார் கவலை போக்குவார்
கைவிடாமல் நித்தமும் நடத்துவார் – ஆனந்தமே

***பல்லவி***

ஆனந்தமே பரமானந்தமே – இயேசு
அண்ணலை அண்டினோர்க் கானந்தமே.

***சரணங்கள்***

1. இந்த புவி ஒரு சொந்தம் அல்ல என்று இயேசு என்
நேசர்மொழிந்தனரே! இக்கட்டுத் துன்பமும் இயேசுவின் தொண்டர்க்கு
இங்கேயே பங்காய்க் கிடைத்திடினும் – ஆன

2. கர்த்தாவே நீர் எந்தன் காருண்யக் கோட்டையே
காரணமின்றிக் கலங்கேனே யான்; விசுவாசப் பேழையில்
மேலோகம் வந்திட மேவியே சுக்கான் பிடித்திடுமே. – ஆன

3. என் உள்ளமே உன்னில் சஞ்சலம் ஏன் வீணாய்க்
கண்ணீரின் பள்ளத் தாக்கல்லோ இது ? சீயோன் நகரத்தில் சீக்கிரம்
சென்று நாம் ஜெய கீதம் பாடி மகிழ்ந்திடலாம் – ஆன

4. கூடார வாசிகளான நமக்கிங்கு வீடென்றும்
நாடென்றும் சொல்லலாமோ ? கை வேலையில்லாத வீடொன்றை மேலே
தான் செய்வேன் எனச் சொல்லிப் போகலையோ ? – ஆன

5. துன்பங்கள் தொல்லை இடுக்கண் இடர் இவை தொண்டர் எமை
அண்டி வந்திடினும், சொல்லி முடியாத ஆறுதல் கிருபையைத்
துன்பத்தினூடே அனுப்பிடுவார். – ஆன

6. இயேசுவே சீக்கிரம் இத்தரை வாருமேன் ஏழை வெகுவாய்க்
கலங்குகிறேனே! என் நேசர் தன் முக ஜோதியதேயல்லால்
இன்பந் தரும் பொருள் ஏதுமில்லை. – ஆன

**1.** துன்பம் உன்னைச் சூழ்ந்தலைக் கழித்தாலும் இன்பம் இழந்தேன்
என்றெண்ணிச் சோர்ந்தாலும் எண்ணிப்பார் நீ பெற்ற பேராசீர்வாதம்!
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்.

***<u>பல்லவி</u>***

எண்ணிப்பார் நீ பெற்ற பாக்யங்கள்; கர்த்தர் செய்த
நன்மைகள் யாவும் ஆசீர்வாதம் எண்ணு ஒவ்வொன்றாய்;
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்.

**2.** கவலைச் சுமை நீ சுமக்கும் போதும்; சிலுவை உனக்குப்
பளுவாகும் போதும், எண்ணிப்பார் நீ பெற்ற பேராசீர்வாதம்;
கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும். – எண்ணி

**3.** நிலம் பொன்னுள்ளோரை நீ பார்க்கும்போது,
நினை கிறிஸ்துவின் ஐசுவரியம் உண்டுனக்கு; பணங் கொள்ளா
பேராசீர்வாதத்தைப் பார்; பரலோக பொக்கிஷமும் வீடும் பார். – எண்ணி

**4.** அநேக துன்பங்கள் உன்னைச் சூழ்ந்தாலும், அதைரியப் படாதே;
கர்த்தர் உன் பக்கம்; அநேகமாம் நீ பெற்ற சிலாக்கியங்கள்
தூதர் உன்னைத் தேற்றுவார் பிரயாணத்தில். – எண்ணி

## ***பல்லவி***

ஆச்சரியமே! அதிசயமே! ஆண்டவர் செயல்கள் ஆதி பக்தரிடம்

## ***சரணங்கள்***

**1.** செங்கடல் இரண்டாய்ப் பிரிந்து போக
சொந்த ஜனங்களைக் நடத்தினாரே
இஸ்ரவேலின் துதிகளாலே ஈன எரிகோ வீழ்ந்ததுவே.
– ஆச்சரியமே

**2.** ஏழு மடங்கு எரி நெருப்பில் ஏழை தம் தாசருடன் நடந்தார்
தானியேலைச் சிங்கக் கெபியில் தூதன் துணையால் காத்தனரே.
– ஆச்சரியமே

**3.** பனி மழையை நிறுத்தினாரே பக்தன் எலியா தன் வாக்கினாலே
யோசுவாவின் வார்த்தையாலே ஏறும் சூரியன் நின்றதுவே.
– ஆச்சரியமே

**4.** மதிலைத் தாண்டி சேனைக்குள் பாயும் மாபெலன் தேவனிடம்
அடைந்தான் வீழ்த்தினானே கோலியாத்தை வீரன் தாவீது
கல் எறிந்தே. – ஆச்சரியமே

**5.** நம் முற்பிதாக்கள் நம்பின தேவன் நேற்றும் இன்றும் என்றும்
மாறிடாரே தம்மை நோக்கி வேண்டும் போது தாங்கி நம்மை
ஆதரிப்பார். – ஆச்சரியமே

## *பல்லவி*

கண்களை ஏறெடுப்பேன் – மாமேரு நேராய் என்
கண்களை ஏறெடுப்பேன்

## *அனுபல்லவி*

விண்மண் உண்டாக்கிய வித்தகனிடமிருந்து
எண்ணிலா வொத்தாசை என்றனுக்கே வரும் – கண்

## *சரணங்கள்*

1. காலைத் தள்ளாடவொட்டார் – உறங்காது காப்பவர்
காலைத் தள்ளாடவொட்டார் வேலையில் நின்றிஸ்ர
வேலரைக் காப்பவர் காலையும் மாலையும் கண்ணுறங்காரவர்
– கண்

2. பக்தர் நிழல் அவரே – என்னை ஆதரித்திடும்
பக்தர் நிழல் அவரே. எக்கால நிலைமையில் என்னைச்
சேதப்படுத்தாது அக்கோலம் கொண்டோனை அக்காலம் புரியவே
– கண்

3. எல்லாத் தீமைகட்கும் – என்னை விலக்கியே
எல்லாத் தீமைகட்கும், பொல்லா உலகினில் போக்கு வரத்தையும்
நல்லாத்துமாவையும் நாடோறும் காப்பவர். – கண்

## பல்லவி

அன்பே பிரதானம், – சகோதர அன்பே பிரதானம்

## சரணங்கள்

1. பண்புறு ஞானம் – பரம நம்பிக்கை,
இன்ப விஸ்வாசம், – இவைகளி லெல்லாம் – அன்பே

2. பலபல பாஷை – படித்தறிந்தாலும்,
கலகல வென்னும் – கைம்மணியாமே. – அன்பே

3. என் பொருள் யாவும் – ஈந்தளித்தாலும்,
அன்பிலையானால் –அதிற்பயனில்லை. – அன்பே

4. துணிவுட னுடலைச் – சுடக் கொடுத்தாலும்,
பணிய அன்பில்லால் – பயனதிலில்லை. – அன்பே

5. சாந்தமும் தயவும் – சகல நற்குணமும்
போந்த சத்தியமும் –பொறுமையுமுள்ள – அன்பே

6. புகழிறு மாப்பு, – பொழிவு பொறாமை,
பகையநியாயப் – பாவமுஞ் செய்யா. – அன்பே

7. சினமடையாது, – தீங்கு முன்னாது,
தினமழியாது, – தீமை செய்யாது. – அன்பே

8. சகலமுந் தாங்கும், – சகலமும் நம்பும்,
மிகைபட வென்றும் – மேன்மை பெற்றோங்கும். – அன்பே

***பல்லவி***

சேனைகளின் கர்த்தர் நல்லவரே சேதமின்றி நம்மைக் காப்பவரே சோர்ந்திடும் நேரங்கள் தேற்றிடும் வாக்குகள் சோதனை வென்றிடத் தந்தருள்வார்.

***அனுபல்லவி***

எக்காலத்தும் நம்பிடுவோம் திக்கற்ற மக்களின் மறைவிடம் பக்கபலம் பாதுகாப்பும் இக்கட்டில் இயேசுவே அடைக்கலம்.

***சரணங்கள்***

1. வெள்ளங்கள் புரண்டு மோதினாலும் உள்ளத்தில் உறுதி அசையாதே ஏழு மடங்கு நெருப்பு நடுவிலும் இயேசு நம்மோடங்கு நடக்கின்றார் – எக்

2. ஆழத்தினின்று நாம் கூப்பிடுவோம் ஆத்திரமாய் நம்மைத் தப்புவிப்பார் கப்பலின் பின்னணி நித்திரை செய்திடும் கர்த்தர் நம்மோடுண்டு கலக்கம் ஏன் ? – எக்

3. காத்திருந்து பெலன் பெற்றிடுவோம் கர்த்தரின் அற்புதம் கண்டிடுவோம் ஜீவனானாலும் மரண மானாலும் நம் தேவனின் அன்பில் நிலைத்திருப்போம் – எக்

4. இயேசு நம் யுத்தங்கள் நடத்துவார் ஏற்றிடுவோம் என்றும் ஜெயக்கொடி யாவையும் ஜெயித்து வானத்தில் பறந்து இயேசுவை சந்தித்து ஆனந்திப்போம். – எக்

புதிய வாழ்க்கை புதிய சிந்தை ஈந்தாரே
நேற்றும் இன்றும் என்றும் மாறா இயேசு ராஜன்.

***சரணங்கள்***

1. துதிப்பேன் (2) என் இயேசு தேவனை
பணிவேன் (2) அவர் பொற்பாதமதை இரத்தத்தால் கழுவினார்
சுத்தம் பண்ணினார் புது வாழ்வை எனக்களித்தார் – புதிய

2. பாரீர் (2) வயல் வெளிகளைப் பாரீர்
வருவீர் (2) நம் ஆண்டவர் ஊழியராய் நம்முடன் இருக்கிறார்
பெலன் அளிக்கிறார் நாம் உண்மையாய் உழைத்திடவே – புதிய

3. செல்வோம் (2) அவர் தூய பணி செய்ய
வெல்வோம் (2) ஆத்துமாக்களை அவருக்காய் உலகை மாற்றுவோம்
ஜெயத்தை நாட்டுவோம் அவர் நாமத்தை உயர்த்திடுவோம் – புதிய

4. வருவார் (2) வெகுமதி யுடனே வருவார்
உழைத்தால் பெறுவாய் அந்த வானவரின் பரிசை வாக்களித்தவர்
உண்மையுள்ளவர் அவர் வரும் காலம் நெருங்கிடுதே. – புதிய

## *பல்லவி*

தேவ கிருபை என்றுமுள்ளது! அவர் கிருபை என்றுமுள்ளது!
அவரைப் போற்றித் துதித்துப் பாடி, அல்லேலூயா என்றார்ப்பரிப்போம்.

## *சரணங்கள்*

**1.** நெருக்கப்பட்டும் மடிந்திடாமல் கர்த்தர் தாம் நம்மைக் காத்ததாலே,
அவர் நல்லவர், அவர் வல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது – தேவ

**2.** சத்துரு சேனை தொடர்ந்து சூழ்கையில் பக்தர் தாம் தாவீதின்
தேவன் நமக்காய் முன் சென்றாரே. அவர் வல்லவர், அவர் கிருபை
என்றுமுள்ளது – தேவ

**3.** அக்கினி சோதனை பட்சிக்க வந்தும் முட்செடி தன்னில்
தோன்றிய தேவன் பாதுகாத்தாரே, அவர் நல்லவர்,
அவர் கிருபை என்றுமுள்ளது – தேவ

**4.** காரிருள் போன்ற கஷ்டங்கள் வந்தும், பாரினில் அவர் என்
பாதையில் ஒளியாய் என்னை நடத்தினார், அவர் நல்லவர்,
அவர் கிருபை என்றுமுள்ளது. – தேவ

**5.** வெள்ளம் போல் நிந்தை மேற்கொள்ள வந்தும் வீரன் நெகேமியா
ஆவியை அளித்தே திட நம்பிக்கை தைரியம் ஈந்தாரே,
அவர் கிருபை என்றுமுள்ளது. – தேவ

**6.** நித்திய தேவனும் சத்திய பரன்தான் நித்தமும் நம்முடன்
இருப்பதாலே; அவர் நல்லவர் என்றும் துதியுங்கள்,
அவர் கிருபை என்றுமுள்ளது. – தேவ

## ***பல்லவி***

கிருபையிதே தேவ கிருபையிதே தாங்கி நடத்தியதே
இயேசுவிலே பொன் நேசரிலே அகமகிழ்ந்தே நாம் ஆனந்திப்போம்.

## ***சரணங்கள்***

1. ஆருயிர் அன்பராய் எங்களுடனே ஜீவியப் பாதையிலே – இயேசுபரன்
அனுதினமும் வழி நடந்தே அவரது நாமத்தில் காத்தனரே – கிருபை

2. அன்பின் அகலமும் நீளம் உயரமும் ஆழமும் அறிந்துணர
– அனுக்கிரகித்தார் கிறிஸ்துவிலே ஒரு மனையாய் சிருஷ்டித்தே
நிறுத்தினார் அவர் சுதராய் – கிருபை

3. நல்ல போராட்டம்போராடி ஜெயித்தே நித்திய ஜீவனை நாம்
– பெற்றிடவே விசுவாசத்தில் நிலைத்திடுவோம்
அசையாது அழைப்பினைக் காத்துக் கொள்வோம். – கிருபை

4. ஆவியும் மணவாட்டியும் ஆவலுடன் வாருமென்றழைக்கின்றாரே
– வாரு மென்பீர் சீயோனே நீ பார் உனக்காய் நாயகன் இயேசு தாம்
வெளிப்படுவார் – கிருபை

374

## பல்லவி

தம் கிருபை பெரிதல்லோ எம் ஜீவனிலும் அதே
இம்மட்டும் காத்ததுவே இன்னும் தேவை கிருபை தாருமே.

## சரணங்கள்

**1.** தாழ்மையுள்ளவரிடம் தங்கிடுதே கிருபை
வாழ்நாளெல்லாம் அது போதுமே சுகமுடன் தம் பெலமுடன்
சேவை செய்ய கிருபை தாருமே. – தம் கிருபை

**2.** நிர்மூலமாகாததும் நிற்பதுமே கிருபை
நீசன் என் பாவம் நீங்கினதே நித்திய ஜீவன் பெற்றுக்
கொண்டேன் தாங்கிடும் உம் கிருபை தாருமே. – தம் கிருபை

**3.** தினம் அதிகாலையில் தேடும் புது கிருபை
மனம் தளர்ந்த நேரத்திலும் பெலவீன சரீரத்திலும்
போதுமே உம் கிருபை தாருமே. – தம் கிருபை

**4.** மா பரிசுத்த ஸ்தலம் கண்டடைவேன் கிருபை
மூடும் திரை கிழிந்திடவே தைரியமாய் சகாயம் பெற
தேடி வந்தேன் கிருபை தாருமே. – தம் கிருபை

**5.** ஒன்றை ஒன்று சந்திக்கும் சத்தியம் உம் கிருபை
என்றும் மறவேன் வாக்குத்தத்தம் நீதியுமே சமாதானமே
நிலை நிற்கும் கிருபை தாருமே. – தம் கிருபை

## பல்லவி

கிருபை, கிருபை, கிருபை – தேவ
கிருபையின் மேல் கிருபை பெற்றோம்.

## சரணங்கள்

1. சேற்றில் கிடந்த நம்மை ஏற்றி மேல் விட்டதும் கிருபை
தேற்றியே காப்பாற்றியே மன மாற்றினதும் கிருபை. – கிருபை

2. கெட்ட குமாரரெம்மை கிட்ட நீர் சேர்த்ததும் கிருபை
துஷ்டரா மெம்மைத் தூய்மையாக்க இஷ்டப் பட்டதும் கிருபை.
– கிருபை

3. நிர்மூலமாகாதிருப்பதும் நின் கிருபை,
காலை தோறும் புதியவை களாய் இருப்பதும் கிருபை. – கிருபை

4. மலைகள் மாறினாலும் கலையாதிருப்பதும் கிருபை
நிலை நிற்பதும் பிழைத் திருப்பதும் உழைப்பதும் கிருபை.
– கிருபை

5. மறைந்திருந்தோரை தெரிந்து கொண்டதும் கிருபை
புரிந்து கொள்ளவும் சிறந்து விளங்கவும் நிறைத்ததும் கிருபை.
– கிருபை

## பல்லவி

அன்பரின் கிருபை கடலிலே ஆவியின் படகு அசையுதே
அசைந்து, அசைந்து அக்கரை நோக்கி அமைதலாக செல்லுதே.

## சரணங்கள்

1. அலையும், புயலும், மோதினாலும்
ஆபத்து ஒன்றும் அணுகாமலே அதனை செலுத்தும் மாலுமிதான்
ஆதியும் அந்தமும் இல்லா தேவன் – அன்பரின்

2. இரா முழுவதும் வலை போட்டும்
அகப்படவில்லை ஒன்றாகிலும் நாதன் இயேசு வந்து அப்புறமாய்
போடுங்கள் அகப்படும் என்றாரே – அன்பரின்

3. அன்பர்கள் ஆண்டவர் சொன்னபடி
ஆழத்தில் வலையைவீசினார்கள் எண்ணில்லாத மீன்களை
கண்டதும் எல்லாருமே சந்தோஷித்தார்களே – அன்பரின்

1. பாவ சஞ்சலத்தை நீக்க பிராண சிநேகிதருண்டே!
பாவ பாரம் தீர்ந்து போக மீட்பர் பாதம் தஞ்சமே
சால துக்க துன்பத்தாலே நெஞ்சம் நொந்து சோருங்கால்,
துன்பம் இன்பமாக மாறும் ஊக்கமான ஜெபத்தால்.

2. கஷ்ட நஷ்டமுண்டானாலும் இயேசுவண்டை சேருவோம்;
மோசம் நாசம் நேரிட்டாலும், ஜெப தூபம் காட்டுவோம்
நீக்குவாரே நெஞ்சின் நோவை, பெலவீனம் தாங்குவார்
நீக்குவாரே மனச் சோர்வை தீய குணம் மாற்றுவார்.

3. பெலவீனமான போதும் கிருபாசனம் உண்டே!
பந்து, ஜனம் சாகும்போதும் புகலிடம் இயேசுவே
ஒப்பில்லாத பிராண நேசா! உம்மை நம்பி நேசிப்போம்
அளவற்ற அருள் நாதா! நேச இயேசு தஞ்சமே.

4. துன்பம் நெருக்கம் சோதனை உண்டோ ? அதில் திடன்கொள்;
ஜெபத்தால் கர்த்தாவைச் சேர சுதந்திரம் ஈந்தாரே
சால துக்கத்தில் தாங்குவார் இயேசு—நண்பர் வேறில்லை
இயேசு தஞ்சமாயிருந்து ஆற்றித் தேற்றிக் கொள்வாரே.

***பல்லவி***

இரங்குமே! என் இயேசுவே இரக்கத்தின் ஐஸ்வரியமே
கூவி கதறியே இராவும் பகலுமே கெஞ்சும் ஜெபம் கேளுமே.

***சரணங்கள்***

1. நித்தம் எமக்காய் பரிந்து பேசும் நள்ளிரவின் நண்பனே
அன்பின் பிதா முன்னில் இன்று ஜெபித்திடும் அன்பர்
ஜெபங் கேளுமே. – இரங்குமே!

2. உற்றார் பெற்றோரும், குடும்பங்களும் மற்றும் பலர் மாள்வதைக்
கண்டு சகித்திடாதென்றும் ஜெபித்திடும் கண்ணீர்
ஜெபங் கேளுமே. – இரங்குமே!

3. சோதனையினின்று இரட்சித்தீரே சோதோமின் பக்தனையே
ஆபிரகாம் அன்று வேண்டி ஜெபித்ததோர் ஆதி
ஜெபங் கேளுமே. – இரங்குமே!

4. பிள்ளைகள் அப்பம் கிடைத்திடாதோ பேதைகள் கேட்டிடவே
மேஜை துணிக்கைகள் தாரும் என கெஞ்சும் மாந்தர்
ஜெபங் கேளுமே. – இரங்குமே!

5. தாரும் உயிர் மீட்சி சபைதனில் சோரும் உள்ளம் மீளவே
கர்த்தாவே உம் ஜனம் செத்தநிலை மாற பக்தர்
ஜெபங் கேளுமே. – இரங்குமே!

6. ஐந்து கண்டத்தின் ஜனத்திற்காக தீங்காயங்கள் ஏற்றீரே
தேவன் இல்லை என்று கூறி மடிவோரைத் தேடும்
ஜெபங் கேளுமே. – இரங்குமே!

dreamstime.com

1. ஜெபத்தை கேட்கும் எங்கள் தேவா ஜெபத்தின் வாஞ்சை தந்தருளும், ஜெபத்திலே தரித்திருந்து ஜெபத்தின் மேன்மை காணச் செய்வீர்.

***பல்லவி***

ஜெபமே ஜீவன், ஜெபம் ஜெயம் ஜீவியத்திற்கிதுவே சட்டம்.

2. ஊக்கத்துடனே ஓர் மனமாய் வாக்குத்தத்தத்தைப் பற்றிக் கொண்டு, நோக்கத்தை யெல்லாம் நேர்மையாக்கி, கேட்கும்படி கிருபை செய்யும். – ஜெபமே

3. ஆகாத நோக்கம் சிந்தனையை அகற்றும் எங்கள் நெஞ்சை விட்டு வாகானதாக்கும் மனமெல்லாம், கருத்துடனே வேண்டிக் கொள்வோம். –ஜெபமே

4. இடைவிடாமல் ஜெபம் செய்ய இடையூரெல்லாம் நீக்கி விடும், சடைப்பில்லாமல் உம்தன் பாதம் கடைசி மட்டும் காத்திருப்போம்.– ஜெபமே

1. என் ஜெபவேளை வாஞ்சிப்பேன்!
அப்போதென் துக்கம் மறப்பேன்,
பிதாவின் பாதம் பணிவேன், என் ஆசை யாவும் சொல்லுவேன்.
என் நோவு வேளை தேற்றினார், என் ஆத்ம பாரம் நீக்கினார்;
ஒத்தாசை பெற்றுத் தேறினேன், பிசாசை வென்று ஜெயித்தேன்.

2. என் ஜெப வேளை வாஞ்சிப்பேன்!
மா தாழ்மையோடு பிரார்த்திப்பேன்
மன்றாட்டைக் கேட்போர் வருவார், பேராசீர்வாதம் தருவார்;
“என் வாக்கின் மேல் விசுவாசமாய்,
என் பாதம் தேடு ஊக்கமாய”
என்றோர்க்கென் நோவைச் சொல்லுவேன்,
இவ்வேளையை நான் வாஞ்சிப்பேன்!

3. என் ஜெபவேளை வாஞ்சிப்பேன்!
ஆனந்தக் களிப்படைவேன், பிஸ்காவின் மேலே ஏறுவேன்,
என் மோட்ச வீட்டை நோக்குவேன்,
இத் தேகத்தை விட்டேகுவேன்; விண் நித்ய வாழ்வைப்
பெறுவேன்; பேரின்ப வீட்டில் வசிப்பேன்,
வாடாத கிரீடம் சூடுவேன்.

## பல்லவி

ஜெப சிந்தை எனில் தாரும் தேவா, – என்னை

## அனுபல்லவி

அபயமென் றுனக்குக்கை யளித்தேன் பொற்பாதா– ஜெப

1. உண்மை மனதோடுன்னைச் கெஞ்ச, – உல
கெண்ண மெல்லா மகற்றிஉரிமையே மிஞ்ச,
தொன்மை ஆயக்காரன் போலஞ்ச, – பாவத்
தோஷமகலத் திரு ரத்தம் உள்ளிஞ்ச – ஜெப

2. இடைவிடாமல் செய்யும் எண்ணம் – என்
இதயத்தில் உதயமாய் இலங்கிடப் பண்ணும்;
சடமுலகப் பேயை வெல்லும் – நற்
சாதகமுண்டாக தயைசெய் என்னுள்ளம் – ஜெப

3. ஊக்கமுடன் ஜெபம் செய்ய, – தகா
நோக்கமெல்லாம் கெட்டு நொறுங்கியே நைய,
பேய்க்கண மோடுபோர் செய்ய, – நல் ஆக்கம் எனில் தந்து
ஏக்கம் தீர்ந்துய்ய – ஜெப

1. ‘‘அருள் ஏராளமாய்ப் பெய்யும்’’ உறுதி வாக்கிதுவே;
ஆறுதல் தேறுதல் செய்யும் சபையை உயிர்ப்பிக்குமே.
நோக்கத்தை யெல்லாம் நேர்மையாக்கி,
கேட்கும்படி கிருபை செய்யும். – ஜெபமே

***பல்லவி***

அருள் ஏராளம்,
அருள் அவசியமே
அற்பமாய் சொற்பமாயல்ல,
திரளாய் பெய்யட்டுமே.

2. ‘‘அருள் ஏராளமாய்ப்பெய்யும்’’ மேக மந்தாரமுண்டாம்;
காடான நிலத்திலேயும் செழிப்பும் பூரிப்புமாம். – அருள்

3. ‘‘அருள் ஏராளமாய்ப் பெய்யும்’’சபையின் நாயகரே!
இங்குள்ள சபையிலேயும் கிரியை செய்தருளுமேன். – அருள்

4. ‘‘அருள் ஏராளமாய்ப் பெய்யும்’’ பொழியும் இச்சணமே!
அருளின் மாரியைத் தாரும் ஜீவ தயாபரரே. – அருள்

**1.** ‘‘அருளின் மாமழை பெய்யும்’’ என்று வாக்களித்தோரே!
மாரியாய்ப் பெய்திடச் செய்யும், லோகத்தின் இரட்சகரே!

***பல்லவி***

தேவன்பின் வெள்ளம் தேவன் பின் வெள்ளம் தேவை,
கொஞ்சம் ருசித்த என் உள்ளம் கெஞ்சுதே, இன்னும் தேவை.

**2.** கற்பாறைப்போல் பாவி உள்ளம் கடினப்பட்டதய்யே!
பரிசுத்தாவியின் வெள்ளம் கரைக்க வல்லதய்யே! – தேவன்

**3.** ‘‘வெட்டாந்தரை நிலந்தானும் ஏதேன் போல் மாறும்’’ என்றீர்;
‘‘சாபத்துள்ளான முற்பூண்டும் கேதுருவாகும்’’ என்றீர்! – தேவன்

**4.** தேசத்தின் இருளைப்பாரும் லோகத்தின் மெய்த் தீபமே;
ஆவியின் அருளைத்தாரும் மனமாற்ற வல்லவரே! – தேவன்

**5.** சபையின் குறைகள் யாவும் தீர்த்திடும் வல்லவரே!
யுத்தத்தில் முன்செல்ல ஏவும் எங்கள் தளகர்த்தரே! – தேவன்

1. சுத்த ஆவி, என்னை நிரப்ப, நானுஞ் சுத்தன் ஆகவே;
பாவ அழுக்கெல்லாம் நீக்கும்; உமதாலயமாகவே
என்னை நீர் சிங்காரியும், வாசம் பண்ணும் நித்தமும்.

2. சத்ய ஆவி, என்னை நிரப்ப, நானும் சத்யன் ஆகவே;
தேவபக்தி என்னில் முற்றும் வளர்ந்தேறச் செய்யுமே;
நீர் என்னில் பிரகாசியும் ஆண்டு கொள்ளும் நித்தமும்.

3. நேச ஆவி, என்னை நிரப்ப, நானும் நேசன் ஆகவே;
துர்ச்சுபாவம் போகப் பண்ணும்; அன்பில் நான் வேரூன்றவே
அன்பின் ஜுவாலை எழுப்பும், மென்மேலும் வளர்த்திடும்.

4. வல்ல ஆவி என்னை நிரப்ப, நானும் வல்லோன் ஆகவே;
சாத்தான் என்னைத் தூண்டிவிடும் போது ஜெயங் கொள்ளவே
நீர் என் பக்கத்தில் இரும், என்னைப் பலப்படுத்தும்.

5. நல்ல ஆவி, என்னை நிரப்ப, நானும் நல்லோன் ஆகவே;
பகை, மேட்டிமை, விரோதம், மற்றும் தீமை யாவுமே
என்னை விட்டகற்றுமேன், என்னைச் சீர்ப்படுத்துமேன்.

1. நிரப்பும் என்னைத் துதியால் முற்றாகக் கர்த்தரே,
என் தேகம் மனம் ஆன்மாவும் உம்மையே கூறவே.

2. துதிக்கும் நாவும் உள்ளமும் போதாதென் தேவனே;
என் வாழ்க்கை முற்றும் யாவுமாய் துதியதாகவே

3. சாமான்ய சம்பவங்களும், என் போக்கும் வரத்தும்
மா அற்ப செய்கை வேலையும் துதியதாகவும்.

4. நிரப்பும் என்னை முற்றுமாய் சமூலம் போற்றவும்,
உம்மை உம் அன்பை அடியேன் துதித்திடச் செய்யும்.

5. பெறுவீரே நீர் மகிமை என்னாலும் என்னிலும்
இம்மையிலே துடங்குவேன் சதாவின் பாடலும்.

6. கவலை கோபம் பயமும் கீதமாய் மாறிடும்,
என் ஜீவ பாதை யாவிலும் கீதம் தொனித்திடும்.

7. இராப்பகல் விநாடியும் விளங்கும் தூய்மையாய்;
என் வாழ்க்கை முற்றும் சேர்ந்திடும் உம்மோடு ஐக்கியமாய்.

1. சர்வ வல்லவரே, சபையின் சிரசே!
வறட்சி, தாழ்ச்சி மிக்குதே, கிருபை அரசே.

***பல்லவி***

உயிர்ப்பியுந் தேவே, நம்பி ஜெபிக்கிறோம்;
வாக்கை நீர் நிறைவேற்றிட காத்திங்கே நிற்கிறோம்.

2. அன்பா யழைத்தவா, எனை இரட்சித்தவா,
நின் ஜீவனென்னில் வாடுதே, இரங்குமென் தேவே!– உயி

3. அன்புங் குளிர்ந்ததே ஆவி குறைவினால்,
செத்தவன் போலே ஆனேனே; தூக்கும் உம் கரத்தால்.– உயி

4. ஜெபத்தில் வாஞ்சையும், வேதத்தில் தேட்டமும்,
என்னிலூற நீர் வந்திடும், தத்தம் நான் முற்றிலும். – உயி

5. பேயின் சிறை மீட்க, ஊக்கமாய்ப் போர் செய்வேன்;
ஜீவ நிருபமாக நான் உம்மால் பிரகாசிப்பேன்.– உயி

6. ஆத்ம மணவாளா! உமது வருகை
அச்சமின்றி எதிர்பார்க்க நீக்குமென் நித்திரை.– உயி

**பல்லவி**

இரட்டிப்பான நன்மைகள் தந்திட தேவன் வாக்களித்தாரே.

**அனுபல்லவி**

முன் மாரி போல் பின் மாரி மழையே
உன்னதத்தினின்று வந்திறங்குதே – இரட்

**சரணங்கள்**

1. பெலத்தின் மேலே மா பெலனே புது பெலன் நாம் பெற்றிட
சால்வை தனை எலிசா அடைந்தார் போல் சோர்வின்றி பெலன் என்றும்
நாடுவோம் – இரட்

2. கிருபையின் மேல் மா கிருபை கர்த்தரிடம் நாம் பெற்றிட
ஸ்திரீகளுக்குள் மரியாள் பெற்ற பாக்யம்
ஸ்தோத்திரம் பாடி என்றும் தேடுவோம் – இரட்

3. ஜெயத்தின் மேலே மா ஜெயமே ஜெய தொனியாய்ப் பெற்றிட
போர் முனையில் சிறு தாவீது போல போர் வீரராக என்றும்
ஜெயிப்போம் – இரட்

4. நம்பிக்கையின் மேல் நம்பிக்கை நல் விசுவாசம் பெற்றிட
ஆதி அப்போஸ்தலர் காலத்தில் போல
ஒருமையில் என்றும் நிலைத்திருப்போம்– இரட்

5. மகிமையின் மேல் மா மகிமை மறுரூபம் நாம் பெற்றிட
கண்ணிமை நேரத்திலே பறந்தேகி கர்த்தருடன் நாம்
என்றும் வாழுவோம்– இரட்

6. பரிசுத்தம் மேல் பரிசுத்தம் பங்கம் இல்லாமல் பெற்றிட
நீதியின் சூரியன் இயேசுவுடனே நீதி அணிந்து என்றும்
ஆளுவோம் – இரட்

1. தயாளமுள்ள தேவனே நீர் தந்த இந்த வேதமே
அருள் நிறைந்ததாயிற்றே; அதால் நற்சீர் உண்டாகுமே.

2. தேவாவி ஈந்த வாக்கியம் மாறாத சத்தியமானதே;
நீர் இட்ட கற்பனைகளும் மிகுந்த செம்மையானதே.

3. கர்த்தாவே, நின் நியாயங்கள் நின்நீதி நேர்மையுள்ளவை;
தங்கத்தைப் பார்க்க அவைகள் விரும்பிக் கொள்ளத்தக்கவை.

4. அவைகளாலே மானிடர் இருட்டை நீக்கி ஞானத்தில்
வந்தும்மைக் கண்டு பூரிப்பார்என்றைக்குமுள்ள மோட்சத்தில்.

5. இவ்வேதத்தை எக்காலமும் படித்தறிந்த நெஞ்சத்தை
காணிக்கையாய்ப் படைக்கவும் கடாட்சஞ் செய்யும் கர்த்தரே.

1. நாதா உம் வார்த்தை கூறவே என்னோடு பேசியருளும்;
கெட்டோரை நானும் தேடவே நீர் என்னை வழி நடத்தும்.

2. வழி விட்டலை வோருக்கு நான் காட்ட, என்னை நடத்தும்;
மன்னாவைப் பசியுள்ளோர்க்கு நான் ஊட்ட, என்னைப் போஷியும்.

3. மாதுன்ப சாகரத்தினில் அழுந்துவோரைத் தாங்கவும்,
கன்மலையான உம்மினில் நான் ஊன்றி நிற்கச் செய்திடும்.

4. அநேக நெஞ்சின் ஆழத்தைஎன் வார்த்தை ஊடுருவவும்,
சிறந்த உந்தன் சத்தியத்தை எனக்குப் போதித்தருளும்.

5. நான் இளைத்தோரைத் தேற்றவும், சமயோசிதமாகவே
சுகிர்த வாக்குரைக்கவும் என்னையும் தேற்றும், கர்த்தரே.

6. நான் நேசம் பொங்கும் நெஞ்சினால், உம் அன்பும் மாண்பும்
போற்றவே; உம் பரிபூரணத்தினால் என் உள்ளத்தை நிரப்புமே.

7. உம் மகிமை சந்தோஷத்தில் நான் பங்கடையும் வரைக்கும்,
உம் சித்தம், காலம், இடத்தில் நீர் என்னை ஆட்கொண்டருளும்.

**1.** காது குளிரப் பாடுங்கள் கிருபா சத்தியம்
புத்தி தெளியக் காட்டுங்கள் திவ்விய வசனம்,
வெல்க சத்திய வேதம் வாழ்க நித்திய வேதம்.

***பல்லவி***

அமிர்தமே! அற்புதமே! திவ்விய சத்தியம்!
அமிர்தமே! அற்புதமே! திவ்விய சத்தியம்.

**2.** நல்ல செய்தியைக் கூறுமேன் கிருபா சத்தியம்.
பாவநாசத்தைக் காட்டுமேன் திவ்விய வசனம்
வான வருஷமாரி ஞான பொக்கிஷ வாரி. – அமிர்தமே

**3.** வேத நாயகர் பொழியும் கிருபா சத்தியம்.
ஜீவ மங்கள மொழியும் திவ்விய வசனம்,
இயேசு எந்தனைப் பாரும் நித்தம் எந்தனைக் காரும். – அமிர்தமே

சத்திய வேதம் பக்தரின் கீதம் சுத்தர்கள் போகும் பாதையின் தீபம்
உத்தம மார்க்கம் காட்டும் சத்திய வேதம்.

***அனுபல்லவி***

எத்தனை துன்பம் துயரம் வந்தும்
பக்தனைத் தேற்றிடும் ஔஷதம்

***சரணங்கள்***

1. நித்தம் விரும்பும் கர்த்தர் வசனம் சுத்த பசும்பொன்,
தெளித்திடும் தேன் இதயம் மகிழும், கண்கள் தெளியும்
இருண்ட ஆத்மாஉயிரடையும் – சத்திய

2. பேதைகளிடம் ஞானம் அருளும் வேத புத்தகம் மேன்மை தரும்
இரவும் பகலும் இதனின் தியானம் இனிமை தங்கும்
தனிமையிலும். – சத்திய

3. வேதப் பிரியர் தேவப் புதல்வர் சேதமடையா நடந்திடுவார்
இலைகள் உதிரா மரங்கள் போல இவர்கள் நல்ல கனிதருவார்.
– சத்திய

4. உள்ளம் உருக்கும், உறுதி அளிக்கும் கள்ளங்கபடெல்லாம் அகற்றும்
கடிந்து கொள்ளும், கறைகள் போக்கும் கனமடைய வழி நடத்தும்
– சத்திய

5. கர்த்தர் வசனம் வல்ல சம்மட்டி கன்மலையையும் நொறுக்கிடுமே
இதய நினைவை வகையாய் அறுக்கும் இருபுறமும் கருக்குள்ளதே
– சத்திய

6. வானம் அகலும், பூமி அழியும் வேத வசனம் நிலைத்திருக்கும்
பரமன் வேதம் எனது செல்வம் பரவசம் நிதம் அருளும்– சத்திய

## ***பல்லவி***

ஞான சுவிசேஷமே நன்மை தரும் நேசமே

## ***அனுபல்லவி***

ஞான உபதேசமே, வளரும் விசுவாசமே, – ஞான

## ***சரணங்கள்***

1. சத்திய வாக்கியமே, சந்தோஷ பாக்கியமே,
புத்தியா ரோக்கியமே, புண்ணிய சிலாக்கியமே. – ஞான

2. நீதிப் பிரசங்கமே, நிமலன் அருள் தங்கமே,
சோதிமிகும் துங்கமே, துதிபெருகும் பொங்கமே. – ஞான

3. அஞ்ஞானத்தை அழிக்கும், அலகையிடர் ஒழிக்கும்,
மெய்ஞ்ஞானத்தை அளிக்கும், விளக்கி என்றும் செழிக்கும்.
– ஞான

4. இயேசுவண்டையில் சேர்க்கும், எல்லா இடரும் நீக்கும்,
பேசும் பாவத்தைப் போக்கும், பேதமையோரைக் காக்கும்.
– ஞான

## *பல்லவி*

வேத புத்தகமே, வேத புத்தகமே,
வேத புத்தகமே, விலை பெற்ற செல்வம் நீயே.

## *சரணங்கள்*

1. பேதைகளின் ஞானமே,– பெரிய திரவியமே,
பாதைக்கு நல்தீபமே, – பாக்யர் விரும்புந் தேனே. – வேத

2. என்னை எனக்குக்காட்டி – என்நிலைமையை மாற்றிப்,
பொன்னுலகத்தைக் காட்டிப் – போகும் வழி சொல்வாயே. – வேத

3. துன்பகாலம் ஆறுதல் – உன்னால் வரும் நிசமே
இன்பமாகுஞ் சாவென்றாய் – என்றும் நம்பின பேர்க்கே, – வேத

4. பன்னிரு மாதங்களும் –பறித்துண்ணலாம் உன்கனி;
உன்னைத் தியானிப்பவர் – உயர்கதி சேர்ந்திடுவார். – வேத

***பல்லவி***

பாதைக்குத் தீபமாமே பரிசுத்த ஆகமம் – மா நல்ல

**1.** பாதைக்குத் தீபமே, பாவிக்கு லாபமே,
பேதைக்கு திரவியமே, பரிசுத்த ஆகமம்.– மா நல்ல

**2.** தேனின் மதுரமே, திவ்ய அமுதமே,
வான பிதாவின் வாக்கே பரிசுத்த ஆகமம்.– மா நல்ல

**3.** நீதியி னாதாரமே, நெறியுள்ளோர் செல்வமே,
ஜாதிகள் மேன்மையாமே பரிசுத்த ஆகமம்.– மா நல்ல

**4.** ஞான சமுத்திரமே, நல்ல சுமுத்திரையே,
ஈனர்க்கும் ஆதரவே பரிசுத்த ஆகமம்.– மா நல்ல

**5.** உலகோர்க் குயிர்த்துணை உண்டோ அதற்கிணை ?
அலகையை வெல்லுங் கணை பரிசுத்த ஆகமம்.– மா நல்ல

**6.** எல்லையில்லா விஸ்தாரம், எவர்க்கும் பர மாகாரம்,
வல்ல பரனின் வேதம் பரிசுத்த ஆகமம்.– மா நல்ல

## 395

### *பல்லவி*

கதிரவன் தோன்றும் காலையிதே
புதிய கிருபை பொழிந்திடுதே – நல் துதி செலுத்திடுவோம் இயேசுவுக்கே

### *சரணங்கள்*

1. வான சுடர்கள் கானக ஜீவன் வாழ்த்திடவே பரன் மாட்சிமையை
காற்று பறவை ஊற்று, நீரோடை கர்த்தருக்கே கவி பாடிடுதே – கதிரவன்

2. காட்டில் கதறி கானக ஓடை கண்டடையும் வெளி மான்களைப் போல்
தாகம் தீர்க்கும் ஜீவத் தண்ணீராம் தற்பரன் இயேசுவைத் தேடிடுவோம்
– கதிரவன்

3. கர்த்தர் கிருபை என்றென்றும் ஓங்க கர்த்தரே நல்லவர்
என்றுரைப்போம் கேரூபீன்கள் மத்தியில் வாழும் கர்த்தர் இக்காலையில்
எழுந்தருள்வார் – கதிரவன்

4. எந்தன் உதடும் உந்தனைப் போற்றும் என் கரங்கள் குவிந்தே
வணங்கும் பாக்கியம் நான் கண்டடைந்தேனே
யாக்கோபின் தேவனே என் துணையே– கதிரவன்

5. காலை விழிப்பே கர்த்தரின் சாயல் கண்களும் செவியும் காத்திருக்கும்
பாதம் அமர்ந்து வேதமே ருசித்து கீதங்கள் பாடியே மகிழ்ந்திடுவேன்
– கதிரவன்

6. வானம் பூமி யாவும் படைத்தீர் வானம் திறந்தே தோன்றிடுவீர்
ஆவல் அடங்க என்னையும் அழைக்க ஆத்தும நேசரே வந்திடுவீர்
– கதிரவன்

***பல்லவி***

வர வேணும், என தரசே, மனுவேல், சபையின் சிரசே.

***அனுபல்லவி***

அருணோ தயம் ஒளிர் பிரகாசா, அசரீரி ஒரே சரு வேசா! – வர

***சரணங்கள்***

1. வேதா கருணா கரா, மெய்யான பரா பரா, ஆதார நிராதரா
அன்பான சகோ தரா, தாதாவும் தாய் சகலமும் நீயே;
நாதா, உன் தாபரம் நல்குவாயே. – வர

2. படியோர் பவ மோசனா, பரலோக சிம்மாசனா, முடியா தருள் போசனா,
முதன் மா மறை வாசனா, இடையர் குடிலிடை மேவி எழுந்தாய்
இமையவர் அடி தொழு மேன்மையில் எந்தாய்.– வர

3. வானோர் தொழும் நாதனே, மறையாகம போதனே, கானாவின்
அதீதனே, கலிலேய வினோதனே, ஞானகரமே, நடு நிலை யோவா,
நண்பா, உன்னத நன்மையின் மகா தேவா! – வர

## *பல்லவி*

காலமே தேவனைத் தேடு; – ஜீவ காருண்யர் பாதம்
பணிந்து மன்றாடு.

## *அனுபல்லவி*

சீலமுடன் பதம் பாடிக்கொண்டாடு;
சீரான நித்திய ஜீவனை நாடு. – காலமே

## *சரணங்கள்*

1. மன்னுயிர்க்காய் மரித்தாரே, – மனு மைந்தனென நாமம்
வைத்திருந்தாரே; உன் சிருஷ்டிகரை நீ உதயத்திலெண்ணு;
உள்ளங்கனிந்து தனி ஜெபம் பண்ணு – காலமே

2. பாவச் சோதனைகளை வெல்லு, – கெட்ட பாருடல் பேயுடன்
போருக்கு நில்லு; ஜீவ கிரீடஞ் சிரத்திலணிய; சிந்தனை செய்; மனு
வேலனைப் பணிய, – காலமே

3. சிறுவர்கள் என்னிடஞ் சேரத் – தடை செய்யா திருங்களென்றார்
மனதார; பரலோக செல்வம் அவர்க்குப் பலிக்கும்;
பாக்கியமெல்லாம் பரந்து ஜொலிக்கும். – காலமே

4. வேலையுனக்குக் கைகூட, – சத்ய வேதம் கிருபை வரத்தை மன்றாட,
காலை தேடுவோர் எனைக் கண்டடைவாரே, கண்விழித்து ஜெபஞ்
செய்யுமென்றாரே.– காலமே

## *பல்லவி*

இன்றைத் தினம் உம் அருள் ஈகுவீர் இயேசு நாதையா
இன்றைத்தினம் உம் அருள் ஈகுவீர்.

## *அனுபல்லவி*

அன்றும் உதிரம் நரர்க் கென்று சிந்தி மீட்டெனை
வெற்றியுடன் இரட்சித்த நன்றி போலே எனக்கு.

## *சரணங்கள்*

1. போன இரவில் என்னைக் கண்  பார்த்தீர் – பலவிதமாம்
பொல்லா மோசங்களில் தற்காத்தீர்; ஈன சாத்தான் எனையே
இடர்க்குள் அகப்படுத்தி, ஊனம் எனக்குச் செய்யா
துருக்கமுடன் புரந்தீர். – இன்

2. கையிட்டுக் கொள்ளும் என்றன்வேலை – யாவிலு முன்றன்
கடைக் கண்ணோக்கி, அவற்றின் மேலே,
ஐயா, நின் ஆசீர்வாதம் அருளி, என் மனோ வாக்கு
மெய்யாய் நின் மகிமையே விளங்கும்படி ஒழுக– இன்

3. எத்தனையோ விபத்தோர் நாளே – தஞ்சம் நீர் என
எளியேன் அடைந்தேன் உந்தன் தாளே! பக்தர் பாலனா,
எனைப் பண்பாய் ஒப்புவித்தேன், உம் சித்தம் எனது பாக்கியம்,
தேவ திருக்குமாரா – இன்

4. பாவச் சோதனைகளை வென்று, பேயுலகுடல் பண்ணும் போர்களுக்
கெதிர் நின்று, ஜீவ பாதையில் இன்றும் திடனாய் முன்னிட்டுச் செல்ல
தேவ சர்வாயுதத்தைச் சிறக்க எனக் கணிந்து– இன்

## *பல்லவி*

அதிகாலையிலும்மைத் தேடுவேன் முழுமன தாலே – தே
வாசீர்வாதம் பெற, நாடுவேன் ஜெபதபத்தாலே!

## அனுபல்லவி

இது காறும் காத்த தந்தை நீரே; இனிமேலும் காத்தருள் செய்வீரே,
பதிலாக உம்மிலே நான் நிலைக்கவே, பத்திரமாய் எனை
உத்தமனாக்கிடும், தேவே!

## *சரணங்கள்*

1. போன இராமுழுவதும் பாது காத்தருளின போதா
எப்போதும் எங்களுட னிருப்பதாய் உரைத்த நல்நாதா!
ஈனப்பாவிக்கேது துணை லோகிலுண்டு பொற்பாதா
எனக்கான ஈசனே! வான இராஜனே! இந்த நாளிலும் ஒரு பந்த
மில்லாமல் காரும் நீதா! – அதி

2. பல சோதனைகளால் சூழ்ந்து நான் கலங்கிடும்போது – தப்
பாது நின் கிருபை தாங்கிட வேணும், அப்போது விலகாது என் சமூகம்
என்ற வாக்கில் தவறேது ? விசுவாசம் கொண்டு மெய்ப் பாசமூண்டிட,
விக்கினம் யாவிலும் வெற்றி காணுவேன் மலைவேது ?– அதி

3. நரர் யாவர்க்கு முற்ற நண் பனாய் நடத்திடவையே, – தீ
நாவின் பாவமற நன்மைகள் மொழிந்திடச் செய்யே
பரலோக ஆவியை நல் மாரிபோலெனில் பெய்யே!
புகழான நாதனே !வேத போதனே! பூரணமாம் உம்மைப்
போற்றுவேன்; தினம் தினம் மெய்யே. – அதி

# 400

## பல்லவி

வாழ்த்துகிறேன், இயேசு தேவா,
வாழ்த்துகிறேன் இக் காலையிலே.

## அனுபல்லவி

அற்புதமாய் இராமுழுதும், அடியேனைக் காத்தீரே!

## சரணங்கள்

1. உமது செட்டை நிழலதிலே படுத்திருந்தேன் இரா முழுதும்
உமது கரம் அணைத்திடவே, ஆறுதலாம் நித்திரையும் – வாழ்த்

2. நித்திரையை இன்பமாக்கி பத்திரமாய் இருதயத்தை
சுத்தமான இரத்தத்திற்குள், சுத்தமாக வைத்திருந்தீர் – வாழ்த்

3. பலவிதமாம் சோதனைகள் எமைச்சூழ வந்திருந்தும்
ஒன்றும் எமை அணுகாமல் அன்புடனே பாதுகாத்தீர். – வாழ்த்

4. சந்திப்பீரே, இக்காலைதனில் தந்திடவே திருவரங்கள்
சந்தோஷமாய் பகல் முழுதும் ஆவிக்குள் யான் பிழைக்க – வாழ்த்

5. பாவமொன்றும் அணுகிடாமல், பரிசுத்தமாம் பாதை செல்ல
தேவையான சர்வாயுதங்கள், தாரும் ஜெப ஆவியுடன்– வாழ்த்

6. படைக்கிறேன் என் இருதயத்தை பலிபீடத்தில் முற்றுமாக
கண்களுடன் செவியோடு வாயும், கையும், காலுமாக – வாழ்த்

7. செய்வேன் யான் எப்போதும் உம் சித்தமே, – ஆசையுடன்
ஒழித்திடுவேன் வீண் வார்த்தை, பேசிடுவேன் உம் வாக்கை – வாழ்த்

8. எனைக் காண்போர் உமைக் காண, உம்சாயல் எனில் வேண்டும்,
தந்திடுவீர் தாழ்மையையும், பொறுமையுடன் அன்புமாக – வாழ்த்

9. நேசரே உம் திருவருகை இந்நாளில் இருந்திடினும் ஆசையுடன் சந்திக்கவே
ஆயத்தமாய் வைத்துக் கொள்ளும் – வாழ்த்

இந்த நாளை நான் சமர்ப்பித்தேன் இயேசுவின் திருப்பாதத்தில்
காலை முதல் மாலை வரை காக்கும் கர்த்தர் நமது இயேசு
காலைத் தள்ளாட என்றுமே விடார்.

***சரணங்கள்***

**1.** இனிய வார்த்தை எப்போதும் பேச இயேசு நடத்திடும்
இடுக் கண்ணிலிருக்கும் யாரையும் மீட்க இயேசு காட்டிடும்
இன்பத்தை வெறுத்து துன்பத்தை நாட இயேசு போதியும்
இன்முகம் காட்டி இரங்கி நோக்க இயேசு கற்பியும் – இந்த

**2.** பிறர் என்ன செய்ய விரும்புவேனோ அதையே செய்யவும்
பிறர் எனக்கு மன்னிப்பதையே அவர்க்கு மன்னிக்கவும்
பிறர் நலம் கருதியே சதா உழைக்கவும் பிறருக்காக என்னை
ஒடுக்கி நான் மரிக்கவும் – இந்த

**பல்லவி**

இம்மட்டும் ஜீவன் தந்த கர்த்தாவை அத்தியந்த
எண்ணமாய் ஸ்தோத் தரிப்போமாக.

**அனுபல்லவி**

நம்மை இரட்சிக்க வந்து தம்மை பலியாய்த் தந்து
நற்சுகம் மேவவும் அற்புதமாகவும், – இம்

**சரணங்கள்**

**1.** காலம் சொல் போல் கழியும், தண்ணீரைப்போல் வடியும்;
கனாவைப் போலேயும் ஒழியும்; வாலிபமும் மறையும்.
சீலம் எல்லாம் குறையும், மண்ணின் வாழ்  வொன்றும்
நிற்க மாட்டாது; கோலப் புதுமைக்கும், நீர்க்
குமிழிக்கும், புகைக்குமே கொண்ட உலகத்தில்
அண்ட பரன் எமைக் கண்டு கருணைகள் விண்டு தயவுடன், – இம்

**2.** பலவித இக்கட்டையும் திகில்களையும் கடந்தோம்;
பரம பாதையைத் தொடர்ந்தோம்; வலிய தீமையை வென்றோம்,
நலியும் ஆசையைக் கொன்றோம், வஞ்சர் பகைக்கும் தப்பி
நின்றோம்; கலி என்றதெல்லாம் விண்டோம், கர்த்தாவின்
மீட்பைக் கண்டோம்; காய்ந்த மனதொடு பாய்ந்து விழு கணம்
சாய்ந்து கெடவும், ஆராய்ந்து நெறியுடன்,– இம்

**3.** கன சேதம் வருவிக்கும் கேடுகட்கோர் முடிவு தந்து, நொறுங்கினதைக்
கட்டிக், கன சபையை ஆதரித் தன்பாய்ஆசீர்வதித்துக் கண்ணோக்கி
எல்லார் மேல் அன்றன்று தினமும் அருள் உதிக்கச் செய்து, நமது தேவ
சிந்தை யினோடதி விந்தையதாய் உயர்மைந்தனால் எங்களை
இந்த வினோதமாய், – இம்

பல்லவி

தேவரீருக்கே மிகத் தோத்திரம், மிகத் தோத்திரம்

***சரணங்கள்***

**1.** ஜீவனோடெமைப் புதிய வாரம் (புதிய வருடம்)
சேர்த்துக் காத்தீரே நின் செட்டையின் மீதடி
யார்களை வைத்தே சுமந்து காத்தீரே. – தேவ

**2.** எய்திடும் துன்பம் எத்தனை யுண்டதற்
கெல்லாம் விலக்கினீரே இயேசு கிறிஸ்து நாமத்தினாலெங்கள்
ஏதம் போக்கினீரே – தேவ

**3.** எங்களின் தேகம், எங்களின் ஆவியும் எல்லாம் உமதன்றோ ?
– இவை எல்லாம் படைத்தோன் ஏற்றுக்கொள்வீரே
எல்லாம் உமக்கென்றே.– தேவ

**4.** உம்தன் நாமம் அர்ச்சிக்கப்பட உம் இராஜ்ஜியம் வருக
உம் சித்தம் பரலோகம்போல உலகில் செயப்படுக. – தேவ

**5.** இராஜ்ஜியம், வல்லமை, மகிமையும், கனமும்
உமக்கே யுடைமையே – இவ் வெளியார்க்குத் தன் அருளே தந்து
ஆசீர்வதித்தருளும். – தேவ

## பல்லவி

துதி செய் மனமே, நிதம் துதி செய் – துதி செய், இம்மட்டும் நடத்தின உன் தேவனை இன்றும் என்றும் நன்றி மிகுந்த மனதோடே

## சரணங்கள்

1. முன் கால மெல்லாம் உன்னைத் தம் கரமதிலேந்தி
வேண்டிய நன்மைகள் யாவும் உகந்தளித்தாரே! – துதி

2. ஏகிடும் வழியில், பாடுகள் பல நேர்ந்த போதும்
ஏக பரன் உன் காவலனாய் இருந்தாரே! – துதி

3. சோதனை பலவாய் மேகம் போல் உனைச் சூழ்ந்தாலும்
சேதமுறாமல் முற்றிலும் காக்க வல்லோரை. – துதி

4. தாய் தந்தை தானும் ஏகமாய் உனை மறந்தாலும்,
தூயரின் கையில் உன் சாயல் உள்ளதை நினைத்தே.

5. சந்ததம் உன்னை நடத்திடும் சத்திய தேவன் சொந்தம் பாராட்டி
உன்னுடன் இருப்பதினாலே. – துதி

1. என் ஆத்துமா என் ஜீவ தேவன் மேல் என்றைக்கும்
தாகமா யிருக்கிறது நான் எப்போது மீட்பர் இயேசுவை
மதிய வானில் கண்டு மகிழ்ந்திடுவேன்!

***பல்லவி***

மானானது இளம் மானானது நீரோடையை வாஞ்சித்து கதறுமாப்போல்
தேவனே என் ஆத்துமா உம்மை நோக்கி வாஞ்சித்து கதறிடுதே.

2. மதகின் இரைச்சல் கேட்கையிலும் ஆழத்தை ஆழம் அழைக்கையிலும்
அலை தள்ளும் திரைகளும் புரள்கையிலும் கிருபையால் என்னை
தாங்கியதால் – மானானது

3. என் ஆத்துமா ஏன் கலங்குகிறாய் ஏனோ எனக்குள் தியங்குகிறாய் ?
கர்த்தரை நோக்கி காத்திரு அவரை கருத்தாய்
துதித்திடுவாய். – மானானது

1. ஆனந்தமாக அன்பரைப் பாடுவேன்
ஆசையவர் என் ஆத்துமாவிற்கே ஆசிகளருளும்
ஆனந்தானந்தமாய் ஆண்டவர் இயேசுவைப்
போல்யாருமில்லையே.

***பல்லவி***

இயேசுவல்லால் இயேசுவல்லால் இன்பம் இகத்தில்
வேறு எங்குமில்லையே இயேசுவல்லால் இயேசுவல்லால்
இன்பம் வேறெங்குமில்லையே.

2. தந்தை தாயுமுன் சொந்தமானோர்களும்
தள்ளிடினும் நான் தள்ளிடுவேனோ
தாங்கிடுவேனென் நீதியின் கரத்தால் தாபரமும் நல்ல
நாதனுமென்றார்.– இயேசு

3. ஒப்பில்லா நம்பிக்கை சந்தோஷமும்
தப்பரதேசின் கிரீடமாகவே அப்போஸ்தலர் தம்
ஊழியத்தாலே ஆதி விஸ்வாசத்தில் வளர்ந்திடுவோம்.– இயேசு

4. கிறிஸ்து இயேசு பிரசன்னமாகவே கிருபையும் வெளியாகினதே
நீக்கியே சாவினை நற் சுவிசேஷத்தால் ஜீவன் அழியாமை வெளி
யாக்கினார். – இயேசு

1. தேவ அன்பை வேதம் கூற கண்டு உணர்ந்தேன்
இரத்தம் சிந்தி என்னை மீட்ட மீட்பை அறிந்தேன்.

**_பல்லவி_**

எந்தன் பாவம் யாவும் தீர்க்க இயேசு மரித்தார்
அன்பு பொங்கி ஊழியம் செய்ய பெலன் கொடுப்பார்.

2. என்னை மீட்க இயேசு நாதர் குருசில் தொங்கினார்
முட்கிரீடம் சூடி அவர் கஸ்தி அடைந்தார்.– எந்தன்

3. தேவ மைந்தன் இரத்தம் ஓட செய்த காரணம்,
ஆணி ஈட்டி இவை அல்ல எந்தன் அக்கிரமம். – எந்தன்

4. எந்தன் ஜீவன் சுகம் முற்றும் தத்தம் செய்கிறேன்
திருவாக்கை நம்பி என்றும் உம்மைப் பின் செல்வேன். – எந்தன்

shutterstock

**1.** இயேசு கற்பித்தார் ஒளி வீசவே, சிறு தீபம் போல
இருள் நீக்கவே அந்தகார லோகில் ஒளி வீசுவோம்
அங்கும், இங்கும், எங்கும் பிரகாசிப்போம்.

**2.** முதல் அவர்க்காய் ஒளி வீசுவோம் ஒளி மங்கிடாமல்
காத்துக் கொள்ளுவோம் இயேசு நோக்கிப் பார்க்க
ஒளி வீசுவோம் அங்கும், இங்கும், எங்கும் பிரகாசிப்போம்.

**3.** பிறர் நன்மைக்கும் ஒளி வீசுவோம் உலகின் மா இருள்
நீக்க முயல்வோம் பாவம் சாபம் யாவும் பறந்தோடிப்போம்
அங்கும், இங்கும், எங்கும் பிரகாசிப்போம்.

## பல்லவி

பூமி அதிர்ந்தாலும் ஆழி பொங்கினாலும்
என்ன நேரிட்டாலும் அஞ்சிடேன்.

## சரணங்கள்

1. யேகோவா துணை நிற்கிறார், அஞ்சிடேன்;
எக்காலும் அவர் கைவிடார், அஞ்சிடேன். – பூமி

2. ஓர் ஜீவ நதியுண்டு! பார்! அஞ்சிடேன்;
அத்தால் சந்தோஷஞ் செய்கிறார், அஞ்சிடேன். – பூமி

3. "நான் உந்தன் தேவன்" என்கிறார், அஞ்சிடேன்.
மாற்றாரை ஓடப்பண்ணுவார், அஞ்சிடேன்; – பூமி

4. என் இயேசுநாதர் நாமம் ஜெயம், நம்புவேன்;
என் இயேசுநாதர் நாமம் ஜெபம் நம்புவேன்!

இயேசு நாமம் ஜெயம் இயேசு நாமம் ஜெயம்
இயேசு நாமம் ஜெயம் நம்புவேன். – பூமி

**1.** அந்தகார லோகத்தில், யுத்தம் செய்கிறோம்;
இயேசு நாதர் பட்சத்தில் அஞ்சாமல் நிற்கிறோம்.

***<u>பல்லவி</u>***

தானியேலைப் போல; தைரியங் காட்டுவோம்;
பயமின்றி ஊக்கமாய், உண்மைப் பிடிப்போம்.

**2.** பாவச் செய்கை யாவையும் நேரே எதிர்ப்போம்;
துன்பமே உண்டாயினும் பின்வாங்கவே மாட்டோம். – தானி

**3.** மற்றோர் நிந்தை செய்யினும் அஞ்சித் தளரோம்;
பொல்லார் நயங் காட்டினும் சற்றேனும் இணங்கோம். – தானி

**4.** வல்ல தேவ ஆவியால் வெற்றி சிறப்போம்;
லோகம்–பாவம்–அவரால்மேற்கொண்டு ஜெயிப்போம். – தானி

## பல்லவி

சின்னச் சின்ன ஜீவ வண்டி (கப்பல்)
தேவன் அமைத்த ஜீவ வண்டி (2)

## சரணங்கள்

1. ஆச்சரியமான ஜீவ வண்டி அற்புதமான ஜீவ வண்டி (2)
– சின்ன

2. போகும் தூரம் வெகு தூரம் போகும் வண்டி இதுவே தான் (2)
– சின்ன

3. போகும் திக்கு இரண்டே தான் ‘‘மோட்சம்’’ – ‘‘நரகம்’’
என்பது தான் (2) – சின்ன

4. மோட்சத் திக்கில் இன்பமாம் நரகத் திக்கில் துன்பமாம் (2)
– சின்ன

5. மோச வழி காட்டிகள் நரக பாதை யோட்டுவார் (2)
– சின்ன

6. வண்டி ஒட்டி இயேசு தான் மோட்ச வழி காட்டுகிறார் (2)
– சின்ன

1001ChristianClipart.com

1. இயேசு எந்தன் நேசரே, கண்டேன் வேத நூலிலே;
பாலர் அவர் சொந்தம் தான்,தாங்க அவர் வல்லோர் தான்.

***பல்லவி***

இயேசு என் நேசர், இயேசு என் நேசர்,
இயேசு என் நேசர், மெய் வேத வாக்கிதே.

2. என்னை மீட்க மரித்தார், மோட்ச வாசல் திறந்தார்;
எந்தன் பாவம் நீக்குவார், பாலன் என்னை இரட்சிப்பார். – இயேசு

3. பெலவீனம் நோவிலும், என்றும் என்னை நேசிக்கும்
இயேசு தாங்கித் தேற்றுவார், பாதுகாக்க வருவார். – இயேசு

4. எந்தன் மீட்பர் இயேசுவே தங்குவார் என்னருகே;
நேசனாய் நான் மரித்தால் மோட்சம் சேர்ப்பார் அன்பினால். – இயேசு



1001ChristianClipart.com

1. அவர் வல்லமை யுள்ளவரே அவர் வானமும் பூமியும் சிருஷ்டித்தவர்.

2. அவர் அற்புதமானவரே அவர் காற்றையும் கடலையும் அதட்டினவர்.

3. அவர் அதிசயமானவரேஅவர் மரணத்தை வென்று உயிர்த்தெழுந்தார்.

4. அவர் இரட்சிக்க வல்லவரே என்னை பாவத்தினின்று மீட்டெடுத்தார்.

5. அவர் இராஜாதி இராஜாவே அவர் நித்திய இராஜனும் கர்த்தருமே.

6. அவர் வாக்கு மாறாதவரே அவர் வார்த்தை என்றென்றும் நிலைத்திருக்கும்.

7. அவர் என்றும் மாறாதவரே அவர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர்.

8. அவர் உன்னத மானவரே என் உள்ளத்தை உண்மையாய் மாற்றினவர்.

9. அவர் அன்பின் அவதாரமே என்னில் அன்பின் ஆவியை ஊற்றினவர்.

1001ChristianClipart.com

**1.** சின்ன ஒளிக்கதிர் யார் உனக்கொளி கொடுத்தார் **?**
– எங்கள் பிதா
தங்க நிறக் குருவி
எங்கு பாடக்கற்றாய் நீ **?**
– பிதாவிடம்.

***<u>பல்லவி</u>***

எங்கள் பிதா தேவனே எல்லாம் தந்தார் – அன்பரே

**2.** சின்ன இன்பப் பூவே யார் உனக்கழகு தந்தார் **?** – எங்கள் பிதா
மலைநாட்டு ஓடையே ஓடச் செய்தார் சொல்லே **?** – எங்கள் பிதா
– எங்கள்

**3.** இன்ப முகப் பாலகா; பூரிப்புனக் கேதையா **?** –பிதா தந்தார்
பட்சிபோல எக்களிப்பாய் எங்குபாடப் படித்தாய் **?**– பிதாவிடம்.
– எங்கள்



1001ChristianClipart.com

1. என் கண்ணே நீ காண்பது என்ன ? என்ன ?

***பல்லவி***

யேசையா மேலிருந்து தாழ உன்னைப் பார்க்கிறார்.
என் கண்ணே நீ காண்பது என்ன ? என்ன ?

2. என் காதே நீ கேட்பது என்ன ? என்ன ? –யேசையா

3. என் மூக்கே நீ முகர்வது என்ன ? என்ன ?–யேசையா

4. என் நாவே நீ பேசுவது என்ன ? என்ன ?–யேசையா

5. என் கையே நீ செய்வது என்ன ? என்ன ?–யேசையா

6. என் நெஞ்சே நீ நினைப்பது என்ன ? என்ன ?–யேசையா

7. என் காலே நீ போவது எங்கே ? எங்கே ?–யேசையா

1. கற்பாறையின் மேல் கட்டினவன் புத்தியுள்ளவன் (3)
பெருமழை பெய்தது பெருமழை பெய்தது, நீர் உயர்ந்தது (3)
அந்த வீடு நிலைத்து நின்றது (2)

2. மணலின் மேல் கட்டினவன் புத்தியற்றவன் (3)
பெருமழை பெய்தது பெருமழை பெய்தது, நீர் உயர்ந்தது (3)
அந்த வீடு அழிந்து ஒழிந்தது (2)

3. கற்பாறையான இயேசுவில் நீ கட்டுவாயானால் (3)
உன் ஜெபம் கேட்கப்படும் உன் ஜெபம் கேட்கப்பட்டு,
மேன்மையடைவாய் நீ என்றென்றும் நிலைத் திருப்பாய் (2)

417

1. இரண்டு சிறு கண்கள் – தேவனைப் பார்க்க
இரண்டு சிறு காதுகள் – அவர் சத்தம் கேட்க

2. இரண்டு சிறு கைகள் – அவர் வேலை செய்ய
இரண்டு சிறு கால்கள் – அவர் பாதை நடக்க

3. ஓர் சின்ன நாவு – அவர் சத்யம் பேச
ஓர் சின்ன இருதயம் – அவருக்கு கொடுக்க

4. ஏற்றுக் கொள்ளும் கர்த்தாவே என்றென்றைக்கும் உமக்கே
கீழ்ப்படிந்திருப்பேன். ஆ...மென்.

1. இயேசுவண்டை சேரில் பூரிப்பாக்குவார்.
நெஞ்சின் மிக நோவும் ஆறப்பண்ணுவார்.

***பல்லவி***

இயேசுவண்டை சேரில் பூரிப்பாக்குவார்.
“வாரும் சிறியோரே வாரும்” என்கிறார்.

2. இயேசுவண்டை சேரில் ஏற்றுக் கொள்ளுவார்;
எந்தன் பாவம் நீக்கி மீட்டு இரட்சித்தார். – இயேசு

3. இயேசுவண்டை சேரில் கையில் ஏந்துவார்;
பாதுகாத்து, பின்பு மோட்சம் கொடுப்பார். – இயேசு

4. வெள்ளை அங்கி போட்டு கொண்டு வாழுவேன்
மீட்பரின் சமூகம் கண்டு களிப்பேன். – இயேசு

1. ஏதேனில் ஆதிமணம் உண்டான நாளிலே
பிறந்த ஆசீர்வாதம் மாறாதிருக்குமே.

2. இப்போதும் பக்தியுள்ளோர் விவாகம் தூய்மையாம்;
மூவர் பிரசன்னமாவார், மும்முறை வாழ்த்துண்டாம்.

3. இரு தன்மையும் சேர்ந்த கன்னியின் மைந்தனே,
இவர்கள் இரு கையும் இணைக்க வாருமே.

4. மெய் மணவாளனான தேவ குமாரர்க்கே
சபையாம் மனையாளை ஜோடிக்கும் ஆவியே.

5. நீரும் இந்நாளில் இங்கு இவ்விரு பேரையும்
இணைத்து அன்பாய் வாழ்த்தி, மெய்ப் பாக்யம் ஈந்திடும்.

6. கிறிஸ்துவின் பாரியோடே எழும்பும் வரைக்கும்
எத்தீங்கில் நின்றும் காத்து, பேர் வாழ்வு ஈந்திடும்.

1. ஆசீர்வதியும் கர்த்தரே, ஆனந்தமிகவே
நேசா உதியும் சுத்தரே, நித்தம் மகிழவே.

***<u>பல்லவி</u>***

வீசிரோ வானஜோதி கதிரிங்கே மேசியா எம்மணவாளனே
ஆசாரியரும் வான் ராஜனும் ஆசீர்வதித்திடும்.

2. இம்மண மக்களோடுமே என்றென்றும் தங்கிடும்
உம்மையே கண்டும் பின் சென்றும், ஓங்கச் செய்தருளும்
இம்மையே மோட்சமாக்கும் வல்லவரே இன்பத்தோடன் பாக்கி சூட்சமே
உம்மிலே தங்கித் தரிக்க ஊக்கமருளுமே – வீசிரோ

3. ஒற்றுமையாக்கும் இவரை ஊடாக நீர் நின்றே
பற்றோடும் மீது சாய்ந்துமே, பாரில் வசிக்கவே
வெற்றி பெற்றோங்கும் இவர் நெஞ்சத்திலே
வீற்றாளும் நீர் ஏக ராஜனாம் உற்றவான் ராயர் சேயர்க்கே
ஒப்பாய் ஒழுகவே – வீசிரோ

4. பூதல ஆசீர்வாதத்தால் பூரணமாகவே
ஆதரித்தாளும் கர்த்தரே ஆசீர்வதித்திடும்
மா திரளாக இவர் சந்ததியார் வந்து தித்தும்மைப் பிரஸ்தாபிக்க
ஆ தேவ கிருபை தீர்மானம் ஆம் போல் அருளுமே – வீசிரோ

***பல்லவி***

இந்த மங்களம் செழிக்கவே – கிருபை செய்யும்,
எங்கள் திரித்துவ தேவனே.

***அனுபல்லவி***

சுந்தரக் கானாவின் மணப்பந்தலில்
சென்றம்பாணத்தைக் கந்தரமாகச் செய்த
விந்தைபோல், இங்கேயும் வந்து – இந்த

***சரணங்கள்***

**1.** ஆதி தொடுத் தன்பை எடுத்தாய்; – மானிடர் தமை
ஆணும் பெண்ணுமாகப் படைத்தாய்;
நீதி வரம் நாலுங் கொடுத்தாய்; – பெற்றுப் பெருகி
நிற்க உலகத்தில் விடுத்தாய்; மாதவர் பணியும் வேத
போதனே, அந்தப்படி உன் ஆதரவைக் கொண்டு சுதன்
நீதியை நம்பிப் புரிந்த – இந்த

**2.** தக்க ஆபிராமும் விண்டனன்; – அதனை மனதுக்குள் எலியேசர்
கொண்டனன்; முக்கிய ஹாரன் நிலத் தண்டினன்; – நினைத்தபடி
சக்கியமதாகக் கண்டனன்; பக்குவம் உரைத்திடா ரெபேக்காளும்
ஈசாக்குவுக்குத் தக்க மண வாளியாகத் தந்து தயை செய்தாற்போல,
– இந்த

**3.** சத்திய வேதத்தின் வாசனே, அருள் பரி சுத்த சுவிசேட நேசனே,
பக்தர்கள் பல விமோசனே, பழுதணுவும் அற்ற கிறிஸ் தேசு ராசனே,
வெற்றியால் யாக்கோபுவுக்கு முற்றிலும் அளித்த பேறாய்ப்
புத்திர சம்பத்துண்டாக்கி நித்ய சுப சோபனமாய், – இந்த

***<u>பல்லவி</u>***

மண வாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு – மங்கள வாழ்வு
வாழ்வினில் வாழ்வு மண வாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு
மறுவிய சோபன சுப வாழ்வு

***<u>சரணங்கள்</u>***

1. துணைபிரியாது, தோகை இம்மாது
சுப மண மகளிவர் இது போது மண முறை யோது வசனம் விடாது
வந்தனரு மதருள் பெற வேது – நல்ல – மண

2. ஜீவ தயாகரா சிருஷ்டியதிகாரா,
தெய்வீக மா மண அலங்காரா தேவ குமாரா
திரு வெல்லையூரா சேர்ந்தவர்க்கருள் தரா
திருப்பீரா – நல்ல – மண

3. குடித்தன வீரம், குணமுள்ள தாரம்
கொடுத்துக் கொண்டாலது சமுசாரம்;
அடக்க மாசாரம்; அன்பு, உதாரம், அம்புவி தனில் மனைக்
கலங்காரம் – நல்ல – மண

4. மன்றல் செய்தேவி மணாளனுக்காவி
மந்திரம் அவற்குறை மேதாவி அன்றியிப் பூவி லமிர்த சஞ்சீவி
அவளே இல்லறமாளும் மாதேவி – நல்ல – மண

# 423

பல்லவி

மங்களம் செழிக்ககிருபையருளும் – மங்கள நாதனே

***<u>சரணங்கள்</u>***

1. மங்கள நித்திய மங்கள நீ, மங்கள முத்தியும் நாதனும் நீ
எங்கள் புங்கவன் நீ, எங்கள் துங்கவன் நீ
உத்தம சத்திய, நித்திய தத்துவ, மெத்த மகத்துவ
அத்தனுக் கத்தனாம் ஆபிரகாம் தேவ நீ – மங்களம்

2. மங்களம் மணமகன்...க்கும் மங்களம் மணமகள் ...க்கும்
மானுவேலர்க்கும் மகானுபாவர்க்கும்
பக்தியுடன் புத்தி முக்தி யளித்திடும் நித்தியனே உன்னை
துத்தியம் செய்திடும் சத்திய வேதர்க்கும் – மங்களம்

pageborders.org

## பல்லவி

இம்மணர்க் கும்மருள் ஈயும், பர வாசா!
ஏசுக் கிறிஸ்தையா, ஓ! சருவேசா!

## சரணங்கள்

1. செம்மையும் நன்மையும் செல்வமும் தாரும்;
தேவரீர் இவ்விரு பேரையும் காரும்; – இம்

2. ஆதாமோடு ஏவையை அன்றமைத்தீரே,
அவ்விதமாக நீர் இன்றும் செய்வீரே. – இம்

3. அன்பன் ஈசாக்கு ரெபெக்காட் கிரங்கி,
ஆபிரகாமுடன் சாராளைக் காத்தீர். – இம்

4. உந் தயை பெற்றிவர் ஓங்கிப் பெருகவும்,
ஒருவருக் கொருவர் நல்லன்பில் நிலைக்கவும், – இம்

5. தாழ்மை பொறுமைகள், சற்குண மேன்மைகள்
தந்தும தாவியைக் கொண்டு காத்தாளுமேன் – இம்

6. இயேசு கிறிஸ்துவை நேசித்து வாழவும்,
இன்ப விசுவாச வீட்டார் என்றாகவும், – இம்

ரோஜாப்பூ வாச மலர்கள் – நாம்
இப்போ நேச மணாளன் மேல் தூவிடுவோம்.

1. மன்னனாம் மாப்பிள்ளை பண்புள்ள பெண்ணுடன்
அண்டிலும் தேடியே ஒன்றித்து வாழ ஆண்டவர் ஆசீர்வதிக்க
வேண்டுதலோடு தூவிடுவோம். – ரோஜா

2. புத்திர பாக்கியம் புகழுடன் வாழவும்
சத்தியம் சாந்தம் சுத்த நல் இதயம்
நித்திய ஜீவன் ஈந்ததால் – இப்போ
இந்த மணாளன் மேல் தூவிடுவோம் – ரோஜா

3. கறை திரை அற்ற மணவாட்டி சபையை
இறைவனாம் இயேசு தன்னுடன் சேர்க்கும்
மங்கள நாளை எண்ணியே – இப்போ
இந்த மணாளன் மேல் தூவிடுவோம். – ரோஜா

4. மல்லிகை, முல்லை, சிவந்தி, பிச்சு
மெல்லியே சேர்த்து அள்ளியே வீசி
நல் மணவாளன் மீதிப்போ எல்லா மலரையும்
தூவிடுவோம். – ரோஜா

pageborders.org

1. மங்களமே செழித்திட மன்றவர் வாழ்ந்திட
மன்னவரேசு நாதரும் – மன மகிழ்ந்திட
இங்கீத கீத நாதங்கள் – இசைந்து ஒலிக்க
இறைவனருளாலிவர்கள் – என்றுமே ஜொலிக்க

***பல்லவி***

மா மங்களமே – மா மங்களமே
மா இங்கீதமே இம் மன்றவர்க்கே.

2. பார்புகழ் ...... அவரின் செல்வபுத்திரனாம் பக்தன் ..........
மணாளனுடனே சீரார் ............ அவரின்
செல்வ புதல்வியாம்தீங்குயில் ........... என்றும்
தழைத்து வாழ்கவே – மா

3. பண்டு கானாவில் மன்றலோங்க செய்த தேவரீர்
பல்லாண்டிவர்கள் வாழ்ந்திட வரமருளுவீர்
விண்ணவர் போலிவர்க ளொளி வீசிப்பிழைக்க
விமலனருளினாலென்றும் நின்று உழைக்க – மா

4. புத்திர பாக்கியமது – பெருகி ஓங்கவே
புண்ணியரேசு நாதரும் – பரிந்து தாங்கவே
சுத்தாவியாலிவர்களென்றும் சாட்சி கூறவே
சன்மார்க்க நெறியிலிவர்கள் – சென்று தேறவே – மா

5. கொற்றவனேசு நாதர் – ஜெயம் பெற்று வாழியே
கொண்டாடவிங்கு கூடினோர் – பலரும் வாழியே
பெற்றவரி வனுற்றவர் மற்றவர் வாழியே
பொற்புயரும்மன்பிலிவர்கள் பல்லாண்டு வாழியே.– மா

## பல்லவி

என்னையே கொடுத்தேன் உனக்காய்
என்மகனே அதை அறியாயோ
நித்ய ஜீவனை நீ அடைய என் ஜீவனையே கொடுத்தேன்

## சரணங்கள்

1. ஓர் காரணமில்லாமலே பலவாதைக்குள் ஆகினேனே
உன் பாவத்தினால் தானே இப்பாடுகள் சகித்தேனே – என்

2. ஈலோகப் பாவமெடுத்தேன் கல்வாரிமலை தனிலே
உன் பாவமதும் சுமந்தே நான் தொங்கினேன் சிலுவையிலே – என்

3. எத்தீமைகள் ஒன்றுமேதான் என்னில் யாருமே காணலையே
உன் மீறுதல் போக்கிடவே நான் பாதகன் போல் மாண்டேன் – என்

4. உன் சொந்த வழி நடந்தால் சேர்ந்திடுவாய் நீ நரகில்
ஓர் அந்தமுமில்லாமலே நீ வெந்திடுவாய் அதிலே– என்

5. உன் ஆத்துமா வாழ்வடைய உன்னை அளித்திடு என் கரத்தில்
உன் பாவவினை அகற்றி மெய் பாக்கிய மீந்திடுவேன் – என்

6. நீ சேர்ந்திடுவாய் நிஜமே நித்யானந்த மோட்சமதில்
நீடூழி சுகித்திடுவாய் என் மகிமை சமூகமதில் – என்

speakarun@gmail.com

1. கெட்டுப் போன மாந்தரை இயேசு ஏற்றுக் கொள்ளுவார்
பாவ ஆத்துமாக்களை குணமாக்கி இரட்சிப்பார்.

*பல்லவி*

நல்ல செய்தி கேளுமேன்! இயேசு ஏற்றுக் கொள்ளுவார்
நம்பி வாரும், வாருமேன்! தள்ளிப் போடவே மாட்டார்.

2. இளைப்பாறுதல் தருவேன் நம்பி வாரும் என்கிறார்
யாரானாலும் வாருமேன் பாவப்பாரம் நீக்குவார். – நல்ல

3. மாசில்லாத இரத்தத்தால் சர்வ சுத்த மாக்குவார்,
வல்ல தூய ஆவியால் தீய சுபாவம் மாற்றுவார். – நல்ல

4. இந்த ஏற்ற நேரத்தில் வந்து சேரக் கடவீர்
புண்ய நாதர் பாதத்தில் மீட்பும் வாழ்வும் பெறுவீர். – நல்ல

### பல்லவி

எங்கும் புகழ்வோம் சுவிசேஷம் – ஆ
மங்கா மகிமையின் உபதேசம்

### சரணங்கள்

1. மனிதனைத் தின்னும் மனிதனை உத்தம
சிநேகிதன் ஆக்கும் மார்க்கம் அன்பெழும் ஆனந்த சுவிசேஷம் – ஆ
மங்கா மகிமையின் உபதேசம் – எங்கும்

2. அஞ்ஞான இருள் முற்றும் அகற்றும் விஞ்ஞானக் கதிர் வீசும்
மெய் ஞானப் பொருள் சுவிசேஷம் – ஆ
மங்கா மகிமையின் உபதேசம் – எங்கும்

3. பயங்கர யுத்த புயலில் நடுங்கும் பூமியின் பீதியை நீக்கும்
சாந்தியை அருளும் சுவிசேஷம்– ஆ
மங்கா மகிமையின் உபதேசம் – எங்கும்

4. விமலன் கிறிஸ்துவின் மலரடி புகுந்தால்
விரைவில் விடுதலை ஈயும் ஜெய ஜெய தொனியாம் சுவிசேஷம் – ஆ
மங்கா மகிமையின் உபதேசம் – எங்கும்

5. கிருபையால் ஏதொரு பாதகனையும் தூய மனிதனாய் மாற்றும்
பாவ நிவாரண சுவிசேஷம் – ஆ
மங்கா மகிமையின் உபதேசம் – எங்கும்

6. உலக மக்களுக்கிது ஒரு ஈனம் நமக்கோ தெய்வீக ஞானம்,
சிலுவையின் வசனம் சுவிசேஷம் – ஆ
மங்கா மகிமையின் உபதேசம் – எங்கும்

## பல்லவி

போற்றிடு, போற்றிடு வல்லவரை, நீ போற்றிடு சத்திய இரட்சகரை
ஏற்றிடு சற்றும் நாணாமல் சுவிசேஷ ஜெயக்கொடி நாடெங்கும்.

## சரணங்கள்

1. கர்த்தர் தம் சுவிசேஷ செய்தியை
பாவியை மீட்கும் செய்தி அதை – ஆஆஆ
எத்திசைகளிலும் பரப்பிட வாரும், கொடியை ஏற்றும்
நாடெங்கும் – ஜெயக் – போற்றிடு

2. அசதியும் பீதியும் ஆகாதே வீணுலகின் மேன்மையை
நாடாதே – ஆஆஆ
சிலுவையை எடுத்து நிந்தையை சுமந்து இயேசுவை என்றும்
பின்செல்லு நீ – போற்றிடு

3. எல்லார் முன்பிலும் இயேசுவைப் போற்றிடு போற்றிடு இரட்சகர்
திருநாமம் – ஆஆஆ
நல்லார் அவரே, வல்லவர் அவரே, ஆதி அனாதியும் எல்லாமே– அவர்
– போற்றிடு

4. அவரே தெய்வீக வழியும்,சத்தியம், அவரே நித்திய ஜீவனுமே.
– ஆஆஆ
அவரே ஜீவத் தண்ணீர் அப்பமும், அவரே மீட்பரும்
மேய்ப்பருமே – என்றும் – போற்றிடு

5. பகலோன் கதிர்போல் இயேசுவின் மகிமை பாரினில் எங்கும்
வியாபிக்கும் – ஆஆஆ
அகில ஜனங்களும் விழுந்து வணங்கி, ‘வாழ்க இராஜரே’
என்பார்கள் – நீர். – போற்றிடு

## பல்லவி

வானாதி தாள் காட்டும் – நல்ல வாத்தி சுவிசேஷம்

## அனுபல்லவி

கோன் ஆதி இயேசு கிறிஸ்து மொழிந்ததோர்
கோதில்லா நீதி நிறைந்த சுவிசேஷம் – வானாதி

## சரணங்கள்

1. ஆதி ஒளி தோண, – நல்ல அறிவு மிகக்காண; – சத்திய
நீதியின் வேர் ஊண,– அதை நாணிலத்தோர் பூண,
ஜாதிகளான சகல மனிதரும் சத்ய மறை என்று துத்யம்
புரியவும், – வானாதி

2. அன்பு நிறைந்திடவும் கெட்ட ஆசை குறைந்திடவும் – மோட்ச
இன்பஞ்சிறந்திடவும் – பாவ இருள்கள் மறைந்திடவும் முன்பு நடந்த
முரட் டாட்டத்தை விட்டு முற்றிலும் நற்குண சுத்தம் பெருகவும்.
–வானாதி

3. கார் இருள் நீங்கிடவும், பாவக் கயிறு பின் வாங்கிடவும்,– நித்ய
பேர் ஒளி ஓங்கிடவும்,–சத்ய பிரபல்யம் நூங்கிடவும், தாரணியில் உள்ள
சர்வ மனிதரும் சத்ய பிதா எனும் வஸ்துவைச் சேரவும். – வானாதி

4. பாலர்கள் கூடிடவும்,–நித்திய பரகதி தேடிடவும், ஜீவ காலங்கள்
நீடிடவும், மோட்ச–கன முடி சூடிடவும், கோலம் நிறைந்த மணவாளன்
இயேசுவைக் கூடி அனுதினம் பாடித் துதிக்கவும். – வானாதி

1. கெட்டோனை இரட்சியும் சாவோனைக் காரும்
பாபமும் சாபமும் நீங்கச்செய்யும் சோர்வோனைத் தாங்கிடும்;
வீழ்ந்தோனைத் தூக்கும் சுப விசேஷத்தை அறிவியும்.

***பல்லவி***

கெட்டோனை இரட்சியும், சாவோனைக் காரும்,
இயேசு தயாபரர் இயேசு வல்லோர்.

2. பாவ சண்டாளரைப் பொறுமையோடு திருத்தி இரட்சிக்கப்
பார்க்கிறாரே, மெய் மனஸ்தாபமாய் நம்பிக்கையோடு
வந்தடைந்தால், அவர் மன்னிப்பாரே. – கெட்

3. தீக்குண நெஞ்சிலும், குன்றிப்போனாலும் மோட்சத்தை நாடும்
நல்லாசையுண்டாம் அன்பின் விசேஷத்தால், சத்தியத்தாலும்
குன்றிய வாஞ்சையும் மேலிடுமாம். – கெட்

4. கெட்டோனை இரட்சியும், பேராவலோடு ஆவியின் வல்லமை
அருளுவார். இரட்சிப்பைக் கூறவும் உருக்கத்தோடு
தேவாசீர்வாதமும் தந்திடுவார். – கெட்

## பல்லவி

இயேசுவின் இரட்சிப்பைக் கண்டடைந்தோம்;
இரட்சிக்கிறார்! இரட்சிக்கிறார்! இயேசுவின் வல்லமை
கூறுகிறோம்; இரட்சிக்கிறார்! இரட்சிக்கிறார்!

## சரணங்கள்

1. பாவத்தினால் வரும் மோசத்திலும்
நித்திய ஆக்கினை நாசத்திலும் நின்றும் இதோ! அவர் முழுவதும்
இரட்சிக்கிறார், இரட்சிக்கிறார்! – இயேசு

2. தீய பிசாசுதன் வன்கையிலும் ஆளுகை கொடுமை சிறையிலும்
நின்றும் இதோ! அவர் முழுவதும் இரட்சிக்கிறார், இரட்சிக்கிறார்!
– இயேசு

3. மாம்சத்தின் கிரியைகள் யாவற்றிலும்
எவ்விதமான துராசையிலும் நின்றும், இதோ! அவர் முழுவதும்
இரட்சிக்கிறார், இரட்சிக்கிறார்! – இயேசு

4. லோக ஆடம்பரம், மாய்கையிலும், வீண் பொருளாசை
ஆங்காரத்திலும் நின்றும், இதோ அவர் முழுவதும்,
இரட்சிக்கிறார், இரட்சிக்கிறார்! – இயேசு

1. திவ்ய விசேஷம் கூறும்! மெய்த் தேவ மைந்தனார்
தீயோரை மீட்டுக் கொள்ளப் பேராவலாய் வந்தார்!
பிள்ளைக்குச் சொல்லுமாறு நன்றாகக் காட்டுமேன்
சந்தேக மெல்லாம் நீங்க நற்செய்தி சொல்லுமேன்.

<u>பல்லவி</u>

இரட்சிப்பின் செய்தி சொல்லும்!
இரட்சிப்பின் செய்தி சொல்லும்!
இரட்சிப்பின் செய்தி சொல்லும்!
பேரன்பைக் கூறுமேன்.

2. இன்னமும் திட்டமாக இச் செய்தி சொல்லுவீர்,
இரட்சண்ய நாதர் பாடும் மா மீட்பும் சாற்றுவீர்
பேதையென் புத்திக் கேற்கக் கல்வாரி காட்டுமேன்.
நற் செய்தி மீண்டும் மீண்டும் நீர் சொல்லி வாருமேன். – இரட்

3. இரட்சிப்பை மெல்ல மெல்ல மெய்ப் பக்தியோடேயும்
கல் நெஞ்சம் முற்றும் மாற அன்போடும் காண்பியும்,
துன்பம் விசாரம் துக்கம் உண்டாகும் நாளிலும்
இம்மானுவேல் தயாளம் நான் காணப் போதியும். – இரட்

4. லோகத்தின் இன்பம் பேரில் என் உள்ளம் போவதாய்
நீர் கண்டால் கைவிடாமல் மென் மேலும் ஊக்கமாய்
இரட்சகரின் மா காயம் முட்கிரீடம் காட்டுமேன்;
இரட்சண்ய செய்தி சொல்லி மெய்ப்பக்தி மூட்டுமேன். – இரட்

1. நல்ல செய்தி இயேசுவை நோக்கிப்பார் இரட்சிப்பார்
நம்பி வந்து அவரை நோக்கிப்பார் இரட்சிப்பார்!
எந்தப் பாவியாயினும் தள்ளமாட்டேன் என்கிறார்
துரோகஞ் செய்த போதிலும் நோக்கிப்பார் இரட்சிப்பார்!

2. எங்கும் செய்தி சொல்லுவோம் நோக்கிப்பார் இரட்சிப்பார்
தேசா தேசம் கூறுவோம், நோக்கிப்பார் இரட்சிப்பார்!
எந்த நாடு தீவிலும் இயேசு காத்து நிற்கிறார்
மூடன் நீசன் ஆகிலும் நோக்கிப்பார் இரட்சிப்பார்!

3. இன்னும் கேள்! மா நேசராம் இயேசுவே காக்கிறார்
நம்பும் பக்தரையெல்லாம் காக்கிறார்! காக்கிறார்!
சற்றும் தவறாமலும் கையில் ஏந்திக் கொள்ளுவார்
கேடு பாடில்லாமலும் காக்கிறார்! காக்கிறார்!

4. சுவிசேஷம் இதுவே! காக்கிறார்! காக்கிறார்!
பாவம் நீக்கிப் பின்னுமே காக்கிறார்! காக்கிறார்!
மோட்சஞ் சேருமளவும் தாங்கிக் கொண்டே இருப்பார்
தீமையைச் செய்யாமலும் காக்கிறார்! காக்கிறார்.

## பல்லவி

இயேசு சிலுவையில் மாண்டார் எனக்காகவும் உனக்காகவும்
பாடுகள் பல அனுபவித்தார் எனக்காகவும் உனக்காகவும்

## சரணங்கள்

**1.** நதியைப் போல் குருதி வடிந்தது மரணத்தின் கூரும் ஒடிந்தது
பாவப் பரிகாரம் யாவும் முடிந்தது தேவகுமாரனின் ரத்தத்தினால்
– இயேசு

**2.** இன்றே பாவங்களைக் கழுவி விடும்
இருதயக் கறைகளை நீக்கி விடும்
புது சிருஷ்டியாய் நம்மை மாற்றி விடும்
புண்ணியர் ரத்தத்தால் ஆகிவிடும் – இயேசு

**3.** சிலுவையில் இயேசு அறையப்பட்டார் ஈட்டியால் விலாவில்
குத்தப்பட்டார் என்னையும் மீட்க உன்னையும் மீட்க
அன்னை அவரின் பிள்ளைகளாக்க – இயேசு

பொங்கி வரும் அருள் மனிதரை மாற்றிடுதே
மங்கிப் போன மனம் புது வாழ்வில் மலர்ந்திடுதே

1. தீயவர் திருடரும், கொடியவர் கொலைஞரும் இயேசுவில்
மாற்றம் பெற்றார் மாறிய மனதுடன் மங்கள வாழ்விற்கு
அழைக்கிறார் – ஓடியே வா – பொங்கி

2. தேவனின் ஆவியால் விடுதலை வாழ்வினை
பெற்றவர் பலருமுண்டு இயேசு மகா இராஜன்
உன்னைத்தான் அழைக்கிறார் நம்பி நீ – ஓடியே வா – பொங்கி

3. கிருபையின் நாட்களை தயவுடன் ஏற்றிட
கனிவுடன் வேண்டுகிறோம் வருகையின் நாளினில்
வருந்திட வேண்டாம் நீ அழைக்கிறார் – ஓடியே வா – பொங்கி

1. இயேசு என் மீட்பர் பாவிகளுக்காய்
பூமியில் பிறந்தார் பாலகனாய்,
நீச மா பாவியைக் கருணையாய் தேடி வந்தார், வந்தார்.

## *பல்லவி*

தேடி வந்தார், வந்தார், தேடி வந்தார், வந்தார்,
நீசமா பாவியைக் கருணையாய், தேடி வந்தார், வந்தார்,

2. பாவ மா கடனைத் தீர்த்துப் போட்டார்
தீவினை நீக்கவும் பாடுபட்டார்;
இயேசுவைப் போல் வல்ல இரட்சகர் யார் ?
உயிரைத் தந்தார்; தந்தார் இயேசுவைப் போல் வல்ல இரட்சகர் யார் ?
உயிரைத் தந்தார், தந்தார்.

3. சிறியேன் பாவத்தின் மாய்கையினால் புத்தியில்லாமலும்
அலையுங்கால்; நீசனை நினைத்து நேசித்ததால்
இரட்சை செய்தார்; செய்தார். நீசனை நினைத்து நேசித்ததால்
இரட்சை செய்தார், செய்தார்.

4. இயேசு என் மீட்பர் வந்தருளுவார் வானத்தினின்றவர் இறங்குவார்.
மாட்சிமையோ டென்னைச் சேர்த்துக் கொள்வார்.
வாழச் செய்வார், செய்வார், மாட்சிமையோடென்னைச்
சேர்த்துக்கொள்வார் வாழச் செய்வார், செய்வார்.

1. உருகாயோ நெஞ்சமே நீ குருசினில் அந்தோ பார்!
கரங்கால்கள் ஆணியேறித் திருமேனி நையுதே!

2. மன்னுயிர்க்காய்த் தன்னுயிரை மாய்க்க வந்த மன்னவனாம்
இந்நிலமெல்லாம் புரக்க ஈன குரு சேறினார்.

3. தாகமிஞ்சி நாவறண்டு தங்கமேனி மங்குதே
ஏகபரன் கண்ணயர்ந்து எத்தனையாய் ஏங்குறார்.

4. மூவுலகைத் தாங்கும் தேவன் மூன்று ஆணி தாங்கிடவோ?
சாவு வேளை வந்த போது சிலுவையில் தொங்கினார்.

5. வல்ல பேயை வெல்ல வானம் விட்டு வந்த தெய்வம் பாராய்
புல்லர் இதோ நன்றி கெட்டுப் புறம் பாக்கினார் அன்றோ?

1. நல் மீட்பர் போல் வல்ல நேசர் உண்டோ
உன்னத நேசம்! பார்! மெய் ஆறுதல் அடைந்து
வாழ்ந்திட நம்மை நடத்துவார்.

***பல்லவி***

மட்டில்லா, நீங்கிடா இயேசுவின் அன்பைப் பார்!
அவ்வன்பரின் பாதத்தை அண்டுவாய், பாவி! வா என்கிறார்.

2. பேரன்பைக் காட்டின இயேசு போல பாவியின் நேசர் யார்?
நம் உள்ளத்தின் கவலை யாவையும்
அவர் கண்டறிவார். –மட்டில்லா

3. நல் நேசர் இயேசுவின் நேத்ரம் போல பேரருட் கண் உண்டோ?
அக்கண்ணுக்கு மறைய முயன்றும் அது கூடியதோ? – மட்டில்லா

4. நல் மீட்பர் சத்தத்தைப் போலும் இல்லை இனிய ஓசையும்,
மா மதுரமாய்க் காதுக்கின்பமாய் அது தொனித்திடும்
– மட்டில்லா

5. அவ்வின்ப சத்தம் அன்போடு கேட்டு இணங்கிச் செல்லுவோம்
பின் மோட்சத்தில் இயேசுவின் மார்பினில்
சுகவாழ்வடைவோம். – மட்டில்லா

## பல்லவி

ஆ ! இன்ப நேசர் இயேசுவின் அதிசய அன்பிதாம்
பார்த்திடாயோ கல்வாரியில் !

## சரணங்கள்

1. பாவ உலகத்தின் காட்சி பார்த்தே மனம் பதைத்துருகி
எந்தனை மீட்கவே சொந்த உதிரத்தை சிந்தி மீட்டவரே. – ஆ !

2. நாடிய உமதன்பில் தவறேன் தேடிய நன்மையை மறவேன்
பாடியே தோத்திரம் கோடி யுகங்களாய்
ஏற்று வேனுமக்கே. – ஆ !

3. ஆத்தும வேதனையாலே அழுதே புலம்பிய தூயர்
ஆவலுடன் சேரும் தேசமதிலுமென் பங்கை ஈந்திட்டீரே. – ஆ !

4. ஓட்டம் ஜெயத்துட னோடி ஒளியாம் ஜீவனேசுவைப் போல்
வீசும் ஒளியதில் வீரமாய் நடந்தோர் கிரீடம் சூடிடுவார். – ஆ !

5. மாறாத அன்பின் சொரூபி மா வாதையாலெமை வென்றீர்
கொல்கதாவில் ஜெயம் அல்லேலூயா துதி
ஆசை நேசருக்கே. – ஆ !

## *பல்லவி*

சுவிசேஷத்தைக் கேட்பீரே சுதன் இயேசுவை ஏற்பீரே

## *சரணங்கள்*

1. நம் பாவங்களுக்காகவே இம்மானிலத்தில் உதித்தார்;
சிலுவையைச் சுமந்தாரே ஜீவனையும் ஈந்தாரே. – சுவி

2. நானே வழியும், சத்தியமும், ஜீவனுமே என்றாரே;
அவராலே யன்றி நித்திய ஜீவனில்லை என்றாரே. – சுவி

3. வருத்தப்பட்டு பாரமே சுமப்பவர்கள் யாவருமே,
வருவீரே என்னிடமே தருவேன் இளைப்பாறுதலே. – சுவி

4. முள் முடியுடன் சிலுவையிலே முடிந்தது எல்லாம் என்றாரே.
உள்ளத்தில் விசுவாசித்தால் வல்ல இரட்சிப்பையே பெறுவாய்.
– சுவி

5. இவ்வளவு பெரிதான வல்ல இரட்சிப்பை அறியாது,
கவலையற்றிருப்போரே தண்டனைக்குத் தப்புவீரோ ? – சுவி

1. பரிசுத்தம் பெற வந்திட்டீர்களா
ஒப்பில்லா திரு ஸ்நானத்தினால் ?
பாவதோஷம் நீங்க நம்பினீர்களா
இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் !

<u>**பல்லவி**</u>

மாசில்லா – சுத்தமா ? திருப்புண்ணிய தீர்த்தத்தினால்,
குற்றம் நீங்கிட குணம் மாறிற்றா ? இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால்.

2. பரலோக சிந்தை அணிந்தீர்களா ?
வல்ல மீட்பர் தயாளத்தினால் ? மறுஜென்ம குணமடைந்தீர்களா
இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் – மாசில்லா

3. மணவாளன் வரக் களிப்பீர்களா
தூய நதியின் ஸ்நானத்தினால் ? மோட்சகரை ஏறிச் சுகிப்பீர்களா ?
இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் ?– மாசில்லா

4. மாசு கறை நீங்கும், நீசப் பாவியே !
சுத்த இரத்தத்தின் சக்தியினால் முக்தி பேறுண்டாகும்; குற்றவாளியே !
இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் ? – மாசில்லா

## 444

**1.** இயேசுநாதர் ஐங்காயத்தை நோக்கிப் பார்த்தால்
நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வாய்
பாவி! பிராணனைத் தந்துன்னை மீட்டவரை
நம்பி வந்து அண்ணாந்து பார்ப்பாய்.

***<u>பல்லவி</u>***

பார்! பார்! நோக்கிப்பார்! இயேசுநாதர் ஐங்காயத்தை நோக்கியே பார்!
நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வாய்.

**2.** பாவப் பாரத்தைத் தாங்கின இரட்சகரால் உந்தன் குற்றங்கள்
நீங்கினதே! ஜீவ நாயகர் சிந்தின இரத்தத்தினால்
பாவக்கடனும் தீர்ந்தாயிற்றே. – பார்!

**3.** எந்தக் கிரியைகள் ஜெபங்கள் கண்ணீர்களும் உன்னை இரட்சிக்க
மாட்டாதே, பார்! திரு இரத்தமே தஞ்சம் என்றோடி வந்தால்
வல்ல மீட்பர் கடாட்சஞ் செய்வார். – பார்!

**4.** பிராயச் சித்தத்தின் கிரியைகள் முடிந்ததே
என்று ஆண்டவர் வாக்களித்தார். சர்வ லோகத்தின் மீறுதல்
பாவங்களைச் சிலுவையில் நிவர்த்தி செய்தார். – பார்!

**5.** பாவநாசகர் ஈயும் மா இரட்சிப்பையே
இந்நேரமே பற்றிக் கொள்வாய் உன் நீதியாம் இயேசுவின்
புண்ணியத்தால் பேரின்பம் பெற்றே வாழுவாய். – பார்!

speakarun@gmail.com

# 445

## பல்லவி

பாவம் போக்கும் ஜீவநதியைப்
பாராய், வந்து பாராய் – பாவி!

## அனுபல்லவி

தீவினை தீர்க்கும் தேவமறியின்
திருரத்த மிந்த ஆறாம், – பாவி – பாவம்

## சரணங்கள்

1. கல்வாரி மலைச்சிகர மீதூற்றுக் கண்கள் ஐந்து திறந்தே;
– அதோ! மல்கிச் சிலுவை யடியில் விழுந்து
வழிந்தோடுது பாராய்; – பாவி! – பாவம்

2. பாவச்சுமையால் நொந்து சோர்ந்து பதறி விழுந் தலறி – நிதம்
கூவியழுத அனந்தம் பேரிதில் குளித்தே யுளங் களித்தார்,– பாவி!
–பாவம்

3. பத்தருளத்தி லிடைவிடாமல் பாய்ந்து வளமீந்து – அதை
நித்தமும் பரிசுத்த குணத்தில் நிலைநாட்டுது பாராய்,– பாவி!
–பாவம்

4. ஒருதரம் இந்த நதியின் தீர்த்தம் உண்டோர் ஜீவன்
கண்டோர்,–தாகம் அறுதி யடைவர்; வேறொரு நதிக்
கலையார், தேடி யலையார், – பாவி! – பாவம்

5. நித்தியந்தனில் கலந்துறையுஞ் செந்நீரார் நதியிதிலே – தங்கள்
வஸ்திரந் தோய்த்த சுத்தர் சபையில்
வாழ்த்து கீதம் பாடாய், – பாவி! – பாவம்

pageborders.org

என்னை நேசிக்கின்றாயா ?
என்னை நேசிக்கின்றாயா ?
கல்வாரி காட்சியை கண்ட பின்னும்
நேசியாமல் இருப்பாயோ ?

***<u>சரணங்கள்</u>***

1. வானம் பூமி படைத்திருந்தும் வாடினேன் உன்னை இழந்ததினால்
தேடி இரட்சிக்க பிதா என்னை அனுப்பிடவே
ஓடி வந்தேன் மானிடனாய். – என்னை

2. பாவத்தின் அகோரத்தைப் பார் பாதகத்தின் முடிவினைப்பார்
பரிகாச சின்னமாய் சிலுவையிலே
பலியானேன் நான் உனக்காய். – என்னை

3. பாவம் பாரா பரிசுத்தர் நான் பாசம் பொங்க அழைக்கிறேன் பார்
உன் பாவம் யாவுமே சுமப்பேன் என்றேன்.
பாதம் தன்னில் இளைப்பாறவா.

உம்மை நேசிக்கின்றேன் நான் உம்மை நேசிக்கின்றேன் நான்
கல்வாரி காட்சியை கண்ட பின்னும் நேசியாமல் இருப்பேனோ !

## *பல்லவி*

மகனே, உன் நெஞ்செனக்குத் தாராயோ ? – மோட்ச
வாழ்வைத் தருவேன், இது பாராயோ ?

## *சரணங்கள்*

1. அகத்தின் அசுத்தமெல்லாம் துடைப்பேனே, – பாவ
அழுக்கை நீக்கி அருள் கொடுப்பேனே, – மகனே

2. உன் பாவம் முற்றும் பரி கரிப்பேனே, – அதை
உண்மையாய் அகற்ற யான் மரித்தேனே – மகனே

3. பாவம் அனைத்துமே விட்டோடாயோ ? – நித்ய
பரகதி வாழ்வை இன்றே தேடாயோ ? – மகனே

4. உலக வாழ்வினை விட்டகல்வாயே, – மகா
உவப்பாய்க் கதி ஈவேன்; மகிழ்வாயே, – மகனே

5. உன் தன் ஆத்துமத்தை நீ படைப்பாயே,– அதில்
ஊக்கமாய் வசிக்க இடம் கொடுப்பாயே, – மகனே

**பல்லவி**

மகனே! ஓ மகளே! உன் இதயத்தை தாராயோ!
இப்போ தாராயோ ?

**சரணங்கள்**

1. கெட்ட மகனைப்போல துஷ்ட வழிகளிலே
மட்டுமிஞ்சி நீ அலைந்தாய் – உன்னைக்
கட்டிப் பிடித்து , முத்த மிட்டு அரவணைப்பேன்,
திட்டமிது நீ ஓடிவா, – மகனே

2. அஞ்சா மனதுடனே பஞ்சமா பாதகங்கள்
மிஞ்சவுமே புரிந்தாய் – என் நெஞ்சம் உருகுதப்பா,
எந்தன்  காயங்களிலே தஞ்சம் தருவேன் வாராயோ ? – மகனே

3. அங்கரங்கள் துளைக்கச் செங்குருதி சுரக்கத்
தொங்கி குருசில் மரித்தேன் உன் பங்க மனைத்தும் போக்கித்
தங்க அரண்மனையில் சிங்காசனத்தி லமர்த்த. – மகனே

4. கையிலுனை யெடுத்து மெய்யாயரவணைத்துக்
கண்ணீர்கள் யாவும் துடைப்பேன் நீ செய்யும் ஜெபங்கள் கேட்டுப்
பெய்வேன் ஆசீர்வாதங்கள், நையாது காத்திடுவேன் – மகனே

5. நித்திய இராஜ்யத்தில், நித்திய ஜீவனோடு,
நித்திய காலம் வாழலாம் – பரிசுத்த உலகமதில் அத்தன் மணவறையில்
நித்தம் சுகித்திடலாம்.– மகனே

1. துக்க பாரத்தால் இளைத்து நொந்து போனாயோ ?
இயேசு உன்னைத் தேற்றிக் கொள்வார், வாராயோ ?

2. அன்பின் ரூபகாரமாக என்ன காண்பித்தார் ?
அவர் பாதம் கை விலாவில் காயம் பார்.

3. அவர் சிரசதின் கிரீடம்  செய்ததெதனால் ?
இரத்தினம் பொன்னாலுமல்ல, முள்ளினால்.

4. கண்டு பிடித்தண்டினாலும்  துன்பம் வருமே
கஷ்டம், துக்கம், கண்ணீர்யாவும் இம்மையே.

5. அவரைப் பின்பற்றினோர்க்கு துன்பம் மாறுமோ ?
சாவின் கூரும் மாறிப்போகும்; போதாதோ ?

6. பாவியேனை ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்பாரோ ?
விண், மண் ஒழிந்தாலும் உன்னைத் தள்ளாரே.

7. போரில் வெற்றி சிறந்தோர்க்கு நற்கதி ஈவார்,
தூதர், தீர்க்கர், தூயர் யாரும் ஆம், என்பார்.

## *பல்லவி*

பாவம் பெருகுதே ! பாரும் பரன் இயேசுவே !
அழியும் மனுக்குலம்அதையும் இரட்சிப்பீரே !

## *சரணங்கள்*

**1.** ஆத்தும இரட்சிப்பிழந்தவர் ஆயிரம் ஆயிரமாம் அன்றாடகம்
இந்த மண்ணடியில் அழிந்து சாகின்றாரே, – பாவம்

**2.** இரட்சிப்பின் நற்செய்தி கேட்பவர் எச்சரிப்பை வெறுத்து
இரட்சகர் இயேசுவை இழந்தோராய் இன்றும் கெட்டழிகின்றார்.
– பாவம்

**3.** தானியேல் போல ஜெபித்திடும் தாசர் பலர் மறைந்தார்
திறப்பின் வாசலில் நிற்கும் சிலர் களைத்துத் தூங்கிப் போனார்.
–பாவம்

**4.** எமது காரியமாகவே யாரை அனுப்பிடுவேன்
என்றவர் அழைக்கும் இன்ப சத்தம் என்னுள்ளம் தொனிக்குதே. – பாவம்

**5.** ஜீவனை வெறுத்துத் தியாகமாய் சேவையும் செய்திடுவேன்
ஜீவனுக் கீடாக ஜனங்களை ஜீவ தேவன் தருவார். – பாவம்

**6.** வெறுங்கையாய் பரலோகத்தில் வந்திடேன் இயேசுநாதா
ஆத்தும ஆதாயம் செய்திடவே ஆசீர் பொழிந்தனுப்பும்– பாவம்

## *பல்லவி*

கல்வாரி சிலுவையிலே கரங்களில் ஆணிகளால்
உன் பாவம் போக்கிடவே – தம் ஜீவன் உனக்களித்தார்.

## *சரணங்கள்*

1. உன் பாவத்தை சுமந்தவர் அவரே கொடும் சிலுவை மீதினிலே
மண்ணோரை மீட்டிடவே – தம் இரத்தத்தை சிந்தினாரே
தம்ஜீவனை கொடும் சிலுவையில் உனக்காகக் கொடுத்தாரே **(2)**

2. வருத்தப்பட்டு பாரம் சுமப்போரே வாருங்கள் என் அண்டையில்
இளைப்பாறுதல் தருவேன் என்கிறார் அரவணைக்கும் தேவனவர்
இன்னும் தாமதம் செய்யவேண்டுமோ உன் அன்பர் இயேசுவைப்
பார்(2)

## பல்லவி

ஜெய ஜெய கிறிஸ்துவின் திருநாமம்,
பாவிகட்கானந்தம் தரும் நாமம்.

## அனுபல்லவி

ஜெய ஜெய மாசற்ற சுவிசேஷம்
சிலுவையின் நிகரற்ற உபதேசம்.

## சரணங்கள்

1. பாவம் தருவது, கொடும் மரணம் சாபம் நிறையும் எரி நரகம்
கிருபையால் தேவன் அருளுவதோ
கிறிஸ்துவின் பாவ விமோசனமே. – ஜெய

2. நரகாக்கினையில் நாம் எரியாமல் வெகு காலம், நாம் திகையாமல்
பரலோகம் நாம் அடைந்திடவே பரசுதன் வந்தார் மானிடனாய். – ஜெய

3. ஆத்ம பசிக்கு நல் விருந்துமவர், பாவ விஷத்துக்கு மருந்துமவர்,
தீரா வினைகளைத் தீர்க்குமவர், ஏராளம் கிருபை அருளுமவர். – ஜெய

4. சிலுவையில் சிந்தின திரு உதிரம் போலினியில்லையோர் பரிகாரம்
நிகரற்றோரவர் திரு நாமம் ஆறுதல் அருளுந் திரு நாமம். – ஜெய

5. இது போலினியார் நேசிக்க! இது போலினியார் சேவிக்க! அனுதினம்
நம்மைக் காத்திடவே, யாருண்டிது போல், வல்லவராய். – ஜெய

## 453

### பல்லவி

இயேசு கிறிஸ்து நாதர் எல்லோருக்கும் ரட்சகர் (2)

### சரணங்கள்

1. மாசில்லாத மெய்த்தேவன் மானிடரூபுடையார்;
இயேசு கிறிஸ்துவென்ற இனிய நாமமுடையார்.– இயேசு

2. வம்பு நிறைந்த இந்த மானிட ஜாதிகள் மேல்
அன்பு நிறைந்த கர்த்தர் அதிக உருக்கமுள்ளோர். – இயேசு

3. பாவத்தில் கோபம் வைப்பார்; பாவிமேல் கோபம் வையார்,
ஆவலாய் நம்பும் பாவிக் கடைக்கலம் ஆக நிற்பார். – இயேசு

4. தன்னுயிர் தன்னை விட்டுச் சருவ லோகத்திலுள்ள
மன்னுயிர்களை மீட்க மரித்தே உயிர்த்த கர்த்தர். – இயேசு

5. அந்தர வானத்திலும் அகிலாண்ட கோடியிலும்
எந்தெந்த லோகத்திலும் இவரிவரே ரட்சகர். – இயேசு



speakarun@gmail.com

# 454

***பல்லவி***

இயேசு நாமம் ஒன்றை நம்புவீர், பூலோகத்தாரே.

***சரணங்கள்***

1. இயேசு நாமம் ஒன்றை நம்பும்; இரட்சண்யத்துக் கிதுவே ஸ்தம்பம்;
பேசும் வேறே நாமமெல்லாம் பேருலகை ரட்சிக்காதே – இயேசு

2. பார்த்திபன் தாவீது குல கோத்திரக் கன்னிமரியாள்,
நேத்திரம் போலே உதித்து நேமியின் ரட்சகனான– இயேசு

3. பூதலத் தஞ்ஞான இருள் போக்கவ மெஞ்ஞான பெருஞ்
ஜோதியாய் விளங்கும் நீதிச் சூரிய னான மகத்வ– – இயேசு

4. பாவகளீடேற மோட்ச பாக்கியம் பெறுவதற்காய்
ஜீவன் விட்டுயிர்த்தெழுந்து சேணுலகுக் கேறிச் சென்ற – இயேசு

5. விண்டலத்தவர்கள் சூழ, வெருண்டலகை பதறி வீழ;
மண்டலத்தைத் தீர்வை செய்ய மாமுகில் மீதேறி வரும் – இயேசு

# 455

## பல்லவி

சமாதானம் ஓதும் ஏசுகிறிஸ்து
இவர் தாம், இவர் தாம், இவர் தாம்.

## சரணங்கள்

1. நம தாதி பிதாவின் திருப் பாலர் இவர்,
அனுகூலர் இவர், மனுவேலர் இவர், – சமா

2. நேய கிருபையின் ஒரு சேயர் இவர்,
பரம ராயர் இவர், நம தாயர் இவர், – சமா

3. ஆதி நரர் செய்த தீதறவே,
அருளானந்தமாய், அடியார் சொந்தமாய், – சமா

4. ஆரணம் பாடி, விண்ணோர்
ஆடவே, அறிஞோர் தேடவே, இடையோர் கூடவே,– சமா

5. மெய்யாகவே மே சையாவுமே
நம்மை நாடினாரே, கிருபை கூறினாரே, – சமா

6. அருளானந்த மோட்ச வழி காட்டினாரே,–
நிலை நாட்டினாரே முடி சூட்டினாரே, – சமா

# 456

***<u>பல்லவி</u>***

பாவத்தின் சாபத்தைத்
தீர்த்தவர் இயேசுவே!
தீர்த்தவர் இயேசுவே!
தீர்த்தவர் இயேசுவே!

***<u>சரணங்கள்</u>***

1. பரலோக தூதர்கள் கீதங்கள் வெறுத்து
வையகந் தனில் இவர் மனிதனாய் திரிந்தார் – பாவ

2. பாவியின் கடனைச் சாவினால் தீர்த்து
தாவி வரும் ஏழைப்பாவியின் பதவி – பாவ

3. முள்முடியை இவர் சூண்டார் தம் சிரசில்
புண்யம் செய் பாதையும் திறந்தோரும் இவரே– பாவ

# 457

1. பாவதோஷம் நீக்கிட இயேசுவின் இரத்தம் தானே;
தீயகுணம் மாற்றிட இயேசுவின் இரத்தம் தானே.

***<u>பல்லவி</u>***

மெய்யாம் ஜீவநதி, பாவம் போக்கும் நதி,
வேறே நதியை அறியேன்; இயேசுவின் இரத்தம் தானே.

2. என்னை சுத்திகரிக்க இயேசுவின் இரத்தம் தானே;
மன்னிப்பு நான் பெற்றிட, இயேசுவின் இரத்தம் தானே. – மெய்

3. வேறே இரட்சிப்பில்லையே இயேசுவின் இரத்தம் தானே;
புண்ணிய கிரியை செல்லாதே இயேசுவின் இரத்தம் தானே.
– மெய்

4. மோட்ச மார்க்கம் இதுவே இயேசுவின் இரத்தம் தானே;
இயேசு சுத்த தீர்த்தமே மீட்பரின் இரத்தம் தானே. – மெய்

## 458

### *பல்லவி*

ஜீவன் ஈந்தாரல்லவோ! மீட்க என்னையோ   தேவ சுதனோ!

### *சரணங்கள்*

**1.** ஆச்சரியமே, கேளும் தோழரே! தேவ தேவனே
தியாகமானோரே,
ஆ! அரியதம் கிருபையால் தான் என்னையே தேடி வந்தவர்.
– ஜீவன்

**2.** கல்வாரியிலே இக்காட்சி பாருமேன், கர்த்தர் இயேசுவே,
தொங்குறாரிதோ!
ஆ! எனது பாவமதை நம் குருசில் சுமந்து வைத்தவர், – ஜீவன்

**3.** தேக முற்றுமே காயமுற்றவர் – தீர்க்கவே கொடும் நோயை
முற்றுமே,
சாபமுதலான பெரும் வாதைகளைத் தாமே தொலைத்தவர்,
– ஜீவன்

**4.** அன்பினாலதோ, தம் மேன்மை வெறுத்தாரே!
அன்னை போலவே அணைத்தீர் என்னையே;
ஆச்சரியமே, புவியிலே காணாதோர் அரும் விநோதமே! – ஜீவன்

**5.** என்ன செய்குவேன், என் இன்ப இயேசுவுக்காய்?
இன்னும் தாழ்த்தியே வைப்பேன் சேவைக்காய்,
எந்நாளும் தம் தயவால் தாங்கியே அரவணைப்பவர். – ஜீவன்

## 459

***பல்லவி***

ஏழை மனுவுருவை எடுத்த இயேசு இராஜன் உன்னண்டை நிற்கிறார்,
ஏற்றுக்கொள், அவரைத் தள்ளாதே.

***சரணங்கள்***

1. கைகளில், கால்களில் ஆணிகள் கடாவ
கடும் முள்முடி பொன் சிரசில் சூடிட, கந்தையும், நிந்தையும்,
வேதனையும் சகித்தார்; சொந்தமான இரத்தம் சிந்தினார் உனக்காய்
கனிவுடன் உன்னை அழைக்கிறாரே. – ஏழை

2. அவர் தலையையும் சாய்க்கவோ ஸ்தலமுமில்லை,
அன்று தாகத்தை தீர்க்கவோ பானமுமில்லை
ஆறுதல் சொல்லவோ அங்கே ஒருவருமில்லை அருமை இரட்சகர்
தொங்குகிறார் தனியே அந்தப்பாடுகள் உன்னை மீட்கவே! – ஏழை

3. அவர் மரணத்தால் சாத்தானின் தலை நசுங்க, அவர் இரத்தத்தால்
பாவக் கறைகள் நீங்க, உந்தன் வியாதியின் வேதனையும் ஒழிய,
நீயும் சாபத்தினின்று விடுதலை அடைய, சிலுவையில் ஜெயித்தார்
யாவையும். – ஏழை

4. மாயை உலகம் அதையும் நம்பாதே மனுமக்கள் மனமும் மாறிப்
போகுமே; நித்திய தேவனை நேசித்தால் இப்போதே
நிச்சயம் சந்தோஷம் பெற்று நீ மகிழ நம்பிக்கையோடே வந்திடுவாய்.
– ஏழை

5. இன்னமும் தாமதம் உனக்கேன் மகனே. இன்ப இயேசுவண்டை
எழுந்து வாராயோ ? இந்த உலகம் தரக்கூடா சமாதானத்தை
இன்று உனக்குத் தரக் காத்து நிற்கிறாரே, அண்ணல் இயேசுன்னை
அழைக்கிறாரே. – ஏழை

460

***பல்லவி***

பாவிக்குப் புகலிடம் இயேசு ரட்சகர் பாரினில் பலியாக மாண்டாரே!

***அனுபல்லவி***

பரிசுத்தரே பாவமானாரே பாரமான சிலுவை சுமந்தவரே – பாவி

***சரணங்கள்***

1. காட்டிக் கொடுத்தான்முப்பது வெள்ளிக் காசுக்காகவே கர்த்தர்
இயேசுவை கொலை செய்யவே கொண்டு போனாரே
கொல்கதா மலைக்கு இயேசுவை – பாவிக்

2. கள்ளர் மத்தியில் ஒரு கள்ளன் போல் குற்றமற்ற கிறிஸ்தேசு
தொங்கினார் பரிகாசமும் பசிதாகமும் படுகாயமும் அடைந்தாரே.
– பாவிக்

3. கைகள் கால்களில் ஆணி பாய்ந்திட கிரீடம் முட்களில் பின்னி சூடிட
இரத்த வெள்ளத்தில் கர்த்தர் தொங்கினார் இதைக் காணும் உள்ளம்
தாங்குமோ. – பாவிக்

4. உலகத்தின் இரட்சகர் இயேசுவே உயிர் கொடுத்தார்
உயிர்த்தெழுந்தார் தம்மை நம்பினால் உன்னைக் கைவிடார்
தளராமல் நம்பி ஓடிவா.– பாவிக்

5. வருத்தப்பட்டு பாரம் சுமப்போரே வாருங்கள் என்னண்டையில்
என்கிறார் இளைப்பாறுதல் தரும் இயேசுவை இன்று தேடி நாடி நம்பிவா.
–பாவிக்

சிலுவையில் மாண்ட என் இயேசுபோல் உண்டோ
அன்பின் தெய்வமான நேசர்க்கு ஈடுண்டோ (2)

1. பாவியை இரட்சிக்க இப்பாரினில் வந்தார்
சாபமதைப் போக்க மாபாடும் அடைந்தார் அழகும் இல்லாது,
சௌந்தரியம் இழந்தார் பாடுகளை ஏற்று நம் துக்கம்
சுமந்தார் – சிலு

2. பாவங்களை நீக்க வாரால் அடிபட்டார்
வேதனையும் தீர்க்க விலாவில் குத்துண்டார்
வேந்தராம் என் இயேசு மா தியாகியுமானார்
மாந்தர் என்றும் வாழ்ந்திட தம் ஜீவனும் ஈந்தார்– சிலு

3. சாவதனை வென்று மகிமையடைந்தார்
காயம் தனைக்காண்பித்து உன்னை அழைக்கிறார்
பாவியே இன்று உந்தன் உள்ளம் உருகாதோ
பாவம் விட்டு ஆண்டவர் இடம் நீ வாராயோ – சிலு

ஓடி வந்திடு உன் நேசர் இயேசுவின் பக்கம்
உள்ளத்தை அவர் கையில் தந்து.

1. உனது மீட்பர் அவர்தானே உனது பாவம் போக்கிடுவார்
இன்றவரின் மந்தையிலோர் ஆடாக சேர்ந்திட – ஓடி

2. நேசர் வருகை நெருங்குதே வாக்குகள் நிறைவேறுதே
வாசற்படி வந்து நிற்கும் இயேசுவிடம் சேர – ஓடி

3. அன்பாய் உன்னை அழைக்கிறார் அணைக்க கரங்கள் விரிக்கிறார்
தாமதிக்க நேரமில்லை தயங்காமல் விரைந்து – ஓடி



# 463

1. இயேசு மீட்பர் உந்தன் நெஞ்சில் வாசம் பண்ண விடாயோ ?
உந்தன் பாரம் சுமந்தோரை இன்று ஏற்றுக் கொள்வாயோ ?

***<u>பல்லவி</u>***

இயேசு மகா இராஜரிதோ வாசலண்டை நிற்கிறார்,
பாவிநீ இவ்வன்பை எண்ணி வாசலைத் திறக்காயோ ?

2. பாவம் லோகம் ஆசா பாசம் யாவும் இடம் பெற்றதோ ?
நீசச் சிலுவையில் மாண்ட நேசர்க்கிடமில்லையோ ? – இயேசு

3. இன்னுமே நீ தாமதித்தால் பின்பு மோசம் வருமே,
இப்போதே இரட்சண்ய காலம் அப்பால் பிந்திப் போகுமே.
– இயேசு

4. கூவி நிற்கும் மீட்பர் சத்தம் பாவி கேட்டுத் திறப்பாய்,
உந்தன் ஜீவன் பெலன் யாவும் இன்றே தத்தம் செய்குவாய்.
– இயேசு

5. நாளையென்று சொல்லி நின்றால் நஷ்டமென்று மடைவாய்,
வேளை இதை வீணாய் விட்டால் வெகு கஷ்டப்படுவாய்.
– இயேசு

## 464

### ***பல்லவி***

நெஞ்சத்திலே தூய்மையுண்டோ இயேசு வருகின்றார்
நொறுங்குண்ட நெஞ்சத்தையே இயேசு அழைக்கிறார்

### ***சரணங்கள்***

1. வருந்தி சுமக்கும் பாரம் – உன்னை
கொடிய இருளில் சேர்க்கும் (2)
செய்த பாவம் இனி போதும் –அவர்
பாதம் வந்து சேரும் (2)– நெஞ்

2. குருதி சிந்தும் நெஞ்சம் – உன்னை
கூர்ந்து நோக்கும் கண்கள் (2)
செய்த பாவம் இனி போதும்
அங்கே பாரும் செந்நீர் வெள்ளம் (2) நெஞ்

# 465

## *பல்லவி*

உன்னத தேவன் உன்னை அழைக்கிறார்
நம்பியே வந்திடுவாய்
சிலுவை சுமந்தே உனக்காய் அவர் மரித்தாரே

## *சரணங்கள்*

1. பாவத்தில் அழியாதே தேவனை மறவாதே
இருதயத்தைத் தட்டுகிறார் இன்றதைத் திறந்தளிப்பாய் – உன்

2. இன்று உன் ஜீவன் போனால் எங்கு நீ சென்றிடுவாய்
இந்த வேளை சிந்தனை செய் இயேசுன்னை அழைக்கிறாரே – உன்

3. நரகத்தின் பாதையிலும் மரணத்தின் வழிகளிலும்
ஊல்லாசமாய் நடப்பது ஏன் உண்மையாய் அழிந்திடுவாய் – உன்

4. தம்மிடம் வருபவரை தள்ளிடவே மாட்டார்
அன்புகரம் விரித்தவராய் ஆண்டவர் அழைக்கிறாரே – உன்

**_பல்லவி_**

வா நண்பா இயேசுவண்டை வா (2)
வானவர் இயேசு ஞானமாய் உலகில்
தானம் அளித்தாரே தம் ஜீவனை தானம் அளித்தாரே.

**_சரணங்கள்_**

1. இந்த லோகம் அழிந்திடுமே வெந்து சாம்பலாகிடுமே
உன் சொந்த ஜீவன் தப்பவா இந்த நேரமே ஓடிவா. – வா

2. உன் வீடும் நிலம் பொருளும் உற்றார் உறவினரும்
உன் ஜீவன் போகும் நாளிலே உன்னோடு வருவதில்லை.–வா

3. படிப்பும் பட்டம் பதவியும் பணம் பாக்கியம் பொருளும்
பரலோகம் கொண்டு போகாதே பாவத்தோடே மரித்தால். –வா

4. இதுவே உன் இரட்சண்ய நாள் இதுவே அனுக்கிரக நாள்
தருணம் நழுவ விடாதே மரணம் நெருங்கி வருதே.–வா

5. இயேசுவை காண ஓடிவா அவரோடு தங்க ஓடிவா
இயேசுவின் இரத்தம் நல்லது உன் பாவம் போக்க வல்லது –வா

**467**

***பல்லவி***

வருவாய் தருணமிதுவே அழைக்கிறாரே
வல்ல ஆண்டவர் இயேசு உன்னை!

***சரணங்கள்***

1. வாழ்நாளெல்லாம் வீண் நாளாய்,
வருத்தத்தோடே கழிப்பது ஏன் ? வந்தவர் பாதம் சரணடைந்தால்
வாழ்வித்து உன்னைச் சேர்த்துக் கொள்வார். – வருவாய்

2. கட்டின வீடும், நிலம் பொருளும், கண்டிடும் உற்றார் உறவினரும்
கூடு விட்டு உன் ஆவி போனால் கூட உன்னோடு
வருவதில்லை.– வருவாய்

3. அழகும் மாயை, நிலைத்திடாதே அதை நம்பாதே, மயக்கிடுமே;
மரணம் ஓர் நாள் சந்திக்குமே மறவாதே உன் ஆண்டவரை. – வருவாய்

4. வானத்தின் கீழே, பூமி மேலே வானவர் இயேசு நாமமல்லால்
இரட்சிப்படைய வழி இல்லையே இரட்சகர் இயேசு வழி அவரே.
– வருவாய்

5. தீராத பாவ, ஆக்கினையும், மாறாத உந்தன் பெலவீனமும்,
கோரக் குருசில் சுமந்து தீர்த்தார் காயங்களால் நீ குணமடைய
– வருவாய்

6. சத்திய வாக்கை நம்பியே வா! நித்திய ஜீவன் உனக்களிப்பார்,
உன் பேரை ஜீவ புஸ்தகத்தில் உண்மையாய் இன்று
எழுதிடுவார். – வருவாய்

## ***பல்லவி***

வாருமே இயேசு பாதம் சேருமே பாரில் பாவம் தீருமே.

## ***அனுபல்லவி***

வரும் யாரையும் தள்ளேனென்று
வாக்கு அன்பாய்க் கூறினாரே. – வாருமே

## ***சரணங்கள்***

**1.** பாவமே அது பொல்லா விஷமே அது உன்னை நாசமாய்
போகச் செய்வதும் தீ நரகினில் வேகச் செய்யுமே எந்தக்
காலமும். – வாருமே

**2.** மரணமே நினையா நேரமே பிரிவினை செய்யுமே,
தருணம் போக்காதே கிருபை தாங்குது
இது சமயம் சேரு ஜல்தியில். – வாருமே

1. “வா! பாவி! இளைப்பாற வா! என் திவ்ய மார்பிலே
நீ சுகமாகச் சாய்ந்திரு” என்கிறார் கிறிஸ்தேசுவே;
இளைத்துப்போன நீசனாய் வந்தாறித் தேறினேன்;
என் பாரம் நீக்கி இயேசுவால் சந்தோஷமாயினேன்.

2. “வா பாவி! தாகந் தீர்க்க வா! மெய்ப்பானம் இதுவே;
நான் ஜீவத் தண்ணீர் தருவேன்” என்றார் நல் மீட்பரே
அவ்வாறு ஜீவ ஊற்றிலே நான் பானம் பண்ணினேன்;
என் தாகந்தீர பெலனும் பேர் வாழ்வும் அடைந்தேன்.

3. “வா! பாவி! இருள் நீங்க வா! என் ஒளி வீசுதே;
பிரகாசிப்பித்து இரட்சிப்பேன்” என்றார் மா நேசரே;
மெய்ஞான அருணோதயம் அதால் கண்டடைந்தேன்;
என்றைக்கும் சுகஜீவியாய் நான் வாழ்ந்து கொள்ளுவேன்

1. பாவி உனக்கு இயேசுவால் விமோசனமுண்டாம்,
மெய் தேவ வாக்கை நம்பினால் மாபாரம் நீங்குமாம்.

***பல்லவி***

நம்பி வந்தால், நம்பி வந்தால் இயேசு வண்டையில்,
இரட்சிப்பாரே! இரட்சிப்பாரே! இந்த நேரத்தில்.

2. மாசற்ற இரத்தம் சிந்தலால் பேர் வாழ்வுண்டாக்கினார்
தூயதான சென்னீர் ஸ்நானத்தால் சுத்தாங்கம் பண்ணுவார்.
– நம்பி

3. பேரின்ப வீட்டில் சேரவும் கைமாறில்லாமலே
ஆனந்தம் பெற்று வாழவும் மெய் வழி இயேசுவே. – நம்பி

4. சந்தோஷக் கூட்டம் சேருவாய் பிரயாணம் செய்யவும்
மேலான மோட்சம் அடைவாய் ஆனந்த கிரீடமும். – நம்பி

1. இயேசுவினண்டை வந்திடுவாய் தாமதமின்றி தீவிரமாய்,
அன்போடு நின்று மாஊக்கமாய் வா, என்றழைக்கிறார்.

***<u>பல்லவி</u>***

பாவமின்றி சுகித்திருப்போம் மா சந்தோஷமாக சந்திப்போம்
நல் மீட்பரண்டை சேர்ந்திருப்போம், பேரின்ப தேசத்தில்.

2. “பாலரே! வாரும் தாராளமாய்” என்றுரைத்தாரே மா தயவாய்;
நேசரை நம்பி மகிழ்ச்சியாய் தாமதமின்றியே வா!

–பாவ

3. நேசரின் சத்தம் கேட்டறிவோம், நம்பிக்கையோடு
வந்தடைவோம் மீட்பரின் அன்பைக் கண்டுவப்போம்,
இன்னும் அழைக்கிறார். – பாவ

1. சுவிசேஷ செய்தியைக் கேட்டாய் சுதன் இயேசு இரட்சகரால்,
அழைப்புக்குக் கீழ்ப்படிவாயா ? அவரைத் திரும்பிப் பார்ப்பாயா ?

***பல்லவி***

நம்பி வா நீ, நம்பி வா நீ, தம்பிரான் இயேசுவைப் பார் நீ
நம்பி வாவே, நம்பி வாவே, நம்பி இயேசு இராஜனைப் பார் நீ.

2. வெய்யில் காலங்கள் அநேகம் கடந்தாய்,
மெய்யாக அறுப்புகளைக் கண்டாய்,
கோடைக்காலம் மழையும் கண்டாய்
இன்னும் பாவத்திலிருக்கிறாய். – நம்பி

3. உன் முடிவைக் காண நிற்கிறார் தடையின்றியே தீர்மானி,
ஆவி போராடும் பொழுதே ஒப்புவித்தே, சிலுவை பார்! – நம்பி

4. தகுதியா என்றே எண்ணாதே, தகாத உணர்வு கொள்ளாதே
உணர்ச்சி அல்ல, விசுவாசமே ஆவியின் முத்திரை தருவதே.
– நம்பி

5. சித்தத்தை தேவ தத்தஞ் செய்யவே
பிராயச் சித்த இரத்தத்தை நம்பு, அறையுண்ட இயேசுவைப் பார்
மாறாத வசனத்தைச் சேர்.– நம்பி

1. பாவி! உன் மீட்பர் கரிசனையாய் அழைக்கிறார்!
அழைக்கிறார்! அலைந்து திரிந்து ஏன் கெடுவாய்?
இயேசுவின் இரட்சிப்பைப் பார்.

***பல்லவி***

அழைக்கிறார்! அழைக்கிறார்! விரும்பி வருந்தி உந்தனை
அழைக்கிறார்!

2. இளைத்துத் தவித்தும் போனவனை அழைக்கிறார்!
அழைக்கிறார்! நம்பிக்கையோடவர் சரணத்தை சேருவாய்,
தள்ளமாட்டார். – அழை

3. தாமதமின்றி இந்நேரத்தினில், வந்திடுவாய்! வந்திடுவாய்!
பாவமற உன் நெஞ்சத்தினில் வாழ்வையும் பெற்றிடுவாய்.
– அழை

4. விரும்பி வருந்தி அழைக்கிறார் ஓடியே வா! ஓடியே வா!
வந்திடுவோரைச் சந்தோஷிப்பிப்பார் உடனே! உடனே! வா.
– அழை

speakarun@gmail.com

1. பாவியே ஜீவ ஊற்றண்டை வா! மேவியே ஜீவனடைவாய்,
கூவியே இயேசு கூப்பிடுகிறார் தாவியே ஓடி நீ வா.

***சரணங்கள்***

தாமதமே செய்திடாதே, தருணமே இதை விடாதே,
தற்பரன் இயேசு உன்னை இரட்சிப்பார் – அவர்
பொற்பாதம் ஓடியே வா.

2. உள்ள நிலைமையுட னோடிவா கள்ள வுலகை விட்டு,
தள்ள மாட்டாரே எப்பாவியையும் வல்ல இயேசு நாதரே. – தாமதமே

3. வந்து நீ சொஸ்த மடைந்தே கொள் கொடுங்காயத் தழும்பால்
நொந்தவன் சொந்தமாய் வரும்போது
ஈந்தவர் அனுப்புவார்.– தாமதமே

4. பாவி யொருவன் திரும்பும்போது மேவிகள் அவர் முன்னால்
காவியங்கள் கொண்ட பாடல்களை கூவியே பாடிடுவார். – தாமதமே

5. வாக்குத்தத்தங்களைச் செய்துள்ளவர் வாக்குத் தவறாதவர்
போக்குச் சொல்லுகிற வர்களையே தாக்குமிடம் வைத்துள்ளார்.
– தாமதமே

6. உண்மையாய் இயேசுவை ஏற்பவரை வெண்மையாக மாற்றுவார்,
நன்மையே நாடெங்கும் செய்திட்டவர் உன்னையு மழைக்கிறார்.
– தாமதமே

அழைக்கிறார் அழைக்கிறார் அன்பாய் இன்றே உன்னை
கல்லும் கரையும் கல்வாரியண்டை கர்த்தர் அழைக்கிறார்

***சரணங்கள்***

1. கேட்டின் மகன் கெட்டழிந்தான் கெட்ட குமாரனைப் பார்
பாவத்தின் சம்பளம் மரணமே பாவத்தில் மாளாதே. – அழை

2. உந்தன் நீதி கந்தையாகும் உன்னில் நன்மை ஒன்றில்லை
பாவம் செய்தே மகிமை இழந்தாய் பாவியை நேசித்தார்.
–அழை

3. பாவங்களை மறைப்பவன்பாரில் வாழ்வை அடையான்
சன்மார்க்கன் துன்மார்க்கன் இருவரும் சங்காரம் அடைவார்.
–அழை

4. நானே வழி சத்தியமும் நித்திய ஜீவன் என்றார்
இயேசுவை நம்பி நீ ஜெபிப்பதால் இரட்சண்யம் அடைவாய்.
–அழை

5. காலங்களும் கடந்திடும் வால வயதும் மாறும்
தேவனைச் சந்திக்கும் வேளையிலே தேடி நீ வாராயோ. –அழை

1. பாவத்தின் பலன் நரகம் ஓ பாவி நடுங்கிடாயோ ?
காண்பதெல்லாம் அழியும் காணாததல்லோ நித்தியம் !

<u>*பல்லவி*</u>

இயேசு ராஜா வருவார் இன்னும் கொஞ்சங் காலந்தான்
மோட்சலோகம் சேர்ந்திடுவோம்.

2. உலக இன்பம் நம்பாதே அதின் இச்சை யாவும் ஒழியும் !
உன் ஜீவன் போகும் நாளிலே ஓர் காசும் கூட வாராதே !—இயேசு

3. உன் காலமெல்லாம் போகுதே உலக மாய்கையிலே;
ஓ தேவ கோபம் வருமுன் உன் மீட்பரண்டை வாராயோ ? —இயேசு

4. தேவன்பின் வெள்ளம் ஓடுதே கல்வாரி மலை தனிலே;
உன் பாவம் யாவும் நீங்கிப்போம் அதில் ஸ்நானம் செய்வதாலே.
—இயேசு

5. மாபாவியான என்னையும் என் நேசர் ஏற்றுக் கொண்டாரே;
ஓ பாவி நீயும் ஓடிவா, தேவாசீர்வாதம் பெறுவாய் ! —இயேசு

## *பல்லவி*

வருவீர், வருவீர், இயேசுவினண்டை சீக்கிரமாய வருவீர்.

## *அனுபல்லவி*

இலவசமாக நித்திய ஜீவனை அருளுவேன் என்று, சிந்தினார்
உதிரம். – வருவீர்

## *சரணங்கள்*

1. வருவீர், வருவீர் இரட்சிப்பின் வழிதனில் மகிழ்ந்து நடந்திடவே!
பாவ, நரக வழிதனை விட்டு, ஜீவ, மோட்ச வழிதனில் நடந்திட – வருவீர்

2. உங்கள் பாவங்கள் சிவேரென்றிருப்பினும், உறை மழை
வெண்மையாகும்; உங்கள் பாவங்கள் இரத்தாம் பரம் போல்
சிவப்பாய் இருப்பினும், பஞ்சைப்போலாகும் – வருவீர்

3. வருத்தப்பட்டு பாரம் சுமப்போர் யாவரும் வாருங்கள் என்கிறார்;
நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் என்கிறார் கிறிஸ்து
இயேசு. – வருவீர்

4. வீண் கிரியை வேண்டாம், பலி வேண்டாமினி, இயேசுவை
நோக்கிப்பார்! கல்வாரி சிலுவையில் உனக்கும், எனக்கும்.
பலியாக வந்த இயேசுவை நோக்கிப்பார் – வருவீர்

5. பாடுபட்டு சிலுவையில் மரித்து உனக்காய் உயிர்த்தெழுந்தார்
உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவாட்டுக் குட்டி இவரே
நிச்சயம் – வருவீர்

6. தாமதம் வேண்டாம், சீக்கிரம் வருவீர் இன்றே இரட்சண்ய நாள்:
இரட்சகர் பாதம் பணிந்து நீ இன்றே நித்திய ஜீவனைப் பெற்றுக்
கொள்வாயே. – வருவீர்

7. வா, வா எனவே ஆவி மணவாட்டி வாவென் றழைக்கிறார்கள்,
விருப்பமுள்ளவன் ஜீவ தண்ணீரை இலவசமாய் வாங்கிக்
கொள்ளக்கடவன். – வருவீர்

வா, பாவி, மலைத்து நில்லாதே, வா.

***<u>சரணங்கள்</u>***

1. என்னிடத்தில் ஒரு நன்மையுமில்லையென் றெண்ணித் திகையாதே; உன்னிடத்தில் ஒன்றுமில்லை, அறிவேனே, உள்ளபடி வாவேன். – வா

2. உந்தனுக்காகவே நானேயடி பட்டேன் உன் பாவத்தைச் சுமந்தேன்; சிந்திய என் திரு இரத்தத்தால் உன் பாவம் தீர்த்து விட்டேன், பாவி, வா – வா

3. கொடிய பாவத்தழலில் விழுந்து குன்றிப் போனாயோ ?
ஒடுங்கி வருந்தும் பாவிகள் தஞ்சம் நான்,
ஒன்றுக்கும் அஞ்சாதே. வா –வா

4. விலக யாதொரு கதியில்லாதவன் உலகை நம்பலாமோ ?
சிலுவை பாவிகளடைக்கலமல்லோ ? சீக்கிரம் ஓடி வாவேன். – வா

5. என்னிடத்தில் வரும் பாவியெவரையும் இகழ்ந்து தள்ளேனே;
மன்னிய மேலோக வாழ்வை அருள்வேனே,
வாராயோ, பாவி ? – வா

## *பல்லவி*

காணாத ஆட்டின் பின்னே – கர்த்தர்
கண்ணீருடன் அலைந்தார் அன்போடு உன்னை
அழைக்கின்றாரே இன்றே திரும்பி நீ வா.

## *சரணங்கள்*

1. முள்ளும் புதரும் காடும் மலையும் உள்ளம் உடைந்தேசு
தேடுகின்றார் சிற்றின்ப சேற்றினில் சிக்கினதால்
சாத்தான் வலையில் நீ சிறையாகினாய் – காணாத

2. என்னென்ன துன்பம் தொல்லைகள் வந்தும் ஏசுவின் பாதை நீ
விட்டோடாதே நீதி நிறைந்த தம் கரங்களை நீட்டி உன்னைத்
தாங்கி பயம் நீக்குவார் – காணாத

3. துன்மார்க்கரெல்லாம் சன்மார்க்கரோடே தேவ
கோபாக்கினையால் மாள்வாரே கர்த்தரின் பந்தியில் பங்கடைய
கண்ணீருடன் நீயும் அருள் வேண்டுவாய் – காணாத

4. எத்தனை நேரம் உன்னை அழைத்தார்
இத்தனை காலம் நீ தள்ளலாமோ ? கர்த்தரின் சித்தம் உன்
வேளையிதே கண்டு உணர்ந்து விரைந்தே
நீ வா – காணாத

***<u>பல்லவி</u>***

உன்னைக் கண்டழைக்கும் ஏசுவை
மறந்து நீ எங்கு போகிறாய் ?

***<u>அனுபல்லவி</u>***

காணாமல் போன ஆட்டைத் தேடிடும் மேய்ப்பனைப்போல
கருத்தாய் இன்றுன்னைத் தேடி அவர் அழைக்கிறார்.

***<u>சரணங்கள்</u>***

1. கண்டால் சிலுவையில் தொங்கும் குருதி வடித்தவர் காட்சி
கல்லான உள்ளங்கள் உடையும் கண்ணீரும் கண்களில் வடியும்
கனிவாய் உன்னை அழைப்பவரை நோக்கிப்பார் – உன்னை

2. பாழான புவி இன்பம் கண்டு பயந்தோடி நீ அழியாதே
பூலோக சுகங்கள் மாயை பூவில் வாழும் வாழ்வெல்லாம் துன்பம்
பரலோக இன்பம் ஏசுவை நீ நாடுவாய் – உன்னை

## *பல்லவி*

இயேசு உன்னை அழைக்கிறார் இன்பத் தொனி பின் வாராயோ
இன்னல் தீர்க்க வல்லவரை இன்று நீ நம்பிடுவாய்.

## *சரணங்கள்*

1. வருந்தி பாரங்கள் சுமந்த நீ விரும்பி சிலுவை நோக்கியே பார்
அருமை ஆண்டவர் உனக்காக சிறுமை அடைந்து உயில் தந்தாரே.
– இயேசு

2. உன் கையில் நீ செய்த பாவத்திற்காய் தம் கையில் ஆணிகள் பாய்ந்திடவே முள்முடி சூடினார் உன் வினைக்காய் மன்னிப்பு இரட்சண்யம் உனக்களிப்பார். – இயேசு

3. மனந்திரும்பி நீ மாறினாலோ மறு பிறப்பை நீ கண்டடைவாய் இயேசுவை உன் ஆத்ம இரட்சகராய் ஏற்றுக்கொள் கிடைக்கும் சமாதானம். – இயேசு

4. வல்லமை உண்டவர் இரத்தத்திலே மரணத்தின் வேரும் கூரும் முறியும் கர்த்தரின் காயங்கள் தழும்புகள் சுத்தமாய் உன்னையும் குணமாக்கிவிடும். – இயேசு

5. சத்திய பரனே அழைக்கிறார் நித்திய ஜீவனை ஈந்திடுவார்
இயேசுவாலாகாத தொன்றுமில்லை
இப்போதும் உன் தேவை வேண்டிக்கொள்வாய். – இயேசு

அழைக்கிறார் அழைக்கிறார் இதோ நீயும் வா உந்தன் நேசர் ஆவலாய்
அழைக்கிறார் இதோ–நீயும்

***<u>சரணங்கள்</u>***

1. பாவத்தை ஏற்றவர் பலியாய் மாண்டவர்
கல்வாரியின் மேட்டினில் கண் கொள்ளாத காட்சியே
கண்டிடும் வேண்டிடும் பாவப்பாரம் நீங்கிடும் – அழை

2. நோயையும் ஏற்றவர் பேயையும் வென்றவர்
நீதி பரன் உன் நோயை நிச்சயமாய்த் தீர்த்தாரே நோயுற்ற உன்னையே
நேயமாய் அழைக்கிறார் – அழை

3. துன்பம் சகித்தவர் துயரடைந்தவர் இன்னலுற்ற உன்னையே
அண்ணல் இயேசழைக்கிறார் துன்புறும் நெஞ்சமே
துரிதமாய் நீ வாராயோ – அழை

4. அந்தக் கேடடைந்தார் அழகற்றுத் தொங்கினார் சொந்தமாக சேர்த்திட
இந்தப் பாடடைந்தாரே நிந்திக்கும் உன்னையும்
சந்திப்பார் நீ வாராயோ – அழை

5. கல்லறை திறக்க காவலர் நடுங்க கஸ்திகளடைந்தாரே
கட்டுகளறுத்தாரே உயிர்த்தார் ஜெயித்தார், உண்டு மீட்புனக்குமே.
– அழை

இயேசுவை ஏற்றுக் கொள்வாய் கிறிஸ்தேசுவை ஏற்றுக்
கொள்வாய் உன் இருதயக் கதவை நீ திறந்தால்
உன் உள்ளத்திலே வருவார்.

***<u>சரணங்கள்</u>***

**1.** இரக்கத்தில் ஐசுவரிய முள்ளவர்–மன உருக்கத்தோடு உன்னை
மீட்டுக் கொள்வார் பயங்கரமான பாவத்திலிருந்து விடுவிக்க உன்னைத்
தேடி வந்தார் – இயேசு

**2.** உன் அக்கிரமத்தை எல்லாம் மன்னிப்பார் உன் நோய்களெல்லாம்
குணமாக்க வந்தார் கிருபையினாலும் இரக்கங்களாலும்
முடிசூட்டி உன்னை உயர்த்திடுவார் – இயேசு

**3.** பாவமாம் பாரத்தைச் சுமந்திடவே உன் ரோகங்கள் யாவையும்
நீக்கிடவே வாரினால் அடித்த வேதனை பொறுத்தார்,
சோதனை யாவையும் அவர் ஜெயித்தார் –இயேசு

**4.** கல்வாரி சிலுவையில் உயர்ந்திடவே இரத்தம் பீறிட்டெழுந்து
ஓடிடவே கால்களில் ஆணி, கரங்களில் ஆணி
முள்முடி சிரசினில் தரித்திடவே –இயேசு

இயேசு அழைக்கிறார் இயேசு அழைக்கிறார்
ஆவலாய் உன்னைத் தம் கரங்கள் நீட்டியே
இயேசு அழைக்கிறார்.

1. எத்துன்ப நேரத்திலும் ஆறுதல் உனக்களிப்பார்
என்றுணர்ந்து நீயும் இயேசுவை நம்பினால்
எல்லையில்லா இன்பம் பெற்றிடுவாய் – இயேசு

2. கண்ணீரெல்லாம் துடைப்பார் கண்மணி போல் காப்பார்
கார்மேகம் போன்ற கஷ்டங்கள் வந்தாலும் கருத்துடன் நம்மைக்
காத்திடுவார் – இயேசு

3. சோர்வடையும் நேரத்தில் பெலன் அளிப்பவராம்
யாராய் இருந்தாலும் பேதங்கள் இன்றியே
தாமதமின்றி வந்திடுவாய் – இயேசு

## 485

***பல்லவி***

ஆணிகள் பாய்ந்த கரங்களை விரித்தே
ஆவலாய் இயேசுன்னைஅழைக்கிறாரே

***சரணங்கள்***

1. பார் திருமேனி வாரடியேற்றவர் பாரச் சிலுவைதனைச்
சுமந்து சென்றனரே பாவமும் சாபமும் சுமந்தாரே
உனக்காய்ப் பயமின்றி வந்திடுவாய். –ஆணி

2. மயக்கிடுமே இன்னும் மாயையின் இன்பம் நயத்தாலே உன்னை
நாசமாக்கிடுமே உணர்ந்திதையுடனே உன்னதரண்டை
சரண் புகுவாய் இத்தருணம். –ஆணி

3. கிருபையின் வாசல் அடைபடு முன்னே மரணத்தின் சாயலில்
இணைந்திடுவாயே உருவாக்கியே புது சிருஷ்டியாய் வளரக்
கிருபையும் அளித்திடுவார். –ஆணி

4. பரிசுத்த ஆவியால் பரமனின் அன்பினைப் பகிர்ந்திடுவாருந்தன்
இருதயந்தனிலே மறுரூப நாளின் அச்சார மதுவே மகிமையும்
அடைந்திடுவாய். –ஆணி

5. இயேசுவல்லாது இரட்சிப்புத் தருவோர் இரட்சகர் வேறு
இகமதி லுண்டோ அவர் வழி சத்தியம் ஜீவனுமாமே.
அவரேயுன் ஆண்டவரே –ஆணி

அழைக்கிறார்..... அன்பு உள்ளம் கொண்ட அண்ணல் இயேசு
ஆவலோடு ஐங்காயங்கள் காட்டி (2) அழைக்கிறார்.

1. கள்ள உள்ளம் கொண்ட மானிடரை – இயேசு
கைவேலையில்லாத வீட்டில் சேர்க்க
முள்முடியும் சூண்டார் மூங்கிலால் அடிபட்டார்
முன்னும் பின்னுமாகவே தள்ளுண்டார். – அழை

2. அந்தரங்கமான காரியங்களை – தேவன்
நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார்
அதற்கேற்ற பலனை அடைந்தே நீ தீருவாய்
அவரிடம் பட்சபாத மில்லையே. – அழை

3. பாவத்தோடு பாரில் நீ மரித்தால்–அந்தோ
பாதாளத்தில் வெந்தழிந்து போகுவாய்
பாவங்களை மன்னித்து பரலோகம் சேர்த்திடும்
பாசமுள்ள இயேசுவண்டை ஓடிவா! – அழை

4. இன்று காணும் வானம் பூமி யாவும்–இயேசு
வரும்போது வெந்தழிந்து போகுமே
புதிய வானம் தோன்றும் புதிய பூமி காணும்
பூரிப்பாக இயேசுவண்டை ஓடிவா. – அழை

உலக முன் சதமென்று எண்ணியிராதே,
பலவித பாதாள வலையிற் சிக்காதே உலக முன் சதமல்ல.

***சரணங்கள்***

1. மாதா, பிதா, மற்றுஞ் செல்வ மிருந்தாலும்
மரணம் வந்து உந்தன் வாழ்வைக் குலைக்கும். – உலக

2. சாவி னகோர காட்சி நெருங்கையில்
பாவி! நான் என் செய்வேனென்று திகைப்பாய். – உலக

3. நித்திய வாதைக்கு இரையாகி விடுமுன்
சத்தியர் பாதத்தைப் பாவி நீ தேடு. – உலக

4. பாவ விமோசன மிப்போதே பெறுவாய்
தாவி யுன் மீட்பரின் பாதத்தைத் தேடு– உலக

## பல்லவி

குணப்பட இதுவே தருணமய்யா
கோபாக்கினை நாள் கொடிதாமே.

1. க்ஷணத்தில் இவ்வுலகமும், அதிலுள்ள பொருள்களும்
தகிக்கப்படுமே, படுமே, படுமே. – குண

2. இன்றைக் கிருக்குமுயிர் நாளைக்கிருக்குமோ யென்
றெண்ணியே மனங் கசந்து, காத்து – குண

3. ஆஸ்தி, கல்வி, உத்தியோகம் அதிகரித்தால் அகந்தை
ஆகி யழிம்பு செய்யாதே, செய்யாதே. – குண

4. ஆவியுன் கூடுவிட்டேகுமுன் தேவனை
அறிந்து வணங்கு மனமே, மனமே. – குண

5. கனி கொடாத மரங்களை விழுத்துங் கோடரி ஐயன்
கரத்திலிருக்குதையையோ, ஐயையோ! – குண

# 489

***பல்லவி***

கால மாதாயப் படுத்து உனது ஜீவன்
கடலின் அலையில் துரும்பு: சிநேகிதா!

***அனுபல்லவி***

பால வயது மங்கைப் பருவம் நடு வயது
சாலச் சிதைக்கு மந்தச் சங்காரன் வருமுன்னே – கால

1. இந்த வருட மெவர்கள் பிழைத்திடுவர்
எவர்கள் மரித்திடுவார்கள்; தொந்தமாம் நரைதிரையோ ? –துளிரோ எனச்
சொல்லும் செயல் எனக்கில்லை; அந்தந்த வருடம் அநேகர் மடிந்தனர்கள்
இந்தச் சத்திய மொன்றே யெனக்குத் தெரியும் அப்பா. – கால

2. குற்றவாளியைப்போல இவ்வருடத்தில் குறித்த தினம் ஒரு நேரம்
சற்றே தாமதமுமின்றி –உந்தன் முடிவு சடுதியாயிருக்கு மென்றால்
அற்றே நாள் வருவதற் காயத்தம் பண்ணினாயோ ? சிற்றின்பத்தில் மகிழ்ந்து
ஜீவனைப் போக்கிடாதே.– கால

3. ஜீவன் முடிந்த பிறகு– மனந்திரும்பச் செயலிருக்கு மென்றெண்ணாதே;
ஆவென்று திறந்திருக்கும் – அசலக் குழி அப்புறம் திறவாதே:
யாவரையும் எழுப்பும் எக்காள சத்த மொன்றே
நல்லார் பொல்லாரெவரும் நியாயத் தீர்ப்புக்கெழுப்பும். – கால

4. இப்போதே இரக்ஷணிய நாள் – இது தவறில் எப்போதுங் கிடையாது;
அப்புறம் கடந்த வெள்ளம் – அணுகிவர அழுதும் திரும்பிடாது;
தப்பாது இயேசு பதம் தாழ்ந்து சரண்புகுந்தால்
ஒப்பற்ற மோட்ச வாழ்வு உனக்குக் கிடைக்குமப்பா. – கால

5. செங்குத்து மலைமேலே – நடக்கிறவன் சிரித்து விளையாடுவானோ ?
சிந்தை மயங்கியேனோ – உந்தன் காலத்தை
ஜெபமின்றிப் போக்குகின்றாய் சங்க வானவரோடு சங்கீத ராகம் பாடி
சிங்காசனத்திலிருக்கும் இயேசுவுடன் வாழவென்றால். – கால

உலக முழுவதையுமே உனக்காதாயப் படுத்தினாலும்
உந்தன் ஜீவனை நீ நஷ்டப்படுத்தினால் உலகத்தினாலே
லாபமென்ன ? (2) லாபமென்ன ? லாபமென்ன ?
உலகத்தினாலே லாபமென்ன ? (2)

***சரணங்கள்***

**1.** உலக ஆசாபாசங்களே நரக வழி நடத்துமே
அலகை வென்ற ஆண்டவர் ஏசுவில் அழியாத ஜீவனை
அடைந்திடாயோ – உலக

**2.** நித்ய ஜீவனை நீ பெற்றிட சத்தியம் வழி ஜீவனுமிவர்
சுத்த இதயம் சிருஷ்டிக்குங்கரம்
இப்போ நீட்டி அழைப்பதால் வந்திடாயோ – உலக

**3.** ஜீவனின் முடிவில்லாதவர் ஜீவனோடுயிர்த் தெழுந்தாரே
சாவுக்கேதுவாம் உன் சரீரத்தையும்
நோவு நீக்கி ஜீவனோடு உயிர்ப்பிப்பாரன்றோ– உலக

**4.** ஜீவனுக்கீடாக உனக்கு ஜனங்களைத் தருவேனென்றார்
ஜீவன் வெறுத்தே சிலுவை சுமந்தே
ஜீவாதிபதியை என்றும் சேவிப்பாயோ – உலக

**5.** நம் ஜீவனாம் கிறிஸ்தேசுவே தம் நாளில் வெளிப்படுகையில்
பரிபூரண ஜீவன் பெற்றுதான் பரிசுத்தராய்
விளங்கிடுவோமல்லவோ – உலக

1. "வா! நீசப் பாவி! வா! என்றென்னைக் கூப்பிட்டீர்,
என் தோஷந்தீர இரட்சகா சுத்தாங்கம் பண்ணுவீர்.

***பல்லவி***

அருள் நாயகா! நம்பி வந்தேனே, தூய திரு இரத்தத்தால்
சுத்தாங்கம் பண்ணுமேன்.

2. சீர் கெட்ட பாவி நான், என் நீதி கந்தையே
என்றாலும் உமதருளால் துர்க்குணம் மாறுமே. –அருள்

3. மெய் பக்தி பூரணம் தேவாவியாலுண்டாம்;
உள்ளான சமாதானமும், நற்சீ ரும் பெறலாம். – அருள்

4. உண்டான நன்மையை நீர் விர்த்தியாக்குவீர்;
இப்பாவ குணத்தன்மையை நிக்ரகம் பண்ணுவீர். – அருள்

5. ஆ! தூய இரத்தமே! ஆ! அருள் நாயகா!
ஆ! கிருபை விசேஷமே! ஆ! லோக இரட்சகா! – அருள்

## பல்லவி

மாயை மாயை, மாயை மாயை! எல்லாம் மாயையே!
பொல்லா உலகில் ஒன்றும் நில்லாதென
உணர்ந்து கொள்வாய் பேதையே!

## சரணங்கள்

1. அற்ப வாழ்விற்காக ஓடி தினம் அலைந்து திரிந்து பொருள் தேடி
குடி, கொள்ளை, கூத்து—விஷப்
பாம்பைப்போல் கடித்து தொல்லைகள் தருமே முடிவில் – மாயை

2. ஒன்றும் கொண்டு வந்ததில்லை – நீ
ஒன்றும் கொண்டு போவதில்லை
உன் மேன்மை யாவும் ஒரு நாளில் அழியும் – இதை
உணர்ந்து ஓடிவா விரைந்து. – மாயை

3. மாட மாளிகைகள் எங்கேபெருங் கூடங் கோபுரங்கள் எங்கே
உன் கர்த்தர் இயேசு வரும் போது உன் நிலைமை
என்ன வாகும் சொல் இங்கே.– மாயை

1. நான் பாவிதான்,—ஆனாலும் நீர் மாசற்ற இரத்தஞ் சிந்தினீர்;
'வா' என்று என்னைக் கூப்பிட்டீர்; என் மீட்பரே! வந்தேன்.

2. நான் பாவிதான்,—என் நெஞ்சிலே கறை பிடித்த நீசனே;
என் கறை நீங்க இப்போதே என் மீட்பரே! வந்தேன்.

3. நான் பாவிதான்,—பயத்தினால் அலைந்து பாவ பாரத்தால்
அழிந்து மாண்டு போவதால் என் மீட்பரே! வந்தேன்.

4. நான் பாவிதான்,— விசுவாசத்தால்
சீர், நேர்மை, செல்வம், மோட்சமும்
அடைவதற்கு உம்மிடம் என் மீட்பரே! வந்தேன்.

5. நான் பாவிதான்,—இரங்குவீர் அணைத்துக் காத்து இரட்சிப்பீர்,
அருளாஞ் செல்வம் அளிப்பீர்; என் மீட்பரே! வந்தேன்.

6. நான் பாவிதான்,— அன்பாக நீர் நீங்காத் தடைகள் நீக்கினீர்
உமக்குச் சொந்தம் ஆக்கினீர், என் மீட்பரே! வந்தேன்.

***பல்லவி***

அன்பு இயேசுவின் அன்பு எந்தன் பாவத்தை
நீக்கியதால் – அந்த அன்பை நான் என்றும் விடேன்.

***சரணங்கள்***

1. பாவியாக இருக்கையிலே பாரிலென்னைத் தேடி வந்த
பரிசுத்த தேவ அன்பு – அல்லேலூயா. – அன்பு

2. நேசரென்னை அன்பால் இழுத்தார் பாசமாய்
அவரோடிணைத்தார் மாபெரும் அன்பிதுவே– அல்லேலூயா.
– அன்பு

3. எந்தன் வாஞ்சை இயேசுதாமே எந்தன் ஜீவனும் இயேசுதாமே
அவரென்னை அறிகின்றார் – அல்லேலூயா. – அன்பு

4. எக்காளம் தொனிக்கையிலே ஏகிடுவேன் இயேசுவுடனே
வாழுவேன் அன்பருடன் – அல்லேலூயா. – அன்பு

5. ஆவியாம் அச்சாரமீந்தார் ஆவியோடே அவரைத் துதிக்க
ஆச்சரியமான அன்பு – அல்லேலூயா. – அன்பு

# 495

***பல்லவி***

இயேசுவே, கிருபாசனப் பதியே, கெட்ட
இழிஞன் எனை மீட்டருள், இயேசுவே, கிருபாசனப்பதியே.

***சரணங்கள்***

1. காசினியில் உன்னை அன்றி, தாசன் எனக் காதரவு
கண்டிலேன், சருவ வல்ல மண்டலாதிபா!
நேசமாய் ஏழைக்கிரங்கி, மோசம் அணுகாது காத்து,
நித்தனே, எனைத் திருத்தி, வைத்தருள் புத்தி வருத்தி,
– இயேசுவே

2. பேயுடைச் சிறையதிலும், காய வினைக் கேடதிலும்,
பின்னமாகச் சிக்குண்ட துர்க் கன்மி ஆயினேன்:
தீயரை மீட்கும் பொருளாய் நேயம் உற்றுதிரம் விட்ட
தேவனே எனைக்கண் நோக்கித் தீவினை அனைத்தும் நீக்கி.
– இயேசுவே

3. சிறைப்படுத்தின வற்றைச் சிறையாக்கி விட்ட அதி
தீரமுள்ள எங்கள் உபகார வள்ளலே,
குறை ஏதுனை அண்டினோர்க் கிறைவா ? எனைச் சதிக்கும்
குற்றங்கள் அறவே தீர்த்து, முற்றுமுடியக் கண் பார்த்து.
–இயேசுவே

4. பொல்லா உலகம் அதில் நல்லோர் எவரும் இல்லை,
புண்ணியனே, உன் சரணம் நண்ணி அண்டினேன்;
எல்லார்க்குள் எல்லாம் நீ அல்லோ எனக்குதவி ?
இந்நாள் அருள் புரிந்து உன்ஆவியைச் சொரிந்து
– இயேசுவே

1. இரட்சக ரொருவ ரன்பு பேரன்பென்று கேள்விப்பட்டேன்;
ஆனால் மெய்தானா மோட்சம்விட்டு; என்னை மீட்க
மனிதனானார் ?

***__பல்லவி__***

ஆம், ஆம், ஆம், என்னை நேசித்ததாலே தானே;
ஆம், ஆம், ஆம், என்மேல் கிருபை கூறுகிறார்.

2. அவர் பாடும் இரத்தஞ் சிந்தலும், அதிகமாய்க்
கேள்விப்பட்டேன்; ஆனால் மெய்தானோ
இவையெல்லாம் பாவி எனக்காகத்தான். –ஆம்

3. இந்த இயேசுவி னடியார்க்குமேல் வீடொன்றிருக்கிறதாம்;
ஆனால் ஏழைப்பாவி எனக்கு அங்கோர் பங்கு இருக்கிறதா!
– ஆம்

4. தேவே! இந்த என் விண்ணப்பத்தை அன்பாக அங்கீகரித்து
உமதாவியாலிவை யெல்லாம் என் பங்கென்று காட்டிடுமேன்.
– ஆம்

1. பாவிக்கவர் காட்டின மா நேசத்தால்
சிலுவையில் தொங்கின இயேசு திருசிரசிலவர் முள்முடியைச்
சூண்டார்; பெரும்பாவி என்னை இரட்சிக்க.

***<u>பல்லவி</u>***

பெரும்பாவி என்னை இரட்சிக்க, திருசிரசிலவர் முள்முடியைச்
சூண்டார்; பெரும்பாவி என்னை இரட்சிக்க,

2. ஓர்க் காலமவர் ஏழைப் பாவிக்காக
சொரிந்தாரே மிகவும் கண்ணீர்; தாகமுள்ள எல்லாரும்
வாரும், நானே இளைப்பாற்றிடும் ஜீவதண்ணீர் – பெரும்

3. உமதற்புத மா நேசம் பாவி எந்தன் கல் இருதயத்தை இளக்கி,
மனஸ்தாபத்தோடு இயேசு நானும் உந்தன்
திருப்பாதத்தைக் தேடி வந்தேன். – பெரும்

***பல்லவி***

ஏழையை மீட்ட இயேசுவே இராஜா!
அடிமை சரண் புகுந்தேன்

***அனுபல்லவி***

நீசனாமென்னைத் தேடினீரே, காசினியிலன்பு கூர்ந்து.

***சரணங்கள்***

1. என் பாவம் போக்க எடுத்தீர் இறைவா
ஈனக் கோலமதை; (2)
என்ன நான் இதற்கீடு செய்குவேன் அன்னையே விளம்புவீரே. – ஏழை

2. தூரமாய்க் கிடந்தே, தொல்லைகளடைந்தே,
தூயா உம்மை மறந்தேன்; (2)
தூக்கினீர் என்னை சேற்றினின்றே தேற்றினீரும் மாவியாலே. – ஏழை

3. விண்ணை நீர் மறந்தீர், விரோதியாமெனையே
விண்ணில் சேர்த்திடவே, (2)
"வேண்டுதல் கேளும்" வேந்தனே, அருள் தேவனே சகாயனே. – ஏழை

4. பாவத்தின் கூலி மரணமாம் பயத்தை
ஜெயித்தவர் இயேசு கோமான்; (2)
ஜீவனும் சமாதான மீந்து, தேவனின் சமூகம் ஈந்தார். – ஏழை

5. மாயமாம் உலகின் வேஷத்தை வெறுத்தேன்
மன்னா உம் அன்பினாலே. (2)
சொன்னீரே மகிமையில் சேர்ப்பதாய், உன்னதா,
உம் வாக்கை நம்பி. – ஏழை

சிலுவை நாதர் இயேசுவின் பேரொளி வீசிடும் தூயக்கண்கள்
என்னை நோக்கிப் பார்க்கின்றன—தம் காயங்களையும்
பார்க்கின்றன.

1. என் கைகள் பாவங்கள் செய்திட்டால்
தம் கையின் காயங்கள் பார்க்கின்றாரே
தீய வழியில் என் கால்கள் சென்றால்
தம் காலின் காயங்கள் பார்க்கின்றாரே.— சிலுவை

2. தீட்டுள்ள எண்ணம் என் இதயம் கொண்டால்
ஈட்டி பாய்ந்த நெஞ்சை நோக்குகின்றார்
வீண் பெருமை என்னில் இடம் பெற்றால்
முள்முடி பார்த்திட ஏங்குகின்றார். சிலுவை

3. திருந்திடா பாவிக்காய் அழுகின்றார்
வருந்திடா பிள்ளைக்காய் கலங்குகின்றார்
தம் கண்ணீர் காயத்தில் விழுந்திட கண்ணீரும் இரத்தமும்
சிந்துகின்றார். — சிலுவை

4. அவர் இரத்தம் என் பாவம் கழுவிடும்
அவர் கண்ணீர் என்னை மெருகேற்றிடும்
கலங்கரை விளக்காக ஒளி வீசுவேன்
கலங்குவோரை அவர் மந்தை சேர்ப்பேன். — சிலுவை




# 500

**1.** எந்தன் ஆத்ம நேசரே வெள்ளம் போன்ற துன்பத்தில்
தாசன் திக்கில்லாமலே, தடுமாறிப் போகையில்
தஞ்சம் தந்து இயேசுவே திவ்ய மார்பில் காருமேன்;
அப்பால் மோட்ச வீட்டிலே, சேர்த்து பாக்யம் தாருமேன்.

**2.** வல்ல தேவரீர் அல்லால், வேறே தஞ்சம் இல்லையே;
கைவிடாமல், நேசத்தால் ஆற்றித் தேற்றித் தாங்குமே;
நீரே எந்தன் நம்பிக்கை நீர் சகாயம் செய்குவீர்;
செட்டை நிழல் தனிலும் மறைத்துக் காப்பாற்றுவீர்.

**3.** உமதன்பின் பெருக்கே, பாவமறக் காத்திடும்
அருள் பாயச் செய்யுமே என்னைச் சுத்தமாக்கிவிடும்;
ஜீவ ஊற்று! இயேசுவே! என்தன் தாகந் தீருவேன்;
நித்தம் ஊற்றி என்னிலே என்றுங் கிரியை செய்யுமேன்.



1. கர்த்தாவே! நின் சந்திதானந் தந்து எங்கள் நடுவில்,
வந்தெல்லார்க்கும் அருட்பானம் பண்ணத் தாகந்தாருமே.

***பல்லவி***

அருள் மாரி பெய்யச் செய்யும், கிருபாசனத்திலே தாழ வீழ்ந்து
வந்தெல்லாரும் வாழச் செய்யும் தேவனே!

2. பொருட்செல்வம் போதுமாக தந்த கையைப் பார்க்கிறோம்.
அருட் செல்வம் திரளாகப் பெறக் காத்து நிற்கிறோம். – அருள்

3. ஆசீர்வாத மழை பெய்யத் தேற்றவரவாளன் செய்கையால்
தேசா தேசம் பெய்யச் செய்யும் ஏற்ற காலம்ஆனதால்– அருள்

4. என்னிடம் விண்ணப்பம் பண்ண வேண்டும் என்ற கர்த்தாவே!
இன்னும் வாஞ்சையோடு கெஞ்சும் அடியாரைப் பார்ப்பீரே.– அருள்



1. எக்காலும் இயேசுவே! சகாயராயிரும்
அன்பான சத்தத்தால் என் ஏக்கம் நீக்கிடும்.

*__பல்லவி__*

எந்நாளும் நீரே வேண்டும்; இந்த நாளும் வேண்டும்.
நீர் என்னை நோக்கிப் பாரும். பேரன்பரே!

2. எப்போதும், இயேசுவே! இப்பாவியோடிரும்.
தீயோனின் சோதனை ஓயாமல் விலக்கும். – எந்

3. எக்காலும் இயேசுவே! இக்கட்டு வாழ்விலும்
அன்பாகத் தங்குவீர் என் நீச நெஞ்சிலும் – எந்

4. எப்போதும் இயேசுவே! இப்பேதைக் கிரங்கும்,
மெய்ஞ்ஞானம், சத்தியம் செய் நன்றி போதியும். – எந்

5. எக்காலும் இயேசுவே! எக்கேடும் நீக்குமேன்
காருண்ய நாயகா! நீர் என்னை ஆளுமேன். – எந்

GraphicPanic.com
graphicpanic.com

# 503

1. பேராற்றுக் கொப்பாக பேரின்பமுண்டாம்
சகலத்தின் மேலும் ஜெயங் கொள்ளுமாம்
நிறைந்து, எக்காலும் வற்றிப்போகாதாம்
நிறைந்தும், எந்நாளும் ஆழ்ந்திருக்குமாம்.

***பல்லவி***

ஏகோவாவின் பேரில் சிந்தை வைத்தவன்
பூரண சந்தோஷம் அடைந்தேறுவான்.

2. ஜீவ ஊற்றினின்று நதி பாயுதே ! ஜீவ பிராணி யாவும்
பிழைக்கும் என்றே, போகுமிடம் எங்கும்
செழிப்பாகுமாம் பானம் பண்ணும் யாவுந் தாகந் தீருமாம். – ஏகோ

3. இயேசுவே ! உம்மண்டை வந்தடைகிறேன்
வாக்குத்தத்தம் என்னில் நிறைவேற்றுமேன்
என் உள்ளத்தினின்று நதி ஓடவே
ஆவியாலே இன்று ஈவைத் தாருமேன். – ஏகோ

4. இயேசு உள்ளங்கையில் மறைக்கப்பட்டேன்
அங்கே பகையாளி அலட்டக்காணேன்,
கவலை சற்றேனும் பின்தொடராதாம்
சஞ்சலத்தின் மேகம் நிழலிடாதாம். – ஏகோ

speakarun@gmail.com

1. அருள் மாரி எங்குமாக பெய்ய, அடியேனையும்
கர்த்தரே, நீர் நேசமாக சந்தித் தாசீர்வதியும்;
என்னையும், என்னையும் சந்தித் தாசீர்வதியும்.

2. என் பிதாவே பாவியேனை கைவிடாமல் நோக்குமேன்;
திக்கில்லா இவ்வேழை யேனை நீர் அணைத்துக் காருமேன்.
என்னையும், என்னையும் நீர் அணைத்துக் காருமேன்.

3. இயேசுவே, நீர் கை விடாமல் என்னைச் சேர்த்து இரட்சியும்!
இரத்தத்தாலே மாசில்லாமல் சுத்தமாக்கியருளும்
என்னையும், என்னையும் சுத்தமாக்கியருளும்.

4. தூய ஆவி, கைவிடாமல் என்னை ஆட்கொண்டருளும்;
பாதை காட்டிக் கேடில்லாமல் என்றுங் காத்துத் தேற்றிடும்;
என்னையும், என்னையும் என்றுங் காத்துத் தேற்றிடும்;

5. மாறா சுத்த தேவ அன்பும் மீட்பர் தூய இரத்தமும்,
தேவ ஆவி சக்திதானும் மாண்பாய்த் தோன்றச்
செய்திடும்; என்னிலும், என்னிலும் மாண்பாய்த் தோன்றச்
செய்திடும்.





# 505

1. என் அருமை இரட்சகா! கண்ணோக்குமேன்!
சம்பூரண இரட்சிப்பை நாடுகிறேன்.
என் பாவங்கள் யாவையும் வெறுக்கிறேன்.
நீர் கழுவும்! முழுதும் வெண்மையாவேன்.

***பல்லவி***

வெண்மையாவேன்! நான் வெண்மையாவேன்!
நீர் கழுவும்! முழுதும் வெண்மையாவேன்!

2. என் அருமை இரட்சகா! இரங்குவீர்;
எப்பாவமும் நீங்கச் சுத்தாங்கஞ் செய்வீர்,
உம் இரத்தமே கதி என்றண்டிக் கொண்டேன்
நீர் கழுவும்! முழுதும் வெண்மையாவேன். – வெண்மை

3. என் அருமை இரட்சகா முழுதுமாய்
வீண் கிரியைகள் ஒழித்து; நம்பிக்கையாய்
நற்பாதத்தில் எந்தனைப் படைக்கிறேன்
நீர் கழுவும்! முழுதும் வெண்மையாவேன். – வெண்மை

4. என் அருமை இரட்சகா! தள்ளமாட்டீர்,
துர்க்குணத்தை மாற்றியே புதுப்பிப்பீர்,
எப்போதும் காப்பாற்றுவீர்! நம்புகிறேன்!
நீர் கழுவும்! முழுதும் வெண்மையாவேன் – வெண்மை

www.powerpointdesigns.net

## 506

1. கர்த்தாவே, அடியேனை நீர் ஆராய்ந்தறிந்திருக்கிறீர்;
என் தேகம் ஆவி சிந்தையும் உமக்கு நன்றாய்த் தெரியும்.

2. நினைக்குமுன் என் எண்ணமும், நடக்குமுன் என் வழியும்,
நான் பேசுமுன் என் வார்த்தையும், உமக்கே எல்லாம் தெரியும்.

3. என் முன்னும் பின்னும் நிற்கிறீர்; நீர் என்னைச் சூழ்ந்திருக்கிறீர்,
உமக்குத் தப்பி நான் எங்கே பறந்து போவேன், கர்த்தரே ?

4. உமக்கு மறைந்தோடவே ஒளிப்பிடம் வேறில்லையே,
என்றெண்ணும் ஞானம் தாருமேன்.
எக்காலும் என்னைக் காருமேன்.



speakarun@gmail.com

## பல்லவி

1. ஆராய்ந்து பாருங் கர்த்தரே ! என் கிரியை யாவையும்
நீர் காணுமாறென் கண்ணிலேதென்படக் காண்பியும்.

2. ஆராயும், என்தன் உள்ளத்தை நீர் சோதித்தறிவீர்;
என் அந்தரங்க பாவத்தை மா தெளிவாக்குவீர்.

3. ஆராயுஞ் சுடரொளியால் உட்பகை தோன்றவும்
மெய் மனஸ்தாபம் அதினால் உண்டாக்கியருளும்.

4. ஆராயும் சிந்தை யோசனை எவ்வகை நோக்கமும்
தீட்டான மனோபாவனை உள்ளிந்திரியங்களும்.

5. ஆராயும் மறைவிடத்தை, மா தூயக் கண்ணினால்,
அரோசிப்பேன் என் பாவத்தை, தேவனுக்கிரகத்தால்.

6. என் தீயகுணந் தோன்றலில், சாஷ்டாங்கம் பண்ணுவேன்.
நின் சரணார விந்தத்தில் சுத்தாங்கந் தேடுவேன்.

www.powerpointdesigns.net

**1.** பாவ நாசர் பட்ட காயம் பார்த்துணர்ந்து கொள்வது
சுத்தம், செல்வம், நற்சகாயம், சமாதானம் உள்ளது.

**2.** இரத்த வெள்ளம் பாய்ந்ததாலே அன்பின் வெள்ளம் ஆயிற்று;
தேவ நேசம் அதினாலே மானிடர்க்குத் தோன்றிற்று.

**3.** ஆணி பாய்ந்த மீட்பர் பாதம் தஞ்சம் என்று பற்றினேன்
அவர் திவ்ய தேச முகம் அருள்வீசக் காண்கிறேன்.

**4.** பாசத்தால் என் நெஞ்சம் பொங்கி நேசத்தால் கலங்குவேன்;
அவர் சாவால் துக்கம் மாறி சாகா ஜீவன் அடைவேன்.

speakarun@gmail.com

# 509

**1.** சுக காலம் என்கிலும், துக்கமான போதிலும்
நெறி நின்று தவறேன், நித்தம் நித்தம் நம்புவேன்.

***<u>பல்லவி</u>***

வாழ்விலும், மா தாழ்விலும், கஷ்ட நஷ்டம் ஆகிலும்;
இயேசுவைப் பின் பற்றுவேன்; நித்தம் நித்தம் நம்புவேன்.

**2.** எந்தன் வெறும் நெஞ்சத்தில் தூய ஆவி விளங்கில்
அவராலே வெல்லுவேன்: நித்தம் நித்தம் நம்புவேன். – வாழ்

**3.** இன்பம் ஆகில் பாடுவேன் துன்பத்தில் மன்றாடுவேன்
மோசம் நேரில் அஞ்சிடேன்; நித்தம் நித்தம் நம்புவேன்.– வாழ்

**4.** ஜீவ காலம் முழுதும், சாவு பரியந்தமும்
மோட்சம் நாடிச் செல்லுவேன்; நித்தம் நித்தம் நம்புவேன். – வாழ்

speakarun@gmail.com

1. தேவா, ஜீவப்பத்தை பிட்டுத்தாரும்,
உம் வாக்கென் உள்ளத்தில் பதித்தருளும்,
சிந்தனை ஆட்கொண்டு, சுயம் நீக்கும்,
என் வழிகளை எல்லாம் ஆண்டு கொள்ளும்.

2. உம் செய்தி அறிய என் உள்ளத்தைத்,
திறந்து சத்தியம் விளக்கிடும். உம் அன்பில் மூழ்கியே,
சார்ந்தும்மோடு உம் சாயல் தரித்து வாழச் செய்வீர்.

3. கர்த்தாவே, உண்மையை தந்தெனக்கு,
வந்தாசீர் வதித்து கடாட்சியும் அப்போது உம் சாயலை
நானணிந்து,
என்றென்றும் ஐக்கியத்தில் வாழ்ந்திடுவேன்.

4. கடலோரம் அப்பம் பிட்டது போல், வாசிக்கும் பாகத்தை
தெளிவாக்கும், அப்போ தடிமையின் கட்டுகள் போய்
என்றென்றும் சுயாதீனம் கண்டடைவேன்.

speakarun@gmail.com

எனக்கேன் இனி பயமேன் எந்தன் இயேசு என் துணையே
என் துன்ப நேரத்திலே இயேசுவே என்னோடிருப்பார்

***அனுபல்லவி***

கடந்த வாழ் நாட்களெல்லாம் கர்த்தரே என்னை சுமந்தார்
கண்ணீர் யாவையும் துடைத்தார்.

***சரணங்கள்***

1. உண்மையாய் என்னையும் நேசித்தார்
உள்ளங்கைகளில் என்னை வரைந்தார்
அவர் அறியா தொன்றும் வந்ததில்லை
அவரையே சார்ந்துகொண்டேன். – எனக்

2. யுத்தங்கள், துன்பங்கள் சந்தித்தும்
யோர்தான் நதிபுரண்டு வந்தும் எலியாவின் தேவன்
என்ஜெபங்களை ஏற்று பதில் அளித்தார். – எனக்

3. இத்தனை அற்புத நன்மைகள் கர்த்தர் செய்ததை
நினைத்திடுவேன் இதுவரை வழிகாட்டி நடத்தினார்
இன்னமும் காத்திடுவார். – எனக்

4. உலகம் முடியும் வரையும் உந்தனோடிருப்பேன் என்றவர்
மகிமையில் சேர்ப்பாரே நம்பிக்கையில் மேன்மை பாராட்டுகிறேன்.
– எனக்

speakarun@gmail.com

இயேசு எந்தன் வாழ்வின் பெலனானார்
எனக் கென்ன ஆனந்தம்.

***அனுபல்லவி***

எந்தன் வாலிப காலமெல்லாம் எந்தன் வாழ்க்கையின்
துணையானார் எந்தன் இதயமே உம்மைப் பாடும்
எந்தன் நினைவுகள் உமதாகும்.

***சரணங்கள்***

1. பொல்லாத் தீமைகள் அகன்றோட எல்லா மாயையும் மறைந்தோட
உமதாவியின் அருள் காண வருங்காலங்கள் உமதாக. – எந்தன்

2. இந்த உலகத்தை நீர் படைத்தீர் எல்லா உரிமையும் எனக்களித்தீர்
உம் நாமமே தழைத்தோங்க நான் வாழுவேன் உமக்காக.– எந்தன்

3. உந்தன் ஊழியம் செய்திடவே என்னை உமக்கெனத்
தெரிந்து கொண்டீர் உந்தன் சித்தமே என்னில் விளங்க
என்னைப் படைக்கிறேன் உமக்காக. – எந்தன்

4. உந்தன் ஜீவனை எனக்களித்து என்னை ஆசாரியன் ஆக்கினீரே
எந்தன் பொறுப்பதை நிறைவேற்றி என் ஓட்டத்தை முடித்திடுவேன்.
– எந்தன்

speakarun@gmail.com

என் இயேசு ராஜா சாரோனின் ரோஜா
உம் கிருபை தந்தாலே போதும் அலை மோதும் வாழ்வில்
அலையாமல் செல்ல உம் கிருபை முன் செல்ல அருளும்.

***<u>சரணங்கள்</u>***

**1.** கடல் என்னும் வாழ்வில் கலங்கும் என் படகில்
சுக்கான் பிடித்து நடத்தும் என் தேவா
கடலினைக் கண்டித்த கர்த்தர் நீர் அல்லவோ
கடவாத எல்லையை என் வாழ்வில் தாரும். – என் இயேசு

**2.** பிளவுண்ட மலையே புகலிடம் நீரே
புயல் வீசும் வாழ்வில் பாதுகாத்தருளும்
பாரினில் காரிருள் சேதங்கள் அணுகாமல்
பரமனே என் முன் தீபமாய்  வாரும். – என் இயேசு

**3.** எதிர்காற்று வீச எதிர்ப் போரும் பேச
என்னோடிருப்பவர் பெரியவர் நீரே
இயேசுவே யாத்ரையில் கரை சேர்க்கும் தேவன்
என் ஜீவ படகில் நங்கூரம் நீரே. – என் இயேசு



514


**1.** அர்ப்பணித்தேன் என்னை முற்றிலுமாய்
அற்புதநாதா உம் கரத்தில் அனைத்தும் உமக்கே சொந்தம் என்று
அன்பரே என்னையே தத்தம் செய்தேன்.

***பல்லவி***

அனைத்தும் கிறிஸ்துவுக்கே எந்தன் அனைத்தும் அர்ப்பணமே
என் முழுத் தன்மைகள் – ஆவல்களும்  அனைத்தும்
கிறிஸ்துவுக்கே.

**2.** என் எண்ணம் போல நான் அலைந்தேனே
என்னைத் தடுத்திட்ட தாருமில்லை
உம் சிலுவை அன்பைச் சந்தித்தேனே
நொறுங்கி வீழ்ந்தேனே உம் பாதத்தில் – அனைத்தும்

**3.** ஐம்புலன்கள் யாவும் அடங்கிட ஐம்பெருங் காயங்கள்
ஏற்ற நாதா வான்புவிக் கிரகங்கள் ஆள்பவரே
என்னையும் ஆண்டிட நீரே வல்லோர். – அனைத்தும்



# 515

***பல்லவி***


அவர் எந்தன் சங்கீதமானவர் அரணான கோட்டையுமாம்
ஜீவனின் அதிபதியான கர்த்தரை ஜீவிய காலமெல்லாம் வாழ்த்துவோம்.

***சரணங்கள்***

1. துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்
தூதர் கணங்கள் போற்றும் தேவனவரே
வேண்டிடும் பக்தர்களின் குறைகள் கேட்கும்
திக்கற்ற பிள்ளைகளின் தேவனவரே. – அவர்

2. இரண்டு மூன்று பேர் எந்தன் நாமத்தினால்
இருதயம் ஒருமித்தால் அவர் நடுவில்
இருக்கிறேன் என்றவர் நமது தேவன்
இருகரம் கூப்பி என்றும் வணங்கிடுவோம்.– அவர்

3. வானவர் கிறிஸ்தேசு நாமம் அதை வாழ்நாள் முழுவதும்
வாழ்திடுவோம் வருகையில் அவரோடு இணைந்து என்றும்
வணங்குவோம் வாழ்த்துவோம் போற்றிடுவோம். – அவர்



அல்லேலூயா துதி மகிமை—என்றும்
இயேசுவுக்குச்செலுத்திடுவோம் ஆ.........அல்லேலூயா

***சரணங்கள்***

**1.** மோட்சத்தின் பாதையிலே பாடுகள் படவேண்டும்
பாடுகள் மத்தியில் பரமன் இயேசுவில் நிலைத்தே நிற்கவேண்டும்.
– அல்லே

**2.** மாய்மால வாழ்க்கையெல்லாம் மறைந்தே தீரவேண்டும்
பரிசுத்தத்தோடு பரமன் இயேசுவை நாடியே ஓடவேண்டும்.
– அல்லே

**3.** ஜெபத்திலே தரித்திருந்து அவர் சித்தம் நிறைவேற்று
முடிவு பரியந்தம் அவரில் நிலைநிற்க
பெலனைப் பெற்றுக் கொள்ளு. – அல்லே

**4.** சென்றவர் வந்திடுவார் அழைத்துச் சென்றிடுவார்
அவருடன் செல்ல ஆயத்தமாவோம் அவருடன் வாழ்ந்திடவே.
– அல்லே

speakarun@gmail.com

***பல்லவி***

அன்பின் தேவன் இயேசு உன்னை அழைக்கிறார்
அவரின் குரலைக் கேட்ட பின்னும் தயக்கம் ஏன் ? – அன்

***அனுபல்லவி***

கல்வாரியின் மேட்டினில் கலங்கும் கர்த்தர் உண்டல்லோ
கவலை ஏன் ? கலக்கம் ஏன் ? கர்த்தர் இயேசு அழைக்கிறார்
உன்னை எண்ணி உள்ளம் நொந்து அணைக்க இயேசு துடிக்கிறார்;
– அன்

***சரணங்கள்***

1. மனிதர்கள் அன்பு மாறலாம் மறைவாகத் தீது பேசலாம்
அன்பைக் காணா இதயமே அன்பின் தேவனை அண்டிக்கொள். – கல்

2. வியாதிகள் தொல்லைகள் தோல்வியோ ?
வாழ்க்கையில் என்ன ஏக்கமோ ? கண்ணீர் ததும்பும்படுக்கையோ ?
கலங்காதே மன்னன் இயேசு பார். – கல்

3. வேலை வசதிகள் இல்லையோ ? வீட்டினில் வறுமை தொல்லையோ ?
மரண பயமும் நெருங்குதோ ? மரணம் வென்ற இயேசு பார். – கல்

4. பாவ விடுதலை இல்லையோ ? பரிசுத்த வாழ்வில் தாழ்ச்சியோ ?
பழைய பாவத் தொல்லையோ ? பார் உந்தன் நேசர் இயேசுவை. – கல்

5. தனிமை என்ற தவிப்பும் ஏன் ? தம் மைந்தன் ஈந்தார் உன் பிதா;
கலங்காதே ! மனம் தளராதே ! தாங்குவார் உந்தன் இயேசு பார். – கல்

speakarun@gmail.com

ஆயிரம் ஸ்தோத்திரமே இயேசுவே பாத்திரரே (2)
பள்ளத்தாக்கிலே அவர் லீலி சாரோனிலே ஓர் ரோஜா.

1. வாலிப நாட்களிலே—என்னைப் படைத்தவரை நினைத்தேன்
ஏற்றிய தீபத்தால் இதயமே நிறைந்தது இயேசுவின் அன்பினாலே.
– ஆயிரம்

2. பலவித சோதனைகள் சந்தோஷமாய் நினைத்தேன்
எண்ணங்கள் சிறையாக்கி இயேசுவுக்குக் கீழ்ப்படுத்தி
விசுவாசத்தில் நடப்பேன். – ஆயிரம்

3. உலக மேன்மை யாவும் நஷ்டமாய் எண்ணிடுவேன்
சிலுவை சுமப்பதே லாபமாய் நினைத்தே சாத்தானை முறியடிப்பேன்.
– ஆயிரம்


4. இயேசுவின் நாமத்திலே ஜெயங்கொடுக்கும் தேவனுக்கே
அல்லேலூயா ஸ்தோத்திரம் இயேசுவே வாரும் என்றென்றும் உம்மிவாழ.
– ஆயிரம்

இந்தக் காலம் பொல்லாதது உன்னை கர்த்தர் அழைக்கிறார்
நீ வாழும் வாழ்க்கை தான் இது வாடகை வீடுதான்.

1. வாலிப நாட்களில் உன் தேவனை தேடி வா
சாத்தான் களத்தினில் போரிட ஜெய வீரனாய் திகழவா. – இந்த

2. பாவத்தின் சம்பளம் எரிநரகம் தான் நிச்சயம்
சத்திய தேவனின் கிருபையோ நித்திய ஜீவனை அருளுமே.
– இந்த

3. பாவமோ பெருகுதே தேவராஜ்யம் நெருங்குதே
மனம் திரும்பி நீ வாழவே மன்னன் இயேசுன்னை அழைக்கிறார்.
– இந்த



இயேசு அழைக்கும் குரலைக் கேட்டு வாருங்கள் மாந்தர்களே–
அந்த தேவன் அணைப்பில் சந்தோஷம் காண வாருங்கள்
நண்பர்களே.

**1.** பாவியாக அலைந்த காலம் போதும் போதுமே வாசல் திறந்த
நேரம் பார்த்து வாரும் அருகிலே நாளை என்பதெதற்கு–அது
நிச்சயமல்ல உனக்கு வேளை இன்று வந்ததென்று
இரட்சிப்பில் வாருங்களே. – இயேசு

**2.** பொறுமை அன்பு கருணை யாவும் நிறைந்த தேவனே
புவியும் வானும் பொருந்தி ஆளும் உயர்ந்த தேவனே
தேடும் உள்ளம் அனைத்தும்– அவர்
வாழும் இல்லம் என்றுரைக்கும் இனிய தேவன் இன்ப தேவன்
இல்லத்தைத் தாருங்களே. – இயேசு

**3.** மாய வாழ்வை சதமென் றெண்ணி சாவை மறக்கின்றாய்
காசும் பணமும் தேடித் தேடி அமைதி இழக்கின்றாய்
போதும் என்ற எண்ணம்–ஒரு போதும் வருவதில்லை
மரணம் வருமுன் மனமும் திருந்தி இரட்சிப்பைத் தேடுங்களே.
– இயேசு

இயேசு என் பரிகாரி—இன்ப இயேசு என் பரிகாரி—என்
ஜீவிய நாட்களெல்லாம்—இன்ப ராஜா என் பரிகாரி.

***<u>சரணங்கள்</u>***


1. என்ன துன்பங்கள் வந்தாலும் என்ன வாதைகள் நேர்ந்தாலும்
என்ன கஷ்டங்கள் சூழ்ந்தாலும்—இன்ப ராஜா என் பரிகாரி. – இயேசு

2. சாத்தான் என்னை எதிர்த்தாலும் சத்துரு என்னைத்
தொடர்ந்தாலும் சஞ்சலங்கள் வந்த போதும்— இன்ப
ராஜா என் பரிகாரி. – இயேசு

3. பண கஷ்டங்கள் வந்தாலும் மனக் கஷ்டங்கள் நேர்ந்தாலும்
ஜனமே என்னை வெறுத்தாலும்—இன்ப
ராஜா என் பரிகாரி. – இயேசு

4. பெரும் வியாதிகள் வந்தாலும் கடும் தோல்விகள் நேர்ந்தாலும்
பல சோதனை சூழ்ந்தாலும் – இன்ப ராஜா என் பரிகாரி. – இயேசு

5. எனக் கென்ன குறை உலகில் ராஜா துணை எனக்கு
என் ஜீவிய நாட்களெல்லாம்— இன்ப ராஜா என் பரிகாரி. – இயேசு



# 522

## *பல்லவி*


இயேசுவின் நாமத்தில் நாம் கூடிடும் சமயங்களில்
பேசுவார் தியானத்திலே அவர் தம் கிருபைகள் அளிக்க

## *சரணங்கள்*

1. மலைகள் விலகினாலும்—மா பர்வதம் நிலை பெயர்ந்தும்
என்றும் மாறாத அவர் கிருபைகள் தம் மக்களுக்காறுதலே.
– இயேசு

2. சீயோனில் அவர் நம்மையே சிறு மந்தையாய் சேர்த்திடுவார்
நித்திய ராஜ்யத்தைத் தந்திடுவார் சத்திய பாதையில்
நடந்ததினால். – இயேசு

3. கஷ்டங்கள் கவலைகளில் அன்புக் கரம் நம்மைத் தாங்கிடுமே
நஷ்டங்கள் மாறிடுமே நாதன் இயேசுவின் நாமத்தினால் – இயேசு



எனது பாத்திரம் நிரம்பி வழியுதே இயேசுவின் அன்பை
எண்ணிடும்போது.

***சரணங்கள்***

1. தகப்பன் என்று சொல்லவும் தகுதியில்லையே
முகத்தை நோக்கிப் பார்க்கவும் முடியவில்லையே
மகனே என்றோடி வந்து அணைத்திட்டபோது
கால்களில் வீழ்ந்தேன் நான் கதறி அழுதிட்டேன். – எனது

2. பாவியென்று பரிசேயர் சொல்லிட்டபோதும்
பாவிகளைத் தேடி வந்தேன் என்றார் இயேசு
மகனே உன் பாவங்களை மன்னித்தேன் என்றார்
தைலம் ஊற்றியே அவர் பாதம் பணிந்திட்டேன். – எனது

3. சிலுவையிலே அறைந்திடவே தேடினபோது
நான் தானே இயேசு என்று ஒப்புவித்தாரே
சிநேகிதனே என்றாரே துரோகியைக்கூட
இயேசுவைப் போல ஒரு நண்பர் இல்லையே. – எனது

4. தேவ சித்தம் செய்திடுவோர் யாவரும் தானே
தாயுமென் சகோதரர் என்றார் இயேசு
பிள்ளைகளே என்றாரே நம்மை மாத்திரமே
பரம தந்தையின் அன்பு மாறிடாததே. – எனது

speakarun@gmail.com

## ***பல்லவி***

என் இயேசுவின் சந்நிதியில் என்றும் கீதங்கள் பாடிடுவேன்
என்னைக் காத்திடுமே அவர் நாமமதே துதி கீதங்கள் பாடிடுவேன்.

## ***சரணங்கள்***

**1.** கண்ணீர் அவர் துடைத்திடுவார்
கருணைக்கரம் தாங்கிடுவார்
எந்தன் கல்வாரி நாயகன் இயேசுவாலே
எல்லாப் பாவங்கள் அகன்றிடுமே. – என்

**2.** பரமன் குரல் கேட்கும்போது பரமானந்தம் அடைந்திடுவேன்
எந்தன் அவசியங்கள் அவர் கிருபையாலே
அதி சீக்கிரம் கிடைத்திடுமே. – என்

**3.** மோட்ச பாக்கியத்தை நினைத்திடவே பொங்குதே யுள்ளம்
சந்தோஷத்தால் வேகம் வந்திடுவார் எந்தன் ஆத்ம நேசர்
என்னைத் தம்முடன் சேர்த்திடவே. – என்

**4.** பாரில் பரிசுத்த ஜீவியத்தை தேவ பயத்துடன்
காத்துக் கொள்வேன் எந்தன் ஆவியும் ஆத்ம சரீரம் முற்றும்
என்றும் கர்த்தருக்கொப்பு விப்பேன். – என்

**5.** தேவ சேனைகள் ஆர்ப்பரிக்க கர்த்தர் இயேசு தம் மகிமையுடன்
வானில் வெளிப்படுவார் சீயோன் இராஜனவர் என்னை சீயோனில்
சேர்த்திடுவார். – என்

speakarun@gmail.com

எழும்பிடுவோம் ஓ! வாலிபரே எழும்பிடுவோம் ஜெய வீரர்களாய்
பரிசுத்த சுவிசேஷ இளைஞர் படை புறப்படுவோம் எங்கும்
அணி யணியாய்.

***சரணங்கள்***

1. இயேசுவுக்காய் பெரும் சேனை ஒன்றை இந்திய நாட்டில்
திரட்டிடுவோமே—நாம் சிலுவைக் கொடி பிடித்தே—அல்லேலூயா
சீயோனின் பாதை செல்வோம். – எழும்

2. களைப்பினை மேற்கொள்ள கர்த்தரின் பாதத்தில்
காத்திருந்தே புது ஆசீர் பெறுவோம்—நாம் கழுகினைப் போல்
பறந்தே—அல்லேலூயா கர்த்தரின் சேவை செய்வோம். – எழும்

3. இயேசுவின் பின்னே ஓடிடுவோமே இயேசுவுக்காய் ஜீவன்
வைத்திடுவோமே—நம் தியாகத்தின் பாதையிலேஅல்லேலூயா
தினமும் நடந்திடுவோம். – எழும்

4. எதிரியின் சேனைக்குள் பாய்ந்தே செல்வோம்
எதிரியின் கோட்டைகள் தகர்த்தெறிவோமே—நாம்
எதிரியை வீழ்த்திடுவோம்— அல்லேலூயா
எழுதின பட்டயத்தால்.— எழும்

5. பாவத்தின் சிறைகளில் வாடிடும் மக்களை
பாவத்திலிருந்தே விடுதலை செய்வோம்—நாம்
பரிசுத்தர் கூட்டமொன்றைஅல்லேலூயா
பரமனுக்காய் சேர்ப்போம்.— எழும்

6. எக்காள சத்தம் தொனித்திடும் வேளை
எதிர்கொண்டு இயேசு ராஜனை சந்திப்போம்—நாம்
மேகத்தில் ஏறிச் செல்வோம்—அல்லேலூயா
மேதினியை ஆண்டிட. – எழும்

speakarun@gmail.com

ஓடி வா, ஓடி வா இயேசுவின் பக்கம் ஓடி வா

***சரணங்கள்***

1. பாவத்தில் நீ மாளாதே தீய வழியில் செல்லாதே
தீராக் கொடிய தண்டனை தீ நரகம் அடைவாயே – ஓடி வா

2. உலக ஆசை நம்பாதே உன்னைக் காக்க மாட்டாதே
உன்னுயிர் போகும் நாளிலே உன்னோடு வருவதில்லையே.
– ஓடி வா

3. உன்னைக் காப்பாற்றும் இயேசுவாம் உனக்காய்
உயிரைக் கொடுத்தாரே சிலுவையில் இயேசு அறையுண்டார்
மரித்தும் உயிர்த்தும் எழுந்தாரே. – ஓடி வா

speakarun@gmail.com

***பல்லவி***

கண்டேன் என் நேசரை—நான் கண்டேன் என் தெய்வத்தை
என்னை என்றும் நேசிப்பவர்—என் இயேசு ஒருவரே.

***சரணங்கள்***

1. எண்ணில்லா தெய்வத்தை இந்தப் பாரில் பார்க்கலாம்
என்னைத் தேடி வந்தவர் என் இயேசு தேவனே. – அவரைக் கண்

2. என் இதயத்திலே—இன்னும் எத்தனை பாவங்கள்
என்னைச் சுத்தம் செய்யவே இயேசு இரத்தம் சிந்தினார்.
– அவரைக் கண்

3. கொல்கொதா மலையின்மேல் கண் கொள்ளாதக் காட்சியே
கொடும் சிலுவையில் இயேசு மரிக்கும் இக்காட்சியே.
– அவரைக் கண்

4. மரித்த இயேசுவே—இன்றும் எழுந்து ஜீவிக்கிறார்
மனச் சாந்தி வேண்டுமா ? மகிமை இயேசுவண்டை வா.
– அவரைக் கண்

speakarun@gmail.com

கர்த்தர் என் மேன்மையும் மகிமையுமானவர்
யாருக்கு அஞ்சிடுவேன் கர்த்தர் என் ஜீவனின் பெலனுமானவர்
யாருக்கு அஞ்சிடுவேன் ? – நான் (2)

***சரணங்கள்***

1. என் முகத்தைத் தேடு என்றீர் இன்னமும் நான் அன்புகூர்ந்து
நோக்குவேன் உம் பொன் முகமே சிலுவை நோக்கிப் பார்த்த கண்கள்
சூழ்நிலைகள் மாறினாலும் வெட்கமடைந்து போவதில்லையே. – கர்த்தர்

2. தகப்பனும் தாயும் என்னைக் கைவிடும் வேளை வரினும்
அரவணைக்கும் உந்தன் கரமே கழுகு தன் குஞ்சுகளைப்
பறந்து காப்பது போல காத்த உந்தன் செட்டை தஞ்சமே. – கர்த்தர்

3. எந்தனுக்கு விரோதமான எரிகோவின் மதில்களைத்
தகர்த்து சாம்பலாக்கிடுவீர் எதிரிகளின் சேனைகள்
என்றும் என்னைத் தொடராமல் பின் தொடர்ந்து வந்திடுவீர். – கர்த்தர்

4. காலமோ கடைசியாகி பாவம் பாரில் படர்ந்து பெருகி
உலக வேஷம் கடந்து செல்லுதே வருகை தாமதிக்கையில்
புறாவைப் போல் சிறகிருந்தால் பறந்து வந்து உம்மைக் காணுவேன்.
– கர்த்தர்

speakarun@gmail.com

## பல்லவி

கர்த்தாவின் ஜனமே கைத்தாளமுடனே
களிகூர்ந்து கீதம் பாடு சாலேமின் ராஜா நம் சொந்தமானார்
சங்கீதம் பாடி ஆடு அல்லேலூயா, அல்லேலூயா (2)

## சரணங்கள்

1. பாவத்தின் சுமையகற்றி—கொடும் பாதாள வழி விலக்கி
பரிவாக நம்மைக் கரம் நீட்டிக் காத்த
பரிசுத்த தேவன் அவரேஅல்லேலூயா (2) – கர்த்தாவின்

2. நீதியின் பாதையிலே அவர் நிதம் நம்மை நடத்துகின்றார்
எது வந்த போதும் மாறாத இன்ப புது வாழ்வைத் தருகின்றாரே
அல்லேலூயா (2) –கர்த்தாவின்

3. மறுமையின் வாழ்வினிலே இயேசு மன்னவன் பாதத்திலே
பசிதாகமின்றி துதி கானம் பாடி
பரனோடு நிதம் வாழுவோம் அல்லேலூயா (2) – கர்த்தாவின்

கலங்காதே மனம் திகையாதே—நம்
கர்த்தர் நம்மை என்றும் கைவிடாரே
இம்மட்டும் நடத்திய இம்மானுவேலன்
இன்னமும் நம்மை நடத்திடுவாரே.

***சரணங்கள்***

1. செங்கடல் வரினும் பயந்து விடாதே
சேனைகள் தொடரும் மலைத்து விடாதே
யேகோவா நிசியாய் இயேசுவே வருவார்
என்றுமே ஜெயமாய் நடத்திடுவாரே. – கலங்

2. வானத்தின் மன்னா அனுதினம் தந்து
கானக வழியில் நடத்திச் சென்றாரே
கழுகினைப் போல தன் சிறகினில் சுமந்து
கடைசி வரை நம்மை நடத்திடுவாரே. – கலங்

3. கன்மலை திறந்தே தாகத்தை தீர்த்து
காடைகள் அளித்தே வாஞ்சைகள் நிறைத்தார்
கசந்திடும் மாரா மதுரமாய் மாற்றி
களிப்புடன் நம்மை நடத்திடுவாரே. – கலங்

4. யேகோவா தேவன் எபனேசராக
இம்மட்டும் உதவி நமக்களித்தாரே
யேகோவாயீரே என்னும் பெயராலே
நமக்காக யாவையும் செய்திடுவாரே. – கலங்

***சரணங்கள்***

1. காக்கும் கரங்கள்உண்டெனக்கு
காத்திடுவார் கிருபையாலே அல்லேலூயா பாடிப் பாடி
அலைகளை நாம் தாண்டிடுவோம்.

***பல்லவி***

நம்புவேன் இயேசுவை (4 தடவை)

2. நிந்தனைகள் போராட்டம் வந்தும்
நீதியின் தேவன் தாங்கினாரே
நெருக்கத்திலே என்னை அழைத்த
நேசர் உமக்காய் ஜீவித்திடுவேன். – நம்புவேன்

3. கன்மலைகள் பெயர்க்கும் படியாய்
கர்த்தர் என்னைக் கரம் பிடித்தார்
காத்திருந்து பெலனடைந்து
கழுகு போல எழும்பிடுவேன். – நம்புவேன்

4. அத்திமரம் துளிர்விடாமல்
ஆட்டுமந்தை முதலற்றாலும்
கர்த்தருக்குக் காத்திருப்போர்
வெட்கப்பட்டுப் போவதில்லை. – நம்புவேன்

**பல்லவி**

ஜாதிகளே எல்லாரும் கர்த்தரை ஏகமாய்த் துதித்தே
போற்றிப் பாடுங்கள்!

**அனுபல்லவி**

தேவன் அளித்த நன்மைபெரியதே
கர்த்தரின் உண்மை என்றும் மாறிடாததே!

**சரணங்கள்**

1. இன்றைத்தினம் கூடி உம்மைப் போற்றிப்பாட
ஈந்தளித்தீர் உந்தன் கிருபை—இயேசுவின் நாமத்தை
உயர்த்திடுவோம் என்றும் அவர் துதி பாடி
மகிழ்வோம்! – ஜாதிகளே

2. ஜீவன் சுகம் பெலன் யாவும் இயேசு தந்தார்
சேதமின்றி என்னைக் காத்தாரே—ஜீவியப்
பாதையில் தேவை தந்து ஜெய கீதம் பாட
ஜெயமளிப்பார். – ஜாதிகளே

3. பாவ சாப ரோகம் முற்றும் என்னில் நீக்கி
சாவு பயம் யாவும் போக்கினார்— சோதனை வேதனை
சூழ்கையிலே சோர்ந்திடாமல் தாங்க பெலனளிப்பார்! – ஜாதிகளே

4. எந்தன் பாவம் யாவும் மன்னித்து மறந்தார்
சொந்தப் பிள்ளையாக மாற்றினார் நாடியே வந்தென்னை ஆதரித்து
வாக்களித்தார் நித்திய ஜீவன் ஈந்திட! – ஜாதிகளே

5. வானம் பூமி யாவும் மாறிப் போகும் ஓர் நாள்
வானவரின் வாக்கு மாறாதே நீதியின் சூரியன் தோன்றிடும்
நாள் சேர்த்திடுவார் ஆவலாய்
காத்திருப்போரை! – ஜாதிகளே

## பல்லவி

துதிப்பதே என் தகுதியல்லோ துதித்திடுவேன் என் இயேசுவை.

## சரணங்கள்

1. வேதம் நிறைந்த இதயம் தந்தார்.
ஜெபம் நிறைந்த நேரம் தந்தார்
கண்ணீர் நிறைந்த கண்கள் தந்தார்.
கருணை நிறைந்த கரங்கள் தந்தார் . – துதிப்

2. வியாதி நேரத்தில் வல்லமை தந்தார்.
சோதனை நேரத்தில் ஜெயம் தந்தார் .
கைவிட்ட நேரத்தில் ஜீவன் தந்தார்.
ஆரோக்கிய நேரத்தில் அடைக்கலம் தந்தார். – துதிப்

3. மனதில் நிறைந்த மகிழ்ச்சி தந்தார்.
தூய்மை நிறைந்த பார்வை தந்தார்.
சிந்தனை நிறைந்த ஊழியம் தந்தார்.
செயல் நிறைந்த திட்டங்கள் தந்தார். – துதிப்

4. ஆபத்து நேரத்தில் அடைக்கலம் தந்தார்.
பெலவீன நேரத்தில் பெலன் தந்தார்.
செய்தி நேரத்தில் தூது தந்தார்.
பாடிய நேரத்தில் பரவசம் தந்தார். – துதிப்

5. சாட்சி நிறைந்த ஜீவியம் தந்தார்.
சத்தியம் நிறைந்த சபை தந்தார்.
இயேசுவில் நிறைந்த ஞானம் தந்தார்.
ஒளி நிறைந்த வழி திறந்தார். – துதிப்

தேவ ஜனமே பாடித் துதிப்போம்
தேவ தேவனைப் போற்றுவோம்
துதிகள் என்றும் ஏற்றியே அவரில் களித்திடுவோம்.

1. சென்ற நாளில் கண்ணின் மணி போல் காத்த
தேவனைத்துதித்திடுவோம்
நீதி தயவு கிருபை நல்கும் ஜீவ தேவனைத்
துதித்திடுவோம். – தேவ

2. வானம் பூமி ஆளும் தேவன்
வாக்கை என்றுமே காத்திடுவார்
அவரின் உண்மை என்றும் நிலைக்கும்
மகிமை தேவனைத் துதித்திடுவோம். – தேவ

3. கர்த்தர் நாமம் ஓங்கிப் படர
தேவ மகிமை விளங்கிடவே
தேவசுதராய் சேவை செய்தும் தேவ ராஜனை
வாழ்த்திடுவோம். – தேவ

4. தம்மை நோக்கி வேண்டும் போது
தாங்கி என்றுமே ஆதரித்தார்
மறந்திடாமல் உறங்கிடாமல்
நினைத்த தேவனைத் துதித்திடுவோம். – தேவ

5. நமது போரை தாமே முடித்து ஜெயமே என்றும் அளித்திடுவார்
சேனை அதிபன் நமது தேவன்
அவரை என்றும் போற்றிடுவோம். – தேவ

தேவ நாமம் வாழ்த்திப் பாடுவோம் நாளும் நம்மைக் காக்கும்
இறைவன் இயேசு என்று.......

1. தேடும்போது தேவன் நம்மை ஆளவருகிறார்
பாடும்போது அவரும் சேர்ந்து பாடிக் களிக்கிறார்
வாழ்த்துவோம் வணங்குவோம் புகழுவோம் போற்றுவோம்
அமைதி நிலவும் அமுத வாழ்வைத் தந்த
இறைவன் இயேசு கிறிஸ்து என்று சொல்லி. – தேவ

2. வாழ்விழந்த மானிடர்க்கு வாழ்வு தருகிறார்
வழியறியா குருடருக்கு ஒளியுமாகிறார்
வாழ்த்துவோம் வணங்குவோம்
புகழுவோம் போற்றுவோம் அவரை நம்பி ஜெபிக்கும்
நெஞ்சில் ஒளியும் வழியும் நிறைந்த வாழ்வை
வழங்கும் இயேசு. – தேவ

3. பாவங்களைப் போக்க வல்ல பரமன் இயேசுவே
இன்னல்களைத் தீர்க்கும் நல்ல இறைவன் இயேசுவே
வாழ்த்துவோம்...........
விண்ணும் மண்ணும் வியந்து போற்றும் கர்த்தர்
இயேசு கிறிஸ்து நாமம் வாழ்க என்று – தேவ

4. கானகத்து நிலவுபோல மனிதன் வாழ்விலே
ஆத்துமத்தை இழந்தபோது பயனுமில்லையே
வாழ்த்துவோம்.......
முழுமையான இதயத்தோடு கர்த்தர் இயேசு
கிறிஸ்துவை நாம் விசுவாசித்து. – தேவ

**536**

மகிமையாய் வெற்றி சிறந்த கர்த்தரை
மகிழ்ந்து பாடிடுவேன் (2)

1. கர்த்தர் என்பது அவர் நாமம்
யுத்தத்தில் வல்லவர் அவரே
கர்த்தர் என் பெலன் என் கீதமுமானவர்
கரம் பிடித்து என் இரட்சிப்புமானவர்–மகிமை

2. அமிழ்ந்தது பார்வோனின் சேனை
ஆழி அவர்களை மூடிக் கொள்ளவே
ஆழங்களில் அமிழ்ந்து போகவே ஆச்சரியமே
அவர் செயலே. – மகிமை

3. பெலத்தினால் சிறந்தவர் வலக்கரமே
பகைஞனை நொறுக்கி அழித்ததுவே
நீட்டினீர் மகத்துவ வலக்கரத்தை
நாட்டினீர் பரிசுத்தப் பர்வதத்தில். – மகிமை

4. கிருபையால் அழைத்த தேவனை
கரம் குவித்து நான் பாடுவேன்
துதிகளில் பயப்படத்தக்கவரை
துதி செலுத்தி நான் கெம்பீரிப்பேன். – மகிமை

5. தம்புரு நடனத்தோடே பாடுவேன்
தீர்க்கதரிசி மிரியாம் போல பெலத்தினால் வழி
நடத்தினவரை பரிகாரி என்று நான் பாடுவேன்.– மகிமை

அனுதினம் உம்மில் நான் வளர்ந்திடவே
உம் அனுக்கிரகம் தரவேண்டுமே
என்னால் ஒன்றும் கூடாதையா
எல்லாம் உம்மால் கூடும்.

***சரணங்கள்***

1. என் ஞானம் கல்வி செல்வம் எல்லாம்
ஒன்றுமில்லை குப்பையென் றெண்ணுகிறேன்
என் நீதி நியாயம் அழுக்கான கந்தல்
என்றே உணர்ந்தேன் என் இயேசுவே. – அனுதினம்

2. அழைத்தவரே உம்மில் பிழைத்திடவே
அவனியில் உமக்காய் உழைத்திடவே
அர்ப்பணிக்கின்றேன் என்னை இன்றே
ஏற்றுக்கொள்ளும் என் இயேசுவே. – அனுதினம்

538

**_பல்லவி_**

வானம் அவருக்கு சிங்காசனமாம்
பூமியோ பாதப் படியாகும் இத்தனை வல்லமையாகிய
தேவன் இருக்கின்றார் என் உள்ளத்திலே—இனி
எனக்கென்ன கவலை வாழ்க்கையிலே.

**_சரணங்கள்_**

1. கேளுங்கள் பெறுவீர் தேடுங்கள் அடைவீர்
தட்டுங்கள் திறக்கும் என்றார்
தேவைகள் அறிந்த தேவாதி தேவன்
என் வாழ்வில் நலமளித்தார் என் இயேசு. – வானம்

2. காணாமல் போன ஆட்டினை மேய்ப்பன்
தோள்மீது சுமப்பது போல்
பாவியர் உள்ளம் திருந்தியே வந்தால்
நம் தேவன் அணைத்துக் கொள்வார்—நம் இயேசு – வானம்

3. புயலையும் மழையையும் பேயையும் நோயையும்
அதட்டியும் அடக்கி வைத்தார்
கல்லையும் கூடப் பேசிடச் செய்யும்
வல்லமையுடனிருப்பார்— நம் இயேசு. – வானம்

4. தாழ்வினை ஏற்று தயவுடனிருப்பார்
என்னில் உயர்ந்திடுவார் வானமும் பூமியும் மாறிடினும் என்
வார்த்தை மாறாதென்றார்— நம் இயேசு. – வானம்

<u>***பல்லவி***</u>

தேவாதி தேவனாம் இயேசுவைப்போல
வேறே தேவனுண்டோ ?– பாரினில்
வேறொரு தேவனில்லை.

<u>***சரணங்கள்***</u>

1. வானமும் பூமியும் சிருஷ்டித்தவர்–ஆஆ
வானாதி வானமும் கொள்ளாதவர்,
வான் தூதரெல்லாம் போற்றுபவர். – தேவாதி

2. ஆதியில் வார்த்தையாய் இருந்தாரே –ஆஆ
ஆதியும் அந்தமும் அவர் தானே!
ஆன்மாவை மீட்டிடும் ஆண்டவரே. தேவாதி

3. ஆதாமின் பாவத்தால் அடிமைக் கொண்ட –ஆஆ
சாபத்தின் மரணத்தை வென்றிடவே
மரித்தும், உயிர்த்தும் எழுந்தாரே. – தேவாதி

4. பாவியின் மீட்புக்காய் பூமியெல்லாம் –ஆஆ
இயேசு வல்லாமல் ஓர் நாமமில்லை
இன்றே பணிந்திடுவாய் அவரை. – தேவாதி

5. பூமியின் வாசிகளே! எல்லாரும்–ஆஆ
சிலுவையில் கிறிஸ்துவின் இரத்தம் பாரும்
பாவ நிவிர்த்தியும் அடைய வாரும். – தேவாதி

6. ஜீவனின் இரட்சிப்பை அடைந்திடவே–ஆஆ
ஜீவனை ஈந்தவர் இயேசு தானே! உயிர்த் தெழுந்தவரும்,
அவர் தானே! – தேவாதி

speokarun@gmail.com

எஜமானுக்கு ஏற்றதாகவும்
கனத்துக்குரிய பாத்ரமாய் இருப்பதற்கும்
வாழ்நாள் எல்லாம் போராடு சோர்வு இல்லாமல் ஓடு.

***சரணங்கள்***

1. பெரிய வீட்டிலே தங்கப் பாத்திரம்,
வெள்ளிப் பாத்திரம் மரப் பாத்திரம் மண்ணுப் பாத்திரம்
கனத்துக்கு உள்ளதும் கனவீனத்துக்கு உள்ளதும்,
வீட்டிலே சேர்ந்து உள்ளது பரிசுத்தமாய வாழும்படி நாடு
பரிசுத்தவானே எஜமானின் உபயோகமானதாய்
கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான். – வாழ்நாள்

2. யவ்வனத்தின் ஆசை இச்சைக்கு
விலகி கர்த்தரைத் தொழுது கொள்
நீதியும், விசுவாசமும் அன்பையும் சமாதானத்தையும்
அடையும்படி நீ நாடு, போராடு. – வாழ்நாள்

ஆராதிப்போம் வாரும் கர்த்தர் இயேசுவை
ஆவி உண்மையோடும் ஆண்டவரை அன்பின் பிதாவை – ஆராதிப்

1. பாவ மன்னிப்பளித்தார் அவர் நமக்கு
விடுவித்தார் இரத்தத்தால் சாபத்தினின்று
ஜெயம் கூறிடுவோம் சதா அவர்க்கே – ஆராதிப்

2. கண்களைத் திறந்தார் இயேசுவைக்காண
கண்டடைவோம் ஆவியின் கட்டிடத்தை
அற்புதம் அற்புதம் சதா அவரே – ஆராதிப்

3. சுதந்திரம் பெற பாத்திரரானோம்
அதிகாரம் பெற்று ராஜ்ஜியம் ஆள ஓசன்னா ஓசன்னா
ஜெயமவர்க்கே – ஆராதிப்

4. உலகத்தை ஜெயிக்கும் ஜீவியம் ஈந்தார்
சிலுவையின் சக்தியால் காத்தாரே நம்மை
துதிப்போம் துதிப்போம் கர்த்தர் இயேசுவை – ஆராதிப்

5. கர்த்தருக்காக சபை காத்திருக்குதே
நித்தியமாய் அவரை நாம் அடைய வந்தனம் வந்தனம்
மீட்பருக்கே – ஆராதிப்

<u>***பல்லவி***</u>

எண்ணிலடங்கா ஸ்தோத்திரம் – தேவா
என்றென்றும் நான் பாடுவேன்
இந்நாள் வரை என் வாழ்விலே நீர் செய்த நன்மைக்கே!

<u>***சரணங்கள்***</u>

**1.** வானாதி வானங்கள் யாவும் – அதின்
கீழுள்ள ஆகாயமும் பூமியில் காண்கின்ற யாவும்
கர்த்தா உமைப் போற்றுமே! – எண்ணி

**2.** காட்டினில் வாழ்கின்ற யாவும் – கடுங்
காற்றும் பனி தூறலும் நாட்டினில் வாழ்கின்ற யாவும்
நாதா உமைப் போற்றுமே! – எண்ணி

**3.** நீரினில் வாழ்கின்ற யாவும் –இந்
நிலத்தின் ஜீவராசியும் பாரினில் பறக்கின்ற யாவும்
பரனே உமைப் போற்றுமே! – எண்ணி

**4.** சூரிய சந்திரரோடே
சகல நட்சத்திரக் கூட்டமும் ஆகாயப் பறவைகள் யாவும்
தேவா உமைப் போற்றுதே! – எண்ணி

**5.** பாவ மனுக்குலம் யாவும் தேவா
உம் அன்பினை உணர்ந்தே சிலுவையின் தியாகத்தைக் கண்டு
ஓயா துதிபாடுதே! – எண்ணி

**6.** பூமியில் வாழ்கின்ற யாவும்– அதன்
மேலுள்ள ஆகாயமும் வான் தூதர் சேனைகள் யாவும்
தேவா உமைப் போற்றுதே! – எண்ணி

மாலையில் துதிப்போம் மகிழ்வுடனே மனக்களிப்புடனே
மாண்புகழ் இயேசுவை வானவரோடே – மாலையில்

1. காலை மாலை உறங்காரே – நம்
காவலனாய் இருப்பாரே ஆவலுடன் துதி சாற்றிடுவீரே! – மாலை

2. கிருபையின் வாக்குத் தந்தாரே – அதை
அருமையாய் நிறைவேற்றினாரே உரிமையுடன் புகழ் சாற்றிடுவீரே!
– மாலை

3. சோதனை வந்திட்ட நேரம்– அவர்
போதனை செய்தார் அந்நேரம் சாதனையாகவே நிற்கச் செய்தாரே!
– மாலை

4. அழைத்த மெய் அழைப்பிலே தானே – நாம்
உழைத்திட பெலன் தந்த தேனே பிழைத்திட ஜீவன் கிறிஸ்துவில் தானே!
– மாலை

5. வயல் நிலம் ஏராளம் காட்டி– அதில்
அறுவடை தாராளம் ஏற்றி அரிக்கட்டோடே வர கிருபை செய்தாரே!
– மாலை

6. ஆணி துளைத்திட தானே – தம்மை
தியாகமாய்க் கொடுத்திட்ட தேனே ஏகமாய் இயேசுவின் நாமத்தைத்
தானே! – மாலை

7. ஆயிரம் நாவிருந்தாலும் – அவர்
அன்பைத் துதிக்கப் போதாது பதினாயிரம் பேரில் சிறந்தவரை நாம்!
– மாலை

8. உன்னதருக்கு மகிமை – இப்பூமியிலே சமாதானம்
மனுஷரில் பிரியம் உண்டாகச் செய்தாரே! – மாலை

கர்த்தரின் கிருபைகளை என்றென்றும் பாடிடுவோம்
அவர் உயர்ந்த நாமமதை ஒருமித்து உயர்த்திடுவோம்.

***<u>சரணங்கள்</u>***

**1.** சந்ததம் அவர் புகழ் ஓங்கிடவே
சபையாய் நம்மை அழைத்தாரே
சாற்றிடுவோம் நம் துதியினையே
சர்வ வல்லவராம் இயேசுவுக்கே. – கர்த்தரின்

**2.** மரண இருளில் நடந்திடினும்
மாபெரும் தீங்குக்கும் அஞ்சேனே
சோர்ந்து போகாமல் ஜெயம் பெறவே
கர்த்தரின் கிருபை நம்மோடிருக்கும். – கர்த்தரின்

**3.** ஜெயத்தின் கீதங்கள் பாடிடுவோம்
ஜெய முழங்க துதித்திடுவோம் அல்லேலூயா நாம் ஆர்ப்பரித்தே
அல்லும் பகலிலும் பாடிடுவோம். – கர்த்தரின்

## 545

### பல்லவி

பூமியின் குடிகளே எல்லாரும் பாடுங்கள், எல்லாரும்
பாடுங்கள் எல்லாரும் கர்த்தரையே
கெம்பீரமாய்ப் பாடுங்கள் –பூமியின்

### சரணங்கள்

1. மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்து
ஆனந்த சத்தத்தோடே சந்நிதி முன் வாருங்கள் – பூமியின்

2. கர்த்தரே நமது தேவனென்று அறியுங்கள்
நாம் அல்ல அவரேதான் நம்மை உண்டாக்கினார் – பூமியின்

3. நாம் அவருடைய ஜனங்களாயிருக்கிறோம்
அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம் – பூமியின்

4. அவருடைய வாசல்களில் – துதியோடும்
பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து – பூமியின்

5. கர்த்தர் நல்லவர்அவர் கிருபை என்றென்றும்
உண்மை தலைமுறைதலைமுறைக்கும் உள்ளது. – பூமியின்

***பல்லவி***

நன்றியால் துதி பாடு – உன் இயேசுவை
உள்ளத்தால் என்றும் பாடு வல்லவர் நல்லவர்
போதுமானவர் வார்த்தையில் உண்மையுள்ளவர்

***சரணங்கள்***

1. எரிகோ மதிலும் முன்னே வந்தாலும்
இயேசு எந்தன் முன்னே செல்கிறார்
கலங்கிடாதே திகைத்திடாதே
துதியினால் இடிந்து விழும். – நன்றியால்

2. துன்மார்க்கத்துக் கேதுவான வெறி கொள்ளாமல்
தெய்வ பயத்தோடு என்றுமே
ஆவியினால் என்றும் நிறைந்தே சங்கீத கீர்த்தனம் பாடு.
– நன்றியால்

3. சரீரம் ஆத்துமா ஆவியிலுமே
சோர்ந்து போகும் வேளையில் எல்லாம்
துதி சத்தத்தால் உள்ளம் நிறைந்தால்
தூயரின் பெலன் கிடைக்கும். – நன்றியால்

## பல்லவி

துதிப்போம் அல்லேலூயா பாடி
மகிழ்வோம் மகிபனைப் போற்றி
மகிமை தேவ மகிமை தேவ தேவனுக்கே மகிமை. – அல்லேலுயா

## சரணங்கள்

1. தேவன் நம்மை வந்தடையச் செய்தார்.
தம்மை என்றும் அதற்காகத் தந்தார்.
அற்புதங்கள் செய்யும் சர்வவல்ல தேவன்
அடைக்கலம் கொடுத்திடுவார். – துதிப்

2. அஞ்சிடேனே இருளிலே என்றும்
நடமாடும் கொள்ளை நோயைக் கண்டும்
பயங்கரத்திற்கும் பறக்கும் அம்பிற்கும்
பயந்திடேன் ஜெயித்திடுவேன். – துதிப்

3. தேவன் எந்தன் அடைக்கலமாமே
ஒரு போதும் பொல்லாப்பு வராதே
சர்வ வல்ல தேவன் தாபரமய் நின்றே
விடுவித்துக் காத்திடுவார் – துதிப்

**பல்லவி**

இயேசு இராஜாவுக்கே ஜே,ஜே
கிறிஸ்து இயேசு இராஜாவுக்கே ஜே

**சரணங்கள்**

1. எனக்காகப் பிறந்தார் அல்லேலூயா
எனக்காக வாழ்ந்தார் அல்லேலூயா
எனக்காக மரித்தார் அல்லேலூயா
எனக்காக உயிர்த்தார் அல்லேலூயா. – இயேசு

2. பாவங்களை மன்னித்தார் அல்லேலூயா
பாடுகளை ஏற்றுக் கொண்டார் அல்லேலூயா
பாசத்தின் தெய்வமவர் அல்லேலூயா
இந்தப் பாவியையும் நேசித்தார் அல்லேலூயா. – இயேசு

3. அவர் அன்பை உணர்ந்தேன்அல்லேலூயா
அவர் பாதம் பணிந்தேன் அல்லேலூயா
அவர் சித்தம் செய்வேன் அல்லேலூயா
அவருக்கே அடிமை நான் அல்லேலூயா. – இயேசு

4. இதோ சீக்கிரமாய் வருகிறார் அல்லேலூயா
நாமும் ஆயத்தமாய் இருப்போம் அல்லேலூயா
அவருடன் செல்வோம் அல்லேலூயா
அங்கே நித்தியமாய் வாழுவோம் அல்லேலூயா. – இயேசு

speakarun@gmail.com

## *பல்லவி*

எப்படிப் பாடுவேன் நான்—என்
இயேசு எனக்குச் செய்ததை
ஆயுள் முழுவதும் என் கர்த்தருக்காய்
ஆத்தும ஆதாயம் செய்வேன்.

## *சரணங்கள்*

**1.** ஒரு வழி அடையும் போது புது வழி திறந்த தேவா
திறந்த வாசலை என் வாழ்க்கையில்
அடைக்காத ஆண்டவரல்லோ. – எப்படி

**2.** எப்பக்கம் நெருக்கப்பட்டும் ஒடுங்கி நான் போவதில்லை
அப்பனின் மார்பினில் சாய்ந்தென்றுமே
எப்போதும் பாடிடுவேன். – எப்படி

**3.** கடந்து வந்த பாதையில் கண்மணிபோல் காத்திட்டீர்
கடுகளவும் குறைவைக்காமலே அதிகமாய் ஆசீர்வதித்தீர்.
– எப்படி

speakarun@gmail.com

நான் நேசிக்கும் தேவன் இயேசு இன்றும் ஜீவிக்கிறார்
அவர் நேற்றும் இன்றும் நாளை என்றும் மாறாதவர்.

***<u>பல்லவி</u>***

நான் பாடி மகிழ்ந்திடுவேன் என் இயேசுவைத்
துதித்திடுவேன் என் ஜீவிய காலமெல்லாம்
அவர் பாதத்தில் அமர்ந்திருப்பேன்.

1. கடலாம் துன்பத்தில் தவிக்கும் வேளையில் படகாய் வந்திடுவார்
இருள் தனிலே பகலவனாய் இயேசுவே ஒளி தருவார்.
– நான் பாடி

2. வியாதி நோயாலே வாடும் வேளையில் மருத்துவராகிடுவார்
மயங்கி விழும் பசிதனிலே மன்னாவைத் தந்திடுவார். – நான் பாடி

3. தூற்றும் மாந்தரின் நடுவில் எந்தனைத் தேற்றிட வந்திடுவார்
கால் தளரும் வேளைதனில் ஊன்றுகோல் ஆகிடுவார்.
– நான் பாடி

4. நேசர் என்னோடு துணையாய் ஜீவிக்க
நான் இனி கலங்கிடேனே
எந்தனுக்கே காவல் அவர் நான் உடல் அவர் உயிரே. – நான் பாடி

1. இஸ்ரவேலின் சேனைகளின் முன் நடந்த தெய்வமே
எங்கள் சேனாபதியாக எங்கள் முன்னே செல்லுமே!

2. உம்மை நம்பி உம்மை சார்ந்து உம்மை மகிமைப்படுத்தவே,
அடியார் தொடுக்கும் வேலையை நீர் ஆசீர்வதிக்க வேணுமே!

3. நீர் துரத்த நாங்கள் செல்வோம் நீர் எதிர்க்க நாங்கள் வெல்வோம்!
நீர் ஜெயிக்க நாங்கள் ஆள்வோம் உம்மோடும் தூதரோடும்!

4. சமுத்திரத்தை இரண்டாகப் பிளந்த எங்கள் தெய்வமே!
உலர்ந்த தரையைக் கண்ட மக்களுக் கொளியாயிருந்த நாதனே!

5. சத்துருவின் நிந்தையையும் சாத்தானின் மதியீனமும்
ஆரவார மாயெழும்பி அமளி பண்ணும் நேரத்தில்!

6. யோசுவாவின் போர்க்களத்தில் வீரனாக முன் நின்றவா!
சந்திர சூரிய மண்டலங்கள் தரித்து நிற்கச் செய்தவா!

7. ஸ்நானகன் யோவானோடேசு ஸ்நானம் பண்ணும் நேரத்தில்
வந்தமர்ந்த வான்புறாவே சத்திய வழியில் நடத்துமே!



# 552

***பல்லவி***

சேனைகளின் கர்த்தர் தேவன் நம்முடன் இருக்கின்றார்
சேனைகளின் கர்த்தர் இயேசு நம்முடன் செல்கின்றார்
சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர்
சேனைகளின் கர்த்தர் வல்லமீட்பர்
சேனைகளின் கர்த்தர் மகாராஜா
சேனைகளின் கர்த்தர் நம்தேவன்.

***சரணங்கள்***

**1.** கோலியாத் பெலிஸ்தியன் வாளோடும் ஈட்டியோடும்
கேடகமும் தரித்தோனாய் வந்தான்
தாவீதோ கவணையும் கற்களையும் கையிலேந்தி
இஸ்ரவேலின் படைக்காகச் சென்றான்
இஸ்ரவேலின் தேவனின் படையது
சேனைகளின் கர்த்தரின் யுத்தமது
தேவ மக்கள் ஜெயித்தனர் எதிரிகள் முறிந்தனர். –சேனைகளின்

**2.** உலகமும் மாமிசமும் பிசாசும் எதிர்த்து வந்தால்
வாகை சூடும் வீரசேனாபதி வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம்
கொண்ட இயேசுவே நம் அதிபதி
பாவத்திற்கு எதிர்த்துப் போராடியே
சாப தீட்டை உதறித் தள்ளுவோமே யுத்தம் செய்யப் பழகுவோம்
இரத்தம் சிந்த பயப்படோம். – சேனைகளின்

**3.** தீங்கு நாளில் அந்தகார லோகாதிபதிகளோடு
துரைத்தன அதிகாரத்தோடும் வானலோக பொல்லாத
ஆவிகளின் சேனையோடும்
பூலோகத்தில் போராட்டங்கள் உண்டு
உலகத்தில் இருக்கும் சாத்தானிலும்
உன்னில் வாழும் தேவன் பெரியவர்
சாத்தான் எங்கள் காலின் கீழே
வெற்றிக் கொடி ஏறும் மேலே – சேனைகளின்

## 553

### *பல்லவி*

உம்மோடு இருக்கணுமே – இயேசு
உம்மைப் போல் மாறணுமே
உலகின் ஒளியாய் மலைமேல் அமர்ந்து
வெளிச்சம் கொடுக்கணுமே – நான்.

### *சரணங்கள்*

1. ஓடும் நதியின் ஓரம் வளரும் மரமாய் மாறணுமே
எல்லா நாளும் இலைகளோடு
கனிகள் கொடுக்கணுமே–நான் – உம்

2. உலகப் பெருமை இன்பமெல்லாம் குப்பையாய் மாறணுமே
உம்மையே எந்தன் கண்முன் வைத்து
ஓடி ஜெயிக்கணுமே – நான் – உம்

3. வார்த்தை என்னும் வாளை ஏந்தி யுத்தம் செய்யணுமே
விசுவாசம் என்னும் கேடகத்தால்
பிசாசை வெல்லணுமே – நான் – உம்

4. ஆத்ம பார உருக்கத்தோடு அழுது புலம்பணுமே
இரவும் பகலும் விழித்து ஜெபிக்கும்
மேய்ப்பனாகணுமே – நான் – உம்



## *பல்லவி*

கிறிஸ்துவுக்குள் வாழும் எனக்கு
எப்போதும் வெற்றி உண்டு.

## *சரணங்கள்*

1. என்னென்ன துன்பம் வந்தாலும்
நான் கலங்கிடவே மாட்டேன்
யார் என்ன சொன்னாலும்
நான் சோர்ந்து போக மாட்டேன். – கிறிஸ்து

2. சாத்தானின் அதிகாரமெல்லாம்
என் இயேசு பறித்துக் கொண்டார்
சிலுவையில் அறைந்து விட்டார்
அவர் காலாலே மிதித்து விட்டார். – கிறிஸ்து

3. என் இராஜா முன்னே செல்கிறார்
வெற்றி பவனி செல்கிறார்
குருத்தோலை கையில் எடுத்து
நான் ஓசன்னா பாடிடுவேன்.  – கிறிஸ்து

4. இராஜாதி இராஜா இயேசு மேகங்கள் நடுவினிலே
கரம் நீட்டி அழைத்துச் செல்வார்
அந்த நாளை நான் வாஞ்சிக்கிறேன். – கிறிஸ்து



வனாந்திர யாத்திரையில் களைத்து நான்
சோர்ந்து போகும் நேரங்களில்
நேசரின் சத்தம் என்னில் கேட்டிடும்
என் வாழ்வு செழித்திடுமே.

1. செங்கடல் எதிர்த்து வந்தும் பங்கம் வந்திடாமல் அங்கு
பாதை ஒன்று கண்ணில் தெரியுதே
விடுவிப்பார் ஆண்டவர் நல்குவார் புது பெலன்
தடுத்திடும் சத்துருக்கள் அழிந்து மாளுவார்– வனாந்திர

2. தேவனை மறக்கச் செய்யும்
வேதனை நிறைந்த வாழ்வை
சத்துரு விதைத்திடும் போது
மாராவின் கசந்த நீர் மதுரமாக மாறிடும்
காரிருள் நீங்கிட வெளிச்சம் தோன்றுமே.
– வனாந்திர

3. இனிமையற்ற வாழ்வில் நான்
தனிமையென்று எண்ணும் போது
மகிமை தேவன் தாங்கிடுவாரே
இனிமையாம் மன்னாவை
வருஷிக்கப் பண்ணுவார்
இனியெனக்கென்றுமே தாழ்வு இல்லையே – வனாந்திர



## *பல்லவி*

இந்தியாவில் இயேசு நாமம்
இன்றே கூற வேண்டும்
இந்தியரைப் பரலோகத்தில்
பாக்கியவான்களாய் மாற்றும்.

## *சரணங்கள்*

1. எலியாக்கள் எழும்ப வேண்டும்
எலிசாக்கள் எழும்ப வேண்டும்
கர்த்தரின் வல்ல நாமம் உயர்த்தியாக வேண்டும். – இந்தியா

2. வல்லமை இறங்க வேண்டும்
அற்புதம் விளங்க வேண்டும்
கர்த்தரே தெய்வம் என்று
ஜாதிகள் முழங்க வேண்டும். – இந்தியா

3. தேசத்தின் ஜனத்தைக் காக்க
திறப்பின் வாயில் நிற்க
தேவன் தேடும் மனிதன்
நம்மில் யார் தானுண்டு ? – இந்தியா

## *பல்லவி*

இயேசு இராஜா முன்னே செல்கிறார்
ஓசன்னா கீதம் பாடுவோம்
வேகம் சென்றிடுவோம்.

## *அனுபல்லவி*

ஓசன்னா ஜெயமே ஓசன்னா ஜெயம் நமக்கே

1. அல்லேலூயா துதி மகிமை – என்றும்
அல்லேலூயா துதி மகிமை
இயேசு இராஜா எங்கள் இராஜா
என்றென்றும் போற்றிடுவோம் – ஓசன்னா

2. துன்பங்கள் சூழ்ந்து வந்தாலும்
தொல்லைக் கஷ்டங்கள் தேடி வந்தாலும்
பயமும் இல்லை கலக்கம் இல்லை
கர்த்தர் நம்முடனே. – ஓசன்னா

3. யோர்தானின் வெள்ளம் வந்தாலும்
எரிகோ கோட்டை முன்னே வந்தாலும்
பயமும் இல்லை கலக்கம் இல்லை
மீட்பர் நம்முடனே. – ஓசன்னா

## பல்லவி

எனக்கொருவர் இருக்கின்றார்
அவர் என்னையும் நேசிக்கின்றார்
காட்டினிலே அலைந்த என்னை
கருணையால் தேடுகின்றார்
அவர்தான் இயேசு – 8

## சரணங்கள்

1. கானகத்து ஆட்டினைப் போல் வழிதப்பித் திரிந்தேன்
மேய்ப்பனவர் தேடி வந்து
என்னையும் மீட்டு கொண்டார். – எனக்

2. என்னை அவர் தெரிந்ததினால்
மன்னரை அறிந்தேனே
பரத்திலென்னை சேர்த்திடுவார்
பரிசுத்தம் அடைந்திடுவேன். – எனக்



**பல்லவி**

கண்ணோக்கிப் பாரும் தேவா என்னை
கண்ணோக்கிப் பாரும் தேவா
கண்ணோக்கிப் பாரும் தேவா – இயேசு தேவா
கண்ணோக்கிப் பாரும் தேவா
ஒத்தாசை அனுப்பும் பர்வதமே
கண்ணோக்கிப் பாரும் தேவா – இயேசு தேவா
கண்ணோக்கிப் பாரும் தேவா.

**சரணங்கள்**

1. அசுத்த ஆவியை எடுத்தீரே
பரிசுத்த ஆவியைக் கொடுத்தீரே
கர்த்தாதி கர்த்தனே அப்பா பிதாவே
உம் நாமம் எந்தன் கெம்பீரமே – கண்

2. பயமுள்ள ஆவியை எடுத்தீரே
பலமுள்ள ஆவியைக் கொடுத்தீரே
தேவாதி தேவனே அப்பா பிதாவே
உம்பாதம் எந்தன் தஞ்சமே. – கண்

3. உலகத்தின் ஆவியை எடுத்தீரே
உன்னத ஆவியைக் கொடுத்தீரே
ராஜாதி ராஜனே அப்பா பிதாவே
உம் கிருபை என்றும் போதுமே. – கண்



***பல்லவி***

உதவி வரும் கன்மலை நோக்கிப் பார்க்கின்றேன்
வானமும் வையமும் படைத்தவரை நான் பார்க்கின்றேன்.

***சரணங்கள்***

1. கால்கள் தள்ளாட விடமாட்டார்
காக்கும் தேவன் உறங்கமாட்டார்
இஸ்ரவேலைக் காக்கின்றவர்
எந்நாளும் தூங்க மாட்டார். – உதவி

2. கர்த்தர் என்னைக் காக்கின்றார்
எனது நிழலாய் இருக்கின்றார்
பகலினிலும் இரவினிலும்
பாதுகாக்கின்றார். – உதவி

3. கர்த்தர் எல்லாத் தீங்கிற்கும்
விலக்கி என்னைக் காத்திடுவார்
அவர் எனது ஆத்துமாவை
அனுதினம் காத்திடுவார். – உதவி

4. போகும் போதும் காக்கின்றார்
திரும்பும்போதும் காக்கின்றார்
இப்போதும் எப்போதும்
எந்நாளும் காக்கின்றார். – உதவி



## பல்லவி

கர்த்தருக்குக் காத்திருந்து
கழுகுபோல் பெலன் அடைந்து
செட்டைகளை அடித்து உயரே எழும்பிடுவாய்.
புதுபெலன் அடைந்திடுவாய் –நீ
புதுபெலன் அடைந்திடுவாய்.

## சரணங்கள்

1. விசுவாசம் உள்ளவனை
ஆவியில் நிறைத்திடுவார்
வறண்ட நிலத்தின் மேல்
தண்ணீர் ஊற்றிடுவார்.– புது

2. சர்ப்பங்களை எடுப்பாய்
தேள்களை மிதிப்பாய்
சத்துருவின் அதிகாரம்
சகலமும் மேற்கொள்ளுவாய். – புது

3. சாத்தானின் கோட்டைகளை
சத்தியத்தால் தகர்ப்பாய்
சிலுவையை சுமந்திடுவாய்
ஜெயக்கொடி ஏற்றிடுவாய். – புது



## பல்லவி

ஜெபம் ஜெபம் ஜெபமே ஜீவன்
ஜெபித்திட ஜெபித்திட ஜெயம் வருமே
ஜெபம் ஜெபம் ஜெயம் அல்லேலூயா
ஜெயம் ஜெயம் ஜெயம் அல்லேலூயா.

## சரணங்கள்

**1.** ஜெகத்தின் அதிபதி சாத்தானுடன்
போராட்டம் அதிகமுண்டு –நம் ஜெபமே அவனை முறியடிக்கும்
ஜெயத்தின் போராயுதம்
போராயுதம் பேராயுதம் ஜெபமே சர்வாயுதம் – ஜெபம்

**2.** பாடுகள் பூமியில் நமக்குண்டு பரமன் வாக்கிதுவே–பரி
பூரண வெற்றி அடைந்திடவே ஜெபமே நம் ஆயுதம்
நம் ஆயுதம் நல்லாயுதம் ஜெபமே சர்வாயுதம் – ஜெபம்

**3.** சோதனை எதுவாய் இருந்திடினும்
வேதனை தேவை இல்லை – எந்த
வேளையிலும் நாம் ஜெயம் பெறவே
ஜெபமே நம் ஆயுதம் நம் ஆயுதம் நல்லாயுதம்
ஜெபமே சர்வாயுதம் – ஜெபம்

***பல்லவி***

இன்று கண்ட எகிப்தியனை
என்றுமே இனி காண்பதில்லை
இஸ்ரவேலைக் காக்கும் தேவன்
உறங்கவில்லை தூங்கவில்லை.

***சரணங்கள்***

1. கசந்த மாரா மதுரமாகும்
வசந்தமாய் உன் வாழ்க்கை மாறும்
கண்ணீரோடே நீ விதைத்தால்
கெம்பீரமாய் அறுத்திடுவாய்– இஸ்ரவேலை

2. தண்ணீரை நீ கடக்கும் போது
கண்ணீரை அவர் துடைத்திடுவார்
வெள்ளம் போல சத்துரு வந்தால்
ஆவியால் கொடியேற்றிடுவார் – இஸ்ரவேலை

3. வாதை உந்தன் கூடாரத்தை
அணுகாமலே காத்திடுவார்
பாதையிலே காக்கும்படிக்கு
தூதர்களை அனுப்பிடுவார் – இஸ்ரவேலை

4. சோர்ந்து போன உனக்கு அவர்
சத்துவத்தை அளித்திடுவார்
கோரமான புயல் வந்தாலும்
போதகத்தால் தேற்றிடுவார் – இஸ்ரவேலை

## *பல்லவி*

சிங்கக்குட்டிகள் பட்டினி கிடக்கும்
ஆண்டவரைத் தேடுவோர்க்குக் குறையில்லையே
குறையில்லையே, குறையில்லையே
ஆண்டவரைத் தேடுவோர்க்குக் குறையில்லையே.

## *சரணங்கள்*

**1.** புல்லுள்ள இடங்களில் என்னை மேய்க்கின்றார்
தண்ணீரண்டை கூட்டிச் சென்று
தாகம் தீர்க்கின்றார். – சிங்க

**2.** ஆத்துமாவைத் தேற்றுகின்றார் ஆவி பொழிகின்றார்
ஜீவனுள்ள நாட்களெல்லாம்
கிருபை என்னைத் தொடரும். – சிங்க

**3.** எதிரிகள் முன் விருந்தொன்றை ஆயத்தப்படுத்துகிறார்
என் தலையை எண்ணெயினால்
அபிஷேகம் செய்கின்றார். – சிங்க

**4.** என் தேவன் தம்முடைய மகிமை செல்வத்தினால்
குறைகளையே கிறிஸ்துவுக்குள்
நிறைவாக்கி நடத்திடுவார். – சிங்க

## பல்லவி

மீட்பரின் சத்தம் என் நேசரின் சத்தம்
மேகத்தின் மீது வருவேன் என்றார்
எக்காளம் முழங்கிடும் வேளையில் தான்
தூதர்கள் சூழ்ந்திட வந்திடுவார்.

## சரணங்கள்

1. அவர் வரும் வேளையை அறிந்திடாமல்
அழிந்திடும் பாதையில் செல்கின்றாரே
ஆவியின் அச்சாரம்பெற்றிடாமல்
அழுது புலம்பி திரிகின்றாரே. – மீட்பரின்

2. உலகக் கவலை மதியீனத்தால்
உள்ளங்கள் உடைந்து வாழ்கின்றாரே
உன்னதர் இயேசுவை நேசியாமல்
உல்லாச வாழ்வில் மடிகின்றாரே. – மீட்பரின்

3. உன்னை நேசிக்கும் அன்பர் உண்டு
இயேசு என்னும் நேசர் உண்டு
உள்ளத்தை அவரண்டை தந்திடு இன்று
உண்மையாய் நித்திய ஜீவன் உண்டு. – மீட்பரின்

1. உன்னத வீட்டை சீக்கிரம் சென்று
அன்பரைச் சேர்ந்திடுவேன் – என்
இயேசு ரட்சகர் ஏழையின் வாஞ்சை
யாவையும் தீர்த்து விட்டார்!

2. தூதரின் மத்தியில் மகிழ் கொண்டாடியே
தூயனைப் போற்றிடுவேன்
கமழ் வாசனை வீசும் பூக்களின் மத்தியில்
களிப்புடன் அமர்ந்திடுவேன்!

3. வானோர்கள் பல பல ஊழியம் செய்ய
ஏழையும் சேர்ந்து கொள்வேன் – என்
இயேசுவின் துதியை நாவினால் பாடி
நேசரில் அகமகிழ்வேன்!

4. பளிங்கு நதியின் ஓரங்களில் நான்
பாடி உலாவிடுவேன் – பொன்
வீதியில் நானும் அன்பருடனே கவியுடனடி எடுப்பேன்!

5. மிருகங்கள் விதம் விதம் ஏறிட்டு வந்தாலும்
ஒன்றுக்கும் அஞ்ச மாட்டேன்
சிங்கம் புலி தானும் நெருங்கியே வந்தாலும்
அதனையும் அழைத்திடுவேன்!

6. பறவைகள் அநேகம் விருட்சங்கள் அதிகம்
நானும் அங்கே யுண்டு பராபரன் தாமே எனக்காகச் சேர்த்த
பொருள்களும் மெத்தவுண்டு!

7. பேதுரு யோவான் பவுலுங்கூட அங்கே ஓய்ந்திருப்பார் – என்
நேசரின் வீட்டில் மகா பேரின்பம் ஆ ஆ ஆனந்தமே!

**1.** இந்தக் கடைசி நாட்களில் சந்தோஷம் நம்பிக்கை உண்டு
ஆச்சரியமாய் சத்தியமாய்   ராஜாதி ராஜாவாய் ஆளுவார்.

***<u>பல்லவி</u>***

அவர் வருவார் சீக்கிரமாய் வருவார்
ஆவலோடு எதிர்பார்க்கின்றோம்
காலையிலோ மாலை நேரத்திலோ வரவே வருவார் அறிவோம்.

**2.** வானத்திலும் பூமியிலும் நாம் காணும் அடையாளங்கள்
அவர் வருகை சமீபம் எனவே சாட்சியாய்க் கூறுது. – அவர்

**3.** கிறிஸ்துவுக்குள் மரித்த கணக்கில்லாத பக்தர்கள்
ஆகாயத்தில் பறந்துபோய் அவருடன் என்றென்றும்
ஜீவிப்பார். – அவர்

**4.** உயிரோடிருக்கிற நாமும் நம் தேவனைச் சந்திப்போமே
இந்நம்பிக்கை வீணல்லவே நாம் ஒருவர் ஒருவரைத்
தேற்றுவோம். – அவர்

# 568

***பல்லவி***

அழகாய் நிற்கும் யார் இவர்கள் ? திரளாய் நிற்கும் யார் இவர்கள் ?
சேனைத் தலைவராம் இயேசுவின் பொற்களத்தில்
அழகாய் நிற்கும் யார் இவர்கள்.


***சரணங்கள்***

1. எல்லா ஜாதியார் எல்லா கோத்திரம்
எல்லா மொழியும் பேசும் மக்களாம்
சிலுவையின் கீழ் இயேசு இரத்தத்தால்
சீர் போராட்டம் செய்து முடித்தார். – அழகாய்

2. வெள்ளை அங்கியைத் தரித்துக் கொண்டு
வெள்ளை குருத்தாம் ஓலை பிடித்து
ஆர்ப்பரிப்பார் பிதாவின் முன்பு
ஆட்டுக்குட்டிக்கே மகிமை என்று. – அழகாய்

3. தனிமையிலும் வறுமையிலும்
லாசரு போன்று நின்றவர்கள்
யாசித்தாலும் போஷித்தாலும்
விசுவாசத்தைக் காத்தவர்கள். அழகாய்

4. ஆட்டுக்குட்டி தான் இவர் கண்ணீரை
அற அகற்றி துடைத்திடுவார்
அழைத்துச்செல்வார் இன்ப ஊற்றுக்கே
அள்ளிப் பருக இயேசுதாமே. – அழகாய்




5. ஒன்றே ஒன்று என் வாஞ்சையாம்
அழகாய் நிற்போர் வரிசையில் – நான்
ஓர் நாளினில் நின்றிடவும் இயேசு நாதர் அருள் புரிவார்
– அழகாய்

# 569

## ***பல்லவி***


கல்வாரி சிலுவையிலே இயேசு
தொங்கி மரித்தாரே – நம்
பாவங்கள் சாபங்களை – அவர் சுமந்து தீர்த்தாரே.

## ***சரணங்கள்***

1. கை கால்களில் ஆணிகளால்
அவர் வதைந்து துடித்தாரே
வா நீ அந்த சிலுவையண்டை
உன்னை மீட்டுக் கொள்வாரே. – கல்

2. அவர் சிரசினில் முள்முடியை
உனக்காகவே சூடிக் கொண்டார்
இரத்தம் வழிந்தோடுது பார்
மீட்பர் இயேசுவின் முகத்தினிலே. – கல்

3. கொடும் ஈட்டியால் குத்தினாரே
பெரும் வாரினால் அடித்தனரே
அந்த நேரத்திலும் உன்னையே
அவர் கனிவுடன் நோக்குகின்றார். – கல்




4. போதும் உலகத்தின் ஆசைகளே
பாவ நரகத்தின் இச்சைகளே
இனி நீ அதை விட்டு விடு
தேவ இரட்சிப்பைப் பெற்று விடு. – கல்

மனிதர்களே மனிதர்களே கொஞ்சம் நில்லுங்கள்
மாய உலகின் கொடுமைகளை எண்ணிப் பாருங்கள்
மரணம் என்பதின்று கூட உன்னைப் பிடிக்கலாம்
மன்னிப்புக்காய் அந்த நேரம் நீயும் துடிக்கலாம்
இன்று இந்த நேரம் இரட்சிப்பின் நேரம்
இயேசுவிடம் நித்ய வாழ்வை பெற்றிட வாரும்.

1. எத்தனையோ சந்ததிகள் வந்து போனதே
இன்றிருக்கும் நமது வாழ்வும் முடிந்து போகுமே
இனறிருந்து நாளை மாறும் உனது வாழ்விலே
எத்தனையோ பாவங்களைச் சுமந்து செல்வதேன்
இதுவரை நீ செய்த பாவம் தீர வேண்டாமா ?
இயேசு உன்னை அழைக்கிறார் அவரிடம் நீ வா – மனிதர்

2. வானத்திலே பறவை போல பறந்து திரிகிறாய்
வட்ட நிலா நடுவினிலே நடந்து வருகிறாய்
வாங்கி விடும் மூச்சை உன்னால் காக்க முடியுமா ?
தூங்கும் போது போச்சுதின்னா திரும்ப கிடைக்குமா ?
அதற்கு முன்னே உனது பாவம் தீர வேண்டாமா ?
அன்பு தெய்வம் இயேசு உன்னை அழைக்கிறார் நீ வா – மனிதர்

3. வரும்படி இல்லாதபோது பெற்றோர் வெறுக்கலாம்
வியாதி தீரவில்லை என்றால் டாக்டர் வெறுக்கலாம்
பணமில்லாத போது உன்னை உலகம் வெறுக்கலாம்
மனமுடைந்த போது உன்னை நீயே வெறுக்கலாம்
அன்பு தெய்வம் இயேசு உன்னை வெறுப்பதில்லையே
அவரிடத்தில் வந்தால் உனக்குக் கவலை இல்லையே – மனிதர்

speokarun@gmail.com

**571**

***பல்லவி***

நண்பனே நண்பனே நிம்மதி உனக்கில்லையா
இயேசு தருகிறார் ஓடிவா – 3

1. கையளவான இதயத்திலே கடலளவான சிந்தனை ஏன் ?
விடையறியாத குழப்பங்களா விடுதலைகாண சம்மதமா – 2
– நண்பனே

2. பொய்யுரையாத மனிதருண்டோ
பொய்யும் கூட பாவமன்றோ மெய் சமாதானம் தருவேனென்று
தெய்வகுமாரன் அழைக்கின்றாரே 2 – நண்பனே

3. பாவம் நிறைந்த உள்ளங்களே பாரம் சுமந்து தவிப்பதும் ஏன் ?
வருந்தி சுமையை சுமப்பவரே வாரீர் இயேசு அழைக்கிறாரே – 2
– நண்பனே

4. உனக்காய் பூமிக்கு வந்தவராய்
உனக்காய் ஜீவன் தந்தவராய்
உயிரோடெழுந்து ஜீவிக்கிறார்
உணர்ந்தால் உன்னையும் ஏற்றுக்கொள்வார்
உன்னையும் கூட நேசிக்கிறார்– 2 – நண்பனே

speakarun@gmail.com

### ***பல்லவி***

நிலையில்லா மண்ணில் எனக்காய்
விலையில்லா இரத்தம் சிந்தினார்

### ***சரணங்கள்***

1. ஈனர் உலகில் பாவத்தில் அழிந்தேன்
தூக்குவாரில்லையே கண்ணீரும் சிந்தினேன்
கண்ணீர் துடைத்தார் என்னை அணைத்தார்
சந்தோஷங்கள் தந்தார் – நிலை

2. காணாத ஆட்டைப் போலவே அலைந்தேன்
வழி தப்பியே நான் திரிந்தேன் என்னைத் தேடினார்
சொந்தமாக்கினார் மந்தையில் இணைத்தார் – நிலை

3. மூன்றாணிகளால் கடாவப்பட்டார்
ஐங் கண்டத்திற்காய் தீங்காயமேற்றார்
நீசனாம் எந்தன் பாவம் மறந்தார் யாவும் ஏழைக்காய் – நிலை

4. அந்தோ பாடுகள் கோரமாய் சகித்தார்
பாவ நிவாரண பலியானார் பாவியாம் என்னை மீட்டிடவே
மெய்யன்பு கொண்டார்– நிலை

5. உன் பாவத்திற்காய்  நான் சிலுவையேற்றேன்
துக்கங்கள் சுமந்தே மரித்தேனே என்றார்
இரத்தம் பாய்ந்திடும் ஊற்றை நோக்கியே
பார்த்தேன் பிழைத்தேன் – நிலை



# 573

1. கொஞ்சக்காலம் இயேசுவுக்காக கஷ்டப்பாடு சகிப்பதினால்
இந்த துன்பம் இன்பமாய் மாறும் இயேசுவை நாம் காணும்போது

***<u>பல்லவி</u>***


அவர் பாதம் வீழ்ந்து பணிந்து ஆனந்தக் கண்ணீர் வடிப்பேன்
எந்தன் ஓட்டம் ஜெயத்துடன் முடியும் அந்த நாடு சுதந்தரிப்பேன்.

2. கஷ்டம் கண்ணீர் நிறைந்த உலகை கடந்தென்று நான் மறைவேன்
ஜீவ ஊற்றருகே என்னை நடத்திச் சென்று
தேவன் கண்ணீரைத் துடைத்திடுவார்.

3. இந்த தேகம் அழியும் கூடாரம் இதை நம்பி யார் பிழைப்பான் ?
என் பிதா வீட்டினில் வாசஸ்தலங்கள் உண்டே
இயேசுவோடு நான் குடியிருப்பேன்.

4. வீணை நாதம் தொனித்திடும் நேரம் வரவேற்பு அளிக்கப்படும்
என்னைப் பேர் சொல்லி இயேசு அழைத்திடுவார்
எனக்கானந்தம் பொங்கிடுமே.

5. பலியாக காணிக்கையாக படைத்தேனே உமக்காக
என்னை ஏற்றுக் கொள்ளும் இயேசு ஆண்டவரே
ஏழை நான் என்றும் உம் அடிமை.



1. உள்ளமெல்லாம் உருகுதையா உத்தமரை நினைக்கையிலே
உம்மையல்லால் வேறே தெய்வம்
உண்மையாய் இங்கில்லையே
கள்ளனென்று தள்ளிடாமல் அள்ளி என்னை அணைத்தவா!
சொல்லொண்ணாத நேசத்தாலே– உம் சொந்தமாக்கிக்
கொண்டீரே.

2. எத்தனென்னை உத்தமனாக்க சித்தம் கொண்ட என்
இயேசையா
எத்தனையோ துரோகம் நான் செய்தேன்
அத்தனையும் நீர் மன்னித்தீர்.
ரத்தம் சிந்த வைத்தேனே நான் அத்தனையும் என் பாவமன்றோ ?
கர்த்தரே உம் அன்புக்கீடாய் நித்தம் செய்வேன் சேவையே.

3. மேகமீதில் இயேசு ராஜன் வேகம் தோன்றும் நாளன்றோ ?
லோக மீதில் காத்திருப்போர் ஏக்கமெல்லாம் தீர்ந்திட
தியாகராஜன் இயேசுவை நாம் முகமுகமாய் தரிசிக்க
ஆவலோடு ஏங்கும் தாசன் சோகம் நீங்கும் நாளென்றோ ?

speakarun@gmail.com

## *பல்லவி*

என்னை உண்டாக்கின என் தேவாதி தேவன்
அவர் தூங்குவதுமில்லை உறங்குவதுமில்லை.

## *சரணங்கள்*

1. என்மேல் அவர் கண்ணை வைத்து ஆலோசனை சொல்லுவார்
சத்தியத்தின் பாதையிலே நித்தமும் நடத்துவார்
பரிசுத்த ஆவியால் உள்ளத்தை நிரப்புவார்
பரிசுத்தர் பரிசுத்தர் அவர் பெயரே – என்னை

2. பெலவீன நாட்களிலே பெலன்தந்து தாங்குவார்
பலவித சோதனையில் ஜெயம் நமக்களிப்பார்
ஆபத்துக் காலத்தில் அரணான கோட்டையும்
கேடகமும் துருகமும் பெலன் அவரே – என்னை

3. ஆவியான தேவனுக்கு சொரூபம் ஒன்றும் கூடாதே
அதிசயமானவரை ஆவியோடு தொழுவோமே
வாஞ்சையுள்ள ஆத்துமாவின் இருதயந் தன்னிலே
வார்த்தையாலே பேசுகின்ற ஆண்டவர் இவர்
– என்னை

**பல்லவி**

இயேசுவின் இரத்தம் என்றுமுள்ளதே
பாவங்களைப் போக்குதே. – நண்பா
பாவங்களைப் போக்குதே.

**சரணங்கள்**

1. உன்னதத்திலுள்ள மன்னனாம் தேவன்
உலகத்தையே நேசித்தார் – நண்பா
உலகத்தையே நேசித்தார் ஒரே பேறான குமாரனைத் தந்தார்
சிலுவையிலே மரிக்க–நண்பா சிலுவையிலே மரிக்க. – இயேசுவின்

2. பாவியைத் தேடி பாரினில் வந்தார்
கூவி ஜீவனை விட்டார்– நண்பா
கூவி ஜீவனை விட்டார் லோகத்தின் பாவத்திற்காக மரித்தார்
மூன்றாம் நாளில் எழுந்தார் – நண்பா மூன்றாம் நாளில் எழுந்தார்.
– இயேசுவின்

3. பாவமாம் பாரத்தைப் பாரினில் சுமந்து
எதுவரையில் ஜீவிப்பாய் ? – நண்பா
எதுவரையில் ஜீவிப்பாய் ? இரட்சகர் இயேசுவையே விசுவாசித்து
அவரை இன்று ஏற்றுக்கொள் – நண்பா அவரை இன்று ஏற்றுக்கொள்.
– இயேசுவின்

4. அற்ப உன் ஆயுள் விரைந்தோடுதே
தாமதமே செய்யாதே – நண்பா தாமதமே செய்யாதே
இதோ அநுக்கிரக காலம் இப்பொழுதே
இரட்சண்ய நாளுமிதே – நண்பா
இரட்சண்ய நாளுமிதே. – இயேசுவின்



speakarun@gmail.com

## ***பல்லவி***

என்றும் ஆனந்தம் என் ஏசு தருகின்றார்
துதிப்பேன் துதிப்பேன் துதித்துக் கொண்டேயிருப்பேன்
அல்லேலூயா ஆனந்தமே.

## ***சரணங்கள்***

**1.** உன்னதர் மறைவில் வல்லவர் நிழலில்
என்றும் தங்குவேன் தேவனை நோக்கி
அடைக்கலப்பாறை என்றே சொல்லுவேன். – அல்லேலூயா

**2.** தமது சிறகால் என்னை மூடி காத்து நடத்துவார்
அவரது வசனம் ஆவியின் பட்டயம் எனது கேடகம்.
– அல்லேலூயா

**3.** தேவனைச் சார்ந்து வாழ்கின்ற எனக்கு என்றும் விடுதலை
அவரது நாமம் அறிந்த எனக்கு அவரே அடைக்கலம்.
– அல்லேலூயா

**4.** ஆபத்து நேரம் கூப்பிடும் எனக்கு என்றும் பதிலுண்டு
என்னோடிருந்து விடுதலை கொடுத்து என்னை உயர்த்துவார்.
– அல்லேலூயா

speakarun@gmail.com

***பல்லவி***

உன் மனம் போல் உன் வழியே நீ போகாதே
அது மரண பாதை என்பதை மட்டும் மறவாதே.

***சரணங்கள்***

1. கர்த்தர் இல்லை என்பதை நீயும் உன் மனதிலும் எண்ணாதே
அதைக் கூறுகின்றவன் மதிகேடன் என்று வேதம் சொல்வதை
அறியாயோ ? – உன்

2. அறிவைக் கொண்டு வாழ்ந்து விடலாம்
என்று உன் மனதில் நீ எண்ணாதே
கூடு விட்டு ஆவி போனால் அறிவும் கூட வருவதில்லை. – உன்

3. இன்று நீ மரித்தால் எங்கு செல்வாய்
என்பதை இன்றே முடிவுசெய் மோட்சமா ? நரகமா ? என்பதை
இன்று முடிவுசெய். – உன்

4. மோட்சம் செல்ல வேண்டுமானால்
இயேசுவை நீயும் ஏற்றுக் கொள் இயேசுவை நீயும் புறக்கணித்தால்
நரகம் என்பதை அறிந்து கொள். – உன்

speakarun@gmail.com

ரொம்ப ரொம்ப நல்லவரு எங்கள் இயேசு
நம்பி வந்த ஜனத்திற்கு நல்ல இயேசு
எங்கள் இயேசு நல்ல இயேசு நம்பி வந்த ஜனத்திற்கு நல்ல இயேசு.

***<u>சரணங்கள்</u>***

1. கண்ணீரைத் துடைத்து கவலையைப் போக்குவார்
அருகினில் வந்து ஆறுதல் தருவார் – எங்கள் இயேசு

2. சத்தியம் வெளிச்சம் அவர் தானுங்க
உந்தன் துக்கங்களை முடித்த தேவன் தானுங்க – எங்கள் இயேசு

3. பாவத்தின் சம்பளம் மரணமுங்க
உந்தன் பாவத்தை சுமந்த இரட்சகர் தானுங்க – எங்கள் இயேசு

4. ஒருமனதோடு அவரிடம் ஓடிவா மன்னிப்பு வழங்கும்
வள்ளலைத் தேடிவாங்க. – எங்கள் இயேசு

5. பணமும் பொருளுமின்றி இலவசமாக
அவர் அன்பை ருசித்திட வேகமாக வாங்க – எங்கள் இயேசு

6. வெள்ளம்போல் சாத்தான் வந்திடும் போது
வெற்றிக்கொடி ஏந்தும் வள்ளல் அவரே – எங்கள் இயேசு

speakarun@gmail.com

***பல்லவி***

திருக்கரத்தால் தாங்கியென்னை
திருச்சித்தம் போல் நடத்திடுமே
குயவன் கையில் களிமண் நான்
அனுதினம் நீர் வனைந்திடுமே.

***சரணங்கள்***

1. உம் வசனம் தியானிக்கையில் இதயமதில் ஆறுதலே
காரிருளில் நடக்கையிலே தீபமாக வழி நடத்தும்.– திரு

2. ஆழ்கடலில் அலைகளினால் அசையும் போது என் படகில்
ஆத்ம நண்பர் இயேசு உண்டு சேர்ந்திடுவேன் அவர்
சமூகம். – திரு

3. அவர் நமக்காய் ஜீவன் தந்து அளித்தனரே இந்த மீட்பு
கண்களினால் காண்கிறேனே இன்பக் கானான் தேசமதை.
– திரு

*பல்லவி*

அழகானவர் அருமையானவர் இனிமையானவர்
மகிமையானவர் மீட்பரானவர் – அவர் இயேசு (3)

***சரணங்கள்***

1. சேனைகளின் கர்த்தர் நம் மகிமையின் ராஜா
என்றும் நம்மோடிருக்கும் இம்மானுவேலர்
இம்மட்டும் இனிமேலும் எந்தன் நேசர்
என்னுடையவர் என் ஆத்ம நேசரே. – அழகானவர்

2. கன்மலையும் கோட்டையும் துணையுமானவர்
ஆற்றித் தேற்றிக் காத்திடும் தாயுமானவர்
என்றென்றும் நடத்திடும் எந்தன் ராஜா
என்னுடையவர் என் நேசக் கர்த்தரே. – அழகானவர்

3. கல்வாரி மேட்டிலே கொல்கதாவிலே
நேச இரத்தம் சிந்தியே என்னை மீட்டார்
பாசத்தின் எல்லைதான் இயேசு ராஜா
என்னுடையவர் என் அன்பு இரட்சகர். – அழகானவர்



## பல்லவி

இதுவரை செய்த செயல்களுக்காக
இறைவா உமக்கு ஸ்தோத்திரம் இயேசுவே உமக்கு ஸ்தோத்திரம்

## சரணங்கள்

1. உவர் நிலமாக இருந்த என்னை
விளை நிலமாக மாற்றினீர் என்னை (2)
அலைகளும் ஓய்ந்து அமர்கின்ற வரையில்
நாவினால் புகழ்ந்து பாடுவேன் அன்பை (2) – இதுவரை

2. தனிமரமாக இருந்த என்னை
கனி மரமாக மாற்றினீர் என்னை (2)
திசைகளும் கோள்களும் அசைகின்ற வரையில்
இன்னிசை முழங்கப் பாடுவேன் அன்பை (2) – இதுவரை

3. உம் சித்தம் செய்திட என்னை அழைத்தீர்
தம் சித்தம் போல மாற்றினீர் என்னை (2)
தேவா உம் வருகை வருகின்ற வரையில்
உழைத்தே உம்மை உயர்த்துவேன் என்றும் (2) – இதுவரை

1. நேசரே உம் திருப் பாதம் அமர்ந்தேன் – நிம்மதி, நிம்மதியே
ஆர்வமுடனே பாடித் துதிப்பேன் ஆனந்தம், ஆனந்தமே – 2
அடைக்கலமே, அதிசயமே ஆராதனை, ஆராதனை – 2

2. உம் வல்ல செயல்கள் நினைத்து, நினைத்து
உள்ளமே பொங்குதையா நல்லவரே நன்மை செய்தவரே,
நன்றி, நன்றி ஐயா – 2
நல்லவரே, வல்லவரே ஆராதனை, ஆராதனை – 2

3. பலியான செம்மறி பாவங்கள் எல்லாம் சுமந்து தீர்த்தவரே
பரிசுத்த இரத்தம் எனக்காக அல்லோ,
பாக்கியம் பாக்கியமே – 2
பரிசுத்தரே, படைத்தவரே, ஆராதனை, ஆராதனை – 2

4. எத்தனை இன்னல்கள் என்வாழ்வில் வந்தாலும்
உம்மைப் பிரியேன் அய்யா
இரத்தமே சிந்தி சாட்சியாய் வாழ்வேன்
நிச்சயம். நிச்சயமே – 2
இரட்சகரே இயேசு நாதா ஆராதனை, ஆராதனை 2

# 584

## ***பல்லவி***

என் இயேசுவே என் ஜீவனே என் ஆசை நீர் மாத்ரமே (2)

## ***சரணங்கள்***

1. சோதனை வேளைகளில் – என் வேதனை நேரங்களில்
எந்நாளும் என்னோடு கூட உண்டு என் ஆத்ம
நேசரவர் – என் இயேசுவே

2. பெற்றோர்கள் கைவிட்டாலும் – என் உற்றார்கள் மறந்திட்டாலும்
மறவாமல் எந்நாளும் கூட்டாளியாய் என்னோடு வந்திடுவார்
– என் இயேசுவே

3. இரவில் விளக்கானவர் – என் – நாவிற்குத் தேனானவர்
கார்மேகம் போன்ற துன்பத்திலும்
மழைவில்லின் ஒளியானவர் – என் இயேசுவே

4. வேறில்லை எனக்காறுதல் இனி வேறில்லை எனக்காருமே
நேரில் வந்தாறுதல் செய்திடவே இப்பாரில் நீர் மாத்திரமே
– என் இயேசுவே

5. ஒன்றே எனதாசையே – என் கண் முன் உமைக் காண்பதே
எந்நேரமும் உம் முக தரிசனம் – தந்தென்னை காத்தருளும்
– என் இயேசுவே

***பல்லவி***

புதிய பாடல் பாடி, பாடி இயேசு
ராஜாவைக் கொண்டாடுவோம்
புகழ்ந்து பாடல், பாடி, பாடி
இயேசு ராஜாவைக் கொண்டாடுவோம்.

***சரணங்கள்***

1. கழுவினார் இரத்தத்தாலே – சுகம் தந்தார் காயத்தாலே (2)
தேற்றினார் வசனத்தாலே (2) திடன் தந்தார் ஆவியாலே
எனக்கு (2) – புதிய

2. உறுதியாய்ப் பற்றிக் கொண்டோம் – உம்மையே நம்பியுள்ளோம் (2)
பூரண சமாதானம் (2) புதிதாய் தருபவரே தினமும் (2) – புதிய

3. அதிசயமானவரே – ஆலோசனைக் கர்த்தரே (2)
வல்லமை உள்ள தேவா (2) வரங்களில் மன்னவரே –எல்லா (2)
– புதிய

## ***பல்லவி***

என்னைப் பெயர் சொல்லி அழைத்த தேவா
உம்மை நான் என்றும் நேசிப்பேன்.

## ***சரணங்கள்***

1. தேவன் என் அடைக்கலம் கன்மலை மேய்ப்பன்
கோட்டையும் அரணானவர் தெரிந்தெடுத்து சரணடைகிறேன்
என் கதி வேறாரில்லையே – என்னை

2. தேவா உம் இரத்தத்தின் விலையை நான் அறிந்தேன்
சோதனை சோர்வு வேளையில் வியாதி துன்ப கஷ்ட வேளையில்
என் கதி வேறாரில்லையே – என்னை

3. உலகத்தின் இன்பங்கள் யாவையும் வெறுத்தேன்
தேவா உம் அன்பைக் கண்ட நான்
உம் திரு அன்பினால் இன்பம் அடைகிறேன்
என் கதி வேறாரில்லையே.– என்னை

## *பல்லவி*

துதிப்போம் அன்பின் தேவனை
துதிப்போம் நேச மீட்பரை
கீதங்களாலும் கீர்த்தனைகளாலும்
இதயத்தில் பாடித்துதிப்போம் அல்லேலூயா – துதிப்போம்

## *சரணங்கள்*

1. பாவத்தின் சாபம் தீர்த்தார்
தேவகிருபையும் நமக்கீந்தார்
தம் சொந்த ஜீவனையே – தந்து
என்றும் நம்மை நேசிக்கின்றார் – துதிப்போம்

2. நாம் விசுவாசிப்பவர்
நம்மை நேசித்து நடத்துபவர்
நமக்குள் வாழுபவர் – நம்மை
சேர்த்துக் கொள்ள வருகிறவர் – துதிப்போம்

3. உலகம் ஒருநாள் அழியும் – அவர்
உரைத்ததெல்லாம் நடக்கும்
நீதியின் தேவனையே – நாம்
நித்தியமாய் துதித்திடுவோம் – துதிப்போம்



**<u>பல்லவி</u>**

உன்னையே வெறுத்துவிட்டால் ஊழியம் செய்திடலாம்
சுயத்தை சாகடித்தால் சுகமாய் வாழ்ந்திடலாம்

**<u>சரணங்கள்</u>**

**1.** சிலுவை சுமப்பதனால் சிந்தையே மாறிவிடும்
நீடிய பொறுமை வரும் நிரந்தர அமைதி வரும்.– உன்

**2.** பெயர் புகழ் எல்லாமே இயேசுவின் நாமத்திற்கே
கிறிஸ்து வளரட்டுமே நமது மறையட்டுமே. – உன்

**3.** நாளைய தினம் குறித்து கலங்காதே மகனே (மகளே)
இதுவரை காத்த தெய்வம் இனியும் நடத்திடுவார். – உன்

**4.** சேர்த்து வைக்காதே திருடன் பறித்திடுவான்
கொடுத்திடு கர்த்தருக்கே குறைவின்றி காத்திடுவார். – உன்

1. வானம் பூமி யாவற்றிலும் இயேசு மேலானவர்
மனிதர், தூதர், பேய் தானும் அவர் முன் விழுவர்

***<u>பல்லவி</u>***

நான் நம்பியே விசுவாசித்தேன்
இயேசு எனக்காய் மரித்தார் உயிர்த்தார்
பாவம் நீங்க சிலுவையில் உதிரம் சிந்தினார்.

2. இரட்சகர் உயிர் விட்டதும் எந்தனுக்காகவே
வேறெந்த வாக்குவாதமும் வேண்டியதில்லையே. – நான்

3. பாவியின் பயம் யாவையும் நீக்கும் நாமம் இது
நரக தண்டனையையும் தொலைத்திடும் இது.– நான்

4. பாவச் சங்கிலி யாவையும் தறிப்பார் என்னேசு
வேதாளத்தின் தலையையும் நசுக்குவாரேசு. – நான்

5. பாவத்தில் மாளும் யாவர்க்கும் உயிரளிப்பாரே
பெலனற்ற ஆத்துமாவுக்கு சக்தி கொடுப்பாரே. – நான்

பல்லவி

ஓ மனிதனே நீ எங்கே போகின்றாய் **?**
காலையில் மலர்ந்து மாலையில் மறையும்
மலராய் வாழ்கின்றாய்.

***<u>சரணங்கள்</u>***

**1.** மண்ணில் பிறந்த மானிடனே
மண்ணிற்கே நீ திரும்புவாய்
மரணம் உன்னைப் பிடிக்கும்போது எங்கே நீ ஓடுவாய்
மரணத்தின் பின்னே நடப்பது என்ன
என்பதை நீ அறிவாயா **?** – ஓ

**2.** பாவியாய்ப் பிறந்த மானிடனே
பாவியாய் நீ மரிக்கின்றாய்
இயேசுவை உள்ளத்தில் ஏற்றுக்கொண்டால் நீ
இன்றே மரணத்தை வென்றிடுவாய்
நித்திய ஜீவனைப் பெற்று நீ மோட்சத்தில்
நிலைத்தென்றும் வாழ்ந்திடுவாய். – ஓ

## பல்லவி

போராட்டம் போராட்டமே போராட்ட ஜீவியமே (2)
போர் முனையில் தாவீது போல் போராட்ட ஜீவியமே (2)

## சரணங்கள்

1. போராட்ட ஜீவியமே முடிவில் பரலோக பாக்கியமே (2)
அல்லேலூயா அல்லேலூயா ஆனந்தம் ஆனந்தமே (2)
– போராட்டம்

2. விசுவாச போராட்டமே நித்ய ஜீவனின் பாக்கியமே (2)
அல்லேலூயா அல்லேலூயா ஆண்டவரின் அழைப்பாகுமே (2)
– போராட்டம்

3. சுவிசேஷ போராட்டமே நிந்தைப் பாடுகள் அவமானமே (2)
அல்லேலூயா அல்லேலூயா ஆத்தும ஆதாயமே (2) – போராட்டம்

GraphicPanic.com
graphicpanic.com

592

***பல்லவி***

அழைக்கிறார் அருமை இயேசு அருகில் ஓடிவா – நீயும் அருகில் ஓடிவா

***சரணங்கள்***

1. உனக்குள் இருக்கும் பாவமே உன்னை வஞ்சித்து
நாசமாக்குமே உயிர்த்தெழுந்த இயேசுவே
உன்னை உயரச் செய்வாரே. – அழை

2. பாவம் இல்லாத வாழ்க்கையே பரமன் கொடுக்கும் கிருபையே
பாவ பரிகாரி இயேசுவைப் பார்த்தால்
பரலோகம் அடைவாயே. – அழை

3. பாவிதான் என்று நீ உணர்வாயே பாக்கியம் பெற்று நீ அடைவாயே
பாவ சாபங்கள் யாவுமே பரமன் இயேசு சுமந்தாரே. – அழை

4. ஆணிகள் பாய்ந்த கரம்தானே அணைக்கும் இயேசு அன்பு தானே
ஆண்டவர் இயேசு மகிமைக்குள் மறைந்து வாழ அழைக்கிறார். – அழை

GraphicPanic.co
graphicpanic.com

கிறிஸ்தவ வாழ்க்கையே ஆனந்த வாழ்க்கையே
கர்த்தரின் பிள்ளைகள் வென்றிடும் வாழ்க்கையே
கஷ்டங்கள் வந்தாலும் நஷ்டங்கள் நேர்ந்தாலும்
என் இயேசு நேசர் என் பரிகாரி என்றும்.

1. உலகத்தின் உதவிகள் அற்று போயிடுமே
உலகத்தார் எல்லாரும் நீங்கிடும் வேளையில்
சொந்த சகோதரர் வெறுத்திடும் வேளையில்
யோசேப்பின் தேவன் என் அருகில் உண்டென்றுமே. – கிறிஸ்தவ

2. அந்தகாரம் உள்ள பூமியில் என்றுமே
இராஜாக்கள் பிரபுக்கள் எதிரிகள் ஆகையில்
அக்கினி சூளையில் சிங்கத்தின் கெபியில்
தானியேலின் தேவனின் கரங்களில் அடிமை – கிறிஸ்தவ

3. என் நல்ல மேய்ப்பரும் ஆருயிர் தோழனும்
என் வாழ்வின் நாயகர் என் அன்பின் நேசரே
துக்கங்கள் நீங்கின துயரங்கள் நீங்கின
கர்த்தரின் பிள்ளை நான் களிப்புடன் பாடுவேன் – கிறிஸ்தவ

4. எக்காள சத்தமும் கேட்கும் நாள் சமீபம்
ஆத்ம மணாளனைக் காண்பேன் நான் விண்ணிலே
என்று நீர் வருவீர் என்று நான் காணுவேன்
ஆமென் கர்த்தாவே நீர் வாரும் என் வாஞ்சையே – கிறிஸ்தவ

GraphicPanic.com
graphicpanic.com

## பல்லவி

கிறிஸ்து இயேசு தயாள பிரபு சிருஷ்டித்த தயவு
இரட்சித்த உந்தன் முடிவு கீதம் பாடவே

## சரணங்கள்

1. மானிலத்தில் நீர் மானிடனானீர்
மாந்தர்கள் மத்தியில் சுற்றித் திரிந்தீர்
மாபெரும் துன்பம் துக்கங்கள் ஏற்றீர்
பாவி என்னை இரட்சிக்க பிரிய இயேசு – கிறிஸ்து

2. விசுவாச பேழை ஆழியிலிருக்க
புயல்களெல்லாம் அலைக்கழிக்க
இயேசுவே நீரே அலை அதட்டி
அக்கரைப்படுத்தினீர் பிரிய இயேசு – கிறிஸ்து

3. பாவப் பிணியால் வாதிக்கப்பட்டேன்
பாடுகள் பட்டும் பலனைக் காணேன்
பின் வந்து உந்தன் வஸ்திரம் தொட்டேன்
பிழைத்தேன் அச்சணமே பிரிய இயேசு – கிறிஸ்து

GraphicPanic.com
graphicpanic.com

## *பல்லவி*

இந்த ஜெப வேளை எமக்கானந்தம் – என்றும்
ஜெபமில்லா ஜெயமில்லை ஜெபம் எங்கள் ஜெயமே (2)

## *சரணங்கள்*

1. இருள் சூழ்ந்த வனம் போன்ற இருண்ட கெத்சமனேயில்
இறுதி வேளையில் ஜெபித்தீர் இரத்த வேர்வையும்
பெருமூச்சும் பெருகிடவோ அந்த இரவெல்லாம்
ஜெபித்தீரையா – இந்த

2. சரீரமோ பெலவீனம் ஆவியோ உயிர்ப்பிக்கும்
சலிப்பின்றி ஜெபித்திடுவோம் அந்தி சந்தி மத்தியானத்தில்
ஜெபித்திடவே நல்ல அருள் ஆவி வரம் தாருமே. – இந்த

3. ஊர், ஆரோன் இருவரும் கரங்களைச் சுமந்திட
ஊக்கமாய் ஜெபம் செய்தாரே பக்தன் மோசே போல்
ஜெயம் பெற ஜெபித்திடவே நித்ய பரமனே கிருபை தாருமே – இந்த

4. சிறைச்சாலை அடைபட்ட சீஷனை விடுவிக்க
சபையாரும் ஜெபித்தனரே அன்று பேதுரு வெளிவந்த
அதிசயம் போல் பதில் அளித்தெங்கள் ஜெபம் கேளுமே – இந்த

5. உபவாச ஜெபம் மூலம் அகாஸ்வேரு ராஜனின்
உளமதைத் திருப்பினாளே எஸ்தர் ராணி தன் ஜெபம்
கேட்டு தயவடைந்தாள் இன்றும் எமக்குந்தன் தயை தாருமே – இந்த

6. உயர் கர்மேல் மலை மீது ஜெபித்திடும் எலியாபோல்
துயருற்ற மகள் அன்னாள் போல் தாசன் தானியேல் எனும் பக்தர்
பலர் ஜெபித்த அந்தத் தனி ஜெப வரம் தாருமே – இந்த

GraphicPanic.c
graphicpanic.com

***பல்லவி***

நானும் என் வீட்டாருமோ வென்றால் கர்த்தரையே சேவிப்போம்
நீயும் சேவிப்பாயா ? நீயும் சேவிப்பாயா ?

***சரணங்கள்***

1. கர்த்தரையே சேவிப்பது ஆகாததென்று கண்டால்
யாரை நீ சேவிப்பாய் என்பதை
இன்றே தீர்மானம் செய்வாய். – நானும்

2. அடிமையான நம்மையுமே தேவாதி தேவன் மீட்டார்
மாபெரும் அடையாளங்கள் செய்திட்ட கர்த்தரைச்
சேவிப்பாயா ? – நானும்

3. நம் பாதையில் காப்பாற்றியே கர்த்தர் நடத்தினாரே
கர்த்தர் தந்த ஆசீர் யாவும் கண்டு நன்றியால்
சேவிப்பாயா ? – நானும்



**1.** இயேசு ராஜா விரைவில் வெளிப்படுவார் – என்னைக்
கரம் பிடித்தனுதினம் நடத்திடுவார்
திருமுகம் கண்டு நானும் ஆனந்திப்பேன் – என்றும்
அவருடன் பிரியாமல் வாழ்ந்திடுவேன்.

***<u>பல்லவி</u>***

வான மேகத்தில் வந்திடுவார்
இயேசு தேவதூதருடன் வெளிப்படுவார்
வருகையின் நாட்களோ அதிவேகம் நண்பா
எழும்பி நாம் ஆயத்தம் செய்திடுவோம்.

**2.** அவர் தாமே தமது ஜனத்தோடுங்கூட
தங்கி அரவணைத்து காத்திடுவார்
துக்கமும் கண்ணீரும் வியாதியுமோ – மனக்
கிலேசமும் மரணமும் இனியில்லையே   வான

**3.** பிரதிபலன் தம் ஜனத்திற்கருளிடுவார் – அவர்
பிரகாசிக்கும் நீதி சூரியனாய் இருப்பார்
தம் ஜனமோ சூரியனைப் போல் பிரகாசித்திடும்
நித்திய காலமாய் அவருடன் ஆட்சி புரிவார் – வான





<u>***பல்லவி***</u>

மகிமை மாட்சிமை நிறைந்தவரே
மகிழ்வுடன் தொழுதிடுவோம்
பரிசுத்த தேவனாம் இயேசுவை
பணிந்தே தொழுதிடுவோம்.

<u>***சரணங்கள்***</u>

**1.** உன்னத தேவன் நீரே – ஞானம் நிறைந்தவரே
முழங்கால் யாவுமே பாரில் மடங்கிடுதே
உயர்ந்தவரே சிறந்தவரே என்றும் தொழுதிடுவோம். – மகிமை

**2.** ஒருவரும் சேரா ஒளியில் – வாசம் செய்பவரே
ஒளியினைத் தந்துமே – இதயத்தில் வாசம் செய்யும்
ஒளி நிறைவே அருள் நிறைவே – என்றும் தொழுதிடுவோம். – மகிமை

**3.** பரிசுத்த தேவன் நீரே – பாதம் பணிந்திடுவோம்
கழுவியே நிறுத்தினீரே – சத்திய தேவன் நீரே
கன மகிமை செலுத்தியே நாம் என்றும் தொழுதிடுவோம். – மகிமை

**4.** நித்திய தேவனும் நீரே நீதி நிறைந்தவரே
அடைக்கலமானவரே – அன்பு நிறைந்தவரே
நல்லவரே, வல்லவரே – என்றும் தொழுதிடுவோம். –மகிமை

www.powerpointdesigns.ne

## பல்லவி

நோக்கிப்பார் என்னைப் பார் என்னைப் பார் நோக்கிப் பார்
கல்வாரியை நோக்கியே பார் ஜீவ இரட்சிப்பைப்
பெற்றுக் கொள்வாய் மகனே, மகளே
மனம் திரும்பி நீ நோக்கியே பார்.

## சரணங்கள்

1. உலகத்தின் தோற்றம் – முன்னே
உன்னைப் பெயரிட்டு தெரிந்து கொண்டேன்
தாயின் கருவினிலே – உன்னை வளர்த்து
பிரித்தெடுத்தேன் உன்னை வளர்த்து
பிரித்தெடுத்த – என்னை – நோக்

2. மண்ணிடை உனக்காக மனு உருவாய்
பிறந்து வந்தேன் – நிந்தனை அவமானங்கள் யாவும் உனக்காய்
நான் சகித்தேன் – யாவும் உனக்காய் சகித்த – என்னை – நோக்

3. சிலுவை மரந்தனிலே இரத்தம் சிந்தியே நான் மரித்தேன் – உன்
பாவத்தை பரிகரித்தேன் பாவ மன்னிப்பை ஈந்தளித்தேன்
பாவ மன்னிப்பை ஈந்தளித்த – என்னை – நோக்

4. விண்ணில் நீ வாழ இந்த மண்ணினில் புதையுண்டேன்
மரணத்தை நான் ஜெயித்தேன் மூன்றாம் நாளினில்
உயிர்த்தெழுந்தேன் மூன்றாம் நாளினில்
உயிர்த்தெழுந்த – என்னை – நோக்

speakarun@gmail.com

## 600

### *பல்லவி*


நடந்து வந்த பாதையெல்லாம் – எமை
சுமந்து வந்த அன்பல்லவோ நீர் இருக்க பயம்
ஒன்றுமில்லையே உம் கரமிருக்க ஜெயம் என்றுமெமக்கே.

### *சரணங்கள்*

**1.** யோர்தான் கரைபுரளும் வல்ல எரிகோ மதில் அதிரும்
செங்கடல் அலை புரளும் பார்வோன் சேனைகள்
அணி திரளும் – நீர்

**2.** வருடங்கள் நன்மையினால்
முடி சூடியே மகிழ்ந்திருக்கும்
பாதை நெய்யாய்ப் பொழிந்திருக்கும்
கொடும் வாதைகள் மறைந்தோடும் – நீர்

**3.** ஒருபோதும் நடந்ததில்லை
புதுப் பாதைகள் நீண்டிருக்கும்
சோதனை நிறைந்திருக்கும்
அதில் வேதனை மறைந்திருக்கும் – நீர்



# 601

## <u>*பல்லவி*</u>

காணிக்கை படைக்கிறேன்
கர்த்தாவே ஏற்றுக்கொள்ளும்
இன்று நான் கொடுக்கிறேன்
இயேசுவே ஏற்றுக்கொள்ளும் – என் இயேசுவே

## <u>*சரணங்கள்*</u>

1. உம்மிடத்தில் வாங்கி உமக்கு
நான் இன்று கொடுக்கிறேன்
என்னிடத்தில் ஒரு நன்மையும் இல்லை
ஏற்றுக்கொள்ளும் இயேசுவே – காணிக்கை

2. தன்னிடத்தில் உள்ள இரண்டு காசுகளை
விதவை கொடுத்தாளே
அந்த விசுவாசம் எனக்குத் தாரும்
ஏற்றுக்கொள்ளும் இயேசுவே – காணிக்கை

3. உண்மையுள்ள தேவன் நீரே
என்னையும் மாற்றிடுமே
உம்மைப்போல் நானும் மாறிட வேணும்
ஏற்றுக்கொள்ளும் இயேசுவே – காணிக்கை

4. தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்து
மரித்த என் இயேசுவே என்னையே உமக்குக்
கொடுக்கிறேன் ஏற்றுக்கொள்ளும் இயேசுவே – காணிக்கை

602

## ***பல்லவி***

ஆராதித்தே மகிழ்வோம் ஆண்டவர் செய்த நன்மைகட்காய்
ஆண்டு முழுவதும் ஆதரித்துக் காத்து அன்பாய் நடத்தினாரே – ஆரா

## ***சரணங்கள்***

1. வானம் பூமி தூரம்போல் என் பாவம் அகற்றினாரே
மேற்குக்கும் கிழக்கிற்கும் உள்ள தூரம்போல் ஆழத்தில்
ஆழ்த்தினாரே – ஆரா

2. நிர்மூலமாகாதது நிச்சயமாய் உம் கிருபையல்லோ
இரக்கங்களுக்கோ முடிவேயில்லை காலை
தோறும் புதியதே – ஆரா

3. வருஷத்தின் துவக்க முதல் முடிவுமட்டும் கண்கள் நோக்கினதே
வருஷத்தை நன்மையால் முடிசூட்டிப் பாதை நெய்யாய்ப்
பொழியச் செய்தார்– ஆரா

4. ஊழியத்தின் பாதையில் பல உபத்திரவம் வந்தாலும்
அழைத்த கர்த்தர் உண்மையுள்ளவர் உறுதிப்
படுத்தினாரே – ஆரா

5. சத்தியத்தில் வளர தம் சரீரமாம் சபை தந்தாரே
அப்போஸ்தல உபதேசம் ஐக்கியம் ஆரோக்கியம்
ஈந்தாரே – ஆரா

6. இம்மட்டும் நடத்திவந்த எபநேசரான கர்த்தரே
இனிமேலும் தாங்குவேன் ஏந்துவேன் சுமப்பேன்
தப்புவிப்பேன் என்றாரே– ஆரா

**பல்லவி**

இயேசுதான் லோக இரட்சகர் – வேறு யாருமில்லை
பாவிகள் நம்மை இரட்சிக்க –

**சரணங்கள்**

1. உலக சிருஷ்டிகரே உலகத்தின் பாவம்போக்க
உலகத்தில் மனுவாக வந்தார் ஆஆ (2) பாவியை மீட்க
சிலுவையில் பலியாக மாண்டார் (2)– இயேசுதான்

2. பாவத்தின் சம்பளமாம் மரணத்தில் மாளுவோரை
பாசத்தால் மீட்பதற்காக ஆஆ (2) தேகத்தில் வந்தார்
ஜீவாதிபதி இயேசுவே (2) – இயேசுதான்

3. இரத்தம் சிந்துதல் அல்லால் பாவ மன்னிப்பு இல்லை
ஆடு மாடு கோழி இரத்தத்தால் ஆஆ (2) பாவம் போகாதே
இயேசு இரத்தம் பாவம் போக்குதே (2) – இயேசு தான்

4. நானே வழி சத்தியம் ஜீவன் என்றுரைத்ததால்
வேறொரு மார்க்கம் இல்லையே ஆஆ (2) மோட்சம் அடைய
இயேசுகிறிஸ்து தான் வழியே (2) – இயேசுதான்

5. வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர் யாவருமே
வாரும் என்னண்டை என்பதால் ஆஆ (2)
நம் பாரம் நீங்கி இளைப் பாற இயேசு தஞ்சமே (2) – இயேசு தான்

6. இயேசுவை நம்புவோர்க்கு நித்திய ஜீவன் உண்டு
நம்பாதோர் நரகம் அடைவார் ஆஆ (2) – நியாயம் தீர்க்கவே
இயேசு சீக்கிரம் வருகிறார் (2) – இயேசு தான்

speakarun@gmail.com

# 604

***பல்லவி***

சகோதரர் ஒருமித்து வாசம் செய்தல்
எத்தனை நன்மை இன்பமானது,

***அனுபல்லவி***

ஆரோன் சிரசின் தைலம் போன்றது
எர்மோன் மலையின் பனியைப் போன்றது.

***சரணங்கள்***

1. எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று
எஸ்றா நெகேமியா ஒன்று சேர்ந்தனர்
சன்பல்லாத் தொபியா சக்கந்தங்கள் தோற்று
அலங்கம் ஆலயம் கட்டப்பட்டது – சகோ

2. இருவர் ஒருமனங்கொண்டு ஜெபிக்குங்கால்,
தருவேன் என்கிறார் பரலோகப் பிதா
இரண்டு மூன்று பேரவர் நாமத்தில்கூட
இருப்பேன் நடுவில் என்கிறாரே – சகோ

3. கர்த்தரின் பராக்கிரமத்தின் நாளதிலே
யௌவன ஜனம் மனப்பூர்வமடைவார்
கர்த்தர் இதயத்தை எழுப்பும் நாளில்
கரிசனையுள்ளோர் கட்ட முன் வருவார் – சகோ

4. விழுந்து போன தாவீதின் கூடாரத்தை
கர்த்தர் திரும்ப எழுப்பும் காலமிது
கர்த்தர் சீயோனைக் கட்டி மகிமைப்பட,
சிதறுண்டோர் ஒன்று சேரும் காலமிது சகோ

5. கிறிஸ்துவை விசுவாசித்தறிதலின்
ஆதாரத்திலே ஒருமைப்பாடுண்டே
பரமதரிசனம் ஒன்றினால் மட்டுமே
பகைவனின் கண்ணிக்குத் தப்பலாமே – சகோ



**_பல்லவி_**

எந்தன் ஆத்தும நேசரே நான் உம்மை ஆராதித்தே துதிப்பேன்
எந்தன் ஆயுள் முழுவதுமே உம்மை அறிவித்தே
மகிழ்ந்திடுவேன் – 2

**_சரணங்கள்_**

1. நன்றியற்றுப் பாரில் ஜீவித்தேன் பன்றி போல் பாவத்தில் புரண்டேன்
செத்த நாயைப்போல் நானிருந்தேன் நித்தம் மேஜைப் போஜனம்
தந்தீர் – எந்தன்

2. பயங்கரமான குழியினின்றும் உளையான சேற்றிலிருந்தும்
அக்ரம பாவக் கட்டினின்றும் அடியேனை மீட்டு இரட்சித்தீர் – எந்தன்

3. தாயும் தகப்பனும் கைவிடினும் தஞ்சமானவர் தள்ளிவிடினும்
சேயாம் என்னை நீர் தள்ளவில்லை
ஆயன் உம்மை நான் மறப்பதில்லை – எந்தன்

4. மலைகள் விலகிப் போனாலும் அலைகள் என்மேல்
மோதினாலும் வலைகள் என்னை நெருக்கினாலும்
நிலைநிற்கக் கிருபை தந்தீரே – எந்தன்



***பல்லவி***

ஒரே முறைதான் புவிவாழ்க்கை
இறந்தால் மீண்டும் பிறப்பில்லை
இரட்சிப்பை அடைய இயேசுவை நாடு
இன்றே! இன்றே!! இரட்சண்ய நாள்

***அனுபல்லவி***

1. ஆயிரம் வருடங்கள் வாழ்ந்தாலும்
அதனால் ஆத்தும மீட்புஉண்டா ?
ஆண்டவர் பாதம் இன்றே சேர்ந்தால்
உண்டே உனக்கும் பரிசுத்த நாள் – ஒரே

2. புல்லைப்போல் ஒழிந்திடும் புவி வாழ்க்கை
கல்லைப்போல் இருதயக் கடினம் வேண்டாம்
நல்லவர் இயேசு நற்பாதம் அடைவாய்
உண்டே உனக்கோர் “மரணநாள்” – ஒரே

3. புகையைப்போல் மறைந்திடும் புவி வாழ்க்கை
வகையறிவாயா நித்தியம் வாழ ?
பகைவனை வென்ற பரமனை நாடு
உண்டே நியாயத்தீர்ப்பின் நாள் – ஒரே

4. உலகம் முழுவதும் சம்பாதித்தும்
உன் ஆத்துமா நஷ்டம் அடையலாமா ?
உலகத்தின் பாவம் சுமந்தாரை நம்பு
உண்டே கோப ஆக்கினை நாள் – ஒரே

5. அநுக்ரக காலத்தை அசட்டை செய்தால்
ஆபத்துக்காலத்தில் என்ன செய்வாய் ?
அறுப்புக்காலம் உண்டுனக் கறிவாய்
உண்டே உனக்கும் ஆபத்துநாள் – ஒரே

6. கல்வி, செல்வம், புகழ், கனம் யாவும்
கடைசிநாளில் கூட வந்திடுமோ ?
கர்த்தரின் நாளில் களிப்புடன் பாட
உண்டே உனக்கும் மீட்பின் நாள் – ஒரே



## 607

**_பல்லவி_**

எந்தன் அன்புள்ள ஆண்டவரே ஆயிரம் ஸ்தோத்திரமே!
நீர் செய்த நன்மைக்கெல்லாம் நாதா
ஸ்தோத்திரம், ஸ்தோத்திரமே.

**_சரணங்கள்_**

1. உலகத்தின் பாவத்திலே நான் பாவியாய் வாழ்ந்திருந்தேன்
கிருபையாய் மீட்டீரைய்யா – நாதா
இரட்சிப்பைத் தந்தீரைய்யா – எந்தன்

2. ஆபத்துக் காலத்திலே அடியேன் உம்மை நினைத்தேன்
ஆண்டவர் உம் தயவால்–நாதா
ஆசீர்வாதம் நான் பெற்றேன் – எந்தன்

3. ஒரு நொடிப் பொழுதினிலே
மாய்ந்திருக்கும் என் வாழ்வில்
திரு உள்ளம் தந்தீரைய்யா – நான்
கிருபையாய் வாழ்வதற்கே – எந்தன்

4. இன்று நான் பாடுவது உம்மால் தான் இயேசுநாதா!
என்றும் நான் பாட வேண்டும் நாதா
என்னுள் நீர் வாழ்கின்றதால் – எந்தன்



அல்லேலூயா பாடுவேன் ஆண்டவரைத் துதிப்பேன்
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா ஆமென்

1. இயேசு என்றாலே இரட்சிப்பவர்
பாவத்திலிருப்போரை விடுவிப்பவர்
பாவிகளை அவர் நேசிப்பவர் பாவத்தையோ அவர்
வெறுப்பவர் – அல்லேலூயா

2. பிசாசும் இயேசுவைப் பணிந்ததே
பின்வாங்கிப் புறப்பட்டு ஓடினதே
அசுத்தாவி எல்லாம் விலகிப் போனதே
ஆண்டவர் உள்ளத்தில் வந்ததினால்– அல்லேலூயா

3. ஒவ்வொரு நாளும் உருளுது பார்
ஓராண்டு வேகமாய் ஓடுதுபார்
உன் ஜீவன் உனக்குள் நிற்குமோ சொல்
உண்மையை உணர்வாய் மானிடனே– அல்லேலூயா

4. கல்வாரி சிலுவையில் இயேசுவைப் பார்
கல் நெஞ்சம் இனியும் உனக்கும் உண்டோ
கதறுவாயே உன் நிலையை எண்ணி
கர்த்தர் பக்கமாய் ஓடிவா நீ – அல்லேலூயா

## *பல்லவி*

நேற்றும் இன்றும் என்றும் மாறாத இயேசுவை
வாழ்த்தி வணங்கிடுவோம்

## *சரணங்கள்*

1. என் பாவங்களையெல்லாம் என் இயேசு ஏற்றாரே
ஏக்கப் பெருமுச்சு ஏனிந்தப் பாடுகள்
என்னையே மீட்டிடவோ – நேற்றும்

2. காயங்கள் ஏற்றவராய் கஷ்டம் நிறைந்தவராய்
பாதங்கள் தள்ளாட பாதகன் போலான
என் இயேசு இரட்சகரே – நேற்றும்

3. உம் இரத்தத்தை சிந்தியே என்னைக் கழுவினீரே
என் பாவக்கறையெல்லாம் சுத்திகரித்து
என்னைச் சேர்த்துக் கொண்டீரே – நேற்றும்

4. ஆணிகள் பாய்ந்ததுவே ஆச்சரியமதுவே
அழுது தீர்த்தாலும் ஆறாத வேதனை
ஆ.... எந்தன் இயேசு நாதா – நேற்றும்

## ***பல்லவி***

இராஜாதி இராஜனாய் பூமிக்கு வருவார்
அவர் சமூகத்தில் காத்திருப்பேனே
அல்லேலூயா என்றும் துதித்திடுவேன்
அல்லேலூயா என்றும் பாடிடுவேன்

## ***சரணங்கள்***

**1.** கடல் அலைகள் எழும்பி வரும்
பெரிய மலைகள் உடைந்து விழும்
வானம் பூமியும் மாறிப்போகும்
மகிமை தேவன் மாறாதவரே! அல்லேலூயா – இராஜாதி

**2.** பெலவீனம் யாவும் மாறிவிடும்
மகிமை சரீரம் உடுத்திக் கொள்வேன்
சுமைகள் யாவும் நீங்கி விடும்
இமைப்பொழுதிலே கடந்து போகும் – அல்லேலூயா – இராஜாதி

**3.** கடந்த நாட்கள் கண்மணியைப் போல்
காக்கும் தேவன் காத்திடுவார் காலமெல்லாம்
அவரோடிருப்பேன் காத்திருந்து ஜெபித்திடுவேன்
– அல்லேலூயா– இராஜாதி

**1.** மேகமீதில் தூதரோடிதோ இதோ
மேசியா கிறிஸ்தேசையா என தாசை நேசையா
வாரார் வாரார் மகிழ் கெம்பீரமாய்.

**2.** மேகத்தோடு போனவர் இவர் இவர்
திரும்பவும் பதினாயிரம் பரிசுத்தர் சூழ்ந்திட
வாரார் வாரார் ஜெகத்தை நோக்கியே.

**3.** ஆரவாரம் கேட்குதே அதோ அதோ
ஆட்டுக்குட்டியின் பாட்டோடெக்காளம்
அதிர்ந்தொலிக்குதே அல்லேலூயா அருமை ரட்சகா.

**4.** கிருபை வாசல் அடைக்குதே ஐயோ, ஐயோ
கூவியழைத்த மீட்பர் சத்தம் கேட்டிடாதோரை
சங்கரிக்க வந்து விட்டாரே.

**1.** பெலமுள்ள நகரமாம் இயேசுவண்டை
பயமின்றி ஓடி நீ வந்திடுவாய்
சஞ்சலத்திற்கொரு வழியில்லையே
சந்ததம் அவர் நம்மைக் (காத்துக் கொள்வார்) (2)

**2.** நிலையில்லா உலகத்தின் அலைகளாலே
அலைந்திடும் பயனென்ன புதல்வனே நீ
விசுவாசக் கப்பலில் ஷேமமாக
யாத்திரை செய்பவர்க்கு (லோகம் வேண்டாம்) (2)

**3.** கழுகு போல் பறந்து நீ உன்னதத்தில்
வாழ்கின்ற ஜீவியம் வாஞ்சித்துக் கொள்
காத்திருந்திடுகில் ஈந்திடுவார்
பெருக்கமுள்ள பெலன் (மக்களுக்கு) (2)

**4.** மரணம் தான் வருகிலும் பயப்படாதே
விரைந்துன்னைக் கர்த்தர் தாம் காத்திடுவார்
யாதொன்றும் உன்னைப் பயப்படுத்த
எங்குமில்லை என்று (விசுவாசிப்பாய்) (2)

**5.** ஆறுதலடையும் அந்நாடு சென்று
இயேசுவின் மார்பில் நான் ஆனந்திப்பேன்
பரம சுகம் தரும் ஊற்றுகளில்
பரனோடு நித்தியம் (பானம் செய்வேன்) (2)

## 613

1. இருள் சூழ்ந்த லோகத்தில் இமைப் பொழுதும் தூங்காமல்
கண்மணி போல என்னைக் கர்த்தர் இயேசு காத்தாரே
கானங்களால் நிறைந்து காலமெல்லாம் பாடுவேன்.

***<u>பல்லவி</u>***

அஞ்சிடேன், அஞ்சிடேன்
என் இயேசு என்னோடிருப்பதால் – 2

2. மரணப் பள்ளத்தாக்கில் நான் நடந்த வேளைகளில்
கர்த்தரே என்னோடிருந்து தேற்றினார் தம் கோலினால்
பாத்திரம் நிரம்பி வழிய ஆவியால் அபிஷேகித்தார் – அஞ்சிடேன்

3. அலைகள் படகின்மேல் ஓடியே ஆழ்த்தினாலும்
கடல்மேல் நடந்து வந்து கர்த்தனே என்னைத் தூக்கினார்
அலைகளை நீக்கி அவர் அமைதிப்படுத்தினார் – அஞ்சிடேன்

***பல்லவி***

அதி சீக்கிரத்தில் நீங்கிவிடும் இந்த லேசான உபத்திரவம்
சோர்ந்து போகாதே – நீ (2)

***சரணங்கள்***

1. உள்ளான மனிதன் நாளுக்கு நாள்
புதிதாக்கப்படுகின்ற நேரமிது – சோர்ந்து

2. ஈடு இணையில்லா மகிமை
இதனால் நமக்கு வந்திடுமே – சோர்ந்து

3. காண்கின்ற உலகம் தேடவில்லை
காணாத பரலோகம் நாடுகிறோம் – சோர்ந்து

4. கிறிஸ்துவின் பொருட்டு
நெருக்கப்பட்டால் பாக்கியம் நமக்கு பாக்கியமே – சோர்ந்து

5. மன்னவன் இயேசு வருகையிலே
மகிழ்ந்து நாமும் களி கூறுவோம் – சோர்ந்து

6. மகிமையின் தேவ ஆவி தாமே
மண்ணான நமக்குள் வாழுகின்றார் – சோர்ந்து

# 615

## பல்லவி

உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்
உங்கள் கவலைகள் கண்ணீர் எல்லாம் மறைந்து விடும்.
கலங்காதே மகனே, கலங்காதே மகளே (2)
என் இயேசு கைவிட மாட்டார்.

## சரணங்கள்

1. கடந்ததை நினைத்து கலங்காதே நடந்ததை மறந்துவிடு
கர்த்தர்புதியன செய்திடுவார் இன்றே நீ காண்பாய் –
கலங்கிடவே வேண்டாம் (2) – உங்கள்

2. நொறுங்குண்ட இதயம் தேற்றுகிறார்
உடைந்த உள்ளம் தாங்குகிறார்
காயங்கள் அனைத்தையும் கட்டுகிறார்
கண்ணீர் துடைக்கின்றார் (உன்) கலங்கிடவே வேண்டாம் – உங்கள்

3. திராணிக்கு மேலோக சோதிக்கப்பட ஒருநாளும் விடமாட்டார்
தாங்கிடும் பெலன் தருவார் தப்பிச்செல்ல வழி செய்வார்
(நீ) கலங்கிடவே வேண்டாம் – உங்கள்

4. நல்லதோர் போராட்டம் பாராடுவோம்
விசுவாசம் காத்துக் கொள்வோம்
நீதியின் கிரீடம் நமக்கு உண்டு நேசர் வருகையில் தந்திடுவார் (நாம்)
– கலங்கிடவே வேண்டாம் – உங்கள்

5. முழுமையாய் திரும்பி விடு முற்றிலும் வாழ்வை ஒப்புக்கொடு
வேண்டாத அனைத்தையும் விட்டுவிடு
ஆண்டவர் விருப்பம் நிறைவேற்று கலங்கிடவே வேண்டாம் – உங்கள்

616

**_பல்லவி_**

ஆமென் அல்லேலூயா என்ற துதியுடன்
நம் தேவனை ஆராதிப்போம் (2)
அவர் பரிசுத்தர் அவர் நல்லவர்
அவர் மாட்சிமை பொருந்தியவர் (2)

**_சரணங்கள்_**

1. துதிகளுக்குப் பாத்திரர் அவரே தான்
தூதர்களும் போற்றிடும் தேவன் அவரே
அவர் உன்னதரே அவர் வல்லவரே (2)
அவர் மகிமையும் நிறைந்தவரே (2) –ஆமென்

2. குறைவுகளை நீக்கிடும் ஐஸ்வரியரே
வேதனையை மாற்றிடும் மகத்துவரே
நிறைவுள்ளவரே அவர் பரிகாரியே
அவர் பூரண சற்குணரே (2) – ஆமென்

3. சேனைகளின் கர்த்தர் பரிசுத்தரே
சேதமின்றி காத்திட வல்லவரே
அவர் அற்புதரே போதுமானவரே
அவர் அதிசயமானவரே (2) – ஆமென்

4. வல்லமையாய் வெளிப்படும் தேவனவரே
பரிசுத்தர் தம் வருகையில் சேர்ப்பாரே
அவர் வருகின்றாரே சீயோன் சேர்த்திடவே
அவர் என்றென்றும் அரசாளுவார்(2) – ஆமென்

617

***பல்லவி***

கர்த்தரை துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது
தேவாதி தேவனைத் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது.

***சரணங்கள்***

1. இம்மட்டும் நடத்தினார் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது
இனிமேலும் நடத்துவார் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது
– கர்த்தரை

2. இம்மட்டும் தாங்கினார் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது
இனிமேலும் தாங்குவார் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது.
– கர்த்தரை

3. இம்மட்டும் பாதுகாத்தார் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது
இனிமேலும் பாதுகாப்பார் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது.
– கர்த்தரை

4. நம்பினால் கைவிடார் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது
ஜெபித்தால் ஜெயம் உண்டு துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது
– கர்த்தரை

5. எல்லாம் அறிந்தவர் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது
எல்லாம் வல்லவர் துதியுங்கள் அவர் கிருபை என்றுமுள்ளது.– கர்த்தரை

618

## *பல்லவி*

பூமியெங்கும் தேடிப்பார்த்தேன் இயேசுவைப்போல யாருமில்லை
உலகமெங்கும் கேட்டுப் பார்த்தேன் இயேசுவைப்போல தெய்வமில்லை.

## *சரணங்கள்*

1. கோடாகோடி மனிதன் பிறந்து
மரித்துப் போனான் பூமியிலே
மரித்த மூன்றாம் நாளில் எழுந்த
இயேசுவைப்போல யாருமில்லை. – பூமி

2. பாவம் செய்யும் மனிதன் ஒரு நாள்
அழியப்போறான் நரகத்திலே
இயேசு கிறிஸ்து இரத்தத்தாலே
வாழப் போறேன் மோட்சத்திலே. – பூமி

3. வானத்தின் கீழே பூமியின் மேலே
நான் அறிந்த நாமத்திலே
எந்தன் பாவம் நீக்கி இரட்சித்த
இயேசுவைத் தவிர யாருமில்லை. – பூமி

4. பாவிகளை மீட்பதற்குப்
பாரில் இயேசு பிறந்தாரே
பாடுகள் பட்டு நிந்தைகள் அடைந்து
ஜீவனை விட்டார் சிலுவையிலே – பூமி

5. ஜீவன் தந்த சிருஷ்டி கர்த்தர்
சீக்கிரமாக வரப் போகிறார்
அவரை ஏற்றுக் கொண்டவர்கள்
அவருடன் மோட்சத்தில் வாழ்ந்திடுவர். – பூமி

## *பல்லவி*

மனிதர் எவர்க்கும் ஒரே சுவிசேஷம்
பரலோகம் தந்த ஒரே விசேஷம்.

## *சரணங்கள்*

1. பாவ மன்னிப்பு தரும் சுவிசேஷம்
தேவன் பலியாக வந்த விசேஷம்
இயேசுவே அந்த நற்சுவிசேஷம்
ஏற்றுக் கொள் உனக்கு உகந்த விசேஷம் – மனிதர்

2. சுத்த இருதயம் தரும் சுவிசேஷம்
தேவன் தொடர்பு வழங்கும் விசேஷம்
சுவைக்க சுவைக்க நற்சுவிசேஷம்
ஏற்றுக் கொள் உனக்கு உகந்த விசேஷம் – மனிதர்

3. பரலோக பாக்கியம் தரும் சுவிசேஷம்
மரணம் மங்களம் என்ற விசேஷம்
தருணம் இதுவே நற்சுவிசேஷம்
ஏற்றுக் கொள் உனக்கு உகந்த விசேஷம் – மனிதர்

***பல்லவி***

சர்வ சிருஷ்டிக்கும் எஜமானன் நீரே
சர்வ சிருஷ்டியைக் காப்பவர் நீரே
எங்கள் இதயத்தில் உம்மைப் போற்றுகிறோம்
என்றென்றும் பணிந்து தொழுவோம் ஆஆஆ அல்லேலூயா (7) ஆமென்

***சரணங்கள்***

1. வானம் பூமி ஒழிந்து போனாலும்
உம் வார்த்தை என்றும் மாறாதே.
இவ்வாழ்க்கை அழிந்து மறைந்துபோம்
விசுவாசி என்றென்றும் நிலைப்பான் – ஆ... ஆ...

2. எந்தன் மீட்பரும் ஜீவனும் நீரே
என்னை காக்கும் கர்த்தரும் நீரே
என்னை உமக்கு என்றும் அர்ப்பணித்தேன்
என் வாழ்வில் ஜோதியும் நீரே – ஆ... ஆ...

3. எல்லா மனிதர்க்கும் ஆண்டவர் நீரே
எல்லா ஆசீர்வாதத்திற்கும் ஊற்றே
எங்கள் இதயத்தை உம்மிடம் படைக்கின்றோமே
ஏங்குகின்றோம் உம் ஆசீர்பெறவே– ஆ... ஆ...

4. சாத்தான் உன்னை எதிர்த்த போதும்
ஜெயகிறிஸ்து உன்னோடு உண்டே
தோல்வி என்றும் உனக்கில்லையே
துதிகானம் தொனித்து மகிழ்வாய். – ஆ... ஆ...

கேரீத் ஆற்று நீர் வற்றினாலும்
தேசம் பஞ்சத்தில் வாடினாலும்
பானையில் மா எண்ணெய் குறைந்திட்டாலும்
காக்கும் தேவன் உனக்கு உண்டு

**கர்த்தர் உண்டு வார்த்தை உண்டு**
**தூதன் உண்டு அவர் அற்புதம் உண்டு.**

1. இல்லை என்ற நிலை வந்தாலும்
இருப்பதைப் போல் அழைக்கும் தேவன்
உயிர்ப்பிக்கும் ஆவியினால் உருவாக்கி நடத்திடுவார்.

2. முடியாததென்று நினைக்கும் நேரம்
கர்த்தரின் கரம் உன்னில் தோன்றிடுமே
அளவற்ற நன்மையினால் ஆண்டு நடத்திடுவார்.

3. இருளான பாதையில் நடந்திட்டாலும்
வெளிச்சமாய் தேவன் வந்திடுவார்
மகிமையின் பிரசன்னத்தால் மூடி நடத்திடுவார்.

<u>***பல்லவி***</u>

யார் யாரோ வாழ்விலே சிலுவையைக் கண்டீரோ
சிலுவைக்காய் பணிசெய்ய வாரீரோ ?

<u>***சரணங்கள்***</u>

**1.** தேசங்கள் சந்திக்க தேவையை நிரப்ப
பாசம் கொண்டு பின்னே வருவோன் யார் ?
என்னைப் போல் தன்னையும் நித்தமும் வெறுத்து
சிலுவையை எடுத்து வருவோன் யார் ? – யார்

**2.** பாவம் உலகை பலமாக மூடுது
பக்தர் பலர் கூட சோர்வுற்றார்
தீர்மானங்கள் பல செய்தவர்கள் கூட
பின் வாங்கி இந்நாளில் போய்விட்டார் – யார்

**3.** உலகைப் பகைத்து பாவத்தை வெறுத்து
பரிசுத்த போர் செய்ய செல்வோன் யார் ?
சிலுவையின் மேன்மைக்காய் சிறுமை அடைவோரை
ஆசீர்வதிப்பதென் கடன் அல்லோ ? – யார்



speakarun@gmail.com

## 623

***பல்லவி***

அழைப்பின் குரல் கேட்டேன்
என் ஆண்டவர் என உணர்ந்தேன்
அருகினில் தயங்கி நடை பயின்றேன்
பின்னே வா என முன் சென்றார்.

***சரணங்கள்***

**1.** அறிவினில் குறைந்தவன் நானன்றோ
அதைத் தெரிந்தும் அழைத்தது ஏன் என்றேன்;
அறிந்தவர் செருக்கினை அகற்றிடவே
பின்னே வா என முன் சென்றார் – அழைப்பின்

**2.** வலிமை குறைந்தவன் நான் அன்றோ
அதைத் தெரிந்தும் அழைத்தது ஏன் என்றேன்;
வலியவர் கொடுக்கினை வதைத்திடவே
பின்னே வா என முன் சென்றார் – அழைப்பின்

**3.** குறைகள் நிறைந்தவன் நான் அன்றோ
அதைத் தெரிந்தும் அழைத்தது ஏன் என்றேன்;
கருவில் இருந்துன்னைத் தெரிந்தவன் நான்
பின்னே வா என முன் சென்றார் – அழைப்பின்



speakarun@gmail.com

# 624

## *பல்லவி*

நீர் செல்லும் வழியெல்லாம் நானும் தொடர்ந்திடுவேன்
நீர் சொல்லும் மொழியெல்லாம் நானும் மறப்பேனோ

## *சரணங்கள்*

1. என்ன நேர்ந்தாலும் நன்றி கூறிடுவேன்
எப்போதும் மகிழ்ந்திருப்பேன்
நேசரில் தளராது ஜெபித்திடுவேன் – நீர்

2. என்ன நேர்ந்தாலும் கலங்கிட மாட்டேன்
பயனுள்ள பணிபுரிவேன்
நேசரே உமக்காக வாழ்ந்திடுவேன் – நீர்

3. என்ன நேர்ந்தாலும் அமிழ்ந்து போகமாட்டேன்
கடும்புயல் காற்றடித்தும்
நேசரே நீர் அடக்கி கரை சேர்ப்பீர் – நீர்

4. என்ன நேர்ந்தாலும் உன்னதம் நோக்கிடுவேன்
கண்ணிமை நேரத்திலே
நேசரே உம் சமூகம் பறந்திடுவேன் – நீர்

speakarun@gmail.com

**பல்லவி**

எக்காலத்தும் கர்த்தர் இயேசுவை
எந்தன் துணையாய் ஏற்றிடுவேனே
உயர்வோ தாழ்வோ எந்நிலையோ
எந்தன் தஞ்சம் இயேசுவே

**சரணங்கள்**

1. மண்ணின் வாழ்வும் மாயையாகும்
மனிதன் காண்பதும் பொய்யாகும்
மாறிடா நேசர் இயேசுவே (2)
மாறாத அன்பு என்றும் போதுமே. – எக்

2. அலைகள் மோதி எதிர் வந்தாலும்
கலங்கிடேனே வாழ்க்கையிலே
அசையா எந்தன் நம்பிக்கை (2)
நங்கூரம் எந்தன் இயேசு போதுமே – எக்

3. அவரை நோக்கி ஜெபிக்கும் போது
அருகில் வந்து உதவி செய்வார்
கைவிடாமல் கருத்துடன் (2)
காத்தென்னை என்றும் நடத்திடுவார் – எக்

4. தேவ பயமே ஜீவ ஊற்று
மரண கண்ணிக்கு விலக்கிடுமே
தேவ பாதையில் நடந்திட (2)
தேவாவியானவர் உதவி செய்வார் – எக்

5. முன்னறிந்து அழைத்த தேவன்
முடிவு வரையும் நடத்திடுவார்
தேவ சாயலாய் மாறியே (2)
தேவாதி தேவனை தரிசிப்பேனே – எக்

# 626

## *பல்லவி*

ராஜனே உம் வருகைக்கான காலத்துளிகள் தெரிகின்றன
இயேசுவே நீர் வரும் போது ஏற்றுக் கொண்டவர்கள்
பாக்யவான்கள் அன்றோ.

## *அனுபல்லவி*

வாரும் இயேசுவே வாரும் வாரும் விரைந்து வாரும்.

**1.** மரித்து உயிர்த்தவர் இன்று வருகின்றார்
என்ற நினைவுடன் தாபரிப்போம்
மங்கள நாள் விடியும் காலை ஏங்கும் கன்னியாய்
காத்திருப்போம் – ராஜனே

**2.** தூய உள்ளம் தூய சிந்தை
காலமெல்லாம் அணிந்திருப்போம்
விண்ணிலுள்ள மகிமை வாழ்வை
மண்ணிலே நாம் நடத்த முடிப்போம் – ராஜனே

**3.**உண்மையோடு கடமை முடித்தோர்
இன்றும் என்றும் உயர்த்தப்படுவார்
ஜெபித்தும் உழைத்தும் சிலுவை சுமந்தோர்
தேவ வருகையில் பலனடைவார் – ராஜனே

## 627

1. கைகளால் கட்டப்படாத பொன் மாளிகை எனக்குண்டு
இமைப் பொழுதில் மறுரூபமாகி மேகமீதில் சென்றிடுவேன்.

***<u>பல்லவி</u>***

ஆனந்தம் நான் பாடிடுவேனே உள்ளம் பொங்குதே பூரிப்பாலே
ஆத்ம நாதர் மீண்டும் வருவார் என்னை அழைத்துச் சென்றிடவே.

2. உலகத்தின் அடையாளம் எல்லாம்
கர்த்தர் வருகையைக் காட்டிடுதே
மேகமீதினில் வாரேனென்றார்
வாக்கு மாறாத என் நேசர் – ஆனந்தம்

3. சுத்த பொன்னாய் வீதிகள் ஜொலிக்கும்
ஜீவ விருட்சத்தின் கனி கனியும்
பரலோகம் எந்தனின் பாக்யம்
சாவாமை எனதுரிமை – ஆனந்தம்

4. எந்தன் உள்ளம் ஏங்கும் என் நேசர்
மேகமீதினில் தோன்றிடும் நாள்
ஏறிவா என்றென்னை அழைப்பார்
இமைப் பொழுதில் பறந்திடுவேன் – ஆனந்தம்

# 628

***<u>பல்லவி</u>***

எந்தக் காலத்திலும் எந்த நேரத்திலும்
நன்றியால் உம்மை நான் துதிப்பேன்
இயேசுவே உம்மை நான் துதிப்பேன், துதிப்பேன்
எந்த வேளையிலும் துதிப்பேன்.

1. ஆதியும் நீரே – அந்தமும் நீரே ஜோதியும் நீரே – என்
சொந்தமும் நீரே – எந்த

2. தாய் தந்தை நீரே – தாதியும் நீரே
தாபரம் நீரே – என் தாரகம் நீரே – எந்த

3. வாழ்விலும் நீரே தாழ்விலும் நீரே
வாதையில் நீரே – என் பாதையில் நீரே – எந்த

4. வானிலும் நீரே – பூவிலும் நீரே
ஆழியில் நீரே – என் ஆபத்தில் நீரே – எந்த

5. துன்ப நேரத்தில் – இன்பமும் நீரே
இன்னல் வேளையில் – மாறாதவர் நீரே – எந்த

6. தேவனும் நீரே – என் ஜீவனும் நீரே
ராஜராஜனும் – என் சர்வமும் நீரே. – எந்த

இலேசான காரியம் எதுவும் இலேசான காரியம்
பெலமுள்ளவன் பெலனற்றவன்
பெலமுள்ளவன் பெலன் இல்லாதவன்
யாராயிருந்தாலும் உதவிகள் செய்வது
இலேசான காரியம் உமக்கது இலேசான காரியம்
நம் இயேசுவுக்கு இலேசான காரியம்.

1. மண்ணைப் பிசைந்து மனிதனைப் படைப்பது இலேசான காரியம்
மண்ணான மனிதர்க்கு மன்னாவை தருவது இலேசான காரியம்
உமக்கது இலேசான காரியம் – இலேசான

2. கூழாங்கல்லாலே கோலியாத் வீழ்ந்தது இலேசான காரியம்
ஆழ்கடல் மீன் அதில் வரிபணம் பெறுவதும் இலேசான காரியம்
உமக்கது இலேசான காரியம் – இலேசான

3. கற்பாறை போலே கடல்மேல் நடப்பது இலேசான காரியம்
கற்சாடி நீரை கனிரசம் ஆக்குதல் இலேசான காரியம்
உமக்கது இலேசான காரியம் – இலேசான

4. இடறிய மீனவனை சீஷனாக மாற்றுவது லேசான காரியம்
இடையனை கோமகனாய் அரியணை ஏற்றுவதும் இலேசான காரியம்
உமக்கது இலேசான காரியம் – இலேசான

நீரின்றி வாழ்வேது இறைவா – உம்
நினைவின்றி மகிழ்வேது தேவா
உலகத்தில் நூறாண்டு நான் வாழ்ந்த போதும்
உம்மில்லத்தில் வாழும் ஒரே நாளே போதும் – 2

1. பலகோடி வார்த்தைகள் நான் கேட்டபோதும்
இயேசுவே நீர் பேசும் ஒருவார்த்தை போதும்
ஓராயிரம் ஜீவன் உயிர் வாழுமே
உம் வார்த்தையில் உண்டு அற்புதமே – நீரின்றி

2. கல்லுக்குள் தேரையை வைத்தவர் நீர்
அதற்குள்ளும் ஜீவனை தந்தவர் நீர்
உமையன்றி அணுவேதும் அசையாதைய்யா
உம் துணையின்றி உயிர் வாழ முடியாதைய்யா – நீரின்றி

3. எத்தனை நன்மைகள் செய்தீரையா – அதில்
எதெற்கென்று நன்றி சொல்லி துதிப்பேனைய்யா
அத்தனையும் சொல்ல வேண்டுமென்றால்
ஆயிரம் ஆண்டுகள் போதாதைய்யா – நீரின்றி

எந்தன் ஜெப வேளை உம்மைத் தேடி வந்தேன்
தேவா பதில் தாருமே
எந்தன் கோட்டை எந்தன் தஞ்சம் நீரே
உம்மை நான் நாடி வந்தேன்.

1. சோராது ஜெபித்திட ஜெப ஆவி வரம் தாருமே
தடை யாவும் அகற்றிடுமே தயை கேட்டு உம்பாதம் வந்தேன்.
– எந்தன்

2. உம்மோடு எந்நாளும் உறவாட அருள் செய்யுமே
கர்த்தாவே உம் வார்த்தையை கேட்டிட காத்திருப்பேனே.
– எந்தன்

3. நம்பிக்கை இல்லாமல் அழிகின்ற மாந்தர்களை
மீட்டிடும் என் இயேசுவே போராடி ஜெபிக்கிறேன் நாதா
– எந்தன்

மாயையாமே உலகம் இது மாறும் நிழல் போலே
மாறும் மண்ணாய் வேகம் உன் ஜீவன் போய் விடுமே
ஆனந்தத்தால் ஜீவியம் மனோகரமென்று
நினைத்திட வேண்டாம் இது அழிந்து போய் விடும்
பூப்போல காய்ந்திடும் உன் ஜீவியம் வேகமாய் மறைந்திடும்.

1. உலகில் நன்றாய் வாழ்வேன் என்று நினைத்திட வேண்டாம்
மண்ணாய் வேகம் மாறும் இது நித்யமற்றது.

2. பரலோக வாழ்விற்கு சென்றிட வேண்டாமா
பரலோக பரமனை நீ ஏற்று கொள்ளுவாயா ?

***பல்லவி***

எண்ணி எண்ணி துதி செய்வாய்
எண்ணிடலங்கா கிருபைகளுக்காய்
இன்றும் தாங்கும் தம் புயமே
இன்ப இயேசுவின் நாமமே – 2

1. உன்னை நோக்கும் எதிரியின்
கண்ணின் முன் பதறாதே
கண்மணி போல் காக்கும் கரங்களில்
உன்னை மூடிமறைத்தாரே – எண்ணி

2. யோர்தான் புரண்டு வரும் போல்
எண்ணற்ற பாரங்களோ
எலியாவின் தேவன் எங்கே
உந்தன் விசுவாச சோதனையில் – எண்ணி

3. உனக்கெதிராகவே வரும் ஆயுதம் வாய்க்காதே
உன்னை அழைத்தவர் உண்மை தேவன்
அவர் தாசர்க்கு நீதியவர். – எண்ணி

**_பல்லவி_**

உயிர்ப்பியும் ஒ கர்த்தாவே உயர்த்தி உம்மை கூறவே
உயிர் மீட்சி அடைந்திடவே (2)

1. என் நாமம் தரித்த என் ஜனங்கள்
என்னை தேடி தங்களை தாழ்த்தியே
என்னிடம் திரும்பி ஜெபம் பண்ணினால்
என் ஷேமத்தை தருவேன் என்றீரே – உயிர்

2. சீயோன் குமாரத்தி மதிலே
சொரிவாய் கண்ணீர் நதியளவே
முதற் ஜாமத்தில் எழுந்து புலம்பு முழு இதயத்தை
ஊற்றிடுவாயே – உயிர்

3. தெபோராளே விழித்து நீ எழும்பு
தாயாகிடும் வேளை வந்ததே
கிராமங்களெல்லாம் பாழாய் போயிற்றே
கொடுப்பாய் உன்னை தேசத்திற்காகவே – உயிர்

4. கிராமங்கள் தோறும் உன் பிள்ளைகள்
தினந்தோறும் பசியால் மடிந்தே
சிறையாகி இருளினில் போகுதே
இரு கரங்களை ஏறெடுப்பாயே – உயிர்

**635**

தேவா நான் எதினால் விசேஷித்தவன்
ராஜா நான் அதை தினம் யோசிப்பவன்
எதினால் எதினால் நீர் என்னோடு வருவதினால்
எதினால் எதினால் நீர் என்னோடு இருப்பதினால்

**1.** மேகஸ்தம்பம் மேலிருந்து பாதுகாக்குது
பாதை காட்ட பகலெல்லாம் கூட செல்லுது (2)
அன்பான தேவன் என்னோடு வருவார்
அது போதும் என் வாழ்விலே (2) – தேவா

**2.** தாகமுள்ள தேவ ஜனம் வானம் பாக்குது
ஆவல் கொண்ட கன்மலையும் கூட செல்லுது (2)
என் ஏக்கம் எல்லாம் என் தேவன் தீர்ப்பார்
சந்தோஷம் நான் காணுவேன் (2) – தேவா


**3.** வாழ்க்கையிலே கசப்புகள் கலந்திட்டாலும்
பாசமுள்ள ஒரு மரம் கூட வருது(2)
மாராவின் நீரை தேனாக மாற்றும்
என் நேசர் என்னோடுண்டு (2) – தேவா

## 636

**1.** உயிரோடு எழுந்தவரே உம்மை ஆராதனை செய்கிறோம்
ஜீவனின் அதிபதியே உம்மை ஆராதனை செய்கிறோம்
அல்லேலூயா ஓசன்னா – (4)

**2.** மரணத்தை ஜெயித்தவரே உம்மை ஆராதனை செய்கிறோம்
பாதாளம் வென்றவரே உம்மை ஆராதனை செய்கிறோம்

**3.** சகலமும் படைத்தவரே உம்மை ஆராதனை செய்கிறோம்
சாத்தனை ஜெயித்தவரே உம்மை ஆராதனை செய்கிறோம்




ஏனையா என் மீது இத்தனை பாசம்
ஏனையா என் மீது அளவற்ற நேசம்
நான் பாத்திரன் அல்லவே (4)

1. உலகத்தோற்றம்முன்னே முன் குறித்தீர்
நேரம் வந்தபோது தெரிந்தெடுத்தீர் – (2)
உளையான சேற்றினில் தூக்கி என்னை
உயர்வான ஸ்தலங்களில் அமரச் செய்தீர்(2) – ஏனையா

2. பாவக் குழியில் கிடந்த என்மேல்
பரமனே பரிதாபம் கொண்டீரையா (2)
பாரச் சிலுவையில் பரிசுத்தர் நீர்
இரத்தம் சிந்தி என்னை சுத்தம் செய்தீர் (2) – ஏனையா

3. உயிர் உள்ள மட்டும் நான் உறங்கேனையா
உம் நாமம் உயர்த்திட உழைப்பேனையா (2)
உம் உள்ளம் மகிழ்ந்திட என் வாழ்விலே
உம் சித்தம் என்னில் நான் நிறைவேற்றுவேன் (2) –ஏனையா



நான் நிற்பதும் நிர்மூலமாகாததும் தேவ கிருபையே
நான் உயிருடன் வாழ்வதும் சுகமுடன் இருப்பதும்
கிருபையே – தேவ கிருபையே (3)

1. காலையில் எழுவதும் கர்த்தரைத் துதிப்பதும்
மாலையில் களிப்புடன் இல்லம் வருவதும் கிருபையே (2)
போக்கிலும் வரத்திலும் தொலை தூர பயணத்திலும் (2)
பாதம் கல்லிலே இடறாமல் காப்பதும் கிருபையே – கிருபையே

2. அக்கினி நடுவினிலே என்னை எறிந்திட நேர்ந்தாலும்
தூதனாய் நின்று என்னைக் காப்பதும் கிருபையே (2)
ஆழியின் நடுவிலும் சீறிடும் புயலினிலும் (2)
நீர் மேல் நடந்து வந்து என்னைக் காப்பதும் கிருபையே
– கிருபையே

3. கண்ணீர் கவலைகளில் கஷ்ட நஷ்டங்களில்
துஷ்டரின் கைக்கு விலக்கி காப்பதும் கிருபையே (2 )
ஆற்றி தேற்றியே அரவணைத்திடும்
மாபெரும் கிருபையே எங்கள் தேவ கிருபையே (3)
– கிருபையே

எந்தன் இயேசுவே உந்தன் நேசமே எந்தன் உள்ளம் உருகிடுதே
நல்ல பங்கினை நான் அடைந்தேன் திருப்பாதம்
வல்ல பராபரனே சரணம்.

1. அந்த மாது கண்களின் நீரை அன்பரே உம்பாதம் ஊற்றினாளே
என் இதயமே தைலக்குப்பியே என்னை நொறுக்கி ஒப்படைத்தேன்.

2. நன்றி என்றும் நான் மறவேனே நம்பிக்கைக் கன்மலை என் இறைவா
எந்தன் துணைநீர் என்னை அறிவீர் எந்தன் பாரம் தாங்கிடுவீர்.

3. உம்மையன்றி ஆதரவில்லை உம்முகமே எனக்கானந்தமே
கைவிடாமல் காக்கும் கரமே கண்கள் அதனை நோக்கிடுதே.

4. கேட்டதெல்லாம் அன்புடன் ஈந்தீர் கூப்பிடும் வேளை செவிசாய்த்தீர்
இந்த உதவி என்றும் மறவேன் இன்ப துதிகள் ஏறெடுப்பேன்.

5. எந்தன் மேன்மை சிலுவையல்லாமல்
ஏதுமில்லை இந்த பாரினிலே உந்தனுடனே என்னை அறைந்தேன்
உந்தன் குருசில் பங்கடைந்தேன்.

சந்தோஷமாயிருங்கள் – எப்பொழுதும்
சந்தோஷமாயிருங்கள் (2)
உயர்வானாலும், தாழ்வானாலும் (2)
சர்வ வல்ல தேவன் நம்மோடிருக்கிறார் (2)

1. நெருக்கத்தின் நேரத்திலும் கண்ணீரின் பாதையிலும்
நம்மை காண்கிற தேவன் நம்மோடிருப்பதால்
சந்தோஷ மாயிருங்கள்.

2. விசுவாச ஓட்டத்திலும் ஊழியப் பாதையிலும்
நம்மை வழி நடத்தும் தேவன் நம்மோடிருப்பதால்
சந்தோஷ மாயிருங்கள்.

3. தோல்விகள் வந்தாலும் நஷ்டங்கள் வந்தாலும்
நமக்கு ஜெயம் கொடுக்கும் தேவன்
நம்மோடிருப்பதால் சந்தோஷமாயிருங்கள்.

## 641

பரிசுத்த நகரம் பரம எருசலேம்
பாரினில் இறங்கிட நான் கண்டேன்
முந்தின பூமி ஒழிந்து போயிற்றே
புதிய வானம் பூமி கண்டேன்.

1. தேவ மகிமை அடைந்த எருசலேம்
மணவாட்டிக்காக ஆயத்தப்பட்டது
அழியாத வாடாத மாசற்ற சுதந்திரம்
எருசலேமில் நான் பெறுவேன் – பரிசுத்த

2. அஸ்திபார நகரம் அலங்கார நகரம்
மணவாட்டிக்காக ஆயத்தப்பட்டது
நகரத்தின் வீதிகள் சுத்த பொன்னாமே
எருசலேமில் நான் நடப்பேன் – பரிசுத்த

3. ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்
கேட்கிறவனும் வா என்பானாக
சீக்கிரம் வருவேன் என்று இயேசு உரைத்தார்
ஆமென் இயேசுவே வாரும். வாரும் – பரிசுத்த

ஆழ்ந்த சேற்றினில் அகப்பட்ட நம்மை அணைத்து எடுத்தாரே
இயேசு அணைத்து எடுத்தாரே அலைகடல் நடுவே தவிக்கின்ற
நமக்கு ஆறுதல் அளிப்பாரே இயேசு ஆறுதல் அளிப்பாரே.

1. பாவங்கள் போக்கி சாபங்கள் நீக்கி
கோபத்தைக் கலைத்தாரே
இயேசு கோபத்தைக் கலைத்தாரே
காவியம் போற்றும் ஆவியும்
ஜீவனும் ஆகமமானாரே – இயேசு.

2. கல்லறை திறந்திட காவலர் நடுங்கிட
கட்டுகள் அறுத்தாரே
இயேசு கட்டுகள் அறுத்தாரே
கல்வாரிப்பாதையில் பார சிலுவையை
நொந்து சுமந்தாரே இயேசு நமக்கென மரித்தாரே.

3. பூவினில் வந்த தேவனைத் துதித்தால்
தீவினை அகன்றிடுமே
பாலகன் இயேசுவின் நாமத்தில் ஜெபித்தால்
பாசம் வளர்ந்திடுமே நல்ல பாசம் வளர்ந்திடுமே.

**643**

1. எந்தன் உள்ளம் தங்கும் இயேசு நாயகா
உன்தன் வீடாய் கொள்ளும் இயேசு நாயகா
இயேசு நாயகா, இயேசு நாயகா
உன்தன் வீடாய் கொள்ளும் இயேசு நாயகா.

2. மாம்சக் கிரியை போக்கும் இயேசு நாயகா
குழந்தை உள்ளம் ஆக்கும் இயேசு நாயகா
இயேசு நாயகா, இயேசு நாயகா
குழந்தை உள்ளம் ஆக்கும் இயேசு நாயகா.

3. என்னை உமக்குத் தந்தேன் இயேசு நாயகா
இனி நான் அல்ல நீரே இயேசு நாயகா
இயேசு நாயகா இயேசு நாயகா
இனி நான் அல்ல நீரே இயேசு நாயகா.



அநாதி சிநேகத்தால் என்னை நேசித்தீரையா
காருண்யத்தினால் என்னை இழுத்துக் கொண்டீரே.

**உங்க அன்பு பெரியது**
**உங்க இரக்கம் பெரியது**
**உங்க கிருபை பெரியது**
**உங்க தயவு பெரியது**

1. கடந்து வந்த பாதைகளை நினைக்கும் போதெல்லாம்
கண்ணீரோடு நன்றி சொல்லி துதிக்கின்றேன் ஐயா – உங்க

2. கர்த்தர் செய்ய நினைத்தது தடைபட வில்லை
சகலத்யையும் நன்மைக்காக செய்து முடித்தீரே – உங்க

3. தாயின் கருவில் தோன்றும் முன்னே தெரிந்துக் கொண்டீரே
தாயைப் போல சேர்த்துக் காத்து அணைத்துக் கொண்டீரே
– உங்க

ஆத்துமாவே ஸ்தோத்தரி முழு உள்ளமே ஸ்தோத்தரி
ஜீவனுள்ள தேவனைத் துதி – அல்லேலூயா

1. ஒன்று இரண்டு என்றல்ல  தேவன் தந்த நன்மைகள்
கோடா ,கோடா கோடியாகுமே ஒன்று இரண்டு என்றல்ல
நீ செலுத்தும் நன்றிகள் கோடா கோடா கோடியாகுமே – அல்லேலூயா

2. நாட்டிலுள்ள மக்களே பூமியின் குடிகளே
என்னுடன் தேவனைத் துதியுங்கள்
கூட்டிலுள்ள பறவைப் போல் சிக்கிக் கொண்ட நம்மையே
விடுவித்த தேவனைத் துதியுங்கள்– அல்லேலூயா

3. பெத்லேகேம் வந்தாரே கல்வாரிக்குச் சென்றாரே
இயேசு எனக்காய் ஜீவன் விட்டாரே
இம்மகா சிநேகத்தை ஆத்துமாவே சிந்திப்பாய்
நெஞ்சமே நீ மறக்கக்கூடுமோ –அல்லேலூயா

4. நானும் என் வீட்டாருமோ போற்றுவோம் ஆராதிப்போம்
இயேசுவை என்றுமே சேவிப்போம்
எங்கள் பாவம் மன்னித்தார் எங்கள் தேவை சந்தித்தார்
வருகை வரை நடத்திச் செல்லுவார் – அல்லேலூயா

1. ஒரு நாளில் பாவியாய் அலைந்தேன்
எந்தன் நேசரின் அன்பினை மறந்தேன்
மனதும் மாம்சமும் விரும்பியதை செய்தேன்
மன நிம்மதியும் இழந்தேன்

*<u>பல்லவி</u>*

பாரிலே ஒன்றும் இல்லையே மாயமாம் இந்த வாழ்விலே
தேவ சித்தம் செய்வதே என் ஆவல் என்றுமே

2. எந்தன் இயேசுவின் முகத்தை நோக்கினேன்
எந்தன் பாவங்கள் யாவையும் மன்னித்தார்
எந்தனுக்காக யாவையும் செய்து முடிப்பார்
என்னை முழுமையாய் ஒப்படைத்தேன்– பாரிலே

3. தம் அன்பினால் என்னை நிறைத்தார்
தம் ஊழியம் செய்திட அழைத்தார்
மகிமையில் தம்முடன் சேர்த்திடும் நாள் வரையில்
மனத்தாழ்மையுடன் காப்பார் – பாரிலே

# 647

இந்திய தேசம் நமது தேசம் கிறிஸ்துவின் தேசமாகவே
தேவநேசம் சுவிசேஷமாகவே உயர்த்தி முழங்குவோம்.

1. வந்தே மாதரம் சொல்லும்போது தேசத்தில் பற்று கூடுதே – 2
கிறிஸ்துவின் நாமம் கூறும்போது வையகம் போற்றிப் பாடுதே – 2
– இந்திய

2. பாரத நாடு பாவத்தாலே பற்றி எரிந்து போகுதே
தீவிரவாத துரோகத்தாலே தீக்கிரையாகி வேகுதே – இந்திய

3. ஜாதி மதம் பேதமெல்லாம் ஒழிந்து ஒற்றுமை ஓங்கிட
ஓதுவோமே வேதம் இங்கே ஒன்றே குலம் தோன்றிட – இந்திய

4. குருசில் தொங்கி குருதி வடித்த குமரன் ஏசு நாதனே
நமது நாட்டில் ஒன்றே தேவன் என்றே பாரதம் பாடவே – இந்திய

5. திறப்பில் நிற்க தினம் தோறும் விழித்தெழும்பு ஊழியரே
சத்தியத்தால் சாத்தானை வெல்ல சக்தி பெற்றிடு ஊழியனே– இந்திய



எந்தன் வாழ்விலே கிறிஸ்துவே எல்லாம்
எந்தன் ஆத்ம நேசரும் அவரே
எந்தன் கோட்டையும் எந்தன் துருகமும்
எந்தன் இரட்சிப்பும் அவரே –2

1. தாயின் கருவில் என்னைக் கண்டார்
என்னை முன்குறித்து விட்டார்
எனக்கு அவர் கண்களிலே
தயவு கிடைத்ததே ஆ–ஹா – எந்தன்

2. என்னென்ன துன்பம் வந்த போதும்
மீட்டு காத்திட்டார் என் தேவன்
ஆறுதல் செய்கின்ற தேவன்
அருகில் இருக்கின்றார் ஆ–ஹா – எந்தன்

3. என் அன்பு ஏசுவை வாழ்த்தி
போற்றிடுவேன் எல்லா நாளும்
துதித்து ஆராதித்து என்றும்
நன்றியாய் வாழுவேன் ஆ–ஹா – எந்தன்

4. எக்காள சத்தம் வானில் கேட்கும்
நேசரை காணும்நாள் சமீபம்
அவரோடு நித்திய காலம்
சந்தோஷம் காண்பேனே ஆ–ஹா – எந்தன்

1001ChristianClipart.com

பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காய்
நான் இலக்கை நோக்கி ஓடுகிறேன்
ஓடுகிறேன் நான் ஓடுகிறேன் ஓடுகிறேன்
என் இயேசுவுக்காய் நான் ஓடுகிறேன் – அல்லேலூயா (8)

1. லாபமான அனைத்தையுமே
நான் நஷ்டமென்று கருதுகிறேன்
இயேசு ராஜாவின் இந்த வேலைக்காக
மகிழ்ச்சியுடன் நான் ஓடுகிறேன்
அல்லேலூயா (8) – பரம அழைப்பின்

2. எத்தனைதான் இடர்கள் வந்தாலும்
விசுவாசத்திலே நிலைத்திருப்பேன்
எனக்காக அப்பா நியமித்த
இந்த பாதையிலே நான் ஓடுகிறேன்
அல்லேலூயா (8) – பரம அழைப்பின்

3. என் மணவாளன் ஏசுராஜாவை
நான் காணவே வாஞ்சிக்கிறேன்
என் ஆசையெல்லாம் என் ஏசுதானே
அவர் பொன் முகம் தான் நான்
பார்க்கணுமே அல்லேலூயா (8) – பரம அழைப்பின்



மன்னியும் தேவா மன்னியுமே
எங்கள் பாவங்களை மன்னியுமே
சிலுவை நிழலில் மறையும் என்னை
சாட்சியாய் வாழ செய்யும் என்னை.

1. கல்வாரி அன்பின் நீளத்தையும்
அகலம் ஆழம் உயரத்தையும் (2)
கண்டு வீழ்ந்து போன என்னை
தூக்கிட்ட கரங்கள் உமதல்லவா (2)

2. அல்லும் பகலும் ஜெபித்திடும்
நல் ஆவியின் வரங்களை தந்திடுமே (2)
ஜெபமும் துதியும் ஸ்தோத்திரமும்
வாழ்க்கையாய் மாறிட செய்திடுமே (2)

3. வாழ்ந்தாலும் இயேசுவுக்காய் வாழ்ந்திடுவேன்
மரித்தாலும் இயேசுவுக்காய் மரித்திடுவேன் (2)
பூரண பலனை எனக்கருளும்
பின் வாங்கி போகாமல் காத்தருளும் (2)

# 651

கோடாகோடி ஸ்தோத்திரம் பாடி கிறிஸ்துவின் அன்பை ருசிப்போமே

***அனுபல்லவி***

சேற்றிலிருந்து தூக்கி எடுத்து
தேற்றி அணைத்துக் காத்துக்
கொண்டாரே – தேவசுதன்

***சரணங்கள்***

1. பாவியை மீட்கப் பரன் சித்தங்கொண்டார்
பரலோகம் துறந்து பாரினில் பிறந்தார்
பரமனிவ்வேழையைத் தேடி வந்தாரோ
பாதம் பணிந்தேன் பதில் ஏதுமுண்டோ – பூவுலகில் – கோடா

2. தேவனின் சித்தம் செய்யும்படியாய்
தாசனின் கோலம் தாமெடுத் தணிந்து
தற்பரன் நொறுக்கச் சித்தங் கொண்டாலும்
தம்மைப் பலியாய்த் தத்தம் செய்தாரே – எந்தனுக்காய் – கோடா

3. ஆடுகளுக்காய் உயிர்தனைக் கொடுத்து
கேடுவராது காக்கும் நல்மேய்ப்பர்
இன்றுமென் மேலே வைத்த நேசத்தால்
என்றென்றும் நன்றி கூறித் துதிப்பேன்–இறையவனை – கோடா

4. தாவீது கோத்திரச் சிங்கமாய் வந்தும்
சாந்தத்தால் என்னைக் கவர்ந்து கொண்டாரே
தாழ்மையான ஆட்டுக்குட்டியுடனே
தங்கியிருப்பேன் சீயோன் மலையில் – நித்தியமாய் – கோடா

5. குயவனின் கையில் களிமண்ணைப் போல
குருவே நீர் என்னை உருவாக்குமையா
மாசற்ற மணவாட்டியாய் என்னைக் காத்துக் கொள்ளும்படி
கருணைகூர் ஐயா – ஏழையென்னை – கோடா

ஜெயங் கொடுக்கும் தேவனுக்கு கோடி கோடி ஸ்தோத்திரம்
வாழ்வளிக்கும் இயேசு ராஜாவுக்கு வாழ்நாளெல்லாம் ஸ்தோத்திரம்.
அல்லேலூயா அல்லேலூயா பாடுவேன்
ஆனந்த தொனியாய் உயர்த்துவேன்.

1. நீதியின் கரத்தினால் தாங்கி நடத்துவார்
கர்த்தரே என் பெலன், எதற்குமே அஞ்சிடேன்.

2. அற்புதம் செய்பவர் அகிலம் படைத்தவர்
யுத்தத்தில் வல்லவர், மீட்பர் ஜெயிக்கிறார்.

3. நம்பிக்கை தேவனே, நன்மைகள் அளிப்பவர்
வார்த்தையை அனுப்பியே மகிமைப்படுத்துவார்.


4. உண்மை தேவனே, உருக்கம் நிறைந்தவர்
என்னைக் காப்பவர், உறங்குவதில்லையே.

# 653

**1.** யெகோவா யீரே தந்தையாம் தேவன்
நீர் மாத்ரம் போதும் எனக்கு
யெகோவா ராஃபா சுகம் தரும் தேவன்
உம் தழும்புகளால் சுகமானேன்
யெகோவா ஷம்மா என் கூட இருக்கிறீர்
என் தேவையெல்லாம் சந்திப்பீர்
நீர் மாத்ரம் போதும் (3) எனக்கு – (2)

**2.** யெகோவா ஏலோகிம் சிருஷ்டிப்பின் தேவனே
உம் வார்த்தையால் உருவாக்கினீர்
யெகோவா பரிசுத்தர் உன்னதர் நீரே
உம்மைப் போல் வேறு தேவனில்லை
யெகோவா ஷாலோம் உம் சமாதானம்
தந்தீர் என் உள்ளத்திலே

**3.** இயேசுவே நீரே என் ஆத்ம நேசர்
என்னில் எவ்வளவு அன்பு கூர்ந்தீர்
என்னையே மீட்க உம்மையே தந்தீர்
உம் அன்பிற்கு இணையில்லையே
என் வாழ்நாள் முழுதும் உமக்காக வாழ்வேன்
நீரே என்றென்றும் போதும்



உலகம் தராத அன்பு தருவீரே இயேசு தேவா
பெலனில்லை எந்தன் நெஞ்சில் அருள்வீரே ஏசு தேவா – 2

1. கரைகாணா துன்ப வெள்ளம் புரண்டோடும் வேளை வந்தும்
இரு கைகள் நீட்டி என்னை உம் அருகில் அணைத்துக் கொண்டீர் – உலகம்

2. வானோர்கள் சேனை பாட மேய்ப்பர்கள் தேடிச் சென்றார்
மாவல்ல பொன்னும் கண்டார் மகிமை நிறைந்த என் தேவா
– உலகம்

3. அன்பான இயேசு தேவா எனக்காக ஜீவன் கொடுத்தீரே
என்னையும் அழைத்துச் செல்ல நீர் சீக்கிரம் வருவீர் ஐயா
– உலகம்

1001ChristianClipart.com

எந்தன் இயேசு எனக்கு நல்லவர்
அவர் என்றென்றும் போதுமானவர்
ஆபத்தில் துக்கத்தில் என் பிரயாசங்களில்
அவர் என்றுமே போதுமானவர்.

**1.** கல்வாரி மலை மேட்டினிலே முள்முடி சிரசில் சூடியே
பெரும் வேதனை யாவையும் நீக்கி என்னில் புது ஜீவனை
ஊற்றினதால் – எந்தன்

**2.** அவர் ஆதியும் அந்தமுமே தேவ சிநேகத்தின் பிறப்பிடமே
பதினாயிரங்களில் மிகச் சிறந்தவரே
மிக துதிக்கப்படத்தக்கவர். – எந்தன்

**3.** எந்தன் ஏக்கமெல்லாம் நீங்கிப்போம்
கண்ணீர் யாவையும் துடைத்திடுவார்
இயேசு ராஜாவாய் வானத்தில் வெளிப்படும் நாள்
நான் அவருடன் பறந்திடுவேன்.– எந்தன்

speakarun@gmail.com

குயவனே குயவனே படைப்பின் காரணனே
களிமண்ணான என்னையுமே கண்ணோக்கிப் பார்த்திடுமே

1. வெறுமையான பாத்திரம் நான் வெறுத்து தள்ளாமலே
நிரம்பி வழியும் பாத்திரமாய் விளங்கச் செய்யுமே
வேதத்தில் காணும் பாத்திரமெல்லாம் இயேசுவைப் போற்றிடுதே
என்னையும் அவ்வித பாத்திரமாய் வனைந்து கொள்ளுமே.
– குயவனே

2. விலை போகாத பாத்திரம் நான் விரும்புவாரில்லையே
விலையில்லா உம் கிருபையால் உகந்ததாக்கிடுமே
தடைகள் யாவும் நீக்கி என்னை தம்மைப் போல் மாற்றிடுமே
உடைத்து என்னை உந்தனுக்கே உடமையாக்கிடுமே.
– குயவனே

3. மண்ணாசையில் நான் மயங்கியே மெய்வழி விட்டகன்றேன்
கண்போனப் போக்கை பின்பற்றியே கண்டேன் எல்லை இன்பமே
காணாமற்போன பாத்திரம் என்னை தேடி வந்த தெய்வமே
வாழ்நாள் எல்லாம் உம் பாதம் செல்லும் பாதையில் நடத்திடுமே.
– குயவனே

speakarun@gmail.com

தேவ தூதரோடே வானில் தோன்றிடுவார்
ஆரவாரத்தோடே அவர் வந்திடுவார்– எனக்காய்

1. எக்காள சத்தமே மேகத்தில் முழங்க
ஏகமாய் எழுந்து இயேசுவை சேருவோம்– விரைவுடன்

2. கல்லறை திறந்து மரித்தவர் எழும்ப
வல்லமை விளங்க நாமங்கு கூடுவோம் – மகிழ்வுடன்

3. மண்ணிலமீதிலே என்னென்ன பாடுகள்
இனிவரும் மகிமை இணையாகுமோ சபையே – விளம்புவீர்

4. மகிமை வஸ்திரமே மணவாட்டி சபைக்கு
மணவாளன் தருவார் அன்று நாம் அணிவோம் – மகிமையாய்

5. ஆயத்தமானவர் அன்பர் இயேசுவுடன்
அன்றருந்திடுவோம் மாபெரும் விருந்து – இன்பமாய்



அந்த நாள் இன்ப இன்ப இன்ப நாள்
எங்கள் இயேசு ராஜன் வானில் தோன்றும் நாள்
அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா.

**1.** இந்த பூமி வெந்துருகி சாம்பலாகுமே
சிந்தித்து மனந்திரும்பி, அவரை அண்டிக்கொள்
விரைவுடன் ஓடி வா, விண்ணினில் சேரவே
வேகமாய், வேகமாய், வேகமாய்

**2.** கஷ்டம், நஷ்டம், பட்ட பாடும் பறந்துப் போகுமே
பஞ்சம், பசி தாகமும், மறைந்து போகுமே
வாதை நோய், துன்பமும் வருத்தங்கள் யாவுமே
நீங்குமே, நீங்குமே, நீங்குமே

**3.** ஆட்டுக்குட்டி பின்னே போவார் பாட்டுப் பாடுவார்
பரவசங்கள் சூழ்ந்து மிக மகிழ்ந்து பூரிப்பார்
ஆனந்தம் என்றுமே, ஆர்ப்பரிப்போம் அவரிலே
ஆனந்தம், ஆனந்தம், ஆனந்தம்



**1.**ஜீவ வாசனை ஜீவ வாசைன பாவி என்னிலே வீசச் செய்யுமே
ஜீவ நாட்களை ஆத்ம மீட்புக்காய் பாரில் எங்கிலும் வாழ
செய்யுமே அல்லேலூயா – 4

**2.** பக்தி போர்வையில் தூபம் ஏற்றிடும்
போலி பக்தரின் சாயல் வேண்டாமே
தாழ்த்தி வேண்டிடும் ஆயக்காரனாய்
நித்தம் வாழ்ந்திட அருள் ஈயுமே

**3.** திக்கற்ற பிள்ளை விதவைகள் கூட்டம்
கண்ணீர் சிந்திடும் தேசம் மீதிலே
இலாப நோக்கின்றி பாசம் காட்டிடும்
தியாக ரூபமாய் என்னை மாற்றுமே

**4.** மத்திய மாநிலம் ஆளும் அனைவரும்
பற்பல பாஷை ஜாதி யாவரும்
நித்திய ராஜிய பாக்கியம் அடைந்திட
பக்தன் பவுலைப்போல் என்னை வனையுமே

இந்த பூவுலகில் வாழும் மனிதா உந்தன் பாவ வாழ்வில்
விடுதலை வேண்டுமா ? நித்திய ஜீவன் தரும் கர்த்தர்
இயேசுவை நம்பி விசுவாசம் வைத்தே மகிழ்வாய்

1. பொருளின்றி ஏழை பொருள் தன்னைத் தேடி
கால் போன போக்கில் ஓடுகிறான்
பணக்கார சீமான் பணத்தாலே நிம்மதி கிடைக்காமல்
நாளும் வாடுகிறான்
இந்த பூமியிலே எவர்க்குமில்லை நிம்மதி
அந்த நிம்மதியை பெற இயேசுவே கதி
அவர்பதம் சேர முழுமனதாய் சம்மதி
பின்பு காலமெல்லாம் அடைவாய் அமைதி

2. உனக்காகத் தானே மனுக்கோலம் கொண்டே
மரித்தாரே தேவன் சிலுவையிலே
உன் பாவம் யாவும் தம் மீது சுமந்தே
செங்குருதி சிந்தி மீட்பளித்தார்
அந்த நாயகனின் தியாகத்தினாலே
உந்தன் பாவங்களும் உன்னை விட்டுப்போகுமே
இந்த நல்மேய்ப்பன் மந்தையிலே சேர்வதே
நித்திய வாழ்வுதனை அடையும் மார்க்கமே.

3. இனிப்பான கரும்பை சுவைக்காமல் யாரும்
ருசி காண முடியுமா சொல் மனமே
இரட்சிக்கின்ற தேவனின் சக்தியினை உணர
நம்பிக்கை வைத்தே வந்தால் நலம் பெறலாம்
இந்த பூமியிலே எவர்க்குமில்லை நிம்மதி
அந்த நிம்மதியை பெற இயேசுவே கதி
அவர் பாதம் சேர முழுமனதாய் சம்மதி
பின்பு காலமெல்லாம் அடைவாய் நிம்மதி

1. எமைப் படைத்தவரே பாதுகாப்பவரே
பிதாவே உமக்கு ஸ்தோத்திரம்
உம்தன் சமூகமதில் இந்த நேரமதில்
கூடினோம் ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம்!! (2)

***பல்லவி***

எங்கள் இதயங்களில் உம்தன் வசனம் தரும்
பாதைக்கு வெளிச்சம் வசனம் – 2

2. சென்ற காலம் எல்லாம் கர்த்தரின் நன்மைகள்
எத்தனை அதிகம்! அதிகம்!! வரும் நாட்களிலும்
வழி நடத்திடுவீர் இயேசுவே ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம்!! (2)
– எங்கள்

3. தூய பாதையினில் நாங்கள் நடந்து செல்ல
ஆவியின் கிருபை தந்திடும் உண்மை அன்பு கொண்டு
நாங்கள் வாழ இன்று நிரப்பும், ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம்!! (2)
– எங்கள்

காலம் காலமாக உம்மை நான் துதிப்பேன்
காலை மாலை தோறும் உம்மையே துதிப்பேன்
என்றும் மாறாதவர் இயேசுராஜன் நீரே
மகிமை மகிமை உமக்கென்றுமே

1. சொன்னபடி செய்பவரே சொல்லால் அகிலத்தை படைத்தவரே
சோர்ந்து போகும்போது நீர் சொன்னதை நினைத்தே அகமகிழ்வேன்
துதிப்பேன் துதிப்பேன் துதித்திடுவேன் – 2 – காலம்

2. கண்மணி போல் காப்பவரே காற்றையும், கடலையும் அதட்டினீரே
கலங்கித்தவித்தபோது உம்மைக் கண்டேன் கடந்தேன் கலங்கிடேனே
துதிப்பேன் துதிப்பேன் துதித்திடுவேன் – 2 – காலம்


3. சந்தோஷமாய் இருங்கள் என்றீர்
சகலமும் நன்மைக்காய் நடத்தினீரே
சார்ந்தே இருப்பேன் என்றும் சர்வ வல்லவர் பாதம் பணிந்திடுவேன்
துதிப்பேன் துதிப்பேன் துதித்திடுவேன் – 2 – காலம்

என் கிருபை போதும் என்றவர்– பெலன்
இன்றும் என்றும் தந்து தாங்குவார்
எல்லாக் காலங்களிலும் எல்லா வேளைகளிலும்
எந்தன் நேசர் என்றும் துணையாவார் – 2

1. முழு இருதயத்தோடே துதிப்பேன்
முழு மனதோடென்றும் நேசிப்பேன்
எந்தன் ஆவி மகிழ்ந்து எந்தன் உள்ளம் பூரித்து
எந்தன் நாவும் பாடும் துதிகீதமே 2 – என்

2. உம் அடிமையின் அடைக்கலமே
பெரும் கோட்டையும் அரணும் நீரே
பொல்லா உலகில் என்றும் என்னை காத்து நடத்தும்
பக்தர் போற்றும் மகா உன்னதரே –2 – என்

3. என் நேசர் இயேசு மீண்டும் வருவார்
என்னை சேர்த்தணைத்து விண்ணில் செல்லுவார்
நானோயுகயுகமாய் நேசர் மகிமை கண்டு
நவ சீயோனிலே வாழ்ந்திடுவேன்–2 – என்



உன் தாலந்தெல்லாம் இன்றே செலவிடு
இயேசு கிறிஸ்துவுக்காய்
உன் செல்வம் எல்லாம் இன்றே செலவிடு
தேவ அருட் பணிக்காய்

1. பணத்தின் ஆசை தீமைகளுக்கு வேராய் இருக்கிறது
உண்ணவும், நான் உடுக்கவும் உண்டானால் அது போதும்
– உன் தாலந் தெல்லாம்

2. உலகில் யாரும் ஒன்று கூட கொண்டு வந்ததில்லை
இகத்தில் இருந்து ஒன்று கூட கொண்டு போவதில்லை
– உன் தாலந் தெல்லாம்

3. ஆத்தும ஆதாயத்தின் பலன் ஜீவனின் கனியாம்
காத்திருந்து அடைந்து கொண்டால் பாக்கியம் வருமே
– உன் தாலந் தெல்லாம்



அக்கரைக்கு யாத்திரை செய்யும் சீயோன் வாசியே
அலைகளைக் கண்டு நீ பயப்படாதே
காற்றினையும், கடலினையும் அதட்டிடும் இயேசு இப்படகிலுண்டு.

1. விசுவாசமாம் படகில் யாத்திரை செல்கையில்
தண்டு வலித்து நீ கலங்குகையில்
பயப்படாதே இயேசு உடனிருப்பார்
போகின்ற சொர்க்கிய துறைமுகத்து – அக்கரை

2. எனது தேசம் இங்கே அல்லவே
இங்கே நீ பரதேசியாகவல்லவோ
அக்கரையே உனது ஆறுதல் தேசம்
ஆயத்தமானஸ்தலம் உனக்கு உண்டு – அக்கரை

3. ஆட்டுக் குட்டியானவர் அதற்கு விளக்கானதால்
இருள் ஒரு சிறிதும் அங்கேயில்லையே
ஜீவ கிரீடம் அங்கு உனக்குத் தருவார்
தரிப்பிப்பார் உனக்கங்கு வெண் வஸ்திரம் – அக்கரை



சீயோனை நாடி நான் இயேசுவில் சார்ந்து நான்
போகிறேன் சிலுவையின் பாதையில்

**1.** மோட்ச பாதை தானே நான் நடப்பது
காட்சியாலே அல்ல விசுவாசத்தாலேயாம்
பாவமும் பாரமும் விட்டு நான் ஓடுவேன்
பரமனின் பாதமும் சேருவேன் – சீயோனை

**2.** என்னை சொந்தமாக்கும் சந்தோஷத்தால்
நிந்தைகள் சகித்து மரித்த இயேசுவை
தியானித்தும், சேவித்தும், நேசித்தும் போகையில்
சோர்வுகள் என்றென்றும் அறிந்திடேன் – சீயோனை

**3.** சாட்சிகள் சமூகம் என்னைச் சுற்றிலும்
நிற்கும் போது நானும் முன்னேறிச் செல்லுவேன்
சோர்ந்திடும் வேளையில் சாருவேன் இயேசுவில்
நித்தமும் தாங்குவார் என் நேசர் – சீயோனை

**1.** கானகப் பாதை காடும் மலையும் காரிருளே சூழ்ந்திடினும்
மேக ஸ்தம்பம் அக்கினி தோன்றும்
வேகம் நடந்தே முன் செல்லுவாய்

***பல்லவி***

பயப்படாதே கலங்கிடாதே பாரில் ஏசு காத்திடுவார்
பரம கானான் விரைந்து சேர்வாய்
பரமனோடென்றும் வாழ்ந்திடுவாய்

**2.** எகிப்தின் பாவ வாழ்வை வெறுத்தே
ஏசுவின் பின்னே நடந்தே தூய பஸ்கா நீ புசித்தே
தேவ பெலனால் முன் செல்லுவாய் – பயப்படாதே

**3.** கடலைப் பாரும் இரண்டாய் பிளக்கும்
கூட்டமாய் சென்றே கடப்பாய் சத்ரு சேனை மூழ்கி மாளும்
ஜெயஞ் சிறந்தே முன் செல்லுவாய் – பயப்படாதே

**4.** குளிர்ந்த ஏலீம் பன்னீரூற்றும் காணுவாய் பேரீச்சமரம்
கன்மலையில் தாகம் தீர்த்து
மன்னா ருசித்தும் முன் செல்லுவாய் – பயப்படாதே

**5.** கசந்த மாரா உன்னைக் கலக்கும்
கஷ்டத்தால் உன் கண் சொரியும்
பின் திரும்பி சோர்ந்திடாதே
நன்மை அருள்வார் முன் செல்லுவாய் – பயப்படாதே

**6.** கொடுமை யுத்தம் உன்னை மடக்கும்
கோர யோர்தான் வந்தெதிர்க்கும்
தாங்கும் கர்த்தர் ஓங்கும் கையால்
தூக்கிச் சுமப்பார் முன் செல்லுவாய் – பயப்படாதே

**7.** புதுக்கனிகள் கானான் சிறப்பே பாலும் தேனும் ஓடிடுமே
இந்த கானான் கால் மிதித்து
சொந்தம் அடைய முன் செல்லுவாய் – பயப்படாதே

என் உயிரான உயிரான உயிரான இயேசு
என் உயிரான உயிரான உயிரான இயேசு
என் உயிரான இயேசு என் உயிரோடு கலந்தீர்
என் உயிரே நான் உம்மைத் துதிப்பேன் – 2

1. உலகமெல்லாம் மறக்குதய்யா
உணர்வெல்லாம் இனிக்குதய்யா –2
உம் நாமம் துதிக்கையிலே ஏசையா
உம் அன்பை ருசிக்கையிலே – என் உயிரான

2. உம் வசனம் எனக்கு உணவாகும்
உடலுக்கெல்லாம் மருந்தாகும் – 2
இரவும் பகலும் ஐயா உந்தன் வசனம் தியானிக்கிறேன்
–என் உயிரான

3. உம் திரு நாமம் உலகத்திலே
உயர்ந்த அடைக்கல அரண்தானே – 2
நீதிமான் உமக்குள்ளே ஓடி சுகமாய் இருப்பேனே
– என் உயிரான

என் இதயம் யாருக்குத் தெரியும் என் வேதனை யாருக்குப் புரியும்
என் தனிமை என் சோர்வுகள் யார் என்னை தேற்றுவார் – 2

1. நெஞ்சின் நோவுகள் அவை மிஞ்சும் பாரங்கள்
தஞ்சம் இன்றியே நெஞ்சம் ஏங்குதே

2. சிறகு ஒடிந்த பறவை அது வானில் பறக்குமோ
உடைந்த உள்ளமும் ஒன்று சேருமோ

3. மங்கி எரியும் விளக்கு பெரும் காற்றில் நிலைக்குமோ
வீசும் புயலிலே படகும் தப்புமோ

4. அங்கே தெரியும் வெளிச்சம் கலங்கரை தீபமோ
இயேசு ராஜனின் முகத்தின் வெளிச்சமே

என் இதயம் இயேசுவுக்குத் தெரியும்
என் வேதனை இயேசுவுக்குப் புரியும்
என் தனிமை என் சோர்வுகள் இயேசென்னை தேற்றுவார்

துதிக்கின்றோம்  துதி பாடல் பாடி தூயாதி தூயவரை
கோடி ஸ்தோத்திரம் ஸ்தோத்திரம்
ஸ்தோத்திரமே எந்நாளும் துதி உமக்கே

1. கோட்டையும் குப்பை மேடாகுமே துதிக்கின்ற வேளையிலே
எரிகோ போன்ற சூழ்நிலையும் மாறிடும் துதிக்கும்போது

2. சேனைகள் சிதறியே ஓடிடுமே துதிக்கின்ற வேளையிலே
யோசபாத்தின் சூழ்நிலையும் மாறிடும் துதிக்கும்போது

3. சிறைச்சாலை கதவுகள் திறந்திடுமே துதிக்கின்ற வேளையிலே
கடுமையான சூழ்நிலையும் மாறிடும் துதிக்கும்போது

என் ஜீவ காலமுழுதும் துதிப்பேன் துதித்துப் பாடுவேன்
என் தேவன் அளித்த பெலனை நினைத்து நன்றி சொல்கிறேன்

1. தொலைந்து போன என்னையே தொழுவம் சேர்த்த அன்பே
திரும்பி வந்த என்னையே விரும்பி அணைத்த அன்பே
வறண்டு போன என் வாழ்விலே வளமை சேர்த்த அன்பே
– என்ன

**என்ன தருவேன் உமக்கு நான்**
**என்னை தந்தேன் உமக்கு.**

2. கருவில் இருந்த என்னையே தெரிந்து கொண்ட அன்பே
உதிரம் சிந்தி எனக்குள் உயிரை வைத்த அன்பே
கரத்தை நீட்டி என் நாவினில் திரு வார்த்தை ஈந்த அன்பே
– என்ன

3. குழியில் இருந்த என்னையே சிகரம் சேர்த்த அன்பே
சிறையில் இருந்த போதும் சிறக்க வைத்த அன்பே
உம்மை விட்டு நான் விலகியும் அணைத்துக கொண்ட அன்பே
– என்ன

speakarun@gmail.com

நடத்தின விதம் நினைத்தால் – நன்றி சொல்லாமல்
இருப்பேனோ – என்னை

**1.** கடந்து வந்த பாதையெல்லாம் கரம் பற்றி நடத்தினீரே
கண்ணீர் துடைத்து கவலைகள் நீக்கி – என்னை

**2.** வாழ்க்கை என்னும் ஓடத்திலே தனிமையில் சென்ற போது
தைரியம் தந்து வசனம் தந்து – என்னை

**3.** துக்கங்கள் நேர்ந்த போது நொறுங்குண்டு அழுதபோது
மார்போடணைத்து ஆறுதல் தந்து – என்னை

speakarun@gmail.com

நன்மை யல்லாதொன்றுமே செய்திடாதவர்
தீமையெல்லாம் அகற்றுபவர்
பாவமெல்லாம் மன்னித்தவர்
புதுஜீவன் என்னில் தந்திட்டவர்
இயேசு இயேசு அவர்
அவர் எல்லாரிலும் – பெரியவர்
இயேசு இயேசு அவர் என்றென்றும் போதுமானவர்

1. கண்ணீர் கவலைகளில் தம் கரத்தால் தேற்றிடுவார்
சோதனை வேளைகளில் ஜெயம் தந்து தாங்கிடுவார்
கிருபையருளிடுவார் பெலன் தந்திடுவார்
எல்லாம் மதுரமாய் மாற்றிடுவார்

2. இருள் நம்மை மூடும்போது நீதி சூரியனாய் தோன்றிடுவார்
பெலவீனம் நேரும்போது நல்ல மருத்துவராகிடுவார்
அவர் ஆலயத்தில் உள்ள நன்மைகளால்
நம்மை நிரப்பிடுவார் தினமும்

speakarun@gmail.com

நன்றி சொல்லி நழுவிடுவேனோ நாதா நீர் செய்த நன்மைக்கு
வாழுவேன் தேவனே வாழ்நாளெல்லாம் உம் மகிமைக்கு

**1.** தாவீதை போல எவ்வேளையும் மனதார வாழ்த்தித் தெரிவிப்பேன்
தானியேலை போல மூன்று வேளையும்
ஜெபித்து உந்தன் சித்தம் செய்யுவேன்
எலியாவை போல கருத்தாக ஜெபித்து உம் மகிமை உலகில்
காட்டுவேன் – நன்றி

**2.** அன்னாளைப் போல உந்தன் சமூகம் வந்து
உள்ளம் உடைந்து உருகி ஜெபிப்பேன்
ஆகாரை போல காண்கிற தேவன் என்று உமக்கு பெயரும் சூட்டுவேன்
மரியாளைப் போல உம் பாதம் அமர்ந்து நல்ல பங்கை
தெரிந்துகொள்ளுவேன்– நன்றி

**3.** யோவானைப் போல உந்தன் மார்பில் என்றும் இளைப்பாறி இன்பம்
அடையுவேன்
யோசுவாவைப் போல நானும் என் வீட்டாரும் கர்த்தாவே
உம்மை சேவிப்போம்
யோசேப்பை போல வாழ்நாட்களெல்லாம் பரிசுத்தமாய் பயந்து
ஜீவிப்பேன் – நன்றி

speakarun@gmail.com

துதியும் கனமும் மகிமையும் உமக்கே
யுகாயுகங்களிலும் – நீரே உண்மையைக் காக்கிறவர்

1. எங்கள் தேவனாய் அளித்தீர் எமக்கே மங்களமாய்
இந்நன்னாளை துங்கனே உம்மை ஏற்றித்
துதிப்போம் சந்தோஷத்துடனே கொண்டாடிடுவோம்
மறக்க முடியா நன்மைகள் செய்ததினால்

2. அனுதினம் உமது இரக்கங்கள்
எமக்கு இனிதாய் விளங்குகிறதென்றும்
கீர்த்தி வாழ்ந்துள்ள உம் திரு நாமம் நித்தியமாய் நிலைக்கும்
பிரியமாய் அளிப்போம் துதிகளை உமக்கே தயவுள்ள ஆண்டவரே

3. நீரே எங்களுக்கெல்லாம் பரத்தில் வேறே இரட்சகர் எமக்கில்லை
ஜீவனை ஈந்து நடத்துகிறீர் நீர் உம் ஆவியின் மூலம்
சேவிப்போம் சமநிலையாய் பூமியில் ஆவியுடன் உம்மை.

4. உபத்திரவங்கள் துன்பங்கள் சுமந்தீர் நிந்தைகள் சகித்தீர்
எங்களுக்காய் மரணத்தின் கூரை முறித்து ஜெயித்தீர்
சாத்தானின் பெலனை. பரத்திலிருநது எமக்காய்
திரும்ப ஜெயத்துடனே வருவீர்

1001ChristianClipart.com

கர்த்தாவே தேவர்களில் உமக்கொப்பானவர் யார் ?
வானத்திலும் பூமியிலும் உமக்கொப்பானவர் யார் ?

***பல்லவி***

உமக்கொப்பானவர் யார் ? வானத்திலும் பூமியிலும்
உமக்கொப்பானவர் யார் ?

**1.** செங்கடலை நீர் பிளந்து
உந்தன்ஜனங்களைநடத்திச் சென்றீர்
நீர் நல்லவர் சர்வ வல்லவர் என்றும் வாக்கு மாறாதவர்

**2.** தூதர்கள் உண்ணும் உணவால்
உந்தன் ஜனங்களை போஷித்தீரே
உம்மைப் போல யாருண்டு இந்த ஜனங்களை நேசித்திட


**3.** கன்மலையை நீர் பிளந்து
உந்தன் ஜனங்களின் தாகம் தீர்த்தீர்
உம் நாமம் அதிசயம் இன்றும் அற்புதம் செய் திடுவீர்



இயேசு கிறிஸ்துவின் அன்பு என்றும் மாறாதது
இயேசு கிறிஸ்துவின் மாறா கிருபை என்றும் குறையாதது
இயேசு கிறிஸ்துவின் அன்பு

1. பாவி என்றுன்னை இயேசு தள்ளவே மாட்டார்
ஆவலாய் உன்னை இயேசு அழைக்கிறாரே
தயங்கிடாதே தாவி ஓடிவா தந்தை இயேசுவில் சொந்தம்
கொள்ள வா – இயேசு

2. உன் மீறுதல்கட்காய் இயேசு காயங்கள் பட்டார்
உன் அக்கிரமங்கட்காய் அவர் நொறுக்கப்பட்டார்
உனக்காகவே அடிகள் பட்டார் உன்னை உயர்த்த
தம்மைத் தாழ்த்தினார்




இயேசுவின் அன்பினை அறிவித்திட இணைந்தே செயல்படுவோம்
சுவிசேஷ நற்செய்தி கூறிட விரைந்தே புறப்படுவோம்

நம் பாரதம் நம் தாயகம் கர்த்தரை அறியட்டுமே
நம் தாய் மண்ணும் நம் தலைமுறையும் இயேசுவை அறியட்டுமே

1. நினிவேயின் ஜனங்களுக்காக நம் தேவன் பரிதவித்தார்
தீர்க்கன் யோனாவையோ அவர் அனுப்பி எச்சரித்தார்
இலட்சத்திற்காக பரிதபித்தார் கோடிகட்காக கலங்கிடாரோ – நம் பாரதம்

2. இமைக்கும் நொடிப் பொழுதிலே மரித்திடும் மாந்தரைப்பார்
பாவ மன்னிப்பின்றி ஆக்கினை அடைவதைப்பார்
திறப்பில் நின்று தடுத்திடுவோம் ஜெபிக்கும் மக்களைத்
திரட்டிடுவோம் – நம் பாரதம்

3. காலங்கள் கடந்திடுதே நம் வேதமும் நிறைவேறுதே
இயேசுவின் வருகை இதோ அதி சமீபமாகிறதே
இளைஞர் கூட்டம் இயேசுவுக்காய்
சுவிசேஷம் சுமந்து புறப்படுவோம் – நம் பாரதம்



உலக மாயையிலே உழலும் என் நண்பா
உலகம் ஒருநாள் கைவிடும்போது
நீ எங்கே நண்பா என் நண்பா – 2

1. பொன் பொருளெல்லாம் உன்னை ஒரு நாள்
கை விடுமே நண்பா சாவை வென்ற
சத்தியர் இயேசு கைவிடார்
நண்பா என் நண்பா கைவிடார் நண்பா

2. உறவுகள் எல்லாம் உன்னை ஒரு நாள்
கை விடுமே நண்பா உத்தமரான சத்தியர்
இயேசு கைவிடார் நண்பா என் நண்பா
கைவிடார் நண்பா

3. அழகு மாயை இளமை மாயை அறிவாயோ நண்பா
அன்பான இயேசு அழைக்கிறாரே
வந்திடுவாய் நண்பா என் நண்பா வந்திடுவாய் நண்பா

speakarun@gmail.com

பூவில் நான் என் ஓட்டம் முடித்து
விண்ணில் என் வெகு மதிக்காய்
பறந்திடுவேன் மறுரூபமாய் பரன் இயேசு ராஜன் சமூகம்

தூதர் சேனை யாவுமே அணி அணியாய் என்னை
வரவேற்க நிற்கின்றதே வெள்ளையங்கி தரித்து
எந்தன் நேசர் முன்பாக அல்லேலூயா பாடுவேன்

**1.** வெகுநாளாய் காண ஆவலாய்
காத்திருந்த எந்தன் நேசரை
மகிமையிலே காணும் வேளையிலே
திருமார்பில் சாய்ந்திடுவேன் – தூதர்

**2.** நித்திய கை வேலையில்லாத புது சாலேம் நகரமதில்
மணவாட்டியாய் சதாகாலமாய் பரமனோடு என்றும்
வாழுவேன் – தூதர்

எனக்கொத்தாசை வரும் பர்வதம் நேராய்
என் கண்களை ஏறெடுப்பேன்
என் காலைத் தள்ளாட வொட்டார்
என்னைக் காக்கும் தேவன் உறங்கார்
இஸ்ரவேலைக் காக்கும் நல் தேவன் இராப்பகல் உறங்காரே

**1.** வலப்பக்கத்தில் நிழல் அவரே வழுவாமல் காப்பவர் அவரே
வலப்பக்கத்தில் நிழல் அவரே
சூரியன் பகலில் சந்திரன் இரவில் சேதப்படுத்தாதே – எனக்

**2.** மலைகள் பெயர்ந்திடினும் நிலைமாறி புவி அகன்றிடினும்
மலைகள் பெயர்ந்திடினும்
மாறிடுமோ அவர் கிருபை எந்நாளும் ஆறுதல் எனக்கவரே – எனக்

**3.** எத்தீங்கும் என்னை அணுகாமல் ஆத்துமாவைக் காக்கும் என் தேவன்
எத்தீங்கும் என்னை அணுகாமல்
போக்கையும் வரத்தையும் பத்திரமாக காப்பாரே இதுமுதலாய்– எனக்



எலியாவின் தேவன் நம் தேவன்
வல்லமையின் தேவன் நம் தேவன்
தாசர்களின் ஜெபம் கேட்பார்
வல்ல பெரும் காரியம் செய்திடுவார்

***<u>பல்லவி</u>***

கர்த்தரே தேவன் கர்த்தரே தேவன் என்றே ஆர்ப்பரிப்போம் **(2)**

***<u>சரணங்கள்</u>***

**1.** வேண்டிடும் பக்தரின் ஜெபம் கேட்டே
பனிமழை நிறுத்தினார் வல்ல தேவன்
பஞ்ச காலத்தில் விதவை வீட்டில்   பாத்திரங்களை அவர் ஆசீர்வதித்தார்

**2.** சத்துருக்கள் முன்னிலையில் தேவ மனிதன்
வீரமுடன் முழங்கினார் தேவ மனிதன்
அக்கினியால் பதிலளிக்கும் தேவனே தேவன் என்றார் தேவ மனிதன்

**3.** தேவ ஜனம் கூட்டிச் சேர்த்தே தேவ மனிதன்
பலிபீடம் செப்பனிட்டு பலியுமீந்தார்
கேட்டருளும் கேட்டருளும் என்றே கதறினார் தேவ மனிதன்

**4.** வானங்களை திறந்தே வல்ல தேவன்
அக்கினியால் பதில் தந்தார் ஜீவதேவன்
கர்த்தரே தேவன் கர்த்தரே தேவன் என்றே பணிந்தனர் தேவ ஜனங்கள்



1. மாறிடா எம் மா நேசரே – ஆ மாறாதவர் அன்பெந் நாளுமே
கல்வாரி சிலுவை மீதிலே காணுதே இம்மா அன்பிதே – ஆ

ஆ ! இயேசுவின் மகா அன்பிதே அதின் ஆழம் அறியலாகுமோ
இதற்கிணை யேதும் வேறில்லையே இணை ஏதும் வேறில்லையே


2. பாவியாகஇருக்கையிலே– அன்பால் பாரில் உன்னைத் தேடி வந்தாரே
நீசன் என்றுன்னைத் தள்ளாமலே நேசனாக மாற்றிடவே– ஆ ! இயேசு

3. உள்ளத்தால் அவரைத் தள்ளினும் – தம் உள்ளம் போல்
நேசித்ததினால்
அல்லல் யாவும் அகற்றிடவே ஆதி தேவன் பலியானாரே – ஆ ! இயேசு

4. ஆவியால் அன்பைப் பகிர்ந்திட தூய தேவனின் விண் சாயல் அணிய
ஆவியாலே அன்பைச் சொரிந்தார் ஆவலாய் அவரைச் சந்திக்க
– ஆ ! இயேசு

5. நியாய விதி தினமதிலே – நீயும் நிலையாகும் தைரியம் பெறவே
பூரணமாய் அன்பு பெருக புண்ணியரின் அன்பு வல்லதே. – ஆ ! இயேசு

6. பயமதை நீக்கிடும் – யாவும் பாரினிலே சகித்திடும்
அது விசுவாசம் நாடிடுமே அன்பு ஒருக்காலும் ஒழியாதே.. – ஆ ! இயேசு



இன்ப துன்ப நேரத்திலும் உன் அன்புள்ள இயேசுவைப்பார்

*சரணங்கள்*

1. இன்பத்தினால் அகமகிழ்ந்து கிலேசத்தினால் துக்கித்து
சிற்றின்பப் பேருலகில் சிக்கிக் கொண்டிருக்கும் போதும் – இன்ப

2. சோதனையால் பிடிபட்டு இடுக்கண்ணில்
இருக்கும்போதும் சாத்தான் உன்னை மேற்
கொள்ளும்போதும் அக்கினியாஸ்திரம் எறியும்போதும் – இன்ப

3. தோழரால் பகைக்கப்பட்டு மனக்கிலேசம் அடையும்போதும்
உலகம் உன்னை இகழ்ச்சி செய்து தங்கள் இடத்தை
விட்டோடும்போதும் – இன்ப

4. அவர் தாமே சோதிக்கப்பட்டு பாடு நமக்காய்ப்பட்டதினால்
அவர் சோதிக்கப்படும் நமக்கு உதவி செய்ய வல்லவராம்– இன்ப

5. வறுமையினால் யாசித்து பாடு மிகப்படும்போதும்
சாத்தான் உன்னைப் பகடிபண்ணி உன் விசுவாசத்தைக்
குறைக்கும் போதும் – இன்ப

6. கடுநோயால் பெலன்குன்றி பெலவீனத்தால் தள்ளாடி
ஜீவன் உனக்கு கசப்பாகி சாவை நீ விரும்பும்போதும்– இன்ப

7. பகைஞரால் கல்லெறியுண்டு மரணநேரம் கிட்டும்போதும்
பக்தன் ஸ்தேவானைப்போல் தைரியமாய் உன் இயேசுவைப் பார் – இன்ப

8. நான் என் இயேசுவின் பிரசன்னத்தினால் அனுதினமும் வாழுவதால்
நான்தான் பயப்படாதிருங்கள் என்றவர் என்னைத் தேற்றுகிறார் – இன்ப

fppt.com

# 685

எல்லை இல்லா கிருபை என்னை சூழ்ந்து கொள்ளும்
தொல்லை சூழும் உலகில் நல்ல நேசர் துணையே

***<u>சரணங்கள்</u>***

**1.** வீசும் புயலின் இடையில் அலையும் வாழ்க்கைப்படகில்
நேசர் துணையாய் வருவார் பாசமோடே காப்பார் (2)– எல்லை

**2.** மானிடர் உறவு முறியும் மண்ணில் வாழ்வு முடியும்
மன்னவன் இயேசு வருவார் விண்ணில் வாழ்வு தருவார் (2)
– எல்லை

**3.** மனிதர் கதவை அடைப்பார் நேசர் திறந்து கொடுப்பார்
மானிடர் உள்ளங்கள் மாறும் நேசர் என்றும் மாறார் (2) – எல்லை

ஜீவநதியை என் இதயந்தன்னில்
வழிந்தோடச் செய்யும் ஐயா!

***<u>சரணங்கள்</u>***

1. மாமிச கிரியைகளெல்லாம் முற்றும் அழிந்திடச்
செய்யும் ஐயா! – ஜீவ

2. பெலவீன நேரங்களில் நாதா பெலன் தந்து தாங்கும் ஐயா!
– ஜீவ

3. உலர்ந்த எலும்புகளை தேவா உயிர் பெறச் செய்யும் ஐயா!
– ஜீவ

4. ஆவியின் கனி என்னிலே அன்பில் பெருகிட செய்யும் ஐயா!
– ஜீவ

பரலோக நாடெந்தன் இன்ப நாடாமெனக்கு
என்று நான் கண்டு களிப்பேனோ ?
ஆ மகிமையே, ஆ பேரின்பமே
என்று நான் கண்டானந் திப்பேனோ ?

***சரணங்கள்***

1. சேவை செய்திடுவார் தூதர்கள் – நானங்கு
சேவிப்பேன் நித்தியம் நேசரை
ஆ என் இன்பமே, ஆனந்த பாக்யமே
நாவினாலியம்பவுமேலாதே – பரலோக

2. சொர்க்கத்தில் ஆ எந்தன் நம்பிக்கை – அழியாத
சொர்ணமயமான வேலைகள்
சோபன கீதமே, சுந்தர நாடதே
சுத்தரொருமித்து வாழ்வாரே – பரலோக

3. தெய்வ சித்தம் செய்யும் பிள்ளைகள் – ஜீவிப்பார்
மாதா, பிதா மற்றும் சோதரர் உத்தம ஜீவிகள்,
சொர்க்கத்தின் வாசிகள் கஷ்டம் சகித்திட்ட சுத்தர்கள் – பரலோக

4. இயேசுவே என் சம்பத் தல்லவோ – நிச்சயம்
என்றுமழியா சுதந்தரம்
ஈலோக இன்பத்தைக் குப்பை யென்றெண்ணினேன்
இயேசுவே எந்தனின் இன்பமே – பரலோக

5. வெறுத்திடுவேன் எந்தன் ஜீவனை – லோகத்தில்
செல்லுவேன் கஷ்டத்தின் பாதையில்
மாயை மாயையே லோகத்தின் இன்பமே
வாடா முடிசூட ஏகுவேன் – பரலோக

வாசலண்டை நின்று ஆசையாய்த் தட்டும்
நேசர் இயேசுவுக்குள்ளம் திறவாயோ ?

***<u>அனுபல்லவி</u>***

பாவியை ஒருபோதும் தள்ளாத நேசர்
வாவென்று உன்னை அழைக்கிறாரே

***<u>சரணங்கள்</u>***

1. ஆதரிப்பார் ஆருமில்லை யென்றேங்கி
ஆதரை மீதினில் அலைந்திடுவாயோ
காணாத ஆட்டைத் தேடிவந்த மேய்ப்பர்
கண்டுன்னை மந்தையிற் சேர்த்திடுவார் – வாசல்

2. அற்ப வாழ்வை நித்ய வாழ்வென்றெண்ணி
தற்பரன் தயவை தள்ளிடலாமோ
நினையாத நேரம் மரணம் சந்தித்தால்
நித்தியத்தை எங்கு நீ கழிப்பாய் – வாசல்

3. மனம் மாறி மறுபடி பிறந்திடாயாகில்
மகிபரின் இராஜ்ஜியம் காணக்கூடுமோ
பிறந்தாயோ ஜலத்தாலும் ஆவியாலும் மெய்யாய்
பிரவேசிப்பாய் தேவ இராஜ்ஜியத்தில் – வாசல்




4. வழியும் சத்தியமும் ஜீவனும் இயேசு
வாசலும் மேய்ப்பனும் நாதனும் இயேசு
இயேசுவல்லால் வேறு இரட்சிப்பு இல்லையே
இரட்சண்ய நாள் இன்றே வந்திடாயோ – வாசல்

ஆயிரம் நாவுகள் போதா ஆண்டவா உந்தனைப் பாட
கணக்கில்லா நன்மைகள் செய்தீர் கர்த்தா உம்மைப் போற்றிப்பாட

1. காலம் எல்லாம் உந்தன் அன்பால்
கரம் பிடித்தென்னை நடத்தி
ஆற்றா உம் கிருபையை நினைத்தே
கர்த்தா உம்மைப் போற்றிப்பாட – ஆயிரம்

2. அலை மோதி ஆடும் படகாய்
அலைந்த என்னை நீர் கண்டீர்
ஆணிகள் பாய்ந்த உம் கைகள்
ஆண்டு நடத்துமே தேவா – ஆயிரம்

3. வானமும் பூமி ஆழ்கடலும்
வல்லவா நீரே என சொல்ல
வல்ல நல் தேவா உம் பாதம்
வந்தேன் இயேசையா நான் அடிமை – ஆயிரம்

உத்தமமாய் முன் செல்ல உதவி செய்யும் யெகோவா
ஊக்கமதைக் கைவிடாமல் காத்துக்கொள்ள உதவும்

***சரணங்கள்***

1. பலவிதமாம் சோதனைகள் உலகத்தில் எமை வருத்தும்
சாத்தானின் அக்கினி – யாஸ்திரங்கள்
எல்லா நேரத்திலும் தாக்கும் – உத்தமமாய்

2. தீர்மானங்கள் தோற்கா – வண்ணம்
காத்துக்கொள்ள உதவும்
நேர்மையாக வாக்கைக்காக்க
வழிவகுத்தருள வேண்டும் – உத்தமமாய்

3. தூதரோடும் பாடலோடும்
பரலோகில் நான் உலாவ
கிருபை செய்யும் இயேசு தேவா
உண்மை வழிகாட்டியே – உத்தமமாய்

ஒரு தாய் தேற்றுவதுபோல் என் நேசர் தேற்றுவார்
– அல்லேலூயா (4)

1. மார்போடு அணைப்பாரே! மனக்கவலை தீர்ப்பாரே!

2. கரம் பிடித்து நடத்துவார்! கன்மலை மேல் நிறுத்துவார்!

3. எனக்காக மரித்தாரே! என் பாவம் சுமந்தாரே!

4. ஒருபோதும் கைவிடார்! ஒரு நாளும் விலகிடார்!

காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில்
கண்ணீர் விடுவாயே ஞாலத்தில் பரனுனை
நாட்டின நோக்கத்தைச் சீலமாய் நினைத்தவர்
மூலம் பிழைத்திடுவாய்

1. மதியை யிழந்து தீய வழியிலே நீ நடந்தால்
வருங்கோபம் அறிந்திடாயோ ?
கதியாம் இரட்சண்ய வாழ்வைக் கண்டு நீ மகிழ்ந்திட
காலம் இதுவே நல்ல காலம் என்றறியாயோ ?

2. இகத்தினில் ஊழியம் அகத்தியம் நிறைவேற
இயேசுனை அழைத்தாரல்லோ
மகத்துவ வேலையை மறந்து தூங்குவாயானால்
பகற்கால முடியும் இராக்காலத் திலென்ன செய்வாய் ?

3. முந்தி எரேமியா அனனியாவுக் குரைத்த முடிவை நீ யறியாயோ !
எந்தக்காலமும் சிரஞ்சீவியென் றெண்ணிடாமல்
ஏற்ற ஆயத்தமாய் எப்போதும் இருந்திடாயோ

# 693

தேசமே பயப்படாதே மகிழ்ந்து களிகூரு
சேனையின் கர்த்தர் உன் நடுவில் பெரிய காரியம் செய்திடுவார்

1. பலத்தினாலும் அல்லவே பராக்கிரமும் அல்லவே
ஆவியினாலே ஆகும் என்று ஆண்டவர் வாக்கு அருளினாரே

2. தாய் மறந்தாலும் மறவாமல் வரைந்தார் உள்ளங்கைகளில்
வலக்கரத்தாலே தாங்கி உன்னை சகாயம் செய்து உயர்த்திடுவார்

3. கசந்த மாறா மதுரமாகும் கொடிய யோர்தான் அகன்றிடும்
நித்தமும் உன்னை நல்வழிநடத்தி ஆத்துமாவை நிதம் தேற்றிடுவார்

4. கிறிஸ்து இயேசு சிந்தையில் நிலைத்தே என்றும் ஜீவிப்பாய்
ஆவியின் பெலத்தால் அனுதினம் நிறைந்தே
உத்தம சாட்சியாய் விளங்கிடுவாய்

5. மாம்சமான யாவர் மீதும் உன்னத ஆவியைப் பொழிவாரே
ஆயிரமாயிரம் ஜனங்கள் தருவார் எழும்பி சேவையும் செய்திடுவார்

694

***பல்லவி***

மத்ய வானத்தில் ஓர் மணி பந்தலில்
மணவாட்டிசபையின் விவாகம் நடக்கும்
மணவாளன் இயேசு ராஜா வந்திடுவார்
மகிழ்ச்சியுடன் விழித்து நாம் காத்து நிற்போம்

***அனுபல்லவி***

வானத்தில் மேகத்தில் அதிவேகத்தில்
வருவார் எக்காள தொனி முழங்க
மீட்கப்பட்ட ஜனமே, திருச்சபையே
மீட்பரை சந்திக்க நாம் ஆயத்தமாவோம் – மத்ய

***சரணங்கள்***

**1.** இத்தனை அன்பை பெற்றதாம் ஒருமணவாட்டிவேறு இல்லையே!
இத்தனை பாக்யமுள்ளதாம் ஒரு கன்னிகை பாரில் இல்லையே!
வருவார் இனியும் கொஞ்சக்காலத்தில்
வருவேன் என்று மெய் வாக்குத்தந்தவர் – (2) – மத்ய

**2.** ஆட்டுக்குட்டி கல்யாண நாளில் – அன்று
அழைக்கப்பட்டோ ரெல்லோருமாய்
ஆனந்த கீதம் பாடியே – அன்பு மன்னவரின் பாதம் பணிவோம்
ஏறிவா சீக்கிரம் திருச்சபையே என்றழைக்கும் இன்பமாம்
தொனி முழங்கும் – (2) – மத்ய


அன்பு கூறுவேன் இன்னும் அதிகமாய்
ஆராதிப்பேன் இன்னும் ஆர்வமாய்
முழு உள்ளத்தோடு ஆராதிப்பேன்
முழுபெலத்தோடு அன்புகூறுவேன்(2)

ஆராதனை, ஆராதனை (2)

எபினேசரே எபினேசரே இதுவரையில் உதவி செய்தீர் – (2)
– உம்மை முழு

2. எல்ரோஹி, எல்ரோஹி என்னைக் கண்டீரே, நன்றி ஐயா (2)
– உம்மை முழு

3. யெகோவா, ரப்பா, யெகோவா ரப்பா சுகம் தந்தீரே நன்றி ஐயா(2)
– உம்மை முழு



696

கல்வாரி அன்பை எண்ணிடும் வேளை
கண்கள் கலங்கிடுதே
கர்த்தா உம் பாடுகள் இப்போதும் நினைத்தால்
நெஞ்சம் நெகிழ்ந்திடுதே

1. கெத்சமனே பூங்காவிலே கதறி அழும் ஓசை
எத்திசையும் தொனிக்கின்றதே
எங்கள் மனம் திகைக்கின்றதே
கண்கள் கலங்கிடுதே – **கல்வாரி**

2. சிலுவையில் வாட்டி வதைத்தனரே
உம்மை செந்நிறமாக்கினரே
அப்போதும் அவர்க்காய் வேண்டினீரே
அன்போடு அவர்களை கண்டீரன்றோ
அப்பா உம் அன்பு பெரிதே – **கல்வாரி**

3. எம்மையும் உம்மைப்போல் மாற்றிடவே
உம் ஜீவன் தந்தீரன்றோ
எங்களைத் தரைமட்டும் தாழ்த்துகின்றோம்
தந்துவிட்டோம் அன்பின் கரங்களிலே
ஏற்று என்றும் நடத்தும் – **கல்வாரி**

கொல்கதா கொலை மரம்
பார்க்கவே பரிதாபம்
துங்கன் இயேசு நாயகர்
தொங்கும் காட்சி பாரீரோ

1. கைகாலில் ஆணி பீறிட்டே
குருதி புரண்டு ஓடிற்றே
முள்ளினாலோ கிரீடமே
சூட்டினார் மா பாதகர் - கொல்கதா

2. பாவியே நீயும் ஓடி வா
பாசம் கொண்டு அழைக்கிறார்
சிலுவை காட்சி காண வா
சீரடைவாய் நாடி வா – கொல்கதா

3. கல்வாரி நாதர் இயேசுவை
பற்றி நீயும் வந்திடாய்
தூசியான உன்னையும் - நம்
மேசியா கை தூக்குவார் - கொல்கதா

குருசின்மேல் குருசின்மேல்
காண்கின்றதாரிவர் (2)
பிராண நாதன் பிராண நாதன்
என் பேர்க்காய்ச் சாகின்றார் -(2)

1 பாவத்தின் காட்சியை ஆத்துமாவே பார்த்திடாய் -(2)
தேவகுமாரனார் சாபத்திலாயினார்- (2)

2. இந்த மா நேசத்தை நிந்தையாய் தள்ளினேன்(2)
இம்மகா பாவத்தை எந்தையே மன்னித்தீர்(2)

3. பாவத்தை நேசிக்க நான் இனிச் செல்வேனோ(2)
தேவனின் பிள்ளையாய் ஜீவிப்பேன் நான் இதோ(2)

4. கஷ்டங்கள் வந்தாலும் நஷ்டங்கள் நேர்ந்தாலும்(2)
குருசின் காட்சியை தரிசித்து தேறுவேன்(2)

5. சூறாவளியைப் போல் சூழ்ந்திடும் ஆபத்தில்(2)
சிலுவையின் நேசத்தை சிந்தித்து நோக்குவேன்(2)

6. இம்மகா நேசத்தை ஆத்மாவே சிந்திப்பாய்(2)
இம்மானுவேலன் நீர் என்னையும் நேசித்தீர்-(2)

இயேசுவின் நாமமே திருநாமம் – முழு
இருதயத்தால் தொழுவோம் நாமும்

1. காசினியில் அதனுக்கிணையில்லையே
விசுவாசித்த வர்களுக்குக் குறையில்லையே
– இயேசுவின்

2. இத்தரையில் மெத்த அதிசய நாமம்
அதை நித்தமுந் தொழுபவர்க்கு ஜெய நாமம்
– இயேசுவின்

3. உத்தம மகிமைப் பிரசித்த நாமம்
இது சத்திய விதேய மன மொத்த நாமம்
– இயேசுவின்

4. விண்ணவரும் பண்ணுடன் கொண்டாடும் நாமம்
கடும் வேதாளம் கண்டு பயந்தோடும் தேவ நாமம்
– இயேசுவின்

5. பட்சமுள்ள இரட்சை செய்யும் உபகாரி
பெரும் பாவப் பிணிகள் நீக்கும் பரிகாரி
– இயேசுவின்

*<u>பல்லவி</u>*

பார்ப்பேனே என் நேசரை நான்
ஆர்ப்பரிப்பேன் நானு மந்நாள்

*<u>அனுபல்லவி</u>*

தீர்த்தார் என் கண்ணீர்கள் யாவும்
சாற்றுவேன் நான் துதியே துதியே – பார்ப்பேனே

*<u>சரணங்கள்</u>*

1. பாரில் எந்தன் பாவம் தீர்த்தார்
பரத்தில் எந்தன் ஆவல் தீர்ப்பார்
அகத்திலே சந்தோஷமளித்தார்
இகத்திலென்றும் துதியே துதியே – பார்ப்பேனே

2. ஆயிரங்களிற் சிறந்தோர்
ஆத்துமாவின் நேசரவர்
ஆபத்திலென் தோழனவர்
நாமத்திற்கே துதியே துதியே – பார்ப்பேனே

3. எண்ணிறந்த தூதர் கூட்டம்
விண்ணினின்று போற்றும் நாளில்
அண்ணல் இயேசுவின் அடிபணிந்தே
பணிந்து சொல்வேன் துதியே துதியே – பார்ப்பேனே

4. மண்ணின் சாயல் மாறி யானும்
மகிமை யேறி மாசற்றோனாய்
மன்னனோடு மணவறையில்
மகிழ்வேன் என்றும் துதியே துதியே – பார்பேனே.

speakarun@gmail.com

ஜீவிக்கிறார்! இயேசு ஜீவிக்கிறார்!
என் உள்ளத்தில் அவர் ஜீவிக்கிறார்
துன்பத்தில் என் நல் துணை அவரே
என்றென்றும் ஜீவிக்கிறார்! (2)

1. செங்கடல் அவர் சொல்ல இரண்டாய் நின்றது
எரிகோவின் கோட்டை தரைமட்டமாயிற்று!
அவர் சொல்ல குருடரின் கண் திறந்தது
அவர் தொட குஷ்டரோகி சொஸ்தமாயினான்

2. உம்மை என்றும் விடாது நான் தொடரவே
என்னை என்றும் விடாது நீர் பிடிக்கவே
நான் ஜீவிக்கும் நாள் வரை உண்மையாகவே
பிரகாசிக்கச் செய்திடும் வல்ல இயேசுவே!

# 702

<u>பல்லவி</u>

உமதுண்மை மகா பெரியது
மகா பெரியது மகா பெரியது

<u>சரணங்கள்</u>

1. தகப்பனைப் போல இறங்கிடுவீரே,
தாயைப் போல தேற்றிடுவீரே,
மாயையினின்று காப்பாற்றுகிறீர்,
காப்பாற்றுகிறீர் ஆற்றுகிறீர்.

2. கோழி தன் குஞ்சுகளை சேர்ப்பது போல்,
ஆழியினின்றெடுத்தே அரவணைத்தீர்,
நாழிகை எல்லாம் வாழி பாடுவேன்
வாழி பாடுவேன் பாடுவேன்.

3. சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்தாலும்,
சிங்கக் கெபியிலே போடப்பட்டாலும்,
பங்கமின்றியே பாதுகாக்கிறீர்,
பாதுகாக்கிறீர், காக்கிறீர்.

4. இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும்,
தருணங்கள் மாறாய் சம்பவித்தாலும்,
சரணங்கள் சாற்றவே வைக்கிறீர்,
பாட வைக்கிறீர் என்னை வைக்கிறீர்.

5. வியாதிகள் பலவிதம் பாதித்தாலும்,
உபாதிகள் உள்ளத்தை வாதித்தாலும்,
நாதியா யென்னைக் கைவிடுவதில்லை,
கைவிடுவதில்லை விடுவதில்லை.

6. வானபரியந்தமும் எட்டுகிறது,
வானங்களில் ஸ்தாபித்திருக்கிறது,
ஈனன் நான் அதைக் காண வைக்கிறீர்,
காண வைக்கிறீர், வைக்கிறீர்.

7. மலைகள் இவ்வுலகில் விலகினாலும்,
நிலைவிட்டுப் பர்வதங்கள் பெயர்ந்தாலும்,
விலையில்லா கிருபை விலகுவதில்லை,
விலகுவதில்லை அல்லேலுயா.

# 703

1. அருணோதயம் எழுந்திடுவோம்
பரனேசுவை ஸ்துதிப்போம்
அருணோதயம் பரமானந்தம் பரனோடுறவாடவும்.

2. இதைப் போன்றொரு அருணோதயம்
எம்மை சந்திக்கும் மனமே
ஆ! என்னானந்தம் ஜோதி சூரியனாம்
எந்தன் நேசரெழும்பும் நாள்.

3. நன்றியாலுள்ளம் பூரித்திடுதே
அன்னையாமேசு காருண்யம்
ஒவ்வொன்றா யிதைத் தியானஞ் செய்யவும்
எவ்வாறு மேற்ற சந்தர்ப்பம்.

4. போன ராவினில் ஜீவித்தோர் பலர்
பூமி விட்டுமே போய்விட்டார்
என்றாலும் நமக்கிந்த நாளையும்
தந்த நேசரை ஸ்துதிப்போம்.

5. நான் நிர்வாணியாய் வந்த வண்ணமே
நிர்வாணியாகவே போகின்றேன்
கூடச்செல்லவும் பூவிலொன்றுண்டோ
நாடிப் போமந்த நாட்டிற்கே.

6. ஆ! என் நேசரின் அன்பையெண்ணவும்
ஆனந்தம் பரமானந்தம்
ஆ! என் நேசரோர் நவ வான் புவி
தானஞ் செய்ததே ஆனந்தம்.

7. பார் தன் நேசரின் மார்பில் சாய்ந்தேகும்
யாவரின் கானகந் தனில்
எந்தன் நேசரின் கூடச் செல்கிறேன்
சொந்த ராஜ்யத்தில் சேரவும்.

உன்னத தேவன் நம்முடன் இருக்க
உள்ளமே கலங்காதே
அவர் உன்னதரே, என்றும் நல்லவரே
நன்மைகள் குறையாதே.

1. பாவத்தில் இருந்த நம்மை
   பரிசுத்த  மாக்கியவர்
   தாழ்மையில் கிடந்த  நம்மை
   தம் தயவால் தூக்கியவர் – உன்னத

2. அந்நாளில் தம் பாதம்
   அமர்ந்த அன்னாளின் ஜெபம் கேட்டார்
   அனாதையாய் தவித்த
   அந்த ஆகாரின் துயர்   தீர்த்தார் – உன்னத

3. இயேசு நம் முன் நடந்தால்
   அந்த யோர்தானைக் கடந்திடலாம்.
   விசுவாசம் நமக்கிருந்தால்
   அந்த எரிகோவைத் தகர்த்திடலாம் – உன்னத

1. இயேசுவை நம்பினோர் மாண்டதில்லை
என்னென்ன துன்பங்கள் நேரிட்டாலும்
சிங்கத்தின் வாயினின்றும் இரட்சிப்பார்
பங்கம் வராதென்னை ஆதரிப்பார்

*பல்லவி*

நெஞ்சமே நீ அஞ்சிடாதே
நம்பினோரைக் கிருபை சூழ்ந்திடுதே
இம்மட்டும் காத்தவர் இம்மானுவேல்
இன்னமும் காத்துன்னை நடத்துவார்

2. நாசியில் சுவாசமுள்ள மாந்தரை
நம்புவதல்ல தம் ஆலோசனை
கோர பயங்கரக் காற்றடித்தும்
கன்மலை மேல் கட்டும் வீடு நிற்கும்

3. விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்
வறட்சி மிகுந்த காலத்திலும்
பக்தன் வலது பாரிசத்திலே
கர்த்தர் தாம் நிற்பதால் அசைந்திடான்

4. இயேசுவின் நாமத்தில் ஜெயம் பெற்றே
ஏகிப் பறந்தோடும் பக்தரோடே
சேர்ந்தென்றும் வாழ்ந்திடும் ஐக்கியத்திலே
ஜெய கெம்பீரமே உனக்குண்டே

5. ஏழை என் ஆத்மா பாதாளத்தில்
என்றும் அழிந்திடவிட்டுவிடார்
தம் சமூகம் நித்ய பேரின்பமே
சம்பூரண ஆனந்தம் பொங்கிடுமே

1. அன்பரென் நேசரே உம்மண்டையில்
இன்பமாக உந்தன் பாதையோடே
நீரே வழியும் சத்தியமும்-ஜீவனுமே.

2. துன்பப் பெருக்கிலே சேர்ந்திடேனே
அன்பரறியாமல் வந்திடாதே
கண்மணிபோல் நீர் காத்திடுவீர் கனிவுடன்.

3. சுற்றிலும் சத்துரு சூழ்ந்திடினும்
வியாகுலம் என்னை விரட்டிடினும்
ஆ, நேசரே உம் இன்பசத்தம் ஈந்திடுவீர்.

4. ஈனச் சிலுவையில் ஏறிட்டீரே
ஏந்தனுக்காய் கஷ்டப்பட்டீரே
துன்ப மூலமாய் எய்திடுவேன் இன்பக் கானான்.

5. சொந்த ஜீவனை நீர் என்னிலீந்து
அன்பிலிணைத்தீரே வல்லமையால்
எந்தன் ஜீவனை மற்றொருக்காய் ஈந்திடவே.

6. மாயையான இந்த லோகமதில்
மாய்ந்தழியும் இம் மாந்தரன்பு
நேற்றுமின்றென்யும் மாறிடீரே என் நேசரே

7. வஞ்சனையான இப்பார்தலமே
வஞ்சிக்குதே மிகத் தந்திரமாய்
வாஞ்சித்திடேனே மோசமான இப்பார்தலத்தை.

1. இயேசு என் அஸ்திபாரம், ஆசை எனக்கவரே.
நேச முசிப்பாறுதல் இயேசுவில் கண்டேன் யானும்.

2. என்ன மதுரம் அவர், நன்னய நாமச்சுவை.
என்னகத்தில் நினைத்தால் இன்னல் பறந்திடுமே.

3. பஞ்சம் பசியுடன் மிஞ்சும் துயர் வந்தாலும்,
அஞ்சிடேன் இவையை என் தஞ்சம் இயேசிருக்கையில்.

4. லோகம் என்னை எதிர்த்து, போவென்று சொல்லிடினும்,
சோகம் அடைவேனோ என் ஏகன் எனக்கிருக்க.

5. என்னென்ன மாய லோக கன்னல் என்மேல் வந்தாலும்
முன்னும் பின்னுமாயேசு என்னை நடத்திடுவார்.

1. மயங்கும் தாசனை-தேவா நீர் நடத்தும்
என் பாதை காட்டியாய் சகாயம் புரியும்.

2. நீர் காட்டும் பாதை தான்- எப்போதும் நல்லது
சுற்று நேராயினும்-விண் வீடு சேர்க்குமே.

3. கபோதி நான் ஐயா-முன் நிற்பதறியேன்
நீர் என்னை நடத்தும்-நான் பின்னே செல்லுவேன்.

4. உம் சித்தம் போல் நீர்-என் பாத்திரம் எடுத்து
சந்தோஷம், சஞ்சலம்-ஏதேனும் நிரப்பும்.

5. என் பங்கேதாயினும்-என் இஷ்டம் எதிலும்
வேண்டாம் என் தேவனே-நீர் ஆண்டு நடத்தும்.

## *பல்லவி*

இயேசு நேசிக்கிறார்- இயேசு நேசிக்கிறார்
இயேசு என்னையும் நேசிக்க யான் செய்த
தென்ன மா தவமோ?

## *சரணங்கள்*

1. நீசனாமெனைத்தான் இயேசு நேசிக்கிறார்
   மாசில்லாத பரன் சுதன்றன்
   முழு மனதால் நேசிக்கியார். - இயேசு

2. பரம தந்தை தந்த பரிசுத்த வேதம்
   நரராமீனரை நேசிக்கிறாரென
   நவிலல் ஆச்சரியம். - இயேசு

3. நாதனை மறந்து நாட்கழித்தலைந்தும்
   நீதன் இயேசென்னை நேசிக்கிறாரெனல்
   நித்தமாச்சரியம். - இயேசு

4. ஆசை இயேசென்னை அன்பாய் நேசிக்கிறார்.
   அதை நினைத்தவர் அன்பின் கரத்துளே
   ஆவலாய்ப் பறப்பேன். - இயேசு

5. இராஜன் இயேசுவின் மேல் இன்பகீதஞ்சொலில்
   ஈசன் இயேசென்னைத் தானேசித்தாரென்ற
   இணையில் கீதம் சொல்வேன்.

சத்திய வேதத்தைத் தினம் தியானி
சகலபேர்க்கும் அதபிமானி

*அனுபல்லவி*

உத்தம ஜீவிய வழிகாட்டும்
உயர் வானுலகில் உனைக்கூட்டும்.

*சரணங்கள்*

1. வாலிபர் தமக்கூண் அதுவாகும்
வயோதியர்க்கும் அது உணவாகும்.
பாலகர்க்கினிய பாலும் அதாம்
படிமீ தாத்தும பசி தணிக்கும்.
2. சத்துரு பேயுடன் அமர் புரியும்
தருணம் அது நல் ஆயுதமாம்
புத்திரர் மித்திரரோடு மகிழும்
பொழுதும் அதுகால் உறவாடும்
3. புலை மேவிய மானிடரிதயம்
புனிதம் பெறுதற்கது மருந்தாம்
நிலையா நரர் வாணாள் நிலைக்க
நேய காய கற்பம் அதாம்
4. கதியின் வழி காணாதவர்கள்
கண்ணுக்கரிய கலிக்கம் அது
புதிய எருசாலேம் பதிக்குப் போகும்
பயணத் துணையும் அது அதுவே